நிலவே என்னிடம் நெருங்காதே

விஜயமலர்

விஜயமலரின் "நிலவே என்னிடம் நெருங்காதே"
ஹாய் பிரெண்ட்ஸ்,

இதோ அடுத்து ஒரு புதிய எழுத்தாளரின் அறிமுகத்துடன் வந்துவிட்டேன்... எப்போதும் போல் இவருக்கு உங்களது ஊக்கத்தினை அளித்து உற்சாகப்படுத்துங்கள்... நிறைகளை கூறி ஊக்குவித்து, குறைகளை சுட்டிக்காட்டினாலும் அவரது திறமையை தட்டி கொடுக்க மறந்துவிடாதீர்கள்... கதையைப் பற்றி அவரே வந்து கூறுவார்... நன்றி மக்களே...

அன்புடன்,

ஸ்ரீகலா

அன்பு நட்புக்களே... இது வரை உங்கள் தொடர்கதைகளை வாசித்து வந்த நான் முதன் முதலாக உங்களுடன் இணைந்து பயணிக்க எண்ணியுள்ளேன். நான் பல நாவல் எழுதி வைத்திருக்கிறேன். இதுவரை வெளியிட்டதில்லை. வெளியிட நினைத்ததில்லை. அதை எப்படியாவது வெளிக்கொண்டுவரவேண்டும் என்பதை மதிப்பிற்குரிய ஸ்ரீகலா வின் இணையத்திற்குள் நுழைந்த பின்புதான் புரிந்துகொண்டேன். அதற்க்கு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் எழுதும் நாவல்கள் சமூக சீர்திருத்தமோ, வாழ்க்கைக்கு முன்னேற்றமோ கொடுக்கும் நாவல் என்று எண்ணிவிடாதீர்கள். வாழ்க்கையே போர்க்களம். அதுக்குள்ளே படிக்கிறதையும் எதற்க்காக சோகம் நிறைந்ததாக எழுதவேண்டும் என்பதால் என்னுடைய கதைகள் அனைத்த்தும் காதலும், குடும்பமும் சார்ந்த இளகிய கதைகளே.

நிலவே என்னுண்டாம் நெருங்காதே எனும் நாவல் உங்களை நெருங்க வைக்கும் என்று நம்புகிறேன்.

கதையின் நாயகன் அநேகாத்மன். நாயகி சர்வமாகி.

இவர்களின் குண இயல்பு

அநேகாத்மன்

கோபம் 200%
அகங்காரம் 200%
பொஸசிவ் 200%
பொறுமை மைனஸ் 10%
அன்பு 0%
விட்டுக்கொடுத்தல் 0%

சர்வமாகி

கோபம் மைனஸ் 10%
அகங்காரம் மைனஸ் 10%
பொஸசிவ் 00
பொறுமை 200%
அன்பு 200%
விட்டுக்கொடுத்தல் 200%

இத்தகைய குண இயல்பு கொண்ட இருவர் இணையும் கதையே இக்கதை.
நீங்கள் கொடுக்கும் ஆதரவை பொறுத்தேன் என் கதைகளை பதிவிடுவதா இல்லையா என்பதை முடிவு செய்வேன்.

நிச்சயமாக ஆதரவு தருவீர்கள் என்கிற நம்பிக்கையுடன் விரைவில் வருகிறேன்.

விஜயமலர்.

நிலவே என்னிடம் நெருங்காதே...

நிலவு - 1

கிட்டத்தட்ட இருபது மாடிகள் கொண்ட கட்டடம் அது. ஒவ்வொரு மாடியிலும் ஒவ்வொரு விதமான அலுவலகங்கள். பத்தாவது மாடி முழுவதிற்கும் உரிமையானவர் வெங்கடேஷ் பெரிய பிஸ்னஸ் மான். அவரிடம் இல்லாத தொழில்களே கிடையாது.

உலகம் முழுவதும் 'பி.வி.எஸ்... ப்ராடக்ஷன் என்றால் அதற்குத் தனி மரியாதை. நேர்மையான மனிதன். இதுவரை அவர் தன் கரங்களை அழுக்காக்கியது கிடையாது. அவரிடம், ரூபாய்கள் புழங்குவதை விட, அமரிக்கன் டாலர்கள் புரண்டதே அதிகம். இலங்கை மட்டுமல்லாமல் லண்டன், இந்தியா, கனடா, அமரிக்கா, யப்பான் போன்ற நாடுகளிலும் தன் வியாபாரத்தைப் பல்கிப் பெருக்கி வைத்திருக்கும் பெரும் பணக்காரர்.

கனடாவில் அவர் குடியுரிமை பெற்றிருந்தாலும், தொழில் நிமிர்த்தமாக அவர் உலகமெல்லாம் சுற்றித்திரிவதால், கனடாவில் அவர் தங்குவது மிக மிகக் குறைவு. அமரிக்கன் ஜனாதியைக் கூடச் சந்தித்துவிடலாம், ஆனால் திரு வெங்கேடஷை சந்திப்பது என்பது, முடியாத காரியமாகவே சாதாரண பணக்காரர்களுக்கு இருந்தது.

பல வித்தியாசமான தொழில்கள் செய்தாலும், அவருக்குப் பிடித்த தொழில் புதிய புதிய கார்களை வடிவமைப்பதும், அதற்குரிய உதிரிப்பாகங்களைச் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுமே. அவருடைய முன்னேற்றத்தால், அழிந்தவை எத்தனையோ கம்பனிகள்.

அதனால் எதிரிகளும் அதிகம். பாதுகாப்பும் அதிகம்.

அவரை இலகுவில் யாருமே பார்க்க முடியாது. அதையும் மீறி அவரைச் சந்திப்பதாக இருந்தால், முன் கூட்டியே ஒரு மாதத்திற்கு முன்பு அனுமதி வாங்க வேண்டும். அதுவும் அவர் கனடாவில் இருந்தால்தான் அந்த சந்திப்பு சாத்தியம்.

அப்படி அனுமதி வாங்கி வெங்கடேஷை சந்திக்க உள்ளே நுழைந்தவர்தான் திருவாளர் வாசுதேவன். அவரும் ஒரு காலத்தில் பெரிய பணக்காரராகத்தான் இருந்தார். கவிதா இன்டர்நஷனல் எக்ஸ்போர்ட் அன்ட் இம்போர்ட் என்கிற சர்வதேச கம்பனி ஒன்றை வைத்திருந்தார். அதன் பிறகு திடீரென்று வெங்கடேஷின் உயர்ச்சியால் அவருடைய பிஸ்னஸ் அதள பாதாளத்தில் விழுந்துவிட்டது. வேறு வழியில்லாமல் கம்பனியை இழுத்து மூடிவிட்டு, வயிற்றுப் பிழைப்புக்காக, புரோக்கர் வேலையில் இறங்கிவிட்டார்.

புரோக்கர் வேலை என்றால், இரண்டு பெரிய கம்பனிகளுக்கிடையே தொடர்பேற்படுத்தி, அவர்களின் பிஸ்னஸ் லாபகரமாகக் கூடி வந்தால் இவருக்கு கணிசமான தெகை கிடைக்கும்.

இவரை ஏற்கெனவே பலருக்குத் தெரியும் என்பதால், இவருடைய புதிய தொழிலும் ஓரளவு நன்றாகத்தான் நடந்தது.

அந்த நேரத்தில்தான், 'டி.என் இன்டஸ்ரி' என்கிற கம்பனி, தங்களுடைய கார் உதிரிப்பாகங்களை, 'பி.வி.எஸ் இன்டஸ்ட்ரி'க்கு விற்றுத்தர முடியுமா என்று கேட்டனர். இவரும் பி.வி.எஸ் இன்டஸ்ட்ரி என்றதும், வேறு கதையில்லாமல் தலையாட்டிவிட்டார்.

அவர் கொஞ்சம் யோசித்திருந்தால், இந்த 'டி.என். இன்டஸ்ரி' யைப் பற்றி விசாரித்திருப்பார் விசாரித்திருந்தால், பின்னால் வந்த விழைவுகளை இவர் தவிர்த்திருக்கலாம்.

இவரும் உடனேயே தலையாட்டிவிட்டார். பிவிஎஸ் இன்டர்ஸ்ரிக்கிடையில் தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பது என்றால் அது அவருக்கல்லவா பெருமை. தயங்காமல் தலையாட்டிவிட்டார். உடனேயே வெங்கடேஷை சந்திக்க அனுமதி வேண்ட, இரண்டு மாதம் காத்திருக்க வைத்து அந்த அனுமதி கிடைத்தது

உள்ளே சென்றவரை செக்கியூரிட்டி நன்றாகப் பரிசோதித்தார். பரிசோதனை முடிந்து உள்ளே செல்லும்; போது ஒரு வெண்ணிற ஆடை அணிந்த ஒருவன் அவரிடம் எங்கோ போவதற்கான வழியைக் கேட்க, இவர் 'தனக்கும் இந்த இடம் புதிது, வேறு எவரிடமாவது கேட்டு அறிந்துகொள்ளுமாறு கூறிவிட்டு மகிழ்ச்சியுடன் முன்னோக்கி நடந்தார். அதற்கு முகம் முழுவதும் நகைப்புடன் நன்றி கூறிக் கை குலுக்கிவிட்டுச் சென்றார் அந்த புதிய மனிதன்.

தான் வெங்கடேஷை சந்திக்கப்போகிறேன் என்கிற பெருமையில், உள்ளே சென்று, அங்கிருந்த வரவேற்பாளரிடம் செய்தியைக் கூற, அவர் சரி பார்த்துவிட்டு, இருக்கையில் அமருமாறு பணித்தார். ஐந்து நிமிடம் கடந்திருக்கும், அவருக்குரிய நேரம் வந்ததும், அழைக்கப்பட்டார்.

வெங்கடேஷின் அறையை வரவேற்பாளர் காட்ட இவர் அந்த அறையை நோக்கிச் சென்றார்.
வெங்கடேஷிடம் நம்பிக்கையுடன் சென்ற வாசுதேவன், விபரத்தைச் சொன்னார். ஆனால் அவருடைய ஆசை உடனேயே தவிடு பொடியாகிவிட்டது.

"நோ... மிஸ்டர் வாசுதேவன்... நீங்கள் சொல்வதற்கு உடனேயே என்னால் சம்மதம் தெரிவிக்க முடியாது. நான் யோசிக்கவேண்டும்..." என்றார் வெங்கடேஷ உறுதியாக.

"அவசரப் படாமல் சற்று யோசியுங்கள் மிஸ்டர் வெங்கடேஷ். இதில் லாபம்தான் அதிகம்... கொஞ்சம் யோசித்து உங்கள் பதிலைச் சொல்லுங்கள்..." என்றார் வாசுதேவன் பொறுமையாக.

"இதில் யோசிப்பதற்கு எதுவுமே இல்லை மிஸ்டர் வாசுதேவன். நீங்கள் கூறும் கம்பனியைப் பற்றி நல்ல அபிப்ராயங்கள் எதுவும் எனக்கில்லை. தவிர உங்களுக்கு என்னுடைய கொள்கைகளைப் பற்றியும் நன்கு தெரியும். நியாயமற்ற எதையும் நான் தொடவும் மாட்டேன், அதைப்பற்றிப் பேசவும் மாட்டேன்..." என்றார் அவர், உறுதியாக.

"நீங்கள் நினைப்பது தவறு... அவர்கள்... நீங்கள் நினைப்பதுபோல தவறானவர்கள் அல்ல. ஏதோ போதாத நேரம், அவர்களுடைய எதிர் கம்பனியில் ஏற்பட்ட பிரச்சனையால்... அவர்களின் மீது தவறான வதந்தியைக் கிளப்பிவிட்டார்கள்..." என்றார் வாசுதேவன் அவசரமாக.

கொஞ்ச நேரம் வாசுதேவனையே உற்றுப் பார்த்த வெங்கடேஷ்,

"மிஸ்டர் வாசுதேவன்... நீங்கள் எடுத்து வந்திருக்கும் ப்ராஜக்டின் தொகை எவ்வளவு தெரியுமா? ஐந்து கோடி... இதுவே உண்மையான, நேர்மையான கம்பனியில் இந்தப் பொருட்களை வாங்குவதாக இருந்தால் சுமார் பத்துக்கோடி வேண்டும். பத்துக்கோடி பெறுமதியான இந்த பொருட்களை, வெறும் ஐந்து கோடிக்குத் தருவதாக இருந்தால், இவர்கள் நேர்மையாகத்தான் தருகிறார்கள் என்று எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? நோ... எனக்கு எங்கோ தப்பு நடப்பதுபோலத்தான் இருக்கிறது. எதற்கும்... நான் யோசிக்கவேண்டும்..." என்று அவர் கறாராக முடிக்க, இனி அவரின் மனதை மாற்றமுடியாது என்பதைப் புரிந்துகொண்டவராக வாசுதேவன் எழுந்தார்.

"ஓக்கே சார்... அப்படியானால் அவர்களிடம் சொல்லிவிடுகிறேன்..."

என்றவாறு எழுந்தவரை நிறுத்தினார் வெங்கடேஷ்.

“லுக் மிஸ்டர் வாசுதேவன்... நீங்களும் அவர்களுடன் சற்றுக் கவனமாக இருப்பது நல்லது... அவர்கள் எதையும் செய்யத் துணிந்தவர்கள்... வெளுத்தவை எல்லாம் பாலாக எண்ணக் கூடாது.” என்றவரை சோர்வுடன் பார்த்தார் வாசுதேவன்.

“என்னுடைய தொழில் அப்படி... என்ன செய்வது மிஸ்டர் வெங்கடேஷ். லாபகரமாக இரண்டு பக்கமும் தொடர்பு ஏற்படுத்திக்கொடுத்தால் கணிசமான தொகை எனக்குக் கிடைக்கும். அப்படி வந்தவர்கள்தான் ‘டி.என் என்டர் பிரைஸ்’ நீங்கள் தொடங்கி இருக்கிற புதுவகையான காருக்கு உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் செய்து தருவதாகக் கூறினார்கள். சரிதான் என்று வந்தும் விட்டேன். பரவாயில்லை மிஸ்டர் வெங்கடேஷ்... அவர்களிடம் சொல்லி விடுகிறேன். நானும் அவதானமாக இருக்கப்பார்க்கிறேன்...” என்று புன்னகையோடு கூறி விடைபெற்ற வாசுதேவன், தனது வலதுகரத்தை நீட்டினார்.

அதைப் பற்றிக் குலுக்கிய வெங்கடேஷ் விடை கொடுத்தார்.

வாசுதேவன் வாசல் புறமாக திரும்பினார். அப்போதுதான் அது நடந்தது.

எங்கிருந்தோ ஒரு தோட்டா நேராக வெங்கடேஷின் இதயத்தில் வேகமாகப் பாய, என்ன ஏது என்பதை அவர் உணர்வதற்குள்ளாகவே, முன்புறமிருந்த மேசையில் சரிந்து விழுந்தார்.

அச்சத்துடன் திரு திரு என்று விழித்த வாசுதேவன் எதுவும் புரியாமல் வெங்கடேஷை நெருங்கினார்.

“மிஸ்டர் வெங்கடேஷ்...” என்றவர் முன்புறமாக விழுந்திருந்தவரை நிமிர்த்தினார்.

‘இரத்தம்... ஓ காட்...’ செய்வதறியாது திகைத்தவர், அங்கே நிற்கும் ஒவ்வொரு நிமிடமும் தனக்கு ஆபத்து என்பதைப் புரிந்தவராக, வேகமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறினார்.

நிலவு - 2

சர்வமகி அதிர்ச்சியுடன் தொலைக்காட்சிப் பெட்டியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளால் தன்; விழிகளையே நம்பமுடியவில்லை.

“இல்லை... இது பொய்... நான் நம்பமாட்டேன்... யாரோ வேண்டும் என்று... அவள் தந்தையை மாட்டிவைத்திருக்கிறார்கள்... நிச்சயமாக அவள் தந்தை அந்தக் கொலையைச் செய்திருக்கமாட்டார்... யார் என்ன சொன்னாலும் அவள் நம்ப மாட்டாள்... கடவுளே...” என்று அரட்டியவள் வேகமாகத் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள்.

இதயம் வேகமாகத் துடித்தது. கண்களில் கண்ணீர் பொங்கிப் பார்வையை மறைத்தது.

நல்ல வேளை அவள் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, யாருமே அருகில் இல்லை. இருந்திருந்தால்... எல்லோரும் அவளைக் கேள்வியாலேயே கேட்டுக் குடைந்தெடுத்திருப்பார்கள்.

சர்வமகி... வாசுதேவனின் அன்பு மகள்.

நன்றாக இருந்த காலத்திலும் சரி, நொடிந்துபோன காலத்திலும் சரி, தம் இயற்கைக் குணத்தை மாற்றாமல், எப்போதும் போல எளிமையாக ஒரேமாதிரி இருக்கும் ஒரு சிலரில் அவளும் ஒருத்தி.

ஐந்தடி நான்கு அங்குல உயரத்தில் பிரம்மா எவ்வளவு அழகைப் படைக்க முடியுமோ அவ்வளவையும் ஒன்றும்விடாமல் படைத்துவிட்ட அற்புத ஓவியம். பேசும் போதும் சரி, சிரிக்கும் போதும் சரி, சப்தம் அருகே இருப்பவர்களுக்கு இலகுவில் கேட்காது. அத்தனை மென்மை.

அவளுக்குப் பிறகு இரண்டு பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்திருந்தாலும், வாசுதேவனுக்குத் தன் மூத்த மகளின் மீதுதான் கொள்ளைப் பிரியம்.

கடைக் குட்டி அபிதன் பிறந்தபோது, அவர் மனைவி கவிதா பிரசவத்தில் ஏற்பட்ட சிக்கலால் மரணம் அடைந்த போது, தன் வேதனையை ஒரு பக்கம் ஒதுக்கிவைத்து விட்டு அவருக்கு ஆறுதல் சொன்னது பன்னிரண்டே வயதான சர்வமகிதான். அது எப்படிச் சாத்தியம் என்று கேட்டால் அதற்கு பதில் தெரியாது. ஆனால் அதுதான் உண்மை. எப்போதாவது ஒரு அற்புதக் குழந்தை பிறக்கும் அல்லவா. அது போலத்தான் வாசுதேவன் கவிதாவிற்குக் கிடைத்த அற்புதக் குழந்தை சர்வமகி.

அந்தக் குழந்தைப் பருவத்திலேயே தந்தையைக் கவனிப்பதிலிருந்து, கைக்குழந்தையான தம்பி அபிதனைக் காத்துக்கொள்வது வரை எல்லாமே சர்வமகிதான். அதனால் சகோதரர்களைப் பொறுத்தவரை அவள் ஒரு அன்னையே

கவிதா இருந்த வரை ஓகோ என்று கொடிகட்டிய வியாபாரம், அவள் இறந்த பின்பு படுத்துப் போக, அதை இழுத்து மூடிவிட்டு வேதனையோடு வீட்டுக்கு வந்தவரைத் தட்டிக்கொடுத்தவள் பதினைந்து வயது நிரம்பிய அவர் மகள் சர்வமகி.

அதன் பின் அவர்கள் இருந்த பெரிய வீட்டை விற்றுவிட்டு, அவர்களுக்கு ஏற்றதாக ஒரு சிறிய வீட்டை வாங்கிக்கொணடு அங்கே அவர்கள் குடி புகுந்தபோது, வாசுதேவன் மனம் தளரவில்லை. காரணம் அவர் மகளின்

மீதிருந்த நம்பிக்கை. அந்தச் சின்ன வயதிலேயே அவள் வீட்டுப்பொறுப்பை லாவகமாகக் கையாண்ட விதம் அவருக்குப் பெரும் தெம்பைக் கொடுத்தது.

அவளை விட மூன்று வயது இளையவளான தேவகி தவறு செய்தால் கண்டிப்பதிலிருந்து, தேவகி பிறந்து மறு வருடமே பிறந்த மாதவிக்குப் புத்திசொல்வதிலிருந்து, மாதவிக்கு இரு வருடம் கழித்துப் பிறந்த பிரதீபன் செய்யும் லூட்டியைப் பார்த்து ரசிப்பதிலிருந்து, அவனுக்கும் ஆறு வருடங்களுக்குப் பிறகு போனசாகப் பிறந்த அபிதனை அன்னையாக அரவணைப்பதிலிருந்து சர்வமகி, அனைவருக்கும் சர்வமுமாகிப் போனாள்.

பல்கலைக் கழகம் சற்றுத் தொலைவில் கிடைத்தபோது, பிடிவாதமாகத் தன் குடும்பத்தை விட்டு விலகி இருக்க முடியாது என்கிற காரணத்தினால், அருகிலேயே ஒரு காலேஜில் சேர்ந்து கம்பியூட்டர் சயன்ஸ் செயதாள்;. படித்துக்கொண்டிருக்கும் போதே ஒரு கம்பெனியில் பகுதிநேர வேலை கிடைக்க உடனேயே சேர்ந்துவிட்டாள்.

“இப்போது நீ வேலை செய்துதான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமா மகி... நீ இன்னும் சின்னக் குழந்தை கண்ணம்மா… நீயும் உன்னுடைய இளவயதை அனுபவிக்கவேண்டாமா” என்று குறையோடு கூறிய தந்தையிடம்,

“எனக்கும் பதினெட்டு தொடங்கப்போகிறது… இன்னும் என்னைக் குழந்தை என்கிறீர்களேப்பா... தவிர என்னுடைய மகிழ்ச்சியே நம்முடைய குடும்பம்தான்… உங்கள் எல்லோருடைய சந்தோஷமும்தான் என்னுடைய சந்தோஷமும். அப்பா… நான் வேலைக்குப் போவதால் நம் குடும்பத்திற்குத்தானே நல்லது. உங்கள் ஒருவரின் உழைப்பால், கனடாவில் வாழ முடியும் என்று நினைக்கிறீர்களா? ஏதோ கூடுதலாக வந்தால், தங்கை தம்பிகளுக்குக் கொஞ்சம் சேர்த்து வைக்கலாமேப்பா...” என்று மறுக்க முடியாதவாறு இனிமையாகக் கூறியவளிடம் எப்படி முகம் முறித்து மறுக்க முடியும்?

அமைதியானார் வாசுதேவன். அவள் கூறுவதில் தவறிருந்தால் திருத்தலாம். அவள் கூறியதில் முழுக்க முழுக்க உண்மையல்லவா இருக்கிறது. அதை எப்படி தவறென்று ஒதுக்க முயும்.

எது எப்படியோ, அவளுடைய சம்பாத்தியம் வீட்டிற்குப் பெரிதும் உதவியது என்றுதான் கூற வேண்டும். ஒரு வருடம் கழிய, அவள் பகுதிநேர வேலை, முழு நேர வேலையாக மாற்றப்பட்டதோடு, நிரந்தரவேலையாகவும் அமைய ஒரு வாய்ப்புத் தேடிவந்தது. ஆனால் அதற்குரிய பயிற்சியை அவள் மேற்கொண்டால் மட்டுமே அந்த நிரந்தர வேலை அவளுக்கு கிடைக்கும். அவளுடைய வேலை நிரந்தரமாக்கப்பட்டால், சம்பள உயர்வோடு பிற உதவிகளும் கிடைக்கும் அனாலும், அப் பயிற்சியை மேற்கொள்வதா, விடுவதா

என்கிற பெரும் சிக்கலில் சர்வமகி சிக்கியிருந்தாள்.

காரணம், அந்தப் பயிற்சியை அவள் வேலைசெய்யும் செயலகத்தின் தலைமைச்செயலகம் அமைந்துள்ள வினிபெக்கில் ஒரு மாதம் தங்கி மேற்கொள்ள வேண்டியிருந்தது. காரில் பயணிப்பதாக இருந்தால். கிட்டத்தட்ட இருபதுமணி நேரப் பயணம். அவளால் எப்படி எல்லோரையும் அம்போ என்று விட்டுவிட்டுப் போக முடியும். இருந்தாலும் கிடைத்த வாய்ப்பைத் தூக்கியெறியவும் மனமில்லை.

தந்தையோ "நீ போய்வாம்மா... முப்பது நாட்கள்தானே. நாங்கள் சமாளிப்போம். யாருக்கும் கிடைக்காத வாய்ப்பு உனக்கு கிடைத்திருக்கிறது. எதற்காக அதை மறுப்பான்?" என்று அவளை ஊக்கப் படுத்த, மறுக்க முடியாமல் அவள் வினிபெக் செல்வதற்கு அரைமனதாகவே சம்மதம் தெரிவித்தாள்.

அவள் போவதற்குள்ளாக தேவகியையும், மாதவியையும் அழைத்து, பல விதமாகப் புத்திமதிகளைக் கூறி, தந்தையிடமும் அவர் என்ன என்ன செய்யவேண்டும் என்பது பற்றியெல்லாம் சொல்லி, பல முறை அவர்களால் ஒழுங்காக வீட்டை நடத்த முடியுமா என்று தெளிவு படுத்திய பின்தான் கிளம்பினாள்.

"அக்கா... எனக்கு பதினைந்து வயது ஆகிவிட்டது. தவிர, எனக்குள்ளும் உன் இரத்தம் ஓடுகிறது. அதனால். பயப்படாமல் போய் வாக்கா... தம்பியை நாங்கள் ஒழுங்காகக் பார்த்துக்கொள்கிறோம்..." என்று தங்கை தேவகி சொன்ன பிறகுதான் ஓரளவு மனம் தெளிந்து வினிபெக் வந்தாள்.

வினிபெக் வந்தவள் காலை மாலை இரு வேளையும் வீட்டுக்கு ஸ்கைப் மூலம் அவர்களின் சுக நலத்தைக் கேட்கத் தவறவில்லை.

இன்று காலை ஸ்கைப்பில் பேசியபோது கூட அவர்கள் மகிழ்ச்சியாகத்தானே இருந்தார்கள். அப்படி இருக்கிறபோது, எப்படி அந்த மகிழ்ச்சியான நிலைமை இப்படித் தலைகீழாக மாற முடியும்?

சர்வமகிக்குத் தன் சகோதரர்களை நினைக்க நினைக்கத் தாளவில்லை. அவர்கள் எப்படிப் பரிதவிக்கிறார்களோ என்கிற எண்ணம் அவளைப் பெரிதும் அலைக்கழித்தது.

வேகமாகத் தன்னுடன் தொடர்ந்து வேலை செய்யும் ஜெஸ்டின் என்பனின் அறைக் கதவைத் தட்டினாள்.

வெளியே வந்த ஜெஸ்டினின் புருவம் வியப்பால் விரிந்தது. இது வரை காலமும் தேவையற்ற பேச்சுக்கு இடமளிக்காமல் இறுக்கமாக இருந்த அந்த இலங்கைப் பெண் தன்னைத் தேடி வருவதைக் கண்டால் வியக்காமல் என்ன செய்ய முடியும்.

"என்ன ஷர்வமகி..." என்றான் ஆங்கிலத்தில் வியப்பை மறைக்காத

குரலில்;.

“ஜெஸ்டின்... நான்... நான் உடனடியாக டொரன்டோ போக வேண்டும்... அதுதான் உன்னிடம் சொல்லலாம் என்று வந்தேன்...” என்றாள் தயக்கமாக.

“எனிதிங் ராங்” என்ற ஜெஸ்டின், அவள் கலங்கிய முகத்தைக் கண்டதும் அவளை நெருங்கினான்.

“என்னால் ஏதாவது உதவ முடியுமா?” என்றான் நல்ல எண்ணத்தில்.

“இ... இல்லை... என்னால் சமாளிக்க முடியும்... நான்... நாளை பயிற்சிக்கு வரமாட்டேன் என்பதை உன்னிடம் கூறத்தான் வந்தேன். இதை தயவு செய்து பயிற்சியாளர்களிடம் அறிவத்துவிடு...” என்றவளைப் புரியாமல் பார்த்தான் ஜெஸ்டின்.

“ஆனால் இந்தப் பயிற்சியை இடையில் நிறுத்தினால், உன் நிரந்தர வேலைக்கான வாய்ப்பு தடுக்கப்படுமே… தவிர… இப்போது நீ செய்துகொண்டிருக்கும் வேலைக்கும் ஆபத்து வரும்… அதனால், கொஞ்சம் யோசித்து.....”

“இப்போது எனக்கு எதைப்பற்றிய கவலையும் இல்லை ஜெஸ்டின்... என்னுடைய நிரந்தர வேலையை விட... இப்போது நான் போக வேண்டிய வேலை முக்கியம்...” என்றதும்,

“ஓக்கே... சர்வமகி... நான் சொல்லிவிடுகிறேன்... என்ன உதவி வேண்டுமானாலும், எனக்கு கால் பண்ணு... உதவி செய்யக் காத்திருக்கிறேன்...” என்று அவன் கனிவுடன் சொல்ல, தலையாட்டிவிட்டு கனத்த மனதுடன் வெளியேறினாள் சர்வமகி.

நிலவு 3

சர்வமகி வீட்டிற்குள் நுழைந்தபோது, சோபாவில் பயத்துடன் அமர்ந்திருந்த சகோதரர்கள் நால்வரும் ஓடிவந்து அவளைக் கட்டிக்கொண்டு அழத் தொடங்கினர். சர்வமகியில்லாமல் அவர்கள் நன்றாகப் பயந்துவிட்டிருந்தது தெரிந்தது.

“ஷ்... எதற்கு இப்படிக் கலங்குகிறீர்கள்... அ... அப்பாவை வெளியே கொண்டுவந்துவிடலாம்...” என்று அன்பாகக் கூறி தைரியமூட்டிய சகோதரியை நம்பிக்கையில்லாமல் பார்த்தாள் தேவகி.

“உண்மையாகவா அக்கா... ஆனால்... ஆனால் அப்பாதான் இந்தக் கொலையைச் செய்தார் என்பதற்கு எல்லா ஆதாரங்களும் இருக்கிறதாமே...” என்றாள் அவள் தவிப்புடன்.

“என்ன ஆதாரம் இருந்துதான் என்ன தேவகி... நம்முடைய அப்பாவைப்

பற்றி நமக்குத் தெரியாதா? நிச்சயமாக எங்கள் அப்பா இந்தக் கொலையைச் செய்திருக்கமாட்டார். இதில் எங்கோ தவறு நடந்திருக்கிறது...” என்றாள் மென்மையாக.

“அது சரியக்கா... ஆனால் தீர்ப்பிற்கு ஆதாரம் தேவையே... அதற்கு நாம் எங்கே போகப்போகிறோம்?” என்றான் பதின்மூன்று வயதான பிரதீபன்.

“நம்முடைய கனடா பொலிஸ் மிகவும் புத்திசாலி பிரதீபன்... எப்படியும் உண்மையைக் கண்டுபிடித்துவிடுவார்கள்...” என்றாள் சர்வமகி நம்பிக்கையாக.

“கண்டு பிடிப்பார்கள் அக்கா... என்ன இன்னும் இருபது வருடம் கழிந்தபிறகு. அதற்கிடையில் என்னென்ன நடக்குமோ யாருக்குத் தெரியும்...” என்று விரக்தியாகக் கூறிய மாதவியைத் தட்டிக் கொடுத்தாள் சர்வமகி.

“நாம் யாருக்கும் எந்தத் தவறும் செய்யவில்லை மாதவி... நிச்சயமாகக் கடவுள் நம்மைக் கைவிட மாட்டார்...” என்று நம்பிக்கையுடன் கூறியவளை ஏளனமாகப் பார்த்தாள் தேவகி.

“கடவுளா? உனக்கு இன்னும் அந்தக் கடவுள் மீது நம்பிக்கை இருக்கிறதா அக்கா? எனக்கு அந்த நம்பிக்கை போய் வருஷங்கள் எத்தனையோ ஆச்சு...” என்றவளை வேதனையுடன் பார்த்தாள் சர்வமகி.

“தவறு மாதவி... எந்த சந்தர்ப்பத்திலும் நாங்கள் நம்பிக்கையைக் கைவிடக் கூடாது. நம்பிக்கைதான் கடவுள்... நம்பிக்கை இருந்தால் எதையும் சாதிக்கலாம். எனக்கு எங்கள் அப்பாவைக் காப்பாற்ற முடியும் என்கிற நம்பிக்கை நிறையவே இருக்கிறது...” என்று உறுதியுடன் கூறியவளை விரக்தியாகப் பார்த்தாள் தேவகி.

“போக்கா... நீ எப்போதும் பொசிட்டிவ்வாக மட்டும்தான் திங்க் பண்ணுகிறாய்... ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல வாழ்க்கையிலும் இரண்டு பக்கங்கள் உண்டு... ஒன்று பாசிட்டிவ், மற்றயது நெகடிவ்...” என்றாள் சோர்வுடன்.

அவள் சோர்ந்த முகம் எதையோ அவளுக்கு உணர்த்த,

“தேவகி... நீங்கள் எல்லோரும் சாப்பிட்டுவிட்டீர்களா?” என்று கனிவுடன் கேட்டாள்.

“இல்லையக்கா... பயத்தில் பசியே மரத்துவிட்டது...” என்று கூற, உள்ளே சென்று பார்த்தாள். தந்தை சென்றதிலிருந்து பெரிதாக சமைக்கப்படவில்லை என்று தெரிய,

“என்ன தேவகி இது... எதுவுமே சமைக்கவில்லையா?” என்றாள் சிறு கண்டிப்புடன்.

“யாரும் சாப்பிட தயாராக இல்லை. அபி மட்டும், பிரெட் சாப்பிட்டான்…” என்று தேவகி கூற,

“தப்பு தேவகி… என்ன பிரச்சனையாக இருந்தாலும், சாப்பாட்டைத் தவிர்க்கக் கூடாது…” என்று கூறியவள், கிடைத்ததை வைத்து ஏதோ சமைக்கத் தொடங்கினாள்.

தேவகியும் உதவி செய்ய, இரண்டு கறி, சோறு என்று தாயாரானது.

அவர்களுக்கு உணவைப் பரிமாற,

“அக்கா நீயும் உட்கார்ந்து எங்களோடு சாப்பிடு…” என்றாள் மாதவி. அவளுக்கு அவள் சகோதரியைத் தெரியாதா என்ன? தந்தையின் கவலையில் அவளும் சாப்பிட்டிருக்க மாட்டாள், இல்லையென்றால், சாப்பிடாமல், அப்பாவை எப்படி வெளியே கொண்டுவருவது என்று யோசித்துக்கொண்டிரு;பபாள்.

“ஆமாமக்கா… நீயும் சாப்பிடு… வா…” என்று அவளை இருத்தி வைத்து உணவைப் பரிமாற, உண்மையில் சகோதரிகளின் அன்பில் சர்வமகி நெகிழ்ந்துதான் போனாள்.

மறுப்புக் கூறாமல் அவர்களுடன் சேர்ந்து உண்டுவிட்டு, பாத்திரங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, சகோதரர்களைத் தூங்க அனுப்பிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள்.
கட்டிலில் வந்து அமர்ந்தவள், அத்தனை நேரமாக அடக்கிவைத்திருந்த வேதனை வெளிப்படும் விதமாகக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அவளால் எது வரைக்கும் போராட முடியும்? அந்த... அந்த வெங்கடேஷ பெரும் புள்ளியாயிற்றே... அவருடைய மரணத்தை சர்வசாதாரணமாக எடுக்கமாட்டார்களே. கிண்டிக் கிளறுவார்களே... அவர்களுக்கு எதிராக என்ன செய்யமுடியும்?’ சகோதரர்களிடம் நம்பிக்கை தரும் விதமாகப் பேசியவளுக்கு, தனிமையில் அந்த நம்பிக்கை மெல்ல மெல்லக் கரைவதை உணர்ந்து பரிதவித்துப் போனாள்.

தன்னால் முயன்றவரைக்கும் தெரிந்த லாயருடன் பேசிப் பார்த்தாள். எல்லோரும் கேஸ் ஸ்டார்ங்காக இருப்பதால் எதுவும் செய்வதற்கில்லை என்றார்கள். இதைச் சொல்வதற்கு ஒவ்வொரு லாயருக்கும் அவள் கிட்டத்தட்ட முன்னூறு நானூறு என்று அழவேண்டித்தான் இருந்தது.

லாயர்மார்களைப் பார்ப்பதும், அவர்களுடன் பேசுவதும், பணத்தைக் கொடுப்பதுமாகக் காலம் ஓடியதே தவிரத் தந்தையை வெளியே எடுப்பதற்குரிய நடவடிக்கை எதுவும் நடக்கவில்லை.

இதற்கிடையில் தந்தையைப் போயப் பார்த்துவிட்டும் வந்தாள்.

அவளைக் கண்டதும் குலுங்கி அழுதார் வாசுதேவன்.

“நான் எந்தத் தவறும் செய்யவில்லை கண்ணம்மா... நான் செய்த ஒரே தவறு, அந்த வெங்கடேஷ் சுடுபட்டு இறந்ததும், தப்பித்தால் போதும் என்கிற எண்ணத்தில் ஓடி வந்ததுதான். நின்று பொலிசுக்கு அறிவித்திருந்தால், என்மீது விழுந்த சந்தேகம் ஓரளவாவது குறைந்திருக்கும்...” என்று கதறியவரைத் தேற்ற முடியாது தவித்தாள் மகள்.

“வருந்தவேண்டாம் அப்பா... எது நடக்கவேண்டுமோ அதுதானே நடக்கும்...எப்படியாவது உங்களை வெளியே கொண்டுவர முயற்சிசெய்கிறேன்... எப்படியாவது... எங்கள் சொத்து அழிந்தாலும் பரவாயில்லை...” என்று உறுதியுடன் கூறியவளுக்கு காலம் கூட உதவுவதாக இல்லை.

இருக்கிற பிரச்சனை போதாது என்று, அவளுடைய தந்தை குற்றவாளி என்று நம்பிய அவளுடைய கம்பனி, அவள் இடையில் பயிற்சியை முறித்துக்கொண்டு வெளியேறியதால், வேலை நீக்கம் செய்யப்படுகிறாள் என்று கண் துடைப்புக்காக ஒரு காரணத்தைக் கூறி வேலையிலிருந்து நிறுத்திவிட்டது.

சொல்லப்போனால் அது அவளுக்குக் கவலைக்குப் பதில் பெரும் நிம்மதியைத்தான் கொடுத்தது.
தந்தையை வெளியே கொண்டுவருவதற்கான முயற்சியில் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் இறங்கலாமே. அதைச் செயலிலும் காட்டத் தொடங்கினாள் சர்வமகி.

இனித் தந்தையை எப்படி வெளியே கொண்டுவருவது என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த போதுதான், தந்தையின் நண்பனான நடராஜன், அவளைப் போய் கனடாவின் முதலாம் தரத்தில் தற்போது இருக்கக்கூடிய, பெரிய கிரிமினல் லாயரான அநேகாத்மனைப் போய்ப் பார்க்கச் சொல்லிக் கூற, உடனேயே கிளம்பிவிட்டாள்.

அவளுடைய அவசரத்திற்கு அப்போய்ன்மன்ட் கிடைத்தால் அல்லவோ. இரண்டு கிழமை கழித்துத்தான் கிடைத்தது.

அவளுக்கு அந்தப் பெயரே விசித்திரமாக இருந்தது. அநேகாத்மன். பல உயிர்களை உடையவன், அல்லது பல இடங்களில் ஒரே நேரம் நிற்கக் கூடியவன் என்று பொருள். சர்வ வல்லமை பொருத்திய அந்த சிவபிரானின் பெயர். அவனால் அவளுக்கு உதவி கிடைக்குமா?

மனம் நிறைந்த நம்பிக்கையுடன் அவனைச் சந்திக்கச் சென்றாள் சர்வமகி.
.

நிலவு 4

அவனுடைய பிரமான்டமான அலுவலகத்திற்குள் நுழைந்தவள், முன்னால் நின்றிருந்த ரிசப்ஷனிஸ்ட்டிடம் செய்தியைக் கூறினாள்.

அவளை ஒரு இருக்கையில் அமருமாறு பணித்துவிட்டு, தொலைபேசியில் செய்தியைக் கூற, மறு பக்கமிருந்து என்ன பதில் வந்ததோ,"யெஸ் சார்..." என்றுவிட்டு தொலைபேசியை வைத்தாள்.

ஐந்து நிமிடம் கழிய, "மிஸ் சர்வமகி... யு கான் கோ நவ்..." என்று அவள் போகும் பாதையைக் கூறி அனுப்பிவிட, உள்ளம் நிறைந்த நம்பிக்கையுடன் இவள் உள்ளே சென்றாள்.

ஒரு லாயருக்கு இத்தனை காவலாளி தேவையா? வியப்பாக இருந்தது சர்வமகிக்கு. அந்த இடத்தைப் பார்த்ததும், அவருக்குக் கொட்டவேண்டிய பணத்தின் அளவும் அதிகமாக இருக்கும் என்பது புரிந்தது. ஆனால் பணத்தைப் பார்த்தால் தந்தையை காப்பாற்ற முடியாதே... இருக்கும் வீட்டை விற்றாவது தந்தையைக் காப்பாற்ற வேண்டுமே...

ஒரு வித அச்சத்துடன் உள்ளே நுழைந்தவள், மேசையின் மறுபுறமிருந்தவனைக் கண்டதும் வழிகளை மூட மறந்தவளாக அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஏதோ ஒரு ஃபைலைக் குனிந்து படித்துக்கொண்டிருந்தவன், இவள் உள்ளே வரும் அரவம் கேட்கச், சற்று விழிகளை மட்டும் நிமிர்ந்து இவளைப் பார்த்தாள்.

இவளைக் கண்டதும், வியப்பு முகத்தில் தெரிய நிமிர்ந்து இருக்கையில் சாய்ந்து அமர்ந்தவாறு, தன் காலின் மீது காலைப் போட்டான். விரலிடுக்கில் வைத்திருந்த கோல்ட் போனாவினால், முன் இருக்கையைச் சுட்டிக் காட்டி,

"டேக் யுவர் சீட்" என்றான்.

அந்தக் குரலின் அழுத்தமும், ஆழமும், ஏனோ சர்வமகியை சிலிர்க்க வைத்தது.

அவள் எதிர்பார்த்து வந்தது, நாற்பது வயதுடைய மனிதரை... ஆனால் இவன்...

இருபதுகளின் பிற்பகுதியில் இருந்தான். என்ன ஒரு இருபத்தெட்டு, இருபத்தொன்பது இருக்குமா? இருக்கும்.

கிட்டத்தட்ட ஆறடிக்கும் மூன்று அங்குலம் கூடுதலாக இருக்கக் கூடிய உடல் என்பது அவன் இருக்கும் முறையைவைத்தே தெரிந்தது. மேசைக்கு மேல் அகன்றிருந்த மார்பும், கோர்ட்டை மீறித் தெரிந்த

திணவெடுத்த தசைகளும், அவனைக் குத்துச்சண்டை வீரன் போலக் காட்டியது. அறிவைக் கூறும், சற்று அகன்ற நெற்றி. அடர்ந்த புருவம். கூரிய ஆழமான விழிகள். தொட்டால் குத்துவது போன்ற நாசி. அழுத்தமான உதடுகள். அதற்கு மேல், அடர்ந்த மீசை. கறுப்பும் வெள்ளையும் என்று சொல்ல முடியாத பொது நிறம். சுறுண்ட கரிய நிறக் கேசம். நேர்த்தியாக அணிந்திருந்த கறுப்பு நிற கோட், வெள்ளை ஷேர்ட், தோதாக கறுப்பு நிற டை. மேசையிலிருந்த கரத்தின் சுத்தம் அவளை வியக்கவைத்தது. ஒட்ட வெட்டிய கை நகத்தில் கூட, அத்தனை சுத்தம். ஒரு மனிதனின் கை நகங்கள் கூட ஆண்மையை பிரதிபலிக்குமா? வியந்தவள், நிச்சயமாக இவன் படம் நடிக்கப் போனால்; ஹாலிவூட் நடிகர்களை ஓரம்கட்டிவிடுவான் என்று புரிந்தது.

தன்னைப் பார்த்துத் திகைத்து நின்றவளைக் கண்டவன் முகத்தில் இருந்த இதம் மறைந்து, அதில் சற்று எரிச்சல் தொனிக்க,

”ப்ளீஸ் சிட்…” என்றான். அதன் பிறகுதான், அவன் கூறியும் அமராமல், அவனையே தான் வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பது, அவளுக்குப் புரிந்தது.

உடனேயே சுயநினைவு பெற்றவளாக இருக்கையில் அமர்ந்தாள் சர்வமகி. அவளுக்குத் தன்னை நினைத்தே அவமானமாக இருந்தது. ஒரு ஆண்மகனைப் போய்க் கண்டதைக் காணாததுபோலப் பார்த்தால், அவன் எரிச்சல்படாமல், வாழ்த்தியா வணங்குவான்?

“யெஸ்... வட் கான் ஐ டூ ஃபோர் யு?” என்று கேட்டதும், முதலில் தன்னை அறிமுகப் படுத்த,

“யேஸ் ஐ நோ… நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கள்…” என்றான் அவன் அழுத்தமாக.

அதிகம் பேசுவது அவனுக்குப் பிடிக்காது என்று புரிந்தது. உடனே, தாமதிக்காமல், தான் கூறவந்ததை அப்படியே ஒப்பித்தாள்.

முதலில் அலட்சியமாகக் கேட்டுக்கொண்டிருந்தவன், ஒரு கட்டத்தில், அவள் சொல்லச் சொல்ல அவனுடை முகம் கடினமாக மாறத் தொடங்கியது. தன் இருக்கையில் சாய்ந்து அமர்ந்தவன், அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன் தன்னையே வெறித்துப் பார்ப்பதை அறியாத சர்வமகி, நடந்தவற்றைத் தலை குனிந்தவாறு வேதனையில் குரல் தளதளக்கக் கூறி முடித்தாள்.

கூறி முடித்ததும், அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

“இதுதான் சார் நடந்தது... என் தந்தை எந்தக் குற்றமும் செய்யவில்லை. அவருக்காக நீங்கள்தான் வாதாடி அவரை வெளியே கொண்டு வரவேண்டும் சார்... ப்ளீஸ்...” என்றபோது அவளுக்கு விழிகளில்

கண்ணீர் முட்டி நின்றது.

அவளை உற்றுப் பார்த்தவன், தன் புருவத்தைச் சுருக்கினான். தன் இருக்கையில் நன்கு சாய்ந்தமர்ந்தவன், இடது முழங்கையை மடித்து, லாவகமாகக் கதிரையின் கைப்பிடியில் ஊன்றியவாறு, கரத்திலிருந்த இருபத்து நான்கு கரட் கோல்ட் பேனாவை, கண்ணிமைக்கும் நேரத்தில் விரல்களுக்குள்ளாக சுழற்றி சுழற்றி வட்டமடித்தான்.

அவனுடைய கூரிய விழிகள் அவளைத் தலைமுதல் மார்புவரை அலசின.

'சுண்டினால் சிவந்து போகும் வெண் நிறம், நீண்ட விழிகள். அவற்றிலே பெரிய கருமையான கண்மணிகள். வில் போன்ற அடர்ந்த புருவம். நடுவிலே சிறிய செஞ்சாந்துப் பொட்டு. அதிகம் சுருட்டையில்லாத அடர்ந்த முடிக் கற்றைகள். மேசைக்கு மறு புறம் அமர்ந்திருந்ததால், அது எது வரை நீண்டிருந்தது என்று தெரியவில்லை. மேல்லியதாக நடுங்கிய சிவந்த இதழ்கள். சங்குக் கழுத்து. ஆணுக்கே உரித்தான பார்வையாக அவளுடய மார்பை சற்று அழுத்தமாக ஒரு நிமிடம் இமை மூடாது பார்த்தவன், மேலும் தன் பார்வையை அவள் விழி வரை கொண்டு சென்றான்.

கவர்ச்சியில்லாத சாதாரண ஆடைதான். மிகவும் எளிமையாகவே அதுவும் பேரழகியாகவே இருந்தாள். ஆனால் இதையெல்லாம் காட்டி அவனை மயக்கிவிடலாம் என்று அவள் எண்ணினால், அது அவளுடைய முட்டாள்தனம்... 'என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? இருக்கும் அழகை வைத்து சாய்த்துவிடலாம் என்று எண்ணினாளா? அத்தனை சாதாரணமானவனா நான்... என்ன தைரியம் இவளுக்கு... என்னை யார் என்று எண்ணினாள்? வேலை வெட்டி இல்லாதவன் என்றா? என் முன்பாகவே வரத் தகுதியில்லாத கீழ்த்தரமானவள்... இவள் எனக்கு சமனாக இருந்து பேசுவதா?' சினம்கொண்டு அவளை வெறித்துப் பார்த்தவன், இது வரையும் அவளை அங்கே இருக்க விட்டதே பெரும் தவறு என்று நினைத்தவன், அவளை எரிப்பதுபோலப் பார்த்தான்.

"எங்கே வந்து பிச்சை எடுக்கிறாய்? உன் அழகைக் காட்டி என்னை மயக்கிவிடலாம் என்று எண்ணினாயா? அதற்கு நீ வேறு யாரையும்தான் பார்க்கவேண்டும்..." என்றவாறு அவன் இருக்கையை விட்டு எழ, அவன் எழுந்த வேகத்தில் இவளும் ஒன்றும் புரியாது, பயத்துடனே எழுந்து நின்றாள்.

அவனுடைய திடீர் கோபம் அவளை ஏனோ நடுங்கச் செய்ய, பாயும் புலியிடம் சிக்கிய மான் போல, மெய் பதற, அதற்குத் தோதாக, விரல்களும் நடுங்கத் தொடங்கியவாறு மருண்டவளாக நின்றிருந்தாள்.

"சா... சார்..." என்றாள் வெடவெடக்க.

“உனக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் தருகிறேன்... அதற்குள் நீ இந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும்... கொட் இட்” என்று அவன் கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளைத் துப்ப, சர்வமகி புரியாத குழந்தையென விழித்தாள். அதிர்ச்சியுடன் எதுவும் புரியாமல் அவனை மலங்க மலங்கப் பார்த்தாள்.

இவன் என்ன சொல்கிறான்? எதற்காக திடீர் என்று என்னை வெளியே போகச் சொல்கிறான்... அதுவும் நீண்டநாள் பகையாளிபோல விரட்டுகிறானே... அப்படி கோபம் கொள்ளும் அளவிற்கு நான் என்ன தவறு செய்தேன்? சத்தியமாக அவளுக்குப் புரியவில்லை.

“சார்... நீ... நீங்கள்...” அவள் முடிக்கவில்லை, அவள் குரலைக் கேட்டதும், பெரும் சீற்றத்துடன், மேசையில் ஓங்கி அடிக்க, ஒரு முறை மேசையிலிருந்த அத்தனை பொருட்களும் துள்ளி அடங்கின. அதனால் அங்கே பெரும் சத்தமே. எழுந்து அடங்கியது. கூடவே, சர்வமகியின் இதயமும், ஒரு கணம் துள்ளி அடங்கியது.

அவனுடைய திடீர் சீற்றத்தையும், அதனால் எழுந்த விளைவுகளையும் எதுவும் புரியாத கையாலாகாத் தனத்துடன், விழிகள் கலங்க, பயத்தில் உடல் வியர்க்க, நடுக்கத்துடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள் சர்வமகி. அவளுடைய அச்சமோ, இல்லை நடுக்கமோ அவனை சிறிதும் பாதித்ததாகத் தெரியவில்லை.

“நீ என்ன நினைத்துக்கொண்டு இங்கே வந்தாயோ எனக்குத் தெரியாது... பட்... நீ நினைப்பது எதுவும் இங்கே நடக்காது... நீ எதற்கு இங்கே வந்தாய், உன்னுடைய மோட்டிவ் என்ன என்பதை என்னால் ஊகிக்கமுடியும். பட் உன்னால் என்...” என்றவன் தன் முடியைப் பிடித்துக் காட்டி, “இதைக் கூடப் புடுங்க முடியாது... ஏன் என் நிழலைக் கூட உன்னால் எதுவும் செய்ய முடியாது...” என்று அலட்சியமாகச் சொன்னான்.

அதன் பிறகும், தெளியாத அவள் அதிர்ந்த முகத்தைப் பார்த்தவன், “லிசின்... நான் கொலைகாரன் ஆவதற்குள் நீ இந்த இடத்தை விட்டுச் சென்று விடுவது உனக்கும் நல்லது, எனக்கும் நல்லது... கெட் அவுட்... அன்ட் கெட் லொஸ்ட்...” என்று உறுமியவனை ஒன்றுமே புரியாமல் ஏறிட்டாள் சர்வமகி.

“சார்... சத்தியமாக நீங்கள்... என்ன சொல்ல...” என்று முடிக்கும் முன்பாக அவளை வெறித்தவன், அதற்கு மேல் உன்னோடு என்ன பேச்சு என்பது போல, அவளுக்கு முதுகு காட்டி நின்றவாறு, அலட்சியமாகத் தன் அருகேயிருந்த தொலைபேசியின் ரிசீவரை எடுத்தான், ஒரு சில இலக்கங்களை அழுத்த, மறு கணம் ஒரு வாட்ட சாட்டமான மனிதன்; உள்ளே வந்தான்.

“பாஸ்...” என்று அவன் அழைக்கத், திரும்பினான்., தன் இரண்டு உள்ளங்கைகளையும், மேசையில் பதித்துக் குனிந்தவாறு, புதியவனை ஏறிட்டவன். அங்கே நின்றிருந்த சர்வமகியை விழிகளால் காட்டி,

“இன்னும் இரண்டு நிமிடங்களில் இவள் இந்தக் கட்டடத்தை விட்டே வெளியேறவேண்டும்... அதனால் அவர்கள் போவதற்கான பாதையைக் காட்டுங்கள்...” என்று ஆங்கிலத்தில் கூற, அந்த செக்யூரிட்டி அவளை நெருங்கினான்.

வேகமாக இரண்டடி பின்னால் வைத்தவள், அங்கேயிருந்த கதிரையில் தட்டுப்பட்டு பாலன்ஸ் தவறி அந்த இருக்கையிலேயே மீண்டும் தொப் என்று அமர்ந்தாள், அவளை நெருங்கிய அந்த காவலாளி,

“மாம்... ப்ளீஸ்...” என்று வாசலைக் காட்ட, அந்த காவலாளியிடம் விழிகளாலேயே இரஞ்சியவள்,

“ப்ளீஸ்... ஒரு நிமிஷம்... இப்போது போய்விடுவிவேன்,” என்று நடுங்கும் குரல் வெளியே தெரியாதவாறு இரஞ்சியவள், திரும்பி அநேகாத்மனைப் பார்த்தாள்.

எதற்காக இவன் திடீர் என்று தன்னிடம் கடுமை காட்டுகிறான் என்பதும், எதற்காக அவன் தன்னை இத்தனை கோபத்துடன் வெளியேற்றுகிறான் என்பதையும் அறியவேண்டும் என்கிற உந்துதல் அவளை ஆட்கொண்டது.

இது வரை யாரும் அவளிடம் இத்தனை கடுமையாக நடந்துகொண்டதில்லை. அவள் அவ்வாறு பிறர் நடக்க வழிவகுத்ததும் இல்லை.

ஒரு மனிதன், இதுவரைத் தன்னைக் கண்டிராத ஒருவன், இத்தனை வெறுப்புக் காட்டுகிறான் என்றால், அங்கே ஏதோ ஒரு தவறு இருக்கத்தானே வேண்டும். அது என்ன என்பதைத் தெரியாமல், அவளால் அடுத்த அடிகூட எடுத்து வைக்கமுடியவில்லை.

“ப்ளீஸ் சார்... நான்... நான் போய் விடுகிறேன்... ஆனால் ஏதோ காரணத்திற்காக நீங்கள் என்னை வெறுக்கிறீர்கள் என்பது புரிகிறது. ஆனால் அது ஏன் என்றுதான் என்னால் கொஞ்சமும் புரிந்துகொள்ள முடியவில்லை... தயவு செய்து... எதற்காக என்னை வெளியேறச் சொல்கிறீர்கள், எதற்காக உங்களுக்கு என் மீது இத்தனை கோபம், வெறுப்பு... என்று சொல்லுங்கள்...” என்றாள் ஒருவித பிடிவாதத்துடன். கூடவே, மனமும், உடலும் வலு இழந்தவை போல நடுங்கியது...

அப்படியே ஒரு வேளை ஏதோ ஒரு காரணத்திற்காக அவள் மீது கோபம் வந்திருந்தால், அந்தக் கோபத்தை நிச்சயமாக அவளால் போக்க முடியும். அதற்கான அடியை அறிந்து, அதற்குரிய விளக்கத்தைக் கூறினால், நிச்சயமாக இவன் தன்னைப் புரிந்துகொள்வான். தன் மீது எந்தத் தவறும் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டால், தன் தந்தைக்கு ஆதரவாக அவன் நிச்சயமாக வளக்காடுவான் என்று அவள் முழுதாக நம்பினாள்.

ஒரு கணம் அவளை ஆழப் பார்த்தவனுக்கு அவளுடை புரியாத முகம் ஒரு கணம் யோசனையைக் கொடுத்தாலும், மறுகணம், எல்லாம் நடிப்பு…' என்று இளக்காரமாக நினைத்தவன், திரும்பி அந்த காவலாளியைப் பார்த்து, தன், வலது கரத்தைத் தூக்கி வெளியே பேகுமாறு, தன் இரு விரல்களை மட்டும் அசைத்துக் கூற, அவன் தலை வணங்கிவிட்டு வெளியேறினான்.

அவன் வெளியே சென்றதும், சர்வமகியைப் பார்த்து,

"தூங்குகிறாயா? இல்லை தூங்குவதுபோல நடிக்கிறாயா?" என்றான் அவன் பெரும் ஏளனத்துடன்.

"சார் சத்தியமாக என் மனதறிந்து யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. வீடாகட்டும், வேலைத்தளமாகட்டும், ஒரு போதும் நான் தவறு இழைத்ததில்லை. ஏதோ ஒரு சந்தர்ப்பதில் நான் உங்களைப் பார்க்காமலே, உங்களைத் தெரியாமலே, புண்படுத்தியிருக்கிறேன் என்பது எனக்குத் தெரிகிறது… பட் அது எங்கே, எப்படி என்றுதான் தெரியவில்லை. தெரிந்தால், அதற்குரிய விளக்கத்தையும் உங்களிடம் கூறமுடியுமில்லையா… என் மீது தவறு இல்லை என்பதைத் தெரிந்தால், நீங்கள் நிச்சயமாக என் அப்பாவைக் காப்பாற்றிக் கொடுப்பீர்கள் அல்லவா…" என்றாள் அவள் அவனுக்குப் புரியவைத்துவிடவேண்டும் என்கிற வேகத்தில்.

அதைக் கேட்டதும், அவன் கடகட எனச் சிரிக்கத் தொடங்கினான். ஒருவாறு சிரித்து ஓய்ந்தவன்,

"அடேங்கப்பா… நீ மட்டும் நடித்தாய் என்றால் அந்த ஆஸ்கார் விருது உனக்குத்தான். உன்னால் மட்டு;ம் எப்படி இப்படி நடிக்க முடிகிறது. அது சரி கொலைகாரன் மகளுக்கு நடிக்க சொல்லிக்கொடுக்கவேண்டுமா என்ன?" என்று பெரும் ஏளனத்துடனும், இளக்காரத்துடனும், கூடவே சீற்றத்துடனும் அவன் கூற, ஒரு கணம் சர்வமகி ஆடிப்போனாள்.

நிலவு – 5

ஏதோ ஒரு காரணத்திற்காக அவள் மீது அவன் கடும்கோபத்திலிருக்கிறான் என்று தெரியும். ஆனால், இத்தனை பெரும் வெறுப்பை வைத்திருக்கிறான் என்று அவள் சிறிதும் எண்ணியிருக்கவில்லை. அதுவும் அவளைக் கொலைகாரனின் மகள் என்றது அவளால் சிறிதும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னை மறந்து,

"சார்…" என்று அதிர்ச்சியுடன் ஏறத்தாழ கத்தினாள் சர்வமகி.

"கொலை காரன் மகளா… சார்… என் அப்பா எந்தக் கொலையும் செய்யவில்லை… ப்ளீஸ் என்னை நம்…" அவள் முடிக்கவில்லை,

"ஸ்டாப் இட்…" என்கிற அவனுடைய கர்ஜனை அவளுடைய வாயை

அழுந்த மூடச் செய்தது.

“என்ன சொன்னாய்… உன் அப்பன் கொலைசெய்யவில்லை என்றா… யாரிடம் வந்து என்ன சொல்கிறாய்… என் தந்தையை உன் அப்பன் கொன்றான். அவனைக் காப்பாற்ற என்கிட்டேயே வருகிறாயே… நீ எவ்வளவு பெரிய கிரிமினலாக இருக்கவேண்டும்… ஒருவேளை என் அப்பாவைக் கொன்றதுபோல, நீ என்னைக் கொல்ல வந்திருக்கிறாயா?” என்று அவன் நக்கலாக அவளிடமே வினாவ, சர்வமகி ஆடிப்போனாள்.

என்ன சொன்னான்? அவன் தந்தையை அவள் தந்தை கொன்றாராமா? அப்படியானால் இவன் அந்த வெங்கடேஷின் மகனா? சர்வமகிக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. கூடவே புரியாத புதிரும் ஓரளவு விடுபட்டது.

வெளியே எதற்காக இவனுக்கு இத்தனை செக்யூரிட்டி என்று எண்ணினாளே… தன் மேல் எதற்கு இத்தனை சீற்றம், என்று கலங்கினாளே… அத்தனைக்கும் காரணம் இதுதானா….

“கடவுளே…” என்று வதங்கியவள், தன்னையும் மீறி,

“நீ... நீங்கள்... அந்த... வெங்கடேஷின்... ம... மகனா?” என்றாள் நாக்கு அண்ணாக்குடன் ஒட்ட.

“ஓ…இது தெரியாமல்தான் வந்திருக்கிறாயாக்கும்… இதை நான் நம்பவேண்டும்;… இதற்கு யாராவது ஒருவன் காதில் பூ சுற்றியிருப்பான் அவனிடம் போய் கூறு… என்ன தைரியம் உனக்கு…” என்று அவன் மேலும் சீற, சர்வமகி, தான் அமர்ந்திருந்த கதிரையின் சட்டத்தை அழுந்தப் பற்றிக்கொண்டாள்.

அவளுடைய முகம், இரத்தப்பசையின்றி வெளுத்துப்போயிருந்தது. இடக் காரம் தாமாக எழுந்து நெற்றிப்பொட்டை அழுத்திக்கொடுத்தது.

நல்லவேளை அவள் இருக்கையில் அமர்ந்திருந்தாள். இல்லை என்றால், அந்த அதிர்ச்சியான செய்தியில் அவள் நிச்சயமாக மயங்கி விழுந்திருப்பாள்.

“நீங்கள் உண்மையாக… வெங்கடேஷ் சாரின் மகனா…” என்றாள் இன்னும் நம்பமாட்டாதவளாக…

“ஏன்...அதற்கு சாட்சி வேண்டுமோ?” என்று பெரும் எகதாளமாகக் கேட்க, அதற்கு மேல் அங்கே நிற்கமுடியாது என்பதைப் புரிந்தவளாக இருக்கையை விட்டு மெதுவாக எழுந்தாள்.

அவளுடைய நம்பிக்கை அத்தனையும் தகர்க்கப்பட்டு விட்டன… எப்படியும் இவன் தன் தந்தையை வெளியே கொண்டுவருவான் என்று நம்பியிருந்தாளே. அத்தனை நம்பிக்கையும், சொடக்குப் போடும் கணத்தில் தவிடுபொடியாகிவிட்டது.

விதிதான் எவ்வளவு வலியது… வலிக்க வலிக்க அடித்துவிட்டுக் கைகட்டி வேடிக்கைபார்க்கிறதே…

ஏனோ, அவன், கொலை செய்யப்பட்டவரின் மகன் என்றதும், அவளால் தாளமுடியவில்லை. எவன் தன் தந்தைக்கு தண்டனை வாங்கித்தர வேண்டும் என்று மும்மரமாக இருக்கிறானோ, அவனிடமே போய், தன் தந்தையின் விடுதலைக்காக உதவி கேட்டு வந்தாளே… இந்த நிலையில் அவளைக் கண்டு சீறாமல், கைகுலுக்கி ஆதரவா தெரிவிக்கப் போகிறான்… அவளுடைய கழுத்தைப் பிடித்துத் தள்ளாதது ஆச்சரியமே. ஐயோ… இனி அவள் தந்தையின் நிலை.

நினைக்கும் போதே, சர்வமகிக்குச் சர்வமும் நடுங்கிப்போனது. கால்கள் நடுங்கிப் பலமிழந்துவிடும் போல சரியத் தொடங்கியது. உடனேயே அருகேயிருந்த ஒரு கதிரையைப் பற்றித் தன்னை நிலைப்படுத்த முயன்றாள். தலைக்குள் டமாரம் அடிக்கத் தொடங்கியது.

‘பொறு வலியே… பொறு… இப்போது என்னைத் தீண்ட இதுவல்ல நேரம்… நான் யோசிக்கவேண்டும். இவன் சொன்னதை நான் ஜீரணிக்கவேண்டும்… கொஞ்சம் பொறுத்துக்கொள்… இப்போது என்னைவிட்டு போய்விடு…’ என்று தலையில் குடையத் தொடங்கிய வலியிடம் மன்றாடிப் பேரம் பேசினாள்.
அதுவோ, நீ சொல்லி நான் என்ன கேட்பது என்று மேலும் குடைச்சல் கொடுக்க, கரம் கொண்டு தன் தலையை அழுந்தப் பற்றி, வலியைப் போக்க முயன்றாள். முடியாமல், நிமிர்ந்து அருகேயிருந்தவனைப் பார்த்தாள். முன்னால் நின்றிருந்தவன் சற்று மங்கலாகத் தெரிய, தன் விழிகளைச் சிமிட்டிச் சிமிட்டி அவன் உருவத்தை சரி செய்ய முயன்றாள். பார்வையோ மேலும் மங்கலாகத் தெரிய, அவன் முன்னால் தான் உடைந்துபோகக் கூடாது என்கிற வேகம் எழத், தன் கைப்பையில் கரத்தை விட்டு எதையோ எடுக்க முயன்றாள். கரமோ, கைப்பையைத் தவிர, மற்றைய இடமெல்லாம் துலாவ முயன்று இறுதியில் கைப்பையில் தஞ்சம் புகுந்தது.

அவனோ கண்ணிமைக்கும் நேரத்தில் அவளருகே வந்தவன், அவள் கைப்பையை அவளிடமிருந்து பறித்து எடுத்தான்.

“கைப்பையில் என்ன வைத்திருக்கிறாய்? துப்பாக்கியா? அத்தனை சுலபத்தில் என்னை சுட்டுவிட்டு நீ தப்பிக்கலாம் என்று நினைத்தாயா?” என்றவன், அவள் கைப்பையைத் தன் மேசையில் கவிழ்த்தான். கைப்பையில் இருந்த அத்தனை பொருட்களும், சிதறி விழுந்தன.

அதில் விழுந்த பொருட்களை உன்னிப்பாகப் பார்த்தான் அநேகாத்மன். கொஞ்சம் சில்லறை, கொஞ்சம் பணம். கைதுடைக்கும் பேப்பர். கார் திறப்பு. கூடவே வீட்டுத் திறப்பு. ஒரு சின்ன டவல். அப்படியே ஏதோ ஒரு சில மாத்திரைகள். அவற்றைத் தவிர, சந்தேகப்படும்படி எதுவும் இருக்கவில்லை. யோசனையுடன் திரும்பிப் பார்த்தவன், அவள் நிற்கும்

கோலத்தைக் கண்டு, கொஞ்சம் நிதானத்திற்கு வந்தான்.

“ஹேய்… ஆர் யு ஓக்கெ… டோன்ட் கிரியேட் எனிதிங் நியூ… இதையெல்லாம் நான் நம்புவேன் என்று நீ நினைத்தால் அது உன் முட்டாள் தனம்…” என்று அவன் கடுமையாகக் கூற, ஒரு கணம் தெளிந்த பார்வையில், மேசையில் கொட்டியிருந்த பொருட்களில் தெரிந்த மாத்திரை தட்டுப்பட்டது.

மீண்டும் கண் பார்வை மசமசக்க, ஒரு குத்து மதிப்பில் இரண்டு அடிகளை எடுத்து வைத்து மேசையை அடைய முயல, இது வரை தாக்குப்பிடித்ததே பெரிய காரியம் என்பதுபோல, கால்கள் வலுவிழந்து சரிய, அதைக் கண்டவன், இரண்டெட்டில் சர்வமகியை நெருங்கி அவள் இடையில் தன் கரம் கொடுத்து, தரையில் விழாதவாறு தன்னோடு தாங்கிக்கொண்டான்.

அவன் இறுகிய பிடியில் தன்னை நிலை நிறுத்தியவள், அவனிடமிருந்து விலக முயன்றவாறே. அவனுடைய மேசையை வந்தடைந்தாள். நடுங்கும் கரங்களால், அந்த மேசையை வருடியவளின் கரங்களில் அந்த மாத்திரை தட்டுப்பட, அதை எடுத்தாள்.

ஏதோ மலையைக் கூட சுலபத்தில் புரட்டிவிடலாம் என்பது போல, பலமிழந்த கரங்களால், அந்த மாத்திரையின் கவரைக் கிழிக்க முயன்று தோற்றாள். நடுங்கிய கரங்களும், மங்கிய பார்வையும், அவளை நிலையிழக்கச் செய்தன.

இயலாமையில் அவளுக்கு அழுகைவேறு வந்தது. அந்தக் கொஞ்ச நிமிடத்தில், சர்வமகி படும் சிரமத்தைக் கண்டவன், கல்நெஞ்சனாகவே அவளை வெறித்துப் பார்த்தான்.

அந்த மாத்திரையின் கவரை அவள் கிழிக்க முயன்ற விதம், அவனைச் சற்றுத் தடுமாற வைத்ததோ, சற்றுப் பொறுத்துப் பார்த்தவன், ஒரு பொறுமையிழந்த மூச்சுடன் அவளை நெருங்கி அவள் கரத்திலிருந்த மாத்திரையைக் கிட்டத்தட்ட பறித்து, உடைத்து அவளிடம் நீட்டினான்.

நன்றியுடன் பெற்றுக்கொண்டவள், அதை வாயில் போட்டு விழுங்க முயன்றாள். ஏற்கெனவே காய்ந்திருந்த தொண்டையினூடாக, மாத்திரை சுலபமாக இறங்க மறுக்க, தொண்டை கமறியது.

அவள் விழுங்கச் சிரமப்படுவதைக் கண்டவன், மேசையில் மூடிவைத்திருந்த தண்ணீர் கிளாசை எடுத்து அவளிடம் நீட்டினான். நடுங்கும் கரம்கொண்டு அதனைப் பற்ற முயன்றவள், முடியாமல் கரங்கள் நடுங்க, அவன் முன்னால் இத்தனை பலவீனமாக இருக்கிறோமே என்கிற அவமானமும், வேதனையும் அவளை மேலும் சோர்வுறச் செய்ய, கன்னத்தில் கண்ணீர் தாராளமாக வழிந்து ஓட, நடுங்கியவளின் கரத்திலிருந்த கிளாசும், நடுங்கத் தொடங்கியது.

அவள் கரத்தில் வைத்த தண்ணீர் கிளாஸ் எந்த நேரமும் தரையில் விழுந்து உடையலாம்; என்பதைப் புரிந்துகொண்டவன், அவள் கரத்திலிருந்த கிளாசைப் பறித்துத் தானே அவள் வாயருகில் வைத்துப் பருக்கி விட, தன் மேல் நீர் விழுவதைக் கூடப் பொருட்படுத்தாது ஒரு மிடறு விழுங்கி, மாத்திரையை வயிற்றுக்குள் அனுப்பினாள்.

இரண்டு பெரிய மூச்சுக்களை உள் இழுத்து வெளிவிட்டவளுக்கு அப்போதும், அவள் உடல் கட்டுப்பாட்டில் இல்லாமல் சண்டித்தனம் செய்தது. விழிகளை அழுந்த மூடித் தன் தலையைப் பின்புறமாகச் சரித்து, அந்த வலியிடமிருந்து தன்னை விடுவிக்க முயன்றாள். அதில் ஓரளவு வெற்றியும் பெற, விழிகளை மெதுவாகத் திறந்தாள். இப்போது ஓரளவு பார்வையில் தெளிவு வந்தது.

“யு… ஓக்கே…” என்றான் அவன்.

“யெ..யெஸ்… தாங்கஸ்…” என்று நன்றியுரைத்தவள்,

சிரமப்பட்டு, மேசையில் சிதறியிருந்த தன் பொருட்களை இன்னும் கட்டுக்கள் வராத கரங்களால், எடுத்துக் கைப்பையில் போட்டு தன் தோளில் மாட்டிக்கொண்டாள். மீண்டும் கால்கள் பலமிழந்துவிடும் போல நடுங்கத் தொடங்கின.

எங்கே விழுந்துவிடுவாளோ, என்று அவளைப் பற்ற அருகே வந்தான் அநேகாத்மன். அவன் நோக்கம் புரிந்தவளாக, இரண்டெட்டுத் தள்ளி நின்றவள், தன் வலக்கரத்தைத் தூக்கிக் காட்டி,

“ஐ… ஐ ஆம்… ஓக்கே… தாங்க்ஸ்…” என்றாள் அவன் உதவியை மறுத்தவளாக.

இன்னும் கொஞ்சம் தாமதித்தாலும் மீண்டும் தரையில் சரிந்து விழும் நிலையில் இருக்க, மறுபடியும் அவன் முன்னால், தன் பலகீனத்தைக் காட்டப் பிடிக்காதவளாக, சிரமப்பட்டுத் தன் வலியை அடக்க முயன்றவளின் மனதில் தந்தையின் எண்ணம் பூதாகரமாகத் தாக்கியது.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் அவனைத் தவிப்புடன் பார்த்தாள் சர்வமகி. அவன் நினைத்தால் மட்டும்தான் தன் தந்தையைக் காப்பாற்ற முடியும் என்று புரிந்தது.

ஆனால் பாறையால் செய்த கோட்டைக்கு, இரும்புக் கதவுகள் போட்டுப் பூட்டியதுபோல, காதையும், மனதையும் இறுக வைத்துக்கொண்டு, கேட்கமாட்டேன் என்பவனிடம் போய் என்னவென்று சொல்வது…

“ஓ… அப்பா… நான் என்ன செய்யட்டும்… எப்படி உங்களை வெளியே கொண்டுவரப்போகிறேன்…” என்று விழிகளை மூடிக் கலங்கியவள், இனி அங்கே நின்று பயனில்லை என்பது புரிந்தவளாக, வெளியேற முயன்றாள்.

அதே நேரம் அவளுடைய பலவீனத்தைக் கைகட்டி, அலட்சியமாக வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தவனுக்கு, ஏனோ அவள் என்ன மாத்திரை எடுத்தாள் என்று அறியவேண்டும் என்கிற தேவையற்ற பரபரப்பு அவனை ஆட்கொண்டது. அவள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று அவனால் சிந்திக்க முடியவில்லை. அதற்குரிய காரணமும் புரியவில்லை.

“நீ எதற்காக மாத்திரை எடுத்தாய்?” என்றான் அவன் கறாராக.

அவளோ உனக்கென்ன பதில் கூறுவது…’ என்பதுபோல, வாசல் கதவை நோக்கிச் செல்லத் தொடங்க,
“நான் ஒரு கேள்விகேட்டேன்…” என்றான் அவன் அதிகாரமாக.

அவளோ உனக்கென்ன பதில் கூறுவது என்பதுபோல அறைக்கதவைத் திறக்கப்போக, அவன் தன் செல்லைக் கரத்தில் எடுத்து, கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டியவாறு, தன் ஃபோனில் எதையோ அழுத்தினான்.

சோர்வுடன் அவன் அறைக்கதவைத் திறக்க முயல, கதவோ, நான் திறக்கமாட்டேன் என்று அடம்பிடிக்க, அநேகாத்மனை ஏறிட்டாள் சர்வமகி.

“ப்ளீஸ் சார்… கதவைத் திறவுங்கள்… நான் போகவேண்டும்…” என்றாள் எல்லையற்ற களைப்புடன். அந்த மாத்திரை வேறு தன் வேலையைக் காட்டத் தொடங்கியிருந்தது.

“போகலாம்… முதலில் என் கேள்விக்கு பதிலைக் கூறு…” என்றான் அவன் பிடிவாதமாக.
அப்போதுதான் அவன் நினைத்ததை சாதிக்கும் ரகம் என்று புரிந்தது.

“அதைத் தெரிந்து என்ன சார் செய்யப்போகிறீர்கள்?” என்றாள் சர்வமகி சற்றுச் சலிப்புடன்.

“நத்திங்… ஜெஸ்ட் கியூரியோசிட்டி…” என்றான் அவன் தன் கைபேசியில் எதையோ நோண்டியவாறு.
“ப்ளீஸ் சார் கதவைத் திறவுங்கள்… நான் போகவேண்டும்…”

அவனோ காதில் எதுவுமே விழாதவன் போல, தன் கைபேசியிலேயே தன் கவனத்தைச் செலுத்தியிருந்தான். அறியாமல் விடமாட்டான் என்பது புரிய,

“சார்… அது வெறும் தலைவலி மாத்திரை… இப்போதாவது கதவைத் திறவுங்கள்…”

“தலைவலிக்கு எடுக்கும் மாத்திரைபோல் தெரியவில்லையே…” என்று அவன் சந்தேகத்துடன் மேலும் துருவ.

“இல்லை… எனக்கு சிவ்யர் சயனஸ் பிரச்சனை இருக்கிறது… அதற்கான மாத்திரைதான் இது…” என்றபோதே அவளுடைய தலைவலி சற்று மட்டுப்பட்டிருந்தது.

“இப்போ எப்படி இருக்கிறது? ஆர் யு ஓக்கே…” என்றான் அவன்.
கொஞ்சமே, கொஞ்சமாய்… அக்கறை தெரிந்ததோ? ஆனால் அவன் முகம்மட்டும் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் இறுகிப்போய் இருந்தது.
அவள் ‘ஆம்’ என்று தலையாட்ட, தன் கைபேசியிலிருந்து எதையோ அழுத்த, அறைக்கதவு லாக் விடுபட்டது.

“குட்… நவ் லீவ் மை ப்ளேஸ்… ஐ டோன்ட் வோன்ட் டு சீ யுவர் ஃபேஸ் எனி மோர்…” என்றவாறு தன் இருக்கையில் வந்தமர்ந்தவனின் முகத்தில் அதீத கடுமை சற்று மட்டுப்பட்டிருந்தது.
கொஞ்சம் இளகியிருக்கிறானே… கடைசியாக தன் தந்தைமீது தவறில்லை என்பதையாவது அவனுக்குப் புரியவைக்கலாமே என்கிற எண்ணத்துடன்,

“சார்… உங்கள் கோபம் எனக்குப் புரிகிறது… ஆனால் எ... என் அப்பா... உங்கள் அப்பாவை...” அவள் முடிக்கவில்லை,

“கொன்றார்...” என்று இரக்கமில்லாமல் முடித்தான் அவன்.

“இல்லை... சார்… என் அப்பா உங்கள் அப்பாவைக் கொல்ல வில்லை... தயவு செய்து நம்புங்கள். அப்படியே என் தந்தை உங்கள் தந்தையைக் கொல்ல வேண்டுமானால், அதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும் அல்லவா? என் அப்பாக்கு உங்கள் தந்தையைத் தெரியாது... அப்படி இருக்கிற போது அவர் எப்படி உங்கள் தந்தையைக் கொல்ல முடியும்? தயவு செய்து யோசித்துப் பாருங்கள்...” என்றாள் கலக்கத்துடன்.

“என் தந்தையை உன் தந்தை கொன்றதற்கான மோட்டீவைத்தானே கேட்கிறாய்? சொல்கிறேன். என் தந்தையின் வியாபார வளர்ச்சியால் நொடிந்து போன கம்பனிகளில் உன் தந்தையின் கம்பனியும் ஒன்று. அதனால் என் தந்தையைப் பழி வாங்க எண்ணியிருக்கலாம். இல்லாவிட்டால் உன் தந்தை எதற்காக சம்பவம் நடந்த இடத்தை விட்டு ஓட வேண்டு;ம்?” என்றவனை வேதனையுடன் பார்த்தாள் சர்வமகி.

“சாட்சி சந்தர்ப்பங்கள் மட்டும் இருந்துவிட்டால், அந்த மனிதன் குற்றவாளியாகிவிட முடியாது மிஸ்டர் அநேகாத்மன்... ஒரு வேளை உங்கள் தந்தையின் எதிரிகள் வேறு யாராவது இந்தக் கொலையை செய்திரக்கலாம் அல்லவா?” என்று மெல்லிய குரலில் கூறியவளை எரிச்சலுடன் பார்த்தான் அந்த அநேகாத்மன்,

“அந்த எதிரியே உன் தந்தை என்கிறேன்... பிறகென்ன... இதோ பார்... நீ இங்கே நிற்பதால் உனக்கு எந்தப் பயனும் கிடையாது. உன் தந்தயுடடைய ஆயுள் தண்டனை என் கையில்தான். அவருக்கு எதிராகக்

கோர்ட்டில் நிற்கப்போவது நான்தான். எல்லா சாட்சியங்களையும் சேர்த்துவிட்டேன். இதைக் கோர்ட்டில் சப்மிட் பண்ணினால் போதும், ஆயுளுக்கும் அந்தாள் வெளியே வர முடியாது..." என்றவனுடைய கண்கள் சினத்தில் கொவ்வைப்பழம் போலச் சிவந்திருந்தன.

"ப்ளீஸ் சார்;... கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்... என் தந்தை கொலை செய்யக்கூடியவரல்ல..." என்றவளுடைய குரல் கம்மியிருந்தது.

இளகியிருந்த முகம் மேலும் பாறையாக இறுக,

"எனக்கு நிறைய வேலை இருக்கிறது... சோ..." என்று வாசலைப் பார்த்துக் கை காட்டிவிட்டு மேசையிலிருந்த ஒரு ஃபைலில் தன் கவனத்தைச் செலுத்தினான் அவளுடைய நேரம் முடிந்தது என்பதைக் கூறுவதுபோல.

அவனுக்கு எப்படிப் புரியவைப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை. அவனுடைய கோபத்தையும், வேகத்தையும் பார்த்தால், இப்போதே அவள் தந்தைக்குத் தண்டனைவாங்கிக் கொடுத்துவிடுவான் போல இருந்தது.

அவனுடைய ஆக்ரோஷத்தைப் பார்த்தால் அவனைத் தடுத்து நிறுத்தமுடியாது என்பது புரிந்தது.
"நான் என்ன செய்வேன்... கிடைத்த ஒரே நம்பிக்கையும் பொய்த்துவிட்டதே..." என்று கலங்கியவள் வெளியேறத் திரும்பினாள்.

திரும்பியவளைச் சொடக்குப் போட்டு அழைத்தான் அந்த அநேகாத்மன்.

திரும்பாமலே நின்றாள் சர்வமகி. ஃபைலில் இருந்து பார்வையை விலக்காமலே,

"உன் தந்தையைச் சந்தித்தால் சொல்... எந்தக் கொம்பனாலும் அவரை வெளியே கொண்டு வரமுடியாது என்று..." என்று அதிகாரமாகக் கூறியவனை வேதனையுடன் திரும்பிப் பார்த்தாள் சர்வமகி.

"உங்கள் வேதனை எத்தகைய பாரதூரமானது என்று எனக்குத் தெரிகிறது மிஸ்டர் அநேகாத்மன். ஆனால் என் தந்தை கொலை செய்யவில்லை என்பது எனக்கும் தெரியும், அந்தக் கடவுளுக்கும் தெரியும். எது எப்படியோ... என் தந்தை குற்றவாளியில்லை என்று நிருபிக்க யாராவது ஒருவர் அந்தக் கடவுள் போல வருவார்... நிச்சயமாக வருவார்..." என்று நம்பிக்கையுடன் கூறியவளை அலட்சியமாக ஏறிட்டுப் பார்த்தான் அநேகாத்மன்.

"யார் வந்தாலும்... ஏன் உன் கடவுளே வந்தாலும், உன் தந்தைக்கு ஆயுள் தண்டனை உறுதி..." என்று அலட்சியத்துடனும், ஏளனத்துடனும் கூறியவனைப் பார்த்தாள் சர்வமகி.

அந்தப் பார்வையில் என்ன இருந்தது? வலி, வேதனை, தவிப்பு

புரிந்துகொள்ள மறுக்கிறாயே என்கிற அவலம்... ஏதோ ஒன்று அவனைச் சற்றுத் தடுமாற வைத்தது என்பது மட்டுமட் உண்மை.

ஏனோ, அவளுடைய கண்களைப் பார்த்த அநேகாத்மனுக்கு எங்கோ வலிப்பதுபோல் இருந்தது.
அந்தப் புதிய உணர்வில், தன்னை நினைத்தே, அதிர்ந்தவன், வேகமாக அந்த உணர்வைத் துடைத்தெறிந்தவாறு, அவளை அலட்சியமாகப் பார்த்தான்.

அதற்கு மேல், பேசிப் பயனில்லை என்பதைப் புரிந்துகொண்டவளாக விழிகளை அழுந்த மூடி
"கடவுளே... எது நடந்தாலும், எங்களுக்குத் தாங்கும் சக்தியைத்தா..." என்று மனமாற இறைவனிடம் வேண்டியவள், மெதுவாக விழிகளைத் திறந்தாள். உடலோடு மனமும் அதீதமாய் சோர்ந்துபோனது. சற்றுத் தள்ளாடியவாறு வெளியேறினாள் சர்வமகி.

அவள் வெளியேறுவதை தலைகுனிந்து ஃபைலை வாசித்தவாறு, மண்டைக்கண்ணால் பார்த்தவன், எதுவோ உந்த, ஃபைலை ஒருபக்கமாகப் போட்டவன், இருக்கையை விட்டு வேகமாக எழுந்தான். விரைந்து சென்று ஜன்னல்புறமாக வெளியே எட்டிப் பார்த்தான். சற்றைக்கெல்லாம், சர்வமகி, தளர்ந்த நடையுடன் நடந்து செல்வது தெரிந்தது.

சற்றுத் தள்ளி பார்க் பண்ணியிருந்த கறல்பிடித்திருந்த, டொயோட்டா கம்ரி 94 மாடலில் அவள் ஏறி அமர்வது தெரிய, இவனையும் அறியாமல், இவனுடைய இரத்த அழுத்தம் எகிறியது.

'இதையெல்லாம் யார் கார் என்று சொன்னார்கள்... இதில் ஏறி எப்படி பத்திரமாக வீட்டிற்குப் போய்ச் சேர்வாள்... கொஞ்சமாவது அறிவுவேண்டாம்...' என்று தன்னை மறந்து கோபத்துடன் நினைத்தவன், எதுவோ உந்த, தன்னுடைய பின் பான்ட் பாக்கெட்டிலிருந்த செல்லை எடுத்தான்.

"கேர்வின்... இப்போது நம்முடைய ஆஃபீசை விட்டு வெளியேறும் அந்தப் பெண்ணை பின்தொடர்ந்து செல். அவர்கள் பாதுகாப்பாக வீட்டிற்குச் சென்றதும், எனக்குத் தெரியப்படுத்து." என்று உத்தரவிட, அவனுடைய உத்தரவு மறு கணம் நிறைவேற்றப் படுவதுபோல, அவனுடைய உதவியாளின் கார், அந்த பில்டிங்கை விட்டு வெளியேறி, ஊர்ந்துகொண்டிருந்த அந்த டொயோட்டா கம்ரியை பின்பற்றத் தொடங்கியது.

நிம்மதியுடன், தன் கைபேசியில் இன்னொரு இலக்கத்தை அழுத்த,

"ஹாய் அநேகாத்மன்... வட்கான் ஐ டூ ஃபோர் யு..." என்கிற குரல் உற்சாகமாக மறுபுறமிருந்து வர,
"டேவிட்... ஐ நீட் யுவர் ஹெல்ப்..."

“கமோன்… அநேகாத்மன்… உனக்காக எதுவும் செய்யத் தயாராக இருக்கிறேன்… சொல்…” என்றான் அந்த டேவிட்.

“எனக்கு ஒருத்தரைப் பற்றிய முழுத் தகவலும் இன்னும் ஒரு மணி நேரத்தில் என் மேசைக்கு வந்தாகவேண்டும்... இட்ஸ் பேர்சனல்…” என்றான்.

“ஷ_வர்… யார் அது…”

“சர்வமகி… சர்வமகி வாசுதேவன் ”

தொடரும்...

நிலவு 6

சற்றைக்கு முன், அவனிடம் வந்து, தன் தந்தையைக் காக்கமாறு வேண்டிநின்ற அந்தப் பெண்ணை ஏனோ அநேகாத்மனால் மறக்கமுடியவில்ல. அவள் நல்லவள் அல்ல என்பது தெரியும். அவள் ஒரு கொலைகாரனின் மகள் என்பதும் தெரியும். ஆனால் அதையும் மீறி எதுவோ அவனை அவள் பக்கமாக இழுத்தது. அது எது? என்பது புறியாமல் தன் மீதே கோபம் கொண்டவனாகத் தன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினான்.

அவனையும் அறியாமல், அவனுடைய கைபேசியை அடிக்கடி அவன் பார்த்தான்.

“டாமிட்… கேர்வின்… கால் மி…” என்று அவனையும் அறியாமல் முனுமுனுத்தவன், சென்று தன் இருக்கையில் அமர்ந்தான். அவசரமாகப் பார்க்கவேண்டிய பல கோப்புக்கள் அவனைப் பார்த்துச் சிரிக்க, சலிப்புடன் ஒரு கோப்பத் திறந்தான்.

திறந்தவனின் கண்முன்னால், கலங்கி நின்ற அந்தப் பெண்ணே நின்றாள். அதற்கு மேல், கோப்பிலிருந்த செய்திகள் எதுவும் அவனுடைய கருத்தில் பதியவில்லை.

தன்மீதே சினம் கொண்டவனாக,

“ஆஹ்… எனக்கென்ன ஆகிவிட்டது?” என்று தன்னையே கடிந்தவாறு, தன் தலைமூடியைக் கோதிவிட்டான்.

கரங்களை மார்புக்குக் குறுக்காக் கட்டித், தன் மேசையில கால் மடித்து, சாய்ந்து அமர்ந்தவனால், ஏனோ சர்வமகியை மறக்க முடியவில்லை. மீண்டும் தன் கைபேசியை பார்த்தான்.

இனியும் முடியாது என்பதுபோல, கேர்வினின் கைபேசி இலக்கத்தை

அழுத்தத் தொடங்க, அந்த நேரம், அவனுடைய கைபேசி அலறியது.

எரிச்சலுடன் இலக்கத்தைப் பார்த்தான். கேர்வின்தான் அழைத்திருந்தான்.

அவசரமாக அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டவன்,

“வை யு டேக் சோ லாங்…” என்றான் அடக்கிய கோபத்துடன்.

“சாரி சார்… ட்ர஻பிக்…”என்றான் அவன் சிறு அச்சத்துடன்.

“ஹௌ இஸ் ஷி… இஸ் ஷி சே஻ப்…” என்றான். அவன் குரலில் மெல்லிய பதட்டம் தெரிந்ததோ,

“யெஸ் சார்… வீட்டிற்குள் போய்விட்டார்கள்…” என்று கேர்வின் கூற, அவனையும் அறியாமல், அவன் உள்ளம் அமைதியடைந்தது.

“குட்… நவ் கம் பக்…” என்றவன், தன் கைபேசியை அணைத்துவிட்டு, நிம்மதியாகப் பெரும் மூச்சொன்றையும் வெளியிட்டான்.

என்ன முயன்றும், மனதில், பதாகையாகப் பதிந்துபோன, அவள் முகத்தை ஒதுக்கித் தள்ளிவிடமுடியவில்லை.

அந்த நீண்ட விழிகள் கொஞ்ச நேரத்தில் எத்தனை கதைகள் பேசின. ஏனோ அவளைப் பற்றி அறியவேண்டும் என்கிற உந்துதல், அவனை மிகவும் அலைக்கழிக்க, அடுத்து டேவிட்டின் பதிலுக்காகக் காத்திருக்கத் தொடங்கினான் அநேகாத்மன்.

அதே நேரம், ஒரு அழகிய வெள்ளை இனப் பெண் அவன் அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

எண்ணங்கள் தடைப்பட, சற்று எரிச்சலுடன் திரும்பிப் பார்த்தான் அநேகாத்மன்.

அங்கே நின்றிருந்தவளைக் கண்டதும், முகத்தில் எந்த சலனமும் இல்லாமல்,

“ஹாய்… ரோசலின்… வட்ஸ் அப்…” என்றான் அலட்சியமாக.

“என்ன… சார் அதிக பிஸியோ… பார்க்கவே முடியவில்லை…” என்று குரலில் தாபத்தைத் தேக்கிக் கேட்டவள், அவன் அருகே வந்தாள்.

“என்ன… சார் அதிக பிஸியோ… பார்க்கவே முடியவில்லை…” என்று குரலில் தாபத்தைத் தேக்கிக் கேட்டவள், அவன் அருகே வந்தாள்.

அவனுடைய உணர்ச்சியற்ற பார்வை, அவளை சற்று இம்சிக்க,

“என்ன நேகன்… அதிகம் டல்லாக இருக்கிறீர்கள்… இஸ் எவ்ரிதிங் ஓக்கே…” என்றவாறு இன்னும் அவனை நெருங்கி நிற்க,

அநேகாத்மனோ, அவள் அருகாமைக்குத் தடை கூறாது, கீழ்க்கண்ணால் அவளை ஏறிட்டான்.

அவர் கூர் பார்வையைத் தைரியமாக ஏறிட்டவளின் உதட்டில் மெல்லிய நகைப்புத் தோன்ற,

“ஏதோ டென்ஷனாக இருக்கிறீர்கள் என்று தெரிகிறது… மை ஹார்ட்…” என்றவாறு அவனுடைய மார்பிலே, தன் கரத்தைப் படரவிட்டு, மேலே கொண்டு சென்றாள்.

அவன் டையைப் பற்றித், தன்னை நோக்கி இழுக்க, அவன் முகம், அவள் முகத்திற்கு அருகே வந்தது. தன் முகத்தை, அவன் கழுத்து வளைவிற்குள் கொண்டுசென்றவள் ஆழ மூச்செடுத்தாள்.

“யு ஸ்மெல் குட்… நேகன்… ஐ லவ் இட்…” என்றவாறு அவன் கன்னத்தில் தன் இதழைப் பதித்தாள்.

எந்த மறுப்பும் கூறாமல், அந்த முத்தத்தை பெற்றுக்கொண்டவன், சற்றுத் திரும்பி, அவள் முகத்தைப் பார்த்தான்.

அழகிதான்… ஆனால், அந்த அழகை எடுத்துக்காட்ட அதிக மேக்கப் வேண்டியிருந்தது.

அநேகாத்மன் தன்னையும் மறந்து சர்வமகியையும் ரோசலினையும் ஒப்பிட்டுப் பார்த்தான். அவளின் இயற்கை அழகிற்கு முன்னால், இவள் கால்தூசி பெறமாட்டாள் என்று எண்ணியவன் அதிர்ந்தான்.

அவனுக்கு என்னவாகிவிட்டது? போயும் போயும் அந்தக் கொலைகாரனின் மகளைப் போய், இவளுடன் ஒப்பிடுகிறானே...’ என்று எரிச்சலுடன் நினைத்தவன், அந்தத் தவறைச் சரிசெய்யும் முகமாக, ரோசலினின் இடையில் கரத்தைப் போட்டுத் தன்னை நோக்கி இழுத்தான்.

பாழாய்ப் போன நினைவு, சற்றைக்கு முன்பு, சர்வமகி விழப்போனபோது, பற்றிய அவள் இடை நினைவுக்கு வந்து, அவனை இம்சித்தது.

எத்தனை மெல்லிய இடை… அவள் அணிந்திருந்த சுரிதாரையும் மீறி, மென்மையாக இருந்ததே அந்த இடை…” அவன் சற்றுத் தடுமாறியவாறு, தன் கரத்தை விலக்கப் போக, அதை அழுந்தப் பற்றித் தடுத்தவள்,

“ஹேய்… வட்ஸ் ஹப்பன்… உன் நினைவு இப்போது உன்னிடமில்லை போல் இருக்கே…” என்றாள் தன் உடல் முழுவதும் அவன் உடலோடு நன்கு உரச.

ஓரளவு தன் சுயத்திற்கு வந்தவன், அந்தப் பெண்மையின் மேடு பள்ளங்கள், அவன் யோசனையைத் தற்காலிகமாக, மறக்கடிக்கச் செய்ய, அங்கே புதிய உணர்வு பிரவாகமெடுத்தது.

அவனுடைய விழிகளில் யோசனைக்குப் பதில், காமம் வழிய, உதட்டிலே, கவர்ச்சியான புன்னகை மலர,
"நத்திங் பேபி..." என்றவாறு அவள் உதடுகள் நோக்கிக் குணிந்தான்.

"ம்...." என்று முத்தம் கொடுத்து சற்று விலகியவள்,

"டார்லிங்... ஹ_ இஸ் த கேர்ள்..." என்று கிளியின் கொஞ்சும் குரலில் கேட்டாள்.

"யாரைக் கேட்கிறாய்..." என்றான் அவன் தன் காரியமே கண்ணாக.

"கொஞ்சத்துக்கு முன்பு வெளியே போனாளே... லாங் ஹெயர்..." என்றதும், அவள் சர்வமகியைப் பற்றிக் கூறுகிறாள் என்பது புரிய, ரோசலின், வந்து அதிகநேரமாகிவிட்டது என்று புரிந்தது.

"தெரிந்துகொள்ளும் அளவுக்கு அவள் ஒன்றும் முக்கியமானவள் அல்ல பெண்ணே..." என்றவன் அவளை மீண்டும் தன்னை நோக்கி இழுத்து, அவள் உதடுகள் நோக்கிக் குணிந்தான்.

இரு உதடுகளுக்கிடையிலும், தன் சுண்டுவிரலைப் பதித்தவள்,

"ஹனி... உங்கள் தந்தையின் உயிலை என்ன செய்யப்போகிறீர்கள்?" என்றாள் இனிமையாக.

"ம்... ஐ டோன்ட் நோ பேபி..." என்றான் அவள் விரல்களை விலக்க முயன்றவாறு.

"அவருடைய விருப்பத்திற்கு நான் தயாகராக இருக்கிறேன்... நீதான் பிடிகொடுக்க மாட்டேன் என்கிறாய்..." என்று சிணுங்கினாள் அந்த ரோஸலின்.

"நோ பேபி... உனக்குத்தான் தெரியுமே... எனக்கு இந்தத் திருமணம், அதனால் வருகிற கமிட்மன்ட் எதிலுமே பிடிப்பு இல்லை என்று..." என்றான் அவளுடைய உதட்டைத் தன் சுட்டுவிரலால் அளந்தவாறே.

"பட்... நீங்கள் யாராவது ஒருத்தியை மணக்கவில்லை என்றால், அத்தனை சொத்துக்களும் அநாதை மடங்களுக்குப் போய்விடுமே..." என்றாள் அவள் வருத்தமாக.

"எனக்கு அதைப்பற்றிய கவலை இல்லையே ரோசலின்... என்னால் உழைக்க முடியும்... என்னிடமும் பணமிருக்கpறது. என் தந்தையின் சொத்தில்தான் நான் வாழவேண்டும் என்கிற கட்டாயம் எனக்கில்லை. பிறகென்ன?" என்றான் அவன் அலட்சியமாக.

“ஆனாலும்... எத்தனையோ பல்லாயிரம் பில்லியன் டாலர்கள் பெறுமாணமுள்ள அத்தனை சொத்துக்களையும் அப்படியே போகட்டும் என்று விட்டுவிட முடியுமா?.” என்று இவள் இழுக்க, அவளை மேலும் தன்னோடு இறுக்கியவன்,

“பார்க்கலாம்... யாராவது ஒருத்தி, திருமணம் முடித்ததும் பட் என்று இறந்து போபவளாக ஒருத்தி கிடைத்தால் பார்க்கலாம்... கட்டாயம் அவளை மணந்து அப்பாவின் சொத்துக்களை என் வசமாக்குகிறேன்...” என்றான் அவன் தன் காரியம் முடியவேண்டுமே என்கிற அவசரத்தில்.

“எப்போது...? இன்னும் மூன்று வருடங்களுக்குள் நீங்கள் ஒருத்தியை மணக்க வேண்டும்...” என்றவளை அதற்கு மேல் அவன் பேச விடவில்லை. தன் ஆபீஸ் அறையை ஒட்டியுள்ள அவன் தனிப் படுக்கையறைக்குள் அவளை இழுத்துச் சென்றான்.

நிலவு 7

சர்வமகி உடலோடு சேர்ந்து மனதும் சோர்ந்துபோனது. அந்த அநேகாத்மனை சந்திக்கும் வரையிருந்த அந்தத் தைரியம், இப்போது சுத்தமாகத் தொலைந்துபோயிருந்தது. அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் கார் ஓட்டிக்கொண்டு வந்தவளுக்குத் தன் பின்னால், ஒருவன் பின் தொடர்ந்து வந்தது தெரியாமலே போனது.

அவள் வீட்டில் காரைப் பார்க்கபண்ணிவிட்டு வரவும், கடைசித் தம்பி அபிதன் ஓடிவந்து அவளை இடையோடு அணைக்கவும் நேரம் சரியாக இருந்தது.

அது வரை ஏதோ நினைப்பிலிருந்த சர்வமகி தம்பியின் அணைப்பிலும், அவன் மெல்லிய விசும்பல் ஒலியிலும் சுயநினைவுக்கு வந்தாள்.

“அக்கா... என்னை தேவகியக்கா அடித்துவிட்டாள்...” என்றான் தம்பி வாய் பிதுங்க. தம்பியை அணைத்துப் பிடித்தவள், தேவகியை என்ன என்பதுபோல ஏறிட்டாள்.

“நான் சொல்வது ஒன்றையுமே கேட்கமாட்டேன் என்கிறான்... மணிக்கணக்காக கம்பியூட்டரிலேயே இருக்கிறான். கண் கெட்டுவிடும் என்றால் என்னையே எதிர்த்துப் பேசுகிறான். சாப்பாடு எடுத்து வைத்து நீண்ட நேரமாகிவிட்டது. இன்னும் சாப்பிடவில்லை... என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?” என்று கோபமாக முறைக்க, சர்வமகி தம்பியை ஏறிட்டாள்.

“தேவகி அக்கா சொல்வதும் சரிதானே கண்ணா... உன் நல்லதுக்குத்தானே அவள் கண்டிக்கிறாள்...” என்றாள் கனிவுடன்.

“அது சரி... சும்மாவே அவன் தலைக்கு மேலே ஏறி ஆடுகிறான்... நீயும் அதற்கேற்றாட்போல் கனிவுடன் பேசு. கொஞ்சம் அதட்டித்தான் வையேன்...” என்று சலிப்புடன் சொன்ன சகோதரியைப் புன்னகையுடன்

பார்த்தாள் சர்வமகி.

“ பாவம்மா… சின்னப்பிள்ளை… அவனாவது சந்தோஷமாக இருக்கட்டும்…” என்று வலியோடு கூற,

“அக்கா?” என்றாள் தேவகி யோசனையோடு. தான் கலங்குவது மட்டுமல்லாது, தேவகியையும் கலங்கவைக்க விரும்பாதவளாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டு,

கோபப் படுவதால் யாருக்கு என்ன பயன் இருக்கமுடியும் சொல்லு...?” என்று அவள் கூற,

“என்னக்கா பிரச்சனை?” என்றாள் தேவகி நேரடியாக. இத்தனை வருடங்கள், சகோதரியைப் பார்த்து வருபவளுக்கு, அவள் முகத்தில் தெரிந்த மாற்றங்களைக் கண்டுகொள்ள முடியாதா என்ன?

“ஒ… ஒன்றுமில்லையம்மா…” என்று அவள் சமாளித்துக்கொண்டிருக்கும் பொழுதே தொலைபேசி வீறிட்டது.

விரைந்து சென்று எடுத்தாள் சர்வமகி.

நடராஜன் அங்கிள்தான். அவர் யாருடனோ பேசியபோது, “இன்னொரு லாயரின் தொலைபேசி இலக்கம் தந்தார்களாம், பேசிப்பார்...” என்று ஒரு இலக்கத்தைக் கொடுக்க, நேரம் தாமதிக்காமல் உடனேயே,அந்த இலக்கத்துடன் தொடர்புகொண்டாள். அந்த லாயரின் பெயர் ரட்ணபாலன்.

மறு கிழமையே வருமாறு அவளுக்கு அனுமதி கொடுக்கப் பட்டது.

அதற்குப் பிறகு சர்வமகிக்கு யோசிக்க நேரமே கிடைக்கவில்லை. இதர வேலைகளைச் செய்யவும்;, சமைப்பதற்குமே நேரம் சரியானது. ஒருமுறை தந்தையையும் பார்த்துவிட்டு வந்தாள். இடைக்கிடையே அவளுக்கு அந்த அநேகாத்மனின் நினைவு ஏனோ வந்து போனது.

அவனுடைய புருவச் சுழிப்பு, உதட்டு வளைவு, கோபத்தில் மின்னும் விழிகள். ஏனோ அவன் நினைவு வந்து அடிக்கடி அவள் நினைவை மறக்கடிக்கச்; செய்தன. ஏன் என்றுதான் அவளுக்குப் புரியிவில்லை. ஒரு வேளை அவன் தந்தையும் கிட்டடியில்தான் மரணம் எய்தினார் என்பதால் வந்த பரிதாபமோ? அல்லது, அந்த மரணத்தில், தன் தந்தையும் பாதிக்கபட்டிருக்கிறார் என்கிற வேதனையா? எது எப்படியோ அவன் அடிக்கடி நினைவில் தோன்றி அவளைச் சலனப்பட வைத்தான் என்பதுமட்டும் உண்மை.

மறு கிழமை, சர்வமகி அந்த ரட்ணபாலனைச் சந்திக்க, அவர்கள் குறிப்பிட்ட கட்டடத்தை வந்தடைந்தாள். இலக்கத்தைச் சரிபார்த்;து, உள்ளே நுழைந்தாள்.

அவர்களின் செக்ரட்டரி வெள்ளைக்காரப் பெண்மணி. ஆடை குறைப்புக்கும் குறைவில்லை, அணிந்திருந்த மேக்கப்புக்கும் குறைவில்லை.

அவள் விபரத்தைச் சொல்ல, ஒரு இருக்கையில் அமருமாறு பணிந்துவிட்டு, உள்ளே சென்றாள்.
உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்துவள் சர்வமகியை உள்ளே அனுப்பினாள்.
நன்றி பகர்ந்துவிட்டு, உள்ளே சென்றாள் சர்வமகி.

கிட்டத்தட்ட நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மனிதர் இருக்கையில் அமர்ந்திருந்தார்.
உள்ளே வந்த சர்வமகியைக் கண்டதும், ஒரு கணம் விழிகளை இமைக்க மறந்துபோய் அவளையே வெறித்துப் பார்த்தார் அந்த ரட்ணபாலன்.

"வா... வாம்மா... வந்து உட்கார்..." என்றபோது அவருடைய விழிகள் அவள் உடலைத் தாராளமாக வருடிக்கொடுத்தன. இதை எதையுமே சர்வமகி கவனிக்கும் நிலையில் இருக்கவில்லை. அவளுக்குத் தேவை தந்தையின் விடுதலை. அவ்வளவுதான்.

அவளுடைய கதையைச் சோகமாகக் கேட்டார் ரட்ணபாலன்.
கேட்டுவிட்டு

"நீ கவலைப் படாதேம்மா... உன் தந்தையை வெளியே கொண்டுவருவது என் பொறுப்பு... அதற்கு.. நான் காரன்டி..." என்றதும் இவள் முகம் பளிச் என்று மலர்ந்தது.

"தாங்ஸ் சார்... மிக மிக நன்றி... எங்கே என் தந்தையை வெளியே கொண்டு வர முடியாதோ என்று நினைத்தேன்... பட்... தாங்க காட்..." என்று தன் கரங்களைக் கூப்பிக் கும்பிட்டவளை அவர் கவணித்ததாகவே தெரியவில்லை.

அவர் பார்வை முழுவதும், கழுத்துக்குக் கீழே பிரம்மாவின் படைப்பில் எழிலாய் காட்சியளித்த உடலிலேயே நிலைத்திருந்தது.

அவருக்கும் எச்சில் ஊறியதோ, விழுங்கியவர், பின் தன் தொண்டையைக் கனைத்தார்,

"உன் தந்தைக்காக நான் வாதாடுகிறேன்... ஆனால் இப்போது அவசரமாக நான் போகவேண்டி இருக்கிறது. அதனால்... ம்... ஒன்று செய்... இன்று மாலை ஆறு மணிக்குப் பிறகு, நான் தருகிற விலாசத்திற்கு வருகிறாயா? அங்கே அமைதியாக இந்த கேஸ் பற்றிப் பேசலாம்..." என்றவரை வெள்ளை மனதுடன் பார்த்துத் தலையாட்டினாள் சர்வமகி.

"ஓக்கே சார்... கட்டாயமாக வருகிறேன்..." என்று எழுந்தவளிடம் அந்த விலாசத்தை நீட்டினார். அதைப் பெற்றபோது, அவருடைய கரம் அவள்

வலக்கரத்தை பட்டும் படாமலும் வருடிக்கொடுத்தது.

பேதமையை உணராமல் அந்த விலாசத்தைப் பெற்று முகம் முழுவதும் மலர்ச்சியில் மலர, மீண்டும் நன்றி கூறிவிட்டு விடைபெற்றாள் சர்வமகி.

அன்று மாலை அந்த ரட்ணபாலனைக் காணச் சென்றாள். சிறிய டவுன் ஹவுஸ். கதவின் அழைப்பு மணியை அழுத்த, திறந்தது அந்த ரட்ணபாலன்தான்.

மேலே கையில்லாத பெனியனும், கீழே ஷோர்ட்சும் அணிந்து தன்னை இளமையாகக் காட்ட முயன்று தோற்றுக்கொண்டிருந்தார். அளவுக்கு மீறி அடித்த சென்ட் வாசைன அவள் நாசியைத் துளைத்து, தும்மல் வர வைக்கும்போல இருந்தது. ஏனோ அந்த உடையில் அவரைப் பார்க்கும்போது, சர்வமகிக்கு கூசி அவரின் கோலம் அருவெறுப்பைக் கொடுத்தது.

“சார்... என்னை வரச் சொல்லிச் சொன்னீர்களே...” என்றவள் அந்த மனிதனின் மீது தன் பார்வையைப் பதிக்காமல் எங்கோ பார்த்தவாறு கூறினாள்.

“யா... ஐ நோ... உள்ளே வா...” என்று அவளை அழைத்துக் கதவைச் சாத்தினார்.

சாத்தியவர் அவளை இருக்கையில் அமருமாறு பணிந்துவிட்டு உள்ளே சென்றார். வரும் போது அவர் கையில் சில்வர் தட்டு வீற்றிருந்தது. அதில் இரண்டு கண்ணாடி கிளாசில் இரண்டு கூல் ட்ரிங் வீற்றிருந்தது.

“இந்தா... முதலில் இதைக் குடி...” என்று ஒன்றை நீட்ட மறுக்க முடியாமல் வாங்கிக் கொண்டவள், அதை மேசையில் வைத்தாள்.

“முதலில் குடியம்மா... பிறகு பேசலாம்...” என்று துரிதப் படுத்த, சிறிது வாய் வைத்து குடிப்பதுபோல கொஞ்சமாக வாயில் எடுத்துக் குடித்தவள், மீண்டும் அதை மேசையில் வைத்தாள்.

“சார்... அப்பாவைப் பற்றிப் பேசலாம் என்று சொன்னீர்களே...” என்றாள் சர்வமகி தவிப்புடன்.

“ஓ... பேசலாம்... அங்கே பார் உன் அப்பாவின் கேசைப் பற்றித்தான் வாசித்துக் கொண்டிரந்தேன்... கொஞ்சம் சிக்கல்தான்...” என்று அவர் தூண்டில் போட,

இவள் சிறு அச்சத்துடன் அந்த ரட்னபாலனைப் பார்த்தாள். அவள் முகத்தில் தெரிந்த கவலையை அறிந்தவராக,

“ப்ச்... எதற்கம்மா வருந்துகிறாய்...” என்றவர் மெதுவாக அவள் தோளில் கரத்தைப் பதித்து தட்டிக்கொடுப்பதுபோலத் தட்டிக் கொடுதது,

“அந்த அநேகாத்மன் இருக்கிறானே… அவன் மிகவும் பயங்கரமானவன்… அவனுடன் மோதி ஜெயிப்பது என்பது மலையை உளியால் தட்டுவதுபோல. அவன் கோபத்திற்கு ஆளாவதும் ஒன்றுதான். சிங்கத்தின் வாய்க்குள் தலையை வைப்பதும் ஒன்றுதான். அவன் நீருக்குள் இருக்கிற முதலை மாதிரி. பார்த்தால் புரியாது. ஆனால், அவன் வாயில் அகப்பட்டால், அதற்குப் பிறகு தப்ப முடியாது. பதுங்கும் புலியைப் பார்த்திருக்கிறாயா? ஆதை இந்த அநேகாத்மனில் பார்க்கலாம். பயல் அமைதியாக இருந்தால், எங்கோ பாயப்போகிறான் என்று அர்த்தம். அவனுடைய புத்திசாலித்தனத்திற்கு சானக்கியரே அவனிடம் பிச்சை எடுக்கவேண்டும். ஒரு சிறு துருப்புக் கிடைத்தால் போதும், அந்த கேசையே

ஒன்றுமில்லாததாக்கிவிடுவான். அப்படிப்பட்டவனோடு, எதிர்த்து வாதாட யாருமே முன்வரமாட்டார்கள். அநேகாத்மன் கேசை எடுக்கிறான் என்றால், எதிர்கட்சி வக்கீல்கள் எந்தக் கேசையும் எடுக்கமாட்டார்கள். ஏன் தெரியுமா, எப்படியும் அவன்தான் வெல்லுவான் என்பது அவர்களுக்கு சர்வநிச்சயமாகத் தெரியும் தெரிந்தும் மூக்குடைபட யார்தான் முன்வருவார்கள் சொல்லு…” என்று அவர் கூற, அதிர்ச்சியுடன் ரட்னபாலனைப் பார்த்தாள் சர்வமகி.

“சார்…” என்றாள் அவள் பதட்டத்துடன்.

“பயமெல்லாம் வேண்டாம் பெண்ணே… அது மற்றய லாயர்களுக்குத்தான். எனக்கெல்லாம் அந்த அநேகாத்மன் வெறும் கொசுறு. எல்லோருக்கும் அந்த அநேகாத்மன் மீது பயம், அவனுக்கு என்மீது பயம் என்றால் பார்த்துக்கொள்ளேன்….” என்றவர் தேவையற்று “ஹா ஹா” என்று நகைத்துவிட்டு, “ இதோ பார் சர்வமகி… நீ யோசிக்காதே… நான உனக்காக வாதாடுவதாகத் தீர்மாணித்துவிட்டேனே…” என்றார் அவர் தன் மாரை நிமிர்த்தி.

பெரும் நிம்மதி கொண்டவளாக, முகம் மலர்ந்தவள். பின்,

“ஆனால்; என் அப்பாவை ஜெயிலில் இருந்து வெளி வர மிஸ்டர் அநேகாத்மன் விடமாட்டாரே… அப்போ நான் என்ன செய்வது?” என்றாள் குரல் கம்ம.

“அதற்குத்தான் நான் இருக்கிறேனே… உன் அப்பாவை கண்டிப்பாக வெளியே கொண்டுவரலாம். கவலைப்படாதே… நாங்கள் விலாவாரியாக பேசலாம். அதற்கு முதல் இதைக் குடித்து முடித்துவிடு. களைப்பாக இருக்கிறாய்… குடித்து விட்டாயானால் நாம் மேற்கொண்டு பேசலாம்.” என்று கூற,

“இல்லை சார்… எனக்கு வேண்டாம்… நீங்கள் விஷயத்தைக் கூறுங்கள்…” என்றாள் சர்வமகி தடுமாற்றமாக.

“நீ அப்படியெல்லாம் சொல்லக் கூடாது… உனக்காக செய்து கொண்டு வந்திருக்கிறேன்… குடிம்மா… நீ மிகவும் சோர்ந்து போய் இருக்கிறாய். இந்த சோர்வுடன் உன்னால் எதையும் தெளிவாகப் பேசவும் கேட்கவும் சிந்திக்கவும் முடியாது. முதலில் குடி…” என்று அவர் அவளை கட்டாயப்படுத்த, வேறு வழியில்லாமல் அந்த குளிர்பாணத்தைக் கடகடவென்று குடித்து முடித்தாள் சர்வமகி.

“இப்போதாவது...” என்றவளுக்கு திடீர் என்று எங்கோ பறப்பது போலிருந்தது. தன் விழியைச் சுருக்கி, தன் முன்னால் இருந்த மனிதரை பார்க்க முயன்றாள். முடியாமல் பார்வை மெது மெதுவாக மங்கத் தொடங்கியது.

“சா… சார்… எனக்கு… என்னவோ… செய்கிறது…” என்று அவள் திக்கித் திக்கிக் கூற,

வெற்றிப் பெருமிதத்துடன் அவளை நெருங்கியவர், அவள் தோளிலே தன் கரங்களைப் போட்டவாறு,
“எனக்கும்தான் பெண்ணே… உன்னைப் பார்த்த நிமிடம் முதல் என்ன என்னவோ செய்கிறது…” என்று தன் முப்பத்தியிரண்டு… இல்லை இல்லை முப்பது பற்களையும் வெளியே காட்டி இளித்தவாறு கூற, சர்வமகியின் உடல் விறைத்தது.

வேகமாக அவர் பிடியிலிருந்து தன்னை விடுவித்தவள், எழுந்து நின்றாள்.

அவளால் அவனைப் பார்த்து முறைக்கக் கூட முடியவில்லை. வேகமாக வெளிக்கதவை நோக்கி நடக்கத் தொடங்க, அவளைப் பிடித்து இழுத்தார் அந்தப் பெரிய மனிதன்.

“த...த ய... வு செய்து என்னை விடுங்கள்...” என்று திமிற முயன்றாள். விடுவதற்கா இத்தனை சிரமப்பட்டேன்…” என்றவாறு அவளை வருடத் தொடங்கினான் அந்தக் கயவன். அந்த மனிதனின் கரங்கள் எல்லை மீறத் தொடங்கின. அவளை இழுத்துச் சென்று சோபாவில் தள்ளியவர், அவள் மேலாடையில் கை வைத்தார்.

முடிந்த வரை அவரிடமிருந்து போராடினாள் சர்வமகி. போராடியதன் விளைவு ஆடைகள் கிழிக்கப்பட்டன. அந்த மனிதனின் ஐந்து விரல்களும் அவளுடைய மறுப்பால் கன்னத்தில் மாறி மாறிப் பதிந்தன.
.

இறுதி வரைக்கும் சர்வமகி கடவுளின் மீதிருந்த நம்பிக்கையைக் கைவிடவில்லை. கடவுள் எப்படியும் காப்பாற்றுவான் என்கிற இறுமாப்புடன் இருந்தவளை நோக்கி அந்த மனிதனின் முகம் மெது மெதுவாக நெருங்கியது. தீண்டக் கூடாத இடங்களில் அந்தக் கயவனின் கரங்கள் சுதந்திரமாக சுழன்றன. மெது மெதுவாக சர்வமகி தன் சுயநினைவை இழக்கத் தொடங்கினாள்.

நிலவு – 8

சர்வமகி எதையும் உணரும் நிலையில் இருக்கவில்லை. எங்கோ, திரிசங்கில், அந்தரத்தில் பறந்துகொண்டிருந்தவளின் இறகை யாரோ வலிந்து முறிப்பதுபோல, அந்த மயக்கத்திலும், துடித்துக்கொண்டிருந்தாள்.

அந்த உயிர்போகும் நிலையில் தவித்துக்கொண்டிருந்தவளைக் காக்க யார் வரப்போகிறார்கள்? ஆழ்மனம் கதறிக்கொண்டிருக்க, திடீர் என்று எங்கோ... தொலை தூரத்தில் இசையொன்று கேட்டது. பின்பு பட படவென்று எதையோ, எதுவோ தட்டும் சத்தம் அந்த நிலையிலும் அவள் செவிப்பறைக்குக் கேட்பதுபோலத் தோன்றியது.

‘யார் அது... அவளைக் காப்பாற்ற வந்த கடவுளா? இல்லை, இன்னும் வலிக்கும் அளவுக்குப் புரட்டிப்போட வந்த ராட்ஷசனா? புரியவில்லை.

கிடைத்த நம்பிக்கையையும் விடத் தயாரில்லை என்பதுபோல, முடிந்தவரை, தன் சக்தியைக் கூட்டிக் கத்துவதற்கு வாய் திறந்தாள்... இல்லை இல்லை திறப்பதாக நினைத்தாள்...

வாயிலிருந்து வெறும் காற்று மட்டுமே வெளிவந்தது. இனியும் முடியாது என்கிற இறுதித் தருவாயில், மீண்டும், எங்கோ எதுவோ எதையோ படபட என்று தட்டியது. பின்பு, ஏதோ இசை வந்தது... என்ன அது?
அந்த சத்தம் அவளுக்கு மட்டும்தானா கேட்டது? இல்லை என்பதுபோல, அவள் ஆடைகளைப் கிழிப்பதில் கவனம் செலுத்திக்கொண்டிருந்த அந்த அரக்கனின் காதிலும் விழுந்ததுபோல, அவனுடைய அசைவு சற்றுத் தடைப்பட்டது.

இப்போது அந்தப் படபடவென்ற சத்தம் அதிகமாக, அழுத்தமாக, ஆக்ரோஷமாகப் பலமாகக் கேட்டது.
அது எதையும் அந்த வஞ்சகன் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. அவன் பாட்டிற்குத் தன் வேலை முக்கியம் என்பது போல, சர்வமகியைச் சீரழிப்பதிலேயே கவனமாக இருந்தான். சர்வமகி மெது மெதுவாகத் தன் புலன்களை முற்று முழுதாக இழக்கத் தொடங்கினாள்.

சர்வமகி மெதுவாக அசைந்தாள். யாரோ மண்டையில் சம்மட்டியால் அடித்ததுபோல தலை வலித்தது. இருந்தாலும் அவளை உள்ளுக்கு அழுத்திய மென்மையான மெத்தையின் சுகத்தில் ஒரு முறை ஆழ்ந்துவிட்டுத் தன் விழிகளைத் திறக்க முயன்று தோற்றாள்.

உடல் முழுவதும் வலித்தது. அப்படியே படுத்துக்கிடந்தால் என்ன என்கிற எண்ணத்தில் கொஞ்ச நேரம் அப்படியே இருந்தாள். எத்தனை

நேரம்தான் அப்படியே கிடக்கமுடியும். மெதுமெதுவாக நடந்த சம்பவம் அவள் நினைவில் படம்பவிரிக்கத் தொடங்கியது.

‘அந்த... அந்த லாயர் அவளிடம் எதையோ குடிக்கத் தந்தாரே... அந்த... அந்தாள்... அவளை... அவளை...’ விறுக் என்று எழுந்தமர்ந்தாள் சர்வமகி.

அச்சத்துடன் தன்னைக் குனிந்து பார்த்தாள். ஆடை மாற்றப்பட்டிருந்தது. அதுவும் அவளை விட இரண்டு மூன்று மடங்கு பெரிய ஆணினுடைய டீஷேர்ட். அது தோளிலிருந்து விழுந்துகொண்டிருந்தது. யாருடையதாக இருக்கும்? யார் மாற்றியிருப்பார்கள்...? பயத்தில் உடல் நடுங்கியது. சுற்றும் முற்றும் விழிகளைச் சுழற்றியவள் திகைத்துப் போனாள்.

‘இது... அந்த லாயரின் வீடில்லை. அவள் தங்கியிருக்கும் அறையே அந்த லாயரின் வீட்டின் அளவை விடப் பெரியதாக இருந்தது.’ குழப்பத்துடன் எழுந்தாள். உடல் எங்கோ போனது. கால்கள் தள்ளாடின. தலை பின்னுக்குச் சரிந்தது. சிரமப்பட்டுத் தன்னைத் திடப்படுத்தியவள், அங்கேயிருந்த கதவை நோக்கிச் சென்றாள்.

அதே நேரம் அந்த அறையின் கதவு திறந்தது. அவன் உள்ளே வந்தான்.

உள்ளே வந்தவனைக் கண்டதும், சர்வமகி அதிர்ந்துபோனாள். தன் கண்களை இமைக்காது அவனையே வெறித்துப்பார்த்தவள், அதற்கு மேல் எதையும் சிந்திக்க முடியாதவளாக உடல் தளர, கீழே சரியப் போனாள்.

உள்ளே வந்தவன், சர்வமகியின் நிலையினைச் சடுதியில் புரிந்துகொண்டவனாக, ஒரெட்டில் அவளை நெருங்கினான். சர்வமகியின் தோள்களை அழுந்தப் பற்றித் தரையில் சரியாது காத்துக்கொண்டவன், பின் அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டான்.

அவளுடைய கால்களோ, இனியும் பாரத்தைத் தாங்கமாட்டாதவையாக, மடங்கிச் சரிய, உடனே, அவளைத் தன் கரங்களில் பூமாலையென ஏந்திக்கொண்டான் அவன்.

மயக்கத்தில், விழிகள், மூடி முடித் திறக்க, விழிகளை மூடாதிருக்கப் பெரும் முயற்சி செய்தவாறு தன்னைத் தாங்கியிருந்தவனையே வெறித்துப் பார்த்தாள். அவளால் தன் விழிகளையே நம்பமுடியவில்லை. ஒரு வேளை தான் காண்பது கனவோ என்றுகூட ஐயுற்றாள்.

அவனோ தன் கரங்களில் கிடந்தவளையே இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனுடைய முகமோ, கல்லில் வடித்த சிலையென இறுகிப்போயிருக்க, ‘இவனுக்கு என்னவாயிற்று...’ என்று எண்ணியவளாகத் தன்னையும், அறியாது, அந்த முகத்தைத்

தொட்டுப்பார்க்க ஆவல் கொண்டவளாகத் தன் வலது கையை அவன் முகம் நோக்கி உயர்த்த முயன்றாள். பாழாய்ப் போன, பலவீனம், அவள் கரங்களைச் சற்றும் அசைக்க விடவில்லை.

அவனோ, அவளுடைய வியப்பைச் சிறிதும் கருத்தில் கொள்ளாது, அவளை மெதுவாகப் படுக்கையில் கிடத்தினான். கிடத்தியபோது, அவள் முழங்கால்களுக்கு மேலேறியிருந்த, இரவாடையை இழுத்து விட்டவன், அருகேயிருந்த போர்வையால், அவள் கால்கள் மறையுமாறு போர்த்திவிட்டான்.

கூடவே, தலையாணியை, ஒழுங்காக, இதமாக அவள் தலைக்கு வாகாக வைப்பதற்காக அவன் குனிய, அவனுடைய பரந்து, விரிந்த மார்பு, அவளை சிறைசெய்வதுபோல அந்த அறையையே மறைத்து நின்றது. கூடவே, அவனுக்கே அவனுக்குரித்தான அந்தப் பிரத்தியேக வாசைன, அவள் நாசியை அடைந்து, மூளைக்குச் செல்ல, அதுவரை, அழுத்தியிருந்த, அச்சம், மெதுமெதுவாக அவளை விட்டு விலகத் தொடங்கியது.

‘இந்த வாசனையை முன்பே நுகர்ந்திருக்கிறோமே… எப்போது?’ என்று புரியாமல் தவித்தவள், மீண்டும் தன் கவனத்தை அவன்மீது செலுத்தினாள்.

அவனுடைய தலை கலைந்திருந்தது, கண்கள் சிவந்திருந்தது. அல்லது இயற்கையிலேயே இவன் கண்கள் இப்படித்தான் சிவந்திருக்குமோ? கூரான நாசியில் கோபம் கொதித்துக்கொண்டிருந்தது. உதடுகள் அழுந்தி நின்றன. முஷ்டிகள் இறுகியிருந்தன. அவனுடைய அழுந்த மூடிய இதழ்களில் ஏதோ பெரும் தவிப்பு துடித்துக்கொண்டிருந்தது.

சர்வமகிக்கு எதையுமே நம்பமுடியவில்லை. ஒன்றுமே புரியாமல் ‘இவன் எங்கே இங்கே...’ என்று குழம்பியவளுக்கு, இருந்த தலையிடி அதிகரித்ததே தவிரப் பதில் கிடைத்தபாடில்லை. சோர்வுடன்

“நீ… நீங்கள் எப்படி இங்கே… நான் எங்கே இருக்கிறேன்...” என்றாள் சற்றுத் தெம்பைக் கூட்டி.
பதிலெதுவும் கூறாமல், அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் அநேகாத்மன்.

அவன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பெரிதும் சிரமப்படுவது சீறிப்பாய்ந்த மூச்சிலிருந்தும், அழுந்த மூடியிருந்த கை முஷ்டியிலும் தெரிந்தது,

“டேக் எ ரெஸ்ட்… பிறகு பேசிக்கொள்ளலாம்…” என்று அழுத்தமாகக் கூறிவிட்டுத் திரும்ப முயன்றவனின் கரத்தைச் சட் என்று பற்றினாள் சர்வமகி.

“ப்ளீஸ்… போ… போகாதீர்கள்… எனக்குப் பயமாக… இருக்கிறது…

என்னை... என்னை... அந்த... லாயர்... வந்து..." என்று அதற்கு மேல் பேச முடியாமல், தொண்டை அடைக்க, அவளுடைய உதடுகள் நடுங்கத் தொடங்கின. விழிகளின் கரையோரமாகக் கண்ணீர் பொங்கி வழிந்தது.

ஏனோ அவளுடைய கண்ணீரைக் காணும்போது, அநேகாத்மனுக்கு அந்த ரட்ணபாலனின் வம்சத்தையே அழித்துவிடவேண்டும்போலக் கொலைவெறி எழுந்தது.

கிட்டத்தட்ட இருபத்துமூன்று மணித்தியாளங்கள் அவன் பட்ட வேதனை அவனுக்கல்லவா தெரியும்.

இத்தனை நேரத்தில் அவன் தன் தொழிலை மறந்தான், தன் எதிரியை மறந்தான், ஏன் அந்த ரோஸலினைக் கூட மறந்துவிட்டான். கடைசியாக அவளைப் பார்த்தது, சர்வமகி வந்து போன அன்றுதான். அன்றைக்கிருந்த கோபத்திற்கு வடிகாலாக ரோசலின் தேவைப்பட்டாள். அன்று எல்லாம் முடிந்து அவளிடம் கத்தையாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தபோது ஏனோ முதன் முதலாக செய்யக்கூடாத ஒரு குற்றத்தைச் செய்தது போன்ற இனம்புரியா உணர்வில் தவித்துப்போனான். அது ஏன் என்பதற்கு பதில் அவனிடம் இல்லை. அதற்கான விளக்கமும் அவனிடமில்லை. அன்றைக்குப் பின், அவளோடு அவன் தொடர்பேகொள்ளவில்லை.

ரோசலின் கூடப் பல முறை அவனோடு தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்று தோற்றுப்போனாள். இவனோ ரோசலினின் அழைப்பு என்றதும், அதனைத் துண்டித்தான்;. ஏன், தன்னுடைய தனிப்பட்ட கைபேசியிலிருந்த அவளுடைய தொலைபேசி இலக்கத்தைக் கூட அழித்துவிட்டிருந்தான். மீறி அவனுடைய அலுவலகத்திற்கு எடுத்தபோது, பிசி பிறகு பேசுவதாகக் கூறி, தொலைபேசியை வைத்ததுமட்டுமல்லாது, ரோசலினிடமிருந்து அழைப்பு வந்தால், உடனே அதனைத் துண்டித்துவிடுமாறு கடுமையான உத்தரவு பிறப்பித்தான்.

அதன் பின் அவனுடைய முழுக் கவனமும் சர்வமகியை அறிவதிலேயே இருந்தது.

சர்வமகியைப் பற்றிய அடிப்படை விபரங்களை அறிந்துகொண்டவன், அவளைப் பற்றி மென்மேலும் அறிய வேண்டும் என்கிற உத்வேகம் பிறந்தது. அவள் என்ன செய்கிறாள், தனக்கு எதிராக ஏதாவது சதி செய்கிறாளா, யார் யாரோடு அவள் தொடர்பு வைத்திருக்கிறாள், தன் தந்தையைக் கொல்வதற்கு, யார் யார் உந்துதலாக இருந்தார்கள். போன்ற செய்திகளை அறிவதற்கு அவள் பின்னாலேயே டேவிட்டை ஒற்றனாக நியமித்தான்.

அவனும் கடமை தவறாது, சர்வமகியைப் பற்றிய அனைத்து செய்திகளையும், உடனுக்குடன் அநேகாத்மனுக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தான். இந்த செய்தி, சர்வமகிக்குத் தெரியாது.

தன்னை எப்போதும் ஒருவன் பின்தொடர்வதோ, தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியதுமான செய்திகளை, உடனுக்குடன், அநேகாத்மனுக்குத் தெரிவிக்கப்படுகிறது என்பதுபற்றியோ, சிறிதும் அறியாது, தன் வேலையில் கவனமாக இருந்தாள்.

அவள் சகோதரர்களை ஒவ்வொரு நாளும் எத்தனை மணிக்கு பார்க்கிற்கு அழைத்துச் செல்வாள் என்பதிலிருந்து, எத்தனை மணி வரைக்கும் அவள் முழித்திருப்பாள் என்பது வரை அவனுக்கு அத்துப்படி. அதுவும் கடைசி இரண்டு நாட்களும் அவள் தூங்காமல் அறையிலே குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தது கூட அவனுக்குத் தெரியும்.

அவளுடைய ஒவ்வொரு அங்க அசைவையும் தெரிந்துகொண்டிருந்தவனுக்கு, அவள் ரட்ணபாலனிடம் சென்றது தெரியாமல் போகுமா என்ன?

ஆனால், அவள் அந்த ரட்ணபாலனிடம் சென்றது இவனுக்குப் பெரும் கோபத்தை விளைவித்தது.
“ஸ்டுபின் வுமன… வேறு லாயரே கிடைக்கவில்லையா இவளுக்கு?” என்று இவன் சினந்தான்.

ஏன் என்றால் அவனுக்கு அந்த ரட்ணபாலனைப் பற்றி நன்கு தெரியும். அவனால் பாதிக்கப்பட்ட பெண்களின் தொகை பல. இன்றுவரை சட்டத்தின் பிடியில் அவன் சிக்கியதில்லை. காரணம், அவன் பெண்களைச் சீரழித்தான் என்பதற்கான ஆதாரம், இதுவரை யாருக்கும் கிடைக்கவில்லை. சாட்சியமில்லாத தவறுக்கு, எப்படி தண்டனை பெற்றுக்கொடுக்கமுடியும்.

இது நாள் வரை எந்தப் பெண்ணையும் மனதால் நெருங்காமல் இருந்த அநேகாத்மனுக்கே சர்வமகியின் வரவு பெரும் சலனத்தை ஏற்படுத்தியது என்றால், சும்மாவே தூணுக்குச் சேலைகட்டியிருந்தால் விலக்கிப் பார்க்கும் ரட்ணபாலனுக்கு சர்வமகியை விட்டுவைக்க மனமிருக்குமா?

உடனேயே உசாரானான் அநேகாத்மன். யார் யார் எப்படிப் போனால் அவனுக்கென்ன? அதுவும் சர்வமகி… சொல்லப்போனால், அவள், அவன் எதிரியின் மகள். தன் தந்தையைக் கொன்றவனின் மகள். அவளுக்கு அநியாயம் நடந்தால், அது அவனை மகிழ்விக்கவல்லவா வேண்டும்.

பொதுவாக எதிரிகளைப் பந்தாடிப் பழகியவனுக்கு ஏனோ அதே வழிமுறைகளை அவளிடம் கையாள முடியவில்லை.

அவள் ரட்ணபாலனிடம் சென்ற கணத்திலிருந்து, அவளுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்கிற பதட்டம் அநேகாத்மனை நிலைகொள்ள விடாது வருத்தியது. தன் பதட்டத்தை வெளிக்காட்டாமல் இருக்க அவன் பெரிதும் பாடுபடவேண்டியிருந்தது.

“இந்தக் கனடாவில் இவன் ஒருத்தனா லாயர்... போயும் போயும் இவனிடமா அவள் போகவேண்டும்?’ என்று நிலையில்லாமல் தவித்தான் அநேகாத்மன்.

எப்படியாவது, அவளை ரட்ணபாலனிடம் செல்லாமல், தடுக்கவேண்டும் என்கிற வேகம் பிறந்தது. ஆனால் எப்படியென்றுதான் அவனுக்குத் தெரியவில்லை.

இனி அந்த ரட்ணபாலன் பற்றிய செய்திகளை அவளுக்குத் தெரியப்படுத்திவிடவேண்டியதுதான் என்று எண்ணியவன், அதற்குரிய செயலில் இறங்கும்போதுதான், சர்வமகியைக் கண்காணித்துக் கொண்டிருந்த டேவிட்டிடமிருந்து அழைப்பு வந்தது.

எத்தகைய அழைப்பு அது..., நினைக்கும்போதே, இவன் உடல் பொருள் ஆவி அனைத்தும் பதறிப்போனது. கூடவே உடல் கோபத்தில் திகு திகு என்று எரிந்தது.

சர்வமகி அந்த ரடணபாலனின் டவுன் ஹவுசில் நிற்கிறாள் என்கிற செய்தியைக் கேட்டதும் இவன் நிலைகுலைந்து போனான். ஏன் இத்தனை பதட்டம் என்பது இன்று வரை தெரியாத புதிர்தான்.

சர்வமகியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று புயலாய் புறப்பட்டவனை அந்த நேரம் வந்த ஒரு முக்கிய கிளையன்ட் தடுத்து நிறுத்தினார். கனடாவின் முக்கிய பதவியிலிருக்கும் ஒரு அரசியல்வாதி. முகம் திருப்பமுடியாத அதி முக்கிய மனிதர். தலை விதியே என்று அவர் பேச்சைக் கேட்க வேண்டிய கட்டாயம்.

வேறு வழியில்லாமல், அவருடைய அறுவையைக் கொஞ்சம் பொறுத்துப்போனவன் இனியும் முடியாது என்று எண்ணியவனாக, தன்னுடைய அசிஸ்டனை அவருடன் பேச வைத்துவிட்டு, முக்கிய வேலையிருப்பதாக மன்னிப்புக் கோரிவிட்டு, இவன் முடிந்த அளவு வேமகாகக் காரை ஓட்டி வந்தான்.

வந்தபோதே, செய்திகேட்டு முக்கால் மணி நேரத்திற்கும்மேல் கடந்துவிட்டிருந்தது.

இந்த முக்கால் மணி நேரத்தில் என்ன என்ன நடந்திருக்குமோ? அதற்கு மேல் கற்பனை செய்யக்கூட அவனால் முடியவில்லை.

காலிங் பெல்லை அழுத்த நினைத்தவன், சற்று நிதானித்தான். தன் பக்கட்டிலிருந்த கிளவுசை எடுத்து அணிந்தவன், தன் கார் திறப்பின் பின் பகுதியால் காலிங் பெல்லை அழுத்தினான். எந்த பதிலும் கிடைக்கவில்லை. பலமாகக் கதவைத் தட்டினான். அப்போதும், உள்ளே ஆள் இருப்பதற்கான அறிகுறியே இருக்கவில்லை.

பலமுறை அழைப்பு மணியை அடித்தும், கதவைத் தட்டியும், பலன்

இருக்கவில்லை. அந்த ரண்டபாலன் இருந்தது, டவுன் ஹவுஸ் என்றதால் வீட்டைச் சுற்றிப் பின்னால் போக முடியாத நிலை.

இனியும் தட்டுவதால் பயனில்லை என்பதை அறிந்த அநேகாத்மன், ஒன்றாகக் கட்டியிருந்த, எட்டு வீடுகளையும், சுற்றிப் போனான். நல்லவேளை அவர்களுடைய வீடுகளின் பின்புறம் வேறு வீடுகள் இல்லாததால், அந்த ஆறடி வேலியை ஓடிவந்து அநாயாசமாக பிறரின் கவனத்தைக் கவறாது அவனால் தாண்ட முடிந்தது.

அந்த வீட்டின் புழக்கடையின் புறமாக வந்து பின்புற ஸ்லைடிங் டோரைத் திறக்கமுயன்றான். அவனுடைய நல்லகாலம், அது சத்தமில்லாது திறந்துகொண்டது.

யார் வரப்போகிறார்கள் என்கிற அலட்சியத்தில் பூட்டாமல் விட்டிருந்தான் போலும். அது அநேகாத்மனுக்குப் பெரும் சாதகமாகவே இருந்தது. இல்லையென்றால், அதை உடைத்து, உள்ளேவருவதற்கு அதிகநேரம் எடுப்பதுமட்டுமன்றி, அந்த சத்தம், அயலவரின் கவனத்தையும் கவர்ந்திருக்கும். அது தேவையற்ற சிக்கலைக் கொடுத்திருக்கும்.

வேகமாக உள்ளே நுழைந்தவன், அந்த வீட்டின் சமையலறையையும் தாண்டி, வரவேற்பறைக்கு வந்தான். அங்கே அவன் கண்ட காட்சி... இப்போது நினைத்தாலும், சினத்தில் உடல் நடுங்கியது.
அந்த ரட்ணபாலன் சர்வமகியின் மீது குனிந்திருந்தான். அதைப் பார்த்ததும், கட்டுப்பாட்டை உடைத்தது கொலைவெறி.

“யு... ....” என்று காதால் கேட்கமுடியாத அத்தனை கெட்ட வார்த்தைகளாலும் கர்ச்சித்தவன், ஆவேசமாக ரட்ணபாலனை நெருங்கினான்.

திடீர் என்று அங்கே அநேகாத்மனைக் கண்டதும், ரட்ணபாலனுக்கு முதலில் எதுவுமே புரியவில்லை. அவனை அங்கே எதிர்பார்க்கவில்லை என்பதை, அவனுடைய அதிர்ந்து நடுங்கிய உடல் எடுத்துக் காட்டியது.

“நீ... நீ எப்படி இங்கே...” என்றான் நம்பமாட்டா அதிர்ச்சியுடன்.

“ஹௌ டெயர் யு... ஹௌ டெயர் யு டச் ஹர்... அவள் மேல் கைவைக்க உனக்கு என்ன தகுதியிருக்கிறது?” என்று வெறியுடன் சீறியவன், அந்த ரட்ணபாலனின் முடியைக் கொத்தாகப் பற்றி எழுப்பினான்.

“எப்படி வந்தேனா? சொல்கிறேன்... அதற்கு முதல்...” என்றவன் காட்டாற்று வெள்ளமானான். முடிந்த வரைக்கும் அந்த ரட்ணபாலனை அடித்துத் துவைத்துவிட்டான்.

அவன் அடித்த வேகத்தில் முதலில் மூக்கு உடைபட்டவன், அதன் பிறகு பற்கள் இரண்டையும் இழந்தான். அப்படியிருந்தும் அநேகாத்மனின்

கோபம் தணியவில்லை.

“யார் மீது கைவைத்தாய்... உனக்கு என்ன தைரியம்? அவள் மீது கைவைத்த உன் கரங்களை,” என்றவாறு, அந்த ரட்ணபாலனின் கரத்தை முறிக்க நினைத்தவன், அவன் கத்தும் சத்தம், பக்கத்து வீட்டுக்காரரின் கவனத்தைத் திசை திருப்பிவிடுமோ என்று எண்ணியவனாகச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

சர்வமகியின் அருகே, ரட்ணபாலன் கழற்றிப்போட்ட அவனுடைய ஷேர்ட் இவனைப் பார்த்துச் சிரித்தது.

ரட்ணபாலனின் தலைமுடியை விடாமலே, இழுத்துச் சென்று அந்த சேரட்டை எடுத்தவன், அதை உருட்டி, ரட்ணபாலன் மறுக்க மறுக்க அவன் வாயில் வைத்துத் திணித்தான் அநேகாத்மன்.

ரட்ணபாலனின் விழிகள் இரண்டும், வெளியே தெறித்துவிடும்போல, கலங்கிச் சிவந்திருக்க, அதைக் கண்டதும், குரூர திருப்தியில், முன்பு செய்ய விளைந்தனை இப்போது செய்தான். சர்வமகியைத் தொட்ட கரங்கள் இரண்டையும், கண்ணிமைக்கும் நொடியில் பின்புறம் வளைத்து முறித்திருந்தான்.

வலியில் துடித்துக் கதற, முடியாமல், வாயில் அடைத்திருந்த துணி, அந்த சத்தத்தை நன்றாக வடிகட்டி வெளியே விட்டது.

“இந்தக் கண்தானே, அவளைத் தப்புத் தப்பாகப் பார்த்தது?” என்று ஆக்ரோஷமாகக் கேட்டவன், பின்புறமாக நின்றவாறே, அவன் தலையைத் தன்னைநோக்கி மடித்துச் சரித்தவன், இரு பெரும்விரல் கொண்டு, அந்தக் கண்களைக் குத்தி அவன் பார்வையைப் பலிகொடுத்தான்.

“இப்படி எத்தனை பெண்களுடன் விளையாடியிருப்பாய்... உன்னை சும்மா விடக்கூடாது... நீ... ஆண் என்று சொல்வதால்தானே இப்படியெல்லாம் பெண்களின் வாழ்க்கையில் விளையாடுகிறாய்? இனி நீ ஆண் என்றே சொல்லக் கூடாது...” என்றவன் ரண்டபாலனைத் தன்னை நோக்கித் திருப்பினான். விழிகள் இரண்டும் இரத்தத்தால் நனைந்திருக்க, கரங்கள் இரண்டும் முறிந்த நிலையில், கத்தக்கூடச் சக்தியற்று, திரும்பியவனின், உயிர்நாடியில் ஒங்கி அதுவும் பலமாக உதைத்தான். உதைத்த வேகத்தில் ரட்ணபாலனின் உயிர் நிலையில் எங்கோ எதுவோ வெடித்ததுபோல இருக்க, வலிக்கு முனங்கக் கூட முடியாமல் அப்படியே மயங்கிச் சரிந்தான்.

அவனுடைய உடலில் உயிர் இருக்கிறதா இல்லையா என்பதை அறிந்துகொள்ளும் எண்ணமே இல்லாது அவரசரமாக சர்வமகியை நெருங்கினான்.

தன் கரத்திலிருந்த கையுறையைக் கழற்றி அருகேயிருந்த மேசையில்

எறிந்தான். சர்வமகியின், முகத்தை மறைத்திருந்த கூந்தலை நடுங்கும் கரம்கொண்டு மெதுவாக விலக்கினான்.

கன்னம் இரண்டிலும் அடித்ததற்கான கையடையாளங்களைக் கண்டதும் ஏனோ சம்பந்தமே இல்லாமல் உள்ளம் துடித்துப் போனான். மெதுவாகப் பெரும் விரலால் அவளுடைய கன்னத்தை வருடிக் கொடுத்தவன், அறையும் போது அவளுடைய பல் உதட்டில் பட்டதால் ஏற்பட்ட காயத்தில் விழிந்த இரத்தத்தை மென்மையாகத் துடைத்து விட்டான்.

“விடுங்கள் சார்... நான் போகவேண்டும்... ப்ளீஸ்... என்னை விடுங்கள்... வலிக்கிறது சார்... அம்மா... என்னால் முடியவில்லையே...” என்று அந்த மயக்கத்திலும் அவள் திக்கித் திணறி முனக, அவள் வலியை உணர்ந்தவனாக, அதற்கு மேலும் பொறுக்கமுடியாதவனாக, அவளை அள்ளி எடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டான்.

அவனுடைய வலது கரம் அவள் தலைமுடிக்குள்ளும், இடதுகரம் அவளுடைய தோளையும் அழுந்தப் பற்றித் தன் உடலோடு புதைக்க முயன்றன. அவனையும் அறியாமல், அவனுடை உதடுகள்; அவளுடைய தலையின் உச்சியில் புதைந்தன.

இது அவனுக்குப் புதிது. இது வரை எந்தப் பெண்களையும், அவன் இத்தகைய வலியோடு அணைத்ததில்லை. யாருக்காகவும் அவன் இது வரை கலங்கியது இல்லை. பல பெண்களின் உடலை ரசித்தவனால், எந்தப் பெண்ணின் உள்ளத்தையும் ரசிக்க முடிந்ததில்லை. வருபவர்கள் அவனிடம் உள்ள பணத்திற்காக மட்டுமே வந்தார்கள் அன்றி, அவனுடைய உள்ளத்தை நேசித்து யாரும் அவனைத் தேடி வந்ததில்லை.

அப்படியே அவனை நேசித்து வந்தாலும், அந்த நேசத்தை, அவன் விட்டெறிந்த பணம் ஒன்றுமில்லாது ஆக்கியிருக்கிறது. அவன் ஒரு பெண்ணைத் தொட்டான் என்றால், அது உடல் சார்ந்ததாக, இல்லை பணம் சார்ந்ததாக மட்டுமே இருக்கும். ஒரு நாளும் உணர்வு பூர்வமாக எந்தப் பெண்ணையும் அவன் தொட்டதுமில்லை, விழியால் பார்த்ததும் இல்லை.

அவன் வாழ்வில் முதன் முதலாக, ஒரு பெண்ணை, எந்த சுயநலமும் இன்றி, புதிதாக முளைத்த தவிப்புடனும், பதட்டத்துடனும், அச்சத்துடனும் அணைத்திருந்தான்...

“யு ஆர் ஓக்கே... மகி... யு ஆர் ஓக்கே...” என்று திரும்பத் திரும்ப அவளுக்கு ஒதியவன், தன் இடக் கரத்தால், அவள் வேதனையைப் போக்கும் பொருட்டு அவள் முதுகை வருடிக் கொடுத்தான்.

இது அவன் உணராமலே செய்த காரியம். அவனுடைய வருடலோ, இல்லை, உண்மையான உள்ளுனர்வின் தவிப்போ, இல்லை,

அவனுக்குரிய அந்தப் பிரத்தியேக மணமோ, எதுவோ ஒன்று, மெதுவாக சர்வமியின் உணர்வுடன் கலக்க, தான் இருக்கும் நிலை புரியாது, மெதுவாக அசைய முயன்றாள்.

ஆனால் சிறிதும் அசையமுடியாது அவனுடைய இறுகிய அணைப்பில் புதையுண்டுபோயிருந்தாள்.
தன்னை அணைத்திருப்பது யார் என்று புரியாமலே, அவள் உடல் தன் கட்டுப்பாட்டையும் மீறி உதறத் தொடங்கியது. அவளுடைய நடுக்கத்தை உணர்ந்தவன், அவளை மெதுவாகத் தன் அணைப்பிலிருந்து விலக்கி, குழந்தை பொல, அவளுடைய தலையைத் தன் இடக்கரத்தால் தாங்கி,

“ஷ்... ஷ்... மகி... இட்ஸ் ஓக்கே... இட்ஸ் ஓக்கே... இட்ஸ் மீ... யு ஆர் சே◌ஃப் நவ்... டு யு ஹியர் மி... யு ஆர் சே◌ஃப் நவ்” என்று அவளுடைய புத்திக்குள் ஏற்ற முயன்றான். அவனுடைய குரலோ, இல்லை அவனுடைய பாதுகாப்பான அணைப்பிலோ, அவளுடைய உதறல் சிறிது அடங்கியது. கூடவே அவளுடைய தலையும் தொய்ந்தது.

அச்சத்துடன் அவள் முகத்தைப் பார்த்தவன்,

“மகி... மகி... நான்... நான் அழைப்பது கேட்கிறதா? லுக் அட் மி... மகி... வேக்கப்...” என்று பலமுறை அவளுடைய கன்னத்தைத் தட்டிப் பார்த்தான். அவளுடைய தோள்களைப் பற்றிக் குலுக்கிப் பார்த்தான். அவளிடமிருந்து எந்த அசைவும் இல்லை என்றதும், அவளுடைய கழுத்தில் கரம்வைத்து நாடித்துடிப்பை உணர முயன்றான். எங்கோ மெல்லியதாகத் துடிப்பதுபோல இவனுக்குத் தோன்ற, அவனையும் அறியாமல், பெரும் நிம்மதி அவனைச் சூழ்ந்துகெர்ணடது.

எங்கே அவளுக்கு வலித்துவிடுமோ என்று அஞ்சியவனாக அவளை மெதுவாக அந்த சோ◌ஃபாவில் கிடத்தினான். அப்போதுதான் அவளை முழுதாகப் பார்த்தான்.

கிழிந்திருந்த ஆடைகளுக்கூடாகத் தெரிந்த பெண்மையின் செழுமையும், அங்கும் இங்குமாகத் தெரிந்த பெரிய கண்டல்களும், காயங்களும், இரத்தக் கறைகளும், கலைந்திருந்த அவள் ஆடைகளும் அந்த ரத்னபாலன்மீதான கொலைவெறியை அதிகரிக்கச் செய்தது. மேலும் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவனாக,

“யூ பாஸ்டட்... ஐ வில் கில் யூ....” என்றவாறு எழுந்தவன், ஏற்கெனவே மயங்கிக்கிடந்தவனை தன் ஆத்திரம் தீரும் வரை பல முறை ஓங்கி உதைதான். அவனுடைய அசூர வேகத்திற்கும், பலத்திற்கும் அந்த ரட்ணபாலன் உதைபந்துபோல அங்கும் இங்கும் எம்பி விழுந்தான். வெறிகெண்ட சிறுத்தையின் வாயில் அகப்பட்ட நரியானான் ரட்ணபாலன்.

நிச்சயமாக அவனுடைய கடும் வேகத்திற்கு, ரட்ணபாலனின் உடலில்

பல எலும்பு முறிவுகள், ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கு முதல் அவனுடைய உடலில் உயிர் இருந்ததா, இல்லையா என்பதுதான் ஐயமே…

மெதுவாக சர்வமகியின் நிலை நினைவுக்கு வர, உதைத்துக்கொண்டிருந்த ரட்ணபாலனை விட்டு விட்டு அவளருகே வந்தான். அவளுடைய நிலை மேலும் அந்த வஞ்சகன் மீது பேராத்திரத்தை விளைவித்தாலும், நிலமையுணர்ந்து, தான் அணிந்திருந்த கோர்ட்டைக் கழற்றி அவள் மீது போர்த்திவிட்டான்.

சிறிதும் அசைவில்லாமல் கிடந்தவளைப் பதற்றத்துடன் நெருங்கியவன், மெதுவாக அவளுடைய கன்னத்தைத் தட்டினான்.

“மகி...” என்றான் மென்மையாக. அவளிடம் அசைவில்லை.

அச்சத்துடன் அவளுடை கையைப் பற்றி நாடித்துடிப்பைக் கண்டிறிய முயன்றான். அவனுடைய பதற்றமோ, இல்லை அவன் தன்னிலையில் இல்லையோ, அவனால் அவளுடைய நாடித் துடிப்பை உணர முடியவில்லை.

முதன் முதலாக, அவன் வாழ்வில் அச்சம் என்றால் என்ன என்பதை உணர்ந்தான அநேகாத்மன். கரம் நடுங்க, அவளுடைய கழுத்தில் கைவைத்துப் பார்த்தான்… பதட்டத்தில் முதலில் எதுவும் தெரியவில்லை.

“நோ.., நோ… நோ… யு ஆர் ஓக்கே… உனக்கு ஒன்றுமாகாது… மகி… வேக்கப்…” என்று தன்னிலை மறந்து பதறியவன், மீண்டும் அவள் கழுத்தில் கரம் வைத்துப் பார்த்தான். இப்போது அவனால் அவளுடைய நாடித்துடிப்பை மெல்லியதாக உணரமுடிந்தது. அவளுக்கு ஒன்றுமில்லை என்கிற நிம்மதியுடன் தளர்ந்து அவளுக்கருகேயே தரையில் அமர்ந்தான்.

அவன் இருக்கும் நிலையில் அவனால் எழுந்து செல்லமுடியும் போலத் தெரியவில்லை. தன் அருகே சுயநினைவின்றி இருந்தவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“யார்டி நீ… ஏன் என் வாழ்வில் நுழைந்தாய்? நீ வரும் முன் என் வாழ்வு தெளிந்த நீரோட்டமாக என் இஷ்டப்படி இருந்ததே… எப்போது என் அலுவலகம் வந்தாயோ, அன்றிலிருந்து என் இயல்பை நீ பறித்துக்கொண்டாயே… ஏன்… ஏன்டி…” என்று மனதிற்குள் அவளுடன் கொந்தளித்தவன், அயர்ந்த அவள் தோற்றத்தைப் பார்க்கமுடியாதவனாகத் தன் தலையைத் திருப்பினான்.

அப்போதுதான் அருகேயிருந்த டீ டேபிலில் இருந்த கண்ணாடிக் கோப்பை கண்ணில் பட்டது. எடுத்து முகர்ந்து பார்த்தான்.

ட்ரக்ஸ் போடப்பட்டிருக்கிறது. அதைக் குடித்ததால்தான் சர்வமகி

மயங்கியிருக்கிறாள் என்பதும், இனி அதிகநேரம் அந்த வீட்டில் இருக்கமுடியாது என்பதும் புரிந்தது. விரைவாக சர்வமகியை அங்கிருந்து அப்புறப்படுத்தவெண்டும்.

தன் சோர்வைத் தலை குழுக்கி விலக்கியவன், தன் கையுறையை எடுத்து மீண்டும் மாட்டினான்;. தன் சட்டையில் மடித்து வைத்திருந்த கைக்கூட்டையால் சர்வமகி பற்றியிருந்த கிளாசை நன்றாகத் துடைத்துவிட்டான். கூடவே அந்த டீ டேபிலையும் அழுந்தத் துடைத்தான். விரைந்து வெளியே சென்றவன், தன் காரை அந்த வீட்டிற்கு முன்பாக கொண்டுவந்து நிறுத்தினான்.

உள்ளே வந்தவன், சர்வமகியை பூமாலையெனத் தன் கரங்களில் ஏந்தியவாறு, காரின் பின் இருக்கையில் மெதுவாகக் கிடத்தினான்.

மீண்டும் அந்த வீட்டிற்குள் நுழைந்தவன், சர்வமகி படுத்திருந்தது லெதர் சோபா, கதவுக் கைப்பிடி, மற்றும் அவளுடைய கரங்கள் படக்கூடிய இடம் அனைத்தையும் அழுந்தத் துடைத்து விட்டான். அந்த வீட்டில் ஏதாவது சாட்சியங்கள் இருக்கின்றனவா என அலசிப் பார்த்தான்.

நல்லவேளை, செய்யும் தவறுக்கு எந்த சாட்சியமும் இருக்கக்கூடாது என்பதாலோ என்னவோ, வீட்டில் சிசிடி கமரா எதுவும் பூட்டப்படவில்லை.

ஆனால் அவன் கண்களுக்கு ஓரமாக நிமிர்த்தி வைக்கப்பட்டிருந்த சாம்சங் கலக்சி கண்ணில் பட, அதை எடுத்துத் தன் சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டான்.

சோ஼பாவுக்கு அருகே விழுந்திருந்த சர்வமகியின் கைப்பை கண்ணில் தெரிய, விரைந்து சென்ற அதை எடுத்தான். மீண்டும் அந்த இடத்தை நன்றாக அலசினான். திருப்தியுற்றவனாக வேகமாக வெளியே வந்தான். யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்று பார்த்தான்.

தெரு வெறிச்சோடியிருந்தது.
நல்ல வேளை அந்த வீடு சற்று ஒதுக்குப்புறமாக இருந்ததால், ஆள் நடமாட்டம் அதிகமாக இருக்கவில்லை. இனி யாராலும் சர்வமகி அங்கே வந்ததற்கான ஆதாரங்களை எச் சந்தர்ப்பத்திலும் திரட்ட முடியாது என்கிற உறுதியுடன் தன் காரில் ஏறினான்.

ஏறியவன், திரும்பி சர்வமகியைப் பார்த்தான். அவள் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தாள். அவளுடைய நிலையைப் பார்க்கப் பார்க்க அவனால் தாங்க முடியவில்லை. ரட்ணபாலன் நீ இதற்கு பதில்சொல்லியே ஆகவேண்டும். உன்னை நான் சும்மாவிடமாட்டேன்…' என்று கறுவியவன், தன் காரைக் கிழப்பக் கார் சீறிப் பாய்ந்தது.

நிலவு 9

சர்வமகியைக் காத்துத் தன் வீட்டிற்கு அழைத்துவரும் வழியில், எதையோ யோசித்தவனாகத் தன் தொலைபேசியை எடுத்து சில இலக்கங்களை அழுத்தினான்.

மறு முனையில் ஒரு இனிய பெண் குரல் தமிழில் கேட்க,

“வசந்தா... இது அநேகாத்மன்... ஐ நீட் யுவர் ஹெல்ப்...”

“சொல்லுங்கள் சார்... உங்களுக்காக நான் எதுவும் செய்யத் தயார்...” என்றது மறு புறம் பரபரப்புடன்.
உடனேயே சர்வமகியின் விலாசத்தைக் கொடுத்தவன், இந்த விலாசத்தில் நீங்கள் போய் தங்கி இருக்க வேண்டும். வன் ஓர் டூ டேஸ்தான். கேட்டால் சர்வமகி அனுப்பியதாகக் கூறுங்கள். அவர்களுக்கு என்ன வேண்டுமோ, அனைத்தையும் எந்தக் குறையும் இன்றி, செய்து கொடுங்கள்.” என்றதும், உடனேயே சம்மதித்தாள் அந்த வசந்தா.

பெரும் நிம்மதியுடன் காரைத் தன் பிரத்தியேக வீட்டிற்குக் கொண்டுவந்தான். மயக்கத்தில் வாடிய கொடிபோல மயங்கிக் கிடந்தவளை அப்படியே அலுங்காமல் தூக்கியவன், அவளைத் தன் அறைக்கு எடுத்துவந்து கிடத்தினான்.

கிழிந்த அவளுடைய ஆடையைப் பார்க்கும்பொது, அதே போல அந்த ரட்ணபாலனையும் கிழித்துத் தொங்கப்போடவேண்டும் என்கிற வெறி எழுந்தது. அதற்கு முன், கிழிந்த நாராக இருக்கும் சர்வமகியைக் கவனிக்கவேண்டும் என்று எண்ணியவன், தன் கபேர்டைத் திறந்தான்.

கைக்குக் கிடைத்த டீ சேரட் ஒன்றையும், குளியலறைக்குச் சென்று முதலுதவிப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு, அவளருகே வந்தான்.

இந்த இடத்தில், அவள் தன் தந்தையைக் கொன்றவனின் மகள் என்பதை முற்று முழுதாக மறந்து போனான்.

முழங்காலிட்டு அவளுக்கு அருகே தரையில் அமர்ந்தவன், அவளுடைய ஆடைகளைக் களைய முயன்றான். வலியில் சர்வமகியின் முகம் மெல்லியதாகச் சுனங்க, அவளுக்கு வலிக்கிறது என்பதைப் புரிந்துகொண்டான் அநேகாத்மன்.

“ஐம் சாரி...” என்று முனுமுனுத்தவன், அவளுக்கு வலிக்காதவாறு மெதுவாக கிழிந்த ஆடைகளைக் கத்தரிக்கோல்கொண்டு வெட்டித் தூர எறிந்தான்.

அவள் உடலில் தெரிந்த காயங்களைக் கண்டதும் இவன் இதயம் வலிக்க, முதலுதவிப் பெட்டியை திறந்தான். அதிலிருந்து மருந்தை எடுத்தவன், எழுந்து சர்வமகிக்கு நெருக்கமாகப் படுக்கையில் அமர்ந்து, அவளுடைய காயங்களுக்கு மெதுவாகப் பூசத்தொடங்கினான்.

அவன் விரல் பட்டதும், அவளுக்கு வலித்ததோ, இல்லை உடல் கூசியதோ, அவளிடம் மெல்லிய அசைவு எழ, தன் விரலை இழுத்துக்கொண்டான். மீண்டும் அவளிடத்தே அமைதி நிலவ, விட்ட பணியைத் தொடர்ந்தான்.

ஒருவாறு அவளுக்கு மருந்து பூசி முடித்தவன், மெதுவாக அவள் முதுகுப்புறமாகத் தன் இடதுகரத்தைச் செலுத்தி, எழுப்பித் தன்னோடு சாய்த்துக்கொண்டான்.

தன்னுடைய டீசேர்ட்டை அவளுக்கு அணிவித்து விட்டு, மீண்டும் அவளைப் படுக்கையில் கிடத்தினான். அவனுடைய டீசேரட் அவளுடைய, தொடையின் நடுப்பகுதி வரையுமே நீண்டிருந்தது. வாழைத்தண்டென, வழுவழுத்த அந்தக் கால்களை, போர்வை கொண்டு மறைத்தான்.

திரும்பி விழிமூடி மயக்கநிலையில் இருந்தவளை இமைக்காது பார்த்தான் அநேகாத்மன்.

முகத்தை மறைத்திருந்த கூந்தலைத் தன் நடுவிரலால் விலக்கியவன், அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான். அந்தப் பளிங்கு முகத்தில் வெறும் அப்பாவித்தனம் மட்டுமே தெரிந்தது? இவள் தப்பு செய்திருப்பாளா? இவளால் தவறு செய்யமுடியுமா? இவள் முகத்தைப் பார்க்கும்போது, குற்றம் செய்பவள் போலவே இல்லையே... இதுதான் இவளுடைய உண்மையான முகமா... இவள் நல்லவளாக இருக்கவேண்டும் என்று ஏன் என் உள்ளம் ஏங்குகிறது? ஆனால் இவள் தந்தை ஒரு கொலைகாரனாயிற்றே... அவனையே காக்கச் சொல்லி என்னிடம் வந்தாளே... உண்மையாகவே, இவள் தந்தை குற்றம் செய்தவர் என்பது இவளுக்குத் தெரியாதா? இல்லை தெரியாதவள் போல நடிக்கிறாளா... இவள் முகத்தைப் பார்த்தால், நடிப்பவள் போலத் தெரியவில்லையே... ஆனால் அந்த வாசுதேவனின் மகள் எப்படி நல்லவளாக இருக்கமுடியும். பெரிதும் குழம்பிப்போனான் அநேகாத்மன்.

பெருமூச்சுடன் எழுந்தவன், குளிப்பதற்குத் தயாராகக் குளியலறைக்குள் நுழைந்தான்.
இரத்தக்கறை படிந்த மேலாடையை அருவெறுப்போடு கழற்றித் தூரப்போட்டவன், பான்ட் பாக்கட்டிலிருந்தபொருட்களை எடுத்து, அங்கிருந்த மேசையில் போட்டான். அப்போதுதான் ரட்ணபாலனின் கைபேசி இவன் கவனத்தைக் கவர்ந்தது.

பான்டைக் கழற்றிவிட்டுக் குளிர் நீரில் நின்றவனுக்கு, அந்தக் குளிர் நீர் சிறிதும் அவன் உள்ளக் கொதிப்பைத் தணிப்பதாயில்லை.

ஐந்து நிமிடத்தில் ஷவரை விட்டு வெளியே வந்தான், பிஜாமாவை மட்டும் அணிந்தவாறு, ரட்ணபாலனின் கைபேசியைக் கரத்தில்

எடுத்துக்கொண்டு, தன் மடிக்கணணிக்கு அருகே வந்தான்.

யோசனையுடன் ரட்ணபாலனின் தொலைபேசியை தன் மடிக்கணணியோடு இணைத்தான் அநேகாத்மன். அரைமணி நேரத்தில், எதை எதையோ குடைந்து, அதன் கடவுச்சொல்லை, ஊடுறுவி உடைத்தான்.

உள்ளே அவன் எடுத்த வீடியோக்களைப் பரிசீலித்தான். கிட்டத்;தட்ட பன்னிரண்டு பெண்களின் வாழ்க்கையை அழித்த வீடியோக்கள் அதில் இருக்க, நடுங்கும் கரங்களால், சர்வமகியின் வீடியோவை ஓடவிட்டான்.

அதைப் பார்க்கப் பார்க்க அவன் உடல் இறுகிப்போனது. அந்த மிருகம் சர்வமகியுடன் நடந்துகொண்ட முறையைக் காணக் காண இவன் இரத்த அழுத்தம் எகிறியது. நல்ல வேளை, பாரதூரமாகும் முன் அவள் காப்பாற்றப்பட்டாள். கொஞ்சம் தாமதமாக வந்திருந்தால், அவள் நிலை… நினைக்கும்போதே, இதயம் கோபத்தில் தாறுமாறாகத் துடித்தது.

இந்த வீடியோவை சர்வமகி பார்த்தால், நிச்சயமாகத் துடித்துப்போவாள். அதை விட, வேகமாக அவளுடைய பகுதியை மட்டும், முழுதாக அழித்தான்.

“யு..... .... பாஸ்டட்… நீ இதற்கு பதில்சொல்லியே ஆகவேண்டும்… இந்தப் பிறப்பை ஏன்டா எடுத்தோம் என்று ஒவ்வொரு கணமும் நீ துடிக்கவேண்டும்… துடிக்கவைப்பேன். ஐ வில் டு தட்… அன்ட் வெய்ட் ஃபோர் தட்…” என்று தன்னை மறந்து கர்ஜித்தவன், தன் தொலைபேசியை எடுத்துத் தன் நண்பனான, போலிஸ் அதிகாரி; விக்டரைத் தொடர்புகொண்டான்.

கவனமாகச் சர்வமகியின் செய்தியை மறைத்தவன், தான் ரட்ணபாலன் மீது கொண்ட சந்தேகத்தின் பெயரில், அவருடைய கைபேசியை எடுத்து ஹக் செய்ததாகவும், அதில் கிடைத்த வீடியோக்கள் பெரும் அதிர்ச்சியைக் கொடுப்பதாகவும் கூறி, அவற்றை உடனேயே அவருக்கும் அனுப்பி வைத்தான். அதைப் பார்த்தவரும், கொதித்துப் போனார்.

ஏத்தனை பெண்களின் வாழ்க்கையில் புகுந்து விளையாடிவிட்டான் அந்த பாஸ்டட்…” என்று கர்ஜித்தவர்,

“தாங்க்யு சோ மச் அநேகாத்மன். இனி இந்த கேஸ் உன்னுடையதல்ல, என்னுடையது. வாழ்நாள் முழுவதும் வெளியே வராதது போல் செய்துவிடுகிறேன்…டோன்ட் வொரி என தைரியம் ஊட்ட,

“தாங்க் யூ மை ஃப்ரன்ட். பட் ஒரே ஒரு வேண்டுகோள்தான்… இவனுக்கு எதிராக நான்தான் வாதாடவேண்டும்…” என்றான் அடக்கிய கோபத்தில்.

பாவம், அதற்கு வாய்ப்பே வரப்போவதில்லை என்பதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

“நோ ப்ராப்ளம்… ஐ வில் ஹெல்ப் யு அநேகாத்மன். இப்பவே அவனை அரஸ்ட் பண்ணுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்குகிறேன்…” என்று வாக்குக் கொடுக்க, இவன் பெரும் நிம்மதியடைந்தவனாக, சர்வமகி விழிக்கும் வரை அவள் அருகேயே காத்திருந்தான்.

தொடரும்...

நிலவு 10

நடந்தது எதுவும் தெரியாது, மயங்கிக்கிடந்தவள், சுயநினைவு பெற்று அச்சத்துடன் அவன் கரம்பற்றி, விசாரித்தவளிடம் எல்லாவற்றையும் கூற முடியாதவனாக,

“வேலை விஷயமாக மிஸ்டர் ரட்ணபாலனைப் பார்க்க வந்தேன். அங்கே அவர் உன்னிடம்…” என்று கூறவந்தவன், அதற்கு மேல் கூறமுடியாதவனாகச் சற்றுத் தடுமாறினான்.

மீண்டும் கண்முன்னே அந்த நிகழ்வு படம்விரித்துக் காட்ட, தன் கீழ் உதட்டின் மேற்புறத்தை மேல் பற்களால் கடித்தவாறு விழிகளை அழுந்த மூடித் தன் பின்புறத் தலையை அழுந்தத் தடவி தன்னை ஒரு வாறு நிலைப்படுத்த முயன்றான்.

அந்த ஒருகண அமைதியில், உலகம் முழுவதையும் சுற்றிவந்த சர்வமகி, அச்சத்தில் விழிவிரிய

“அவன்… என்னை… என்னை…” என்று அதற்கு மேல் கூறமுடியாது தவிக்க, அவள் வலியைத் தன்னது போன்று உணர்ந்தவன், அதை எப்படி போக்குவது என்று புரியாமல் சிறிது தடுமாறினான். எங்கே தன் தடுமாற்றத்தை அவள் கண்டுகொள்வாளோ என்று நினைத்தவன், தன் கரங்களை பான்ட் பாக்கட்டில் திணித்தவாறு,

“இல்லை மகி… நான் வந்தபோது, அவன் உன்னிடம் பலவந்தமாக நடக்க முயற்ச்சித்திருந்தான். சோ… உன்னை அவனிடமிருந்து காப்பாற்றி, இங்கே அழைத்து வந்துவிட்டேன்...” என்றான் அவசரமாக.

‘இவன் எந்த நிலமையில் என்னைப் பார்த்தான்? அந்த... அந்த... ரட்ணபாலன்... அவளை எந்த அளவுக்கு சீரழித்திருந்தான்?’ எதுவுமே புரியாமல் அவனை அச்சம் குறையாமலே பார்த்தவள், அதை எப்படிக் கேட்பது என்று புரியாமல் மலங்க மலங்க விழித்தாள். அவள் உடல் பயத்தில் வேகமாக உதறத் தொடங்கியது.

அவள் எதைக் கேட்க வருகிறாள் என்பதையும், எதை எண்ணி இப்படி நடுங்குகிறாள் என்பதையும் உடனேயே புரிந்து கொண்டவன் அதற்கு மேல் இயலாதவனாக, வேகமாக அவள் அருகே வந்து படுக்கையில் அமர்ந்தான்.

அவள் கரங்களைத் தன் கரங்களால் ஏந்தி அழுத்திக் கொடுத்தவன், அவள் விழிகளில் ஆறாகப் பெருகிய கண்ணீரைக் கண்டதும், அதை மேலும் காண முடியாதவனாக,

"ஷ்...ஷ்... நீ நினைப்பது போல் எதுவும் இல்லை மகி... ப்ளீஸ் கன்ட்ரோல் யுவர் செல்ஃப்..." என்று அவன் சமாதானப் படுத்தியும், அவளால் அதை நம்பமுடியவில்லை. அதைக் குறையாத அந்த நடுக்கத்திலிருந்து புரிந்துகொண்டவனாக,

"யு ஹாவ் டு பிலீவ் மீ... அவன் தன் எல்லையைத் தாண்டுவதற்குள்ளாக நீ காப்பாற்றப்பட்டுவிட்டாய்... யு ஆர் பேர்ஃபக்ட்லி ஆல் ரைட்..." என்றான் அவசரமாக.

அவன் கூறியது அவளுக்குக் கேட்கவில்லை என்பது போல அவளுடைய நடுக்கத்தில் சிறிதும் மாற்றம் இருக்கவில்லை. கூடவே, அவளுடைய கண்ணீரும் அதிகரிக்க, அழுந்தப் பற்றியிருந்த கரத்தையே வருடிக் கொடுத்து, அசுவாசப் படுத்த முயன்றான். அதுவும் பலனின்றிப் போக, இனியும் அவள் கலங்குவதைக் காணமுடியாதவனாக,

"மகி... எப்படி சொன்னால் நீ நம்புவாய்?" என்று தன்னை மறந்து கேட்டவன், அவளை இழுத்துத் தன் மார்பிலே போட்டுக்கொண்டான். உதறிய அவள் முதுகை அழுத்தமாக வருடிக்கொடுத்தான். அந்த அணைப்பு, அவளுக்கு வேண்டியதாக இருந்ததோ, இல்லை இத்தனை காலம் கண்டுவந்த துன்பத்தின் எல்லையைத் தாண்டிய வேதனையோ, அவள் விசும்பத் தொடங்கினாள்.

அவள் விசும்பலை உணர்ந்தவனின் உடல் இறுகியது.

அவளைச் சற்று விலக்கி, அவள் முகத்தைத் தன் இரு கரங்களாலும் அழுந்தப் பற்றித் தன்னை நோக்கி நிமிர்த்தியவன், அவள் முகத்துக்கு நேராகத் தன் முகத்தைக் கொண்டு சென்று அவளை உற்றுப் பார்த்தான். அவளோ, அவனுடைய முகத்தைப் பார்க்கக் கூசியவளாகத் தன் விழிகளை இறுக மூடிக்கொண்டாள்.

"சர்வமகி..." என்றான்;. ஆனால் அவளோ அதைக் கவனிக்கும் நிலையில் இருக்கவில்லை.

"சர்வமகி..." என்றான் தன் குரலில் சற்று அழுத்தத்தைக் கூட்டி.

"ஓப்பன் யுவர் ஐஸ்..." என்றான் அதே குரலில். அவளோ விழிகளைத் திறக்கும் எண்ணம் இல்லாதவளாக இன்னும் மூடியிருக்க,

“மகிம்மா…” என்றான் பட்டினும் மெல்லிய கிசுகிசுத்த குரலில்.

அவன் குரலில் என்ன இருந்ததோ, மெதுவாகத் தன் விழிகளைத் திறக்க. அந்த விழிகளில் தன் விழிகளைக் கலக்கவிட்டான். அந்தக் கலங்கிய விழிகளில் எதைக்கண்டானோ, அவன் தன்னை மறந்தான். மறு கணம் அந்த நீண்ட பெரிய விழிகளின் வீச்சில் இழுக்கப்பட்டவனாக, நிகழ்கால உலகில் இல்லாது கனா உலகிற்குக் கடத்தப்பட்டு, மெல்ல மெல்ல அதில் கரையத் தொடங்கினான். அந்தக் கயல் விழிகளின் காந்த விசை இழுப்பில் தன் விழிகளைப் பிரிக்க முடியாதவனாகத் தடுமாறி நின்றிருந்தது, சில கணங்களோ, இல்லை நீண்ட நெடிய மணித்துளிகளோ, அவன் அறியான், அவளிடமிருந்து மெல்லிய கேவல் ஒலி, எங்கோ ஒரு தெலைவில தொலைந்துபோயிருந்தவனை, சுய நினைவுக்கு இழுத்து வந்தது.

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் விழித்தவனுக்கு, கனவுலகம் மறைந்து, நனவுலகம் அவனைப் பார்த்து நகைத்தது.

அவனா? அவனா அவள் விழியின் வீச்சில் மயங்கிப்போய்க் கிடந்தான். அதுவும் அவன் தந்தையைக் கொன்றவனின் மகளின் ஒரு விழியசைவில் அவன் தன்நிலை மறப்பதா? இது எப்படி சாத்தியம்? எந்த சந்தர்ப்பத்திலும், நிலைகுலையாதவன். இரும்பு மனிதன் என்று எல்லோராலும் பெயர் பெற்றவன். எப்படித் தடுமாறினான். அவனாலே, அவனை நம்பமுடியவில்லை. தன் கரங்களில் தாங்கியிருந்த அவள் முகத்திலிருந்து தீ சுட்டதுபோலத் தன் கரங்களை வேகமாக விலக்கிக்கொண்டான்.

“ஐ ஆம்… சாரி…” என்று முனுமுனுத்தான். அந்த முனுமுனுப்பு, அவளுக்குச் சொன்னதா, இல்லை தனக்கே சொன்னானா என்பது அந்த கடவுளுக்கே வெளிச்சம்.

அவளோ இது எதையும் புரியும் நிலையில் இருக்கவில்லை. அவள் கசங்கிய முகத்தையும் காணப் பிடிக்காதவனாக, வேகமாகப் படுக்கையை விட்டு விலகிச் சென்று நின்றவன், தன் பான்ட் பாக்கட்டில் கரத்தை வைத்தவாறு தலையை சற்றுச் சரித்து, அவளைத் திரும்பிப் பார்த்தான்.

“சர்வமகி… நீ அச்சப்படுவது போல எதுவும் பாரதூரமாக நடக்கவில்லை... யு ஆர் சே◌ஃப்.?” என்றான் அழுத்தமாக.

அவனுடைய அழுத்தமான குரல் அவளுடைய புத்திக்குள் மெதுவாக எட்ட அவனை உற்றுப் பார்த்தாள்.
“ஆனால் அந்த லாயர்… என்னை… எனக்கு…” அதற்கு மேல் கூறமுடியாமல் உதடுகள் நடுங்க, தன் பற்களால் நடுங்கும் உதடுகளைக் கடிக்க, அநேகாத்மனின் விழிகள் கூர்மையுடன், பற்களில் சிறைப்பட்ட அந்தப் பலாச்சுவை உதடுகளில் ஒரு கணம் கூடுதலாக நின்று அளவிட்டது. விரைந்து சென்று அந்த உதடுகளை விடுவிக்கவேண்டும்

என்று ஏனோ உள்ளம் பரபரக்க, தன்னையே கடிந்தவனாக,

“யெஸ் ஹி ட்ரை டு மெஸ் வித் யு... பட்... அதற்குள் நான் அங்கே வந்துவிட்டேன்... நீ எதற்கும் அச்சப்படவேண்டியதில்லை...” என்று அவன் அவசரமாகக் கூற, உடல் கூறிய வலியை உணர்ந்தவளாகத் தன் கரங்களைத் தூக்கிப் பார்த்தாள்.

அவளுடைய மணிக்கட்டு, அந்த ரட்ணபாலனின் இறுகிய பிடியால், கண்டிச் சிவந்திருநதது. அதை வலியுடன் பார்த்தவள்;,

“இந்தக் காயம் எப்படி வலிக்கிறது தெரியுமா? கையில் மட்டுமல்ல... என் உடல் முழுவதும், தீயால் சுட்டதுபோல வலிக்கிறது ஆத்மன்...” என்றாள் அவள் இயலாமையில்.

ஒரு கணம், அவளுடைய ஆத்மன் என்கிற அழைப்பில் அதிர்ந்துபோய் நின்றான் அநேகாதமன். ஆத்மன் என்கிற அழைப்பு, அவன் அன்னையின் அழைப்பு. இது வரை யாரும் அவனுடைய பெயரைச் சுருக்கி இப்படி அழைத்ததில்லை. வெளியாட்கள் மரியாதையாக மிஸ்டர் அனேகாத்மன் என்பார்கள். ஒ்பிஷலாக அழைக்கும்போது, மிஸ்டர் வெங்கடேஷ் அல்லது மிஸ்டர் அநேகாத்மன். நட்பு வட்டாரத்திற்கு மட்டும், அநேகன். ஆனால் இந்த ஆத்மன் என்கிற அழைப்பு, அவனுடைய தாயினுடையது. இதுவரை யாரும் அவனை அப்படி அழைத்ததில்லை. நீண்ட நெடிய ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் பெயரைக் கேட்கிறான். அதுவும் அவன் எதிரியின் மகளின் வாயிலிருந்து.

ஏனோ அந்த அழைப்பைத் திருத்தவேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. சொல்லப்போனால், அந்த அழைப்பு, அலைப்புறும் அவன் உள்ளத்தைச் சற்று அமைதிப்படுத்தியது என்றே கூறவேண்டும். மீண்டும் அந்த அழைப்புக்காக அவனையும் அறியாது ஏங்கத் தொடங்கினான் அநேகாத்மன்.
தன் நினைவில் தடுமாறியவனை, சர்வமகியின் குரல், மீட்டு வந்தது.

“நான்... நான் இப்படி... இப்படி நடக்கும் என்று...” என்றவள் ரண்டபாலன் அவளுடன் நடந்துகொண்ட முறையை நினைத்ததும் வேதனையைக் குறைக்க முடியாமல் தன் விழிகளை அழுந்த மூடினாள்.

அவள் முகத்தில் ஓடிய கலவையான உணர்வைக் கண்டவனுக்கு, அவள் உடலில் இருக்கும் அத்தனை காயங்களுகம், நினைவுக்கு வந்தது. அது எந்தளவு வலியைக் கொடுக்கும் என்பதையும் அவன் உணர்ந்தான். அந்த வலியை மனதார உணர்ந்தவனாக, அதற்கு மேலும் அவளைப் பார்க்க இயலாதவனாக அறையை விட்டு வெளியேறினான்.

வெளியேறியவன், தன் கோபம் முழுவதையும் ஒன்று திரட்டி அறைக் கதவை அறைந்து சாத்தினான். தன் தலை முடியை அழுத்தமாக வருடியவனுககு, இதயம் வேகமாகப் படபடத்தது. அந்த படபடப்பில்

ஏதோ ஒரு வலியை உணர்ந்தவன், தன் இடது மார்வை வருடிக்கொடுத்தான். அந்த வலியையும் மீறி கோபம் கொதித்துக்கொண்டு வந்தது.

தன்னுடைய பிரத்தியேக ஜிம்மிற்குள் நுழைந்தவன், ஒடுபொரியில் (TREADMILL) ஓடத் தொடங்கினான். வேகம்... வேகம்... வேகம். ஓடிய அவனுடைய வேகம் எல்லையைக் கடந்தது. கிட்டத்தட்ட 20mph ஐயும் நெருங்கத் தொடங்கியது. இரண்டு கால்களும் வேகமாக முன்னோக்கி ஓடிக்கொண்டிருந்தது. வியர்வை ஆறாக ஓடி, அவன் அணிந்திரந்த டீசேர்ட்டை நனைத்தது. ஓடியவாறே வியர்வையால் நனைந்த டிஷேர்ட்டைக் கழற்றி ஒருபக்கமாக வீசி எறிந்துவிட்டுத் தடையின்றி ஓடினான்.

அந்த ஓட்டத்திற்கு இப்போது வேறுயாராவது இருந்திருந்தால், நிச்சயமாக இதயம் நின்றிருக்கும்.
கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்களுக்கும் மேலாக ஓடியவன், ஓரளவு உடல் சோர்வுற, வேகத்தைக் குறைத்து நிறுத்தினான். இரண்டு கைப்பிடியிலும் கரத்தைப் பதித்துக் குனிந்து நின்றவனின் வாயிலிருந்து "ஹா.. ஹா..." என்கின்ற களைப்பின் ஒலி அந்த அறையையே நிரப்பியது.

அந்த ஆறடி மூன்றங்குல உயர உடல் வேர்வையில் குளித்திருக்க, ஈரமான தலையிலிருந்து கணுக்கால் வரை வியர்வை வழிந்து ஓடியது. மெதுவாக இடுப்பைப் பற்றியவாறு நிமிர்ந்தவனது, தலையிலிருந்து வியர்வை, அவன் கூரிய நாசியினூடாக வழிந்து நிலத்தில் விழுந்தது. அந்த வியர்வை, அவன் உடலில் ஒரு வித பளபளப்பை ஏற்படுத்த, அவனுடைய உடலின் திடமும், இறுகிய தசைக்கோலங்களும், சற்று எடுப்பாகவே வெளியே தெரிந்தது.

அதுவும் மார்பிலே அடர்ந்திருந்த முடியையும் மீறி நிமிர்ந்திருந்த அகன்ற சற்றுப் பரந்த மார்பும், அதிக நேரம், உடற்பயிற்சி செய்வதால், நிரந்தரமாகப் பதிந்துபோன சிக்ஸ்பாக் வயிறும், நரம்புகள் புடைத்திருந்த இருதலைப்புயத்தசைகளும்(biceps and triceps), முறுக்கேறிய தோள்களும், திண்ணென்றிருந்த முதுகும், சற்று மெல்லிய இறுகிய இடையும், அடேங்கப்பா... உலக ஆணழகன் போட்டிக்கு வேண்டிய அத்தனை அம்சங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தான் அந்த ஆணழகன். அவனைப் பார்தால், நிச்சயமாக இந்த நிலையில்கூட அவனைப் பார்க்கும் பெண்கள், தமது தூக்கத்தைத் தொலைப்பார்கள் என்பதுமட்டும் நிச்சயம்.

ஒரு வாறு தன்னை நிதானப்படுத்தியவன், ஓடுபொரியைவிட்டு இறங்கினான்.

அருகேயிருந்த துவாயை அலட்சியமாக எடுத்துத் தன் வியர்வையைத் துடைத்தான். அவனுடைய கரங்கள், தம் பாட்டிற்கு வியர்வையைத்

துடைத்தாலும், சிந்தனை என்னவோ, சர்வமகியிடமே நிலைத்திருந்தது.

அநேகாத்மனுக்குத் தன்னை நினைத்தே கோபம் வந்தது. புத்திக்கு, அவள் ஏற்புடையவள் அல்ல என்று தெரிந்திருந்தாலும், மனம் என்னவோ, அவளை நோக்கியே ஓடிக்கொண்டிருந்தது.

"டாமிட்... ஆத்மன்... வேக்கப் மான்..." என்று தன்னைத் தானே சினந்தவன், தன் கரத்திலிருந்த துவாயை தூர எறித்துவிட்டு, ஹாலுக்கு வந்தான். கசகசப்பை நீக்கக் குளியலறைக்குள் நுழைந்தான். மீண்டும் ஒரு குளியலைப் போட்டுவிட்டு முன்னறைக்கு வந்தான்.

மீண்டும் மனம் சர்வமகியிடமே நின்றது. அவனுடைய அறைக்குச் சென்றவன், கதவைத் திறந்து பார்த்தான். சர்வமகி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். சத்தம் எழுப்பாது, அவளை நெருங்கினான்.

உறக்கத்தில் அவளணிந்திருந்த ஆடையும், போர்வையும் சற்று விலகியிருந்தது. மீண்டும் போர்வையைச் சரிப்படுத்தியவன், அவள் முகத்தில் விழுந்திருந்த ஒற்றை முடியை மெதுவாக விலக்கிவிட்டான். அவனையும் அறியாது, அவள் நெற்றியில் அவனுடைய கரம் பட, அந்த மெல்லிய தொடுகை கொடுத்த உணர்வில், எங்கோ இழுத்துச் செல்லப்பட்டவனாக, மீண்டும் அவள் நெற்றியைத் தன் ஒற்றை விரலால் வருடிக் கொடுத்தான்.

இத்தனை மென்மையாகவா ஒரு பெண்ணின் நெற்றி இருக்கும். அவனுக்குத் தெரிந்து எந்தப் பெண்ணின் நெற்றியும் இத்தனை மென்மையாக இருந்தது போன்ற நினைவு இல்லை. அது சரி, அவன் எப்போதுதான் பெண்களின் நெற்றியைக் கவனித்தான்.? அவனுடைய கவனம் எல்லாம் வேறு எங்கோவல்லவா இருக்கும்.

மெதுவாகத் தன் கரத்தை விலக்கியவன், ஏதோ சந்தேகம் கொண்டவனாக, இப்போது தன் கரத்தை அவள் கன்னத்தில் பதித்தான். அவள் கன்னம் கூடப் பஞ்சு போல மென்மையாகத்தான் இருந்தது. குழந்தைக்குக் கூட இத்தனை மென்மையிருக்குமா என்பது சந்தேகம்தான்.

முகமே இத்தனை மென்மையாக இருக்கிறதே, அவளுடைய உடல், விழிகளை மூடி, அவளுக்கு மருந்திட்டதை நினைத்துப் பார்த்தான்.

அளுடைய காயங்களும், கண்டல்களும் அதனால் அவள் பட்ட வலியுமே நினைவில் வந்து அவனைக் கொல்லாமல் கொன்றது.

"முன்னமே உனக்கு நான் அறிவித்திருக்கவேண்டும் மகிம்மா... அறிவித்திருந்தால், நீ இப்படி ஒரு றோக்கிடம் சிக்கியிருக்கமாட்டாயல்லவா..." என்று வேதனையுடன் முனுமுனுத்தவன் பெருமூச்சுடன் எழுந்து அறையை விட்டு வெளியே வந்தான்.

ஏனோ மனக் கண்ணின் முன்னால், காயப்பட்டிருந்த அவள் உடல் அங்கங்களே நினைவுக்கு வந்து அநேகாத்மனைத் தன்நிலை இழக்கவைத்தது.

மீண்டும் அவனுடைய கோபம், எகிறத் தொடங்கியது. தன் தலையைக் குலுக்கி, அவள் மேலிருந்த பிரத்தியேக உணர்வைக் களைய முயன்றவன், முடியாமல் தோற்றுப் போனான். ஆம் அநேகாத்மன் தோற்றுப்போனான். முதன் முதலாக, அதுவும் ஒரு பெண்ணுக்காய் தன் உணர்வுகளைக் கட்டுக்குக் கொண்டுவரமுடியாமல் தோற்றுப்போனான். அவளையே சுற்றிவந்த சிந்தனைகளை முறியடிக்கமுடியாமல் தோற்றுப்போனான்.

இது அவனுக்குப் புதிது. யாருக்காகவும் அவன் இத்தனை கலங்கியதில்லை. யோசித்ததில்லை. பதறியதில்லை. ஏன் வருந்தியதுகூட இல்லை. முதன் முதலாக ஒரு பெண் அவள் நினைவையும், கனவையும் மறக்கடித்துக்கொண்டிருக்கிறாள். முதன் முதலாக அவளைத் தன் நினைவில் இருந்து வெளியேற்றமுடியாமல் இவன் தவித்துக்கொண்டிருந்தான்.

“ஆத்மன்... யு ஹாவ் டு பி யுவர் ஓன் செல்ஃப்;... யு ஹாவ் டு ரிடேர்ன் டு யுவர் ஓன் வேய்ஸ் சர்வமகி நாட் யுவர் டைப்... அவள் ஒரு கொலைகாரனின் மகள்... உன்னை வேவுபார்க்க வந்தவள்... ப்ளீஸ் டோன்ட் ஃபெல் ஒன் ஹர் ட்ரப்....” என்று தனக்குத்தானே அறிவுறுத்தினான். தன் மனதை தெளிவுறப் படாத பாடு பட்டான். பாழாய்ப்போன மனது, மீண்டும் சர்வமகியிடமே நிலைத்திருந்தது.

தன் மீதே கோபம் கொண்டவனாகச், சென்று ஒரு சிறிய அலுமாரியைத் திறந்தவன், அதிலிருந்த விஸ்கியை எடுத்துக் கடகடவென்று தொண்டைக்குள் கொட்டினான்.

அப்படியிருந்தும் கோபம் கட்டுப்பட மறுத்தது. மீண்டும் ஊற்றினான். தொண்டை எரிந்ததுதான் மிச்சம். சினம் தணியவில்லை.

போதாததற்கு, சற்றுப் போதை தலைக்கு ஏற, தன்னையும் மீறி மீண்டும் மனம், சர்வமகியையும், அந்த ரட்ணபாலனையுமே சுற்றிவந்தது. அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவனாகத் தன் நினைவை அதன் போக்கிற்கே விட்டான். ‘ஆத்மன்... யு ஆர் வேஸ்ட்... xxx வேஸ்ட்... உன்னையே உன்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே... நீ எல்லாம் பெரிய லாயர்... கோ டு ஹெல்...’ என்று தன்னையே வசைபாடியவன், முன்னறைக்கு வந்து தொப் என்று சோஃபாவில் விழுந்தான்.

அவனுடைய மனக் கண்ணில் முதன் முதலாக அவனுடைய அறைக்குள் நுழைந்த சர்வமகி நிழலாக வந்து போனாள். அன்றைய அவளுடைய ஒவ்வொரு அசைவுகளும், இன்றுவரை அவன் நினைவை விட்டு அழியவில்லை என்பதுதான், ஆச்சரியம்.

தன் கரத்திலிருந்த விஸ்கியை வாயில் ஊற்றியவாறே டிவியை உயிர்ப்பித்தான். தொலைக்காட்சியில் தெரிந்த செய்தியைக் கண்டதும், வாயில் ஊற்றிய விஸ்கியைக் குடிக்க மறந்தானோ, பிரக்கேற, இருமியவாறே தன் வாயைத் துடைத்தவாறு அந்த செய்தியை வெறித்துப் பார்த்தான். தலைக்கு ஏறிய போதை முழுதாக விடைவெற, அவன் உதடுகள், கோபத்துடனும், எரிச்சலுடனும் அழுந்த மூடியது.

நிலவு 11

சர்வமகியின் நினைவிலேயெ உழன்றவன், தன்னை மீட்கும் பொறுட்டு விஸ்கியைக் குடித்தவாறு தெலைக்காட்சியை உயிர்ப்பித்தான். அங்கே போய்க்கொண்டிருந்த செய்தியைக் கேட்டதும், போதை முழுவதும் இறங்க கோபமும், எரிச்சலும் போட்டிபோட அந்தச் செய்தியை வெறித்துப் பார்த்தான்.
பிரேக்கிங் நியூஸ் என்று போய்க்கொண்டிருந்தது செய்தி.

கனடாவின் சட்டத்தரனியாக வேலைபார்த்துவந்த ரட்ணபாலன் ஜெயபாலன், இனம்தெரியாத நபர்களால், கடுமையாகத் தாக்கப்பட்டு அகால மரணமடைந்துள்ளார். அவருடைய இறப்புக்குக் காரணமானவர்களைக் காவல்துரை வலைவீசித் தேடிவருகிறது… இதோ இந்தக் கொலையை விசாரித்துவரும், டிடெக்டிவ் ஃபெர்னான்டோவிடம் விசாரித்தபோது,

“மிஸ்டர் ரட்ணபாலன் ஜெயபாலனைக் கொன்றவர்கள் எதற்காக கொலைசெய்தார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால், நிச்சயமாக, பலர் சேர்ந்துதான் இந்தக் கெலையை செய்திருக்கவேண்டும். இதுவரை பார்த்த கொலைகளில், இந்தக் கொலையே அதி பயங்கரமாக இருக்கிறது. கிட்டத்தட்ட அவருடைய உடலில் பதின்நான்கு இடத்தில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இது பெரிய ட்ரக் ஒன்று அவர் மேல் ஏறினால் கூட, இத்தனை எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருக்காது. அவருடைய இரண்டு கண்களையும் யாரோ தம் கரத்தால், வெறிகொண்டு குத்திக் குறுடாக்கியிருக்கிறார்கள்… அது மட்டுமல்லாமல், அவருடய ஆண் உறுப்பு பலத்த சேதமடைந்திருக்கிறது. வெளிசேதம் மட்டுமில்லாமல், உள் உறுப்பும் பலத்த சேதமடைந்திருக்கிறது. இக் கொலையைச் செய்தவர்கள் ரட்ணபாலன் ஜெயபாலன் மீது பெரும் ஆக்ரோஷத்தில் இருந்திருக்வேண்டும். இல்லையென்றால் இத்தனை கொடுமையாக அவரைக் கொன்றிருக்கமுடியாது.

“மிகக் கொடுமையாகக் கொலைசெய்திருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறீர்கள். இந்தக் கொலையை செய்தவர்கள் ஒரு வேளை மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக இருக்க வாய்ப்பிருக்கிறதா?”

“இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்… அதை விசாரனையில்தான் கண்டுபிடிக்கமுயும்…”

“யார் என்று அறிவதற்கு எதாவது துப்பு கிடைத்திருக்கிறதா?”

“அதுதான் நம் எல்லோருக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. இதுவரை எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. அத்தனை தடயங்களும், கவனமாக, அழிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக, இந்தக் கொலையைச் செய்தவர்கள், தப்பும் வழி தெரிந்தவர்களாகவே இருக்கவேண்டும். அதையும் விரைவில் கண்டுபிடிப்போம்…”

“எத்தனை பேர் இந்தக் கொலையைச் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்?"

“தெரியவில்லை. பிரிசோதித்ததில் மூன்று நான்கு விதமாக தாக்கப்பட்டிருகிறார். அதனால் குறைந்தது, மூன்றுபேராவது தாக்கியிருக்கலாம் என்பது எம் கணிப்பு… ஆனால் அதை உறுதியாகக் கூறமுடியாது…”

“எதற்காக இந்தக் கொலை செய்யப்பட்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?"

“இல்லை… ஆனால், ரட்ணபாலன ஜெயபாலன் பெண்கள் விடயத்தில் பல தவறுகள் செய்தது தெரியவந்திருக்கிறது. இனி அந்தக் கண்ணோட்டத்தில்தான் விசாரிக்கவேண்டும். யாராவது பாதிக்கப்பட்டவர்கள் இப்படிச் செய்தார்களா என்கிற கோணத்தில் எங்கள் அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகிறோம்… நிச்சயமாக மிக விரைவில் அந்தக் கொலையாளியைப் பிடித்துவிடுவோம்…” என்று மேலும் அந்த டிடெக்டிவ் பேட்டி கொடுத்துக்கொண்டிருக்க,

“கிளிப்பாய்…” என்ற அநேகாதமன் உதட்டில், ஏளனப் புன்னகை மலர்ந்தது. “சே… அதற்குள் இறந்துவிட்டானே… உயிரோடு வைத்து இன்னும் சித்திரவதை செய்திருக்கவேண்டும்…” என்று தனக்குள் முணுமுணுத்தான் அநேகாத்மன்.

மீண்டும் சர்வமகி அந்தக் கயவனிடம் சிக்கிக்கொண்டது நினைவில் வந்தது.

இனியும் ஒரு முறை அவள் இப்படி ஒரு ஆபத்தில் சிக்கிக்கொள்வதை அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்ல. அதேநேரம் அவள் தந்தையையும் அவனால் மன்னிக்கமுடியவில்லை. அவனுடைய தந்தையின் மரணத்திற்குக் காரணமானவனையும், அவன் குடும்பத்தையும், அவன் எப்படி மன்னித்து விடமுடியும்.

தாயின் மரணத்திற்குப் பிறகு, அவரல்லவா அவனுக்குத் தாயுமானவராக இருந்தார். அவனிடம் அவர் பொழிந்த அன்பின் அளவுக்கு விலையேது. தவிர அவனுக்கென்றிருந்த ஒரே ஒரு உறவும் அவர் மட்டும்தானே. இப்போது அதுவும் இல்லையென்றாகிவிட்டதே.

அதற்குக் காரணம் யார் அந்த வாசுதேவன்தானே…

தந்தையின் நினைவு துக்கப்பந்தாக அவன் தொண்டையை அடைத்தது. தனக்கென்று இருந்த ஒரே உறவான தந்தையைக் கொன்ற அந்த வாசுதேவனை ஒருவழி பண்ணுவதற்குக் கூட, அவன் திட்டம் தீட்டியிருந்தான். ஆனால், என்று சர்வமகி அவனைத் தேடி வந்தாளோ, அன்றிலிருந்து தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டான்.

அதே நேரம், அந்த வாசுதேவனை சும்மா விட்டுவிடவும் அவனால் முடியவில்லை. தன் தந்தையைக் கொன்றவர், அதற்குரிய பதிலைக் கூறியேயாகவேண்டும் என்கிற வன்மம் மட்டும் அவனிடமிருந்து விலகவில்லை. அதே நேரம், சர்வமகியின் கலங்கிய முகமும் அவனை அலைக்கழித்தது.

சோர்வுடன், தன் தலையை பின்புறமாக சோ◌ஃபாவில் சரித்தவன், ஒரு முடிவுக்கும் வரமுடியாதவனாகத் தன் விழிகளை அழுந்த மூடினான். தலை வேறு உள்ளே ஏறிய விஸ்கியால் ஒரு நிலையில் இல்லாது தடுமாறியது

ஒரு கரத்தால், நெற்றிப்பொட்டை அழுத்திக்கொடுக்க, மூடிய இமைகளுக்குள் நிழலான மெல்லிய படலம் போன்ற உருவம் தெரிய விழிகளைத் திறந்தான்.

சர்வமகிதான். சோர்வுடன் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அந்த நிலையிலும், அவனுடைய விழிகள் அவசரமாகத் தொலைக்காட்சியில் நிலைத்தது.

இப்போது செய்தியில் வேறு செய்தி போய்க்கொண்டிருந்தாலும், பிரேக்கிங் நியூஸ் என்று கீழே ரட்ணபாலனின் செய்தி ஓடிக்கொண்டிருக்க, சர்வமகி அதைக் கவனிக்கும் முன்பே, தொலைக்காட்சியை அணைத்துவிட்டு நிமிர்ந்தான்.

“ஹாய்…. யு ஓக்கே?” என்றான்.

அவள் “ம்…” என்று தலையாட்டியவள், குளிர்வதுபோலக் கரங்களை மார்புக்குக் குறுக்காக் கட்டிக்கொண்டாள்.

மீண்டும் காயம்பட்ட அவள் முகம் அவனை உறுத்தியது. கூடவே, மார்புக்குக் குறுக்காக அவள் கரங்களைக் கட்டியதால், சற்று ஏறிய டீ சேர்ட்டும் தோளிலிருந்த வழிந்த டீசேர்ட்டினால் தெரிந்த அவள் பழிங்குத் தோள்களும், தொடைகளும், அவனைச் சற்றுத் தடுமாற வைக்க,

“எதற்கு எழுந்துவந்தாய் சர்வமகி... போய்... ஓய்வெடு...” என்றான் தன் தடுமாற்றத்தை மறைக்க முயன்றவனாக.

“இ.. இல்லை நான் போகவேண்டும். என்னுடைய சகோதரர்கள்

என்னைக் கானவில்லை என்று பயந்துபோவார்கள்...” என்றாள் அவள் மென்மையாக.

“இந்த நிலையிலா... நோ வே... அதற்கு நான் அனுமதிக்கமாட்டேன்... போ மகி... போய் ரெஸ்ட் எடு...” என்றான் அவன் அழுத்தமாக.

“என்னைக் காணவில்லை என்று அவர்கள் பயந்துபோவார்கள் ஆத்மன்... ஐ ஹாவ் டு கோ...” என்று தன் நிலையைப் புரியவைக்க அவள் முயன்றாள். மீண்டும் அந்த ஆத்மனில் ஒரு நொடி உடைந்தவன், தன்னை மீட்டுக் கொள்ள கழுத்தின் பின்புறத்தை வருடிக் கொடுத்தவனாக,

“ யு டோன்ட் நீட் டு வொரி மகி... அதற்குரிய ஏற்பாடுகளை நான் ஏற்கெனவே செய்துவிட்டேன். என்னுடைய நண்பர் ஒருவரை உன் சகோதரர்களுக்குத் துணையாக இருக்குமாறு அனுப்பி வைத்திருக்கிறேன்... சோ... அவர்களை எண்ணி நீ வருந்தத் தேவையில்லை...” என்றான் அவன் அறிவிப்பதுபோல.

அவளோ அவனை கூறியதைக் கேட்டதுபோலவே தெரியவில்லை.

“இ... இல்லை... நான்... நான் வீட்டிற்குப் போகவேண்டும்...” என்றவளை உற்றுப் பார்த்தான் அநேகாத்மன். அவள் முகத்தில் தெரிந்த பரிதவிப்பு, அவனுக்கு எதையோ உரைப்பதுபோலத் தெரிய, அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆரம்பித்தது.

“ஏன்... நானும் அந்த கயவனைப் போல உன் மீது பாய்ந்துவிடுவேன் என்று நினைத்தாயா? அந்தளவுக்கு நான் சாக்கடை என்றா நினைத்தாய்?” என்றான் அவன் குரல் இறுக.

அவள் இருக்கும் நிலையில் இப்போது யாரையுமே நம்பும் நிலையில் இல்லை. அந்த அளவுக்கு அவள் மனம் இறுகிப்போயிருந்தது. எத்தனை பெரிய ஆபத்திலிருந்து அவள் தப்பிவிட்டாள். இனி இந்த ஜென்மத்தில் எந்த ஒரு ஆணையும் சந்தேகமில்லாமல் பார்க்க முடியுமா? சும்மா பார்த்தாலே உடல் கூசிப்போகுமே.

ஒரு முறை அநேகாத்மனை ஏறிட்டுப் பார்த்தாள். அழுத்தமான முகமும், கொபத்தால் இறுகிப்போயிருந்த உதடுகளும், எரிச்சலைக் காட்டிய கூரிய விழிகளும், அவன் தப்பானவன் அல்ல என்று எடுத்துக் காட்டினதான். ஆனாலும், சூடுகண்ட பூனையாக மனம் சுருண்டது.

இருந்தும் அநேகாத்மனை ஏனோ தவாறாக அந்த ரண்டபாலனுடன் ஒப்பிட அவளால் முடியவில்லை. அவன் மட்டும் தக்க தருணத்தில் வராமல் விட்டிந்தால்! நினைக்கும் போதே உடல் உதறியது.

“போ சர்வமகி... நீ இப்போது இருக்கும் நிலையில் உன்னால் எதையும் தெளிவாகச் சிந்திக்க முடியாது. போய் ரெஸ்ட் எடு. நீ சரியாகும்வரை உன் சகோதரர்கள் என் பொறுப்பு.” என்று அவன் கூற, அவள் மேலும்

தயங்கினாள்.

ஒரு கணம் யோசித்தவன், சோ◌ஃபாவை விட்டு எழுந்தான். தன் கரத்திலிருந்த விஸ்கி பாட்டிலை, அருகிலிருந்த டீ டேபிலில் வைத்துவிட், அவளருகே நெருங்கினான்.

அச்சத்துடன் இரண்டடி பின்நோக்கி வைத்தவளை அவன் பொருட்படுத்தாது, அவளுடைய வலது கரத்தை மென்மையாகப் பற்றி "கம் வித் மி..." என்றவாறு எங்கோ இழுத்துச் சென்றான்.

சர்வமகி தடுமாறியவாறு அவனுடன் செல்ல, அவளை ஒரு கண்ணாடியின் முன்னால் நிறுத்தினான்.

"அங்கே பார்..." என்றான் கண்ணாடியைச் சுட்டிக்காட்டி.

நிமிர்ந்து பார்த்தாள் சர்வமகி. அங்கே தெரிந்த தன் விம்பத்தைப் பார்த்ததும் அதிர்ந்தாள். இது தான்தானா என்கிற சந்தேகம் கூட அவளுக்கு எழுந்தது.

கன்னங்கள் இரண்டிலும், அடிபட்டதன் அடையாளமாக, ஐந்து விரல்கள் பதிந்திருந்தன. நடுங்கும் கரங்களால் தன் கன்னத்தை வருடிக்கொடுத்தாள் சர்வமகி. வருடிய கரங்களின் மணிக்கட்டிலும், மேல் கையிலும் அழுந்தப் பற்றிய கண்டல்களின் அடையாளங்கள். இரண்டு கரங்களையும், குறுக்காக தோள்களில் வைத்து காயங்களை வருடிக்கொடுத்தாள். விழிகளோ வேதனையில் நனையத் தொடங்கின. உதடோ, அடிபட்டதில் கிழிந்து இரத்தம் கண்டியிருந்தது. அதனையும் வருடிக்கொடுத்தாள். உடல் வலியைவிட, மனவலி அதிகமாக இருக்க, விரல்கள் மீண்டும் நடுங்கத் தொடங்கின.

வேகமாக சர்வமகியை பின்புறமாக நெருங்கியவன், தோளில் இருந்து வழிந்த டீசேரட்டை இழுத்து சரியாக்கியவாறு, அவள் தோள்களைப் பற்றி,

"இப்போ எதற்கு இந்த அழுகை... உன்னை இந்தக் கண்ணாடிமுன்னால் இழுத்து வந்ததற்குக் காரணம், இத்தனை காயத்தடன் உன் சகோதரர்களுக்கு முன்னால் போய் நின்றால், அவர்கள் பயப்படமாட்டார்களா?" என்றான் சற்றுக் கனிவாய்.

அவளோ, கண்ணாடியினூடாகவே அநேகாத்மனை விழிவிரித்துப் பார்க்க, பிடிவாதமாக அந்த விழிகளின் அழகில் விழாது தன்னைக் காத்துக்கொணடவனாக, அவள் தோள்களில் இருந்து தன் கரங்களை விலக்கி,

"வேண்டுமானால் தொலைபேசியில் பேசிப்பார்க்கிறாயா...?" என்றதும், அவள் முகத்தில் தெரிந்து மறைந்த மலர்ச்சி, அவள் விருப்பைக் கூற, மறு பேச்சுப் பேசாமல் தன் கைபேசியிலிருந்து அவள் வீட்டிற்கு டயல் பண்ணியவாறு,

“கம் சிட் டவுன் ஃபெர்ஸ்ட்...” என்றவாறு அவளை மீண்டும் முன்னறைக்கு அழைத்துவந்தான். அவளை ஜன்னலுக்கு அருகேயிருந்த சோஃபாவில் அமர்த்திவிட்டு, தொலைபேசியை அவளிடம் நீட்டினான்.

அவனுககு அவர்களின் வீட்டு இலக்கம் எப்படித் தெரியும்? யோசனையுடன் சோஃபாவில் அமர்ந்தவாறே, அவனுடைய தொலைபேசியை வாங்கிக் காதில் பொருத்தினாள்.

“ஹலோ... யார் பேசுவது...” என்று மறு பக்கமிருந்து தேவகியின் குரல் கேட்டது.

“நா... நான் அக்கா பேசுகிறேன் தேவகி...” என்றதும்,

“ஹாய் அக்கா... நீ போன வேலை முடிந்ததா? நீ அனுப்பிய வசந்தி நல்ல பெண்மணி. நம்முடன் நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு கீழ் அறையை ஒதுக்கிக் கொடுத்தோம். உன்னுடைய வேலை எப்போது முடியும்? எப்போது வீட்டிற்கு வருவாய்? இங்கே அபிதன்தான் உன்னைக் கானவில்லை என்று சிணுங்கிக் கொண்டிருந்தான்... நேற்று மாலை போனவள்... திடீர் என்று வசந்தி என்ற ஒரு பெண் வந்து நின்றதும் பயந்துபோனோம்... பிறகு தான் அப்பாவின் அலுவலாகப் போயிருப்பாயோ என்று சமாதானப் படுத்திக்கொண்டோம். இன்றைக்காவது வருவாயா அக்கா? அல்லது நாளைக்குத்தான் வருவாயா?” என்றாள் தேவகி.

சர்வமகிக்கு ஏனோ தொண்டையைக் கரித்தது. “நேற்று மாலையா? அப்படியானால்...” யோசனையுடன் ஜன்னல் திரைச்சீலையை விலக்கிப் பார்த்தாள். சூரியன் மறைந்துகொண்டிருந்தது.

கிட்டத்தட்ட இருபது மணிநேரங்களுக்கும் மேலாக மயங்கியிருக்கிறாள்.

“ஹலோ... அக்கா... அங்கேதானே இருக்கிறாய்?” என்றாள் தேவகி.

“ய... யா... தம்பி எங்கே தேவகி?” என்றாள் இதயம் கசங்க.

“இங்கே பக்கத்தில்தான் இருக்கிறான். பொறு கொடுக்கிறேன்...” என்றவள் தொலைபேசியை அபிதனிடம் நீட்டினாள் போலும், மறு பக்கம் சற்று அமைதியாக இருந்தது.

“அக்கா... எங்கேக்கா இருக்கிறாய்? ஏன் நேற்று முழுவதும் வரவில்லை... நாங்கள் எல்லோரும் காத்துக்கொண்டிருந்தோம்... எனக்கு ஹோம் வேர்க் செய்யவேண்டும்...” என்று சிணுங்கினான் தம்பி. தொண்டையைக் கரிக்கச் சிரமப்பட்டுத் தன் குரலைச் சமப்படுத்தியவள்,

“கண்ணா... அக்கா... விரைவாக வந்துவிடுவேனடா... கொஞ்சம்

வேலை... அதுதான்... வீட்டிற்கு வரமுடியாமல் போய்விட்டது... ஏதாவது சந்தேகமிருந்தால் சின்னக்காவிடம்; கேளடா..." என்றாள் கனிவுடன்.

"யாருமே சொல்லித் தருக்கிறார்கள் இல்லையக்கா... அப்படியே சொல்லித்தந்தாலும், இந்த தேவகியும், மாதவியும் தலையில் குட்டுகிறார்கள்... நீ வாக்கா... இந்தத் தடியன் பிரதாப் புத்தகத்தைக் கொண்டு சென்றால் ஓடிவிடுகிறான்..." என்றான் தம்பி குறையுடன்.

"ப்ளீஸ்டா கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கொள்... அக்கா சீக்கிரம் வந்துவிடுவேன்... என் தங்கமில்லையா?" என்று அவள் கனிவுடன் கேட்க, மறு புறம் அமைதியானது.

"ஹலோ..." என்றாள் சர்வமகி பதட்டமாக. மறு புறம் மாதவி வந்தாள். தொடர்ந்து பிரதாப் பேசினான்.
அனைவருக்கும் நல்லபிள்ளைகளாக இருங்கள் என்று புத்திமதி கூறிவிட்டு, தெலைபேசியை அணைத்தாள் சர்வமகி.

அவள் தன் சகோதரர்களுடன் பேசுவதையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் அநேகாத்மன்.
தன் சகோதரர்களுடனேயே இத்தனை அன்பாகவும், இத்தனை ஆசையாகவும் பேசுகிறாளே... இவளுடைய சொந்தக் குழந்தையிடம் இதை விட அன்பாக அல்லவா நடந்துகொள்வாள்.

அவனுடைய மனக் கண்ணில் சர்வமகி ஒரு குழந்தையைத் தாய்மை பொங்கத் தூக்கி வைத்திருக்கும்; கோலம் வந்து போனது. அந்தக் குழந்தையின் முகத்தில் தன் சாயலைக் கண்டவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

அவனுக்கு என்னவாகிவிட்டது? தன் தந்தையின் சாவுக்குக் காரணமானவனின் மகள் வயிற்றில் அவன் குழந்தை வளர்வதா? நோ... நெவர்... அவனுக்கு அவள் மீது ஒரு பற்றிருப்பது உண்மைதான். அதற்காக, கண்டமேனிக்குக் கற்பணை செய்ய முடியுமா? அதுவும் அவளை, சீச் சீ... ஒருக்காலும் நடக்காது... நடக்கவும் கூடாது...

அவனையும் மீறி அவள் உருவத்தையும், உள்ளத்தையும் அவன் ரசிக்கத் தொடங்கியதை ஒரு கையாலாகாத் தனத்துடன் உணர்ந்துகொண்டான் அநேகாத்மன்.

தொடரும்....

நிலவு 12

இரவு பன்னிரண்டு மணிவரை உடல் வலியினாலும், மன வலியினாலும், தூங்காமல் படுக்கையில் கிடந்தாள் சர்வமகி. அவள் மனக்கண்ணோட்டத்தில், அநேகாத்மனே நிறைந்திருந்தான்.

அவள் எதிரியின் மகள் என்று தெரிந்தும், அவளுக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்தானே. அதற்குக் கைமாறாக என்ன செய்யப்போகிறாள். அதே நேரம், தன் தந்தைக்குத் தண்டனை வாங்கித்தருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும், அவன் வீட்டில் தங்கியிருக்கவும் அவளால் முடியவில்லை.
எப்படியாவது விடிவதற்குள்காகக் கிளம்பிவிடவேண்டும் என்று எண்ணியவாறு, மெதுவாகக் கண்ணயரத் தொடங்கினாள் சர்வமகி.

திடீர் என்று அவளுடைய தந்தை வாசுதேவன் கைகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, பல காவலர்களால் இழுத்து வரப்பட, இவள் கலவரத்துடன் தன் தந்தையை நோக்கி ஓட முயன்றாள். ஓடியவளைத் தடுத்து நிறுத்தினான் அநேகாத்மன்…

“லீவ் மீ… ஐ ஹாவ் டு கோ… அப்பா…” என்று இவள் கதற முயன்றாள். ஏனோ குரல் வரவில்லை. இழுத்து வரப்பட்ட தந்தை, இவள் முன்னால் நிறுத்திவைக்கப்பட, கலங்கிய விழிகளுடன்,

“கண்ணம்மா… நான் போய்வருகிறேன்… தம்பி தங்கையை பார்த்துக்கொள்…” என்றார்.

“நோ… நோப்பா… நீங்கள் எங்கும் பொகமுடியாது… நான் போக விடமாட்டேன்…” என்றவாறு அவருடைய கரத்தைப் பற்ற முயல, இப்போது அந்த சங்கிலி, அவள் கரத்தில் கட்டப்பட்டிருந்தது.

அதிர்ச்சியுடன், அந்த சங்கிலியை அவள் கழற்ற முயல,

“உன்னால் முடியாது…” என்றவாறு நெருங்கினான் அந்த ரட்ணபாலன். திடீர் என்று அவள் முகத்திற்கு நேராக ரட்ணபாலனின் முகம் நெருங்கிக்கொண்டிருக்க, அவன் முகத்தைத் தள்ளுவதற்காகக் கரங்களைத் தூக்கமுயன்றாள் சர்வமகி. அவளுடைய இரு கரங்களும் சங்கிலியால் பிணைத்திருந்ததால், கையை சிறிதும் அசைக்கமுடியிவில்லை. துடித்துப் பதைத்து, அவனிடமிருந்து விலகமுயன்றாள் அவள்.

அவனுடைய கால்களோ, அவளுடைய கால்களைப் பின்னிப் பிணைந்து அழுத்திக்கொள்ள, இவள் பதறினாள். அவனோ விகாரச் சிரிப்புடன், அவள் அணிந்திருந்த ஆடைகளைக் களைய முயல, இவள் தடுத்தவாறே,

“நோ… நோ… லீவ் மீ… ப்ளீஸ்… லீவ் மீ… லெட் மி கோ… ஆத்மன்… ஹெல்ப் மீ… ப்ளீஸ்… லெட் மி கோ…
ஆத்மன்… எங்கே இருக்கிறீர்கள்…” என்று இவள் பெரும் குரல் எடுத்து அலற,

விருந்தினர் அறையில், ஆழ்ந்த உறக்கத்தலிருந்த அநேகாத்மனுக்கு, எங்கோ ஒரு பெண் அலறும் சத்தம் கேட்கப் படுக்கையை விட்டுத்

துள்ளி எழுந்தான்.

உன்னிப்பாக அந்த அழுகுரல் எங்கேயிருந்து வருகிறது என்று அவதானிக்க, அவனுடைய அறையிலிருந்துதான் வருகிறது என்பதை உணர்ந்ததும், கதிரையில் விட்டெறிந்த டி சேர்ட்டைப் போட்டுக்கொண்டே, மின்னல் வேகத்தில் தன் அறையை நோக்கி ஓடினான்.

இருட்டாக இருந்த அறைக்கு மின்விளக்கைப் போட்டு வெளிச்சமாக்கிக் கட்டிலைப் பார்த்தான்.

அங்கே சர்வமகி, இரண்டு கரங்களையும் ஆட்டி எதிடமிருந்தோ தப்புவதுபோலத் துடித்துக்கொண்டிருக்க, பதறிக்கொண்டு அவளருகே விரைந்தான்.

அலறித் துடித்த உடலிலிருந்து அவள் ஏதோ தீய கனவு காண்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டவன்,

“மகி... லுக் அட் மி... மகி... வேக்கப்... இட்ஸ் ஜெஸ்ட் எ ட்ரீம்...” என்று அவளுடைய கன்னத்தைத் தட்டியவாறு அழைத்தான் அநேகாத்மன்.

அவனுடைய குரல், எங்கோ தொலைவில் கேட்கத் தன் கரங்களைத் தூக்கி, அவனைப் பற்ற முயன்றவாறு,

“ஆத்மன்... சேவ் மி... என்னைக் காப்பாற்றுங்கள்... ப்ளீஸ்...” என்று இவள் மேலும் அழத் தொடங்க,

“மகிம்மா... இதோ பார்... ஆத்மன்தான்... விழித்துக்கொள்... மகி... வேக்கப்...” என்றவாறு உலுக்கினான்.

கனவால் விளைந்த பயத்தால், அவளுடைய உடல் முழுவதும் வியர்வையால் நனைந்திருக்க, அதனைத் துடைப்பதற்காகத் துவாய் எடுக்கலாம் என்று அவன் எழ முயல, அவளுடைய டீ சேர்ட்டை அழுந்தப் பற்றியவள்,

“சேவ் மீ... சேவ் மீ...” என்று திரும்பத் திரும்பச் சொல்ல, அவளை விட்டு விலகும் எண்ணத்தைக் கைவிட்டவனாக, மீண்டும், அவளருகே அமர்ந்தான். ஆறாக வழிந்த வியர்வையைத் தன் கரத்தாலேயே; துடைக்கமுயன்றான்.

நெற்றி, கன்னம், கழுத்து என்று துடைத்தவன், அந்த வியர்வையைத் துடைப்பதற்குத் தன் கரம் போதாது என்பதைப் புரிந்துகொண்டவனாகத், தன் டீ சேர்ட்டை வேகமாகக் கழற்றி, அதனைக் கொண்டு, அவள் முகம் கழுத்து, மார்பு எனத் துடைத்து விட்டவாறே,

“மகி... வேக்கப்... இட்ஸ் ஜெஸ்ட் எ ட்ரீம்... கண்ணைத் திற...” என்று கூறிக்கொண்டிருந்தான். இது எதையும் உணராது அவள் கனவை விட்டு

வெளியேற முடியாது தவித்துக்கொண்டிருக்க, இவனோ இவளைத் தேற்ற முயன்ற தோற்றுக்கொண்டிருந்தான்.

திடீர் என்று சர்வமகியிடமிருந்து மூச்சு வெளிவராது தடைப்பட அவள் திணறினாள். கனவை நெஜம் என்று நம்பியவள், இரண்டுக்கும் வேறுபாடு புரியாது, மூச்சுவிட மறந்திருந்தாள் சர்வமகி.;. உடனே அவள் நிலையைப் புரிந்துகொண்டவன்,

“மகி… வேக்கப்… உனக்கொன்றுமில்லை… இது வெறும் கனவு… யு ஆர் சே.ஃப்… “ என்று அவளுடைய தோள்களைப் பற்றிக் குலுக்கினான். அவளிடமிருந்து எந்த மாற்றமும் வராமல், மேலும் உடல் துடிக்க, “மகி… மகி… டேக் எ ப்ரீத் டாமிட்…” என்றவன், பதட்டத்தில், அவளுடைய வாயைத் திறக்க முயன்றான். என்னதான் வாயைத் திறந்தும், அவளால், மூச்செடுக்க முடியவில்லை.

“நோ… நோ… டோன்ட் டூ திஸ் டு மி… டேக் எ ப்ரீத்… அன்ட் வேக்கப் மகி…” என்று பதறியவன், இனியும் அவளை விளிப்படைய வைக்கமுடியாது என்று புரிந்தவனாக, இறுதி முயற்சியாக, அவளுடைய கன்னத்தில் ஓங்கி அறைந்திருந்தான்.

மறு கணம், “ஹா…” என்கிற ஓசையுடன் சர்வமகி பெரிய மூச்சொன்றை எடுத்தவாறு விழிகளைத் திறந்தாள்.

அவள் நிலையை உணர்ந்தவன், அதற்கு மேலும் தாங்கமுடியாதவனாக, அவளை இழுத்துத் தன்னோடு இறுக அணைத்துக்கொண்டான்.

“ஏன்டி… ஏன் இப்படி செய்கிறாய்… என்னையே உன்னை அடிக்கவைத்துவிட்டாயே…” என்றவன்,
இப்போது நடுங்குவது அவன் முறையாயிற்கு… அவனுடைய முகம், அவளுடைய கழுத்து வளைவில் புதைய, வலக்கரம், அவளுடைய முதுகையும், இடக்கரம், அவளுடைய பின்புறக் கழுத்தையும் இறுகப் பற்றியிருந்தது.

விட்டிருந்தால், அவளைத் தனக்குள்ளேயே புதைத்துக்கொள்பவன் போலத் நெருக்கியிருந்தான் அநேகாத்மன்.

எத்தனை நேரம் அப்படியே இருந்தானோ, மீண்டும், அவளுடைய வியர்வை, இவனுடைய வெற்று மார்பில், படிய, கூடவே, அவள் சீரான மூச்சு எடுத்ததால், ஏறியிறங்கிய மார்பின் அசைவினைப் புரிந்துகொண்டவனாக, மெதுவாக சுயநினைவுக்கு வந்தான், அநேகாத்மன்.

அவளை மெதுவாக விலக்கியவன். அவளுடைய முகத்தைத் தன் கரத்தில் பற்றி,

“யு ஓக்கே…?” என்றான் மென்மையாக. அவளோ,

“அந்த ரட்ணபாலன்... என்னை...” என்றவளுடைய உதடுகள் பிதுங்க,

“ஷ்... இட்ஸ் ஓக்கே...” என்றவன், அப்படிய அவளைத் தன் கரங்ககளில் ஏந்தியவாறு படுக்கையை விட்டு எழுந்தான்.

அவளுக்கு இன்னும் தான் கண்டது, கனவா இல்லை நனவா என்று புரியாது கலங்கியிருந்ததால், அநேகாத்மனின் செயலை அவள் சிறிதும் உள்வாங்கவில்லை. கூடவே, அவனுடைய அருகாமை அவளுக்குப் பலத்த பாதுகாப்பைக் கொடுத்ததோ, அவனுடைய மார்பில் தனது முகத்தை வாகாகச் சாய்த்தவளின் வலது உள்ளங்கை, அவனுடைய அடர்ந்த முடிகொண்ட மார்பில் பதிந்தது.
அப்படியே அவளைத் தூக்கியவாறு, சமையல் அறைக்கு எடுத்து வந்தவன், அங்கிருந்த கதிரையில் அவளை மெதுவாக இருத்தினான்.

இப்போது ஓரளவுக்கு சர்வமகி சுயநினைவுக்கு வந்திருந்தாலும், அந்தக் கொடிய கனவிலிருந்து அவளால் வெளி வரமுடியவில்லை.

அவளுடைய நிலையைப் புரிந்துகொண்ட அநேகாத்மன், ஸ்டவ்வில் பானை வைத்து, ஃப்ரிஜிலிருந்த பாலை அதில் ஊற்றிச் காய்ச்சினான். அது நன்கு பொங்கிவர, அதில் மெடிக்கல் கபிநெட்டிலிருந்து ஒரு தூக்கமாத்திரையை கலந்து, குடிக்கும் அளவுக்கு அந்தப் பாலை ஆற்றி, அதை ஒரு கப்பில் ஊற்றி, அவளருகே கொண்டு வந்து அவளிடம் நீட்டினான்.

மறுக்காமல் அதை வாங்கியவளின் கரங்கள் நடுங்க, அவளுக்கு அருகே இன்னொரு இருக்கையைப் போட்டவன், அந்தப் பாலை அவளுக்குப் பருக்கிவிட்டான்.

முழுவதுமாக குடிக்கும் வரை, அவளுக்கு உதவியவன்,

“இப்போ எப்படியிருக்கு...” என்றான் அவள் முகத்தில் விழுந்த முடிக்கற்றைகளை, காதோரமாக ஒதுக்கிவிட்டவாறு.

இப்போது பயம் ஓரளவு நீங்கியிருந்தாலும், அந்தக் கனவின் தாக்கத்தினால், முற்றுமுழுதாக வெளிவரமுடியவில்லை.

அதே நேரம், அவளுடைய மேல் உதட்டில், மீசையெனக் கோடாகக் குடித்திருந்த பால் பதிந்திருக்க, தன் பிறங்கையால், அதைத் துடைத்துவிட்டவனின் விரல்கள், அவள் மென்மையான உதட்டையும் வருடிச் செல்ல, அந்த வருடலில், உடல் சிலிர்க்க, அந்த மென்மையில் கரைந்தவனாக ஒரு கணம் தன் விழிகளை மூடினான் அநேகாத்மன்.

மேலும், மேலும் அவ் மெல்லிய இதழ்களில், கரம்கொண்டு கவிபாடத் துடித்த மனதைப் பெரும் சிரமப்பட்டு அடக்கியவன், தன் கரத்தை நீக்கி, விழிகளைத் திறந்தான்.

அதே நேரம், அநேகாத்மனின் மெல்லிய வருடலில் ஒரு கணம் திகைத்தவள், அதிர்வுடன் அவனை விழித்துப் பார்க்க, அவனோ, தன் கண்களைப் பிடிவாதமாக, அவள் விழிகளுடன் கலக்காது, எங்கோ பார்த்துவிட்டுப், பின் திரும்பி சர்வமகியைப் பார்த்தவாறு,

“ஏதாவது சொல்லப்போகிறாயா?” என்றான் அநேகாத்மன் குரலில் தெரிந்த தடுமாற்றத்தை மறைத்தவாறு.

அநேகாத்மனின் கேளிவியால், தன்னிலை பெற்றவளுக்கு, அந்தக் கனவை நினைக்கும்போதே உடம்பு உதறியது.

“அந்த ரட்ணபாலன்… என் கரங்களை சங்கிலியால் பிணைத்து, என்னோடு… என்னோடு…| அதற்கு மேல் கூற முடியாதவளாக, மீண்டும் நடுங்க, வேகமாக அவளை நெருங்கி அமர்ந்தவன், அவள் தோள்களில் தன் கரங்களைப் பதித்து,

“மகி… லுக்.. லிசின் டு மி… ஹிஸ் சப்டர் வோஸ் ஓவர். டூ யு ஹியர் மி… அவனால் இனி உன்னை நெருங்க முடியாது… எப்போதுமே நெருங்க முடியாது… அவன் நிழல் கூட உன் மீது இனி படாது… ஐ ப்ராமிஸ் யு…” என்று அவள் மனதில் பதியவைக்க முயன்றவன், அவள் நாடியைப் பற்றி, அவள் முகத்தை நிமிர்த்தினான்.

“மகிம்மா… பிலீவ் மீ… இனி அவனால் உன்னை நெருங்க முடியாது… எப்போதும்?” என்றான் அவன் அழுத்தமாக.

“உண்மையாகவா?” என்றாள் இன்னும் சந்தேகம் மாறாதவளாக.

“நான் ஒரு போதும் தவறான வாக்கு கொடுத்ததும் இல்லை, தவறான சத்தியம் செய்ததும் இல்லை… அதனால் நீ என்னை முழுதாக நம்பலாம் சர்வமகி…” என்றான் அவன் சற்று அழுத்தமாக.
இப்போது அவளுடைய விழிகள் தூக்கத்தில் சொருகுவதற்குத் தயாராக, தன் இருக்கையை விட்டு எழுந்த அநேகாத்மன்,

“ஓக்கே… கம்… டைம் டு ஸ்லீப்…” என்றவன், மீண்டும் அவளைக் கரங்களில் ஏந்தி, அவனுடைய படுக்கையறைக்குக் கொண்டு வந்தான். அவனுடைய வலிமையான, பலம் மிக்க கரங்களுக்குள், குழந்தையெனப் பாந்தமாக ஒடுங்கியவள், நன்றாக உறக்கத்தின் வசத்தில் சிக்கியிருக்க, மெதுவாக அவளைப் படுக்கையில் கிடத்தினான் அனேகாத்மன்.

தூங்கிக்கொண்டிருந்தவளையே தன்னை மறந்து கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்தவன், நேரத்தைப் பார்த்தான். நேரம் ஒரு மணி என்றது கடிகாரம். நாளைக்கு அவனுக்கு முக்கிய கேஸ் ஒன்று இருந்ததால், சீக்கிரமாக எழுந்திருக்கவேண்டிய கட்டாயம்.

உடல் வேறு தூக்கத்திற்காக கெஞ்ச, மெல்லிய கொட்டாவி ஒன்றை கையிடுக்கில் வெளியிட்டவன், அவளுக்கு மேலாகப் போர்வையைப்

போர்த்திவிட்டு, மின்விளக்கை அணைத்துவிட்டு, அறையிலிருந்து வெளியே வந்தான்.

கவனமாக அறையை மூடாது, சற்றுத் திறந்து வைத்தவன், அருகேயிருந் விருந்தினர் அறைக்குள் நுழைந்து படுக்கையில் தொப் என்று விழுந்தான்.

சிறிது நேரம் சர்வமகியையும், அவள் கனவையும் அதனால் அவள் பட்ட அவஸ்தையையும் நினைததவாறே விழிகளை மூடியவன், பின்பு அப்படியே உறங்கியும் போனான்.

என்னதான் தூக்க மாத்திரை போட்டிருந்தாலும், ஆழ்மனதிலிருந்த வேதனை, சர்வமகியை நீண்ட நேரம் தூங்கவிடவில்லை. அதன் காரணமாக மறு நாள் சூரியன் எழும்புவதற்கு முன்பாகவே அவளுக்கு விழிப்பு வந்திருந்தது.

மசமசத்த நினைவில், முன்னிரவு நடந்தவை, அனைத்தும் கனவுபோலவே தோன்ற, எது நிஜம் எது கனவு என்று தெரியாமல் குழம்பியவள், மெதுவாக படுக்கையை விட்டு எழுந்தாள்.

குளியலறைக்குள் நுழைந்து தன் அத்தியாவசிய தேவையைப் பூர்த்திசெய்தவள், தன் முகத்தைக் குளிர் நீர் கொண்டு நன்கு அடித்துக் கழுவ, இப்போது, ஓரளவு தெளிவு பிறந்திருந்தது.

இனிக் கிளம்பவேண்டியதுதான், என்று முடிவெடுத்தவளுக்கு, இத்தனை உதவி செய்தவனிடம் சொல்லாமல் கிளம்ப முடியாதுதான். இருந்தாலும், ஏதோ பரிதாபத்திற்காக அவளை அழைத்து வந்து உதவி செய்தவனை மேலும் சிரமப்படுத்த அவளுக்கு மனமில்லை.

மேலும், தன் தந்தையைக் கொலைகாரன் என்று நினைக்கும் ஒருவன் வீட்டிலும் சுகமாகத் தங்கியிருக்க அவளால் முடியவில்லை.

துவிர, அவன் அவள் மீது இரக்கப்பட்டாலும், அந்த இரக்கம் மனிதாபிமானத்தால் வந்த இரக்கம்தானே. இல்லாவிட்டால், தன் தந்தையைக் கொல்லக் காரணமானவன் என்று நினைக்கும் ஒருவரின் மகளுக்கு இத்தனை உதவி செய்ய மனம் வராதே.

அவனுடைய நிலையில் அவளை இரு தினங்கள் தங்கியிருந்து செல்வதற்கு அனுமதித்ததே பெரிய காரியம். விருந்தினரை உபசரிப்பது போல உபசரி;த்தவனுக்கு மென் மேலும் சிரமம் கொடுக்க முடியுமா?

உடனேயே கம்பிவிட்டாள் சர்வமகி.

கிளம்பும் போது அந்த அறையில் கிடைத்த ஒரு வெற்றுத்தாளில் எதையோ கிறுக்கினாள். அதைப் பத்திரமாகப் பறந்துவிடாதவாறு மேசை விளக்கின் கீழே செருக எண்ணியவள், தன் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த ஒன்றரைப் பவுன் சங்கிலியைக் கழறினாள்.

அவளிடம் தற்போது பெறுமதிமிக பொருள் இருக்கிறது என்றால் அது இந்த நகை மட்டுமே. சங்கிலியைக் காகிதம் பறக்காதவாறு அதன் மீது வைத்தாள். பெரும் நிம்மதியுடன் ஐந்து மணி அடிப்பதற்குள்ளாகத் தன் வீடுநோக்கிக் கிளம்பிவிட்டாள் சர்வமகி.

கிளம்பியவளுக்கு, அப்போதுதான் அவள் அணிந்திருந்த ஆடையின் நிலை புரிந்தது. அப்படியே போகமுடியாதே… என்ன செய்யலாம் என்று எண்ணியவளாக, அவனுடைய கபேர்டைத் திறந்தாள். முதலில் அவள் கண்களுக்குப் பட்டதே, அவனுடைய நீண்ட கோர்ட்தான். நிச்சயமாக அவளுடைய கணுக்கால் வரையும் அது நீண்டிருக்கும். நிம்தியுடன் அதைக் கரங்களில் எடுத்துப் போட்டுக்கொண்டாள்.

அநேகாத்மனின் வாசைன அதிலும் இருந்ததோ. சற்று மூச்சை இழுத்து சுவாசிக்க, அவளையும் அறியாது, அச்சம் கரைந்துபோக, அருகேயிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். அந்தக் கோர்ட்டுக்குள் முற்றுமுழுதாக அவள் புதைந்துபோயிருந்தாள். கிட்டத்தட்ட மூன்றுபேர் சர்வசாதாரணமாக அதற்குள் புகுந்துகொள்ளலாம்.

அவளுக்குத் தன் உருவத்தைப் பார்க்கும்போது, அந்த நிலையிலும் நகைப்பு வந்தது. கத்தரித்தோட்டத்து வெருளி கூட, இத்தனை பெரிய கோர்ட் போட்டிருக்குமா தெரியாது. மேல்லிய நகைப்புடன், அந்தக்; கோர்ட்டைத் தன்னைச் சுற்றி இறுக்கிப் பிடித்தவாறு, அந்த வீட்டை விட்டு வெளியேறினாள் சர்வமகி.

நிலவு 13

விருந்தினர் அறையில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அநேகாத்மனின் செவியில் கைத்தொலைபேசியின் கிண்கிணி ஓசை விழச் சிரமப்பட்டுத் தன் விழிகளைத் திறந்தான். மீண்டும் விழிகள் சோர்வில் மூட, அவன் உறக்கத்தை மீண்டும் குலைப்பதுபோலக் கைத் தொலைபேசி சிணுங்கியது.

“டாமிட்…” என்று முணு முணுத்தவன், கை நீட்டித் தொலைபேசியை எடுத்துக் காதில் பொருத்தினான்.

“ஹலோ சார்… வசந்தி பேசுகிறேன்…” என்று மறு புறமிருந்து குரல் வர, வேகமாகப் படுக்கையைவிட்டு எழுந்தான் அநேகாத்மன்.

“என்ன வசந்தி? எனிதிங் ரோங்? அங்கே ஏதாவது பிரச்சனையா என்றான் படபடப்புடன்.

“நோ… நோ சார்… நான் வீட்டிற்குப் போகப்போகிறேன்… உங்களுக்கு நன்றிசொல்லத்தான் கால் பண்ணினேன்…” என்றாள் வசந்தி.

“வட்… வீட்டுக்குப் போகப்போகிறாயா? அப்படியானால் சர்வமகியின்சகோதரர்களுடன் யார் தங்குவது?” என்றான் சற்றுக் கோபத்துடன்.

“அது தான் சர்வமகியே வந்துவிட்டார்களே சார்... பிறகு நான் எதற்கு அங்கே தங்குவான்?” என்றாள் வசந்தி புரியாமல்.

“வட்...” என்றவன் வேகமாகப் படுக்கையைவிட்டு எழுந்தான். கடகடவென்று அவனுடைய அறைக் கதவைத் திறந்து பார்த்தான். அறை வெறுமையாக இருந்தது. ஏனோ மனம் துணுக்குற்றது.

“ஓ... ஓக்கே வசந்தி... தாங்ஸ்... உனக்குரிய பணத்தைக் கொடுத்து அனுப்பிவிடுகிறேன்...” என்றவனுக்கு அந்த அறையைப் போலவே அவன் மனமும் வெறுமையானது போன்ற உணர்வில் தவித்துப்போனான்.

எரிச்சலுடன்,

“டாமிட்...” என்றவாறு, கரத்திலிருந்த கைபேசியை மடித்து அருகேயுள்ள மேசையியில் விட்டெறிய, அது சுழன்று சென்று, மேசைவிளக்கில் முட்டி நின்றது.

அது முட்டி நின்ற இடத்திற்கு அருகே மடித்துவைக்கப்பட்டிருந்த ஒரு பேப்பர் கண்ணை உறுத்த, வேகமாக அதனருகே சென்றான்.

அந்தக் காகிதத்தின் மேல் மின்னிக்கொண்டிருந்த தங்க நகையை வியப்புடன் கரங்களில் எடுத்துப் பார்த்தான். புருவம் சுருங்க அதைக் கைக்குள் போட்டுப் பொத்திக் கொண்டவன் மறு கரத்தால் கடிதத்தை எடுத்துப் பிரித்தான்.

“பெற்ற தாயையும், உற்ற சுற்றத்தையும் தெரியாதவர்கள் போல நடந்து கொல்லும் இந்த உலகத்தில், எதிரியின் மகள் என்று தெரிந்தும் உதவிக்கரம் நீட்டிய உங்கள் நல்ல எண்ணத்திற்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேனோ தெரியாது. இப்போது நான் உங்கள் எதிரியின் மகளாக வெளியேறுகிறேன். காலம் என் தந்தைக்கு நல்ல தீர்ப்பைக் கூறும். என் தந்தை குற்றமற்றவர் என்பதை நிருபித்த பின்பு உங்கள் முன்னால் நல்ல தோழியாக வருவேன்.

பி.கு. நீங்கள் செய்த உதவிக்கு விலைமதிப்பு என்பது கிடையாதுதான். இருந்தாலும் எனக்காக நீங்கள் செலவு செய்வதை நான் விரும்பவில்லை. என்னால் இப்போதைக்கு இது மட்டும்தான் தர முடிகிறது. ஏற்றுக் கொள்ளுங்கள்.

சர்வமகி

அந்தக் கடிதத்தையே வெறித்துப் பார்த்தவன், கோபம் கொண்டவனாக அதைக் கசக்கிக் கரங்களில் பொத்தினான்.

“ஹொ டெயர் யு...” என்று சினந்தவனின் விழிகளுக்கு அவன் படுக்கை தென்பட்டது. முதன் முதலாக அவன் அறையில் ஒரு பெண்... எத்தனையோ பெண்களுடன் அவனுக்குப் பழக்கம் இருந்தாலும், ஒரு

போதும் அவர்களை அவன் வீட்டிற்குள் அனுமதித்ததில்லை. அவர்களுடைய வரவும், சேவையும் வீட்டிற்கு வெளியே மட்டுமே. ஆனால் சர்வமகியை மட்டும் அவன் எப்படி வீட்டிற்குள் அனுமதித்தான் என்பது அவனுக்கு விடையில்லாக் கேள்வியே.

அவன் படுக்கை, ஒழுங்காக விரிக்கப்பட்டிருந்தாலும், அதில் அங்கும் இங்குமாக மெல்லிய இரத்தக்கறை. முன்தினம் நடந்தவை படமாக மனக்கண்ணில் ஓட, தன்னையும் மறந்து அந்த இரத்தக் கறையை வருடிக்கொடுத்தவன், பின்எதிலிருந்தோ தப்புபவன் போன்று, அந்தப் படுக்கை விரிப்பை இழுத்து எடுத்துத் தூற எறிந்தான்…

"டாமிட்... டாமிட்... டாமிட்... ஏன்... ஏன் அப்படிச் செய்தாள்... அவனிடம் நேருக்கு நேர் சொல்லிவிட்டுப் போகக் கூடவா அவளால் முடியவில்லை?" என்று எண்ணியவன், கோபம் அடங்காதவனாக அந்தப் படுக்கையிலேயே விழுந்தான்.

அந்தப் படுக்கையில் அவளுடைய வாசைன மிச்சமிருந்தது. கையிலிருந்த தங்கச் சங்கிலியைத் தூக்கி உற்றுப் பார்த்தான்.

அவளுடைய உருவம் மனக்கண்ணில் வந்தது. சடார் என்று எழுந்தமர்ந்தான்.

'எப்படிப் போயிருப்பாள்… அந்த அரைகுறை ஆடையுடன்… எத்தனை பேர் அவளைப் பார்த்திருப்பார்கள்… அவளுடைய வழுவழுத்த கால்களும், பட்டையொத்த தோள்களும்…' ' நினைக்கும்போதே, உடல் பற்றியெரிந்தது.

"சோ வட்… யார் எப்படிப் பார்த்தால் எனக்கென்னன. ஆ◌்ப்டரோல் அவள் என் எதிரியின் மகள்… அவளைப் பற்றி நான் எதற்குக் கவலைப்படவேண்டும்?' என்று தனக்குள் எண்ணியவன், அவளுக்காக இரக்கப்பட்ட மனத்தைச் சபித்தவாறே அந்தச் சங்கிலியைத் தூக்கி வீசினான். அது பறந்து சென்று தரையில் விழுந்தது.

அது போலவே, அவளுடைய எண்ணங்களையும் அவன் தூக்கி வீசினான். இல்லை இல்லை வீசியதாக நினைத்தான்.

யாருக்கு வேண்டும் அவளுடைய நகை. நான் என்ன பணத்துக்கு வழியில்லாமலா இருக்கிறேன்...' என்று சினந்தவன் ஆழ்ந்த மூச்சை எடுத்து, தன்னை சமப்படுத்த முயன்றான். இப்படியே இருந்தால், செய்யவேண்டிய வேலைகளை யார் பார்ப்பது. புரிந்துகொண்டவனாகக் கட்டிலை விட்டு எழுந்தான்.

கபேர்டில் இருந்து துவாயை இழுத்து எடுத்தவனுக்கு, வெறுமையான ஹங்கர் கண்ணில் பட, வியப்புடன் அதை எடுத்துப் பார்த்தான்.

அவனுடைய கோர்ட்டைத் தாங்கியிருந்த ஹங்கர். அதிலிருந்த கோர்ட்டிற்கு என்னவாயிற்கு. உடனே அதற்கான காரணத்தையும்

யூகித்துக்கொண்டான் அநேகாத்மன். ஏனோ கோபத்திற்குப் பதில் பெரும் நிம்மதியயே தோன்றியது. அது வரை எரிச்சலில் தத்தளித்திருந்த அவன் மனம் சற்று அமைதியடைந்தது.

‘நல்லவேளை… அவள் அந்த அரைகுரை ஆடையுடன் அப்படியே போகவில்லை.’ என்று எண்ணியவன் நிம்தியாகத், தன் குளியலறைக்குள் நுழைந்தான்.

ஷவரைத் திறந்துவிட்டு, அதன் கீழ் நின்றான். மீண்டும் அவளின் நினைவு அவனை ஆக்ரமித்தது. முன்னிரவு அவள் கண்ட கனவும், அதனால் அவள் பட்ட அவஸ்தையும், மனக்கண்ணில் வந்து போனது. சுவரில் தன் இரு கரங்களையும் பதித்து ஊசியெனக் குத்திய குளிர் நீரில் தன் முகத்தைப் பதித்தான். அவள் நினைவுகளும் சேர்ந்து அவளை ஊசியாகக் குத்த, அந்த நீர் அவனைக் கழுவியதுபோலவே, அவளுடைய நினைவுகளையும் கழுவிச்செல்லாதா என்று ஏங்கினான். என்ன ஏங்கி என்ன பயன்….? மனம் மீண்டும் முடிந்துபோனது என்று எண்ணிய முற்றுப்புள்ளியைக் கமாவாக்கிவிட்டு, இவனைப் பார்த்துச் சிரித்தது.

“ஆத்மன்… யு ஆர் வேஸ்ட்… டோட்டலி வேஸ்ட்….” என்று தன்னையே சபித்தவாறு, குளித்து விட்டு வெளியே வந்தான்.

இன்று அவன் முக்கியமாக ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக வாதாடுவதற்கு கோர்ட்டிற்குப் போகவேண்டியிருந்தது. அவன் இப்போதிருக்கும் மனநிலையில் எங்கும் போகாமல் வீட்டிலேயே தங்கிவிடவேண்டும் என்று எரிச்சல் தோன்றியது. ஆனால் அவனால் அப்படி செய்யமுடியாதே. அவனையே நம்பியிருக்கும் அந்தப் பிரதிவாதியை அம்போ என்று கைவிட முடியாதே.

தன் லப்டப்பையும், ஒரு சில ஃபைல்களையும் எடுத்துவிட்டுக் கிழம்பியவனின் காலில் எதுவோ தட்டுப்பட, குனிந்து பார்த்தான்.

அவன் எறிந்த சங்கிலி. ஏதோ தப்பு செய்தவன் போலக் குனிந்து அதைக் கரங்களில் எடுத்து உற்றுப் பார்த்தான். சற்று மெல்லிய சங்கிலிதான். அதில் எஸ் என்னும் எழுத்தில் வெள்ளைக் கற்கள் பொறித்த பென்டன் தொங்கிக்கொண்டிருந்தது.

மீண்டும் அதைக் கரத்தில் அடக்கியவன், அதைச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு தன் கார் நோக்கிச் சென்றான்.

தொடரும்...

நிலவு 14

இரண்டு கிழமைகளுக்குப் பிறகு, அன்றுதான் சர்வமகியின் தந்தைக்குத் தீர்ப்புக் கூறும்நாள்.

இறந்து போனது, உலகம் போற்றும், ஒரு பெரிய தொழில் அதிபர் என்பதாலும், அவரின் மகனே அவருக்காக வாதாடப்போவதாலும், அனைத்துப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் அந்தக் கொலைவழக்கைப் பற்றியே செய்திகளைத் தாங்கிவந்தன.

எல்லா பத்திரிகைகளும், சர்வமகியின் தந்தைதான் கொலையாளி என்பது போலப் பிரசுரித்திருக்க, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரின் முகங்களும் வாடின.

யாரிடம் போய் முட்டிக் கூற முடியும்? அப்படியே கூறினாலும் நம்பவா போகிறார்கள். ஏழையின் பேச்சு அம்பலம் ஏறாதே... பெரும் வேதனையுடன் கோர்ட்டிற்குக் கிளம்பினாள் சர்வமகி.

எப்படியோ சர்வமகி நடராஜனின் உதவியுடன், ஒரு வக்கீலைப் பிடித்திருந்தாள். அந்தாளுக்கு வழமைக்கு அதிகமாகவே பணம் கொட்டவேண்டியிருந்தது. ஆரம்பத்தில் அநேகாத்மன் சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால், அவர் தயங்கத்தான் செய்தார்.

எப்படியோ, அவள் அதிகமாகக் கொடுப்பதாகக் கூற, சம்மதித்துவிட்டார்.

ஆனாலும் அவள் அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. அவளுக்குத் தந்தையை எப்படியாவது வெளியே கொண்டுவரவேண்டும். அதற்கு விலையாக எதைக் கொடுக்கவும் தயாராக இருந்தாள்.

தேவகியும், மாதவியும் அவளுடன் கோர்ட்டிற்கு வருவதாகக் கிளம்ப, உடனே அதற்கு மறுத்துவிட்டாள் சர்வமகி. அவர்கள் வருவதால் ஏதாவது மாறப்போகிறதா என்ன? இல்லையே... தற்போது தந்தை இருக்கும் நிலையைக் கண்டால் அவர்களால் நிச்சயமாகத் தாங்கமுடியாது. அவர்களின் வேதனை அதிகரிக்குமே தவிர, இம்மியும் குறைந்துவிடப்பொவதில்லை. அதைவிட, தான் ஒருத்தியே சமாளிப்பது சிறந்தது என்பதால், தனியாகவே கிளம்பிவிட்டாள்.

சர்வமகிக்கு, ஓரளவு, இந்தக் கேசில் ஜெயித்துவிடுவோம் என்கிற நம்பிக்கையிருந்தது. தந்தை கொலைசெய்யவில்லை என்பதை எந்த அளவுக்கு உறுதியாக நம்பினாளோ, அந்த அளவு உறுதியாகத் தன் தந்தை வெளியே வந்துவிடுவார் என்றும் அவள் நம்பினாள்.

என்னதான் தைரியமாக இருக்க முயன்றாலும், கோர்ட்டிற்குள் நுழையும்போதே சர்வமகியின் சர்வமும் நடுங்கத் தொடங்கியது. கால் பின்ன, உள்ளே நுழைந்தவள் கிடைத்த இருக்கையில் அமர்ந்தாள். மெது மெதுவாக ஒவ்வொருவராக உள்ளே வரத் தொடங்கினர். உள்ளம் நிறைந்த அச்சத்துடன், அடுத்து என்ன நடக்குமோ என்கிற பயமும் சேர, சர்வமகி விறைத்துப்போய் நிலத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அதனால் உள்ளே யார் யார் வந்தார்கள் என்பதை அவள் கவனிக்கவில்லை.

திடீர் என்று அங்கே கூடியிருந்தவர்களிடம் ஒரு பரபரப்புத் தெரிய, சர்வமகி நிமிர்ந்தாள்.

அங்கே கூடியிருந்தவர்களைக் கண்டதும் ஒரு நிமிடம் மருண்டவள், தொலைவில் தந்தையை இரு காவல்துறை அதிகாரிகள் அழைத்துவருவதைக் கண்டதும், தொண்டை அடைக்கத் தன் தந்தையைப் பார்த்தாள்.

வாசுதேவன் மிகவும் மெலிந்திருந்தார். ஆனாலும் கோர்ட் சூட்டுடன் மழிக்கப்பட்ட தாடியுடனும் பார்க்கும்பொது ஒரு குற்றவாளியைப் போலவே தெரியவில்லை.

நேராக நடந்த வாசுதேவனின் விழிகள் நாலாபுறமும் ஆவலுடன் சுழன்றன. அங்கே தன் மகளைக் கண்டதும், அவர் விழிகள் மகிழ்ச்சியில் மின்னின. அவளருகே வந்ததும் சற்றுத் தயங்கி நின்றார். கலங்கிய தன் மகளுக்கு ஆறுதல் கூறவேண்டும்போல உள்ளம் பரபரத்தது. ஆனால் அது முடியாதே. தவிர, இவள்தான் என் மகள் என்று எல்லோருக்கும் தண்டோரா போட்டுச் சொல்லவெண்டியிருக்குமே. அவர் கொலை செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் அது நிருபிக்கும் வரை சந்தேகப்பார்வை அவர் மீது நிச்சயமாக இருக்குமே. அந்தச் சந்தேகம் தன் மகளின் மீதும் விழவேண்டுமா?

வேதனையில் முகம் சுருங்க, அதை மகளுக்குக் காட்டாது, தன் விழிகளை மூடித் திறந்து அவளை அமைதிப் படுத்த முயன்றார். அவர் விழியசைவைப் புரிந்து கொண்ட மகளோ, மெல்லிய புன்னகையை சிந்த, அதில் திருப்திப் பட்டவராகத் தன் இடத்திற்குச் சென்று அமர்ந்தார்.

மீண்டும் பரபரப்பு அங்கிருந்தவர்களிடமிருந்து வர, சர்வமகி திரும்பிப் பார்த்தாள்.

அவன்தான் அநேகாத்மன், தன்னுடைய கம்பீரநடை குறையாமல், அங்கிருந்தவர்கள் அனைவரையும் சின்னதாக்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தான்.

வந்துகொண்டிரந்தவன், ஒரு ஓரமாக அமர்ந்திருந்த சர்வமகியைக் கண்டதும், அவனுடைய வேகம் சற்றுத் தடைப்பட்டது. தன் கூரிய விழிகளால், அவளை எரித்தவன் பின் அலட்சியமாகத் தன் இருக்கையில் வந்தமர்ந்தான்.

அமர்ந்தவனின் விழிகள் சர்வமகியை விடுத்து, அவள் தந்தை வாசுதேவனுக்கு சாதமாக வாதாட வந்திருந்த சட்டத்தரணியை நோக்கின.

அவனுடைய விழிகளில் தெரிந்த கூர்மையையும், அந்தக் கூர்மையிலிருந்து சுடர்விட்டுத் தெரிந்த பிரகாசமும், கூடவே இதழோரத்தில் தெரிந்த நக்கல் சிரிப்பையும் கண்ட எதிர்க்கட்சி லாயருக்கு ஏனோ உடல் வியர்த்தது.

அவசரமாகத் தன் பான்ட் பாக்கட்டில் வைத்திருந் கைக்கூட்டையை எடுத்து, முகத்தையும், கழுத்தையும் துடைக்க, கிண்டலாக அவரைப் பார்த்து நகைத்துவிட்டு, மீண்டும் சர்வமகியிடம் தன் விழிகளைச் செலுத்தினான்.

அவளுடைய சற்று மெலிந்த உடலும், சோர்ந்த முகமும், எதிர்பார்ப்பு நிறைந்த விழிகளும், அவன் உள்ளத்தைத் தடம்புரளச் செய்ய, தன் மீதே கோபம் கொண்டவனாகத் தன் முகத்தைத் திருப்பி, எங்கோ பார்த்தான் அநேகாத்மன்.

தன்னிடம் சொல்லாமல் அவள் கிளம்பியது இன்னும் அவனை உறுத்திக்கொண்டிருந்தது. சர்வமகிக்கு ஏனோ அவனுடைய கோபம் இருந்த நம்பிக்கையையும் இழக்கச் செய்தது.

சற்றுப் பொறுத்து நீதிபதி வர அனைவரும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்தினார்கள்.
அவர் அமர்ந்ததும் அனைவரும் அமர்ந்தனர்.

உடனேயே வழக்கு தாமதமின்றித் தொடங்கிவிட்டது. வாசுதேவன் கொலைசெய்யவில்லை என்பதை அவருக்காக அழைத்துவரப்பட்ட லாயர் வாதாடினார். பல்வேறு விதமாக, வாசுதேவன் கொலையைச் செய்யவில்லை என்று வாதாடிய லாயர், இறுதியாக முக்கிய சாட்சியங்களாக,

“பாய்னட் நம்பர் 1 - குற்றம் சாட்டப்பட்ட வாசுதேவன் காலம்சென்ற வெங்கடேஷைத் துப்பாக்கியால் கொன்றதாக சாட்சியங்கள் கூறுகிறது. ஆனால் காலம் சென்ற வெங்கடேஷின் கட்டடத்திற்குள் இலகுவாக யாராலும் நுழையமுடியாது. உள்ளே செல்வதாக இருந்தால், பாதுகாப்புப் பரிசோதனைகள் செய்தபின்பே உள்ளே செல்லமுடியும். அப்படியிருக்கையில், உள்ளே சென்ற வெங்கடேஷைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அவருடைய துப்பாக்கியை ஏன் பாதுகாவலர்கள் கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் ஆயுதம் கண்டறிகருவி மூலம், வாசுதேவனை முற்று முழுதாகப் பரிசோதித்துவிட்டுத்தானே உளளே விட்டார்கள். அப்போது இல்லாத துப்பாக்கி, எப்படி, வாசுதேவன் காலம்சென்ற வெங்கடேஷின் அறைக்குள் நுழைந்தபோது வந்தது.

பாய்ன்ட் நம்பர் 2 - கிட்டத்தட்ட அரை மணி நேரமாக இருவருமே பேசியிருக்கிறார்கள். அந்த அரை மணி நேரத்தில் இருவருக்கும் இடையில் எந்த வாக்குவாதமும் நிகழவில்லை. அதற்கு ஆதாரம் இடையில் தேனீர் எடுத்துச் சென்று கொடுத்துவிட்டு வந்த செக்ரட்டரி...

பாய்ன்ட் நம்பர் 3 – வாசுதேவனுக்கும், காலம்சென்ற வெங்கடேஷக்கும், இது வரை எந்த முன்விரோதமோ, பகையோ இருந்ததில்லை. ஆக, வெங்கடேஷைக் கொல்வதற்கான காரணம், வாசுதேவனுக்கு இல்லை.

பாய்ன்ட் நம்பர் 4- திரு வாசுதேவனின் வாழ்வில் இது வரை எந்தக் கறுப்புப் புள்ளியும் விழுந்ததில்லை. அவர் மிக நல்ல மனிதர் என்பதை அவருடன் பழகும் நண்பர்கள் உறுதியாகக் கூறுகின்றனர். அந்த அடிப்படையில், காலம்சென்ற வெங்கடேஷைக் கொல்லும் அளவுக்கு அவரிடம் தைரியமோ, திடமோ நிச்சயமாக இருந்திருக்காது.

ஆகவே கனம் நீதிபதியவர்களே, இவற்றை அடிப்படையாக வைத்து, வாசுதேவன் நிரபராதி என்று கூறி அவரை விடுவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தட்ஸ் ஆல் என்றார் அந்த வக்கீல் ரோபர்ட்.

அடுத்து அநேகாத்மன் எழுந்தான். ஒரு நிமிடம் ஏனோ தடுமாறினான். அவன் கண் முன்னால் கலங்கிய விழிகளுடன் நின்று கெஞ்சிக்கேட்ட சர்வமகி வந்து போனாள். ஏனோ அவளுக்கு எதிராக வாதாடுவதை நினைக்கும் போது, உள்ளத்தில் எங்கோ வலித்தது.

ஆனாலும் தந்தையின் கொலைக்குக் காரணமான குற்றவாளி தப்பிப்பதையும் அவன் விரும்பவில்லை. ஒரு நிமிடம் அழுந்த மூடிய விழிகளில் சர்வமகியா, தந்தையா என்கிற தராசு நிறுத்தப்பட, தந்தையின் பாசமே தராசில் கீழிறங்க, பிடிவாதமாக சர்வமகியின் நினைவுகளை ஒதுக்கிவிட்டு முன்னால் வந்தான்.

முதலில் எனக்குரிய நேரத்தைக் கொடுத்ததற்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்…" என்று தலை வணங்கியவன், உடனேயே விஷயத்திற்கு வந்தான்.

"மிஸ்டர் வாசுதேவன் எப்படிக் கொலை செய்தார், அவர் சென்றபோது ஏன் ஆயுதங்கள் எடுத்துச் செல்லவில்லை, அவர் என் தந்... மன்னிக்கவேண்டும், லேட் வெங்கடேஷுடன் எந்தப் பகையும் இருக்கவில்லை, அதனால் அவர் கொலை செய்ய வாய்ப்பில்லை என்கின்ற விவாதங்களுக்கு விவாதத்திற்கு நான் வருவதற்கு முன்பு, எதற்காக மிஸ்டர் வாசுதேவன், இறந்துபோன மிஸ்டர் வெங்கடேஷைக் கொலைசெய்யவேண்டும். அதற்குரிய உந்துதல்கள் என்ன? என்பதைக் கூற நான் ஆசைப்படுகிறேன்.

மிஸ்டர் வெங்கடேஷின் வளர்ச்சியால் பாதிக்கப்பட்டுத் தன் கம்பனியை இழுத்து மூடிய பலருள் மிஸ்டர் வாசுதேவனும் ஒருவர். அவரின் பொறுப்பில் ஐந்து பிள்ளைகள் இருப்பதால்; அவருடைய அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. தன் வியாபாரம் கவிழ்ந்துவிட்டதாலும், தன் குடும்பத்தின் பொருளாதார நிலை தாழ்த்தப்பட்டதாலும், ஆத்திரம் அடைந்த மிஸ்டர் வாசுதேவன், காலம்சென்ற வெங்கடேஷைப் பழி

வாங்க நினைத்திருக்கிறார். அதற்காக டிஎன் என்கிற பொய்யான கம்பனியின் பெயரைக் கூறி, உள்ளே நுழைந்திருக்கிறார்.

உண்மையில், திரு வாசுதேவன் கூறுகின்ற TN என்கிற கம்பனியே கனடாவில் இல்லை. ஏன் உலகளவில் கூட இல்லை. ஆக, அந்த TN என்கிற கம்பனி அவரால் பொய்யாக ஜோடிக்கப்பட்ட ஒரு கம்பனியே.

இதைக் கேட்டதும், வாசுதேவன் அதிர்ந்துபோனார். இல்லை இல்லை என்று பலம் கொண்ட மட்டும் கத்தவேண்டும்போல் வேகம் எழுந்தது. ஆனால் கத்தி என்ன பயன்? அவரை இந்தக் கோர்ட் நிரபராதி என்று விடவா போகிறது? வருத்தத்துடன் தன் மகளைப் பார்க்க, அவளோ, கன்னத்தில் கண்ணீர் வழிவது கூடத் தெரியாமல், அநேகாத்மனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“மிஸ்டர் அநேகாத்மன், மிஸ்டர் வாசுதேவன் உள்ளே நுழையும் போது அவரிடம் எந்த ஆயுதங்களும் இருக்கவில்லை. அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. எதை வைத்து அவர்தான் சுட்டார் என்று நீங்கள் கூறுகிறீர்கள்?” என்று எதிர்கேள்வியை எதிர்தரப்பு வக்கீல் கேட்க, அவரைப் பார்த்து நக்கல் சிரிப்பு சிரித்த அநேகாத்மன், நீதிபதியைப் பார்த்து,

“உண்மை அவர் உள்ளே நுழையும் போது, துப்பாக்கி எடுத்துச் செல்லவில்லை... அவர் கொண்டு சென்ற கைப்பெட்டியிலும் துப்பாக்கி இருக்கவில்லை. ஆனால் எப்படி சுட்டார்? இதற்கு பதில் இதுதான்” என்றவன் ஒரு வீடியோ கசட்டை நீட்டினான்.

“இதைப் போட்டுப் பார்க்க அனுமதி வேண்டும்.” என்று கேட்டதும், உடனேயே அது திரையில் போடப்பட்டது

‘அதில் வாசுதேவனை பரிசோதனைக்கு உற்படுத்திய படம் திரையில் தெரிந்தது. நீதிபதி யோசனையுடன் அநேகாத்மனைப் பார்த்தார்.

“நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்...?” எனறார் நீதிபதி புரியாமல்.

உடனே அநேகாத்மன் திரும்பவும் ரிவைன் பண்ணிப் போட்டுக்காட்டினான். யாராலும் எதுவும் கண்டு பிடிக்கமுடியவில்லை.

“பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் அந்த சாதனத்தை உற்றுப் பாருங்கள்... உண்மை தெரியும்...” என்றான் மர்மப் புன்னகையுடன்.

உடனே மீண்டும் ரிவைன் செய்யப்பட்டது. அந்தப் பரிசோதனை செய்யப்படும் சாதனம், வாசுதேவனின் மீது ஒவ்வொரு இடமாகக் காட்டப்பட்டது. இடைக்கு வந்ததும் அதில் எரிந்துகொண்டிருந்த பச்சை லைட் காணாமல் போனது. அதே போல பின்புறம் திருப்பியபோது, எரிந்துகொண்டிருந்த பச்சை விளக்கு இடை வரை வந்ததும், காணாமல் போனது.

“பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இந்த சாதனத்தில் பச்சை லைட் எரிகிறது. யாராவது ஏதாவது எனாமல் பதித்திருந்தால், அது சிவப்பாக மாறிச் சத்தம் எழுப்பும். மிஸ்டர் வாசுதேவன் அணிந்திருந்த பெல்ட்டில் எனாமல் பதியப்பட்டிருக்கிறது. இருந்தும், அந்த சாதனத்தில் லைட் சிவப்பாக மாறிக் கத்திவில்லை. மாறாக, அணைந்திருக்கிறது. மீண்டும் பின் புறம் பரிசோதிக்கும் போது, அதேபோல எரிந்த பச்சை விளக்கு, இடைக்கு வந்ததும் அணைந்திருக்கிறது. சோ... இவருடன் எடுத்துச் செல்லப்பட்ட ஆயுதம், கண்டுகொள்ளாமலே விடப்பட்டிருக்கிறது. அதற்கு அந்த செக்கியூரிட்டியும் உடந்தை. அவனை விசாரித்தபோது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மிஸ்டர் வாசுதேவன் பல ஆயிரம் டாலர்கள் லஞ்சம் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார் என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறான்... அது ஏற்கெனவே கோர்ட்டில் சமர்ப்பிக்கப் பட்டு விட்டது.

சரி அப்படியே மிஸ்டர் வாசுதேவன் துப்பாக்கி எடுத்துச் செல்லவில்லை என்றாலும், இன்னொரு பக்கமாகவும் துப்பாக்கி கிடைத்திருக்க வாய்ப்பிருக்கிறது...

என்றவன் இன்னொரு வீடியோவைப் போட்டுக் காட்டினான். காட்டியபோது, அந்த வெள்ளை ஆடை அணிந்திருந்தவனின் பின்புறம்தான் தெரிந்தது. அவன் வாசுதேவனிடம் கை நீட்டிக் குலுக்கிவிட்டுச் செல்வது வீடியோவில் தெரிந்தது.

“இந்த மனிதன் வேண்டும் என்றே வீடியோவிற்கு முகம் காட்டாமல் நிற்கிறான். எந்த வீடியோவிலும் இவனுடைய முகம் தென்படவில்லை. அவன் மிஸ்டர் வாசுதேவனிடம் கை குலுக்கும் போது துப்பாக்கி கைமாறியிருக்கலாம்.”

“அடுத்து லேட் வெங்கடேஷின் மார்பைத் துளைத்த குண்டு அது ஏறிய விதமும், அது துளைத்த முறையையும் பார்க்கும்போது, துப்பாக்கியால் சுட்டவன் கட்டாயமாக இடதுகைபழக்கம் உள்ளவனாக இருக்கவேண்டும். ஏனென்றால் சுட்டபோது ஏறிய குண்டு வலதுபக்கமாக சாய்ந்தவாறு ஏறியிருக்கிறது. சோ... அது இடது கையால் சுட்டால் மட்டும்தான் சாத்தியம். மிஸ்டர் வாசுதேவன் இடதுகைப் பழக்கம் உடையவர் என்பது விசாரனையில் தெரிய வந்திருக்கிறது...

ஆக... மிஸ்டர் வெங்கடேஷவரனைக் கொலை செய்தது, மிஸ்டர் வாசுதேவன்தான் என்று நான் உறுதியாகக் கூறுவேன்...” என்று கூறியவன் இருக்கையில் வந்தமர்ந்தான்.

தொடர்ந்து எதிர் விவாதங்கள், குறுக்குக் கேள்விகள்.

முடிவு மிஸ்டர் வெங்கடேஷனைக் கொலை செய்தது மிஸ்டர் வாசுதேவனே என்று தீர்ப்பானது. அவருக்குரிய தண்டணைக்கான தீர்ப்பை அடுத்த அறு மாதத்தில் வழங்கப்படும் அதுவரை அவரைக்

காவலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டது.

வாதங்களையம், பிரதிவாதங்களையும், கேட்டுக்கொண்டிருந்தவள், இறுதியாகத் தந்தைக்குத் தீர்ப்பு வளங்கிய பின், எதுவும் பேசத் தோன்றாமல் சிலைபோல இருக்கையில் அப்படியே அமர்ந்திருந்தாள். இனி என்ன செய்யப் போகிறாள்? மேல் கோர்ட்டிற்கு அப்பீல் பண்ணுவதா? அப்படி அப்பீல் பண்ண அவள் பணத்திற்கு எங்கே போவாள்? இருக்கிற வீட்டையும் வைத்து எடுத்த கடனை அடைத்தாலும் விற்ற பணம் அதற்குப் போதாது. அடுத்து என்ன செய்வது? எதுவுமே புரியாமல் அப்படியே சிலையாகிப்போனாள் சர்வமகி.

அடுத்த வழக்கிற்கு மக்கள் வரத் தொடங்க, சர்வமகி மெதுவாக சுயநினைவு பெற்று எழுந்தாள்.
முதலில் எந்தப் பக்கம் போவது என்று அவளுக்குத் தெரியவில்லை.

மலங்க மலங்க விழித்தவள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு வெளியே வந்தாள். அவளுக்குக் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது.

அருகேயிருந்த இருக்கையில் பொத் என்று அமர்ந்தவள், கரங்களால் முகத்தை மூடிக்கொண்டாள்.

“கரங்களால் முகத்தை மூடினால் உலகமே இருண்டு போய்விடும் என்று நினைக்கிறாயா சர்வமகி?” என்று ஒரு குரல் கேட்க, அந்தக் குரலுக்குரியவனை அடையாளம் கண்டுகொண்டவளாக, நிமிர்ந்து பார்த்தாள்.

அவளுடைய விழிகளில் தெரிந்த வெறுமையை லட்சியம் செய்யாதவனாக அவள் அருகே அமர்ந்துகொண்டான் அநேகாத்மன்.

சற்று நேரம் இருவருமே அமைதியாக இருந்தனர். பின் என்ன நினைத்தானோ, நிமிர்ந்து, எங்கோ வெறித்துப் பார்த்தவாறு,

“உன் தந்தை செய்த தவறுக்கு உனக்குத் தண்டனை தர நான் விரும்பவில்லை சர்வமகி...” என்றான் அவன் அமைதியாக. அதைக் கேட்டதும், விழிகள் கலங்க,

“என் தந்தை எந்தத் தவறும் செய்யவில்லை மிஸ்டர் அநேகாத்மன்.” என்றாள் சர்வமகி அழுத்தமாக.

இதைக் கேட்டதும், இவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அது சர்வமகி ஆத்மன் என்னும் அழைப்பை விடுத்து, அநேகாத்மன் என்று அழைத்ததாலா, இல்லை இன்னும் தந்தையை கண்மூடித்தனமாக நம்புகிறாளே என்கிற எரிச்சலா தெரியவில்லை.

“ஆர் யு மாட்? டூ யு ஹாவ் எனி சென்ஸ்? இத்தனை ஆதாரங்களைக் காட்டியும் நீ உன் தந்தையை நம்புகிறாயா? அந்த இடத்தில் உன்

தந்தையைத் தவிர வேறு யாருமே என் தந்தையைக் கொன்றிருக்க முடியாது... சர்வமகி..." என்றான் அவன் எரிச்சலும், கோபமுமாக.

"இல்லை... நிச்சயமாக அது என் தந்தையாக இருக்க முடியாது... அவருக்கு... அவருக்கு சும்மாவே யாருடனும் கடுமையாகப் பேசத் தெரியாது அநேகாத்மன்... அவர் நிச்சயமாகத் துப்பாக்கி..." என்றவளுக்கு திடீர் என்று நினைவு வந்தவளாக, அநேகாத்மனைப் பார்த்தாள்.

"அந்த... அந்தத் துப்பாக்கி எங்கே... அதை... அதை கோர்ட்டில் சப்மிட் பண்ணவில்லையே... அந்தத் துப்பாக்கியில் என் தந்தையின் கைரேகை இருந்ததா?" என்று பரபரப்புடன் கேட்டாள் சர்வமகி. அவளை இரக்கமாகப் பார்த்தவன்,

"அதை ஏற்கெனவே என் தந்தையைக் கொலைசெய்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் அதில் உன் தந்தையின் கைரேகையோ, வேறு யாருடைய கைரேகையோ... இருக்கவில்லை..." என்றான் அவன்.

"என் தந்தையின் கைரேகை இல்லை என்றால், எதை வைத்து என் தந்தைதான் கொன்றார் என்று நீங்கள் கூறுகிறீர்கள்?" என்றாள் சர்வமகி படபடப்பாக.

"உன் தந்தையின் கைரேகை இருக்கவில்லைதான்... ஆனால்...." என்று சற்றுத் தயங்கி இழுத்தவன், "உன் தந்தை இடது கைப் பழக்கம் கொண்டவர் சர்வமகி... அப்பாவைச் சுட்டவனும் இடதுகைப் பழக்கமுள்ளவனாகத்தான் இருக்கவேண்டும்..." என்றதும் அவளுடைய முகம் சோர்ந்தது. மறுப்பாகத் தலையாட்டியவள்,

"என் தந்தையைப் பற்றி எனக்குத் தெரியும்... அவர் இந்தக் கொலையைச் செய்திருக்கமாட்டார்..." என்றவளை விசித்திரமாகப் பார்த்தான் அவன்.

தந்தை கொலை செய்ததற்கு உண்டான அத்தனை ஆதாரங்கள்; இருந்தாலும் அதையெல்லாம் லட்சியம் செய்யாமல், தன் தந்தை கொலைசெய்யவில்லை என்று நிற்கும் இந்தப் பெண்ணை எந்த நிலையில் நிறுத்தி யோசிப்பது?

அவனுக்கு சர்வமகியை எண்ணி வியக்காமல் இருக்கவே முடியவில்லை.

ஏன், அவள் தந்தைக்கு தண்டனை பெற்றுக் கொடுத்தவன் அவன், அப்படியிருந்தும், அவள் முகத்தில் அவனைக் கண்டதும் எந்த வெறுப்பும் தோன்றவில்லையே. மாறாக கலக்கம் மட்டும்ததானே தெரிந்தது. இதே இடத்தில் வேறு யாரும் இருந்திருந்தால், அவனை வெறுத்து, சத்தம் போட்டு, பெரும் பிரச்சனையையே கிழப்பியிரப்பார்களே. முதன் முதலாக சர்வமகியை சிறு மதிப்புடன் ஏறிட்டான் அநேகாத்மன்.

“ஏன் சர்வமகி... உனக்கு என் மீது கோபம் வரவில்லையா? உன் தந்தை ஜெயிலுக்குப் போகக் காணரமானவன் நான் என்கிற எரிச்சல் தோன்றவில்லையா?” என்றான் ஏதோ ஒன்றை அறியும் ஆவலுடன்.

அவனை உற்றுப் பார்த்தவள் மறுப்பாகத் தலையாட்டினாள்.

“எப்படி சர்வமகி... நான்... உனக்குத் தீமை செய்திருக்கிறேனே...” என்றான் படபடப்புடன். தந்தையை எண்ணியதும் கண்ணீர் கண்களில் எட்டிப் பார்க்க,

“உங்கள் தந்தை இறந்ததற்குக் காரணம் என் தந்தை என்பது உங்கள் வாதம் அநேகாத்மன். உங்களைப் பொருத்தவரைக்கும் அது உண்மையும் கூட. சொல்லப்போனால் என்னுடைய இழப்பை விட உங்களுடைய இழப்பு அதிகமானது... நீங்கள் உங்கள் தந்தையையே இழந்திருக்கிறீர்கள்... ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டியாண்ட ஒருவர் இப்போது உயிரோடு இல்லை... அதற்கு யார் காரணமோ எனக்குத் தெரியாது... உங்கள் இடத்தில் இருந்து யோசித்தால் உங்கள் வேதனை எப்படி இருக்கும் என்பதை என்னால் உணர முடிகிறது... நீங்கள் என்பதால் அமைதி காக்கிறீர்கள்... ஒரு வேளை நான் உங்கள் இடத்தில் இருந்திருந்தால்...” என்றவள் அவனை உற்றுப் பார்த்தாள்.

“எனக்கு உங்கள் மீது கோபத்திற்குப் பதில், வேதனைதான் தோன்றுகிறது. என் தந்தைக்குத் தண்டனைதான் கிடைத்திருக்கிறது... ஆனால் நீங்கள்... விரும்பினாலும் உங்கள் தந்தையைப் பார்க்க முடியாதே...” என்று வருத்தத்துடன் கூறியவளை ஒரு வித உணர்வோடு உற்றுப் பார்த்தான் அநேகாத்மன்.

அவனுக்கு இதயத்தில் எங்கோ பட் என்று ஏதோ மலர்ந்ததுபோன்று இருந்தது. ஒரு போதும் தோன்றாத உணர்வு. இவள் மட்டும் என் மனைவியானால்... வாழ்க்கையில் துன்பம் என்பது ஒரு போதும் அண்டாதே... இவளைப் போன்றவள்தானே அவனுடைய சாம்ராஜ்யத்திற்கு ராணியாக வர முடியும்?’ என்று எண்ணியவன் ஒரு திடுக்கிடலுடன் சுய நினைவுக்கு வந்தான்.

அவனா அப்படி எண்ணினான்? அவனுடைய தந்தை இறப்பதற்குக் காரணமான ஒருவனின் மகளை அவனுடைய மனைவி என்கிற ஸ்தானத்தில் வைத்துப் பார்ப்பதா? நோ... நெவர்... அவனுடைய மனைவியாகும் தகுதி இந்த சர்வமகிக்குக் கிடையாது... நோ... நோ...’ என்று முணு முணுத்தவன், எரிச்சலுடன் எழுந்தான்.

அவனுக்குத் தன் மீதே கோபம் வந்தது. கொஞ்சம் இளகிப் பேசினால் இப்படியா யோசிப்பது... சே... சே... இங்கே இருந்து அவளுடன் பேசியது அவனுடைய தவறு... ’ என்று எண்ணியவன் தன் தொண்டையைச் செருமித் தன்னைச் சமாதானப் படுத்தியவனாக,

“ஐ... ஐ நீட் டு கோ...” என்று முணு முணுத்தவன், ஒரு தலையசைப்புடன் விலகத் தொடங்கினான்.

நிலவு - 15

அநேகாத்மன் அவளிடமிருந்து விடைபெறவும், சர்வமகியின் கைத்தொலைபேசி சிணுங்கவும் நேரம் சரியாக இருக்க, சர்வமகி சோர்வுடன் கைபேசியை எடுத்துப் பார்த்தாள்.

வீட்டில் இருந்துதான் அழைத்திருந்தார்கள். அவளுக்கு உள்ளம் கசங்கியது.

அவர்களிடம் எப்படி அப்பாவைப் பற்றிக் கூறுவது? கீழ் உதடு நடுங்காத வகையில் பல்லால் கடித்துத் தன் உணர்வை வெளிக்காட்டாதிருக்க முயன்று தோற்றாள்.

சிரமப்பட்டுத் தன் வேதனை வெளியில் தெரியாதிருக்கத் தன்னை சமப்படுத்தியவள், கைபேசிய உயிர்ப்பித்து காதில் வைத்தாள்.

“சொ... சொல்லு தேவகி...” என்றாள் சர்வமகி.

“அ... அக்கா... நீ எங்கே இருக்கிறாய்?” என்றாள் தேவகி பதட்டத்துடன்.

“இ... இங்கே கோர்ட் அடியில்... ஏன் தேவகி... ஏ... ஏதாவது பிரச்சனையா?” என்றாள் சர்வமகி பதட்டமாக.
போய்க்கொண்டிருந்தவனின் காதில் பிரச்சனை என்கிற சொல் விழ, ஏதோ பிரேக் போட்டதுபோல சட் என்று நின்றான் அநேகாத்மன்.

ஏனோ சர்வமகியை அப்படியே விட்டுவிட்டுப் போக மனம் வரவில்லை. திரும்பி நின்று என்ன நடக்கிறது என்று பார்த்தான்.

மறு புறம் என்ன சொன்னதோ, சர்வமகியின் முகம் இரத்தப் பசையின்றி வெளுறியது. இருக்கையிலிருந்து எழுந்தவள் சிரமப்பட்டுத் தன்னை நிதானப்படுத்த முயன்றவள் முடியாமல் தள்ளாடினாள்.

இரண்டு எட்டில் அவளை நெருங்கியவன், கீழே விழ இருந்தவளைப் பற்றி இழுத்துத் தன் இறுகிய அணைப்பில் நிறுத்தி விழாமல் தாங்கிக்கொண்டான். அவள் நடுங்கிய கரங்களில் இருந்து, இதோ விழப்போகிறேன் என்றிருந்த கைத்தொலைபேசியை வாங்கித் தன் காதில் வைத்தான்.

“யெஸ் தேவகி... வட் இஸ் இட்?” என்கிற அழுத்தமான ஆழமான குரல் தேவகியின் காதில் விழ, ஒன்றும் புரியாமல் விழித்தாள் தேவகி.

“யா... யார் சார் நீங்கள்... அக்கா... அக்கா எங்கே...” என்றாள் தேவகி பதட்டமாக.

“உன்னுடைய அக்கா இப்போது பேசும் நிலையில் இல்லை... எதுவாக

இருந்தாலும் என்னிடம் கூறு...” என்றான் அவன் அதிகாரமாக.

அந்தக் குரலுக்கு எதிர்த்து விவாதிக்க முடியாமல்,

“அ... அப்பாவை... அழைத்துக் கொண்டு போனபோது, திடீர் என்று மார்பைப் பிடித்தவாறு சரிந்துவிட்டாராம்... அவரை ஸ்காபரோ ஜென்ரல் ஹாஸ்பிடலில் சேரத்திருக்கிறார்களாம்...” என்றாள் நடுங்கும் குரலில்.

அவளைச் சமாதானப் படுத்தி, “டோன்ட் வொரி... டேக் கெயர் ஒஃப் யுவர் ஸிப்ளிங்ஸ்... என்ன பிரச்சனை என்பதை நானும், உன் அக்காவும் பார்த்துக்கொள்கிறோம்...” என்று கட்டளையாகக் கூறியவன், அவளுடைய தெலைபேசியைத் தன் பான்ட் பாக்கட்டில் போட்டவாறு, கைவளைவில் நடுங்கிக்கொண்டிருந்தவளைப் பார்த்தான்.

“ஷ்... எல்லாம் சரியாகிவிடும்... உன்னைத் திடப்படுத்திக்கொள்...” என்று அவளுக்குப் புரியும் விதமாக அழுத்திச் சென்னவன் அவளை அழைத்துத் தன் காரடிக்கு வந்தான்.

மெதுவாக சுயநினைவு பெற்ற சர்வமகி அவனிடமிருந்து வேகமாகத் தன்னை விடுவித்தாள்.

“நா... நான் போகவேண்டும்...” என்றாள் நடுங்கும் குரலை வெளிக்காட்டாதிருக்க முயன்றவாறு.

“நான் அழைத்துப் போகிறேன் சர்வமகி... காரில் ஏறு...”

“இ... இல்லை வேண்டாம்... என்னுடைய கார்... இங்கேதான் இருக்கிறது... நான் போய்க்கொள்வேன்...” என்றவள் திரும்பினாள்.

வேகமாக அவளை இழுத்துத் தன் முன்னால் நிறுத்தியவன்,

“எது? இன்றோ நாளையோ என்று தன் இயக்கத்தை நிறுத்தக் காத்திருக்கும்; அந்த டொயாட்டா கம்ரியா? அதை விட நீ நடந்தே போகலாம்... தவிர இந்த நிலையில் உன்னால் தனியாக ட்ரைவ் பண்ண முடியாது... அதற்கு நான் விடவும் மாட்டேன்.... நீ என்னுடன் வா...” என்றான் முடிவாக.

“நோ... வேண்டாம்... நான்... என்னால் முடியும்... என்னை விடுங்கள்...” என்றவள் அவனுடைய இரும்புப் பிடியிலிருந்து தன்னை விடுவிக்க முயன்று தோற்றாள்.

“சொன்னால் கேட்கமாட்டாய்? நீ இருக்கும் மனநிலையில் உன்னால் ட்ரைவ் பண்ண முடியாது. அதற்கு நான் சம்மதிக்கவும் மாட்டேன். இருக்கிற வேதனை போதாது என்று நீயும் அடிபட்டு உன் சகோதரர்களுக்குத் தீராத துன்பத்தைக் கொடுக்கப் போகிறாயா?” என்றவன், அவள் அனுமதியையும் பெறாது தன் கார் இருக்கும் இடத்திற்கு இழுத்துச் சென்றான்.

அவள் யோசனையாகத் தன் கார் இருந்த திசையைப் பார்க்க,

“பயப்படாதே… லாக் பண்ணாமல் வைத்திருந்தால் கூட, உன்னுடைய காரை யாரும் தொட மட்டார்கள்…” என்று அவன் கூறியவாறு, காரின் முன்கதவைத் திறக்க, அப்போதும் அவள் கலக்கத்துடனேயே அநேகாத்மனைப் பார்த்தாள்.

“நேரம் போகிறது சர்வமகி… கெட் இன் மை கார்” என்றதும், அவனைக் குழப்பத்துடனேயே பார்த்தாள். பொதுவாகவே விட்டுக் கொடுத்துப் போபவள்தான். தேவையற்ற விவாதத்தைத் தவிர்ப்பவள்தான்;. ஆனால் ஏனோ அநேகாத்மனுடன் செல்ல மனம் ஒப்பாததால்,

“நா... நான்...” என்று அவள் கலக்கத்துடன் எதையோ சொல்லத் தொடங்க, அதற்கு மேல் அவளைப் பேச விடாது தன் ஒற்றை விரலை அவள் உதட்டில் பதித்தான் அநேகாத்மன்,

“ஷ்... இட்ஸ் இனஃப்… எதுவாக இருந்தாலும் பிறகு பேசிக்கொள்ளலாம்... இப்போது உன் தந்தையைப் பார்க்கப் போவதுதான் முக்கியம்... காரில் ஏறு...” என்றான் கனிவுடன்.

அதற்கு மேல் சர்வமகி யோசிக்கவில்லை. அதுவும் அவனின் கனிந்த குரலைத் தட்ட அவளால் முடியவில்லை. அதற்கு மேல் தர்க்கம் புரியாமல் கலக்கம் மாறாமலே, அவனுடைய காரில் ஏறி அமர்ந்தாள். உடனேயே கார் ஜென்ரல் ஹாஸ்பிடலுக்கு தாமதிக்காமல் பறந்தது.

இருபது நிமிடங்களில் இருவரும் மருத்துவமனையை வந்தடைந்தனர்.

அச்சத்துடன் இறுகிப்போயிருந்தவளை சிரமப்பட வைக்காமல் அவனே சென்று விபரமறிந்து அவளை அழைத்துச் சென்றான்.

அதற்கிடையில் அவனுக்கு கைபேசியில் ஏதோ ஒரு டெக்ஸ்ட் மெசேஜ் வர, அதற்குப் பதில் போட்டவாறே அநேகாத்மனும் நடந்துகொண்டிருந்தான்.

தந்தையின் நினைவிலேயே உழன்றுகொண்டு வந்தவள், அங்கிருந்த கதிரையைக் கவனிக்கவில்லை. அந்தக் கதிரையில் காலிடறி முன்பக்கமாக விழப்போக,

“மகி… பாத்து…” என்றவாறு அவசரமாகத் தன் இடக்கரம் நீட்டி, அவள் விழாதவாறு காத்த அநேகாத்மன்,

தன் உள்ளங்கை உணர்ந்த மென்மையில் திகைத்து, தன் கரம் பதிந்த இடத்தைப் பார்த்தான்.

சற்று மேலேறிய மேலாடைக்கும், கணுக்கால் வரை நீண்டிருந் பாவாடைக்கும் இடைப்பட்ட, வெற்று வயிற்றில் அவனுடைய

உள்ளங்கை முழுவதுமாகப் பதிந்திருந்தது.

அநேகாதமன் தன் கரம் பதிந்திருந்த இடத்திலிருந்து தன் கரத்தை விலக்கும் எண்ணமேயில்லாமல், விறைத்துப்போய், அந்த மென்மையின் இனிமையில் கொஞ்சம் கொஞ்சமாகக் கரையத் தொடங்கினான்.

உடனேயே அந்த மேலாடையை முழுதாக விலத்தி, மலரை ஒத்த அந்த வயிற்றையும், உடுக்கையை ஒத்த அந்த இடையையும், ஒரு ஆரோக்கியமான ஆணுக்குரிய வேட்கையுடன் வருடிக்கொடுக்கவும், விழிகளால் இரசிக்கவும் மனம் பரபரத்தது.

என்னதான் முயன்றும், அவனால் அந்த உணர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இது தவறு, இதற்குரிய சூழ்நிலை இதுவல்ல என்று ஒருபுறம் அவனுடைய மனம் அவனை இடித்துரைத்தாலும், அவனால் அமைதியாக இருக்கமுடியவில்லை.

இதுவரை எந்த உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தாது, தன் இஷ்டத்திற்கு வாழ்ந்துவந்தவனுக்கு, முதன் முறையாக, உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது பெரும் சிரமமாகவே இருந்தது.

அவனுடைய கட்டுப்பாட்டையும் மீறி, அவனுடைய பெருவிரல், அவளுடைய வயிற்றுப்பகுதியை மெதுவாக வருடிக்கொடுக்க, சொல்லமுடியாத அந்த புதுவித உணர்வில், மயங்கி மூழ்கத்தொடங்கிய அந்தக் கணத்தில்,

தான் விழப்போகிறோம் என்கிற எச்சரிக்கை உணர்வில், தனக்கு அருகேயிருந்த பிடிகோலாக அநேகாத்மனின் சட்டைக் காலரை இறுகப் பற்றிய சர்வமகி அநேகாத்மனின் நிலையைச் சிறிதும் புரிந்துகொள்ளாதவளாகத் தன்னை நிலைப்படுத்தி, எழ முயல, தன் நினைவு பெற்ற அநேகாத்மன், தன்மீதே எரிச்சல் கொண்டவனாகத் தன் கரத்தை வேகமாக விலக்கிக் கொண்டான்.

“யு ஓக்கே…?” என்றான் அவனும் முழுதாகத் தன்னை மீட்டவனாக.

“ஆம்” என்று அவள் தலையசைத்தாலும், அந்த விழிகளில் தெரிந்த மெல்லிய வலியை, உடனே அவன் கண்டுகொண்டான்.

அவள் தோள்களைப் பற்றி, அருகேயிருந்த இருக்கையில் அமர்த்தியவன், அவள் முன்பு முழந்தாளிட்டு அமர்ந்து, அவளுடைய நீண்ட பாவாடையைச் சற்று விலக்கி, பாதத்தைப் பரிசோதித்தான்.

அவன் சந்தேகப்பட்டது சரியே. வேகமாகக் கதிரையில் இடித்ததில், அவளுடைய பெருவிரல் நகத்தின் முன்புறம் சற்றுக் கிழிந்து அதிலிருந்து இரத்தம் வரத்தொடங்கியிருந்தது.

“டாமிட்… பார்த்து வரக்கூடாது… இங்கே பார் என்ன

செய்துவைத்திருக்கிறாய் என்று…" கோபத்துடன் கேட்டவன், வலிக்காமல், அவள் அணிந்திருந்த சான்டல்சைக் கழற்றி ஒரு ஓரமாக வைத்தான்.

சர்வமகிக்கோ, தன் தந்தையைப் பார்க்கவேண்டும் என்கிற கவலை.

"இல்லை… எனக்கொன்றுமில்லை ஆத்மன்… நான் அப்பாவை பார்க்கவேண்டும்… ப்ளீஸ்…" என்றாள் தன் பாதத்தை அவன் பிடியிலிருந்து விடுவிக்க முயன்றவளாக.

"ஸ்டாப் இட் மகி…" என்று சற்றுக் கடுமையாகக் கூறியவன், அவள் பாதத்தைத் தூக்கித் தன் வலது தொடையின் மீது வைத்தான். அவனுடைய விரல்களோ, அவள் வலியைப் போக்கும்விதமாக, அவளுடைய சிறிய பாதத்தை வருடிக்கொடுத்துக்கொண்டிருந்தன.

சர்வமகிக்கோ, தன் தந்தையின் கவலை ஒருபக்கமிருக்க, அவனுடைய செயலால் பெரும் சங்கடத்திற்கு உட்பட்டாள்.

"ஆத்மன்… ப்ளீஸ்… ஐ ஆம் ரியலி ஓக்கே… இது சின்ன காயம்தான்…" என்றாள் அவள் அவன் பிடியிலிருந்து தன் பாதத்தை விலக்க முயன்றவளாக.

"எது சின்னக்காயம்… இங்கே பார்… இரத்தம் வருகிறது…" என்று மெல்லிய பதட்டத்துடன் கூறியவன், சற்றுத் தள்ளி நின்றிருந்த அவனுடைய பாதுகாவலனைப் பார்த்து, விரல் அசைத்து, விழிகளாலேயே கட்டலை பிறப்பிக்க, அடுத்த ஒரு நிமிடத்தில், தாதி ஒருவர் அவர்கள் முன்னால் பிரசன்னமானார்.

"டோன்ட் வொரி… சின்னக் காயம்தான்… சரியாகிவிடும்…" என்று கூறிவிட்டுக் காலுக்குக் கட்டைப் போட்டுவிட்டு அவர் விலக, அநேகாத்மன், மீண்டும் அவளுக்கு சான்டில்சை அணிவிக்கப் போக,

"இல்லை… நான் போடுகிறேன்…. என்னால் முடியும்…" என்ற அவள் குரலை அவன் சிறிதும் செவிமடுத்தான் இல்லை.

அவன் பாட்டுக்கு, அவளுடைய காலணியைக் காயத்தில் படாதவாறு, மென்மையாக அணிவித்தபோதுதான் அவனுக்குத் தான் செய்துகொண்டிருக்கும் மடத்தனம் புரிந்தது.

"வட் டிட் ஐ டூ… வட் த ஹெல் ஐ ஆம் ட்ரைங் டு டூ.." என்று தன்னைத் தானே எரிச்சலுடன் திட்டியவன்,
வேகமாக எழுந்து நின்றான். தன் இயலாமையின் மீதே ஆத்திரம் கொண்டவனாகத், தன் தலைமுடியைத் தன் கரத்தால், அழுந்தக் கோதிவிட்டவன், விழுந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோலத், தன் தடுமாற்றத்தை அவள் காணாமல் மறைத்தான்,

"நேரமாகிவிட்டது… வா…" என்றவாறு, முன்னால் வேகமாக நடக்க,

சர்வமகியோ, அவனுடைய வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், சற்று நொண்டியவாறே, அவனைப் பின்தொடர்ந்தாள்.

சர்வமகி அவனுடைய வேறுபாட்டை சிறிதும் உணர்ந்தாள் இல்லை. அவளுடைய சிந்தனை முழுவதும் தந்தையே நிறைத்திருந்தார்.

'அப்பா உங்களுக்கு ஒன்றுமாகாது... நிச்சயமாக நீங்கள் நலம்பெற்று வந்துவிடுவீர்கள்...' என்று மனம் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தது.

என்னதான் மனதைத் திடப்படுத்தி வைத்திருந்தாலும், ஐசியு வில் உடல் முழுவதும் குழாய் மாட்டப்பட்டிருக்க, சுயநினைவற்றிருந்த தந்தையைக் கண்டதும், அவள் உடலிலிருந்து முழு சக்தியும் வடிந்ததுபோல உணர்ந்தாள் சர்வமகி.

பாதுகாப்புக் கருதி, ஒருவரையும் உள்ளே அனுமதிக்க முடியாது என்றதால் கண்ணாடி வழியாகத்தான் பார்க்க முடிந்தது.

தந்தையின் நிலையைப் பார்த்ததும், சர்வமகி பெரிதும் பயந்துபோனாள். அவரும், தாயைப்போல அவர்களை விட்டுவிட்டுப் போய்விடுவாரோ... என்ற அச்சம் பெரிய பந்தாகத் தொண்டையை அடைக்க, சர்வமகிக்கு மூச்சு விடுவதே சிரமமாகப் போய்விட்டது.

அருகேயிருந்த இருக்கையில் தொப் என்று அமர்ந்தவளுக்குப், பின்னுக்கு வரும் எதிர்காலம் பூதாகரமாகத் தாக்கியது. விறைத்துப்போய் அப்படியே அமர்ந்திருந்தாள்.

அவள் நிலையைக் கண்டதும், சற்றைக்கு முன் இருந்த ஒவ்வாமை மாயமாக மறைந்து போக, அவளுக்கு அருகே அமர்ந்தான். கலங்கியிருந்தவளுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

இது அவனுக்கு புதுசு. இள வயதிலேயே தாயைப் பறிகொடுத்ததாலோ என்னவோ, எந்தப் பெண்ணின் உணர்வுகளையும் அவன் இதுவரை புரிந்துகொண்டதில்லை. யாருடனும் அவன் இதுவரை ஒட்டி உறவாடிப் பேசியதுமில்லை. தன் தேவை பூர்த்தியானதும், தூசியைத் தட்டுவதுபோலத் தன் கைகளைத் தட்டிவிட்டுக் கழற்றிவிடும் ரகம் அவன்.

எந்தப் பெண்ணின் சோகமும் அவனுடைய இறுகிய உள்ளத்தைத் தளர்த்த முயன்றதில்லை. எத்தனையோ பெண்கள் காரியம் சாதிப்பதற்காகவே, அவன் முன்னால் கண்ணீர் சிந்தியிருக்கின்றனர். அப்போதெல்லாம், அவர்களை ஒரு அருவெறுப்போடு பார்த்து ஒதுக்கி வைத்திருக்கிறானே தவிர, அவர்ளின் அருகே கூட அவன் நெருங்கிச் சென்றதில்லை.

இன்னும் சொல்லப்போனால், அவனுடன் நெருங்கிப் பழகிய

எத்தனையோ பொண்கள் பெரும் இக்கட்டில் சிக்கியிருந்த போதெல்லாம், அலட்சியமாக விலகிச் சென்றவனுக்கு, ஏனோ சர்வமகியின் கலங்கிய முகத்தைப் பார்த்ததும், அவர்களிடம் காட்டிய ஒதுக்கத்தை அவள் மீது காட்ட முடியவில்லை.

அவள் கலங்கினால், இவன் இரத்த அழுத்தம் அவன் கட்டுப்பாட்டையும் மீறி எகிறியது. இவள் தவித்தாள், இவன் சர்வமும் அடங்கிப்போகிறது... இவள் பதறினாள், இவன் ஆவியும் சேர்ந்து பதறுகிறது. இவள் துடித்தாள், இவன் உயிரே துடித்தது. அது ஏன்? அவனுக்குப் புரியவில்லை.

தந்தையின் நிலையை எண்ணித் தவித்துத் துடிப்பவளின் முகத்தைத் தன் மார்பில் பதித்து, 'நான் இருக்கிறேன்...' என்று சொல்லவேண்டும்போல, உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்த ஒரு உணர்வு திகு திகுவென்று தோன்றி உடல் முழுதும் பரவியது.

இனியும் முடியாது என்பதுபோல, "மகி..." என்கின்ற மென்மையான அழைப்புடன் அவளை நெருங்கிய வேளை, திடீரென்று இரண்டு மூன்று வைத்தியர்கள் ஐசியுவிற்குள் நுழைந்தார்கள்.

அது வரை, தன் நிலையில் கலங்கியிருந்த சர்வமகி திடுக்கிட்டுத் தன் சுயத்திற்கு வந்தாள்.

எதற்காகத் தன் தந்தையின் அறைக்குள் இத்தனை வைத்தியர்கள் அவசரமாக நுழைகின்றனர் என்பது புரியாமல், இருக்கையை விட்டு எழுந்தாள்.

அவளுடன் கூட, அநேகாத்மனும் எழுந்தான். அச்சத்துடன் அநேகாத்மனைப் பார்த்தவள்,

"எத... எதற்காக அவர்கள்... உள்ளே போகிறார்கள்... என் அப்பாக்கு ஒன்றுமாகியிருக்காது அல்லவா..." என்று தவிப்புடன் கேட்க, அதற்கு மேலும் பொறுக்க முடியாதவனாக அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டான்.

"நோ... உன் அப்பாக்கு ஒன்றுமாகாது... ப்ளீஸ்... கன்ரோல் யுவர் செல்ஃப்..." என்று அவளுக்க ஆறுதல் படுத்தினாலும், அவனும் உள்ளுக்குள் சற்றுக் கலங்கித்தான் போனான்.

போன வைத்தியர்களின் வேகமும், அவர்களின் பதட்டமும், வரவிருக்கும் துன்பத்தை அவனுக்க முன்கூட்டியே எடுத்துக்காட்டியதோ,

"டாமிட்..." என்று முணுமுணுத்தவன், குனிந்து சர்வமகியைப் பார்த்தான்.

அவளோ, அவனுடைய சட்டைக்காலரை இறுகப் பற்றியவாறு,

விழிகளை மூடிக் கடவுளிடம் எதையோ வேண்டிக்கொண்டிருந்தாள்.

அவள் தந்தைக்கு ஏதாவது ஒன்று நடந்தால், நிச்சயமக அவளால் தாங்க முடியாது என்பதை உணர்ந்தவனாக, அவளைச் சமாதானப் படுத்த முயன்றான்.

அவனுடைய விழிகள் மட்டும், கண்ணாடித்தடுப்பின் பின்னே நடப்பனவற்றை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன.

கவனமாக சர்வமகி, மறு பக்கம் திரும்பாதவாறு, தன் பெரிய கரத்தை அவள் தலையில் வைத்துத் தன் மார்போடு, இறுக அழுத்திக்கொண்டிருந்தான்.

மறுபக்கம் அந்த வைத்தியர்கள். வாசுதேவனுக்கு என்னென்னவோ செய்தார்கள். செயற்கை சுவாசம் கொடுத்தார்கள், மானிடரைக் கவனமாக ஆராய்ந்தனர். வாசுதேவனிடம் என்னவோ கேட்டனர், இப்படியே கொஞ்சநேரம் உள்ள பெரும் அமர்க்களம் நடந்துகொண்டிருக்க, இதை எதையும் சர்வமகி கவனிக்காதவாறு அநேகாத்மன் கவனமாகப் பார்த்துக்கொண்டான். அவளுடைய தலையில் அழுத்தியிருந்த அவன் வலக்கரம் மட்டும் சிறிதும் விலகவில்லை.

இது எதையும் சர்வமகி கருத்தில் கொள்ளவில்லை. அவளுடைய முழு வேண்டுதலும், அவளுடைய தந்தை முழுதாக அவள் முன்னால் எழுந்து வரவேண்டும் என்பதே. ஏனோ அவன் அணைப்பு, அவளுக்குரிய ஆறுதலைக் கூறாமல் கூற, அந்த அணைப்பிலிருந்து விலக விரும்பாதவளாகவே. அவனுடன் ஒன்றிப்போய் நின்றிருந்தாள்.

எத்தனை நேரம் அப்படியே நின்றிருந்தார்களோ தெரியவில்லை, சற்று நேரத்திற்குள் அந்த அறைக் கதவு திறந்தது. தன் வேர்வையைத் துடைத்துக்கொண்டே வெளியே வந்த வைத்தியர், எதையோ கூற முயல, அநேகாத்மன் அவரைப் பார்த்தபார்வையில், கப் என்று தன் வாயை மூடிக்கொண்டார் வைத்தியர்.

“இவள்… உள்ளே போய் தன் தந்தையை பார்க்கலாமா?” என்றான்

அவரும் “ஆம்” என்று வேதனையுடன் கூற, மெதுவாக சர்வமகியை அழைத்து உள்ளே சென்றான்” அவள் தந்தைக்கருகே இருந்த இருக்கையில் அவளை அமர்த்தியவன்,

“மகி… கொஞ்சநேரம் உன் அப்பாவோடு உட்கர்ந்திரு… இதோ இப்போது வந்துவிடுகிறேன்…” என்றவன், தன் தந்தையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த மகியைத் தனியே விட்டுப் பேகவும் விரும்பாதவனாக, அவள் கரத்தைப் பற்றி அழுத்த, அவள் மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்ததாள்.

“நீ… தனியாக இருப்பாய் அல்லவா?” என்றான் சிறு தடுமாற்றத்துடன்.

அவள் ஆம் என்று தலையசைக்க, தன்னையும் மறந்து அவள் தலையை வருடிக் கொடுத்தவன், அந்த அறையை விட்டு வேகமாக வெளியே வந்தான்.

அந்த வைத்தியர் வெளியே அவனுக்காக் காத்திருக்க,

“யெஸ் டாக்டர்... அவர்... அவர் பிழைப்பாரா?” என்றான் இறுகிய குரலில்

அதற்கு பதிலாக அவர் மெதுவாக உதட்டைப் பிதுக்கிவிட்டு,

“சாரி மிஸ்டர் அநேகாத்மன்... எங்களால் முடிந்த வரை முயன்றுவிட்டோம். பட்... அவருடைய பல்ஸ் குறைந்துகொண்டு போய்விட்டது. ஹார்ட் பீட்டும் கொஞ்சம் கொஞ்சமாக...” என்று அவர் கூறிக்கொண்டிருக்கும்போதே,

“இன்னும் எவ்வளவு நேரம்...” என்றான் நேரடியாக.

“சூன்...” என்று அவர் பதில் கூற,

அதற்கு மேலும் பேசி நேரத்தை விரையமாக்காமல், அவள் தந்தையின் அறைக்குள் நுழைந்தான்.

சர்வமகி தன் தந்தையின் கரத்தைப் பற்றியவாறே, அவர் முகத்தை வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

“மகி...” என்றான் மென்மையாக.

தந்தையை விழிகள் இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தவளுக்கு முதலில் அநேகாத்மன் அழைப்பது கேட்கவில்லை. மீண்டும் அவன் சுருதி கூட்டி அழைக்கத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் சர்வமகி.

அநேகாத்மனின் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்தவள் அந்த வழிகளில் எதைக் கண்டாளோ, அவள் தலை மறுப்பாக அங்கும் இங்கும் அசைய, உதடுகளோ, “நோ...” என்று முணுமுணுத்தன.

அவனோ தன் விழிகளை ஒரு கணம் மூடித் திறக்க, இவள் உடல் சோர்ந்து தள்ளாடியது.
அவள் தள்ளாட்டத்தைப் புரிந்துகொண்டவனாக, அவள் தோள்களில் கரம் வைத்து அழுத்திக் கொடுக்க, கெஞ்சநேரம் அவர்களுக்கிடையில் பேச்சே இருக்கவில்லை.

உடல் முழுவதும் குழாய் செருகியிருக்கப் படுத்திருந்த தந்தையைத் திரும்பிப் பார்த்தாள். அவர் நிலையைக் காணும்போது, தாங்கமுடியாத் துயரத்தில் உணர்வும் உயிரும் தவிக்க, தந்தையின் கரத்தைத் தன் கரத்தில் ஏந்தியவள், மெதுவாக அந்தக் கரத்தை வருடிக் கொடுத்து, தன் இதழில் பொருத்தியவள்,

“அப்பா…” என்றாள்.

அந்தக் குரலில் அநேகாத்மன் கூடத் துடித்துப்போனான். அந்த ஒரு அழைப்பில், உயிர் முழுவதையும் தேக்கி வைத்திருக்கமுடியுமா? அவளால் முடிந்திருந்தது.

அதற்கு மேல், அவள் வேதனையைப் பார்க்கப் பிடிக்காதவனாகத் தன் கரத்தை, அவள் தோள்களில் இருந்து விலக்கியவன், சற்றுத் தள்ளி நின்று, மார்புக்குக் குறுக்காகக் கரத்தைக் கட்டியவாறு, ஜன்னலுக்கு அப்பால் வெறுமையாகத் தெரிந்த உலகத்தை வெறித்தப் பார்க்கத்தொடங்கினான்.

சர்வமகியின் வலியைப் பார்ப்பதை விட, அது எவ்வளவோ பரவாயில்லை என்பதைப்போலிருந்தது அவன் தோற்றம்.

அழுந்த மூடிய அவன் உதடுகளும், இறுகிப்போயிருந்த அவன் உடலும், மூடியிருந்த இறுகிய முஷ்டிகளும் அந்த சூழ்நிலையை அவன் அறவே வெறுக்கிறான் என்பதைச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

அதே நேரம், மகளின் தொடுகையை உணர்ந்த வாசுதேவன் மெதுவாக விழிகளை மலர்த்தினார்.
“அ... அப்பா...” என்றாள் குரல் கம்ம.

வாசுதேவன் சிரிக்க முயன்று தோற்றவராக மகளை வேதனையுடன் பார்த்தார்.

“சர்வமகி... நான்... நான் இந்தக் கொலையை...” அவர் முடிக்கவில்லை, அவருடைய வாயில் தன் கரத்தை வைத்து தலையை மறுப்பாக ஆட்டினாள்.

“எனக்குத் தெரியும்பா... நீங்கள் நிச்சயமாக இந்தக் கொலையைச் செய்யவில்லை என்று எனக்குத் தெரியும்... அந்தக் கடவுளே நீங்கள்தான் கொலை செய்தவர் என்று சொன்னாலும், நான் நம்பமாட்டேன். எனக்கு என் தந்தையைப் பற்றித் தெரியும்... நீங்கள் வருந்தாதீர்கள்... மேல் கோர்ட்டுக்கு அப்பீல் பண்ணி உங்களை வெளியே கொண்டுவருவேன்... அது வரைக்கும் நான் ஓயமாட்டேன்...” என்று வேகமாகச் சொன்னவளை வருத்தத்துடன் பார்த்தார் தந்தை.

“எப்படிம்மா... எல்லாவற்றிட்கும் பணம் வேண்டுமே கண்ணம்மா...” என்றார் தந்தை இயலாமையுடன்;.

“விக்கலாம்பா... எல்லாவற்றையும் விக்கலாம்...” என்றவளை விரக்தியுடன் பார்த்தார் வாசுதேவன். தன்னுடைய நிலை புரியாமல் பேசும் மகளை வருத்தத்துடன் நோக்கினார் அவர்.

“கண்ணம்மா...” என்றார் ஏக்கத்துடன். தந்தையைப் பார்த்தவளுக்கு

உடல் நடுங்கியது. தந்தையின் இறுதி நிமிடம் நெருங்கியவிட்டதை உணர்ந்தவளாக,

“ப்ளீஸ்பா... எங்களுக்கு நீங்களாவது வேண்டும்பா... எங்களை விட்டுப் போய்விடாதீர்கள்... ப்ளீஸ்...” என்று துடித்தவளை இரக்கமாகப் பார்த்தார் தந்தை.

“உன்... உன் சகோதரர்களை... நீ...”

“அவர்களைப் பற்றி யோசிக்காதீர்கள்... நான்... நான் அவர்களுக்கு அக்கா மட்டுமல்ல... அவர்களுக்கு நல்ல தாயாய்... தந்தையாய் இருப்பேனப்பா...” என்றாள் வேகமாக.

“உன்னுடைய வாழ்க்கை... அதை... அவர்களுக்காக இழக்கப் போகிறாயா கண்ணம்மா.”

“என்னுடைய வாழ்க்கை எல்லாமே என் சகோதரர்கள் தான்பா... அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதுதான் எனக்கு முக்கியம். அவர்களைப் பற்றி நீங்கள் கவலைப் படாதீர்கள்... அவர்களை நான் பார்த்துக்கொள்வேன். அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டு வருவது என் பொறுப்பு...” என்றவளை மறுப்பாகப் பார்த்தார் வாசுதேவன்.

“இல்லையம்மா... உன்னைப் பலிக்கடாவாக வைத்துத்தான் உன் சகோதரர்களைப் பார்க்க வேண்டும் என்றால்... அதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். நீ... நீ... ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்... அப்போதுதான் என்னால்...” என்று அவர் திணற,

அதற்கு மேல், அந்தக் காட்சியைப் பார்க்கப் பிடிக்காதவனாக, அது வரை அவர்கள் பேசுவதையே கைகட்டிக் கேட்டுக்கொண்டிருந்த அநேகாத்மன் விரைந்து சர்வமகியை நெருங்கினான். அவள் தோள்களில் தன் கரத்தைப் பதித்து, அவள் புறமாக நன்கு குனிந்தான்.

அவனுடைய முகம் அவளுக்கு மிகவும் அருகாமையில் நெருங்க, அந்த நிலையிலும், சர்வமகி சற்றுத் தடுமறினாள்.

தடுமாற்றத்துடன் அவனை நிமிர்ந்து பார்க்க, அவளுடைய நாசி அவனுடைய கன்னத்தை மெதுவாக உரசிச் செல்ல, அவளுக்கு எப்படியோ, முதன் முறையாக உள்ளத்தாலும், உடலாலும் சிலிர்த்துப்போனான் அநேகாத்மன்.

ஒரு மெல்லிய தீண்டல்தான்… அதுவும் அவளுடைய நாசியின் சீண்டல், அது இத்தனை பெரிய சிலிர்ப்பைக் கொடுக்குமா? கொடுத்ததே, நம்பமுடியாத திகைப்புடன், அவளை உற்றுப் பார்த்தான்.
அந்த வேதனையிலும், விரிந்து மலர்ந்த அவள் விழிகளிலே ஈர்க்கப்பட்டான். உள்ளமும் உடலும் அதிர, மேலும் நெருங்கினால், சூல்நிலை மீறித் தவறாக ஏதாவது செய்துவிடுவோமோ என்று அஞ்சியவனாகத் தன் தலையை விலக்கியவன், அதே நிலையில்

நின்றவாறே வாசுதேவனைத் திரும்பிப் பார்த்தான்,

“ ஐ ஆம் அநேகாத்மன்… இங்கே லாயரா இருக்கிறேன்… நான்… மிஸ்டர் வெ… மிஸ்டர் வெற்றியின் மகன்” என்றதும், சர்வமகி திகைப்புடன் அவனை அண்ணாந்து பார்த்தான்.

தன் கரத்தால், அவள் தோள்களை அழுத்திக் கொடுத்து எச்சரிக்கை செய்தவன், நிமிர்ந்து நின்றவாறு, தன் வழிகளை மூடித் திறந்து, அவளைத் திடப்படுத்தினான்.

பின் திரும்பி வாசுதேவனைப் பார்த்தவாறு, சர்வமகியின் தோள்களை வருடிக்கொடுத்தான்.

வாசுதேவனின் பார்வை, தன் மகளின் தோள்களில் உரிமையுடன் வருடிக்கொடுத்த, அந்தக் கரங்களிலேயே நிலைத்திருந்தது. அவருடைய உதட்டில் மெல்லிய புன்னகையும், விழிகளிலே நிம்மதியும் பிறக்க, ஆவலுடன், அநேகாத்மனை ஏறிட்டார்.

அவனுக்கு வேண்டியதும் அதுதானே.

“அங்கிள்... உங்களைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும்… மகி சொல்லியிருக்கிறாள். நீங்கள் எதற்கும் வருந்தவேண்டியதில்லை. நீங்கள், உங்கள் பிள்ளைகளை எப்படிப் பார்த்துக்கொள்வீர்களோ... அதே போல உங்கள் பிள்ளைகளை நனும், மகியும் சேர்ந்து பார்த்துக்கொள்வோம்... எதையும் எண்ணி மனத்தைக் குழப்பாமல் தூங்குங்கள்...” என்று அவன் புன்னகையுடன் கூற வாசுதேவனின் விழிகள் மகிழ்ச்சியால் மின்னின.

அவருடைய விழிகள், சர்வமகியின் தோளில் சுற்றியிருந்த அவன் கரங்களையும், அந்தக் கரங்கள்; அவளுடைய தோள்களை அழுத்திய விதத்தையும் பார்த்தவர் பெரும் நிம்மதியுடள், சர்வமகியை ஏறிட்டார்.

விழிகளாலே, தன் மகளுக்கு வாழ்த்தைக் கூறியவர், “இ… இப்போதான் நிம்மதியாக இருக்கிறது…” என்றவர் ஒரு கணம் தன் விழிகளை மூடி அமைதி காத்தார். அந்த முகத்தில் ஆழ்ந்த அமைதி நிறைத்துக்கொண்டது.

“அ… அப்பா…” என்று அச்சத்துடன் சர்வமகி அழைக்க, மெதுவாக விழிகளைத் திறந்தவர், திரும்பி அநேகாத்மனை ஏறிட்டார்.

“தம்பி… இ… இவள் என் மகள் அல்ல... என் தாய்... என் குலம்... என் உயிர்...” என்றவர் தன் கரத்திலிருந்த சர்வமகியின் கரத்தை அழுத்திக் கொடுத்தவர், “என் மகளை... என் செல்வத்தை…” என்றவாறு அநேகாத்மனை ஆவலுடன் பார்க்க,

“நான் பார்த்துக்கொள்வேன்... ஒரு பொக்கிஷமாக…” என்றான் கனிவுடன். அவன் என்ன சொல்கிறான் என்பதை சர்வமகி

உணர்வதற்குள்ளாக, வாசுதேவனின் உடல் உதறத் தொடங்கியது. உடனேயே அநேகாத்மன் அருகேயிருந்த பெல்லை அழுத்தினான்.

தொடரும்...

நிலவு 16

அநோகத்மனின் அழைப்பைத் தொடர்ந்து உள்ளே ஒரு தாதி வந்தார். தொடர்ந்த வைத்தயர் நுழைந்தார். ஒரு வைத்தியர் மூவைத்தியராயினர். ஓரு தாதி, பல தாதியாயினர். கொஞ்ச நேரத்தில் அந்த இடமே இரண்டு பட்டது.

சர்வமகி தன் உயிரைக் கையில் பிடிப்பவள் போலத், தன் மார்பின் மேற்புறச் சட்டையை இரு கரங்களாலும் இறுகப் பிடித்துக்கொண்டு, விழி நிறைந்த அச்சத்துடன், அங்கே நடப்பதையே பார்த்துக்கொண்டிருக்க, சர்வமகியின் நிலையை உணர்ந்த அநேகாத்மன், உடனே அந்தக் காட்டிசியை மறைத்தாற் போல நின்றுகொண்டு,

“மகி… வெளியே போகலாம் வா…?” என்றான்.

அவளோ பதில் கூற முடியாது, தலையை மறுப்பாக அங்கும் இங்கும் ஆட்ட, பதறியவளின், தோற்றத்தைக் காண இயலாதவனாக, அவள் தோள்களைச் சுற்றித் தன் கரத்தைப் போட்டு அவள் அனுமதியையும் கேட்காது, வெளியே அழைத்துவந்தான். இல்லை இல்லை இழுத்து வந்தான்.

அங்கேயிருந்த இருக்கையில் அவளை அமர்த்தியவன், தானும் அருகே அமர்ந்துகொண்டான்.

சர்வமகியோ, தன் தந்தையின் நினைவிலேயே உழன்றுகொண்டிருந்தாள். விழிகளோ மூடியிருந்தன. உதடுகளோ தன் தந்தை மீண்டுவரவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்தவாறு, எதையோ முணுமுணுத்துக்கொண்டிருந்தன.

தன் மேலாடையைப் பற்றிக்கொண்டிருந்த சர்வமகியின் கரங்களையே கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டிருந்தவன், பின் அவள் முகத்தைப் பார்த்தான்.

இன்னும் அவள் விழித்தாளில்லை.

இந்த சூழ்நிலையை இவள் எப்படிக் கையாளப்போகிறாள்? நினைக்கும்போதே, அநேகாத்மனுக்கு, மெல்லிய பதற்றம் தொற்றிக்கொண்டது.

“மகி…” என்றான் பட்டெனத்தழுவிய மென் குரலில்.

அவளோ, தன் விழிகளைத் திறக்காமலே,

“எ… என் அப்பாக்கு ஒன்றுமாகாதல்லவா?” என்று கேட்டாள் கேட்பவர் உயிரைக் கரைக்கும் குரலில்.

அவளுடைய குரலில் ஆவி கரைந்தவனாக, அவளுடைய முகத்தைப் பார்த்தவனால், உண்மையும் கூறமுடியவில்லை, பொய்யும் பகரமுடியவில்லை. இருதலைக் கொல்லியெறும்பாகத் தவித்தவன், மெதுவாக அவள் மார்பில் பதிந்திருந்த மெல்லிய மென் கரங்களுக்குமேல் தன் பெரிய கரத்தைப் பதித்து, அழுத்திக் கொடுத்தவன்,

“மகி… ஹோப் ஃபோர் த பெஸ்ட்… அன்ட் கன்ரோல் யுவர் செல்ஃப்… யு கான் ஹான்டில் திஸ்…” என்றான் மென்மையாக. அப்போதும் அவள் விழிகளைத் திறந்தாள் இல்லை.

இறுதியாக, வாசுதேவனின் அறையிலிருந்து வைத்தியர் ஒருவர் சோர்வுடன் வெளியே வந்தார். அவருடைய முகத்தைப் பார்த்ததுமே, அநேகாத்மனுக்கு விபரம் புரிந்தது.

சுர்வமகியின் வலது தோளில், தன் இடது கரத்தைப் பதித்து அழுத்திக் கொடுக்க, சர்வமகி மெதுவாக விழிகளைத் திறந்தாள். அவளுடைய விழிகள் முதலில் யாசகமாக ஏறிட்டது, அநேகாத்மனைத்தான்.

அவன் விழிகள் கூறிய செய்தியை உணர்ந்தவள், “நோ… நோ… இ… இருக்காது…” என்று பதற்றத்துடன் திரும்பி வைத்தியரைப் பார்த்தாள். அங்கே அவர்,

“ஐ ஆம் சாரி… மிஸ் வாசுதேவன்… நாங்கள் முடிந்த வரை முயன்றோம்… ஆனால்…” என்று அவர் தயக்கமாக இழுக்க,

இறுதியில் வாசுதேவன் இயற்கை எய்தினார் என்கிற செய்தியைக் கேட்ட அந்தக் கணம், அவள் நொறுங்கிப்போனாள்.

வேகமாக அநேகாத்மனின் கரத்தை உதறிவிட்டு இருக்கையை விட்டு எழுந்தவள்,

“இல்லை… இல்லை… என் அப்பாவுக்கு ஒன்றுமில்லை… ஹி வில் பி ஆல்ரைட்… ஹி வில் பி ஆல் ரைட்… எங்களை விட்டு அவரால் போகமுடியாது… போகவும் முடியாது… ஹி வில் பி ஆல் ரைட்…” என்று பிதற்றியவள், என்ன செய்கிறோம் என்பது புரியாமலே, அந்த வைத்தியசாலையை விட்டு வேகமாக ஓடத்தொடங்கினாள்.

எங்கே போகிறோம், என்ன செய்கிறோம் என்பதை உணராமலே, கால்

போன போக்கிற்கு வேகமாகச் சென்றாள். தன் முன்னால் வந்த பாதசாரிகளையோ, வைத்தியர்களையோ, தாதிகளையோ, யாரையும் அவள் கண்டுகொள்ளவில்லை. அவளருகே வந்த தாதி ஒருவரை அவள் இடித்ததைக் கூட அவள் உணரவில்லை.

எதையோ கண்டு அஞ்சிப் பயந்து ஓடுபவளாக, எதிலிருந்தோ தப்புபவளாக, எதிலிருந்தோ தன்னைக் காப்பாற்ற முயல்பவளாக, அந்த இடத்தை விட்டே வெறிகொண்டவள் போல ஓடத்தொடங்கினாள்.

இதை அநேகாத்மன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கலங்குவாள், தவிப்பாள், கதறுவாள் என்று எண்ணியிருந்தவன், அவள் வேகமாக அந்த இடத்தை விட்டு ஓடத் தொடங்கியதும் ஒரு கணம், ஒன்றும் புரியாமல் சிலையென மலைத்து நின்றான்.

“மிஸ்டர் அநேகாத்மன்…” என்று வைத்தியர் அவனை அழைக்க, அப்போதுதான் சுயநினைவு பெற்றவனாக, “மகி… ஸ்டாப்…” என்று தன்னை மறந்து கத்தி அழைத்தவாறு, நூறுமீற்றர் ஓடும் விரனைப்போல, அவளைப் பின்தொடர்ந்து ஓடத்தொடங்கினான்.

அங்கே நிற்பவர்கள் தன்னை ஒருமாதிரி வியப்புடன் வெறித்துப் பார்ப்பதையோ, அவர்கள் தன்னை, ஒரு பைத்தியக்காரன் போல நினைத்துக்கொள்வதையோ அவன் சிறிதும் கண்டுகொள்ளவில்லை.

சர்வமகியோ அவன் அழைப்புக்குச் சிறிதும் செவிசாய்த்தாளில்லை. கூடவே தன் ஓட்டத்தையும் நிறுத்தவில்லை. என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்று எதுவும் புரியாதவளாக, பிரதான வீதியில், வந்துகொண்டிருக்கும் வாகனங்களைக் கூட கருத்தில் கொள்ளாது, வேகமாக வீதியைத் தாண்டத் தொடங்கினாள்.

வேகமாக சர்வமகியை நோக்கி ஓடிப்போனவனுக்கு, அவள் பிரதான வீதியை வேகம் குறையாமலே, கடக்க முயல்வதைக் கண்டதும், இவன் உயிர் ஒரு முறை ஊசலாடி நின்றது.

“சர்வமகி… டோன்ட் டூ தட்… ஸ்டாப்…” என்று அலறியவாறு அவளை நெருங்குவதற்குள் அவனுடைய உயிர் எங்கோ போய் வந்தது. இதயம், இடம்மாறி தொண்டைக்குழிக்குள் நின்று துடித்தது. உடலிலிருந்து இரத்தம் முழுவதும் வடிவதுபோல உடல் வெளுறிப்போனது.

அதற்கிடையில் பெரிய ட்ரக் ஒன்று வேகமாக சர்வமகியை நோக்கி வர அதைப் பொருட்படுத்தாமல் வெறிகொண்டவள் போல சர்வமகி ஓட, அதைக் கண்டவனுக்கு சர்வமும் அடங்கிப்போனது.;.

“சர்வ…மகி… மூவ்… டாமிட்… மூவ்…” என்று இவன் கத்த, அவளோ எதையுமே உணராமல், தன் போக்கில் போய்க்கொண்டிருந்தாள்.

“மகி... நில்...” என்கிற அவனுடைய குரலை அவள் கேட்பதாகவே இல்லை. கடைசித் தருனத்தில், ஆபத்து என்னும்போது, தன்னைக்

காக்க ஒரு வேகம் கூடுமே, அந்த அசூர வேகத்துடன் அவளை நெருங்கத் தொடங்கினான் அநேகாத்மன்.

ஒன்று... இரண்டு... மூன்று... க்ரா....ஷ்.... கரீச்... பாங்க்..... என்கிற பெரும் சத்தம் எழுந்தது.

அந்தப் பெரிய வாகனத்தை ஓட்டிவந்தவனால், இப்படித் தன் முன்னால், ஒரு உருவம் திடீர் என்று ஓடிவரும் என்பதை எதிர்பார்க்காததால், உடனேயே பிரேக்கை அழுத்த முடியவில்லை. எப்படியோ சமாளித்து பிரேக்கை அழுத்தியும், எச்சரிக்கை மணியை அடித்தும், அந்த வாகனம், தன் கட்டுப்பாட்டையும் மீறி, சர்வமகி நின்றிருந்த இடத்தையும் தாண்டிச் சென்று ஒரு இடத்தில் நின்றிருந்தது.

அதேநேரம், அந்த வாகனம், சர்வமகியை நெருங்கிய அந்தக் கணத்தில், கண்ணிமைக்கும் நொடியில், கதிர்முனை இடைவெளியில் அந்தப் பெரிய வாகனத்திடம் இருந்து சர்வமகியைக் காத்து, இழுத்தவாறு மறு பக்கமாகச் சென்று நின்றிருந்தான் அநேகாத்மன்.

அநேகாத்மனுக்கு ஒரு கணம், தான் சர்வமகியைக் காப்பாற்றி விட்டோம் என்பதையும், அத்தனை தொலைவிலிருந்து எப்படி இத்தனை வேகமாக ஓடிவந்தோம் என்பதையும் நம்ப முடியவில்லை. முக்கியமாக சர்வமகி எப்படி அந்த பெரிய வாகனத்தின் சில்லில் நசுங்காமல் தப்பினாள் என்பதை இவனால் சிறிதும் யூகிக்கவே முடியவில்லை.

உடல் முழுவதும் கோபம் கொப்பளிக்க, நீண்ட பெரிய மூச்சை எடுத்துத் தன்னைச் சமாதானப் படுத்த முயன்றவனுக்கு அது முடியாமல் போகத் தன் காலைப் பலம் கொண்ட மட்டும் தரையில் உதைத்தான். தன் இரு கரங்களாலும், தன் தலைமுடியை இறுகப் பற்றியவாறு கொஞ்சநேரம் குனிந்து நின்றான். கோபம் சற்றும் மட்டுப்படுவதாயில்லை. மீண்டும் மீண்டும் தன் காலைத் தரையில் உதைத்தவன், கோபம் அடங்காமலே அவளைத் திரும்பிப் பார்த்தான். முகத்தில் கொன்றுவிடும் வெறி தாண்டவமாடியது.

வேகமாக அவள் பக்கமாகத் திரும்பியவன், ஓங்கி அவள் கன்னத்தில் ஒன்று போடத் தன் வலக் கரத்தைத் தூக்கினான். ஆனால் அதற்கு மேல் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அன்று அவள் கனவில் பிதற்றியபோது, அவளை அறைந்ததன் வலி, இன்றுவரை அவனை விட்டு விலகவில்லை.
ஆனாலும் கோபம் மட்டுப்பட மறுத்தது. மீண்டும் அவள் சிக்க இருந்த ஆபத்தே, அவன் மனதில் திரும்பத் திரும்ப ஓடிக்கொண்டிருந்தது.

"யு க்ரேசி டாம்... ஸ்டுபின் வுமன்... உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? பைத்தியக்காரி.... கொஞ்சம் தாமதித்திருந்தாலும்... கொஞ்சம் தாமதித்திருந்தாலும் என்னவாகியிருப்பாய்? அறிவு கெட்டவளே... புத்தி வேண்டாம்..." என்று சீறியவன், "நான் வராமல்

இருந்திருந்தால்... நீ இப்போது... நீ இப்போது... அந்த சில்லின்..." அதற்கு மேல் அதைக் கற்பனைகூட செய்ய முடியாதவனாகத் தன் விழிகளை இறுக மூடி அந்த நினைவிலிருந்து வெளியேற முயன்றான்.

";ஐ... ஐ தோட்... ஐ தோட்... ஐ லொஸ்ட் யு... ஐ தோட்... ஐ ஆம் நாட் கோய்ங் டு சீ யு எகெய்ன்.... என் உயிரே... என்னை விட்டுப் போவதுபோல்... நான்..." என்றவன், அதற்கு மேல் பேசய இயலாதவனாக, குரல் கம்ம "டாமிட்..." என்றவாறு, வேகமாகத் தன் விழிகளைத் திறந்து அவளை வெறித்துப் பார்த்தான்.

"ஏன்டி... ஏன் என்னை இப்படிச் சித்திரவதைப் படுத்துகிறாய்... உன்னைக் காணும் முன் நான் எந்த வலியும் நுகராமல், சுதந்திரமாக... சொல்லப் போனால் மிக்க மகிழ்ச்சியாக இருந்தேன்... இப்போ... ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு வினாடியும் உனக்காக நான் துடித்துக் கொண்டிருக்கிறேன்... ஏன்... ஏன்டி... உனக்காக நான் ஏன் துடிக்கவேண்டும்... எனக்கென்ன வில்லங்கம்... சொல்... வாயைத் திறந்து சொல்..." என்று அவன் சீற்றத்துடன் கர்ஜிக்க, அவளோ அவன் வேறு யாருடனோ போசுவதுபோல எங்கோ வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் எதுவும் பதில்கூறாது, அமைதியாக இருக்க, வெறிகொண்டவனாக, அவள் தோள்களைப் பற்றி இழுத்து உலுக்கி,

"உன்னிடம்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்... பதில் சொல்..." என்றான் அவன். மிதமிஞ்சிய சினத்தில் பற்கள் கடிபட, வார்த்தைகள் கரடு முரடாகத், தெறித்து, வந்து விழுந்தன.

அவளோ, இன்னும் எதுவும் புரியாமல், தன்னிலையில் இல்லாமல் எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க, அப்போதுதான் அவள் நிலையை உணர்ந்தான் அநேகாத்மன்.

உடனே தன் கோபத்தை ஒதுக்கியவன், அவளுடைய முகத்தைத் தன் கரங்களில் பற்றித் தூக்கி "மகி..." என்றான்.

அவளுடைய முகமோ எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. காலம் கொடுத்த அனுபவப் பாடம் அவளை மரத்துப்போகச் செய்ததோ?

முகத்தில் விழுந்திருந்த கூந்தலை, நடுங்கிய விரல்களால், விலக்கி,

"மகி... லுக் அட் மி... இங்கே... என்னைப் பார்..." என்று அவளுடைய முகத்தைக் குலுக்கி, அவளை சுயநினைவுக்கு வரவழைக்க முயன்றான்.

அவன் பல முறை அழைத்தும் அவளுடைய விழி எங்கோ கண்களுக்கெட்டா தொலைவை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க, அவள் பார்வையும், அவள் செயலும், அவனுக்கு அச்சத்தை ஊட்ட,

“ஹெய் மகி... இட்ஸ் ஓக்கே... உனக்கொன்றுமில்லை, என்று அவளை பல முறை உலுக்கியும் அவள் நிகழ்காலத்திற்கு வந்தாள் இல்லை.

“மகிம்மா... இட்ஸ் ஓக்கே... இட்ஸ் ஓக்கே... யு வில் பி ஆல்ரைட்... இதோ என்னைப் பார்... உனக்கொன்றுமில்லை... மகி... கமோன்... கம் பக் டு யுவர் சென்ஸ்... விழித்துக்கொள்... மகிம்மா...” என்று பல முறை அவளுடைய உணர்வைத் திருப்பிக்கொண்டுவர முயன்று அவன் தோற்றான். அவள் விழிகளில் தன் விழிகளைக் கலக்க முயன்று தோற்றான்.

எப்போதும் நம்பிக்கையைத் தேக்கியிருந்த அந்தக் கடல்போன்ற நீண்ட விழிகளில், வெறுமை மட்டுமே சூழ்ந்திருக்க, அதை மேலும் காண முடியாதவனாக, அதில் எப்படியாவது உயிர்ப்பைக் கொண்டுவரவேண்டும் என்கிற வெறி எழ, என்ன செய்கிறோம் என்பதை உணர்வதற்குள்ளாகவே, அவன் இதழ்கள், அவள் இதழ்களை மூடிக்கொண்டன.

தன் மூச்சுக் காற்றை, தன் உணர்வை, அந்த இதழ்களினூடாக அவளுக்குக் கடத்தி அவளை உயிர்ப்பிக்க முயன்றுகொண்டிருந்தான் அந்தக் காவலன்.

அந்த நான்கு இதழ்களின் சங்கமத்தில், அண்ட சராசரமும், அப்படியே நின்றுபோனதோ, ஈரேழு பதினான்கு உலகமும் தம் செயற்பாட்டை அப்படியே நிறுத்தினவோ, இல்லை... அந்தப் புவிதனில், அவனும் அவளும் மட்டும்தான் தனித்திருந்தனரோ... அப்படித்தான் அநேகாத்மனுக்குத் தோன்றியது. அந்த ஒற்றை இதழ் அணைப்பில், அவனுடைய உயிர் பொருள் ஆவி அனைத்தும் கரைந்து அவள் உயிருடன் கலப்பதுபோல தன்னை மறந்து. தன் சூழ்நிலை மறந்து, அவனுடையவளானவளின், நிலை மறந்து அப்படியே நின்றுகொண்டிருந்தவனுக்கு, அவளை விட்டு விலகும் எண்ணம் அணு அளவம் இருக்கவில்லை.

காய்ந்த நிலத்தில், மழை நீர் கலந்தால் அப்படியே அந்த நீரை உறிஞ்சிக்கொள்ளுமே, அது போல, பலநாள் பட்டினி கிடந்தவனுக்கு, அறுசுவை உணவு கிடைத்தால், கிடைக்குமே இன்பம் அது போல, அவளுடைய உதடுகளை விட்டுப் பிரிய முடியாமல், அதுவே தனக்குரிய இடம் என்பதுபோல, அதுவே அவன் இம்மைக்கும், மறுமைக்கும் இன்பம் கொடுக்கும் உலகம் போல, அவள் இதழ்களை விட்டுப் பிரியாத அநேகாமன் நின்றிருந்த கணங்கள் பலவோ, கொஞ்சமோ,

மெதுவாக, அவளிடமிருந்து அசைவு வர, அவன் தன்னை சுதாரிக்க முயன்றான்.

ஆனாலும், அந்த இதழ்களின் ஒற்றலிலிருந்து அவனால் இலகுவில் விலகமுடியிவல்லை. அப்படியே இன்னும் அவளுக்குள் புதைந்து

புதைந்து தொலைந்துவிடவேண்டும் என்று மனம் கரைந்தது.

ஆனாலும், சர்வமகியின் நிலையினைத் தன் புத்திக்குள் வலிந்து புகட்டியவன், பிரிய மனமில்லாதவன் போன்று, அவளை மென்மையாக விலக்கினான். இப்போது அவனுடைய விழிகள், அவள் விழிகளுடன் கலந்து அவளுடைய உள்ளத்தை ஆராய முயன்றது.

சர்வமகியிடம், இப்போது, வெறித்த பார்வை போய், அந்த இடத்தில் புரியாமையும், திகைப்பும் குடிகொண்டிருந்தது. சற்று முன் என்ன நடந்தது என்பதைக் கூட, அவளால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. புரியாமல் அவனையே ஏறிட்டுப் பார்க்க, அந்தப் பார்வையின் பொருள் உணர்ந்தவனாக, அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டான் அநேகாத்மன்.

அவனுக்கும் என்ன பேசுவது என்று தெரியவில்லை. அப்படியே பேசினாலும் அவள் வேதனை ஆறுமா என்ன? ஆறக் கூடிய வலியையா அவள் அனுபவித்திருக்கிறாள். அதை விட மௌன மொழியே போதுமானது என்பது போல அப்படியே கொஞ்ச நேரம் அவளை அணைத்தவாறு நின்றான்.

எங்கோ தூரத்தில் ஏதோ ஒரு வாகனத்தின் எச்சரிக்கை மணிச்; சத்தம் காதைக் கிழிக்கத் திடுக்கிட்டு சுயநினைவுக்கு வந்தாள் சர்வமகி.

சிறிது நேரம் அவளுக்கு எதுவுமே புரியவில்லை. மலங்க மலங்க விழித்தவள், சூழ்நிலை புரிய, அவன் பிடியிலிருந்து விலக முயன்றாள். .

அவனோ அவளைத் தன் அணைப்பிலிருந்து விடுவித்தான் அன்றி, அவள் கரத்தை விட்டானில்லை. எங்கே தான் கரத்தை விட்டால், அவள் மறுபடி தெருவைக் கடந்து சென்றுவிடுவாளோ என்று அஞ்சியவனாக,

“வா சர்வமகி... வீட்டுக்குப் போகலாம்...” என்றான் மென்மையாக.

வீடு என்றதும், சர்வமகிக்கு மீண்டும் தந்தையின் நினைவு பூதாகரமாகத் தாக்கியது.
வீட்டுக்கா? எப்படி? எப்படி அவளால் அங்கே போகமுடியும். அப்படியே போனாலும், அவள் சகோதரர்களுக்கு என்ன பதில் சொல்வாள்? நம்முடைய அப்பா நம் எல்லோரையும் விட்டுவிட்டுப் போய் விட்டார் என்றா? அதைக் கேட்டால், அவர்கள் என்ன பாடுபடுவார்கள்? வேதனையில் முகம் கசங்க, அநேகாத்மனை ஏறிட்டாள் சர்வமகி.

“எ... எப்படிப் போவேன்... அவர்களிடம் என்னவென்று சொல்வேன்... அவர்களுக்கு எப்படிப் புரியவைப்பேன்... ஒ... ஒன்றுமே விளங்கவில்லையே...” என்று கூறியவளுக்கு உண்மையிலேயே எல்லாம் மரத்துவிட்டதுபோலத் தோன்றியது.

ஐயோ...! இனி அவள் என்ன செய்யப் போகிறாள்? தந்தையிடம் சகோதரர்களைப் பார்த்துக்கொள்வேன் என்று

வாக்குக்கொடுத்திருந்தாலும்;, அவள் ஒருத்தியாக எப்படி அவர்களைக் காப்பாற்றுவாள்? அது அவளால் முடியுமா? தனி ஒருத்தியாக இருந்து அவளால் சகோதரர்களின் தேவைகளைக் குறையின்றி பூர்த்தி செய்ய முடியுமா? எப்படி முடியும்?

அச்சமும், கலக்கமும் போட்டி போட, அடுத்த அடி எப்படி எங்கே என்னவென்று வைப்பது என்பது புரியாமல் மலங்க மலங்க விழித்தவளைக் கண்டதும், இவன் இதயம் கசங்கியது.

அவளை நெருங்கி நின்றவன், அவளுடைய இடக் கரத்தை விடாமலே, தன்னுடைய வலது கரத்தைத் தூக்கி, அவளது சங்குக் கழுத்தில் வைத்து, அதன் மென்மையை உணர்ந்தவாறே,

“அவர்களுக்குப் புரியவைப்பது என் பொறுப்பு மகி... நீ அதையெல்லம் என்னி வருந்தாதே... இப்போது வா... போகலாம்...” என்றவன் அவள் கரத்தைப் பற்றி இழுக்க,

“ப... பயமாக இருக்கிறது ஆத்மன்...” என்றாள் நடுங்கும் குரலில். அந்தக் குரலில் அநேகாத்மன், துடித்துத்தான் போனான். எல்லாவற்றையும் இழந்த கையறு நிலையில், நிற்பவர்களின் குரல் அது.

“ஷ்... மகி... நான்தான் இருக்கிறேன் என்று சொன்னேனே... பிறகு எதற்கு கலக்கம்.... வா...” என்றவாறு அவளை இழுத்துக்கொண்டு அவன் முன்னோக்கிச் செல்ல, இழுவிசையால், அவனைப் பின்தொடர்ந்தாள் சர்வமகி.

நிலவு 17

அநேகாத்மன் அவளைத் தன் காரில் இருத்தி, அவளுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்லும் வரைக்கும்; அவள் கரத்தை விட்டானில்லை. அவனுடைய இறுகிய அழுத்தமான பிடியில், அவளுடைய இடது கரம் கண்டிச் சிவந்து போனது.

இருந்தும் அவன் தன் பிடியை இளக்கவில்லை. அவனுடைய மனக்கண்ணில், சர்வமகியை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்த அந்த பெரிய வண்டியே நினைவில் நின்று பதற வைத்ததுக் கொண்டிருந்தது. கொஞ்சம் தாமதித்திருந்தாலும், அவன் சர்வமகியை இழந்திருப்பான். முழுவதுமாக இழந்திருப்பான்.

இனியும் சர்வமகியை விட்டு விலகியிருக்க முடியுமா என்று அவனுக்குத் தெரியவில்லை. சூடு கண்ட பூனையாக, அவள் மேலும் ஏதாவது ஆபத்தில் சிக்கிவிடுவாளோ என்று மனம் அல்லல் பட்டது. இந்த பதற்றம் எதற்காக என்று அவனால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், நிச்சயமாக சர்வமகியை அப்படியே விட்டுவிட முடியாது என்பதைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டான்

அநேகாத்மன்.
வாசலிலேயே அனைவரும் அவர்களுக்காகக் காத்திருக்க,
அநேகாத்மன் தன் பிடியிலிருந்த சர்வமகியின் கரத்தை அழுத்திக்கொடுத்துவிட்டு, முதலில் காரைவிட்டு இறங்கினான்.

சூழ நின்றவர்களை ஒரு கணம் விழிகளால் அலசியவன், மறுபக்கம் சென்று கார்க்கதவைத் திறந்துவிட, இறங்கும் எண்ணம் இல்லாதவாளாக சர்வமகி எங்கோ பார்த்துக்கொண்டிருந்தாள். விழிகளோ, எந்த நேரமும் நீரைச் சிந்திவிடுவோம் என்று கண்களில் கண்ணீர் குளம்கட்டி நின்றிருந்தன.

அவள் நிலை புரிந்தவனாக, "மகி..." என்றான். கலக்கம் மாறாமலே, அச்சத்துடன் அநேகாத்மனை ஏறிட, அந்த விழிகளின் வலிகளைத் தன்னதாக உணர்ந்தான் அவன். அவளை இழுத்து அணைக்க உள்ளம் பரபரத்தது. ஆனால் அது சரியான சூழ்நிலை அல்லவே.

ஒரு வாறு தன் தொண்டையைச் செருமித் தன் தவிப்பை மறைக்க முயன்றவன்,

"நான் இருக்கிறேன்... இறங்கு...." என்றான் அதிகம் பேசாமல்.

சர்வமகி மீண்டும் தயங்க, அவளை நோக்கி நன்கு குனிந்து நின்று,

"ஹேய்... என் மீது நம்பிக்கையில்லையா? ம்...? என்றான் மென் குரலில், கூடவே சற்று அழுத்தத்தையும் கூட்டி.

விரல்கள் நடுங்க, உடல் தள்ளாட, காரிலிருந்து இறங்கியவளுக்கு, அநேகாத்மனின் அருகாமை பெரும் தைரியத்தைக் கொடுத்தது என்றுதான் சொல்லவேண்டும். அவன் இல்லாமல் இருந்திருந்தால், நிச்சயமாக அவளால், அவர்களை எதிர்கொண்டிருக்க முடியாது.

தமது சகோதரியைக் கண்டதும்,

"அக்கா... அப்பா எப்படியிருக்கிறார்..." என்றவாறு, அவளை எல்லோரும் சூழ்ந்து கொண்டனர்.

"அக்கா... அப்பாக்கு என்ன? இப்போது எப்படி இருக்கிறார்? அவரை இனி வீட்டிற்கு வர விடுவார்களா?" என்று அடுக்கடுக்காகக் கேட்ட கேள்விக்கு அவள் எங்கிருந்து பதில் சொல்வாள்?

"அ... அப்பா... அவர்... வந்து..." என்று தடுமாறியவளுகுகுத் தன் தந்தையின் இழப்பு பெரும் புயலெனத் தாக்கியது.

சகோதரர்களை வேதனை விழி கொண்டு நோக்கியவள், அதற்கு மேல் தாங்க முடியாதவளாக வீட்டிற்குள் ஓடினாள். தன் அறைக்குள் நுழைந்து கதவை அறைந்து சாத்தியவள், அதற்கு மேல் முடியாதவளாகக் கதறத் தொடங்கினாள்.

திடீர் என்று வெறிகொண்டவள் போல அறைக்குள் ஓடிய சகோதரியைப் புரியாமல் பார்த்த தேவகி, அவளுடன் வந்த அந்தப் புதிய உயரமான மனிதனை அச்சத்துடன் பார்த்தாள்.

“எ... என்ன வாகிவிட்டது... அக்கா ஏன் இப்படி... அ... அப்பாக்கு இப்போது எப்படி?” என்று நடுக்கத்துடன் கேட்டாள்.

“சொல்கிறேன்... எல்லோரும் உள்ளே போய் பேசலாமா?” என்று தன் தொண்டையைச் செருமிக் கொண்டு கேட்டான் அநேகாத்மன்.

மறுக்காமல் அனைவரும், உள்ளே சென்றனர். அநேகாத்மன் பக்குவமாக விஷயத்தைச் சொன்னான். சோன்னதும் அங்கே ஊசி விழுந்தால்கூட ஓசை கேட்கும் அளவுக்கு அமைதி நிலவியது.

முதலில் விசும்பத் தொடங்கியவள் தேவகிதான். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் தொடங்க, அங்கே பெரும் சோகக் காட்சி இடம் பெற்றது.

உடனே செய்தி பரவ, மெது மெதுவாக ஆட்கள் வரத் தொடங்கினார்கள். சர்வமகி, யார் வந்தார்கள், யார் போனார்கள் என்கிற எந்த உணர்வும் இல்லாமல் வெறித்தவாறு அமர்ந்திருந்தாள். வந்தவர்கள், ஆள் ஆளுக்கு அவளைச் சமாதானப் படுத்துகிறோம் என்கிற பெயரில், இருக்கிற வேதனையை அதிகப்படுத்திவிட்டுச் சென்றதுதான் மிச்சம்.

“ஏதோ... உன்னுடைய அப்பன் தண்டனை அனுபவிக்காமல் இப்படிப் போய் சேர்ந்ததே பெரிய காரியம்...அதை நினைத்து வருந்தாமல் உன்னைச் சமாதானப் படுத்திக் கொள்ளம்மா...”

“உன்னுடைய தந்தை மானஸ்தன். தவறுசெய்யாமலே தண்டனை அனுபவிக்கப்போகிறோம் என்பதை அறிந்ததுமே பொசுக்கென்று போய் விட்டானே...”

“பாவி மனுஷன்... சங்கிலித் தொடராக ஐந்து பிள்ளைகளைப் பெற்றுப் போட்டுவிட்டு நிம்மதியாகச் போய் சேர்ந்துவிட்டான்... இனி அவர்களை யார் பொறுப்பேற்றுப் பார்ப்பார்கள்... எல்லாம் தலைவிதி...”

“விதை விதைத்தவன் தண்ணி ஊற்றத்தானே வேண்டும்... படைத்த கடவுள் வேண்டியதைச் செய்யமாட்டானா?”

“முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்... செய்த பாவம் சும்மாவிடுமா... அதுதான் மனுஷன் பொசுக்கென்று போய்விட்டான்...”

இப்படிப் பல குரல் பல விதமாக வந்தன. இருந்தாலும் எவருமே நிர்க்கதியற்று நிற்பவர்களைத் தாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்; என்று என்று இதுவரை கூறவில்லை.

அவர்களையும் குற்றம் சொல்ல முடியாதே... அவர் அவர்களுக்கு

ஆயிரம் பிரச்சனை. அந்தப் பிரச்சனைக்குள் இதை ஒரு பிரச்சனையாக எடுத்துக்கொள்ளச் சொல்லி கேட்க முடியுமா?

நல்லவேளை அநேகாத்மனே முன்னின்று அனைத்துக் காரியங்களையும் குறையின்றி நிறைவுசெய்ததால், யாருமே, செலவைப் பற்றி வருந்தவில்லை. பணத் தேவையென்று சர்வமகியிடம் யாரும் யாசித்து நிற்கவில்லை. ஏன் யாருமே சர்வமகியை நெருங்கவில்லை... நெருங்கவில்லை என்பதைவிட, நெருங்கவிடவில்லை என்பதே சரியானதாக இருக்கும். அதற்குக் காரணம் அநேகாத்மன்.

ஆரியக் கூத்தாடினாலும், காரியத்தில் கண்ணாக இருப்பதுபோல, அநேகாத்மன், மரணச்சடங்கிற்குரிய உதவியைச் செய்துகொண்டிருந்தாலும், அவனுடைய கவனம் முழுவதும், சர்வமகியிடமேயிருந்தது.

அந்த அவசரத்திலும், இடையிடையே, தேவகியைக் கொண்டோ, இல்லை மாதவியைக் கொண்டோ, சர்வமகிக்கு குடிப்பதற்கு ஏதாவது கொடுத்து அனுப்பிக்கொண்டிருந்தான். கொடுத்தவை அனைத்தும். குடிக்கப்படாமல், அப்படியே வைக்கப்பட்டிருந்தது என்பது வேறு கதை.

காலம் என்பது யாருக்காகவும் காத்திருப்பதில்லையே... பகல் போய் இரவு வருவதை யாரால்தான் தடுக்க முடியும்?

வாசுதேவனை எரித்து சாம்பலாக்கிய கையோடு உறவினர் கூட்டம் கல்லெறிந்த காக்காய்களாகக் கலைந்து போயினர். ஒரு வேளை வாசுதேவன் கோடிக்கணக்கில் பணம் சேர்த்து வைத்திருந்தால், உறவினர்கள் கொஞ்சமாவது யோசித்திருப்பார்களோ என்னவோ. எதுவுமில்லாத வெற்று மகனின் பிள்ளைகளைப் பொறுப்பேற்க அவர்களுக்கு பைத்தியமா என்ன?

கடைசியாக ஐவரும் தனித்து விடப்பட்டனர். உள்ளத்தால் நொருங்கிப்போயிருந்த சர்வமகி தன் சகோதரர்களுக்காகத் தன்னைத் திடப்படுத்த முயன்றாலும், முடியாமல் பெரிதும் தவித்துப்போனாள். இருந்தும், அவர்களை அவளின்றி யார் தேற்றப்போகிறார்கள். குறைந்தது, அவர்கள் முன்னிலையிலாவது தைரியமாக இருப்பதுபோலக் காட்டிக்கொள்ளவேண்டுமே.

தந்தையில்லாத உலகம், வெறும் சுடுகாடுபோலத் தோன்ற, அவர் நினைப்பிலேயே உழன்றவாறு, முன்னறையில், சுவரோரமாகத் தரையில் அமர்ந்து, சிறுவயதில் எடுத்த படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள் சர்வமகி.

அவளுடைய கரங்கள், ஆவலுடன் அவள் தந்தையின் படத்தை வருடிக்கொடுத்துக் கொண்டிருந்தன. படத்திலே தன் கவனம் முழுவதையும் செலுத்திக்கொண்டிருந்தவளுக்கு, திடீர் என்று அருகே

நிழல் ஆட, தன் உணர்வு மாறாமலே திரும்பிப் பார்த்தாள்.

அநேகாத்மன்தான் கரங்களை மார்புக்குக் குறுக்காக கட்டியவாறு கதவிலே சாய்ந்து நின்றவாறு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன்தானே முன்னின்று அனைத்து இறுதிக்காரியங்களைச் செய்திருந்தான். அவன் இல்லாமல் இருந்திருந்தால், அவள் தனியாக என்ன செய்திருப்பாள்? நினைக்கும் போதே மலைப்பாக இருந்தது. அவனும் விடைபெறத்தான் வந்திருக்கிறான் என்று எண்ணியவள் நிலத்திலிருந்து எழும்ப முற்பட்டாள். உடல் தள்ளாடியது. ஏனோ சோர்வு பெரிதும் அவளை ஆட்கொண்டது. அவள் ஒழுங்காகச் சாப்பிட்டே மாதக் கணக்கு. இதில் வாசுதேவன் இறந்த இந்த நான்கு நாட்களில் அவள் பச்சைத்தண்ணி கூட வாய்க்குள் வைக்கவில்லை. தேவகியும், மாதவியும் அடிக்கடி தேனீர் கோப்பி என்று கொண்டுவந்து தந்தது நினைவிருக்கிறது.

ஆனால் அவற்றை அவள் குடிக்கவில்லை. அதை என்ன செய்தாள் என்றே அவளுக்கு ஞாபகமில்லை. இப்போது அவளுடைய வேதனையையும் மீறி பலமில்லாத உடம்பு தள்ளாடியது. சிரமப்பட்டுத் தன்னைத் திடப்படுத்தியவள்,

“நீங்களும் போய்வரப் போகிறீர்களா...” என்றவளுக்கு அவளையும் மீறிக் குறல் நடுங்கத் தொடங்கியது.

தற்போது இருந்த துணை அவன் மட்டுமே. அவனும் போனால் அவள் தனியாக அல்லவா அந்த உலகத்தைச் சந்திக்கவேண்டும். நினைத்தபோதே கொஞ்சம் இருந்த பலம் கூட மங்கிப்போனது.

மறுப்பாகத் தலையை ஆட்டியவன், “உன்னுடன் நான் சற்றுப் பேசவேண்டும்...” என்றான் அவன் அழுத்தமாக.

அந்தக் குரலுக்குப் பணிந்து இரண்டடி வைத்தவளுக்கு கால் தரையில் நிரந்தரமாக நிற்கமாட்டேன் என்பது போலநடுங்கத் தொடங்கின.

உடனே தான் யாசிக்கவந்ததை ஒதுக்கிவைத்தவனாக, இரண்டெட்டில் அவளை அணுகித் தளர்ந்த அவள் உடலை, பூ மாலையெனத் தன் கரங்களில் ஏந்திக்கொண்டான்.

ஏற்கெனவே அநேகாத்மனுக்குப் பின்னால் நின்றிருந்த தேவகி பதறிக்கொண்டு முன் வந்தாள்.

“அ... அக்காக்கு என்ன?” என்றாள் பயத்துடன்.

“ஒன்றுமில்லை... சாப்பிடாததால் வந்த பலவீனம் போலிருக்கிறது...” என்றவன் முதலில் தெரிந்த படுக்கையறைக்கு அவளை ஏந்திச் சென்று அங்கிருந்த ஒற்றைக் கட்டிலில் கிடத்தினான்.

“தேவகி... ஓடிப்போய் ஏதாவது குடிபாணம் இருந்தால் எடுத்துவா...” என்று அவன் உத்தரவிட, தேவகி பறந்தாள்.

அருகேயிருந்த தண்ணீர் போத்தலில் இருந்த தண்ணீரை எடுத்துத் தன் கரங்களில் ஊற்றியவன், அந்த ஈரத்தைக் கொண்டு அவள் முகத்தைத் துடைத்துவிட்டான். அவனுடைய ஈரக்கரம் பட்டதும், மெதுவாக விழிகளைத் திறந்தாள் சர்வமகி.

அவள் விழிகளைத் திறந்த பின்புதான் அநேகாத்மனுக்கு பெரும் நிம்மதியாக இருந்தது.

“ஆர் யு ஓக்கே...” என்று கனிவுடன் கேட்க, “ஆம்...” என்றவாறு எழுந்தமர முயன்றாள்.

உடனே அவள் தோளில் தன் கரங்களை வைத்து அழுத்தியவன், மீண்டும் படுக்கவைத்தான்.

“ரிலாக்ஸ்... படுத்துக்கொள்...” என்று உத்தரவிட தேவகி கையில் குளிர் பாணத்துடமும் கூடவே ஒரு தட்டில் உணவும் எடுத்து வந்தாள்.

“உன் அக்காவுக்கு கொடு தேவகி...” என்று உத்தரவிட்டுவிட்டுப் படுக்கையிலிருந்து எழுந்தான் அநேகாத்மன்.

தேவகி உணவுத்தட்டை மேசையில் வைத்துவிட்டு, சர்வமகியின் அருகே அமர்ந்து, பாணத்தை நீட்ட முகத்தைத் திருப்பினாள் சர்வமகி.

“எ... எனக்கு ஒன்றும் வேண்டாம்...” என்றாள் கம்மிய குரலில்.

“வட்... ஒன்றும் வேண்டாமா? நீ என்னதான் யோசித்துக்கொண்டிருக்கிறாய்? இந்த நான்கு நாட்களாக நீ எதுவுமே சாப்பிடவில்லை... குடிக்கவில்லை... இப்படியே இருந்தால் இந்த உடம்பு என்னத்திற்காகும்...” என்று அநேகாத்மன் பொறுமையிழந்து சீறினான்.

“ஐ ஆம் ஓக்கே... எ... எனக்கு எதுவுமே குடிக்க... குடிக்க வேண்டும் போல... இ... இல்லை...” என்றவளுக்குப் பேசுவதற்கே சக்தியிருக்கவில்லை.

“பேசுவதற்கே இத்தனை சிரமப்படுகிறாயே... உன்னால் எப்படி ஒழுங்காக எழுந்து நடமாட முடியும்...” என்ற அநேகாத்மன் தேவகியின் அருகே வந்து, விரலையும், தலையையும் அசைத்து அவளை எழும்புமாறு உத்தரவிட, தேவகி மறுக்காமல் படுக்கையை விட்டு எழுந்தாள்.

அவள் எழுந்ததும், இவன் சர்வமகியின் தலைப்பக்கமாக அமர்ந்தான். அடுத்து, என்ன என்பதை உணர்வதற்குள்ளாகவே, அவளைப் பலவந்தமாக எழுப்பித் தன் மார்போடு அழுத்திச் சாய்த்தவன், தேவகியை நோக்கித் தன் கரத்தை நீட்ட, அவன் என்ன கேட்கிறான்

என்பதைப் புரிந்துகொண்ட தேவகி, அந்தப் பழச்சாற்றை, அநேகாத்மனின் நீட்டிய கரத்தில் வைத்தாள்.

"ம்... குடி..." என்றவாறு பழச்சாற்றை அவள் வாயில் வைக்க, கலங்கிய விழிகளுடன், நிமிர்ந்து, அவன் முகம் பார்த்தவள்,

"ப்ளீஸ் வேண்டாமே..." என்றாள் கம்மிய குரலில்.

"கமோன்... சர்வமகி... உன்னை நம்பித்தான் உன் சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துக்கொள்வதற்காகத் தன்னும் நீ திடமாக இருக்கவேண்டும்... இப்படிப் பிடிவாதம் பிடித்து உனக்கு ஒன்றென்றால் அவர்களின் நிலை என்ன... தயவு செய்து உன் வேதனையை ஒதுக்கிவிட்டு... அவர்களுக்காகத்தன்னும் இதைக் குடி சர்வமகி..." என்று அழுத்தமாக்க கூறியவன் மீண்டு;ம் அவள் வாயருகே சாற்றைக் கொண்டு சொன்றான்.

அவன் கரத்தைப் பற்றி மறுப்பாகத் தலையாட்டியவள்,

"வே... வேண்டாம் ஆத்மன்... என்னை விட்டுவிடுங்கள்... எனக்கு இப்படி... இப்படி இருக்கத்தான் பிடித்திருக்கிறது..." என்றாள் விரக்தியாக.

"எப்படி இருக்கப் பிடித்திருக்கிறது என்கிறாய்?" என்றவனின் குரலில் எதையோ உணர்ந்தவள் அவனை நமிர்ந்து அண்ணாந்து பார்த்தாள். அப்போதுதான் அவர்கள் இருக்கும் நிலையைக் கண்டாள்.

அவனுடைய முன்புற உடலில் அவளுடைய பின்புற உடல் முழுவதும் பதிந்திருக்க, அவனுடைய இடது கரம் அவள் எழுந்துவிடாதிருக்க அவள் வயிற்றைச் சுற்றி வளைந்திருந்தது. வலது கரம் பாணத்தை ஏந்தியிருக்க, அவளை அணைத்தவாறு அமர்ந்திருந்தான்.

அந்த நிலை சர்வமகிக்கு எதையோ உணர்த்தியது. இப்படியே காலம் முழுவதும் இருந்துவிட்டால் வேதனையே அண்டாது என்று மனம் தவித்தது. அவன் மார்பிலிருந்து வரும் இதயத்தின் தாலாட்டு ஓசையைக் கேட்டவாறே, காலம் முழுவதும், தூங்கிவிடவேண்டும் என்று உள்ளம் பரபரத்தது. அப்படியே சிறுமியாக மாறி, அநேகாத்மனின் கரங்களில் இருந்துவிடவேண்டும் என்று மனம் தவித்தது. கூடவே, குழந்தையாகி, அவனுக்குக் கருவறை இருக்குமானால், அந்தக் கருவறையின் இருட்டில் நுழைந்து சுறுண்டு, ஒடுங்கி, இந்த உலகையே பார்க்காது பாதுகாப்பாக, அவன் கதகதப்பில் காலம் பூராவும் கிடந்துவிடவேண்டும் என்று உடல் பொருள் ஆவி அனைத்தும் ஏங்கியது.

ஆனால்... அது நடக்குமா? நடக்க முடியுமா? இல்லையே... இவை அனைத்தும் வெறும் கற்பனையில் மட்டும்தானே நடக்கும்...

சுய நினைவு பெற்றவளாக, அவசரமாக அவனிடமிருந்து தன்னை விடுவிக்க முயன்று தோற்றவள்,

“வி... விடுங்கள் என்னை...” என்றாள் திக்கித் திணறி.

“எதற்காக உன்னை விடவேண்டும், என்றவனின் வலிய அழுத்தமான இடக்கரம், அவள் வயிற்றை அழுத்தி, மேலும் தன்னோடு இறுக்க முயன்றது.

“ப்ளீஸ்... விடுங்கள்...” என்று முணுமுணுத்தவள், சங்கடத்துடன் தேவகியைப் பார்க்க, அவளோ, சகோதரி அந்தப் பாணத்தைக் குடிக்கமாட்டாளா என்கிற ஏக்கத்துடன், தமக்கையையே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“ஆத்மன்... ப்ளீஸ்...” என்றாள் அவன் கரத்தின் மீது தன் கரத்தை வைத்தவாறு.

“ஓக்கே... விடுகிறேன். அதற்கு முன்பு இந்தா... இந்தப் பாணத்தைக் குடி... விடுகிறேன்...” என்றான் அவன் பிடிவாதமாக.

“ஏன்... ஏன் இப்படி என்னை சித்திரவதைப் படுத்துகிறீர்கள்...” என்று தவிப்புடன் கேட்டவள், பாணத்தைப் பெறக் கையை நீட்டினாள்.

அவளின் திடத்தின் மீது நம்பிக்கை இல்லாதவன், பாணத்தைக் கைவிடாது அவளுடைய வாயருகே கையைக் கொண்டு சென்றான்.

இரண்டு வாய் பருகியவளுக்கு ஏனோ அழுகை வந்தது.

இது... இது... அன்னாசிச் சாறு. அவளுடைய தந்தைக்கு மிகவும் பிடித்த சாறு. மீண்டும் கண் கலங்க,
“இந்தச் சாறு என் தந்தைக்கு மிகவும் பிடித்தமானது...” என்றவள் அது வரை அடக்கிவைத்திருந்த அழுகை மீண்டும் பீறிட்டு வர, அழத் தொடங்கினாள்.

வேகமாக அருகேயிருந்த மேசையில் சாற்றை வைத்தவன்,

“ஷ்... மகி... இட்ஸ் ஓக்கே... ப்ளீஸ்... உன்னைத் திடப்படுத்திக்கொள்...” என்றவன் அப்படியே தன்னுடன் அவளை இறுக அணைத்துக்கொண்டான். அவளுடைய முகம், அவனுடைய பரந்த மார்பில் அழுந்தப் படிந்திருந்தது. விழிகளிலிருந்த வழிந்த கண்ணீரோ, அவனுடைய வெண்ணிற சேர்ட்டை நனைத்தது.
“அழாதே... ப்ளீஸ் அழாதே மகிம்மா...” என்று அவளை இறுக அணைத்து, தலையை வருடிக்கொடுத்தான். தன்னையும் மறந்து அவள் தலையில் தன் உதட்டைப் பொருத்தியவன்,

“எவ்ரிதிங் வில் பி ஓக்கே...மகிம்மா... ஐ பிராமிஸ் யு...” என்றான் மென்மையான குரலில்.

அந்த மகிமாவில் ஒரு கணம் தடுமாறியவள், பின்பு சூழ்நிலை பூதாகரமாகத் தாக்க,

“இல்லை... எதுவுமே சரியில்லை... நான் எப்படி... நான் எப்படி இவர்களைத் தனியாக வளர்க்கப்போகிறேன்... என்னால் அது முடியாது... அப்பா... அப்பா இருக்கும்போது, சிறியதாகத் தெரிந்த புள்ளி... இப்போது பூதாகரமாக...” என்று கூறியவள் அவனுடைய மார்புப் பகுதியில் உள்ள சேர்ட்டைத் தன் வலக்கரத்தால், அழுந்தக் கசக்கிப் பிடித்தாள்.

“என்னால் முடியவில்லை ஆத்மன்... தூங்கும்போதெல்லாம் அப்பாவின் நினைவாகவே இருக்கிறது... நான் என்ன செய்யட்டும்....? அபிதன் அப்பா எங்கே என்று கேட்டால் நான் என்ன சொல்லட்டும்... எனக்கு பயமாக இரக்கிறது ஆத்மன்... மிக மிகப் பயமாக இருக்கிறது... இந்த உலகத்தில் நான் மட்டும் தனித்துவிட்டதுபோல எனக்குத் தோன்றுகிறது... நான் என்ன செய்யட்டும்...” என்று கதறியவளைத் தேற்றும் வழி தெரியாது, அநேகாத்மனும் ஓய்ந்துபோய் அவளை வருடியவாறே அமர்ந்திருந்தான்.

அவனுடைய ஒரு கரம் அவளை அணைத்தவாறிருக்க, மறுகரம் அவள் உடல் முழுவதும் பயனித்து, வருடிக் கொடுத்து சமாதானப் படுத்த முயன்றது. என்னதான் முயன்றும், அவள் தன் நிலையிலிருந்து மாறினாளில்லை.

நீண்ட நேரம், அவனை அணைத்தவாறே அழுது தீர்த்தவள், இனிக் கண்ணீர் இல்லை என்கிற நிலை வந்ததும் ஓய்ந்துபோய் அப்படியே அமர்ந்திருந்தாள். இடைக்கிடயே வந்த கேவலுடன் சேர்ந்த விக்கல் ஒலி மட்டும் இல்லையென்றால், அவள் தூங்கிவிட்டாள் என்றே எண்ணியிருப்பான்.

கொஞ்ச நேரம் அப்படியே இருந்தவன், பின் மெதுவாக அவளைப் படுக்கையில் கிடத்தினான். அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலக்கவிட்டவன், பின் அவளுக்கு இரு பக்கமும் தன் கரங்களைப் போட்டவாறு அவளை நோக்கிக் குனிந்தான். கொஞ்ச நேரம் அவள் முகத்தை உற்றுப் பார்த்தவன், கண்ணீர் வழிந்த இரு விழிகளையும் மாறி மாறிப் பார்த்தான். பின் வழிந்த கண்ணீரைத் தன் பிறங்கை கொண்டு துடைத்துவிட்டவாறு,

“மகிம்மா... உன்னால் முடியும்... உன்னால் மட்டும்தான் முடியும்... சிறிய வயதிலேயே பெரிய பொறுப்புக்களையெல்லாம், சர்வசாதாரணமாக எடுத்து நடத்தப் பழகியவள் நீ... அப்படிப் பட்ட உனக்கு இது எல்லாம் சிரமமா என்ன? உன்னால் முடியாது என்றால், எவராலும் முடியாது மகி... யு வில் டு இட்... அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது... தவிர... உனக்கு பக்கபலமாக உன் துணை... உன் நண்பனாக... நான் எப்போதும்... எப்போதும்... உன் அருகே இருப்பேன்...” என்று எப்போதும் என்பதில் அழுத்திச் சொன்னவன், பின்; அவளுடைய முகத்தைத் தன் கரங்களால் ஏந்திக்கொண்டான்.

கண்களில் வழிந்த கண்ணீரை, பெருவிரல்களால் வருடித் துடைத்து விட்டவனுக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தது. ஒரு பெண்ணின் முகம் இத்தனை மாசுமருவற்று இருக்குமா? இவன் பழகிப் பார்த்த பெண்களை நினைவுக்கு கொண்டு வந்து யோசித்துப் பார்த்தான். அந்த மென்மை பற்றிய அத்தியாயமே, அவன் நினைவுக்கு வரவில்லை. அதைப் பற்றி அவன் ஒரு போதும் கவலைப்பட்டதும் இல்லை.

மீண்டும் மீண்டும் தன்னை மறந்து அவள் கன்னத்தை அவன் வருடிக்கொடுக்க,

"யோசிக்கும்போதே பயமாக இரக்கிறது ஆத்மன்..." என்றாள் மெலிந்துபோன குரலில்.

அவள் கன்னத்திலிருந்து கரத்தை விலக்கியவன், அவன் சட்டையைப் பற்றியிருந்த அவளுடைய கரத்தின் மீது தன் இடக் கரத்தை வைத்து, அழுத்திக் கொடுத்து, வலக் கரத்தை அவளுடைய தலையில் வைத்து வருடிக்கொடுத்தவாறு,

"இதோ பார்... மகிம்மா... சாப்பிடாத மனம் போர்க்களம் மாதிரி. எதையும் திடமாக யோசிக்காது. சின்னப் பிரச்சனை கூடப் பெரிய பிரச்சiனாயகத்தான் இருக்கும்... ஏதாவது சாப்பிடு. அதற்குப் பிறகு நீ யோசித்தால் உனக்கே உனது பயம் வெட்கமாக இருக்கும்..." என்றான் அவள் கரத்தை மேலும் அழுத்திக்கொடுத்தவாறு.

அந்த அழுத்தம் ஏனோ சர்வமகியின் பலவீனத்தை ஓரளவு விரட்டியடிப்பது போலிருக்க விழிகளை மூடினாள்.

ஆழ்ந்து சிந்தித்தபோது, அநேகாத்மன் சொல்வதில் உள்ள நியாயம் புரிந்தது. அவளை நம்பித்தானே அவள் சகோதரர்கள் இருக்கிறார்கள். அவளுக்கு ஒன்று என்றால் அவர்களின் நிலை என்ன? ஏற்கெனவே அவள் நிலை எத்தகையது என்பது அவளுக்குத் தெரியாதா என்ன? இருக்கும் காலம் வரை அவள் சகோதரர்களுக்காகவாவது அவள் திடமாக இருக்கவேண்டுமே. திடமாக இல்லாவிட்டாலும், திடம்போல நடிக்கவாவது வேண்டும்..

மீண்டும் விழிகளைத் திறந்தபோது நம்பிக்கை கூடியிருந்தது.

"குட்... தட்ஸ் மை கேர்ள்.." என்றவன் எழுந்து மேசையில் வைத்திருந்த உணவுத் தட்டத்தை எடுத்து, அவளிடம் நீட்டினான்.

அவள் எழ முயல, அவள் எழுவதற்கு உதவிசெய்தவன், அவளை சாய்ந்த வாக்காக அமர வைத்தான். பின் சாப்பாட்டுத் தட்டுடன் அவளை நெருங்கினான்.

அவளோ சாப்பாட்டுத் தட்டத்தை வாங்கத் தன் கரத்தை நீட்ட,

"நோ... அங்கேயே உட்கார்ந்து கொள்... நான் ஊட்டி விடுகிறேன்..."

என்றவன், அவள் மறுப்பையும் பொருட்படுத்தாது, சாதத்தைப் பிசைந்து, ஒவ்வொரு கவளமாக அவளுக்கு ஊட்டத் தொடங்க, அவளுக்க, மீண்டும் கரித்துக்கொண்டு வந்தது.

“இட்ஸ் இன:ப் சர்வமகி... நீ அழும் வரை அழுதாச்சு... இனி நீ அழுவதற்கு அனுமதியில்லை.” என்று சற்றுக் கண்டிப்புடன் கூறியவன், உணவுக் கவளத்தை அவள் வாயருகே கொண்டு செல்ல, மெல்லிய விசும்பலுடனே, அந்த உணவை பெற்றுக்கொண்டாள்.

பெற்றபோது, அவள் உதடுகள் கரங்களில் மெலியதாய்த் தீண்ட, பட்டின் மென்மையுடன், தொட்டுச் சென்ற அந்த உதடுகள் கொடுத்த உணர்வில் இவன் மீண்டு;ம் சிலிர்த்துக்கொண்டான்.

மீண்டும், அவள் இதழ்களோடு கவிபாடியது நினைவுக்கு வந்தது. மீண்டும், அவ் இதழ்களில் தன் இதழ் கொண்டு சித்திரம் தீட்ட உள்ளம் பரபரத்தது. இதழ் தீண்டல்மட்டும் இல்லாமல், அதற்கு மேலும் போய், அவள் உடல் முழுவதும் இதழ் கொண்டு சிற்பம் செதுக்க வேண்டும் என்கிற, வெறியும் வந்தது.

அந்த இடத்தில், அவள் தன் தந்தையைக் கொண்றவரின் மகள் என்றோ, இல்லை, அவள் தன் தகுதிற்குச் சற்றும் பொருத்தமானவள் அல்ல என்கிற எண்ணமோ, இல்லை, இதற்குரிய சூழ்நிலை இதுவல்ல என்கிற சிந்தனையோ அவனைச் சிறிதும் அண்டவில்லை.

ஒவ்வொரு முறையும், கரம், அவள் இதழ்களில் படும்போதெல்லாம், அவன் புதிய ஒரு உலகத்திற்குள் பயனப்பட்டுக்கொண்டிருந்தான்.

தொடரும்....

நிலவு 18

அன்று வானுக்கென்ன கோபமோ, சோ... என்று மழையைப் பொழிந்துகொண்டிருந்தது. கால் சற்று அகன்றிருக்க, இடக்கை, பான்ட் பாக்கட்டில் நுழைந்திருக்க, வலது கரத்தில் சிகரட்டை ஏந்தியவாறு, ஜன்னலருகே நின்று கறுத்திருந்த அடர்ந்த மேகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அநேகாத்மன்.

அவனுடைய மனமும், அந்த கரிய மேகத்தைப்போலவே அடர்ந்து முட்டி மோதிப்போய் நின்றிருந்தது. எவ்வளவு முயன்றும் மனதிலிருந்த சர்வமகியை அவனால் விலக்கமுடியவில்லை.

அதுவும் கடந்த நாண்கு நாட்களாக, சொல்லப்போனால், வாசுதேவன் இறந்த அன்றிலிருந்து அவனால் நிம்மதியாக எதையுமே செயற்படுத்தமுடியவில்லை. அதற்குக் காரணம் பலவாக இருந்தாலும், முக்கிய காரணம் ஜெஸ்டின்.

அன்று மருத்துவமனையில் வாசுதேவன் அனுமதிக்கப்பட்டபோது, சர்வமியின் கரத்திலிருந்த கைபேசியை அவன் எதேட்சையாகத் தன் பான்ட் பாக்கட்டில் போட்டிருந்தான். அதைப் பின்பு அவன் மறந்தும் விட்டிருந்தான்.

வாசுதேவன் இறந்த அன்று, சர்வமகியை அவள் வீட்டில் விட்டுவிட்டு, அவன் திரும்பி வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது, பான்ட் பாக்கட்டில், சர்வமகியின் கைபேசி மணி அடிக்க, அப்போதுதான் அவனுக்கு சர்வமகியின் கைபேசி தன்னிம் சிக்கிக்கொண்டது நினைவுக்கு வந்தது.

இனித் திரும்பிச் சென்று அவளிடம் கொடுக்க மனமில்லாமல் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது, மீண்டும் அக் கைபெசி சிணுங்கியது.

யாராக இருக்கும் என்று எடுத்துப் பார்த்தால், ஜஸ்டின் என்கிற பெயரில் பல முறை அழைப்புக்கள் வந்திருந்தன.

இந்த ஜஸ்டின் யாராக இருக்கும் என்கிற யோசனையில், அலட்சியமாக விட்டவன், பின்பு, என்ன அவசரமோ என்றுதான் அந்தத் தொலைபேசியை எடுத்துப் பேசினான்.

ஆனால் மறுபக்கமிருந்து வந்த அதிகாரக் குரலாக, “ஹலோ… சர்வா…” என்கிற ஆண் குரல் கேட்க. இவன் திகைத்துப்போனான்.

முதலில் யார் அந்த சர்வா என்று குழம்பியவன், பின்பு அது சர்வமகியின் சுருக்கமான அழைப்பு என்பதைப் புரிந்துகொள்ள, இவனுக்குள் காந்தியது.

முதலில், சர்வமகி இங்கில்லை என்று கூறிவிட்டு வைக்கத்தான் முயன்றான். ஆனால் அந்த ஜஸ்டினோ,

“நீங்கள் யார் சார்… சர்வாவின் கைபேசி உங்களுக்கு எப்படி வந்தது?” என்று கேள்வி மேல் கேள்விகேட்க, அவனுடைய கேள்விக்கு என்ன பதில் கொடுப்பது என்று புரியாமல் கடுப்பாகிப்போனான் அநேகாத்மன். “சாரி… சர்வமகி இப்போ இல்லை… பிறகு கூப்பிடுங்கள்…”என்று மூஞ்சையில் அடிப்பதுபோலக் கூறிவிட்டுத் தொலைபேசியை வைத்துவிட்டான்.

பின்பு பல முறை அவனிடமிருந்து அழைப்பு வர, இவன் எரிச்சலில் கைபேசியை அணைத்து வைத்துவிட்டான். பின் மறு நாள், சர்வமகியிடம் தொலைபேசியை ஒப்படைக்கலாம் என்று நினைத்தவன், பின்பு அந்த எண்ணத்தையும் மாற்றிக்கொண்டான்.

ஏற்கெனவே உடைந்துபோயிருக்கும் சர்வமகியை, மேலும் மேலும்; தொந்தரவு செய்வதை இவன் சிறிதும் விரும்பவில்லை. தவிர, முக்கியமாக அந்த ஜஸ்டின் அவளுடன் தொடர்புகொள்வதை அறவே வெறுத்தான். அதை விட, அந்த கைபேசி அவனிடம் இருப்பதே மேல், என்கிற எண்ணத்தில் தன்கூடவே வைத்துக்கொண்டான்.

ஆனால், அடிக்கடி அந்த ஜஸ்டின் தொடர்புகொள்ளவும், சினத்தில் கைபேசியை அணைத்து வைத்துவிட்டான். ஆனாலும் மனதிற்குள் குடைந்துகொண்டேயிருந்தது. ஒரு வேளை சர்வமகியின் நண்பனாக இருந்து, அவளிடம் துக்கம் விசாரிக்கக் கூட, அவன் எடுத்திருக்கலாம் அல்லவா... ஆனால், உள்ளுணர்வு அதற்கு மறுப்புத் தெரிவித்தது.

அந்த ஜஸ்டினின் குரலில் தெரிந்த ஏதோ ஒன்று, அவனுக்கு அடித்த எச்சரிக்கை மணிபோலவே அநேகாத்மனுக்குத் தோன்றிது.

அடுத்த நாள், அவளுடைய கைபேசி தன்னுடைய இயக்கத்தை முழுதாக நிறுத்தியிருக்க, அதனைச் சார்ஜில் போட்டு உயிர்ப்பிகக்க, அவன் கண்களில் முதலில் தெரிந்தது இருபத்தேழு விடுபட்ட அழைப்புக்களே...

வியப்புடன் யார் என்று பார்த்தால், அனைத்தும் ஜஸ்டின் என்றிருந்தது. இவளுக்கு இவனைத் தவிர வேறு நண்பர்கள் கிடையாதா? என்று எரிச்சலுடன் எண்ணிக்கொண்டிருக்கும் போதே, மீண்டும் அந்த ஜெஸ்டினிடமிருந்து அழைப்பு வந்தது. சினத்துடனே எடுத்துக் காதில் பொருத்தினான் அநேகாத்மன்.

“வட்ஸ் அப் மான்... எதற்கு திரும்பத் திரும்ப அழைக்கிறாய்? டோன்ட் யு ஹாவ் நோ சென்ஸ்...” என்று இவன் கர்ஜிக்க,

“எக்ஸ்கியூஸ்மி... ஹூ த ஹெல் ஆர்யு.... நான் பேச வேண்டியது சர்வாவுடன்... உங்களுடன் இல்லை... தயவுசெய்து என் சர்வாவிடம் அழைபேசியைக் கொடுங்கள்...” என்றான் ஜஸ்டினும் கறாராக.

“வட்... டிட் யு சே... சே இட் எகெய்ன்... ‘என் சர்வா...’ இட்ஸ் இன் யுவர் ட்ரீம்ஸ்...” என்றான் மிதமிஞ்சிய சினத்தில். இல்லை இல்லை மிதமிஞ்சிய பொறாமையில்.

“லிசின் டு மி மிஸ்டர்... உங்களுடன் விவாதிக்க எனக்கு நேரமில்லை... ஐ வான்ட் டு டாக் டு சர்வா... நான் சர்வாவுடன் வேலைசெய்தவன். ப்ளீஸ்... கொஞ்சம் ஃபோனை அவளிடம்; கொடுக்கிறீர்களா?” என்று கேட்டபோதே, இவனுக்கு பொறிதட்டியது.

அந்தக் குரலும், அவனுடைய அவசரமும், தனக்குப் பிடிக்காத செய்தியையே மகியிடம் கூறப்போகிறான் என்பதைப் புரிந்துகொண்டான் அநேகாத்மன்.

“சாரி மிஸ்டர்... மிஸ்டர் வட் எவர்... மகி இப்போது உங்களுடன் பேசும் நிலையில் இல்லை. எதுவாக இருந்தாலும் என்னிடம் கூறுங்கள், நான் அவளுக்கு சொல்லிவிடுகிறேன்...” என்றான் அந்த வட் எவர்pல் அதிக அழுத்தம் கொடுத்து.

“மிஸ்டர் உங்களிடம் எதற்கு நான் சொல்லவேண்டும்... இது சர்வாவின்

கைபேசிதானே... இது அவளிடமில்லாமல் உங்களிடம் எதற்கு இருக்கிறது... இஸ்... இஸ் ஷி ஓக்கே... என் சர்வாவிற்கு ஒன்றுமில்லையல்லவா? நான் அனுப்பிய குறுஞ்செய்திக்கு கூட அவள் பதில்போடவில்லை... தயவு செய்து சொல்லுங்கள். இஸ் ஷி ஓக்கே...?" என்று பதட்டத்துடன் அந்த ஜஸ்டின் கேட்க, இவன் மீண்டும் 'என்' என்பதில் உடல் முழுவதும் எரிந்தான்.

"சாரி மிஸ்டர் ஜஸ்டின்... இப்போது நீங்கள் அவளுடன் பெசமுடியாது..." என்றவன், மனதிற்குள், 'எப்போதுமே பேசமுடியாது' என்று கூறிவிட்டு, கைபேசியை அணைத்தான்.

மனமதில், 'ஏதோ குறுஞ்செய்தி அனுப்பியாதக்க கூறினானே... அப்படி என்ன குறுஞ்செய்தியை சர்வமகிக்கு அனுப்பியிருப்பான'; என்று அறியும் வேகமும், கட்டுக்கடங்காமல் வந்தது. கொஞ்சநேரம் சர்வமகியின் கைபேசியை வெறித்துப் பார்த்தவன், நாகரீகம் பார்த்தால், ஜெயிக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்டவனாகத் தன் மடிக்கணனி நோக்கிச் சென்றான்.

கைபேசியை ஊடுறுவி உள்ளே நுழைவதுதான் அவனுக்குக் கைவந்த கலையாயிற்றே. தன் லப்டாப்பில் கைபேசியை இணைத்தவன், அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் சர்வமகியின் கைபேசியின் கடவுச் சொல்லை உடைதது உள்ளே ஊடுருவிச் சென்றான்.

அவளுடைய குறுஞ்செய்தியின் பக்கம் சென்று பார்த்தான். அனைத்தையும் மேலோட்டமாகப் பார்த்தவன், ஜெஸ்டினின் குறுஞ்செய்தயை மட்டும் உயிர்ப்பித்துப் படித்தான். படித்தவனுக்கு, அவன் நினைப்புச் சரியானதுடன், அச் செய்திகள் ஒவ்வொன்றும் அவனுடைய கொலைவெறியை அதிகரித்திருந்தது.

சிலது அவளுடைய தந்தை சிறையிலிருந்த போது அனுப்பப்பட்டிருந்தது. முதலில் அவளுடைய சுகநலத்தைப் பற்றியே விசாரிக்கப்பட்டிருந்தது. சர்வமகியும் பதில் போட்டிருந்தாள். ஆனால் அதற்குக் கீழேயிருந்த செய்திதான் அவனை நிலைகுலைய வைத்தது.

"சர்வா... நான் உன்னைக் காதலிக்கிறேன்... வில் யு மரி மி..." என்றிருந்தது குறுஞ்செய்தி.

"பாஸ்டட்... ஓவர் மை டெட் பாடி" என்று முனங்கியவன், சர்வமகியின் பதிலை ஒரு விதப் பதட்டத்துடன் படித்தான்.

"மன்னிக்கவேண்டும் ஜஸ்டின் தற்போதிருக்கும் நிலையில், என்னால் திருமணம் பற்றி எண்ண முடியாது... எதுவாக இருந்தாலும், பிகு பேசிக்கொள்ளலாம்..." என்று பதில் போட்டிரு;நதாள் சர்வமகி. அவள், ஜஸ்டினின் வேண்டுதலுக்கு சம்மதம் சொல்லவில்லைதான். அதே வேளை மறுக்கவும் இல்லை.

“இல்லை முடியாது… என்று சொல்வதற்கு என்ன?” என்று முணுமுணுத்தவன் மேலும் குறுஞ்செய்தியைப் படிக்கலானான்.

இப்படித்தான் ஒவ்வொரு குறுஞ்செய்தியிலும், அவனுடைய விருப்பத்தை பல விதமாகத் தாங்கி வந்திருந்தது.

‘எதைப் பற்றியும் யோசிக்காதே… நான் இருக்கிறேன்…’ என்ற செய்தியைப் பார்த்ததும், இவன் இதழ்கள் ஏளனத்துடன் வளைந்தன.

‘அப்போ நான் எதற்கு இருக்கிறேன்… பூப்பறிக்கவா…’ என்று மனதிற்குள் கடுப்பானான் இவன்.

‘சர்வா… ப்ளீஸ்.. லெட் மி ஹெல்ப் யூ… எப்போதும் உன் கூடவே இருப்பேன்… ஜெஸ்ட் சே யெஸ்…’ என்கிற குறுஞ்செய்திக்கு, சர்வமகி,

‘ ஜஸ்டின் ஏற்கெனவே உங்களுக்குக் கூறிவிட்டேன்… இந்த சூழ்நிலை ஏற்புடையதல்ல, என் தந்தை சிறையிலிருந்து வெளியே வரும்வரைக்கும் என்னால் எதையும் யோசிக்கமுடியாது… இப்போதுதான் அநேகாத்மன் என்கிற சட்டத்தரனியோடு பேசுவதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. அவரைப் பற்றி அனைவரும் நன்றாகக் கூறுவதால், எப்படியும், அவர் என் தந்தையை விடுவித்துவிடுவார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அப்படி விடுவித்தால், நிச்சயமாக உன்னுடன் இதுபற்றி பேசுகிறேன் என்று இருக்க, ஏனோ அனறு சர்வமகி தன்னிடம் வந்தது நினைவுக்கு வந்தது. அவள் எத்தனை நம்பிக்கையோடு வந்தாள்… ஆனால்…

இதயம் வலிக்க, மீண்டும், அந்த குறுஞ்செய்திகளைப் படித்தான்.

‘எனக்கு புரிகிறது… நீ தனியாக சமாளிப்பதை விட, நானும் கூட இருந்தால் உனக்கு உதவியாக இருக்கும்… லெட் மி ஹெல்ப் யு…’ அதற்கு மேல் சர்வமகியிடமிருந்து எந்த பதிலும் அனுப்பப்படவில்லை.

“டாமிட்… அவள்தான் சம்மதிக்கவில்லையே. பிறகு எதற்கு அடிக்கடி தொந்தரவு செய்கிறாய்” என்று முனங்கியவன், சர்வமகியின் கைபேசியைக் கோபத்துடன் தூர எறியக் கையைத் தூக்கியவன், அது முடியாமல், மேசையில் போட்டான்.

எரிச்சலும், கோபமும் போட்டிபோடத் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். ஏதோ புரியாத அச்சம் அவனை ஆட்கொண்டது.

எங்கே சர்வமகி தன் கைநழுவிச் சென்றுவிடுவாளோ என்கிற பயம்; அவனை நிம்மதியிழக்கச் செய்தது.

“நோ… நோ… மகி எனக்குத்தான். எனக்கு மட்டும்தான்… யாருக்காகவும் அவளை விட்டுக்கொடுக்க மாட்டேன்…” என்று அவன் பெரும் சினத்துடன் எண்ணிக்கொண்டவன், சர்வமகியின் சிம்கார்டை எடுத்து, உடைத்து எறிந்தான். மனம் ஓரளவு நிம்மதியடைந்தாலும், அதற்குரிய

தீர்வை உடனேயே கண்டுபிடிக்கவேண்டும் என்றும் முடிவுசெய்தான்.

அதை நிறைவேற்ற இரண்டாம் நாளே சர்வமகியைக் காணச் சென்றான். தந்தை இறந்த இரு நாளில் இப்படிச் சென்று கேட்பது சரியா என்றெல்லாம் அவன் யோசிக்கவில்லை.

அப்படி யோசித்தால், இலவுகாத்த கிளியின் கதைதான் நமக்கும் என்று எண்ணியவன், தாமதிக்காமல் அதனை செயற்படுத்தத் தொடங்கினான்.

ஆனால், அவனுடைய போதாத காலம், நினைத்த உடன் அவளிடம் தன் விருப்பத்தைக் கூற முடியவில்லை. சர்வமகியின் சூழ்நிலை அதற்கு இடம்கொடுக்காததால், தான் எண்ணியதைச் செயற்படுத்தாமலே, இன்னும் இரண்டு நாட்கள் பொருத்துக்கொள்ளலாம் என்று எண்ணி வந்துவிட்டிருந்தான்.

ஆனால் இப்போது, அது நெஞ்சை முட்டிக்கொண்டு நின்றிருந்தது. அவளிடம் எப்படிச் சென்று தன்னை மணந்துகொள்ளுமாறு கேட்பது என்பது புரியாமல் தவித்தான் அநேகாத்மன். ஒருவேளை அவனை மணக்க அவள் மறுத்துவிட்டால், ஒரு வேளை அவள் மனதில் வேறு யாரும்... அந்த ஜஸ்டின்...”
நோ... நெவர்... அவனைத் தவிர, அவளை யாராலும் நெருங்க முடியாது... நெருங்கவும் கூடாது. அவள் எனக்கு மட்டுமே...” என்று தன்னை மறந்து கூறியவனுக்கு, சர்வமகியை நினைக்கும்போதே பதட்டம் அதிகரித்தது.

மீண்டும் கையிலிருந்த சிகரட்டை வாயில் வைத்து, நன்றாக உள்ளே இழுத்துத் தன் நுரையீரலை நிறப்ப முயன்றான். எப்போதாவது மனம் சலனப்படும்பொது, சிகரட்டை இழுப்பான். அது கொஞ்சம் கொஞ்சமாக சாம்பலாவதைப் பார்க்கும்போது, அவனுடைய சலனம் காணாமல் போய்விடும். ஆனால் இன்று, அது கூட முடியாமல் இருந்தது. என்னதான் இழத்தும், மனதிலிருந்த பதட்டம் குறைவதாகவே இல்லை.

வாழ்வில் முதன் முறையாகப் பதட்டம் என்றால் என்ன என்பதை உணர்ந்தான் அவன். அடிக்கடி மனதில் சர்வமகி வாசுதேவனின் மகள் என்கிற எண்ணம் வராமலில்லை. அதே நேரம் அந்த ஒரு காணரத்திற்காக அவளை மறக்கவும் அவனால் முடியவில்லை.

எது எப்படியோ, தனக்கு மனைவியாக ஒருத்தி வருவதாக இருந்தால், அது நிச்சயமாக சர்வமகி மட்டுமே என்பதில் உறுதியாக இருந்தான்.

உறுதியாக இருந்து என்ன பயன், அவளிடம் சென்று கேட்கவேண்டுமே... எப்படிக் கேட்பது? என்னவென்று கேட்பது? சொல்லப்போனால் பூனைக்கு மணிகட்டுவது யார்?

எத்தனையோ தீர்க்க முடியாத பல வழக்குகளைக் கண்ணிமைக்கும் நேரத்தில் உடைத்தெறிந்தவனுக்கு, அவளிடம் சென்று யாசகம் கேட்பது

இயலாத காரியமாகவே தோன்றியது. இயலாத காரியமன்று… எப்படிக் கேட்பது என்றுதான் அவனுக்குப் புரியவில்லை. அப்படியே கேட்டாலும், அவள் மறுத்துவிட்டால்? நிச்சயமாக அவனால் அதைத் தாங்கிக்கொள்ளவும் முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

சிந்தனையில் உழன்றுகொண்டிருந்தவனின் பின்புறமாக இருந்து முன்புறமாக இரு வெண்ணிறக் கரங்கள், அவன் தோள்வரை படர்ந்து உயர,

"டார்லிங்…" என்று மிழற்றியவாறு, எக்கி அவன் கழுத்து வளைவில் உதட்டைப் பொருத்தினாள் அவள். அநேகாதமன் விறைத்து நின்றது நொடிக்கும் குறைவான நேரமே.

தீ சுட்டதுபோல, ஒரு உதறலில் தன்னை அணைத்திருந்தவளைத் தள்ளி விழுத்தியிருந்தான் அநேகாத்மன். அதே வேளை, கையைச் சுட்டிருந்த சிகரட்டையும் உதறி எறிந்தான்.

கண்களில் தீ பறக்க, மூக்கு நுனி, சினத்தில் சிவந்து துடிக்க, கீழே விழுந்து கிடந்தவளை வெறித்துப் பார்த்தான் அநேகாத்மன்.

"ஹௌவ டெயர் யு டச் மி…" என்று கர்ஜிக்க, நிலத்தில் விழுந்திருந்த ரோசலின் திகைப்புடனும், அச்சத்துடனும் அநேகாத்மனை, வெறித்துப் பார்த்தாள்.

"ஹே… டார்லிங்… இட்ஸ் மீ…" என்றாள் ரோசலின் அவமானமும், அழுகையும் சேர்ந்த குரலில்

"ஐ நோ ஹூ த ஹெல் ஆர் யு…" என்று சினந்தவன், விரைந்து சென்று தன் மேசையிலிருத தொலைபேசியில் இரண்டு இலக்கத்தை அழுத்த மறுபக்கம் எடுத்துக்கொண்டது.

"வட் த ஹெல் ஆர் யு டூயிங்… என் ரூமுக்கு என் அனுமதியில்லாமல் யாரும் உள்ளே வரக்கூடாது என்று தெரியாது உனக்கு? டாமிட்…" என்று எரிந்து விழ, மறு பக்கம் என்ன கூறியதோ,

"ஐ டோன்ட் நீட் எனி பிளடி எக்ஸ்பிளநேஷன்… கம் அன்ட் த்ரோ ஹர் அவே… இன்னும் ஒரு நிமிடத்தில் இது நடந்தாகவேண்டும்…|" என்று அநேகாதமன் கர்ஜித்துவிட்டு ஃபோனைப் பட் என்று அதன் இடத்தில் வைத்தான். கூடவே பெரும் சினத்துடன் ரோசலினை நோக்கித் திரும்பினான்.

"மரியாதையாக இங்கிருந்து போய்விடு… இல்லை… நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது… கெட் லாஸ்ட்…" என்றான் தீப்பொறி பறக்க.

"அநேகாத்மன்… வட் ஹாப்பன்ட்… நீ இப்போது மாறிவிட்டாய்… நாம் சந்தித்து பல நாட்களாகிவிட்டன… ஐ வோன்ட் டு சீ யு… அன்ட் ஐ

வோன்ட் டு ஸ்பென்ட் ஸம் டைம்ஸ் வித்யு... ப்ளீஸ் அநேகாத்மன்... கம் வித் மி..." என்று தரையிலிருந்து எழுந்தவாறு, கெஞ்சினாள் இல்லை கொஞ்சினாள் அவள்.

"கோ... டு... ஹெல்... ரோசலின்..." என்றவன், தன் பொறுமை முழுவதுமாகப் பறந்துகொண்டிருப்பதைப் புரிந்துகொண்டவனாகத் தன் தலையின் பின்புறத்தை அழுந்த வருடிக் கொடுத்தான்.

"இதோ பார்... நான் சொல்வதைக் கவனமாகக் கேள்... எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை. உன் கூட இருக்கப் பிடிக்கவில்லை. சொல்லப்போனால், உன்னைப் பார்க்கக் கூட எனக்குப் பிடிக்கவில்லை... அதனால், இனி என் முன்னால், எக் காரணம் கொண்டும் வராதே... வந்தால்..." என்றவனின் குரல், உயரவில்லை, கத்தவில்லை, சீறவில்லை... ஆனால் அனைத்தையும், அவனுடைய அந்தக் குரல் அதிக காரத்துடன் கொடுத்தது.

"வை அநேகாத்மன்... வை... அப்படி நான் என்ன தப்பு செய்தேன்... சொல்லுங்கள்..." என்று அழுத ரோசலினை வெறுப்புடன் பார்த்தான் அநேகாத்மன்.

அவன் கண் முன்னால், கலங்கி நின்ற சர்வமகி வந்து போனாள். அவள் அழுதால், இவன் இதயம் கசங்கியதே. அதே நேரம், இவள் அழுகையைப் பார்க்கும்போது, இவனுக்கு எரிச்சல் அல்லவா வருகிறது.

"ஏனா... ஏன் என்றால், இப்போதுதான் வைரத்திற்கும், கூலாங்கற்களுக்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டுகொண்டேன்... போதுமா..." என்று முடிக்கவில்லை, அவனுடைய பிஏ, இரண்டு வாட்டசாட்டமான ஆட்களுடன் உள்ளே நுழைந்தாள்.

"டேக் ஹர் எவே...." என்று இரக்கமற்றுக் கூறியவன், மீண்டும் ஜன்னலருகே நின்று வெளியே வெறித்துப் பார்த்தான். ரோசலின் கத்தியதோ, திமிறியதையோ, அவன் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

ஏனோ அந்த ரோசலின் தொட்ட இடம் முழுவதும் கம்பளிப்பூச்சி ஊர்வதுபோல இருந்தது.

இதே கரங்கள் கிட்டத்தட்ட பல மாதங்களுக்கு முன்பு இவனைத் தழுவியிருக்கிறது. அணைத்திருக்கிறது. அப்போதெல்லாம் அவனுக்கு இத்தனை அருவெறுப்புத் தோன்றவில்லை. ஆனால், எப்போது, சர்வமகியை அவன் கண்களால் கண்டானனோ, அன்றிலிருந்து வேறு எந்தப் பெண்களின் கடைக்கண் பார்வையையும், அவனால் ரசிக்கமுடியவில்லை. ரசிக்கமுடியவில்லை என்பதை விட, அவனுக்கு அருவெறுத்தது என்றுதான் கூறவேண்டும்.

விரைந்து சென்று, தன் வேலைத்தளத்தோடு ஒட்டிய தன்

படுக்கையறைக்குள் நுழைந்தவன், தான் அணிந்திருந்த, அதிவிலை கூடிய ஆடைகளைக் களைந்து, குப்பைத்தொட்டியில் போட்டான். அப்படியே குளியலறைக்குள் நுழைந்து சோப் போட்டுத் தேய்த்துக் குளித்து, வேறு புதிய ஆடையை அணிந்த பின்தான், அவனால் ஓரளவு சமாதானமாக முடிந்தது.

இன்னும் அரை மணி நேரத்தில் ஒரு முக்கிய கூட்டத்திற்குப் போக வேண்டும். மனமோ, சோர்ந்துபோய் இருந்தது. கரத்தில், கைக்கடிகாரத்தைக் கட்டிக்கொண்டிருக்க, அவனுடைய அறை தட்டுப்பட்டது.

இவன் எரிச்சலுடன் கதவைத் திறந்தான். அங்கே அவன் பிஏ பயத்துடன் நின்றிருந்தாள்.

“வட்..” என்றான் அப்பட்டமான எரிச்சலுடன்.

“உங்களைப் பார்க்க… ஒரு பெண்…”

“லிசின்… நான் யாரையும் பார்க்க விரும்பவில்லை. அமரிக்கன் பிரசிடன்ட் என்றால் கூட, ஐ டோன்ட் கெயர்… அவர்களை இன்னெரு நாள் வந்து பார்க்கச் சொல்…” என்று கூறிவிட்டு மீண்டும் ஜன்னல் பக்கமாக வந்தான். அப்போதுதான் தொலைவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒரு கார் கண்ணை உறுத்தியது.

“இந்தக் கார்… மகியுடையதாயிற்றே…” என்று குழம்பியவன். வெளியே சென்றுகொண்டிருந்த பிஏவை அழைத்து,

“யர் வந்திருக்கிறார்கள் என்று சொன்னாய்?” என்றான் அவசரமாக.

“நா… நான் இன்னும் சொல்லவில்லையே சார்…” என்றாள் அவள் விழித்தவாறு.

“டாமிட்… யார் வந்திருக்கிறார்கள்… அவர்களுடைய பெயர் என்ன?” என்றான் அவன் அவசரமாக.

“அவர்கள்… சர்வமகி… “ அவள் முடிக்கவில்லை,

“வட் சர்வமகியா? அவளை எதற்காகக் காத்திருக்க வைத்தாய்… டோன்ட் யு ஹாவ் எனி சென்ஸ்… அவளை உள்ளே அனுப்புவதற்கு என்ன? உன் புத்தியை எங்கே கடன்கொடுத்தாய்;?” என்று சீறிப்பாய்ந்தவன், அதே வேகத்துடன் தன் அறையை விட்டு வெளியேறினான்.

அதே நேரம், அவனுடை பிஏ நிர்மலா குழம்பிப்போய் திகைத்து நின்றாள்.

‘இந்த பாசுக்கு என்னவாயிற்று. சற்றைக்கு முன்பு ஒருவரையும் உள்ளே

விடாதே என்றார். இப்போ என்னவென்றால், ஏன் விடவில்லை என்கிறார்... இவருடைய காரக்டரையே புரிந்துகொள்ள முடியவில்லையே..." என்று குழம்பியவாறு தன் இடத்திற்குச் சென்றாள்.

நிலவு 19

தன் பிஏ வுடன் ஏறி விழுந்துவிட்டு, எதற்காக சர்வமகி தன்னைத் தேடிவந்திருப்பாள் என்கிற சிற பதட்டத்துடன், அநேகாத்மன், சர்வமகியைத் தேடிக்கொண்டு வரவேற்பறைக்கு வந்தான். ஏதாவது ஆபத்தாக இருக்கும் என்று எண்ணிய மாத்திரத்திலேயே அநேகாத்மனின் பதட்டம் பயமாக உருப்பெற்றிருந்தது.

இந்த அடைமழையில்... அவளுடைய கார் ஏதாவது துன்பத்தை இழுத்துவைத்திருக்குமோ.. முதலில்... அவளை மணந்த பின்பு, இந்த டப்பா காரை தூக்கி எறிந்துவிட்டுப் புதிதாக ஒரு காரைப் பரிசளிக்கவேண்டும்... என்று எண்ணியவாறு, அவளை நோக்கி வந்தான்.

அவனுடைய விழிகள், அவளுடைய உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரை, கவனமாக ஆராய்ந்தது. எங்கும் அடிபட்டதற்கான அடையாளமோ, காயமோ இல்லை என்ற பின்தான் இவன் நிம்மதியானான்.

நிம்மதியுடன், மீண்டும் ஒரு முறை அவளை ஆவலுடன் தன் விழிகளால் தரிசித்தான் அநேகாத்மன்.

அடங்காது பெய்த மழையில் நனைந்திருந்ததால், அவளுடைய ஆடை உடலோடு நன்கு ஒட்டி, அவளுடைய எழிலை நன்கு பறைசாற்றிக்கொண்டிருந்தது. கூடவே, அவளுடைய முடியிலிருந்தும் நீர் கொட்டிக்கொண்டிருக்க, ரவிவர்மனின் ஓவியம்போல இருந்தாள், அவனுடையவள்.

அவளுடைய சொல்ல முடியா பேரழகை அவன் மட்டும் ரசித்திருந்தால் பரவாயில்லை. அங்கிருந்த ஒரு சில ஆண்களின் பார்வைகள், அவள் மேனியை ஆவலுடன் தழுவுவதைக் கண்டவன், சினம் மேலிடத் தன் விழிகளாலேயே அவர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு விட, அவன் பார்வையின் பொருளை உணர்ந்துகொண்டவர்கள், உடனேயே, தங்கள் பார்வையை விலக்கிக்கொண்டனர். இருந்தும், ஒரு சிலரின் பார்வை, தம் கட்டுப்பாட்டையும் மீறி அவள் பக்கம் போகத்தான் பார்த்தது. அதை உணர்ந்துகொண்டவனாக,

"ஹேய்... மகி... வட் எ ப்ளசன்ட் சேர்ப்ரைஸ்... கம் வித் மி..." என்றவாறு அவள் கரத்தைப் பற்றித் தர தர என்று இழுத்துக்கொண்டு தன் அறைக்கு வந்தான்.

“என்ன மகி… இந்த மழையில் நனைந்துகொண்டு வரவேண்டும் என்று அப்படி என்ன அவசரம்… தெலைபேசியில் அழைத்திருந்தால் நானே வந்திருப்பேனே” என்று கேட்டவன், உள்ளெ சென்று ஒரு துவாயை எடுத்து வந்து அவளிடம் நீட்டினான்.

“துடைத்துக்கொள்… தலையெல்லாம் ஈரமாக இருக்கிறது… ஆடை வேறு நனைந்திருக்கிறது… குளிக்கப்போகிறாயா…” என்று கேட்டான் அவன்.

“இ… இல்லை பரவாயில்லை… ஐ ஆம் ஓக்கே…” என்றவாறு அவன் துவாயால் தன் தலை, கை, கழுத்து என்று நன்றாகத் துடைத்துவிட்டாள். ஆனால் ஈரமான ஆடையை என்ன செய்வது? அந்த அறையில் ஏசி வேலை செய்ததால், ஈர உடையுடன் சேர்ந்து குளிரத் தொடங்க, அவள் உடல் நடுங்கியது. அதனைப் புரிந்துகொண்டவன், உடனே ஏசியை நிறுத்திவிட, சர்வமகி நன்றியுடன் அவனைப் பார்த்தாள்.

அவள் ஈர உடையைக் கண்டவன், தன் கைபேசியை எடுத்து, சற்றுத் தள்ளிப்போய், யாருக்கோ எதையோ கட்டளையிட்டான். பின் அவள் பக்கமாகத் திரும்பிப் அவள் துடைப்பதையே கண்வெட்டாது பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய விழிகளோ, சர்வமகியின் உடலைப் பெரும் ஏக்கத்துடன் வருடியது.

அந்தக் கொடியிடையும், செழித்த மார்பும், மூங்கில் கரங்களும், சங்குக் கழுத்தும், அவனைப் பித்தம்கொள்ளச் செய்தன. அப்படியே அவளை அணைத்துத் தன் நீண்டநாள் தாபத்தைத் தீர்க்கவேண்டும் என்று உடலும், உள்ளமும் பரபரத்தது. ஆனால் சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக்கொண்டான் அநேகாத்மன். செயற்படுத்துவது சுலபம். ஆனால், அதற்குப் பின்… சர்வமகியின் முகத்தில் எப்படி விழிப்பான். தன்னைச் சிரமப்பட்டு அடக்கியவன், அவள் தன்னைத் துடைக்கும் அழகையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

எதேட்சையாத் திரும்பியவள், வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த அநேகாத்மனைக் கண்டதும், புருவம் சுருங்க, என்ன என்பதுபோல் தலையை ஆட்டிக் கேட்க, பிடிபட்ட மாயக்கண்ணனாகத் திரு திரு என்று விழித்தவன்,

“அது… நீ என்ன குடிக்கப்போகிறாய்? கொ஼பி… ஆர் டீ…?” என்று சமாளித்தவாறு கேட்டான் அநேகாத்மன்.
“இல்லை… பரவாயில்லை…. எனக்கென்றும் வேண்டாம்…” என்று தயங்க,

“நோ இந்தக் குளிருக்கு, சூடாக ஏதாவது குடித்தால் நன்றாக இருக்கும். நான் தேனீர் விரும்பிக் குடிப்பேன்… நீ எப்படி?” என்றவாறு தொலைபேசி இலக்கத்தை அழுத்த,

“எதுவென்றாலும் பரவாயில்லை…” என்றாள் சர்வமகி.

உடனே இரு தேனீருக்கு உத்தரவிட்டுவிட்டு நிமிர, இவனுடைய அறைக் கதவை யாரோ தட்டினர்.

“வன் செக்…” என்றவாறு கதவை நோக்கிச் சென்றான் அநேகாத்மன்.

அதே நேரம், தலையைத் துவட்டியவாறே அறையைப் பார்த்தவளுக்கு, அன்று முதன் முறையாக அந்த அலுவலகத்திற்கு நுழைந்ததும், அநேகாத்மனின் கடுமையும் நினைவிற்கு வந்து கண்களைக் கலங்கச் செய்தது.

அதே நேரம் சர்வமகியை அநேகாத்மன் நெருங்க, திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள் சர்வமகி.
விழிகளில் நிறைந்திருந்த நீரும், சற்றுச் சிவந்திருந்த அவள் முகமும், அவளுடைய எண்ணப்போக்கைத் தெளிவாக எடுத்துரைக்க, அந்த சூழ்நிலையை விரும்பாதவனாகத் தன் கரத்திலிருந்த பரிசுப் பொதியை அவள் முன்பாக நீட்டினான்.

அவள் புரியாமல் அவனைப் பார்க்க,

“உன்னுடைய ஆடை ஈரமாக இருக்கிறது… சோ… இதை வரவழைத்தேன்… உள்ளே சென்று அணிந்துவிட்டு வா…” என்று தன் உள் அறையைக் காட்ட,

“இ… இல்லை.. வேண்டாம்… ஐ ஆம் ஓக்கே…” என்று வேகமாக மறுத்தாள் சர்வமகி.

“மகி… நான் சொல்வதைக் கேட்கக் கூடாது என்று ஏதாவது விரதமா… உன் உடை நனைந்திருக்கிறது…. இப்படியே நீ வெளியே பொகமுடியாது… சோ… உள்ளே சென்று மாற்றிக்கொண்டு வா…” என்று அவன் கூற, அப்போதுதான் குனிந்து பார்த்தாள்.

அவன் கூறியதின் பொருள் விளங்க, சங்கடத்தில் முகம் சிவக்க, தன் கரத்திலிருந்த துவாயால், தன் உடலை மறைத்தவாறு தலைகுனிந்து நின்றிருந்தாள்.

அவளுடைய முகச்சிவப்பையே பார்த்தவன், “போ… போய் மாற்றிக்கொண்டுவா…” என்றவாறு, தன் கரத்திலிருந்த பார்சலை அவளிடம் கொடுக்க, மறுக்கமுடியாது, அவன் காட்டிய அறைக்குள் நுழைந்தாள்.

அநேகாத்மன் கொடுத்த ஆடையைக் கரங்களில் எடுத்த சர்வமகி திகைத்துப்போனாள். அந்த டிசைனர் ஆடையின் மென்மையே, அதன் விலையைப் பறைசாற்றியது. டஸ்ட் பிங்கில் லூஸ் ஹை வேஸ்ட் லாங் ட்ரவுசரும் (Dust pink loose high waist long trouser) அதற்குப் பொருத்தமாக, அதே டஸ்ட் பிங் பூக்கள் தெறித்த வெண்ணிற நீண்ட கை டாப்பும் பார்க்கும்போதே, அதன் அழகு கண்களைப் பறித்தன.

இத்தனை விலை உயர்ந்த ஆடையை அவள் எப்படி அணிவது? அதுவும் அநேகாத்மனிடமிருந்து பெற்று. அது ஏதோ தப்புப் போலத் தோன்ற, அதை மீண்டும் கட்டிலில் வைத்துவிட்டுத், தன் ஈர ஆடையைக் களைந்தவள், முடிந்த வரை, துவாய் கொண்டு ஈரத்தை உரிஞ்சி எடுத்தாள். ஓரளவு ஈரம் காய்ந்துபோயிருந்தது.

மீண்டும் அணிந்தபோது, ஓரளவு பாரவாயில்லாமல் இருந்தது. முன்னதற்கு எவ்வளவோ மேல்.
ஆடையை மாற்றாமல் வெளியே வந்த சர்வமகியைப் புருவம் சுழிக்க, கோபமாக ஏறிட்டான் அநேகாத்மன்.

“ஏன் ஆடை மாற்றவில்லை சர்வமகி…” என்றான் அவன் அழுத்தமாக.

“இ… இல்லை… அது… அதிக விலை…” அவள் முடிக்கவில்லை,

“சோ வாட்…” என்றான் அவன் கோபம் குறையாமலே.

“எ… என்னால் முடியாது ஆத்மன்… அதுவும் உங்களிடமிருந்து நான் எத்தனையோ உதவிகளை ஏற்கெனவே பெற்றுவிட்டேன்… இனியும் என்னால் முடியாது…” என்றாள் சர்வமகி உறுதியாக.

“ஸ்டாப் சர்வமகி… உனக்கு உதவிசெய்வதற்கு நான் ஒன்றும் கணக்கு வைத்திருக்கவில்லை… தயவு செய்து போய் ஆடையை மாற்றிவா…” என்றான் இவன் பிடிவாதமாக. சர்வமகியோ ஒரு அடி அசைந்தாள் இல்லை.

என்னதான் அநேகாத்மன், அவள்பால் இரங்கி, உதவிசெய்தாலும், தன் தந்தை மீது தீராப் பகைகொண்டிருப்பவன். அந்தப் பகை அர்த்தமற்றது என்பதை நிருபிக்கும் வரை, அநேகாத்மனிடமிருந்து இத்தகைய உதவிகளை அவளால் பெற்றுக்கொள்ளவே முடியாது. ஏற்கெனவே, தந்தையின் இறுதிக் காரியங்களை அவன்தான் செய்திருந்தான். அந்தக் கடனை எப்படித் தீர்த்துக்கொள்ளப் போகிறாள் என்பது புரியாமல் கலங்கிக்கொண்டிருக்கிறாள். இந்த நிலையில் மீண்டும் மீண்டும் அவனிடம் கடமைப்பட அவளால் இயலவில்லை.

“சாரி ஆத்மன்… என்னால் முடியாது…” என்றவள் அவனை இரஞ்சுவது போலப் பார்த்தாள். அந்த விழிகளில் எதைக் கண்டானோ, அநேகாத்மன் சிரமப்பட்டுத் தன் கோபத்தை அடக்கியவனாக,

“ஓக்கே… ஆஸ் யு… விஷ்… பட்… ஐ ஆம் நாட் ஹாப்பி சர்வமகி…” என்றவன், வேறு பேசாமல் தன் இருக்கையில் வந்தமர்ந்தான்.

முன்புறமிருந்த இருக்கையைக் காட்டியவன்.

“சிட்…” என்றான் அழுத்தமாக. அவன் முகத்திலிருந்த மலர்ச்சி துணிகொண்டு துடைத்தாற்போல் மாயமாக மறைந்திருந்தது. அழுந்த

மூடியிருந்த உதடுகள் அவன் கோபத்தை வெட்டவெளிச்சமாகக் காட்ட, மறுப்புக் கூறாமல் சட் என்று அவன் காட்டிய இருக்கையில் அமர்ந்தாள் சர்வமகி.

“சரி… சொல்… எதற்காக என்னைத் தேடிவந்தாய்? என்றவனின் குரலில் மருந்திற்கும் சிநேகம் இருக்கவில்லை. மாறாக ஒரு அன்னியபாவனையே இருந்தது. ஏனோ சர்வமகியால், அவனுடைய இந்தப் பாராமுகத்தைத் தாங்கமுடியவில்லை.

“ப்ளீஸ் ஆத்மன் நான் சொல்லவருவதை…”

“அதுக்குத்தான் காத்திருக்கிறேன்… எதற்கு வந்தாய் சொல்…” என்றான் மேலே தொடர விரும்பாதவன் போன்று.

அதற்கு மேல், அவனைச் சமாதானப் படுத்திப் பயனில்லை என்பதைப் புரிந்துகொண்ட சர்வமகி, அதிகம் பேசாமல், தன் கைப்பையிலிருந்த ஒரு சிறிய மண்ணிற நாள்குறிப்பேட்டை வெளியே எடுத்தாள். அதை அநேகாத்மனிடம் நீட்ட,

முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல், அதைப் பெற்றுக்கொண்டவன்,

“வட் இஸ் திஸ்…” என்றவாறு அதனைத் திறந்தான்.

“இது… என் தந்தையுடைய குறிப்பேடு…” என்றதுதான் தாமதம், அவனுடைய கையசைவு அப்படியே நின்றது. விழிகள் மட்டும் உயர்ந்து, சர்வமகியை வெறித்துப் பார்த்தன.

“இதை நேற்றுத்தான் கண்டெடுத்தேன்… அதில்…” அவள் முடிக்கவில்லை, அந்த டைரியை வேகமாக மூடியவன், அவளை நோக்கி விட்டெறிந்தான். அவன் எறிந்த வேகத்தில், அந்த குறிப்பேடு, பறந்துபோய் சர்வமகியையும் தாண்டித் தரையில் விழுந்தது.

“ஆ… ஆத்மன்…” என்றாள் சர்வமகி அதிர்ச்சியுடன்.

“ஸ்டாப்… ஸ்ட்டாப்பிட் சர்வமகி… எத்தனை… தைரியமிருந்தால், அந்தாளுடைய பொருளை என் இடத்திற்கு எடுத்துவருவாய்…” என்று இவன் கர்ஜிக்க, சர்வமகிக்கு அவன் கோபத்தைக் கண்டதும், வியர்த்துக் கொட்டியது.

அவள் பயத்தையும், அவள் அதிர்ச்சியையும் கண்டவன், சிரமப்பட்டுத் தன் கோபத்தை அடக்க முயன்று தோற்றவனாக,

“சர்வமகி… நமக்கிடையில்… அந்தாளுடைய நினைவுகளோ, இல்லை அந்தாளுடைய பெயரோ நுழைவதை நான் விரும்பவில்லை…” என்றான் கடித்தபற்களுக்கிடயாக. அவனுடைய வெறுப்பைக் கண்டவளுக்கு, ஏனோ அதற்கு மேல் தாங்கமுடியவில்லை.

“ஆத்மன்… அந்தாள்… என் தந்தை ஆத்மன்… அவரை அப்படியே என்னால் விட முடியாது… அவர் செய்யாத தப்புக்குத் தண்டனை அனுபவித்திருக்கிறார்… ஒரு மகளாக அதை நிருபிக்க வேண்டிய கடமை எனக்கிருக்கிறது… தயவு செய்து புரிந்துகொள்ள முயலுங்கள்…” என்றாள் அவள் வேதனையுடன்.

“நோ… ஹி வோஸ் எ ஃப்ரோட்… ஹி வொஸ் எ கிரிமினல்… அன்ட் ஹி வோஸ் எ பிளடி ஃப்ரீக்கிங் மேர்டரர்…;…” என்றான் விழிகளில் தீப்பொறி பறக்க. அவனால் தன் கோபத்தைச் சிறிதும் அடக்கமுடியவில்லை.

ஆனால் அநேகாத்மனின் கடுமையான வார்த்தைகளை அதற்கு மேல் சர்வமகியால் கேட்கமுடியவில்லை.

“இல்லை இல்லை இல்லை… என் தந்தை அப்படிப் பட்டவரல்ல… என் தந்தை உங்கள் தந்தையைக் கொல்லவில்லை, அவர் கெட்டவரில்லை… அவர் எந்தத் தப்பும் செய்யவில்லை” என்று தன் இரு காதுகளையும் பொத்திக்கொண்டு தன்னை மறந்து கத்தினாள் சர்வமகி.

ஒரு கணம், அங்கே மயான அமைதி நிலவியது.

அநேகாத்மன், கொன்றுவிடும் வேகத்துடன், சர்வமகியை முறைக்க, சர்வமகியோ தன் தந்தையைக் காப்பாற்றும் மகளாக அவனை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். இப்படி இருவரும் ஒருவரை ஒருவர் சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஓரளவு சுயநினைவு பெற்றவள் சர்வமகிதான். அதற்கு மேல், அவனுடன் வாதாட முடியாதவளாக, வாதாடியும் பயனில்லை என்பதைப் புரிந்துகொண்டவளாக இருக்கையை விட்டு மெதுவாக எழுந்தாள்.

இரண்டு பெரிய மூச்சுக்களை எடுத்துத் தன்னை சமப்படுத்த முயன்றவள்,

“சாரி மிஸ்டர் அநேகாத்மன்… கொஞ்ச நாட்களாக, நீங்கள் நடந்துகொண்ட முறையை வைத்து, எங்களைப் புரிந்துகொண்டீர்கள் என்று தவறாக எண்ணிவிட்டேன்… உங்கள் பகை மாறாமல் இன்னும் அப்படியே இருக்கிறது என்று தெரிந்திருந்தால், நிச்சயமாக, உங்களைத் தேடி இங்கே வந்திருக்கமாட்டேன்…” என்று வேதனையுடன் கூறியவள், பின்,

“இத்தனை நாளும், எதிரியின் மகள் என்று தெரிந்தும் உதவி செய்திருக்கிறீர்கள்… நீங்கள் செய்த உதவிக்கு கைமாறாக எதைக் கொடுப்பது என்று தெரியவில்லை. அதற்கு விலையும் கிடையாது. இருந்தாலும், உங்கள் எதிரிக்கு நீங்கள் செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லையே… அதனால், நீங்கள் செலவழித்த விபரம் பற்றி கூறினீர்களானால், முடிந்த வரை அந்தக் கடனை அடைக்க

முயல்கிறேன்…” என்று கூறியவள், வெளியே செல்வதற்காகத் திரும்பினாள்.

அவளுடைய ‘மிஸ்டர் அநேகாத்மனில் அவனுடைய கோபம் பன்மடங்காக அதிகரித்திருந்தாலும், சர்வமகியின் கோபத்தையும், அவள் விரக்தியையும் ஏனோ அவனால் பார்க்க முடியவில்லை. தன் மீதேகோபம் கொண்டவனாக,

“சர்வமகி… நான் சொல்வதை…” அவன் முடிக்கவில்லை, அவனை வேதனையுடன் திரும்பிப் பார்த்தாள் சர்வமகி. அவளுடைய பார்வையில், ‘நான் சொல்வதை நீ கேட்கத் தாயாராக இருந்தாயா?’ என்கிற கேள்வி தொக்கி நிற்க,

“டாமிட்… மகி… லிசின் டு மி…” என்றான் தன் பக்க நியாயத்தைக் கூற முயன்றவனாக.

சர்வமகியோ, அவனைக் கணக்கில் எடுக்காது, விரைந்து சென்று தரையில் கிடந்த அந்த குறிப்பேட்டை நடுங்கும் கரங்களால் எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

“கவலைப் படாதீர்கள் அப்பா… நீங்கள் தப்பு செய்யவில்லை என்பதை இந்த உலகுக்கு வெளிக்கொண்டுவருவேன்… நிச்சயமாக வெளிக்கொண்டுவருவேன்…|” என்று மனதிற்குள் கூறியவள் அதைத் தன் கைப்பையில் வைத்துவிட்டு, அவனுடை அறைக்கதவைத் திறக்க முயன்றாள்.

|”மகி ஸ்டாப்… யு கான்ட் கோ லைக் தட்…” என்று அவளை நிறுத்த முயல, சர்வமகி திரும்பி அவனைப் பார்த்து விரக்தியாகச் சிரித்தாள். அந்த சிரிப்பில், ‘உன்னால் என்னை என்ன செய்துவிடமுடியும்…’ என்கிற வாசகம் ஒட்டிக்கிடந்ததோ, அவள் கதவைத் திறக்க முயல,

“நோ மகி… நீ போக முடியாது…” என்றவாறு அவள் திறந்த கதவை அடித்துச் சாற்றிவிட்டு, அவளைப் பார்த்தவாறு நின்றான் அவன்.

சர்வமகியோ, மீண்டும் கதவைத் திறப்பதற்காகத் தன் கரத்தைக் கொண்டுபோக, அந்தக் கரத்தின் மீது தன் கரத்தைப் பதித்துத் தடுத்தான்.

“நான் கூறுவதை முழுதாகக் கேட்காமல் நீ வெளியே போகமுடியாது சர்வமகி…” என்றான் அநேகாத்மன் அழுத்தமாக.

“என்ன கூறப்போகிறீர்கள் அநேகாத்மன்…” என்று கோபமாகக் கேட்ட சர்வமகி மீண்டும் கதவைத் திறக்கப்போக, அவளை இழுத்துச் சுவரோரமாக அழுத்தியவன், இருபக்கமும் தன் கரத்தைப் போட்டு, அவளுக்கு அணை கட்டினான்.

அவள் திமிர முயல, அவள் நடு மார்பில் தனது வலது கரத்தை வைத்து சுவரோடு அழுத்தியவன்,

“ः பெர்ஸ்ட் லிசின் டு மி…” என்றான் பிடிவாதமாக.

சர்வமகிக்கு ஒரு கணம் மூச்சை அடைத்தது. ஒரு ஆணின் கரம், அவளுடைய நடு மார்பில் அழுத்தியவாறு இருப்பதை அவளால் நம்பமுடியவில்லை. அச்சமும், பயமும் பொட்டிபோட,

“இது என்ன விளையாட்டு அநேகாத்மன்… கையை எடுங்கள்…” என்று நடு மார்பில் பதிந்திருந்த அவன் கரத்தைப் பற்றி இழுக்க முயல, அப்போதுதான் தான் செய்த காரியம் புரிந்தது அனேகாத்மனுக்கு.

வேகமாகத் தன் கரத்தை விலக்கியவன், “சாரி…” என்று வாய் முணுமுணுத்தாலும், அவனுடைய பார்வை, அவளுடைய மார்பிலெயே நிலைத்திருந்தது. சற்று முன் பதிந்திருந்து நுகர்ந்த அந்த மென்மையை அவனால் மறக்கமுடியவில்லை. அவன் விழிகள் மாறிய விதமும், அவன் பார்வை பதிந்திருந்த இடத்தையும் கண்டவளுக்கு, அதற்கு மேல் அவன் முன்னால் அப்படியே நின்றிருக்க முடியவில்லை. தன் கைப்பையை சரிசெய்வதுபோல, மார்புக்குக் குறுக்காத் தன் கரத்தைப் பதித்தவள், “விடுங்கள் அநேகாத்மன்… நான் போகவேண்டும்…” என்றாள் பெரும் சங்கடத்துடன்.

சிரமப்பட்டுத் தன் பார்வையை விலக்கிய அநேகாத்மன், சர்வமகியை முறைத்தான்.

‘டோன்ட் கால் மி அநேகாத்மன்… டாமிட்…’ என்று கத்தவேண்டும் போலிருந்த வேகத்தைச் சிரமப்பட்டு அடக்கியவன்,

“நோ…” என்றான் ஒற்றைச் சொல்லாக. நான் கூறுவதை நீ காது கொடுத்துக் கேட்கும் வரை, நீ இங்கிருந்து போகமுடியாது மகி…” என்றான் அவன் பிடிவாதமாக.

தன் மார்புக்குக் குறுக்காக் கரத்தைக் கட்டியவள், ஒன்றும் சொல்லாமல், அவன் முகத்தையே வெறித்துப் பார்க்க, அதையே சம்மதமாக எடுத்தக்கொண்ட அநேகாத்மன்,

“மகி… உன் தந்தை நீ நினைப்பது போல நல்லவரில்லை… அவர்… அவர்தான் என் தந்தையைக் கொன்றார்… எனக்கு உன் தந்தையை வெறுக்கவேண்டும் என்று ஏதாவது வரமா சொல்… அவருக்கும் எனக்கும் ஏதாவது முன் விரோதம் இருக்கா? இல்லையே… பிறகு எதற்காக நான் அவரை வெறுக்கவேண்டும்? காணரமில்லாமல் உன் தந்தையை நான் வெறுப்பேனா…” என்றவன் அவள் முகத்தில் விழுந்த கூந்தலை காதோரமாக ஒதுக்கிவிட்டவாறே,

“நான் ஒரு சட்டத்தரனி மகி… நான் சாட்சியங்களை மட்டும் நம்புபவன்… என் தந்தையைக் கொண்டதற்கான அத்தனை சாட்சியங்களும் உன் தந்தைக்கு எதிராக இருக்கிறது. இதில் ஒரு சாட்சி… ஒரு சாட்சிதன்னும், உன் தந்தைக்கு ஆதரவாக இருந்திரந்தால்,

நான் உன் தந்தை நல்லவர் என்று உனக்காகவாவது நம்ப முயன்றிருப்பேன்... பட்... மருந்துக்குத் தன்னும் உன் தந்தை நல்லவர் என்பதற்கான ஆதாரம் இது வரை எனக்குக் கிடைக்கவில்லை... அப்படியிருக்கையில், அவரை எப்படி நம்புவேன் சொல்..." என்றவன் பெருமூச்சொன்றை விட்டான்.

"மகி... எனக்கிருந்த ஒரே ஒரு உறவு என் தந்தை மட்டுமே... உனக்காவது நான்கு சகோதரர்கள், பக்கபலமாக இருக்கிறார்கள்... எனக்கு... யாருமே இல்லை மகி... என் மகிழ்ச்சியை, என் துக்கத்தை, என் வெற்றியைப் பகிர்ந்துகொள்ள இப்போது யாருமேயில்லை... அதற்குக் காரணம் உன் தந்தை... அவரை என்னால் எப்படி மன்னிக்க முடியும் சொல்... என் தாய்க்குப் பிறகு, என் அப்பாதான் எல்லாமாக இருந்தார்... இப்போ அவர் இல்லை... வெற்றி கிடைக்கும் போதெல்லாம், "தட்ஸ் மை பாய்..." என்பார்... இனி நினைத்தாலும் அதைக் கேட்கமுடியாதே.... இதற்கு காரணம் யார்... உன் அப்பா... அவரை எப்போதும் என்னால் மன்னிக்க முடியாது மகி... ப்ளீஸ் அன்டர்ஸ்டான்ட் மி..." என்றான் தன்நிலை விளக்கமாக.

"அநேகாத்மன், உங்கள் நிலை எனக்குப் புரியவில்லை என்றா நினைக்கிறீர்கள்... ஒரு பொய்யை, திரும்பத் திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிட முடியாது அநேகாத்மன்... பால் வெண்மை என்பது எந்த அளவுக்கு உண்மையோ, அந்த அளவுக்கு என் தந்தை குற்றமற்றவர் என்பது... அதை உங்களுக்குப் புரியவைக்கத்தான் என் தந்தையின் குறிப்பேட்டை எடுத்து வந்தேன்... ஆனால் நீங்கள்...உங்கள் நிலையிலேயெ நிக்கிறீர்கள்... என் தந்தை நிரபராதி என்பதற்கான ஆவனங்கள் இருந்தும், அதைக் காண மறுக்கிறீர்கள்..."

"ஸ்டாப் இட் மகி... ஹி இஸ் நாட்..." என்றான் அவன் வெறிகொண்டவன் போல.

கொஞ்ச நேரம் அமைதிகாத்தாள் சர்வமகி. அவனுடைய நியாயம் புரிந்தது. கூடவே, தன் பக்க நியாயத்தைப் புரிய மறுக்கும் அவனிடம் விவாதிக்கவும் அவள் விரும்பவில்லை. இருவரும் சண்டைபிடிப்பதால், கசப்புகள்தான் மிஞ்சுமே தவிர, அதற்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

"அநேகாத்மன்... உங்கள் பாதை வேறு... என் பாதை வேறு... இரு பாதைகளும் ஒரு போதும் இணையப்போவதில்லை... என்றோ ஒரு நாள் என் தந்தை குற்றமற்றவர் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்... அப்போது நான் சொல்வதை நீங்கள் நிச்சமாகக் காது கொடுத்துக் கேட்பீர்கள்..." என்றவள், அவனுடைய கரத்தை தள்ளிவிட்டுக் கதவைத் திறந்தாள்.

"வெய்ட்... மழை பெய்கிறது மகி... எப்படிப் போவாய்?" என்றான் இவன் பதட்டமாக.

“நான் வரும் போது தனியாகத்தான் வந்தேன்… போகும் போதும் தனியாகப் போவேன்…” என்றவள், அதற்கு மேல் அவனுடைய பேச்சைக் கேட்காமல் விரைந்து வெளியேறினாள்.

ஆனால், அந்த அடை மழையில் அவளைத் தனியே அனுப்ப முடியாமல், இவன் பின்னால் சென்றதோ, வீடு வரை தன் காரில் பின் தொடர்ந்து வந்ததோ, சர்வமகிக்குத் தெரியாமலே போனது.

தொடரும் ...

நிலவு 20

பழையபடி வாழ்க்கை மெல்ல நகரத் தொடங்கியது. வாசுதேவன் இறந்து நான்கு மாதங்கள் கடந்துவிட்டிருந்தன.

சர்வமகி வேலைக்கு மனுப்போடுவதும், கிடைக்காமல் சோர்ந்துபோய் திரும்புவதுமாக இருந்தாள். கையிருப்பும் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது. இந்த நிலையில் எப்படி அவள் சகோதரர்களின் எதிர்காலத்தை நன்கு சீராக்க முடியும்? எதுவுமே புரியாமல் மேலும் உருக்குலைந்து போனாள்.

அவள் விண்ணப்பித்து, நேர்காணலுக்கு போவதற்கு முன்பு அவளுடைய தந்தையின் வரலாறு தங்குதடையின்றி முன்னரே போய் விடுவதால் வேலை என்பதற்கு வாய்ப்பே இல்லாதிருந்தது. நேர்முகம் கண்டவர்கள் எல்லோரும், அவளைக் கேவலமாகப் பார்த்தார்களே தவிர, வேலைக்குச் சேர்க்கும் நோக்கம் யாருக்குமே இருக்கவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல சர்வமகியின் உள்ளம் மேலும் சோரத் தொடங்கியது. கையிருப்பும் நன்றாகக் குறையத் தொடங்கியது. இனியும் முடியாது என்கிற நிலையில் அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் தவித்தாள் சர்வமகி.

இப்படியே போனால், அநேகாத்மனிடம் அவள் பட்ட கடனையும் அடைக்க முடியாது, வங்கியில் அவர்கள் பெற்ற கடனுக்கு வட்டியும் கட்ட முடியாது.

என்ன செய்வது என்று புரியாமல் கலங்கியவள், கடந்த நான்கு மாதங்களாக, தீர்வு காண முடியாமல் உடலும் மனமும் சோரும் போதெல்லாம், அநேகாத்மனிடமிருந்து எடுத்து வந்த அவனுடைய ஜாக்கட்டைப் போட்டுக்கொள்வது போல, அன்றும் அதை அணிந்துகொண்டாள்.

அந்த ஜாக்கெட்டை உடலுடன் இறுக்கிப் பிடித்து அணைத்தவாறு படுக்கையில் அமர்ந்தவளுக்கு, அடுத்து என்ன செய்வது என்று மெல்ல

மெல்ல புரியலாயிற்று. அடுத்து என்ன செய்வது என்பதும் தெளிவானது. அநேகாத்மன் கூடவேயிருந்து ஆறுதல் படுத்துவதுபோல ஒரு பிரமை எழ, அதை விழிகளை மூடி ரசித்தாள் சர்வமகி. தைரியப்பட்ட மனம், இன்னும் எத்தனை துன்பம் வந்தாலும், தாங்கிக்கொள்வேன் என்று எழுந்து நின்றது.

தன் முடிவை தேவகியிடம் கூறியபோது, அவளும் அதற்கு மறுக்காமல் சம்மதிக்க, அடுத்து அதற்குரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினாள் சர்வமகி.

அதற்கு தற்போது உதவி செய்யக்கூடிய ஒரே நபர் நடராஜர் மட்டுமே.

அவரும் அவளுக்கு உதவ முன்வந்தார். உடனேயே தெரிந்த ரியல் எஸ்டேட்டின் முலம் வீடு விற்பனைக்கென்று போடப்பட்டது.

இது பற்றி அநேகாத்மனிடம் ஆலோசனை பெறலாம்தான். ஆனால் தன் தந்தையை எதிரியாக நினைப்பவனிடம் போய் உதவி கேட்க, அவள் தன்மானம் இடம்கொடுக்கவில்லை. அதுவும், அன்று அவன் அலுவலகத்தில் சந்தித்தபிறகு, அந்த எண்ணத்தை முற்று முழுதாக அழித்தாள் சர்வமகி.

அவள் உதவி என்று கேட்டால், அவன் மறுக்கமாட்டான் என்பது கூட அவளுக்குத் தெரியும். பரிதாபத்திற்காக எதிரியின் மகள் என்றும் பாராமல், அவளுக்காகவே அவன் உதவிசெய்வான்தான். ஆனால், அப்படி அவனிடம் உதவிகேட்டால், அது அவள் தந்தைக்குத் தேடிக்கொடுக்கும் அவமானமாகும். அதை விடத் தனித்து நின்று தன் பிரச்சனையை எதிர்கொள்வதே சாலச்சிறந்தது என்று உறுதியாக எண்ணினாள்.

அது மட்டுமன்றி, அன்று அவனுடைய அலுவலகத்தில், இருவரும் இடையில் நடந்த வாக்குவாதத்திற்குப் பின், இருவரும் எந்த வகையிலும் தொடர்புகொள்ளவில்லை. அவளைத் தேடி அவன் வரவுமில்லை. அவனைக் கேட்டு அவள் விசாரிக்வும் இல்லை. அவள் தந்தைக்கு அவன் கொடுத்த வாக்கு, அப்படியே புஸ்வானமானதுதான் மிச்சம்.

அவன் எப்படி வருவான் தந்தையை சமாதானப் படுத்துவதற்காக, அவர் இறுதி மூச்சை நிம்மதியாக விடுவதற்காக, ஏதேதோ கூறினான்தான். அதற்காக அதை அவன் நடைமுறைப் படுத்தவேண்டும் என்று எதிர்பார்ப்பதே தவறல்லவா. வந்தவன் எதார்த்தம் புரிந்ததும் விலகிவிட்டான். ‘உன் இடம் இதுதான்… இதைத் தாண்டி நீயும் வராதே… நானும் வரமாட்டேன்” என்று கூறாமல் அல்லவா கூறிவிட்டான்.

என்னதான் அவள் தந்தை குற்றமற்றவராக இருந்தாலும், அவனைப் பொறுத்தவரை, அவர் குற்றமுள்ளவரே. அதனால் அநேகாத்மன்

அவளை ஒரு கொலைகாரனின் மகள் என்று வெறுத்து ஒதுக்குவதை அவளால் சிறிதும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதேநேரம் அவனுடைய பாராமுகத்தையும் அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

இப்போதெல்லாம் சர்வமகிக்கு அந்த இடத்தைவிட்டு எங்காவது கண்காணாத இடத்திற்குத், தொலைதூரத்திற்குப் போனால் என்ன என்றுகூடத் தோன்றத் தொடங்கிவிட்டது. அதே இடத்தில் பல காலங்களிற்கு நீடித்து நிற்கமுடியுமா என்கிற கேள்வி அடிக்கடி எழத் தொடங்கியது.

அங்கே இருக்க, இருக்க தந்தையின் நினைவும், அநேகாத்மனின் நினைவும், அவளை பாடாகப் படுத்திக்கொண்டிருந்தது.

போவோர் வருவோரின் அலட்சியப் பார்வையையும், கிண்டல் பேச்சையும் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவளை மட்டும் அவர்கள் அலட்சியப்படுத்தினால் அவள் தாங்கிக்கொள்வாள். ஆனால் அவளுடைய உடன் பிறந்த சகோதரர்களையுமல்லவா கேலி செய்து கிண்டலடிக்கிறார்கள்.

அதைத்தான் அவளால் சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மெல்ல மெல்ல அந்த இடத்தை விட்டுச் சென்றுவிடவேண்டும் என்கிற உறுதி வலுத்தது.

இதற்கிடையில் தொலைபேசிக் கட்டணம் மேலதிகச் செலவை இழுத்துவிட, அதை நிறுத்தினாள்.
தொலைக்காட்சியையும் நிறுத்திவிட்டாள். அவசரத் தேவைக்கென்று ஒவ்வொரு பொருட்களாக விற்கப்பட்டன. பெரியவர்கள் ஓரளவு சமாளித்தாலும், கடைக்குட்டி அபிதன்தான் பெரிதும் சிரமப்பட்டான்.

தரையில் இருக்க மறுத்தான். அவனைச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.
தந்தையின் படுக்கையைமட்டும் தம்பிக்காக விற்காமல் வைத்துவிட்டு மற்றைய அனைத்து உபகரனங்களையும் வந்த விலைக்கு விற்று அவசரதேவைக்குப் பணம் சேகரித்தாள்.

அவளின் வேண்டுகோளின்படி நடராஜன் வீட்டை விற்பதற்கென்று இருவரை அழைத்துவந்தார். வந்தவர்கள் தந்தையும் மகனும் என்றார்கள்.

அவர்கள் உண்மையாகவே தந்தையும் மகனும்தானா என்பது கேள்விக்குறியாக இருந்தது.
இளம் வயதினனாக இருந்தவன் தோள்களிலும், கரங்களிலும் பச்சைகுத்தியிருந்தான். போதாதற்கு அவனுடைய பார்வை வீட்டைச் சுற்றிப்பார்ப்பதை விட, அடிக்கடி சர்வமகியைத் துகிலுரிப்பதுபோலப் பார்த்ததுதான் அதிகம்.

ஏனோ அவர்கள் உள்ளே வந்தபோது சர்வமகிக்கு சற்று அச்சமாகத்தான் இருந்தது. அதுவும் அந்த இளம் வயதினனின் பார்வையைக் கண்டதும, துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்கிற பழம் பெரும் வாக்கியம்தான் நினைவுக்கு வந்தது.

இருந்தாலும் அவர்களுடன் நடராஜரும் வந்ததால் சற்றுத் தைரியமாக இருக்கமுடிந்தது.
நல்லவேளை சகோதரர்கள் அனைவரும் பாடசாலை போயிருந்ததால், அந்தக் கயவனின் பார்வை அவர்களின் மீது விழாமல் தப்பியது.

பெரும் முயற்சி செய்து தன் முகம் மாறாமல் காத்தவள் கையைக் கட்டியவாறு அவர்கள் உள்ளே வந்து பார்த்துவிட்டு வெளியே செல்லும்வரை அமைதியாகப் பொறுமையுடன் நின்றாள்.

அதே நேரம் நடராஜன் ஏதோ எடுத்துவருவதற்காக வெளியே சென்றார். அவரைத் தடுக்கவும் முடியாமல் சர்வமகி அவரைப் பின் தொடர்ந்து போக முயன்றாள்.

“நான் இப்போ வந்துவிடுவேன் சர்வமகி… நீ பேசிக்கொண்டிரு…” என்ற நடராஜர், அவள் பதிலையும் கேட்காமல் விரைந்து சென்றுவிட்டார்.

அவரைத் தடுக்க முடியாது, சர்வமகி தயங்க, அதே வேளை அவளை நெருங்கிய அந்த இளைஞன்,
“ஹாய்” என்றான்.

அவனிடம் முகத்தைத் திருப்ப முடியாமல் இவளும் இழித்துவைக்க, அவள் இழிப்பை சாதகமாக நினைத்த அவன்;, அவள் புறமாகத் தன் கரத்தை நீட்டினான்.

இப்போது அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கை கொடுப்பதா, இல்லை முறைப்பதா என்று புரியவில்லை.

அதே நேரம் அந்த இளைஞனின் தந்தை அவளருகே வர, சற்று நிம்மதியுடன் தன் கரத்தை நீட்டினாள். அவளுடைய கரத்தைப் பற்றியவன், விட மனமில்லாதவனாக அதை அழுந்தப் பற்றினான்.

பற்றியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. உள்ளங்கையில் தன் மற்ற விரல்களால் மெதுவாக வருடித் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அவளது கை சில்மிஷம் செய்ய, உதடுகள் “ஐ ஆம் கிஷோர்...” என்றது. வேகமாக அவன் பிடியிலிருந்து தன் கரத்தை விடுவிக்க முயன்றவள் முடியாமல் போகத் தவித்துப்போனாள்.

எப்போது இந்த நடராஜர் அங்கிள் வருவார் என்று அவஸ்தையுடன் வாசலைப் பார்த்தவள், தொடர்ந்து அந்த இளைஞனின் தந்தை அவள் பின்புறமாக வந்து நின்றார்.

எதேட்சையாக அவள் மீது முட்டுவதுபோல வந்து நிற்க, சர்வமகி

பெரிதும் திணறிப்போனாள்.
பற்றிய கரத்தை உதறவும் முடியாமல், வேகமாகப் பின்புறம் செல்லவும் முடியாமல் கலங்கியிருந்த நிமிடங்கள் கொஞ்சமாகவே இருக்கலாம்,

“வட்த ஹெல் ஹப்பினிங் ஹியர்?” என்கிற அழுத்தமான சீற்றமான குரல் அந்த மூவரையும் திடுக்கிட வைக்க, அவசரமாக அவளை விட்டு விலகி நின்றனர் அந்த இருவரும்.

பயத்துடன் திரும்பிப் பார்த்த சர்வமகி, அங்கே திருமாள் போல நெடு நெடுவென்று நின்ற அநேகாத்மனைக் கண்டதும், பெரும் நிம்மதியுடன் “ஆத்மன்…” என்று அழைத்தவாறு, வேகமாக அவனை நெருங்கி நின்று கொண்டாள். அச்சத்தில் உடல் நடுங்க தன்னையும் அறியாமல் அவனது வலக்கரத்தைத் தன் கரங்களுக்குள் பற்றி அணைத்துக்கொண்டாள்.

அநேகாத்மனுக்கு அன்று சர்வமகி வந்துவிட்டுச் சென்ற பிற்பாடு, அவன் ஒரு நிலையில் இருக்கவில்லை.
கிட்டத்தட்ட ஒரு கிழமை இழுத்துப்பிடித்த கோபம் மெது மெதுவாக இளகத் தொடங்கியது. ஆனாலும், அந்த வாசுதேவனை அவனால் சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆனாலும், சர்வமகியைப் பார்க்காமல், பேசாமல் அவனால் இருக்கவே முடியவில்லை. எப்படியாவது சர்வமகியை சமாதானப் படுத்தி, தன் நிலையைப் புரியவைக்கவேண்டும் என்று முடிவு செய்திருந்தவனின் எண்ணத்தைச் செயற்படுத்த முடியாமல், முக்கிய வேலைகள் அவனை மூழ்கடித்தன.

முக்கியமாக அவன் தந்தை விட்டுச் சென்ற பொறுப்புக்களை எடுத்து நிறைவுசெய்யவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டான். அதனால் உடனேயே சென்று சர்வமகியைப் போய்ப் பார்த்து பேசமுடியவில்லை.

இதில் அவன் முடிக்கவேண்டிய முக்கிய நீதிமன்றம் சார்ந்த வேலைகள், வாதாட்டங்கள் என்று மூச்சுவிடுவதற்கே நேரமில்லாது போனது. இதற்கிடையில் தந்தையின் ஒரு முக்கிய ப்ராஜக்டை முடிப்பதற்காக அவன் ஜேர்மன் செல்ல வேண்டியிருந்தது.

சர்வமகியிடம் சென்று கூறிவிட்டுப் போகக் கூட அவனால் முடியவில்லை. அவளிடம் சென்று மன்னிப்புக் கேட்கக் கூட அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. சரி எங்கே போய்விடப்போகிறாள், வந்ததும் பேசிக்கொள்ளலாம், என்று சென்றவனுக்கு, உடனேயே வேலையை முடித்துவிட்டு வரமுடியவில்லை. அது வேறு ஒரு மாதம் இழுத்துக் கொண்டது.

மரம் ஏறி விழுந்தவனை மாடு மிதித்த கதையாக, லன்டனில் உள்ள அவர்களின் கிளை ஒன்றில், ஏதோ பிரச்சனை உருவாக, அதை விசாரிக்க அங்கே சென்றவன், மீண்டும் கனடா வந்து சேர இரண்டு மாதங்கள் எடுத்தன. இதற்கிடையில், அவனை நம்பி வந்த

வாடிக்கையாளர்களின் வழக்குகளை உடனே முடித்துவைக்கவேண்டிய நிலை. அதற்காகக் கனடா வந்து, அந்த வேலையை முடித்துக்கொண்டு மீண்டும் லன்டன் போனான். இப்படியே அவனுடைய நேரம், நான்கு மாதங்களை சத்தமின்றியே விழுங்கியது.

இந் நிலையில் லண்டனில் இருந்தபோது, சர்வமகியின் குரலையாவது கேட்கவேண்டும் என்கிற வேகத்தில், அவளுடைய கைபேசிய எடுத்தபோது, அது பாவனையில் இல்லை என்று வந்தது. அப்போதுதான், அவள் கைபேசி தன்னிடம் சிக்கிக்கொண்டதும், அதை அவளிடம் கொடுக்காமல் தான் வைத்திருந்ததும் நினைவுக்கு வந்தது. சரி வீட்டுக்கு அழைக்கலாம் என்று வீட்டுக்கு அழைத்தால், அதுவம் பாவனையில் இல்லை என்றே வந்தது. எரிச்சலுடன், தேவகியின் கைபேசிக்குக் கூட முயன்றான். அதுவும் அதே கதை.

அநேகாத்மனுக்கு வியர்த்துக் கொட்டியது. எங்கே போய்த் தொலைந்தார்கள் அனைவரும். என்று கலங்கியவன், உடனே டேவிட்டுக்கு அழைத்து, சர்வமகி எப்படி இருக்கிறாள் என்கிற விபரங்களைத் தெரிவிக்குமாறு கூற, உடனே அது பற்றி விசாரித்து அறிவித்தான் டேவிட்.

அவள் நலமாக இருக்கிறாள் என்கிற செய்தியை அறிந்த பின்தான் அநேகாத்மன் தன் மூச்சையே ஒழுங்காக விட்டான்.

இனியும் அவளை விட்டுத் தள்ளி இருக்க முடியாது என்கிற உண்மை புரிய, எப்படியாவது தன் விருப்பத்தை இந்த முறை கூறிவிடவேண்டும் என்கிற உறுதி கொண்டவனுக்கு, தான் ஏன், அவளுக்காகத் துடிக்கிறோம் என்பதையும், அவளுக்கொன்று என்றால், தான் ஏன் பதறவேண்டும் என்பதையும், அவளை இன்னொரு ஆண் தவறாகப் பார்த்தால், தான் ஏன் பொறாமை கொள்ளவேண்டும் என்பதற்கான காரணத்தையும் அவன் ஆராய்ந்து பார்க்கவேயில்லை. ஒரு வேளை ஆராய்ந்திருந்தால், பின்னால் வந்த துன்பங்களை ஓரளவு தடுத்திருக்கலாமோ என்னவோ.

ஒரு வாறு வேலைகள் முடிந்து நிமிர்ந்த போது, இன்னும் அவள் தன் மீது கோபமாக இருப்பாளோ என்கிற கவலையும் கூட சேர்ந்தே வந்தது. இருந்தாலும் சர்வமகிக்குக் கோபம் கொள்ளத் தெரியாது என்கிற உறுதியும் இருந்ததால், அவள் தன்னைப் புரிந்துகொள்வாள் என்கிற நம்பிக்கயில் கனடா வந்தவன், உடனேயே அவளைச் சந்திக்கக் கிளம்பினான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அவளைச் சந்திக்கப்போகிறோம் என்கிற படபடப்பும், ஏதோ இனம்புரியாத ஒரு உணர்வும், அவன் காரின் வெகத்தை அதிகப்படுத்த, அரை மணி நேரத்தில் வரவேண்டியவன், இருபது நிமிடங்களில் சர்வமகியின் வீட்டின் முன்னால் வந்து நின்றான்.

நடையில் வேகத்தைக் கூட்டியவன், திறந்திருந்த கதவைக் கண்டதும்,

ஏதோ உள்ளுணர்வு எச்சரிக்க,
"என்ன இது... கதவை பொறுப்பில்லாமல் திறந்து வைத்திருக்கிறாள்... காலம் கெட்டுக்கிடக்கிறது என்கிற கவனம் வேண்டாம்..." என்று எரிச்சலுடன் எண்ணியவாறே கதவைத் திறந்தவனுக்கு, அங்கே கண்ட காட்சி, அதுவரையிருந்த இன்ப உணர்வு மாயமாக மறைத்து அந்த இடத்தில் கொலைவெறி தாண்டவமாடவைத்தது.

யாருமில்லா வீட்டில் யாரோ ஒருவன் அவளுக்குக் கைகொடுத்துக்கொண்டிருந்தான். அது உறுத்தவில்லை. ஆனால், சர்வமகிக்குப் பின்னால் நின்றிருந்தவன், தன் உடல் முழுவதும் சர்வமகிமீது படுமாறு உரசிக்கொண்டிருந்ததைப் பார்த்தபோதுதான் அநேகாத்மனுக்கு, அமிலத்தைக் கரைத்து ஊத்தியதுபோலக் காந்தியது.

அவன் அவர்களைப் பார்த்து முறைத்ததை விட சர்வமகியைப் பார்த்தே விழிகளால் எரித்தான்.
ஒரு முறை பட்டும் அவளுக்குப் புத்தி வரவில்லையா... இல்லை... இதுதான் நிஜமா... நினைத்தபோதே, அவனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. அந்த இருவரையும் அடித்து கழுவில் ஏற்ற உடலும், உள்ளமும் பரபரத்தது.

அவனைக் கண்டதும், சர்வமகி, "ஆத்மன்..." என்று அழைத்தவாறு அவனிடம் விரைந்து வந்தபோது, நீண்ட நாட்களுக்குப் பிறகு கேட்ட அந்த ஆத்மனில், கொஞ்சம் கோபம் தணியப்பெற்றான். இருந்தாலும், அங்கே நின்றிருந்தவர்களின் மீது, அவனுடைய சீற்றம் சிறிதும் குறைந்திருக்கவில்லை.

அவனுடைய பார்வையில் அவ் இருவரும், பஸ்பமாகாது விட்டது கடவுள் புன்னியமே. அவனுடைய மூடிய மூஷ்டியும், சிவந்த விழிகளும், அவன் நிமிர்ந்து நின்ற தோற்றமும், அவனுடைய பலத்தைக் காட்ட, அதற்கு மேல் அங்கே நின்றால் ஆபத்து என்பதைப் புரிந்துகொண்டவர்கள் வேகமாக அந்த வீட்டைவிட்டு வெளியேறினர்.

உடனே தன் பான்ட் பாக்கட்டிலிருந்த கைபேசியை வெளியே எடுத்தவன், ஏதோ இலக்கத்தை அழுத்த, மறு பக்கம் எடுக்கப்பட்டதும்,

"காச் தெம்..." என்றான் அவன் அடக்கப்பட்ட ஆத்திரத்தில். இவன் பேசி முடிக்கவும், நடராஜர் உள்ளே வரவும் நேரம் சரியாக இருந்தது.

"என்னம்மா... ஏன் அவர்கள் இப்படி... ஓடுகிறார்கள்..." என்று வியப்புடன் கேட்டவர் அங்கே நின்றிருந்த அநேகாத்மனைக் கண்டதும் ஒன்றும் புரியாமல் சர்வமகியைப் பார்த்தாள்.

அவள் கலங்கியிருந்த முகத்தைப் புரியாமல் ஏறிட்டவர்,

"என்னம்மா? ஏதாவது பிரச்சனையா?" என்றார் யோசனையாக.

"என்ன பிரச்சனையா? இவளை அவர்களுடன் தனியாக விட்டுவிட்டு

நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?" என்று சீற்றம் குறையாமல் கேட்டான் இல்லை இல்லை கத்தினான் அநேகாத்மன்.

அநேகாத்மன் யார் என்பது நடராஜருக்குத் தெரியும். பார்க்கப்போனால் அந்தக் குடும்பத்தின் எதிரி அவன்தான். அவன் அவரிடம் அதிகாரமாகப் பேசுவதா? கோபம் எழுந்தது. இருந்தாலும் அவனுடைய பணமும், பதவியும் அவருடைய வாயைக் கட்டிப்போட,

"அவர்களுக்கு கொ◌ஃபி வாங்கச் சென்றிருந்தேன்..." என்று முணு முணுத்தார்.

அவருடைய கையில் கொ◌ஃபி இல்லாததைக் கண்டவன், புருவம் சுருக்கியவாறு பார்த்தான்.

ஏனோ நடராஜரை ஒரு பார்வையிலேயே அவனுக்குப் பிடிக்காமல் போனது. அந்தாள் நம்பத் தகுந்த மனிதனல்ல என்று உள்ளுணர்வு சொன்னது.

அவனுடைய பார்வையைப் புரிந்துகொண்டவராக, "வாங்க முடியவில்லை. அங்கே நிறைய வாடிக்கையாளர்கள் நின்றதனால் தாமதிக்காமல் வந்துவிட்டேன்..." என்றார் நடராஜர் மொட்டையாக.

"நல்லது... இனி நீங்கள் போகலாம்... நான் சர்வமகியுடன் சற்றுத் தனியே பேசவேண்டும்..." என்றான் அநேகாத்மன் அழுத்தமாக. அவனுடைய அலட்சியம், அவருக்கு கோபத்தை வரவழைக்க, இவன் என்ன என்னை வெளியே போகச் சொல்வது, என்கிற ஆத்திரத்துடன்,

"அவளுடன் தனியே பேச உங்களுக்கு என்ன இருக்கிறது? எனக்குத் தெரியாமல் சர்வமகி எதுவும் செய்யப்போவதில்லை..." என்றார் அவர் மிடுக்காக.

"சர்வமகி உங்களுக்குச் சொல்லிவிட்டுச் செய்கிறாளா? சொல்லாமல் செய்கிறாளா என்பது என் பிரச்சனையில்லை. நான் அவளுடன் சற்றுப் பேசவேண்டும். அதனால்..." என்று அவன் அழுத்தமாகக் கூறி வாசல் கதவைப் பார்க்க,

"நான்..." என்று நடராஜர், ஏதோ கூற முற்பட,

அநேகாத்மனின் கோபத்தைப் புரிந்துகொண்டவளாக, முன் வந்த சர்வமகி,

"சாரி அங்கிள்... நான்... உங்களுடன் பிறகு பேசுகிறேனே..." என்று அவள் கலக்கத்துடன் கூற,
"இல்லைம்மா... அது..."

"ப்ளீஸ் அங்கிள்..." என்றாள் எதையோ உணர்த்துபவளாக. அவளுக்கும் நடராஜன் மீது சற்றுக் கோபம் எழுந்திருந்தது. இப்படி யாரென்றே

தெரியாத இருவருடன் தன்னைத் தனித்திருக்க விட்டு விட்டுச் சென்றவிட்டாரே…' என்கின்ற மனக்கசப்பு எழுந்ததால்தான் அவரைப் போகுமாறு பணிந்தாள்.

அந்தக் குரலுக்கு மறுக்க முடியாதவராக அநேகாத்மனைப் பார்த்து முறைத்தவாறு விடைபெற்றார் நடராஜர்.

அவர் போகும் வரை அமைதி காத்தவன், அவர் வெளியே சென்றதும், சர்வமகியை இழுத்துத் தன் முன்னால் நிறுத்தினான்.

"வட் ஹப்பினிங் ஹியர் சர்வமகி? இங்கே என்ன நடக்கிறது? ஹ_ த ஹெல் ஆர் தே… டோன்ட் யு ஹாவ் எனி சென்ஸ்… அவன்… அவன் உன் கையைப் பிடித்து… இன்னொருத்தன் என்னவென்றால்… சே… நிகைக்கவே கூசுது…" என்று அவன் கொந்தளிக்க,

"அது அவர்கள்…" அவள் முடிக்கவில்லை,

"உன் தொலைபேசிக்கு என்ன நடந்தது. எத்தனை முறை எடுத்தாலும் தற்போது பாவனையில் இல்லை என்று வருகிறது... உன் செல்லுக்கு எடுத்தாலும் அதே கதைதான்..." என்றவன் சுற்றும் முற்றம் பார்த்தான். வெறுமையான வீடு அவனைப் பார்த்து நகைக்க,

புருவத்தைச் சுருக்கி அவளை ஏறிட்டவன், "இங்கே என்ன நடக்கிறது மகி… எங்கே வீட்டுப் பொருட்கள் எல்லாம்...?{" என்று புரியாமல் அவளுடைய முகத்தைப் பார்த்தவாறு கேட்டவன், வீட்டின் உள்ளே நுழைந்தான்.

வரவேற்பறை துடைத்துவைத்ததுபோல எந்தப் பொருட்களும் இல்லாமல் இருந்தது.
ஒன்றும் புரியாமல், சர்வமகியை ஏறிட்டவன்,

"என்னாச்சும்மா…" என்றான் கனிவுடன்.

வேதனை முகத்தில் அப்ப, நீண்ட பெரிய விழிகளால் அவனை ஏறிட்டாள் சர்வமகி. நீண்ட நயனங்களில், இரண்டு பனித்துளிகளாகக் கண்ணீர் திரண்டு வர, அதைக் கண்டவன், தன் கோபம் மறந்தவனாக, அவள் முகத்தைத் தன் கரங்களால் ஏந்தியவன், தன் விழிகளை அவள் விழிகளுக்குள் கலக்கவிட்டவாறு,

"ஷ்…. என்னாச்சு மகி…" என்றான் பட்டின் மென்மையுடன்.

அவனுடைய மென்மை ஏனோ அவளைப் பாதிக்க, தாங்கமுடியாத அழுகை வந்தது. விழிகள் கலங்க, உதடுகள் நடுங்க நின்றவளைப் பார்க்க முடியாதவனாக அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டான் அநேகாத்மன்.

"ஷ்..." என்று அவளைத் தேற்ற முயன்றவன் முடியாமல் அவளை சற்று

நேரம் அழவிட்டான். அவனுடைய வலது கரம், அவளுடைய கூந்தலுக்குள் நுழைந்து வருடியும் அழுத்தியும், கொடுக்க, இடது கரம், அவள் இடைய அழுத்தித் தன்னோடு இணைத்துக்கொள்ள முயன்றது. அவனுடைய அழுத்தமான, பாதுகாப்பான அணைப்பில், அவளுடைய அழுகை மெதுவாகக் குறைந்து மெல்லிய விசும்பலில் நின்றது.

அவளுடைய நாடியைப் பற்றித் தூக்கியவன்.

"என்ன மகி... நீ இப்படி அழும் அளவிற்கு என்னவாகிவிட்டது?" என்றான் மென்மையாக.
மீண்டும் அழுகை வர உதடுகள் துடித்தன. ஒற்றைவிரலால் அவளுடைய உதட்டின் மீது தன் கரத்தைப் பதித்துத் தடுத்தவன், அவளுடைய நீண்ட விழிகளுக்குள் எதையோ தேடினான். அந்தத் தேடலில் எதைக் கண்டாளோ சர்வமகியின் அழுகை நின்றது.

"குட்..." என்றவன் அவளை தன்னிடமிருந்து விலக்கினான்.

"என்னாச்சு மகி... எங்கே வீட்டுப் பொருட்கள் எல்லாம்?" என்றான் ஒன்றும் புரியாதவனாக.

"அனைத்தையும் விற்றுவிட்டேன்..." என்றாள் சர்வமகி சோர்வுடன்.

"விற்று விட்டாயா? ஏன்?" என்றான் ஒன்றும் புரியாமல்.

"வேறு வழி?" என்று அவனையே பார்த்துக் கேட்டவள், சுவரோரமாகச் சென்று அப்படியே சாய்ந்தவாறு தரையில் அமர்ந்தாள்.

"உட்காருங்கள்... மன்னிக்கவேண்டும். இருப்பதற்கு கதிரைகள் கிடையாது... தரைதான்..." என்றாள் பலவீனமான புன்னகையுடன்.

மார்புக்குக் குறுக்கே தன் கரத்தைக் கட்டி இரண்டு கால்களையும் சற்று அகட்டி வைத்தவாறு அவளை உற்றுப் பார்த்தான் அநேகாத்மன்.

"இன்னும் என் கேள்விக்கு பதில் வரவில்லை சர்வமகி... இவற்றை விற்க அப்படியென்ன அவசியம் வந்தது?" என்றான் வேகமாக.

"அவசியம்தான்... நான் தனி ஒருத்தி என்றால் எப்படியாவது சமாளித்துவிடுவேன்... என்னை நம்பி இன்னும் நான்கு ஜீவன்கள் இருக்கிறார்களே. அவர்களுக்குச் சாப்பாடு, இதரத் தேவைகள் என்று பல செலவுகள். இதை எப்படி என்னால் தீர்க்க முடியும்? அதுதான் ஒவ்வொரு பொருட்களாக விற்றுவிட்டேன். இந்த வீட்டையும் விற்கத்தான் முயல்கிறென். ப்ச்... இன்னும் சரிவரவில்லை..." என்றாள் இயலாமையுடன்..

"வீட்டை எதற்காக விற்கவேண்டும்... ஏதாவது வேலைக்கு அமர்ந்திருக்கலாமே..." என்றவனை விரக்தியாகப் பார்த்தாள் சர்வமகி.

“ஒரு கொலைகாரனின் மகளுக்கு யார் வேலை வைத்திருக்கிறார்கள்? எத்தனையோ இன்டர்வியூவிற்கு போனதுதான் மிச்சம்... பலன்தான் பூஜ்யம்...” என்றாள் விரக்தியுடன்.

“வேலையை விடு... ஏன் உன் தந்தை ஆயுட் காப்புறுதி ஒன்றும் செய்துவைக்கவில்லையா?” என்று எரிச்சலுடன் கேட்டான் அநேகாத்மன். இன்னும் அவனால் வாசுதேவனை ஒரு நல்ல மனிதனாக எண்ணமுடியவில்லை.

சர்வமகியின் உதட்டில் ஒரு விரக்திப் புன்னகைதான் தவழ்ந்தது.

“இப்படி ஆகும் என்று அவருக்கு முன்னமே தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் ஏதாவது ஆயுட் காப்புறுதி செய்திருப்பார்...” என்றவளுக்கு மீண்டும் மளுக் என்று கண்ணீர் வந்தது.

“இத்தனை நடந்திருக்கிறது... அப்போது உனக்கு என் நினைவு வரவில்லையா? என்ன செய்யலாம் என்று என்னிடம் கேட்கவேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையா? இ;ப்படி எல்லாவற்றையும் விற்றுக் கொட்டிவிட்டு, அமர்வதற்குக் கூட வழியில்லாமல்...” என்றவனின் குரலில் என்ன இருந்தது? கோபம்? எரிச்சல்? ஆதங்கம? வேதனை? ஏதோ ஒன்று. ஆனால் அந்தக் குரலில் அவனுடைய உதவியை அவள் நாடி நிற்கவில்லை என்பதை அவன் விரும்பவில்லை என்பது மட்டும் புரிந்தது.

“எப்படி... எப்படி உங்களிடம் உதவி கேட்பேன் என்று நினைத்தீர்கள்... உங்கள் தந்தையின் மரணத்திற்குக் காரணமான குடும்பத்திற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும் என்று நான் எதிர்பார்ப்பது தவறு அல்லவா?” என்றவளுடைய குரல் மெலிந்து ஒலித்தது.

“டாமிட்... உன் தந்தை செய்த தவறுக்கு உன் குடும்பத்தைப் பழிவாங்கும் அளவு கேவலமானவன் நான் என்றா நீ நினைத்தாய்?” என்றவனுடைய குரலில் அதிக சீற்றம் இருந்தது.

ஏனோ அவனுடைய கோபம் அவளைப் பெரிதும் பாதிக்க, மீண்டும் கண்ணீர் எட்டிப் பார்த்தது. ஏற்கெனவே வருத்தத்தில் இருந்தவளை மீண்டும் வருந்த வைத்துவிட்டோம் என்கிற கழிவிரக்கம் தோன்றினாலும், அவள் எப்படித் தன்னிடம் உதவி கேட்காமல் இருக்கலாம் என்கிற ஆதங்கமும் அதிகமாகத் தோன்றியது.

கொஞ்ச நேரம் அப்படியே அமைதியாக இருந்தான். மென் மேலும் சர்வமகி வருந்துவதை ஏனோ அவன் விரும்பவில்லை. அவளுடைய கண்களில் விழுகின்ற ஒவ்வொரு துளி கண்ணீரும் அவனுடைய இதயத்தில் வழிவதுபோன்ற ஒருவித உணர்வில் அவன் தவித்துப்போனான். எதற்காக அப்படித் தோன்றவேண்டும்? அவள் அழுதால் அவனுக்கென்ன... ஆனால் அந்த ஆராய்ச்சியில் அவன் இறங்க விரும்பாதவனாக,

“சர்வமகி... கண்ட கண்டவன் எல்லாம் வீட்டிற்குள் நுழைகிறான்... உன் கரத்தைப் பற்றுகிறான், வயசு அறுபதாகியும்... சே... நினைக்கவே அருவெறுப்பாக இருக்கிறது... இந்த நிலமை உனக்குத் தேவையா?” என்றான் இறுகிய குரலில்.

“என்னை வேறு என்ன செய்யச் சொல்கிறீர்கள்...? என் சகோதரர்களுக்கு எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டுமே ஆத்மன்...” என்றால் குரலில் வலியைத் தேக்கி.

“சகோதரர்கள்... சர்வமகி... கொஞ்சமாவது உன்னைப் பற்றி யோசிக்கமாட்டாயா?” என்றான் அநேகாத்மன் பெரும் சலிப்படன்.

“அவர்கள்தானே இனி என் உலகம்... அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தாலே எனக்குப் போதுமானது... அதுதான்... இந்த வீட்டை விற்றுவிட்டு எங்காவது போகலாம் என்று...” அதற்கு மேல் முடிக்கமுடியாதவளாகச் சோர்வுடன் சொன்னவளுக்கு முன்பு முழந்தாளிட்டு அமர்ந்தான் அநேகாத்மன்.

“எங்கே... எங்கே போவதாக உத்தேசம்...” என்றான் இறுகிய குரலில்.

“தெரியவில்லை... எங்காவது... என் தந்தையைப் பற்றிய தவறான செய்திகள் கேட்காத தூரத்திற்கு...” என்றவள் விழிகளை மூடித் தன் தலையைச் சுவர் புறமாகச் சாய்த்தாள்.

அவளுடைய அதீத சோர்வு, இயலாமை அனைத்தும், அவளுடைய நிலையை அநேகாத்மனுக்கு தெளிவாக எடுத்துக் காட்டியது. என்ன வேலை இருந்திருந்தாலும், அவளை ஒரு எட்டு வந்து பார்த்திருக்கவேண்டும்... என்று அவன் மனம் அவனையே சுட,

“நீ சாப்பிட்டாயா?” என்றான் திடீர் என்று.

“ம்... சாரி... என்ன கேட்டீர்கள்...” என்று தலையைத் திருப்பிக் கேட்டவள் இப்போது நிச்சயமாக அந்த உலகத்தில் இருக்கவில்லை. விழி முழுவதும் கலக்கத்துடன், அடுத்து என்ன செய்வது என்று புரியாத நிலையில் மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்தவளை வெறித்துப் பார்த்தான் அநேகாத்மன்.

“நீ சாப்பிட்டாயா என்று கேட்டேன்...” என்றான் அழுத்தமாக.

“ம்...” என்று தலையாட்டினாள் சர்வமகி.

“எப்போது சாப்பிட்டாய்?” என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தான்.

எப்போது சாப்பிட்டாள்? நேற்றுக் காலையா? இல்லை மதியம் கூட தேவகி எதையோ கொண்டுவந்து கொடுத்தாளே... தந்தை இறந்த இந்த நான்கு மாதங்களில் அவள் ஒழுங்காகச் சாப்பிட்ட நினைவே இல்லை.

அதுவும் வீட்டை விற்றுவிட்டு எங்கேயாவது போகலாம் என்று முடிவெடுத்தபிறகு அவள் தன்னையே மறந்துவிட்டாள். தேவகியும், மாதவியும்தான் அவளை வற்புறுத்தி கிடைக்கிற உணவை அவளுக்கும் பகிர்ந்துகொடுத்து, அவளை உண்ண வைத்துக்கொண்டிருந்தார்கள்.

அது கூட அவளுக்கு நினைவில் இல்லை.

"தெரியவில்லையே..." என்று விழித்தவளைக் கோபத்துடன் பார்த்தான் அநேகாத்மன்.

"சர்வமகி... சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டமுடியும். நீ என்னவென்றால்..." என்றவன் வேகமாக எழுந்தான்.

"நான் வெளியே போய் வருகிறேன். கதவைப் பூட்டு..." என்றவன் அவள் சோர்வுடன் எழும்ப எத்தனிக்க அவளைத் தடுத்தான்.

"இல்லை... நீ இப்படியே இரு... நானே பூட்டிவிட்டுச் செல்கிறேன்... திறப்பெங்கே..." என்று கேட்டான்.

"திறப்பு..." எங்கே வைத்தாள்? அது கூட அவளுக்கு நினைவில்லை. நினைக்க முடியாமல் தலை கனத்தது. சோர்வுடன் விழிகளை அழுந்த மூடி யோசித்தவள் பதில் தெரியாமல் அநேகாத்மனைப் பார்த்தாள்.

"என்னுடைய கைப்பையில்..." அவள் முடிக்கவில்லை, சுற்றும் முற்றும் பார்த்தவன், ஒரு ஓரமாக இருந்த கைப்பையைக் கண்டு எடுத்து வந்து அவளிடம் நீட்டினான். கைப்பையை வாங்கியவள், கையைவிட்டுத் துழாவினாள். திறப்பு தட்டுப்படவில்லை. சமையலறை ஆணியில்... இருக்குமோ? அவள் எழமுயல,

"எங்கே இருக்கிறது என்று மட்டும் சொல்லு சர்வமகி... நான் பார்க்கிறேன்..."

"சமையலறையில்... ஆணியில்..." அவள் முடிப்பதற்குள்ளாக அவன் அங்கே சென்று பார்த்தான். நல்ல வேளை திறப்பு தொங்கிக்கொண்டிருந்தது.

அதை எடுத்தவன், அவளிடமிருந்து விடைபெற்று கதவைச் சாத்திவிட்டு வெளியே போனான்.
சரியாக பத்து நிமிடத்தில் திரும்ப வந்தான். அவன் கையில் இரண்டு பாசல்கள் வீற்றிருந்தன.

அவன் கதவைத் திறந்து உள்ளே வந்தபோது, சர்வமகி தரையில் சரிந்து தலைக்கு இடது கையை முட்டுக்கொடுத்துப் படுத்திருந்தாள்.

மீண்டும் கதவைச் சாத்திவிட்டு, உள்ளே வந்தவன் சர்வமகியை எழுப்பினான். விழிகளை மூடியிருந்தவள் மெதுவாகத் திறந்தாள்.

“எழுந்திரு சர்வமகி...” என்றவன் அவளை எழுப்பிவிட்டான். சோர்வுடன் அவனை என்ன என்பது போலப் பார்த்தான்.

“உணவு வாங்கி வந்திருக்கிறேன்... சாப்பிடு...” என்றவாறு அவளிடம் ஒரு பார்சலை நீட்டினான்.
நடுங்கும் கரங்களால் அதை வாங்கியவள், எதையோ யோசித்தவளாக,

“இது... இதை வைத்தால்... பிரதீபனும், அபிதனும் சாப்பிடுவார்களே...” என்றாள் ஆவலுடன்.

“ஏய்... உன் மனசில் நீ என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறாய்? இப்படியே சாப்பிடாமல் கிடந்து காற்றோடு கரைந்துபோகப்போகிறாயா? முன்னைக்கு விடவும் நீ இப்போது எப்படி மெலிந்துவிட்டாய் என்பதைக் கண்ணாடியில் பார்...” என்று கடிந்தவன், பார்சலைப் பிரித்து உண்பதற்கு வசதியாக சிறு கரண்டியையும் வைத்து அவள் முன்பு நீட்டினான்.

நடுங்கும் கரங்களால் உணவை சாப்பிட்டாள். ஏனோ அவனுடைய கடுமை நிறைந்த கனிவு அவளை இளக வைத்தது.

அமைதியாக அவள் சாப்பிடுவதைப் பார்த்தவன், அவள் சாப்பிடட்டும் என்று எண்ணியவனாக வீட்டைச் சுற்றிப்பார்த்தான். எங்குமே தளபாடங்கள் இருக்கவில்லை. ஒரு அறையில் மட்டும் மெத்தை தரையில் போடப்பட்டிருந்தது. மற்றைய அறைகளில் பாய்தான் விரிக்கப்பட்டிருந்தது. மூன்று அறைகள். ஒரு குளியலறை, பேஸ்மன்டில் ஒரு அறையும் சிறிய ஹாலுமாக அமைக்கப்பட்டிருந்த சிறிய வீடு.

பார்க்கப்போனால் ஐந்து பேருக்கும் அந்த வீடு போதாதுதான். பெண்கள் மூவரும் ஒரே அறையில் படுப்பார்கள் போலும், ஒரு அறை முழுவதும் பெண்களுக்குரிய பொருட்களும், ஆடைகளும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மறு அறையில் ஆண்களுக்குரிய உடைகள் அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன. ஒரு அறையைத் திறந்த போது, சாமிப் படங்களும், ஒற்றைக் கட்டிலும் இருந்தது.

பார்த்தபோதே அது வாசுதேவனின் அறை என்பது புரிந்தது. எளிமையாக சுத்தமாக இருந்தது அந்த அறை. தினமும் அந்த அறை ஒழுங்காகக் பராமரிக்கப் படுகிறது என்பது அதன் சுத்தத்திலேயே தெரிந்தது.

அவன் வெளியே வந்தபோது, சர்வமகி இன்னும் உணவை வைத்து அளைந்துகொண்டிருந்தாள்.
கோபம் வந்தது. ஆனாலும் அதை அவளிடம் காட்ட முடியாதவனாக சுவரில் சாய்ந்தவாறு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவளைக் கடைசியாகப் பார்த்ததற்கும், இப்போது பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது.
முதலில் உடலில் காணப் பட்ட மெலிவு அவனை யோசிக்க வைத்தது.

எங்கே தொட்டாலே உடைந்துவிடுவாள் போல மெலிந்திருந்தாள். ஏற்கெனவே அவள் உடலமைப்பு சற்று சிறியது. ஐந்தடி மூன்றங்குலம் இருப்பாளா… அவனோடு ஒப்பிடும் போது, அவள் சிறுமி போலத்தான் தெரிவாள். இப்போது, இந்த மெலிவுக்குப் பிறகு இன்னும் சிறியவளாகத் தெரிந்தாள். முன்பு கண்களில் தெரிந்த கவர்ச்சி இப்போது அடியோடு இல்லை. அதில் சோகம் மட்டுமே தழும்பியிருந்தது. மற்றும் படி அதே அமைதி.

சர்வமகி நீண்ட நேரமாக யோசித்துக்கொண்டிருப்பதைக் கண்டவன், மீண்டும் அவளருகே சென்று அமர்ந்தான்.

அவள் கரத்திலிருந்த உணவை வாங்கி ஒரு ஓரமாக வைத்தவன்,

“மகி... உனக்கு இப்போது என்ன பிரச்சனை? எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லு. தீர்த்துவைக்க முயல்கிறேன். அதை விட்டுவிட்டு இப்படியே அழுது கரைந்துகொண்டிருந்தால் என்ன அர்த்தம்? சொல் வட் கான் ஐ டூ ஃபோர் யு…” என்றான் கனிவான ஆனால் ஆழமான குரலில்.

“நான்... எனக்கு...” என்றவள் சற்றுத் திணறினாள். அவனிடம் என்ன உதவியைக் கேட்பது? இப்போது அவளுக்க வேண்டிய உதவியைப் பட்டியலிட்டுக் கூறினால் அவன் பிடரியில் கால் முட்ட ஓடிவிடுவான். அவளுடைய கரத்தை அழுந்தப் பற்றி விடுவித்தவன்,

“சொல்லு மகி... உனக்கு என்ன உதவி வேண்டும்... உனக்காக எதையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன்… எதுவும்…” என்றான் கனிவு மாறாமல் கூடவே, அந்த எதுவும் என்பதில் அதிக அழுத்தம் கொடுத்து.

அவள் தந்தைக்கு அவன் கொடுத்த வாக்கை சர்வமகி நிச்சயமாக மறந்திருக்கமாட்டாள். அந்த வகையில் எப்படியும், தன்னை ஏற்றுக்கொண்டு, தன் சகோதரர்களுக்குப் பக்க பலமாக இருப்பாயா என்று அவள் கேட்பாள் என்று அவன் நிச்சயமாக முழுதாக நம்பினான். அவன் வந்ததும் அதற்குத்தானே. அவனாகக் கேட்பதை விட, அவளாகக் கேட்டால், அது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணினான். அதனாலேயே, சர்வமகியை அவள் ஆசையைக் கூறுமாறு ஊக்கினான்.

ஏன் என்றால், தன் சகோதரர்களுக்காக சர்வமகி எந்த எல்லையையும் கடப்பாள் என்று அவனுக்கு நன்கு தெரியும். கூடவே இப்போதிருக்கும் நிலையில், அவளால் தன்னை ஏற்றுக் கொள்வதைத் தவிர, வேறு எதையும் தேர்வுசெய்ய முடியாது என்பதும் அவனுக்குத் தெரியும். அந்த தைரியத்தில், அவள் வாயாலேயெ அவள் விருப்பத்தை அறிய விரும்பிக் காத்திருந்தான் அநேகாத்மன்.

“கமான்… சொல்… நான் என்ன செய்யவேண்டும்… உனக்காக எந்த எல்லையையும் தாண்டுவேன்… சொல் மகி… வட் கான் ஐ டூ ஃபோர் யு…” என்றான் ஆவலாக.

அவள் எதைக் கேட்டாலும் அவன் செய்வான் என்பது உறுதி… அந்த நம்பிக்கையில் கேட்கலாமா வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்திக்கொண்டிருந்த சர்வமகி இறுதியாக கேட்டே விட்டாள்.

“அநேகாத்மன் நீங்கள்…”

தொடரும்...

நிலவு 21

முகம் முழுவதும் ஆர்வத்துடன், தன் விருப்பத்தை சர்வமகி கேட்கப்போகிறாள் என்று காத்துக்கொண்டிருந்தவனைத் தயக்கமாக ஏறிட்டாள் சர்வமகி.

“அநேகாத்மன்… நீங்கள்… வந்து…”

“கமோன் சர்வமகி… என்ன வேண்டும்… கேள்… எதுவாக இருந்தாலும், நான் செய்யக் காத்திருக்கிறேன்… சொல்…” என்றான் ஆர்வம் மின்ன.

‘கேட்கலாமா? வேறு வழி…’ தயங்கியவள், பின் கேட்பதற்காக வாயைத் திறக்க, ஆநேகாத்மன் அன்று அலுவலகத்தில் வைத்து எறிந்த தந்தையின் குறிப்பேடு நினைவுக்கு வர தன் வாயை பக் என்று மூடிக்கொண்டாள்.

‘என்ன காரியம் செய்யத் துணிந்தாள்… யாரிடம் உதவி கேட்க நினைத்தாள். எந்த தைரியத்தில் அவனிடம் கேட்பாள்… தன் தந்தைக்கு ஒரு நியாயம் கிடைக்காமல், அவனிடம் போய் எப்படி… எங்கே போனது என் தன்மானம்… நோ அது அவளால் முடியாது… நிச்சயம் முடியாது… அது அவளை மட்டுமல்ல, அவள் தந்தையும் அசிங்கப்படுத்தியதாகவிடும்.

அவள் மீண்டும் வாய் மூடி அமைதி காக்க,

“சொல்லு மகி… நான்… என்ன செய்யட்டும்…” என்று முகம் முழுவதும் மகிழ்ச்சியில் அவன் கேட்க,

“அநேகாத்மன்… நீங்கள்…?”

“ம்… நான்…”

“நீங்கள்… சாப்பிட்டீர்களா?” என்றாள் மெல்லிய குரலில்.

முதலில் அநேகாத்மனுக்கு அவள் என்ன கேட்கிறாள் என்றே புரியவில்லை.

“வட்… என்ன கேட்டாய்?” என்றான் அவன் தன்னிடம் தோன்றிய அதிர்ச்சியை வெளிக்காட்டாது.

“நீங்கள் சாப்பிட்டீர்களா என்று கேட்டேன்…” இப்போது சர்வமகியின் குரலிலும் விழிகளிலும் சற்று அழுத்தம் கூடியிருந்தது. அநேகாத்மன் ஒரு கணம் அவளை வெறித்துப் பார்த்தான்.

‘அவன் என்ன கேட்கிறான் இவள் என்ன சொல்கிறாள்?’ எரிச்சல் கட்டுக்கடங்காமல் வந்தது. மனம் முழுவதும் நிறைந்திருந்த எதிர்பார்ப்பு, ஊசிபட்ட பலூனாக உடைந்து போனது.

“வாட் தி ஹெல் ஆர் யு டல்கிங் அபௌட்…. நான் என்ன கேட்கிறேன் நீ என்ன சொல்கிறாய்? நான் சாப்பிட்டேனா, இல்லையா என்பதுதானா இப்போது பிரச்சனை…” என்று எரிந்து விழுந்தவன், ஒரு வாறு நெடிய நீண்ட மூச்சை எடுத்துத் தன்னைத் திடப்படுத்தியவனாக,

“மகி… இதோ பார்… உன்னுடையதான அத்தனை பிரச்சனைகளையும் என்னால் தீர்த்து வைக்க முடியும்… இந்த வீட்டை விற்கவேண்டுமா? அது என் பொறுப்பு. உன் சகோதரர்களுக்கு நல்ல கல்வி வேணடுமா… ஐ வில் ஹெல்ப் யு… பட்.. நான் கேட்பதெல்லாம்… உனக்கே உனக்காக என்ன வேண்டும்… சொல்…?” என்றவனின் விழிகளில் எதுவோ மின்னி மறைந்தது.

“இ… இல்லை ஆத்மன்… எனக்கு உங்கள் உதவி எதுவும் வேண்டாம்… யாருடைய உதவியும் இல்லாமல் என்னால் சமாளிக்க முடியும்….” என்றாள் அவனை ஏறிட்டுப் பார்க்காமல்.

“கிழித்தாய்… அதைத்தான் பார்த்தேனே…” என்று சுள் என்று அவன் விழ,

“இல்லை ஆத்மன்… உங்களிடம் உதவி கேட்கும் தகுதி எனக்குக் கிடையாது...” என்றாள் விழிகளைத் தரையில் பதித்தவாறு. அவள் முகத்தைத் தன் வலக்கரத்தால் பற்றி, நிமிர்த்தியவன்,

“ஏன்... அப்படி எந்த வகையில் நீ தகுதி குறைந்துவிட்டாய்...?” என்றவன் அவள் விழிகளைத் தன் விழிகளால் ஊருருவிப் பார்த்தான். அவள் விழிகள் வெறுமையை மட்டுமே பதிலாகக் கொடுக்க,

“என்னிடம் கேட்க ஒன்றுமே இல்லையா மகி…” என்றவனின் குரலில் என்ன இருந்தது? தவிப்பு, எதிர்பார்ப்பு, ஆவல்… ஏதோ ஒன்று அவள் விழிகளைக் கலங்கவைத்தது.

“எதுவாக இருந்தாலும் மகி… எதுவாக இருந்தாலும், நீ என்னிடம் கேட்கலாம்…” என்றான் அவன் ஒரு அவசரத்துடன். என்ன உதவியை அவனிடம் கேட்பது? எதைக் கேட்டாலும், அவன் செய்வான்தான். ஆனால், அவளால் அது முடியுமா? தன் தந்தை நிரபராதி என்பதை குறைந்தது, அவனுக்காவது தெளிவு படுத்தும் வரை, அவனிடம் சிறு உதவியை தன்னும் அவளால் கேட்க முடியாதே.

அவள் மௌனமாகத் தலை குனிய, பொறுமையற்ற மூச்சுடன், தன்னை சமப்படுத்த முயன்றவன், அவள் முகத்தில் பதிந்திருந்த தன் கரத்தை விலக்கித் தன் தலையைக் கோதிக்கொண்டான்.

“டாமிட்... மகி... நீ அனைத்தையும் கடுமையாக்குகிறாய்... நான் என்ன செய்யட்டும்...” என்று கோபத்துடன் கேட்டவாறு தரையைவிட்டு எழுந்து நின்றான். பின் உறுதி கொண்டவனாகத் தன் பான்ட் பாக்கட்டில் கரங்களைப் புகுத்திச் சற்றுக் காலை அகட்டிவைத்து நின்றவாறு,

“ஒக்கே... நான் நேரடியாகவே கேட்கிறேன்... இறக்கும் தருவாயில், உனக்காக, உன் தந்தையை சமாதானப் படுத்துவதற்காக, நான் ஒன்றைக கூறியிருந்தேன் நினைவிருக்கா...” என்றவனை சர்வமகி வலியுடன் பார்த்தாள்.

அந்த வலிக்கான காரணத்தைப் புரிந்துகொண்டவனின், பாக்கட்டில் தஞ்சம்புகுந்திருந்த அவனுடைய கைமுஷ்டிகள் இறுகின. ஒரு கணம் தன் கீழ் உதட்டைக் கடித்துத் தலையைச் சரித்து ஆட்டியவன்,

“ஒ.ப் கோர்ஸ்... ஐ ஹேட் ஹிம்... உன் தந்தையை வெறுக்கும் அளவுக்கு நான் உலகில் யாரையும் வெறுத்ததில்லை. பட்... அவர் இறக்கப்போகிறார் என்று தெரிந்த பிற்பாடு கையைக் கட்டிப் பார்த்துக்கொண்டு இருக்கமுடியவில்லை. அதுக்கான காரணமும் புரியவில்லை. ஒரு வேளை, நீயாகக் கூட இருக்கலாம்... இல்லை ஒரு உயிர் அல்லல் படுகிறதே என்கிற இரக்கமாக இருக்கலாம்... ஐ டோன்ட் நோ. ஆனால் உனக்கொன்று தெரியுமா, இது வரை நான் யாருக்காகவும் இரக்கபட்படதில்லை. இறங்கி வந்ததுமில்லை... அந்தத் தேவையும் எனக்கிருந்ததில்லை. பட் .பெஸ்ட் டைம்... உன் தந்தையின் விஷயத்தில் நான் முழுவதுமாகத் தடுமாறிவிட்டேன்... பிகாஸ் ஒ.ப் யு...” என்றவன் சற்று அமைதி காத்தான். பின் தன் கரங்களை வெளியே எடுத்து, மார்புக்குக் குறுக்காகக் கட்டியவாறு,

“பட்... நீ அந்த ஆளின் மகளாக இல்லாதிருந்தால், நிச்சயமாக என் நடவடிக்கையே வேறாக இருந்திருக்கும்... அந்த இடத்தில் வேறு ஒருத்தி இருந்திருந்தால்... என் கால் தூசி கூட, அந்த ஆளின் மருத்துவனைப் பக்கம் போயிருக்காது... அது எதனால் என்று சத்தியமாக எனக்குப் புரியவில்லை. நான் இப்படி ஒருபோதும் தெளிவில்லாது இருந்ததில்லை. வாழ்வின் முதன் முறையாக, நான் விரும்பாததை, எண்ணாததை செய்திருக்கிறேன்...”

“அதை எண்ணி வருந்துகிறீர்களா ஆத்மன்...” என்று தரையில் இருந்தவாறு தன் தலையை உயிர்த்தி அவனைப் பார்த்துக் கேட்டவளின் குரலில் அளப்பரிய வலி தெரிய, தன்னை அண்ணாந்து பார்த்தால், அவள் கழுத்து வலிக்குமே என்று எண்ணியவனாக, வேகமாகக் கட்டியிருந்த தன் கரத்தை விலக்கியவன், அவளை நெருங்கி, வலது முட்டுக்கால் தரையில் பட, இடது கால் மடிந்து

உயர்ந்திருக்கக் குனிந்து, அவள் தோள்களில் தன் கரத்தைப் பதித்து,

“நோ… நோ… இந்தக் கணம் வரை நான் அதற்காக வருந்தவில்லை. சொல்லப்போனால், அங்கே நீ தனியாக இருந்து துன்பப்படாமல்… உன் கூடவே இருந்து, உன் வேதனையில் பங்குகோண்டேன் என்கிற மனத்திருப்திதான் எனக்கு.” என்றவன், சற்று நேரம், அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான்.

இறுகிப்போய், கலங்கியிருக்கும் அவளிடம் எப்படி உடைத்துக் கூறுவது என்றும் புரியவில்லை.

இந்த அவஸ்தையெல்லாம் அவனுக்குப் புதிது. அனைத்திலும், வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுபவனுக்கு, சர்வமகியிடம் மட்டும் ஏன் அப்படிக் கடுமையாக நடக்கமுடியவில்லை. ‘ஓ காட்… ஐ ஹேட் திஸ் டாம் ஃபீலிங்…’ என்று தனக்குள் முனங்கியவன், ஒரு வாறு தனக்குள்ளேயே ஒத்திகை பார்த்தான்.

எப்படியும் சர்வமகி வாய் விட்டுக் கேட்கமாட்டாள் என்பதை புரிந்துகொண்டான். இருவரில் ஒருவர் இறங்கிவரத்தானே வேண்டும்… அநேகாத்மன் உறுதியுடன் நிமிர்ந்தான்.

அவன், வாழ்வில் இரண்டாம் முறையாகச் சறுக்கினான்.

“மகி…” என்று அழைத்து, அவள் முகத்தையே உற்றுப் பார்ததவன், “அன்று சொன்னதை உண்மையாக்கவேண்டும் என்று விரும்புகிறேன்… உன்னுடன் இணைந்து உன் சகோதரர்களை நல்ல நிலைக்குக் கொண்டு வர நான் முடிவு செய்துவிட்டேன்.” என்றான் அதுதான் இறுதித் தீர்ப்பு என்பது போல.

சர்வமகியும் அவனைத்தான் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“ஆத்மன்…” என்றாள் சர்வமகி வேதனையுடன். அடுத்து அவன் என்ன கேட்கப்போகிறான் என்பதை அவள் ஓரளவுக்கு ஊகித்தாள்.

“யெஸ்… ஐ வில் டூ இட்.. பட்… அதற்கு நீ என் அருகில் இருக்கவேண்டும்…” என்றான் கரகரத்த குரலில்.
‘நோ… தயவு செய்து நான் மறுக்கும் எதையும் கேட்டுவிடாதே…’ என்று அவள் உள் மனது அலறியது. ஆனால் அவனோ,

“மகி… ஐ வில் ப்ராமிஸ் யு… எப்போதும் உன் அருகேயிருந்து உன்னையும், உன் சகோதரர்களையும் காத்துக்கொள்வேன்… எந்த சந்தர்ப்பத்திலும், நீங்கள் தாழ்ந்துபோக நான் விடமாட்டேன்… சோ வில் யு மரி மீ?” என்றான் அவளை விட்டுத் தன் பார்வையை விலக்காது.

‘கேட்டு விட்டான்… கேட்டே விட்டான்… எதை அவன் கேட்கக் கூடாது என்று அவள் எண்ணினாளோ, அதைக் கேட்டே விட்டான். அதுவும் எப்படி? கடையில் காய்கறி வாங்குபவன் விலை என்ன? என்று

சாதாரணமாகக் கேட்பதுபோல, எந்தத் தயக்கமும் இன்றி, பந்தா இன்றி, தடுமாற்றமின்றிக் கேட்டுவிட்டான்...” சர்வமகிக்குத் தொண்டை அடைத்தது.

“இவன் என்ன கேட்கிறோம் என்பதைப் புரிந்துதான் கேட்கிறானா, இல்லை புரியாமல் கேட்கிறானா? திருமணம் என்பது சந்தையில் வாங்கும் பொருளா, தேவைக்கேற்ப மணம் செய்து கொள்வதற்கு. இது வாழ்க்கை. ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்களே... அது புரியவில்லையா இவனுக்கு...

அதுவும் எந்த நிலையில் வைத்துக் கேட்கிறான்... சந்தர்ப்ப சூழ்நிலை பற்றி யோசிக்கமாட்டானா...
அன்று என்னவென்றால், தந்தையின் குறிப்பேட்டை எடுத்துச் சென்றதே கொலைக்குற்றம் என்பது போல வீசி எறிந்தான். இப்போது என்னவென்றால், அவர் மகளையே மணம் புரியக் கேட்கிறானே... ஆடு பகை, குட்டி உறவு என்பது போலவல்லவா நடந்துகொள்கிறோன்.

அவனுக்கு அந்தப் பேதமை புரியவில்லையா? இல்லை அவன் கேட்ட உடனே, தான் சம்மதித்துவிடுவேன் என்று நினைத்தானா? இவ்வளவும்தானா என்னைப் புரிந்துகொட அளவு?’ என்று எண்ணிய சர்வமகிக்கு சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை.

இப்படி திடீர் என்று எந்த ஆலாபனையும் இல்லாமல் கேட்ட விதம், அவள் தடுமாற்றத்தை அதிகரித்ததால், அவளுக்கு எப்படி செயற்படுவது என்றே தெரியவில்லை. அழுவதா, கோபப்படுவதா, கலங்குவதா, இல்லை புலம்புவதா என்று எதுவும் புரியவில்லை.

எதிலிருந்தோ தப்புபவளாக, தன் தோளைப் பற்றியிருந்தவனின் கரங்களை விலக்கிவிட்டு எழுந்தவள், விரைந்து சமையலறையை நோக்கிச் சென்று தன் கரங்களைக் கழுவினாள்.

மனம் வேறு அவன் கேட்டதை ஜீரணிக்க முடியாது தவித்தது. அவள் எழுந்ததும், தானும் எழுந்து, அவள் பின்னாலேயே வந்தவன்,

“இன்னும்... பதில் வரவில்லையே... மகி...” என்றான் சற்று எரிச்சலுடன். அவன் அருகாமை மூச்சு முட்ட,
வேகமாக அவனை விட்டுத் தள்ளிச் சென்றுவிடவேண்டும் என்று முன்னறைக்கு அவள் வர முயல, அவள் கரத்தைப் பற்றித் தன்னை நோக்கி இழுத்தவன்,

“ஐ நீட் த ஆன்சர்...” என்றான் அழுத்தத்துடன்.

“என்ன... என்ன... சொல்...” அதற்கு மேல் அவளுக்குப் பேச்சு வரவில்லை. காற்றுத்தான் வந்தது. அவள் தடுமாற்றத்தைப் பார்த்து,

“நான் கூறியது கேட்கவில்லையா? சத்தமாகத்தானே சொன்னேன்...” என்று மெல்லியதாகப் புன்னகைத்தவனை பெரும் அதிர்ச்சியுடனும்

வியப்புடனும், பார்த்தாள் சர்வமகி.

இவனுக்கும் சிரிக்கத்தெரியுமா...? அதுவும் இத்தனை அழகாக... அவளுக்குத் தெரிந்து, இப்போதுதான் முதன் முறையாக அவன் புன்னகையைப் பார்க்கிறாள். அதுவும் எதிராளியைக் கவரும் வகையில் சிரிக்கும் கலையை எங்கேயிருந்து கற்றுக்கொண்டான்.

அடர்ந்த சீராக வெட்டப் பட்டிருந்த அந்த மீசைக்கு இடையாக சீராக அமைந்திருந்த வெண்ணிறப் பற்கள் மெலியதாய் வெளிப்பட, மின்னலெனத் தோன்றி மறைந்தது அந்தப் புன்னகை.

அந்தப் புன்னகை அவனுடைய முகத்திற்கு எத்தனை அழகாக. கம்பீரமாக, எடுப்பாக இருந்தது. கூடவே, அவன் ஆழுமையையும் அந்தப் புன்னகை கூட்டிக்காட்டியதே அன்றி, சிறிதும் குறைத்துக் காட்டவில்லையே.

'இன்னும் ஒரு முறை அவ்வாறு சிரிக்கமாட்டானா' என்று எண்ணி ஏங்கியவளுக்கு, அந்தப் புன்னகையைப் பார்த்தபின் அவளே அறியாமல், அவன் மேலிருந்த சிறிய மனத்தாங்கலும், கரைந்து செல்வதை ஒரு வியப்புடன் உணர்ந்துகொண்டாள் சர்வமகி.

எதிராளியை வீழ்த்துவதற்கு, இவனுடைய மெல்லிய புன்னகையே போதும் என்பதைத் தெளளத் தெளிவாகப் புரிந்துகொண்டாள் சர்வமகி. அவன் கோபத்தை விட, அவன் ஆக்ரோஷத்தை விட, அந்தப் புன்னகைக்கு அதிக சக்தியிருக்கிறது என்பதை சந்தேகமறப் புரிந்துகொண்டாள் அவள்.

அந்த மென்நகையில், தன் சூழ்நிலையைக் கூட மறந்தவளாக, தன் விழி மூட மறந்து அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தவளுக்கு மீண்டும் ஒரு முறை அவனுடைய புன்னகையைப் பார்க்கவேண்டும் என்று மனம் எங்கியது.

அவள் வியந்த பார்வைக்குப் பொருள் புரியாதவனாகத் தன் அடர்ந்த புருவத்தை மேலேற்றி கூரிய விழிகளால், துளைத்து, என்ன என்பதுபோல சிறியதாகத் தலையை மேலும் கீழுமாக் ஆட்டிக் கேட்க, அதிர்ந்தாள் சர்வமகி.

அவளா அவனை அப்படிப் பார்த்தாள். சர்வமகியால் தன்னையே நம்பமுடியில்லை. அந்த ஒற்றைப் புன்னகைக்கு அத்தனை சக்தியிருக்கிறதா? என்று வியந்தவள், பிடிவாதமாகத் தன்னை நிகழ் காலத்திற்கு இழுத்துவந்தவளாக, ஒன்றுமில்லை என்பது போல, மறுப்பாகத் தலையை ஆட்டினாள்.
அவள் ஆட்டிய வேகத்தைக் கண்டு, மேலும் அவன் நகைக்க, மீண்டும் சுய நினைவு தப்பினாள் சர்வமகி.

அவளுடைய அதிர்வை சற்றும் பொருட்படுத்தாதவன், அவளை மேலும்

தன்னை நோக்கி இழுக்க, எதிர்பாராத அந்த இழுப்பில் சர்வமகி சற்றுத் தடுமாற, அவள் இடைகொண்டு தாங்கிக் கொண்டவன், அப்படியே அவளைச் சுழற்றி சுவரோடு சாய்த்து நிறுத்தியிருந்தான் அந்தக் கள்வன். இது விழிமூடித் திறப்பதற்குள் அரங்கேறியிருந்தது.

அவளுடைய அதிர்ந்த பார்வையைத் தன் வழிகளால் மேய்ந்தவாறே, அவள் உடலுடன் உரசி நிற்குமாறு மிகவும் நெருங்கி நின்றுகொண்டான் அநேகாத்மன்.

அவள் முகத்தையே தன் விழிகளால் சற்று அளந்தவன், அந்தப் பட்டுப்போன்ற, பூரண நிலவையொத்த அவள் வதனத்தைக் கண்டு கிறங்கியவனாக, உடனேயே அந்த மென்மையை நுகரவேண்டும் என்கிற வேகம் பிறக்க, புறங்கையால், அவளுடைய கன்னத்தை மெதுவாக வருடிக்கொடுத்தான். ஒரு கணம், அந்த மென்மையில் தன்னை மறந்தவனாகத் தன் விழிகளை மூடி, அதை உணர்ந்து, அதைத் தன் உயிரினுல் கலக்க முயன்றான்.

“மகி… உன்னை விட்டு என்னால் விலகவே முடியவில்லையே… நான் என்ன செய்யட்டும்…” என்று மெலியதாக முனங்கியவன், பின் தன் விழிகளைத் திறந்து சர்வமகியை ஏறிட்டான்.
பின் தன் இரு கரங்களையும் அவளுடைய கழுத்து வளைவில் பதித்துக் களுத்தின் இருபக்கமும் தன் பெரும் விரல்களால்,
வருடிக்கொடுத்தவாறு,

“மகி… இனியும் என்னால், கற்பனையில், உன்னுடன் வாழ முடியாது… என் அருகில் நீ வேண்டும்… எப்போதும் வேண்டும்… இந்த ஐந்தடி மூன்றங்குல உடலும் எனக்கே எனக்காக, எனக்கு மட்டுமே உரியதாக மாறவேண்டும்…” என்று கூறியவன், பின், அவள் எழில் முகத்தில், தன் விழிகளால், கோலம் வரைந்தவாறு,

“ அதிகாலையில் எழும் போது… இதோ… இந்த அழகான முகத்திலே நான் விழிக்கவேண்டும்…” என்றவன், ஒரு கரத்தைத் தூக்கித் தன் உள்ளங்கையால் அவள் கன்னத்தை வருடிக்கொடுத்தான்.

“சே யெஸ் டு மரி மீ… வில் யு” என்றான் கிசுகிசுத்த குரலில்.

அவளுடைய பூ முகத்தைப் பார்க்கப் பார்க்க அவனுக்குத் தெவிட்டவில்லை. இப்போதே உதடுகள் கொண்டு, அவள் முகத்தில் கோலம் வரையும் வெறி பூத்தது. ஆனால், அவளிடமிருந்து தகுந்த பதில் வராமல், எந்த உரிமையில், அவள் மீது உதடுகொண்டு வருடுவது?

தாபத்துடன், உதடுகள் செய்யத் துடித்ததை, விழிகளால் செய்ய முயன்றான். இறுதியில் உதடுகளில் அவை நிலைகொள்ள,
இவனுக்குள் பூகம்பம் மையம் கொண்டது.

‘எப்படிடி உன்னால் மட்டும் என்னைத் தொடாமல், ஆட்சிகொள்ள

முடிகிறது... விழிகளால் வருடும்போதே, என்னால் என்னைக் கட்டுப்படுத்தமுடியவில்லையே... உன்னைத் தொட்டால் என் நிலை என்ன? என்று மனதோடு பேசியவன், அதற்கு மேலும் முடியாதவனாக, எச்சில் கூட்டி விழுங்கினான்.

"என் கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லையே..." என்றவாறு இன்னும் அவளை நோக்கிக் குனிந்து நெருங்கி நிற்க, இப்போது அவனுடைய சூடான சீற்றம் மிகுந்த மூச்சுக் காற்று அவளுடைய நெற்றியில் பட்டுத் தெறித்தது.

அவளோ, மின்னாமல், முழங்காமல் அவன் போட்ட குண்டை ஜீரணிக்க முடியாமல், இன்னும் அச்சம் நீங்காதவளாக, அவனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அநேகாத்மனின் விழிகள் வெறித்த அவள் பார்வையில் நிலைத்து நின்றன.

தனது கரங்களை அப்படியே வருடியவாறு கீழிறக்கி அவளுடைய உள்ளங்கைகளைப் பற்றிக்கொண்டவன், மெதுவாக அவளுடைய தலைக்கு மேலாகத் தூக்கி சுவரோடு அழுத்தினான். சர்வமகியோ. அவனுடைய விழிகளின் வீச்சில் தன் அதிர்ச்சி மறைந்து, தன் நிலை மறந்து, உருகிக் குழையத் தயாராகிக்கொண்டிருந்தாள்.

"இன்னும் பதில் வரவில்லையே..." என்றான்.

பேசியது என்னவோ அவனுடைய வாய்தான். ஆனால் அவளுடைய நீண்ட நயனங்களில், மையம் கொண்ட அவனுடைய விழிகளோ, மெதுவாகக் கீழிறங்கி, அவளுடைய செவ்விதழ்களில் அழகிய தாஜ்மகால் கட்ட முயன்றுகொண்டிருந்தன.

அன்று அவள் தன்நிலையற்று இருந்தபோது, அவளை நினைவுலகிற்குக் கொண்டுவரவேண்டி, அந்த உதடுகளை முத்தமிட்டிருந்தான்தான்.

ஆனால், அதில் காமமோ, காதலோ எள் அளவும் இருக்கவில்லை. ஆனால் இப்போது, உதடுகள் உரசாமலே, அவன் சொர்க்க வாசலில் நுழையத் தயாராக இருந்தான்.

இனியும் முடியாது என்பது போல, இன்னும் நெருங்கி அப்படியே அவளுடைய மூக்குடன் தன் மூக்கை இடம் வலமாக உரசியவன்,

"சர்வமகி... எனக்கு இப்போதே பதில் வேண்டும்..." என்றவனுடைய குரலில் அதீத தாபம் தெரிந்தது.
பொறுக்க மாட்டாதவனாக, மெதுவாக அவள் விழிகள் என்னும் தாளில், உதடுகொண்டு அச்சுப்பதித்தவன்,

"மகிம்மா... அதிகாலையில் தூங்கியெழுந்ததும், இதோ இந்த பெரிய நீண்ட நயனங்கள், தூக்கக் கலக்கத்துடன், முதன் முதலில் என்னை மட்டும் தரிசிக்கவேண்டும். அப்போது, என்னைக் கண்டதும்,

மகிழ்ச்சியில், இவ் இரு விழிகளும் மலருமே... ஷ்ஷ்ஷ்... அந்த அழகை ஒவ்வொரு நாளும் நான் பருகவேண்டும்..." என்றவன் தன் கண்களை மூடி, அதனைக்; கற்பனையில் கண்டு கரைந்தவனாகத், தன் முகத்தை அவளுடைய கழுத்து வளைவில் வேகமாகப் புதைத்தான்.

இதோ, இப்படி நான் உன் கழுத்து வளைவில் புதைந்து, குழைந்து, உன்னை நுகர்ந்து, நுகர்ந்து என்னை உன்னில் தொலைக்கவேண்டும்..." என்றவனின் உதடுகள் அவள் கழுத்து வளைவில் ஆழமாகப் பதிந்தன.

அந்த முத்தத்தில், தன்னிலை இழந்தாள் அந்தக் குற்றமற்ற கவிதை.

அதுமட்டுமன்றி, வாழ்க்கையில் முதன் முதலாகச் சிலிர்த்தாள். முதன் முதலாகத் தான் ஒரு பெண் எண்பதை உணர்ந்தாள். முதன் முதலாக ஒரு ஆண் மகனால் தன் பெண்மையைத் தட்டி எழுப்ப முடியும் என்பதை அறிந்தாள்.

அவனோ, சர்வமகியின் நிலையைச் சற்றும் கருத்தில் கொண்டானில்லை.

கழுத்து வளைவில் புதைந்திருந்த அவன் உதடுகள், அப்படியே கன்னம் வழியாக உரசிக்கொண்டு, மெதுவாக உதட்டின் அருகே பயனித்து சற்றுத் தாமதித்து நின்றன.

"இதோ இந்த சிவந்த அழகிய தேன்சிந்தும் உதடுகள், நீ எழும்பும் வரை உனக்காகக் காத்திருந்து நீ எழுந்ததும், தூங்குவதுபோல் நடிக்கும் என்னைக் கண்டு எழுப்புவதற்காக, மென்நகையுடன், பிரியுமே, அப்போது, உன்னுடைய வரிசையான முத்துப் பற்களும், இளஞ்சிவப்பு நாவும் என்னைத் தம் அருகே அழைக்கும். அப்போது... நான்..." என்று கிசுகிசுத்தவன், அந்தப் பலாச்சுளை உதடுகளைச் சுவைத்திட வேகமாக முன்னேற,

சிறிது நேரம் அவன் நெருக்கத்தில், கண் மூடி தன்னை முழுவதுமாகத் தொலைத்தவள், அவனுயை உதடுகள், தன் உதடுகளை நெருங்கும் தருவாயில், விழித்துக்கொண்டாள்.

அப்போதுதான் தன் நிலை நினைவு வந்தவளாக அதிர்ச்சியுடன் அவன் பிடியில் சிக்கியிருந்த தன் கரங்களை வேகமாக விடுவித்து, அவளுடைய உதடுகளை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தவனின் மார்பில் தன் கரத்தைப் பதித்துப் பலம்கொண்டமட்டும் தள்ளிவிட்டாள்.

நிலவு 22

மகிழ்ச்சி என்னும் வானில் சுதந்திரமாகத் தங்குதடையின்றிப் பறந்து திரிந்த அநேகாத்மன், அவள் செயலால் குண்டடிபட்ட பறவையாகத் தொப் என்று தரையில் வந்து விழுந்தான்.

அவனுக்குத் தன்னிலை பெறவே சற்று நேரம் பிடித்தது. தான்

செய்துகொண்டிருந்த செயல் நினைவுக்கு வர அதிர்ந்து போனான். அவனுக்குத் தன்னை நினைக்கவே அவமானமாக இருந்தது.

ஒரு போதும் அவன் பெண்களைக் கண்டு தன்னை மறக்கும் அளவுக்கு, இப்படி சுய உணர்வு இழந்ததில்லை. அவன் பெண்களை அறியாதவன் அல்ல. எத்தனையோ பெண்களை இப்படித்தான் என்று கணித்திருக்கிறான். அவனை நாடி வரும் பெண்களை அவன் ஏமாற்றியது கிடையாது. ஆனால் எல்லாமே ஒரு தொழில் போலத்தான். ஒரு வரைமுறையோடு மட்டுமே. அவனுக்கும் இன்பம், வந்தவளுக்கும் இன்பம். அத்தோடு சரி. உன் எல்லை இதுதான் என்பதை அவன் தெளிவாக அந்தப் பெண்களுக்குப் புரியவைத்து விடுவான். தவிர, எந்தப் பெண்ணிலும் தன்நிலை மறந்து புதைய நினைத்ததில்லை. உடலால் நெருங்கினான் அன்றி, ஒருபோதும் உணர்வால் எந்தப் பெண்ணையும் அவன் நெருங்கியது கிடையாது. உணர்ந்து பேசியது கிடையாது. உணர்ந்து தவித்தது கிடையாது. இதுதான் முதன் முறை, அவன் ஒரு பெண்ணிடம் தன்னிலை இழந்தது.

அவனாலே அவனை நம்பமுடியவில்லை. கோபத்துடன் தன் தலைமுடியை கரத்தினால் வாரியவன்,
சர்வமகியைப் பார்த்தான். மீண்டும் அவளை அணைத்த நிலை மனக்கணணின் முன்னால் வந்து நின்றது. இன்னும் அவனுடைய நாசி அவளுடைய பிரத்தியேக நறுமணத்தை சுவாசித்தவாறே இருந்தது. இனியும் அவளை நெருங்கினால் தன்னைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகப் போய் விடும் என்பதும் புரிய, வேகமாக இரண்டடி தள்ளி நின்றான்.

“டாமிட்…” என்றவன், “ஐ... ஐ ஆம் சாரி... நான்...” என்றவன் உதட்டைக் கடித்தான். தன்மீதிருந்த கோபத்தை அவனால் தணிக்க முடியவில்லை.

மெதுவாகப் பறிக்க வேண்டிய கனி அவள். இப்படித் தடியால் அடித்துப் பறித்தால், சேதாரம் என்னவோ கனிக்குத்தானே. அது புரியாமல், தன் நிலை இழந்து அவளை மேலும் காயப்படுத்த முனைந்துவிட்டானே.

ஆனாலும், பொறுமையாக அவளுக்குப் புரியவைக்கவும் அவனால் முடியவில்லை. முடியவில்லை என்பதை விட, அவனுக்குத் தெரியவில்லை என்பதே சரியானதாகும். எதையும் ஒரு சொல்லில் புரியவைத்துப் பழகியவனுக்கு, இந்த வழவழ குழகுழ எல்லாம் வராத விஷயம். ஆதனால்,

“ஓக்கே ஐம் சாரி சர்வமகி... என்னால் உன்னை வைத்துக்கொண்டு… இப்படித் தள்ளி நின்று கைகட்டிப் பேசிக்கொண்டிருக்க முடியவில்லை… அதனால் நேரடியாகவே விஷயத்திற்கு வருகிறேன்... ஐ நீட் யு... நான் உன்னை மணக்க விரும்புகிறேன்... உன் பதிலைச் சொல்...” என்றான் கறாராக. அவனால் இன்னும் வெளியே வரமுடியவில்லை. மனம் வேறு மேலும் மேலும் அவள் மென்மையை நுகரவேண்டும் என்று

சண்டித்தனம் செய்துகொண்டிருந்தது.

சர்வமகிக்கு எங்கே மயங்கி விழுந்துவிடுவோமோ என்று அச்சமாக இருந்தது. எங்கிருந்தோ தலைவலி அவளைப் பார்த்து, வரவா விடவா என்று கேள்வி எழுப்புவதுபோல, முணு முணு க்கத் தொடங்கியது. அதை ஓரம்கட்டியவள், அவனையே வெறித்துப் பார்த்தாள்.

அவனுடைய விழி வீச்சைக் கண்டதும், தன்னை நிலைப் படுத்த முடியாதவளாகத் திணறினாள்.
அவளுடைய தயக்கத்தைக் கண்டவனுக்குப் பொறுமை காற்று வேகத்தில் போகத் தயாராக இருந்தது.
தான் கேட்டதும், ஆம் என்று சொல்வதற்கு என்ன? என்று எண்ணியவனுக்கு, அவள் தன்னை மறுத்துவிடுவாளோ என்கிற சிறிய ஐயம் கூடத் தோன்றவில்லை.

அவனை மறுப்பதற்கு என்ன இருக்கிறது? பணமில்லையா, அறிவில்லையா, அழகில்லையா… ஆண்மையில்லையா, ஏன் புகழ்தான் இல்லையா… எல்லாம் நிறைந்த ஆண்மகன் அவன். அவனை மறுப்பதற்கு காரணமே கிடையாதே…' என்று எண்ணியவனுக்கு, ஏனோ அடிப்படைத் தவறு புரியாமல் போனதுதான் ஆச்சரியமே.

"இதில் யோசிக்க என்ன இருக்கிறது… கமான் சர்வமகி... சே... யெஸ்..." என்றான் அவன் அதிகாரமாக.
அவன் கேள்விக்கு வாய் மூலம் பதில் கொடுக்க முடியாது என்பது சர்வமகிக்குப் புரிந்தது. எங்கே வாயைத் திறந்தால் குரல் தந்தியடித்து, குழறவேண்டி வருமோ என்கிற பயத்தில், தலையை மறுப்பாக இரு பக்கமும் வேகமாக ஆட்டினாள்.

"வாட்… டிட் யு செட்... யு செட் நோ....." என்றான் அவன் நம்பமாட்டாத மிதமிஞ்சிய கோபத்தில்.

அவள் மீண்டும் ஆம் என்பதுபோலத் தலையாட்ட அவனால் நம்பவே முடியவில்லை.

"ஏன்? ஏன் என்னை மணக்க மறுக்கிறாய்?" இப்போது அவனுடைய குரலில் ஆத்திரம் கொழுந்துவிட்டெரிந்தது.

"நான்... நான்..." அதற்கு மேல் சொல்ல முடியாமல் தவித்தாள். எப்படிச் சொல்வது என்று அவளுக்குப் புரியவில்லை.

அவளை மணப்பதால், அவன் எந்த சுகத்தையும் அனுபவிக்கப் போவதில்லை. கூடவே அவனுடைய வாழ்க்கையை அவள் கேள்விக்குறியாக்குவாளே தவிர, அவன் நினைப்பதுபோல அவளால், மகிழ்ச்சியாக மாற்ற முடியாது… நிச்சயமாக அவளால் அது முடியாது. அவன் வாழ வேண்டும். நீண்டகாலம் மகிழ்ச்சியாக வாழவேண்டும். அவளை மணந்தால், அந்த மகிழ்ச்சி அவனை விட்டுத் தொலைந்து

போகும்.

“சொல்லு... என்னை மணக்க ஏன் மறுக்கிறாய்? என்னிடம் அப்படி என்ன குறை கண்டாய்... பார்க்கப் போனால் அந்த லாயர்... இதோ இப்போது வந்து உன்னுடன் உரசிவிட்டுப் போனார்களே... அந்த பிளடி பாஸ்டர்ஸ்... அந்த ஜஸ்டின்... அவர்களைவிட எந்த விதத்தில் உனக்கு நான் குறைந்தவனாகிப் போனேன்...” என்று கடுமையாகச் சீறினான் அவன்.

‘ஜஸ்டினா... அவனைப் பற்றி இவனுக்கு எப்படித் தெரியும்?’ என்று திகைத்தவள், தற்போதைக்கு அதை ஒதுக்கிவிட்டு,

“நான் உங்கள் தந்தையைக் கொன்றவர் என்று உங்களால் எண்ணப்படுபவரின் மகள்... நான் எப்படி உங்களை மணப்பேன்...” என்றாள் குரல் கம்ம.

அப்போதுதான் அவனுக்கு உலகமே நினைவுக்கு வந்தது. சர்வமகி யார் என்பதும் புரிந்தது. மறுப்புக்கான அடிப்படைப் பிரச்சனையின் காரணம் தெரிந்தது.

அதற்காக அவளை இழக்க முடியுமா? அதுவும் அந்த இருவரும் அவளை உரசி நின்றதைக் கண்களால் பார்த்த பிறகு. போதாததற்கு கொசுறாக அந்த ஜஸ்டின் வேறு. விட்டால் தாலியுடனே அவளைத் தேடி வந்துவிடுவான்.

“என் தந்தையைக் கொன்றது உன் தந்தைதான் தவிர நீ அல்லவே...”” என்றான் எரிச்சலுடன்.

“என் தந்தை உங்கள் தந்தையைக் கொல்லவில்லை... அவர் கொலைகாரன் அல்ல...” என்றாள் தவிப்புடன்.

“ஸ்டாப் இட் சர்வமகி... இப்போ உன் தந்தையைப் பற்றிய பேச்சு நமக்கெதுக்கு. இப்போ நம்முடைய பிரச்சனையே, நீ என்னை மணமுடிக்க சம்மதிக்கிறாயா இல்லையா என்பதுதான்” என்றான் எரிச்சல் மாறாதவனாக.

“நோ அநேகாத்மன்... உங்களை மணக்க என்னால் முடியாது. நிச்சயமாக முடியாது. என் தந்தையை நிரபராதி என்று நிருபிக்கும் வரைக்கும் என்னால் யாரையுமே மணக்க முடியாது. தவிர... என் தந்தை தப்பு செய்தவரல்ல என்பதைப் புரிந்துகொண்ட ஒருவர்தான் என்னை மணக்க மடியும் அநேகாத்மன்...” என்றாள் சர்வமகி, அநேகாத்மனைப் பார்த்தவாறு.

“மை ஃபுட்... உன் தந்தை உனக்கு நல்லவராக இருக்கலாம்... பட் எனக்கில்லை... லிசின் சர்வமகி... உன் தந்தை நமக்கிடையில் வருவதை நான் அறவே வெறுக்கிறேன்... அதையேன் நீ புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய்...” என்றான் அநேகாத்மன் சலிப்புடன்.

“இல்லை ஆத்மன்… நான் என்றால் நான் மட்டுமல்ல… என்னோடு என் தந்தையின் வரலாறு இருக்கிறது… என் சகோதரர்களின் வரலாறு இருக்கிறது… இவர்கள் எல்லாம் சேர்ந்து தான் நான்… இவற்றையெல்லாம் உதறிவிட்டு நான் மட்டும் உங்களுடன் வரமுடியாது ஆத்மன்… அது முடியவும் முடியாது…” என்றவளுக்குத் தொண்டை வறண்டது.

உடனே அதைப் புரிந்துகொண்டவன், விரைந்து சமையலறைக்குள் நுழைந்து, ஒரு கிளாசில் தண்ணீர் எடுத்து வந்து அவளிடம் நீட்ட, அவனுடைய கரிசனையில் விழிகள் கலங்க,

“தாங்க்ஸ்…” என்றவாறு அதை ஒரே மூச்சில் குடித்தவள், உள்ளே சென்று சமையலறையில் கிளாசை வைத்துவிட்டுத் திரும்ப, அநேகாத்மனும், அவளைத் தொடர்ந்து சமையலறை வரை வந்துவிட்டிருந்தான். அதனால், அங்கிருந்த மேசையில் சாய்ந்தவாறு,

“என் சகோதரர்கள் என்னை நம்பித்தான் இருக்கிறார்கள் ஆத்மன். அவர்களுக்கு ஒரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்காமல் என்னால் ஒரு புது வாழ்க்கைக்குள் நுழைய முடியாது. என்னை மணமுடிப்பவன் என் தந்தையின் நிலையை முழு மனதாகப் புரிந்துகொண்டு, என் சகோதரர்களையும் ஏற்றுக்கொள்பவனாக இருக்கவேண்டும். அப்படி வருவதற்கு யார் இருக்கிறார்கள்?” என்றவளின் குரலில் வேதனை மிதமிஞ்சித் தெரிந்தது.

“உன் சகோதரர்களைப் பார்த்துக்கொள்ள நான் இருக்கிறேன் என்கிறேனே... பிறகு என்ன?” என்று அவன் அவசரமாகக் கூற, அந்த நிலையிலும், அவன் தன் தன்தையைத் தவிர்ப்பதைக் கண்டு, அவள் உதடுகளில் மெல்லிய விரக்திப் புன்னகை மலர்ந்தது.

அதைக் கண்டவன், அந்தப் புன்னகைக்கான காரணத்தைப் புரிந்துகொண்டவனாக,

“சாரி மகி… என்னால் இன்னும் அந்தாளை நல்லவன் என்று ஏற்றுக்கொள்ள முடியிவில்லை.” என்றான் இறுக்கமாக.

அவன் நிலை அவளுக்குப் புரியாதா என்ன. புரிந்துகொண்டவள் போலத் தலையை ஆட்ட,

“பட் சர்வமகி... என் நிலமையும் உனக்குத் தெரியும். பணத்தைப் பொருத்தவரை உலகத்தில் உள்ள பணக்காரர்களின் பட்டியலில் ஏழாவது இடத்தில் நிற்பவன் நான். விரைவில் முதல் மூன்றைத் தொட்டுவிடுவேன். எனக்கு உன் சகோதரர்கள் நிச்சயமாகப் பாரமாக இருக்கமாட்டார்கள்? அவர்களுக்குரிய வளமான எதிர்காலத்தை என்னால் உருவாக்கிக் கொடுக்க முடியும் சர்வமகி... இறந்துபோன ஒருவருக்காக, நீ உன் வளமான வாழ்க்கையைத் தொலைக்கப்போகிறாயா” என்றான் அவன் அழுத்தமாக.

“பணம் மட்டும்தான் வாழ்க்கையா அநேகாத்மன்… அப்படியென்றால், பணம் படைத்தவர்களைவிட யாருமே மகிழ்ச்சியாக இருக்கமுடியாது…” என்றாள் சர்வமகி அறிவுறுத்துவது போல.

“நான் அப்படி சொல்லவரவில்லை மகிம்மா… என்னை மணந்தால், உனக்குப் பொருளாதாரப் பிரச்சனை பற்றிய கவலையே இருக்காது என்றுதான் சொல்கிறேன்…” என்றான் அவன் தன்நிலை விளக்கமாக.

“ என்னால் முடியாது... திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். நமக்கிடையில் மனக்கசப்பு வரும்போதெல்லாம் என் தந்தைதான் உங்களுக்கு நினைவுக்க வருவார்... வேண்டாம்... நீண்ட நாள் வாழ்க்கைக்கு இது சரிவராது... நீங்கள் வேறு ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து மணம் முடியுங்கள்...”

“வேறு பெண்ணை மணமுடிப்பதாக இருந்தால் உன்னை ஏன் கேட்கிறேன்...” என்று சினந்தவன் அவளை நெருங்கினான்.

“சர்வமகி... என் மனைவியாக நீ வரவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்... உன் தந்தையின் பிரச்சனை முடிந்துபோன அத்தியாயம். அதைக் கிண்டிப் பார்ப்பத்தில் எந்தப் பயனும் கிடையாது. இறந்துபோன குழந்தைக்கு ஜாதகம் பார்ப்பது மடத்தனம். கொஞ்சம் யோசித்தால் உனக்கே தெரியும்...”

“இல்லை என்னுடைய தந்தையின் மரணம் கறுப்புச் சாயம் பூசப்பட்ட மரணம். அதை நான் மாற்ற வேண்டும்...” என்றாள் உறுதியுடன்.

“கிழிப்பாய்... எப்படி... எப்படி மாற்றுவாய்? உன் தந்தை கொலை செய்ததற்குண்டான ஆதாரம் அத்தனையும் என்னிடம் இருக்கிறது. எப்படி அதை எதிர்த்து நீ போரிடுவாய்?”

எப்படிப் போரிடுவாள்? ஓவ்வொரு நாளும் உணவிற்கு அல்லாடும் சர்வமகிக்கு அவனை எதிர்த்து ஒரு துரும்பைத் தன்னும் அசைக்க முடியுமா? முடியாதே. இயலாமைதான் அதிகரித்தது.

“இல்லை அநேகாத்மன்... நீங்கள் கேட்பது நடக்காது... வேறு யாரையும்...” அவள் பேச்சை
முடிக்கவில்லை அவன் தன் கரத்தைத் தூக்கிக் காட்டி அவளது பேச்சை நிறுத்தினான்.

“ப்ளீஸ்மா… உன் வாயால் இப்படிக் கூறாதே… எனக்கு நீ… நீ மட்டும்தான் வேண்டும்…” என்றான் அவன் தவிப்புடன். அவனுடைய தவிப்பை ஒரு கணம் உற்றுப் பார்த்தவள்,

“டூ யு லவ் மீ?” என்றாள் சர்வமகி தன் விழிகளை அகற்றாமல்.

“வட்…லவ்… நோ… ஒ்ப் கோர்ஸ் நாட்… எனக்கு இந்த காதல்,

கத்தரிகாயில் எல்லாம் நம்பிக்கையில்லை சர்வமகி. பட் மணம் முடித்தால், வாழ்க்கை முழுவதும் ஒருத்திதான் எனக்கு. அதில் முழு நம்பிக்கை வைத்திருப்பவன் நான். என் அப்பா கூட, என் அம்மா இறந்த பின், வேறு மணம் புரியவில்லை. அவர்கள் நினைவாகவே வாழ்ந்தவர்கள். நானும் அப்படித்தான்... திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் தொடர்வது... அது மகிழ்ச்சியானதாக இருக்கவேண்டும் மகி. அதற்கு வருகிற மனைவியும், புரிந்து நடப்பவளாக இருக்கவேண்டும். நானும் அப்படியே... அதனால், மணம் முடித்தால், உன்னைத்தான் மணம் முடிப்பது என்று தீர்மாணித்துவிட்டேன்... உன்னை மணந்தால், என் வாழ்வு சிறக்கும் மகி...சே யெஸ்..." என்றான் அவன்

"என்னை விட நல்ல பெண்கள் கிடைப்பார்கள்... அநேகாத்மன்" என்றாள் அவள் மென்மையுடன்.

"உன்னைப் போல... ஒருத்தியா... மே... பி... மே பி நாட் ஆனால் நோன் டெவில் பெட்டர்தான் அன்நோன் ஏன்ஜல்... கேள்விப்பட்டதில்லை..." என்றான் அவன் தன் பலமான ஆயுதமான புன்னகையைச் சிந்தியபடி.

அந்த மெல்லிய நகைப்பில் கரையாதிருக்கப் பெரும் பாடு பட்டவளாக,

"அநேகாத்மன்..." என்று அவள் எதையோ சொல்ல வர, அவள் உதட்டில் தன் கரத்தைப் பதித்த, அவள் பேச்சை நிறுத்தியவன்,

"ஆத்மன்... ஜெஸ்ட் ஆத்மன்... உனக்கு மட்டும் நான் ஆத்மன்" என்றவன், உதட்டில் பதிந்த கரம் கொண்டு, அந்த உதட்டையே மெதுவாக வருடிக்கொடுக்க,

அவன் கரத்தைத் தடுக்கத் தன் கரம் கொண்டு பற்ற, அந்தக கரத்தைத் தன் கரத்தில் ஏந்தியவன், தன் உதட்டில் பதித்து, அழுத்தமாக முத்தமிட்டவாறு,

"சே... யெஸ் மகி... ஐ வில் டேக் கெயர் ஒஃப் யூ..." என்றவாறு, அவள் நெற்றியில் உதட்டைப் பதித்தான்.
அப்படியே சற்றுக் கீழ் இறக்கி, மூக்கில் மெல்லியதாக முத்தமிட்டான். மெதுவாக இறங்கிய அவனடைய உதடுகள், அவளுடைய மேல் உதட்டில் பதிந்து இரகசியம் பேச முயல, சிரமப் பட்டுத் தன்னை ஒரு நிலைப்படுத்திய சர்வமகி,

"உ... உங்களுக்கும்... அ... அவர்களுக்கும் என்ன வித்தியாசம்..." என்று திக்கித் திணறிக் கேட்டாள்.

முதலில் அநேகாத்மனுக்கு அவள் கூறியது புரியவில்லை.

வேகமாக அவளிடமிருந்து பிரிந்தவன்,

"வட்... வட் டிட் யு சே..." என்றான் அடக்கிவைத்த சீற்றத்துடன்.

சிரமப்பட்டுத் தன்னைத் திடப்படுத்தியவள், அந்த லாயருக்கும், அந்த பொருக்கிகளுக்கும், உங்களுக்கும் என்ன வித்தியாசம்?" என்றாள் முடிந்த அளவு தெளிவுடன்.

வேகமாக இரண்டடி பின்னோக்கி வைத்தவன், தன் கரங்களை மார்புக்குக் குறுக்காக கட்டியவாறு, விழிகளில் நெருப்புப் பொறி மறக்க, அழுந்த மூடிய உதடுகளுடன் அவளை வெறித்துப் பார்த்தான்.

"ஸ்டில் ஐ டோன்ட் அன்டர்ஸ்டான்ட்" என்றான். அவனுடைய குரல் இதற்கு மேல் தவறாகப் பேசாதே என்று அவளுக்கு எச்சரித்தது. சர்வமகியோ, அவன் குரலை அலட்சிய படுத்தியவளாக,

"அந்த லாயர், எனக்கு உதவுவதாகக் கூறித் தப்பாக நடக்க முயன்றான்... கொ... கொஞ்சத்திற்கு முன்பு வந்தவர்களும், வீடு வாங்க வந்திருப்பதாகக் கூறி... தப்பான எண்ணத்துடன் நெ... நெருங்கினார்கள்... நீ... நீங்களும்..." அவள் முடிக்கவில்லை, 'சலீர்...' என்கிற பெரும் ஓசையுடன், அநேகாத்மனுக்கு அருகே சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு படத்தின் கண்ணாடி தூள் தூளாக உடைந்து தரையில் விழுந்துகொண்டிருந்தன.

சர்வமகி ஒரு கணம் ஆடிப்போனாள். அதிர்ச்சியுடன் அநேகாத்மனைப் பார்க்க, விழிகள் சிவக்க, முகம் கறுத்துத் துடிக்க, உடல் ஆத்திரத்தில் நடுங்க நின்றிருந்தவன், சிவனின் ருத்திர அவதாரத்தை எடுத்திருந்தான். அவனுடைய உள்ளங்கையிலிருந்து இரத்தம் வழிவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. அதைக் கண்டதும், அவனுடைய கோபம் மறந்து போகப், பதறிப்போனாள் சர்வமகி.

"ஆத்மன்..." என்று துடித்தவாறு, அவளை நெருக்க முயல காயம் பட்ட தன் வலக் கரத்தைத் தூக்கி அவள் பேச்சைத் தடுத்தான் அநேகாத்மன். இப்போது, அதிக இரத்தம் வரத்தொடங்கியிருந்தது.

"ஆத்மன்... இரத்தம் வருகிறது... ப்ளீஸ்..." என்று மீண்டும் நெருங்கிவர, அவன் வேகமாக ஓரடி பின்னுக்கு வைத்து நம்பமுடியாதவனாக, சர்வமகியையே வெறித்துப் பார்த்தான்.

அவனுக்குத் தன்னைச் சமப்படுத்துவதற்கே, சற்று நேரம் தேவைப்பட்டது.

"ஹௌ டெயர் யு... ஹௌ யெடர் யு ஜஜ்ஜிங் மீ லைக் தட்... டூ யு நோ... ஹூ ஆம் ஐ? என்னுடைய தராதரம் எது என்று உனக்குத் தெரியுமா?" என்று கோபத்தில் வார்த்தைகள் வராது தடுமாறினான்.

"ப்ளீஸ் ஆத்மன்... நான் கெஞ்சிக் கேட்கிறேன்... முதல்ல காயத்திற்கு மருந்துபோடலாம்... கையில் கண்ணாடி வேறு குத்தியிருக்கிறது..." என்று தரையில் சிந்தும் இரத்தத்தைக் கண்டு பதறியவளாக, அவள் கெஞ்ச, அவளை அவன் சிறிதும் கவனித்தான் இல்லை.

“என் தகுதி தெரிந்தும் நீ... டூ யு நோ வட்... ஜெஸ்ட் லைக் தட்...” என்றவன், தன் விரல்களைச் சுண்டிக் காட்டி, “இப்படி என்பதற்குள் என்னால், எத்தனையோ பெண்களைக் கவர முடியும்... பட்... நான்... சே...” என்றவனுடைய முகம் கோபத்தாலும், அவமானத்தாலும் கறுத்துப்போயிருந்தது. கேவலம் ஒரு பெண்ணால் மறுக்கப்பட்டுவிட்டோம் என்பதையம் தாண்டி, அந்தக் கயவர்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பேசிவிட்டாளே என்கிற ஆக்கிரோஷம் அவனைப் பலமாகத் தாக்கியது.

சர்வமகியோ, அவனுடைய கோபத்தைக் கண்டுகொள்ளவே இல்லை. விரைந்து சென்று முதலுதவிப் பெட்டியை எடுத்து வந்தவள், அவனை நெருங்கி, அவன் கரத்தைப் பற்ற, ஒரு உதறலில், அவள் கரத்திலிருந்த முதலுதவிப் பெட்டி சிதறி மறுபக்கம் போய் விழுந்தது.

“டோன்ட்... டோன்ட் டச் மி... அந்தத் தகுதியை நீ இழந்துவிட்டாய்...” என்றவன் “திருமணம் முடிக்கக் கேட்டதற்கு சிறந்த பரிசாகக் கொடுத்துவிட்டாய் சர்வமகி;. தாங்க் யூ... தாங்க் யூ வெரி மச்...” என்றவன், வேதனையுடனும், ஏளனத்துடனும் நகைத்தான்.

“யெஸ்... இட்ஸ் மை ஃபோல்ட்... உன்னைப் போய் மணக்க ஆசைப்பட்டேனே... எனக்கு இது தேவைதான்... ஐ ஆம் டிசேர்வ் இட்... டூ யு நோ வட்...” என்றவன், ஆக்ரோஷத்துடன் அவளைப் பார்த்து, “ஒரு வேளை... மனைவியாக வா என்று கேட்பதற்குப் பதிலாக ஆசைநாயகியாக வா என்று கேட்டிருந்தால் வந்திருப்பாயா...” என்றான் அகங்காரமாக.

இன்னும் அவன் சர்வமகியின் குற்றச்சாட்டிலிருந்து வெளிவரவில்லை. நினைக்கும்போதே உடல் திகு திகு என்று பற்றி எரிந்தது. இது அவனுக்குப் புதியது.

ஒரு போதும் அவன் யாராலும் நிராகரிக்கப்பட்டதில்லை. அவன் காலடியில் எத்தனையோ பெண்கள் விழுந்து கிடக்கும் வேளையில், இந்த ஒப்பீடு, அவன் தன்மானத்திற்குப் பெரும் அடியாக இருந்தது. அதுவும் யாரோடு சேர்த்து ஒப்பிட்டாள்... அந்த லாயருடனும், அந்த இரு பொருக்கிகளுடனும்...
ஒரு போதும் தோல்வியைச் சந்திக்காதவன், முதன் முதலாக... அதுவும் ஒரு பெண்ணிடம் தோற்றுப்போய் நின்றான். தாங்கமுடியாத கோபத்தில் உள்ளம் கொந்தளித்தது.

“உன்னை மணக்கக் கேட்டேன். ஆனால் நீ... சே... எதை மன்னித்தாலும், நீ சொன்னதை நான் மன்னிக்கவே மாட்டேன். ஐ ஹேட் யு மிஸ் சர்வமகி வாசுதேவன்... ஐ கேட் யு ஃப்ரம் பொட்டம் ஒஃப் மை ஹார்ட்... அத்தனை கேவலமாகவா என்னை எண்ணிவிட்டாய்... அது உன் தப்பு கிடையாது... அது என் தப்பு... நான்தான் தராதரம் பார்க்காமல், உன் காலடியில் மண்டியிட நினைத்தேன்... எனக்கும் இது தேவைதான்...

ஆனால் நீ நல்ல தெளிவாகத்தான் இருக்கிறாய்... பின்னே... ஒரு கொலைகாரனின் மகள்தானே... எப்படி இருப்பாய்...” என்று தாளமுடியாத வலியில் நஞ்சைக் கக்கியவன், தன்னைச் சமப்படுத்த பெரிய மூச்சொன்றை எடுத்து விட்டான்.

“சரி... இத்தோடு இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கலாம்... அஸ் யு விஷ்... ஐ ட்ராப் த சப்ஜெக்ட்” என்றவன், அதற்கு மேல் கூற ஒன்றுமில்லை என்பது போல வெளியேற நினைத்தவன், ஏதோ நினைத்தவனாக, நின்று திரும்பினான்.

“எதற்குமே கலங்காத என்னை கலங்க வைத்துவிட்டாய் அல்லவா... ஐ வில் நெவர் ஃபொர்கிவ் யு... ஆனால் எப்போதாவது உனக்கு என் உதவி தேவைப்படலாம்... அப்போது என் நினைவு உனக்கு வந்தால், அங்கு வா... உனக்கு என் வீட்டு விலாசம் தெரியும் அல்லவா. எப்போதும் உனக்காக என் வீடு திறந்தே இருக்கும்... பட் மனைவியாக வருவதற்கல்ல... ஆசைநாயகியாக வருவதற்கு...” என்றவன் ஒரு விசிட்டிங் கார்ட்டை எடுத்து அவள் முகத்தில் விட்டெறிந்துவிட்டு கடகடவென்று வெளியேறினான்,

அவனுடைய குரலிலும் நடையிலும் ஒரு பெண்ணால் மறுக்கப்பட்டு விட்டோம் என்கிற ஆத்திரமும், அவமானமும் அதிகமாகத் தெரிந்தது. சர்வமகி சிலைபோல அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவன் சென்று மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தவள், அதற்கு மேல் தாங்க முடியாதவளாக ஓடிச் சென்று தன் அறைக்குள் நுழைந்தவள், வேகமாகக் க்ளோசட்டைத் திறந்து அதில் தொங்கிக்கொண்டிருந்த அநேகாத்மனின் அந்தப் பெரிய ஜக்கட்டை விரல் நடுங்க வெளியே இழுத்து எடுத்தாள்.

உதடுகள் துடிக்க, கண்ணீர் பொங்க நடுக்கத்தால், நுழையாத கரங்களை சிரமப்பட்டு நுழைத்து, தன்னோடு இழுத்து இறுக்கிக்கொண்டவளுக்கு, அழுகை கட்டுக்கடங்காமல் வந்தது.

“ஐ ஆம் சாரி ஆத்மன்... ஐ ஆம் ரியலி ரியலி சாரி... என்னை மன்னித்துவிடுங்கள்... ப்ளீஸ்...” என்று சத்தம் வெளியே வராதவாறு கதறியவள், அவன் பெரிய ஜாக்கட்டின் கழுத்துப் புரத்தை இரு கரங்களாலும், இழுத்து முகத்தில் புதைக்க, எப்போதும் போல, அந்த ஜாக்கெட் அவளுக்குக் கொடுக்கும் தைரியத்தை அப்போதும் கொடுக்க, இழந்த தைரியம், மெது மெதுவாக அவளிடம் திரும்பி வரத் தொடங்கியது.

தொடரும்....

நிலவு 23

காலம் பறப்பதற்குப் பறவையிடம்தான் கற்றுக்கொண்டதோ, அது தன் போக்கில் வேகமாகச் செல்லத் தொடங்கியது. சர்வமகியை விட்டு விலகி ஒருமாதத்திற்கும்மேல் ஆகிவிட்டிருந்தது. அந்த ஒரு மாதமும், அநேகாத்மன் மனித அவதாரத்தை விடுத்து நரசிம்ம அவதாரம் எடுத்திருந்தான். இந்த ஒரு மாதத்தில் அவனுடைய வேலைத்தளத்திலிருந்து, கிட்டத்தட்ட எழுபத்தைந்து பேர், அவனுடன் இணைந்து பணியாற்றமுடியாமல் விலகிச் சென்றனர். மற்றவர்கள் அவனுடன் பேசப் பயந்து ஒதுங்கிக்கொண்டனர்.

அநேகாத்மனுக்கோ, தன்னைக் கட்டுப்படுத்துவது பெரும் சிரமமாக இருந்தது. சர்வமகி தன்தை அத்தனை கீழ்த்தரமாக எண்ணியதை அவனால் ஜீரணிக்கமுடியவில்லை. என்னதான் தன் நேரத்தை வேலையில் மூழ்கடிக்க முயன்றாலும், அவனையும் மீறி, மனம் சர்வமகியிடமே செல்லத் துடித்துக்கொண்டிருந்தது. இருந்தும், இறங்கிச் சென்று அவளைக் காண அவன் தன்மானம் விடவில்லை.

‘ஐ ஹேட் திஸ் ஃபீலிங் டாமிட்...’ என்று தவித்தவன், வேலையில்லா நேரம் முழுவதும் ஜிம்மிலேயே கழித்தான். என்னதான் உடலை வருத்தி மனதைத் தெளிவுபடுத்த முயன்றும், மீண்டும் மீண்டும் மனம் சர்வமகியிடமே தஞ்சம்புகுந்தது. கூடவே, அவளுடைய கசப்பான பேச்சும் நினைவில் வந்து, அவனைத் தவிக்க வைத்தது. ஆனாலும், அவளைச் சென்று பார்ப்பதில்லை என்கிற உறுதியை மட்டும் அவன் கைவிடவில்லை.

அன்று, வேலை முடித்துவிட்டு, தன் பிரத்தியே உடற்பயிற்சி அறையில் கிட்டத்தட்ட மூன்றுமணி நேரம் உடற்பயிற்சி செய்தவன், உடல் களைப்புற, நன்கு குளிர்நீரில் குளித்துவிட்டுவந்து படுக்கையில் விழுந்தான். விழுந்தவனின் மனக்கண்ணில் மீண்டும் சர்வமகியே அவனைக் கலங்கும் விழிகளுடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“ஏன்டி... ஏன் இப்படி சித்திரவதைப் படுத்துகிறாய்... அதுதான் நான் வேண்டாம் என்றுவிட்டாயே... பிறகு எதற்கு என் நினைவில் வந்து தொல்லை தருகிறாய்... கெட் லாஸ்ட்... மகி... ப்ளீஸ்... கெட் அவுட் ஃப்ரம் மை தோட்ஸ்...” என்று முனகியவன் மெதுவாகத் தன் விழிகளை மூடினான். மெது மெதுவாக தூக்கம் அவனை ஆட்கொண்டது.

அண்ட வெளி... கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் எந்த மரங்களும் கிடையாது. ஆனால் மஞ்சல் நிறத்தில் புதர்கள் அடர்ந்து அங்கும் இங்குமாக முளைத்திருந்தது... அந்த வறண்ட சூழ்நிலையில்,

புத்துணர்ச்சி ஊட்டுவதுபோல, எங்கோ மெல்லிய சிரிப்பொலி கேட்க, அந்த வறண்ட பூமியின் நடுவில் நின்றிருந்த அநேகாத்மன் ஆவலுடன் அந்த சிரிப்பொலி வந்த திசையை நோக்கிப் போகிறான்.

சற்றுத் தொலைவில், வெண்ணிறத்தில் நீண்ட பாவாடையும், அதே வெண்ணிறத்தில், மஞ்சள் நிறப் பூக்கள் தெறித்த நீண்ட கைகொண்ட மேல் சட்டையும் அணிந்தவாறு ஒரு பெண் போய்க்கொண்டிருக்கிறாள். அவளுடைய நீண்ட பின்னிய கூந்தல், அந்த நடைக்கேற்ப அசைந்தாட, அந்த அசைவுக்கு ஏற்ப, கைநிறைய வெள்ளைக் கண்ணாடிக் காப்புகள் சலலசக்க, அந்த சலசலப்புக்குப் போட்டியாக, கலகலத்துச் சிரித்தவாறு நடந்துகொண்டிருந்தாள்... அவள்

'யாராக இருக்கும், என்னைப்போலவே இங்கே தனித்து சிக்கிக்கொண்டாளோ?' என்று எண்ணியவன், அவள் பின்னழகில் மயங்கி, அவள் முகத்தைப் பார்க்கும் ஆவலுடன் அவளை நெருங்கினான்;... இவன் நெருங்க நெருங்க, அந்தப் பெண்ணின் தூரமும் அதிகரித்தது. ஒரு கட்டத்தில்,

"ஹேய்... உன்னைத்தான்...." என்று அழைத்தான். அவளோ திரும்பிப் பார்க்கவில்லை. மீண்டும் மீண்டும் அழைக்கிறான்... அவளோ நடந்து செல்கிறாள். இனியும் முடியாது என்கிற வேகத்தில் ஓடிச்சென்று அவளுடைய கரத்தைப் பற்றித் தன் புறம் திப்பினான். புன்னகை மாறாமல் திரும்பிப் பார்க்கிறாள் அவள்.

"மகி..." வியந்துபோனான் அநேகாத்மன்.

"மகி... நீ எங்கே இங்கே... இங்கே என்ன செய்கிறாய்?" என்று அதிர்ச்சியுடன் கேடடான்; அநேகாத்மன்.
சர்வமகியோ, அவன் கரத்திலிருந்த தன் கரத்தை விடுவித்தவாறு.

"நான்... போகவேண்டும்... விடுங்கள்..." என்றாள்.

"வட்.... நோ... யு கான்ட்.. எங்கே போகப்போகிறாய்... அதுவும் என்னைத் தனியாக இங்கே விட்டு உன்னால் எங்கும் போகமுடியாது... அதற்கு நான் விடமாட்டேன்.. வா என்கூட" என்றான் அநேகாத்மன். அதற்கு நகைத்த சர்வமகி,

"அதைத் தடுக்க உங்களால் முடியாது ஆத்மன்..." தன் இரு கரங்களையும் வானை நோக்கி நீட்டுகிறாள்.
திடீர் என்று இரண்டு பெரிய அழகிய வெண்நிறப் பறவைகள்

சர்வமகியை நோக்கிப் பறந்து வரத்தொடங்கின.

“ஏய் என்னசெய்கிறாய் மகி...” என்று பதறினான் அநேகாத்மன்.
சுர்வமகியோ, சிறிதும் அநேகாத்மனைக் கண்டுகொண்டாளில்லை.

“போய் வருகிறேன் ஆத்மன்...” என்கிறாள் சர்வமகி மென்குரலில்.

“வாட்... நோ.. நோ.. நீ போக முடியாது... நான் விடமாட்டேன்...” என்று அவன் கூறி முடிக்கவில்லை, அந்த பறவைகள், தங்கள் காலால், சர்வமகியின் இரு கரங்களையும் பற்றிக்கொள்கின்றன.

“மகிம்மா... ஸ்டாப்... நில்... என்னைத் தனியாக விட்டுவிட்டு நீ மட்டும் போகமுடியாது... என்னிடம் வா...” என்று கத்துகிறான் அநேகாத்மன்.
அந்தப் பறவைகளோ, இவனை லட்சியமே செய்யவில்லை,
சர்வமியைத் தூக்கத் தொடங்க, அநேகாத்மன் கர்வமகியின் கால்கள் இரண்டையும் இறுகப்பற்றினான்.

“நோ... யு கான்ட் கோ வித்தவுட் மீ... கெட் டவுன் சர்வமகி... என்னிடம் வந்துவிடு... இந்த உலகத்தில் உன்னால் தனியாக இயங்க முடியாது... உனக்குப் பலகமாக நான் இல்லை இல்லை எனக்குப் பலமாக நீ இருக்கவேண்டும்.. வந்துவிடு...” என்று கத்தினான் அநேகாத்மன்.

“இல்லை ஆத்மன்... என்னை மறந்துவிடுங்கள்.... நான் போகவேண்டும்...” என்கிறாள் அதே மென்மையுடன்.

அவனோ அவள் இரு பாதங்களையும் இறுகப் பற்றுகிறான். அந்தப் பறவைகளின் பலத்திற்கு மத்தியில் அநேகாத்மனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. முடிந்தவரை சர்வமகியைத் தன்னை நோக்கி இழுக்க முயல்கிறான். இறுதியாக. அந்தப் பெரிய பறவை ஒன்றின் இறக்கையின் நுனிப்பாகம், அநேகாத்மனின் ஒற்றைக் கண்ணைக் குத்த, மகிம்மா... என்றவாறே தரையில் விழுகிறான்.

தன் கரத்தை உயர்த்தி அவளை மீண்டும் பற்றப் பார்க்கிறான். ஆனால், சர்வமகியோ, அவன் கண்கெட்டா தூரத்திற்குப்
போய்க்கொண்டிருந்தாள். தாள முடியாது, “மகிம்மா...” என்கிற அலறலுடன் விழிகளைத் திறந்தான் அநேகாத்மன்.

எங்கும் இருட்டு... “லைட்ஸ் ஆன்...” என்று இவன் கத்த, அந்த அறையின் மின்விளக்கு எரிந்தது.

இதயம் ஜெட் வேகத்தில் அடித்தது. உடல் முழுவதும் நடுங்கி வியர்வை

ஆறாகப் பெருகியது...

‘கனவா... தான் கண்டது வெறும் கனவா...’ அது கனவென்று அவனால் சிறிதும் நம்பமுடியவில்லை.

கட்டிலில் எழுந்து அமர்ந்தவன், தன் கரங்களைத் தூக்கிப் பார்த்தான். இரு கரங்களும் சாதுவாக நடுங்கின. நடுங்கிய கரங்கள் கொண்டு, தலையைப் பற்றிக்கொண்டு குனிந்தவனுக்கு அனைத்தும் மாயமான, வெறுமையான ஒரு உணர்வில் தவித்துப்போனான். ஓரளவு தன்னைச் சமப்படுத்தியவன், வியர்வையால் நனைந்த தலையைக் கோதியவாறு, நேரத்தைப் பார்த்தான். இரண்டுமணி என்றது கடிகாரம்.

கொஞ்சநேரம் தன் கால்களைக் கட்டி அப்படியே இருந்தவனுக்கு இன்னும் இதயத்தின் வேகம் குறைந்தபாடில்லை.

“எதற்கு இப்படிக் கனவு வந்தது? மகிக்கு ஏதாவது ஆபத்து வந்திருக்குமா? புல் ஷிட்... அவளுக்கு ஒன்றுமாகியிருக்காது... நான் இருக்கும் வரை அவளுக்கு எதுவும் ஆகாது... மகி... என்னை விட்டு நீ எங்கும் போக முடியாது... போகவும் கூடாது... அதற்கு நான் விடமாட்டேன்...” என்று பல்லைக் கடித்துக் கூறியவன், இப்போதே சென்று சர்வமகியைப் பார்க்கவேண்டும் என்று உள்ளமும், புத்தியும் அவனுக்குக் கட்டளையிட்டன.

ஆனால் இந்த நேரத்தில் போவது உசிதமல்ல என்பதால் அமைதிகாத்தான். எப்படியும் முதல் வேலையாக சர்வமகியை, அருகே நின்று பார்க்காவிட்டாலும், தள்ளிநின்றாவது பார்த்துவிடவேண்டும் என்று மனம் முடிவு செய்தது.

மறுநாள் முடிவு செய்ததுபோல, சர்வமகியைப் பார்ப்பதற்காகக் கிளம்பியவனின் கைபேசி அழைக்க, எடுத்துப் பார்த்தான். அவன் உதவியாளன்தான். இன்று முக்கிய மீட்டிங். அதை நிறுத்த இயலாது... சரி அதை முடித்துவிட்டுப் போகலாம், என்று எண்ணியவன், அலவலகத்திற்குச் சென்றான்.

மீட்டிங்கை முடித்துவிட்டு வெளியே வந்தவனிடம், கூரியரில் ஒரு கடிதம் நீட்டப்பட, அது எங்கிருந்து வந்தது என்று பார்த்தான். அது சர்வமகியிடமிருந்து வந்தது என்பதை அறிந்ததும், பரபரப்புடன் அதைக் கவனமாக உடைக்கும் பொறுமையில்லாதவனாக, கிழித்து உள்ளே இருந்ததை எடுத்துப் பார்த்தான்.

இருபதினாயிரம் டாலர்ள் கொண்ட செக் ஒன்று அவனுக்கு எழுதப்பட்டிருந்தது. முகம் இறுக, ஏதாவது கடிதம் இருக்கிறதா என்று பார்த்தான். அவன் சந்தேகம் தவறவில்லை. ஒரு சிற குறிப்படங்கிய தாள் ஒன்றும் அந்த கடித உரைக்குள் அவக்கப்பட்டிருந்தது.

சினம் மேலிட எடுத்துப் பார்த்தான்.

கனம் திரு அநேகாத்மன் வெங்கடேஷ் அவர்களுக்கு, இத்துடன், இதுவரை நீங்கள் எங்களுக்கு செலவிட்ட, பணத்திற்குண்டான காசோலை அனுப்பியிருக்கிறேன். இது நீங்கள் செய்த உதவிகளுக்கு ஈடாகாது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், எங்கள் நிமிர்த்தம் நீங்கள் செலவு செய்வதை நான் விரும்பவில்லை. எங்களைப் புரிந்துகொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு
சர்வமகி வாசுதேவன்.

என்றிருந்தது அந்தக் குறிப்பு. அவனுடைய விழிகள் அநேகாத்மன் வெங்கடேஷிலும், வாசுதேவனிலுமே மாறி மாறிப் பாய்ந்தது. அதுவரை அவள் மேலிருந்த இரக்கமும், கவலையும் மாயமாக மறைந்துபோக, அந்த இடத்தில் பெரும் கடுமை குடிகொண்டது.

‘அன்று பணம் தேவையென்று அத்தனை பொருட்களையும் விற்றுவிட்டு, இருக்க இடமில்லாமல் தரையில் இருந்தபோது இல்லாத பணம் இப்போது எப்படி வந்தது. ஒரு வேளை வீட்டை விற்றுவிட்டாளோ...’ என்று எண்ணியவன்,

“ஹௌ டெயர் ஷி இஸ்...” என்று கர்ஜித்தவனின் கரங்கள், மிதமிஞ்சிய சினத்தில் நடுங்கியது. விரைந்து சென்று தொலைபேசியில் ஒரு இலக்கத்தை அழுத்த, மறுகணம், அவனுடைய உதவியாளன், கேர்வின் அவன் முன்னால் வந்து நின்றான்.

“உன் காசோலைக்கு நன்றி, உன்னிடம் பிச்சைவாங்கும் அளவுக்கு நான் ஒன்றும் தாழ்ந்துபோகவில்லை... இதை நீயே வைத்துக்கொள்...” என்கிற வாசகத்துடன், அதை அவனுயைட அலுவலக முத்திரை பதித்த கடித உரையுள் திணித்துக் கேர்வினிடம் நீட்டியவன்,

“உனக்கு சர்வமகியைத் தெரியுமல்லவா... அவளிடம் கொடுத்துவிட்டு வா...” என்கிற கட்டளையுடன் அனுப்பிவைக்க, உடனே சர்வமகியைத் தேடிச்சென்ற கேர்வின், அடுத்த அரைமணி நேரத்தில், அடிபட்ட

பந்தாகத் திரும்பி வந்தான்.

“வட் ஹப்பன்... ஹௌள இஸ் ஷி... செக்கை வாங்கினாளா...” என்று கடுமையாகக் கேட்டவனுக்கு, அவள் எப்படியிருக்கிறாள் என்று அறியும் ஆவல் உந்தியதை அவனால் தடுக்கவே முடியவில்லை.
“அது சார்...” என்று கேர்வின் தயங்க,

“வட் ஹப்பன் கேர்வின்... இஸ் ஷி ஓக்கே...” என்றான் ஒரு வித பரபரப்புடன்.

:”ஐ... ஐ டோன்ட் நோ சார்...” என்றான் கேர்வின் பயத்துடன்.

“வட் டு யு மின்... கேர்வின்...” அவன் குரலில் இருந்த அடக்கப்பட்ட கோபத்தை உணர்ந்துகொண்ட கேர்வினுக்கு பயத்தில் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. தன்னைத் திடப்படுத்தியவன்,

“அது... அவர்கள் அங்கேயில்லை...” என்றான் ஒருவாறு பெற்றுக்கொண்ட தைரியத்துடன்.

“வட்...” என்று சீறியவன், விரைந்து கேர்வினை நெருங்கினான். அவன் முகத்தில் தெரிந்த ஆக்ரோஷத்தைக் கண்ட கேர்வினுக்குப் பயத்தில் மயக்கம்வரும் போல இருந்தது.

“ஐ டோன்ட் நோ சார்... நான் அங்கே போனேன்... வீடு பூட்டியிருந்தது. எப்போ வருவார்கள் என்று கேட்கலாம் என்று, பக்கத்து வீட்டில் விசாரித்தேன். அப்போதுதான், அவர்கள் அந்த வீட்டை விற்றுவிட்டுச் சென்றது தெரியவந்தது... என்றான் கேர்வின் தயக்கமாக.

“வீட்டை விற்றுவிட்டாளா...” என்று அதிர்ந்தவன், அவன் யூகித்ததுபோல்தான் நடந்திருக்கிறது என்கிற எரிச்சலில் கேர்வின் கரத்திலிருந்த செக்கையே வெறித்துப் பார்த்தான். பின் நிமிர்ந்து,

“நீ போகலாம்...” என்று கேர்வினின் கரத்திலிருந்த செக்கை வாங்கிக்கொண்டு விடைகொடுத்தவனுக்கு, கொபம் கணுக்கால் முதல், தலைமுடிவரை பெங்கி வழிந்தது. அவள் மேலிருந்த பரிதாபம் முற்றும் முழுதாக அவனை விட்டு விலகிச் சென்றது.

“எத்தனை தைரியமிருந்தால் என்னிடம் சொல்லாமல் போயிருப்பாள்.” ஆத்திரம் கட்டுக்கடங்காமல் வர, சிகரட் ஒன்றைப் பத்தவைத்தவாறு ஜன்னலருகே வந்து நின்றான். அவன் சிகரட்டின் புகையை இழுத்த வேகத்தில், அவன் கொபம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

எங்கே போயிருப்பாள்... ஒரு வேளை, அந்த ஜஸ்டினிடம் சென்றிருப்பாளோ. அவன்தானே அவளை மணக்கக் கேட்டான்." என்கிற சந்தேகம் எழ, உடல் முழுவதும் பொறாமைத் தீ கொழுந்துவிட்டெரிந்தது.
'மீண்டும் மீண்டும் தப்பு செய்கிறாய் சர்வமகி. நீ பிடித்தது புலிவால் என்பதை மறந்துவிட்டாய்.

அத்தனை சுலபத்தில் நீ என்னை விட்டுப் போய்விட முடியாது... போகவும் விடமாட்டேன்... ஐ வில் நெவர் ஃபொகட் யூ, அன்ட் ஐ நெவர் ஃபொகிவ் யூ..." என்று முணுமுணுத்தவனின் கண்களில் வெறி குடிகொண்டிருந்தது. அவனுடைய உதடுகள், அலட்சியத்துடனும், வக்ரத்துடனும் நகைத்தன.

நிலவு 24

சர்வமகி, தன் இறந்தகாலத்தை, ஒரு ஓரமாக ஒதுக்கிவைத்துவிட்டு, தன் சகோதரர்களுக்காகப் புதிதாகப் பிறவியெடுத்தாள். அதே இடத்தில் இருக்கப்பிடிக்காமல், அளுடைய சகோதரர்களையும் அழைத்துக்கொண்டு ஒதுக்குப்புறமாக வினிபெக்கிற்கு வந்துவிட்டிருந்தாள். அவள் அங்கே நேற்றுத்தான் வந்ததுபோலிக்கிறது. ஆனால் கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகின்றன.

அவள் தங்கியிருப்பது ஒரு கிராமப்புறம் என்பதால் அடிப்படை வசதிகள் சற்றுக் குறைவுதான். ஆனாலும் மனித நேயம் மிக்க மனிதர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைத்தது. கிடைத்த சம்பளத்தில் ஒரு சிறிய அப்பார்ட்மன்ட் ஒன்றில் தங்கினாள்.

தேவகியும் கடந்த ஒன்றரை வருடங்களாகப் பகுதிநேரமாக வேலைக்குப் போகத் தொடங்கியதால், சர்வமகியின் பாரம் சற்றுக் குறைந்தது.

ஆனாலும் பிரச்சனை அவளை விட்டுப் போவதாக இல்லை. இப்போது அவள்புதியதாக ஒரு பிரச்சனையைச் சந்திக்கவேண்டியிருந்தது. அந்தப் பிரச்சனைக்கு நாயகன் பிரதீபன். பதினைந்து வயது கடந்த பின், அவனிடம் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அவனுடைய நண்பர்களின் சேர்க்கை அவ்வளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை.

சர்வமகி அவனிடம் மறைமுகமாகவும் நேரடியாகவும் கூறிப் பார்த்தாள்.

அவனோ அவளை சிறிதும் லட்சியம் செய்தானில்லை.

“போக்கா... நீயும் உன்னுடைய அட்வைசும். எனக்குப் பதினாறு வயதாகப்போகிறது. எனக்கும் எது சரி எது தவறு என்று தெரியும்...” என்ற ஒற்றைச் சொல்லில் கூறி அவளுடைய வாயை அடைத்துவிட்டான்.
அதற்குப் பிறகும் வாயைத் திறந்தால் உள்ள மரியாதையும் கெட்டுப்போகும் என்று சர்வமகி அமைதியாக இருந்துவிட்டாள்.

ஆனால் இப்போது அது தவறு என்பதை மெல்ல மெல்ல உணரத் தொடங்கியிருந்தாள் சர்வமகி.
ஒழுங்காகப் பாடசாலைக்கு வருவதில்லை என்று கடிதம் வீட்டிற்கு வந்திருந்தது. கூடவே முன்னேற்ற அறிக்கையில் அவன் எடுத்திருந்த மதிப்பெண்கள் மிகவும் குறைவாக இருந்தன. அவன் புத்தகமும் கையுமாக இருந்ததைப் பார்த்தே பல மாதங்களாகிவிட்டன. என்னென்னவோ காரணங்களைச் சொல்லி வெளியில் போபவன் வீட்டிற்கு வர இரவு நடுச்சாமத்திற்கும் மேலாகவிடும். போதாதற்கு அவனுக்கு அடிக்கடி பணம் தேவைப்படுகிறது. எதற்கு ஏன் என்று கேட்டால், கோபப்படுகிறான்.

இது தவறு, அப்படிச் செய்யாதே என்பதைச் சொன்னால் அதைக் கேட்கும் புத்தியும் அவனுக்கில்லை, அதைக் கேட்பதற்குப் பொறுமையும் அவனிடத்தில் இல்லை.

தேவகியோ, “அக்கா... எதற்காக வீணாக உன் சக்தியை வீணாக்குகிறாய்? கெடுகிறேன் பந்தையம் பிடி என்பவனிடம் உன்னுடைய புத்திமதிகள் எடுபடும் என்று நினைதாயா? விடுக்கா... எங்காவது முட்டிக்கொண்டால்தான் இவனுக்குப் புத்திவரும்...” என்று எரிச்சலுடன் கூறிப் பார்த்தாள். ஆனால், சர்வமகியால்தான் அப்படி சும்மா விட்டுவிட முடியவில்லை.

அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதாகத் தந்தைக்கு வாக்குக் கொடுத்திருக்கிறாளே. அதை எப்படியாவது நிறைவேற்றியே ஆகவேண்டுமே.

தவிர அவனுக்கு அடிபட்டால் அவளுக்கும்தானே வலிக்கும்.
இதைப்பற்றி அவனிடம் போயப் பேச அவளுக்குச் சங்கடமாகவும் இருந்தது. தோளுக்கு மேல் வளந்தவனிடம் எதைப் பேசுவது? எப்படிப் பேசுவது. போசினாலும் அதை ஏற்றுக்கொள்ளும் வயதோ,

மனப்பக்குவமோ அவனுக்கில்லையே.

சர்வமகிக்கு முதன் முதலாக வாழ்க்கையில் பயம் பிடித்தது. அநேகாத்மன் சொன்னதுபோல அவனை மணந்திருந்தால், இவர்களை ஒரு நிலைக்குக்கொண்டு வந்திருக்கலாமோ... ஒரு ஆண்மகனின் துணையில்லாமல் இவர்களை வளர்க்க முடியாதோ... என்று எண்ணிக் கலங்கினாள்.

அநேகாத்மனின் நினைவு வரும்போதெல்லாம், அவளையும் அறியாமல், அவளுடைய உடல் சிலிர்க்கும். அவனுடைய ஆளுமையில் சுறுண்டு கலந்திட மனம் ஏங்கும். என்னதான் மனம் அலையுறும் போதெல்லாம் அவனுடைய ஜக்கட்டை அணிந்தாலும், அவனுடைய அரவணைப்புக்கு ஈடாகாதே... இப்படி மனம் தவிக்கும்போதெல்லாம், அவனுடைய அருகாமைக்காக மனம் பெரிதும் தவித்துப்போகும். அவனுடைய அந்த சூடான மூச்சுக் காற்றிற்கும், வெம்மையான அவன் உடல் சூட்டிற்கும் மனம் பெரிதும் ஏங்கும்.

ஆனாலும் அநேகாத்மனின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்க அவளால் எப்படி முடியும்? அவளை மணந்தால், அவனுடைய வாழ்க்கை அந்தரத்தில் அல்லவா தொங்கும். அதை அவளால் தாங்கிக் கொள்ள முடியாதே...

எந்த வலியாக இருந்தாலும் அவள்தான் அதைத் தாங்க வேண்டும்... அநேகாத்மனின் நினைவுகளை தன்னிடமிருந்து ஒதுக்கியவளிடம் மீண்டும் பிரதீபனின் நினைவு வந்து உட்கார்ந்துகொண்டது.

இப்போது பிரதீபன் புதிய பிரச்சனை ஒன்றைக் கொண்டுவந்துவிட்டான். தன்னுடைய நண்பர்களுடன் ஒரு கிழமை சுற்றுலாவிற்கு கல்காரி போகப்போவதாகக் கூறியவன் உடனடியாக ஆயிரம் டாலர் தருமாறு அடம் பிடித்தான். உடனேயே ஆயிரம் டாலருக்கு எங்கே போவது? தவிர தம்பி யாருடனோ தனியே போவது அவளுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதனால்; தர முடியாது என்று இதமாகவே மறுத்தாள்.

ஆனால் அவனோ பிடிவாதமாக அன்று முழுவதும் சாப்பிடாமல் பட்டினிகிடந்தான். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் கேட்கவில்லை. வேறு வழியில்லாமல் அவன் நண்பர்களுடன் போவதற்கு சம்மதித்த பின்பே சாப்பிட வந்தான்.

கிரடிட் கார்டில் ஐநூறு டாலர்களைப் புறட்டி அவனிடம் கொடுத்து,

இதுதான் தன்னால் இயன்றது என்று கூற. மறுக்காமல் அதை வாங்கியவன் முகம் முழுவதும் மகிழ்ச்சியுடன் கிளம்பிவிட்டான்.

நிலவு 25

அவன் போய் நான்கு நாட்களாகிவிட்டன. போனதற்கு ஒரு முறை தொலைபேசி எடுத்தவன்தான். அதற்குப் பிறகு எடுக்கவில்லை. ஒழுங்காகச் சாப்பிட்டானா, இல்லையா என்றும் தெரியாமல் சர்வமகியின் வேதனை இதயத்தை அரித்தது.

பெருமூச்சுடன் அன்றைக்கு வேலைக்குப் போனவள் வேலையில் ஆழ்ந்திருந்தபோது அவளுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

யாராக இருக்கும் என்கிற யோசனையில் தொலைபேசியை எடுத்தால், அது தேவகி. அவள் குரலில் பெரும் பதட்டம் தெரிந்தது.

'என்ன தேவகி' என்று கேட்க உடனடியாக வீட்டிற்கு வருமாறு அழைத்தாள் அவள்.

பயப்பந்து தொண்டையை அடைக்க விழுந்தடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள். வீட்டிற்கு வந்தவள் தொடர்மாடிக் கட்டடத்தின் முன்பாக இரண்டு பொலிஸ் வண்டி நிற்பதைக் கண்டதும், பயத்தின் பரிமாணம் அதிகரிக்கத் தமக்குரிய குடியிருப்பிற்குச் சென்றாள்.

அங்கே பொலிஸ் இல்லாததைக் கண்டதும்தான் இவளுக்கு நிம்மதியாக இருந்தது. நல்ல வேளை பொலிஸ் அவர்களின் வீட்டிற்கு வரவில்லை. வேறு எங்கோ வந்திருக்கவேண்டும்.

ஆனாலும் அவர்களின் வீட்டிற்கு முன்னால் வாட்டசாட்டமாக நான்குபேர் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் நின்ற தோரனையே, எதுவோ சரியில்லை என்பதை அவளுக்குச் சொல்லாமல் சொல்ல, பதட்டத்துடன் அவள் குடியிருப்புப் பகுதிக்கு வந்தாள்.

சர்வமகிக்காக வாசலிலேயே பதட்டத்துடன் காத்திருந்த தேவகி, சர்வமகியைக் கண்டதும் பெரும் நிம்மதியுடன் ஓடிவந்து அவள் கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

"எ... என்ன தேவகி... யார் இவர்கள்? எதற்காக நம்முடைய வீட்டில் நிற்கிறார்கள்?" என்று பயத்துடன் கேட்டாள் சர்வமகி.

"நீயே வந்து கேளக்கா... நம்முடைய அருமைத் தம்பியின்

கைங்கரியத்தை...” என்று எரிச்சலுடன் கூறிய தேவகியைப் புரியாமல் ஏறிட்டவள், பதட்டம் அதிகரிக்க, வேகமாக வீட்டை நோக்கிச் சென்றாள். அங்கே நின்றிருந்தவர்களில் ஒருவர், சர்வமகியின் பக்கமாகத் திரும்ப, அவர் முகத்திலிருந்த அந்நியத் தன்மையைக் கண்டவள், இருந்த நம்பிக்கையும் உடைந்து போக,

“யா... யார் நீங்கள்...?” என்றாள் நடுக்கத்துடன்.

“நாங்கள் பிரைவட் டிடெக்டிவ்ஸ்...” என்றதும் சர்வமகி புரியாமல் அவர்களைப் பார்த்தாள்.

“எ... எனிதிங் ராங் சார்?” என்றாள் நடுங்கியவாறே.

“எவ்ரிதிங் இஸ் ராங் யங் லேடி...” என்றவர் சர்வமகியை மேலும் கீழுமாகப் பார்த்தார்.

முகம் வெளுற நின்றிருந்தவளைக் கண்டதும் அவருக்கும் பரிதாபமாக இருந்திருக்கவேண்டும்,

“பிரதீபன் உங்கள் தம்பியா?” என்றார் சற்று அழுத்தத்தைக் குறைத்து.

“யெ... யெஸ்... சார்...”

“அவர் தன்னுடைய நண்பர்களுடன் இணைந்து ஒரு வீட்டில் களவாட முயன்றிருக்கிறார்... வீட்டின் சொந்தக்காரர் பாதுகாப்புக் கலை தெரிந்தவர்... ஒரு தட்டில் உங்கள் தம்பியையும், அவருடைய நண்பர்களையும் விழுத்திவிட்டார். பட் அன்ஃபோர்ச்சுனேட்லி உங்கள் தம்பி தப்பித்து ஓடிவிட்டார். அவருடைய நண்பர்களை ஒரு அறையில் வைத்துப் பூட்டிவிட்டு எங்களுடன் தொடர்பு கொண்டார். தப்பி ஓடியது யார் என்று விசாரிக்கச் சொன்னார். பிடிபட்டிருந்தவர்களிடம் விசாரித்தபோது, உங்கள் தம்பிதான் தப்பித்து ஓடியிருக்கிறார் என்பது தெரிய வந்தது. அதுதான் அவரைத் தேடி வந்தோம். இப்போது அவர் எங்கே...?” என்றார் அவர் பெரும் அதிகாரமாக.

அவர் கூறியதும், சர்வமகியின் இரத்தம் வடிந்தது. உடல் நடுங்க, கால் தளர அச்சத்துடன் அந்த அதிகாரியைப் பார்த்தவள்.

“சா... சார் என் தம்பி அப்படி ஒரு தவறைச் செய்யக்கூடியவன் அல்ல சார்...” என்றாள் குரல் நடுங்க.

“அப்படித்தான் எல்லோரும் தங்கள் உறவினர்களுக்காக வக்காளத்து

வாங்குவார்கள். அது கிடக்கட்டும்.

உங்கள் தம்பி களவாடிய வீட்டில் முக்கியமான ஒரு டைமன்ட் நெக்லசைக் காணவில்லையாம். அது அவர்களுடைய பரம்பரைச் சொத்தாம். கிட்டத்தட்ட பல லட்சம் டாலர் பெறுமதியானதாம். உங்கள் தம்பி அதை வீட்டில் எங்காவது வைத்திருக்கிறாரா என்று நாங்கள் பரிசோதிக்கவேண்டும்... நீங்கள் மறுத்தால், நாங்கள் காவல்துறையின் உதவியை பெறவேண்டியிருக்கும்" என்றார் அவர் கம்பீரமாக. போலிஸ் என்கிற வார்த்தையைக் கேட்டதுமே சர்வமகி சர்வமும் ஒடுங்கிப்போனவளாக அந்த அதிகாரியைப் பார்த்தாள்.

"சார்... எங்கள் தம்பி தன் நண்பர்களுடன் சுற்றுலாவிற்குப் போய்விட்டான். நிச்சயமாக அவன் அக் களவைச் செய்திருக்கமாட்டான். நீங்கள் தவறுதலாக இங்கே வந்துவிட்டீர்கள்..." என்றாள் சர்வமகி படபடப்புடன்.

"உங்கள் தம்பி சுற்றுலா போகவில்லை... களவாடப் போயிருக்கிறார். அதுவும்... டொரன்டோவிற்கு..." என்றதும் சர்வமகி அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தாள்.

"நோ... அவன்... கல்கேரிக்குப் போயிருக்கிறான் சார்... அவன் எப்படி டொரன்டோவிற்கு?" அவள் முடிக்காமல் திணறினாள்.

"உங்கள் தம்பி கல்காரிக்குப் போகவில்லை. அவர் போனது டொரன்டோவிற்கு. அதற்குரிய ஆதாரம் எங்களிடம் இருக்கிறது. உங்கள் தம்பியுடன் வந்த நண்பர்களிடம் விசாரித்தபோது அறிந்துகொண்டோம்..."

"நோ... நான் நம்பமாட்டேன்... என் தம்பி நிச்சயமாக இப்படி ஒரு தவறைச் செய்யமாட்டான்.

"உங்கள் தம்பியின் பெயர் பிரதீபன் தானே..."

"ஆ... ஆமாம்..." என்று திக்கினாள் சர்வமகி.

"உங்கள் தந்தையின் பெயர் வாசுதேவன்... அதுவும் சரிதானே...?" என்றார் அவர் அழுத்தமாக.

"அ... ஆமாம் சார்..." இப்போது சர்வமகியின் நம்பிக்கை அடியோடு தேய்ந்து போனது.

“உங்கள் தந்தை ஒரு கொலைக் குற்றவாளி...” என்றார் அந்த அதிகாரி அதே கம்பீரம் மாறாமல்.

“இல்லை... எங்களுடைய தந்தை கொலைக்குற்றவாளி அல்ல... தவறுதலாக அவர் மீது பழி சுமபத்தப்பட்டிருக்கிறது...” என்றாள் அவசரமாக.

“லுக் உங்களுடைய பேச்சைக் கேட்க நாங்கள் இங்கே வரவில்லை. அந்த நகையின் உரிமையாளரும் நம்முடன் வந்திருக்கிறார். அவரை வரச் சொல்லியிருக்கிறோம். அவர் இப்போது வந்துவிடுவார்...” என்றதும் எலிவேட்டர் ஒன்று அவர்களின் தளத்திலே வந்து நின்றது.

அதிலிருந்து ஒருவன் வெளியே வந்தான்.

“அதோ... அவரே வந்துவிட்டார்...” என்றவர் புன்னகையுடன் வந்துகொண்டிருந்தவரிடம் திரும்பினார்.
சர்வமகியும் திரும்பினாள். அப்படியே அதிர்ச்சியில் மூச்சடைக்க, அது வரை நேரமும் பிடித்திருந்த பலம் அப்படியே வடிந்துபோக, மயங்கிச் சரிந்தாள்.

தொடரும்...

நிலவு 26

சத்தியமாக மின்தூக்கியிலிருந்து வெளியே வந்தவனை சர்வமகி எதிர்பார்க்கவே இல்லை. இவன் எங்கே இங்கே..." என்று அஞ்சியவளுக்கு அதற்கு மேல் எதையும் சிந்திக்க முடியவில்லை.

இதுவரை நேரமும் நீ பட்ட சிரமம் போதும் என்று உடல் நினைத்ததோ, தாக்குப்பிடிக்க முடியாது, நினைவு மங்க, தூரத்திலிருந்து வந்தவனின் விம்பம் கலங்கித் தெரிய அப்படியே மயங்கி மடங்கிச் சரிந்தாள்.

அதற்கிடையில் அருகேயிருந்த இன்னொருவர் சர்வமகி தரையில் சரிவதை அறிந்ததும், உடனேயே அவளைப் பற்றித் தாங்க முன்வர,

“டோன்ட்... டோன்ட் டச் ஹர்...” என்று கர்ஜித்தவாறு, ஒரு எட்டில் சர்வமகியை நெருங்கியவன், அவள் தரையைத் தொடும்முன்னே தாங்கிக்கொண்டான். அவனுடைய வலதுகரம் அவளுடைய மெல்லிய இடையைச் சுற்றி வளைக்க, இடது கரம் அவளுடைய இடது கரத்தை

அழுந்தப் பற்றியிருந்தது.

குழந்தை போன்று அவளைத் தன் கரத்தில் ஏந்தியவன், நின்றவர்கள் தாமாகவே விலகி வழிவிட, உள்ளே எடுத்துச் சென்றான்.

அங்கே இருந்த சோபாவில் அவளை மெதுவாகக் கிடத்தினான். இரண்டு கால்களையும் தூக்கி, நீள் இருக்கையின் கைப்பிடியில் வைத்தான். குளிருக்காக அணிந்திருந்த தடித்த ஜாக்கட்டின் முன்புறத்தை வேகமாகக் கழற்றியவன், அதை அவள் உடலிலிருந்து களைந்து எறிந்தான். உள்ளேயும் குளிருக்காக, கம்பளி ஆடை அணிந்திருக்க, அதன் பொத்தானை வேகமாகக் கழற்றிவிட்டான். அதனுள்ளேயும் இன்னொரு தடித்த ஆடை இருக்க, 'எத்தனை ஆடைகளைத்தான் அணிவாள்...' என்று முணுமுணுத்தவாறு அதையும் கழற்றிவிட, அப்போதுதான் அவளுடைய மெலிவு அவனின் கருத்தில் பதிந்தது.

முதல் முதலாகத் தன்னைச் சந்திக்க வந்த சர்வமகியின் பிம்பம் ஏனோ அவன் மனக்கண்ணில் தேவையற்று வந்து போனது. சர்வமகி அப்படியொன்றும் பருமனானவள் கிடையாது. அதே நேரம், மெலிவும் இல்லை. எல்லாமே அவளுக்கு அளவாகவே இருக்கும். அவளிடம் குறுகியிருப்பது அந்த இடை ஒன்றுதான். ஆனால் இப்போது... அவளுடைய உடல் அந்த இடைக்குப் போட்டியாக மெலிந்திருந்தது. அதைக் கண்டதும் அவனுடைய உதடுகள் அழுத்தமாக ஒன்றை ஒன்று மூடிக்கொண்டன.

இரத்தப்பசையின்றி, வெளுறிப்போய் மயங்கிக் கிடந்தவளை வெறித்துப் பார்த்தவன், அவள் கன்னத்தில் கைவைத்து அசைத்துப் பார்த்தான். அவளிடம் சிறிதும் அசைவிருக்கவில்லை. பின் கன்னத்தைத் தட்டிப் பார்த்தான்.

அதே நேரம் தேவகி விரைந்து சென்று ஒரு கண்ணாடிக் கோப்பையில் தண்ணீர் எடுத்துக்கொண்டு, ஓடிவர, அதைத் தேவகியிடமிருந்து வேகமாக, கிட்டத்தட்ட பறித்து எடுத்தவன், தன் பான்ட் பாக்கட்டிலிருந்த கைக்கூட்டையை நனைத்து, அவள் நெற்றி, கழுத்து என்று துடைத்துவிட்டான்.

"மிஸ் சர்வமகி வாசுதேவன்...." என்றான் தன் ஆழந்த குரலில்.

அந்த ஆழ்ந்த குரல், உயிர் வரைசென்று பரவ, சர்வமகி மெதுவாகத் தன் விழிகளைத் திறந்தாள். அவள் முன்னால் நின்றவனைக் கண்டதும், மீண்டும் மயங்கிவிடுவோமோ என்கிற அச்சம் தோன்ற, எழுந்தமர

முயன்றாள். அதே நேரம்,

“வோட்டர்..” என்று இவன் குரல் உயர்த்த, மறு கணம் அவன் முன்னால், ஒரு கிளாஸ் தண்ணீர் நீட்டப்பட்டது. அதை வாங்கியவன், அவளை வெறித்துப் பார்க்க, அவனுடைய விழிகளைச் சந்திக்காமலே, எழுந்தமர முயன்றாள் சர்வமகி.

எழும்புவதற்குச் சிரமப்படுவதைக் கண்ட, டிடெக்டிவ் ஏஜன்சி, உடனே அவளருகே சென்று அவள் எழுந்தமர உதவி செய்வதற்காகத் தன் கரத்தைக் கொண்டு செல்ல, அவர் முன்னால், தன் கரத்திலிருந்த தண்ணீர் குவலையை நீட்டிக் கொடுத்துவிட்டு, சர்வமியின் தோள்களைப் பற்றி எழுந்தமர உதவினான்.

“ஆர் யு ஓக்கே...?” என்றான் கனத்த குரலில்

“யெஸ்... ஐ... ஐ ஆம் ஓக்கே... தாங்க்யூ” என்று தட்டுத்தடுமாறிக் கூறியவளுக்கு மீண்டும் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது.

அவளுடைய முதுகில் கைவைத்து “ரிலாக்ஸ்...” என்றான்.

‘ரிலாக்சா...? அதுவும் இவனைப் பார்த்த பிறகா?” அவள் தவிக்க, அருகே நின்றிருந்த அந்த டிடெக்டிவ், தன் கரத்திலிருந்த தண்ணீரை, சர்வமகியின் வாயருகே கொண்டு செல்ல முயல,
அதற்கு முன்பாக, அதை வாங்கி... இல்லை பறித்து எடுத்த அநேகாத்மன், அதை அவள் உதட்டருகே கொண்டு சென்றான்.

அவள் தயங்க, சினம் கொண்டவனாக, அவள் உதட்டில் பதித்து அழுத்தி,

“குடி...” என்றான் ஒற்றைச் சொல்லாக.

மறுக்காமல் அவள் கடகட என்று அந்தத் தண்ணீரைக் குடித்து முடிக்க,

“ஷி வில் பி ஓக்கே...” என்றவாறு சர்வமகியைப் பார்த்தான்.

“தலையைக் குனிந்து காலிடுக்கில் வைத்துக்கொள். இந்தப் படபடப்பு, மகயக்கம் எல்லாம் போய்விடும்...” என்றான் தமிழில்.

சர்வமகி தலையைக் குனிந்து காலிடுக்கில் வைத்துக்கொண்டாள். ஓரளவு இரத்தோட்டம் சமப்பட்டது.

இருந்தாலும் எழுந்து அவனைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அவனுடைய

தந்தையின் இறப்புக்கு அவள் குடும்பம்தான் காரணமாகிவிட்டது. இப்போது அவனுடைய பரம்பரை நகை தொலைவதற்கும் அவர்கள்தான் காரணம் என்றாகிவிட்டது. இப்போது எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவனை அவள் நிமிர்ந்து பார்ப்பாள்.

அவமானமும், ஏக்கமும் அவளைப் பெரிதும் வாட்ட, அப்படியே கொஞ்ச நேரம் கிடந்தாள் சர்வமகி.
அதே நேரம் ஒரு டிடெக்டிவ், விழிகளால் மற்றவர்களுக்கு எதையோ சைகை செய்ய, அவர்களும் அந்த வீட்டில் எதையோ தேடத் தொடங்கினர். அங்கே தேடுவதற்கு அதிகநேரம் தேவைப் படவில்லை. குளியலறை தொடக்கம் சமையலறை வரை எல்லா இடமும் தேடப்பட்டது.

எதையும் தடுக்க முடியாதவளாக சர்வமகி சோர்ந்துபோய் நிமிர்ந்து அமர்ந்திருந்தாள்.
அவள் மறுத்திருந்தால் அவர்களால் எதுவும் செய்திருக்க முடியாதுதான். ஆனால் அவர்கள் காவல்துரையிடம் போயிருந்தால்? அவளுடைய குடும்பம் அல்லவா சந்தி சிரித்திருக்கும்.
ஏற்கெனவே சிரித்தது போதாதா? பல்லைக் கடித்துத் தன் வேதனையை விழுங்கிக்கொண்டாள் சர்வமகி.

“இங்கே நிச்சயமாக இருக்காது சார்... என்னுடைய தம்பி அப்படிப்பட்ட திருடன் கிடையாது. அவன் இந்த நகையைத் திருடியிருக்கமாட்டான். அவனோடு வந்த நண்பர்களையும் விசாரித்துப் பாருங்கள் சார்...” என்றாள் சர்வமகி சோர்வுடன் குரல் கம்ம.

“எல்லோரையும் விசாரித்து விட்டோம். அவர்களின் வீட்டையும் சோதனை செய்துபார்த்துவிட்டோம். அங்கே இல்லை. உங்கள் தம்பி இங்கே தான் எங்கேயோ வைத்திருக்கவேண்டும்...” என்றதும் சர்வமகி அநேகாத்மனைப் பார்த்தாள்.

“ஆத்மன்... நிச்சயமாக என் தம்பி திருடியிருக்க மாட்டான்... அவனை நான் அப்படி வளர்க்கவில்லை. தயவு செய்து அவர்களை வெளியே போகச் சொல்லுங்கள்...” என்றாள் அவள் இயலாமையுடன் சோர்ந்த அழுகையுடன்.

“மிஸ்டர் அநேகாத்மன்... கால் மி மிஸ்டர் அநேகாதமன்...” என்றான் அவன் அழுத்தமாக. அதில் அடிபட்டவளாக, அநேகாத்மனைப் பார்க்க,

அந்த விழிகளைக் காணப் பிடிக்காதவனாக, எங்கோ பார்த்தவாறு,

“எப்படி அவர்களை வெளியே போகச் சொல்லுவேன். உன் தம்பி களவாடியது எங்கள் பரம்பரை நகையை. சும்மா விட்டுவிடுவேன் என்று நினைத்தாயா?” என்றான் அவன் கடும் சினத்துடன்.

“இல்லை ஆத்... இல்லை மிஸ்டர் அநேகாதம்ன்... என் தம்பி...” என்று முடிக்கவில்லை, அவள் முன்னால் தன் வலது கரத்தை நீட்டி, அவள் பேச்சை நிறுத்தியவன்,

“ஸ்டாப் த நொன்சன்ஸ்... உன் தந்தை என் தந்தையைக் கொன்றார், இப்போது உன் தம்பி என் தந்தையின் வீட்டிற்குள் புகுந்து எங்கள் பரம்பரை நகையையே திருடிவிட்டான். என்னைப் பார்க்க எப்படி இருக்கிறது... எங்காவது இளிச்சவாயன் என்று போர்ட் போட்டிருக்கிறதா என்ன?” என்று ஏளனமாகக் கேட்டவன், பின்

“என் இடத்திற்குள் நுழைய எத்தனை தைரியம் இருக்கவேண்டும் உன் தம்பிக்கு. பணம் உழைக்க வேண்டும் என்றால் அதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றனவே. அதைப் பார்க்க வேண்டியதுதானே.” என்றவன் சர்வமகியை வெறித்தப் பார்த்து,

“நீ நல்ல சகோதரி என்று நினைத்தேன்... ஆனால்... சே...” என்றான் அவன் பெரும் சீற்றத்துடன்.
அவனுடைய தகாத பேச்சு சர்வமகிக்குக் கோபத்தைக் கிளப்பியது. அவள் தம்பி திருடியிருக்க மாட்டான் என்கிற நிச்சயம் இருந்ததால், அவள் கம்பீரமாக அவனைப் பார்த்தாள்.

“என் தம்பி திருடியிருக்க மாட்டான்... அவனுக்குத் திருடத் தெரியாது. அதுதான் தேடும் வரைக்கும் தேடிவிட்டீர்களே... எதுவும் இல்லையல்லவா... தயவு செய்து வெளியே போங்கள்...” என்று கூறியவள் அவனுடன் என்ன பேச்சு என்பது போல நன்றாக சாய்ந்து அமர்ந்து விழிகளை மூடிக்கொண்டாள்.
அதே நேரம் இன்னொரு டிடெக்டிவ் முன் புறமிருந்த குளோசட்டை இழுத்துத் திறந்தார். அதற்குள் கோர்ட் மட்டுமே இருந்தது. வேறு எதுவும் சந்தேகப் படும்படி இருக்கவில்லை. பூட்டப் போனவர், அந்த குளோசட்டின் ஓரமாக இருந்த பியூஸ் பொக்ஸ் கண்ணில் பட திறந்து பார்த்தார்.

அந்த பொக்சின் மூலையில் கிடந்த ஒரு மெல்லிய பையைக் கண்டதும், அவருடைய முகம் மலர, அதைக் கரங்களில் எடுத்தார்.

திறந்து பார்த்தவர் உதட்டில் புன்னகையும் வெற்றிக் கர்வமுமாக அதை அநேகாத்மனிடம் நீட்டினார்.
அலட்சியமாக வாங்கிய அநேகாத்மன், அந்தப் பையைக் கவிழ்த்துத் தன் கரத்திலே கொட்டினான்.
அவன் கையில் மினுங்கிக்கொண்டு விழுந்தது வைர நெக்லஸ்.

நிலவு 27

சர்வமகி அதிர்ச்சியுடன் அவன் கரங்களையே வெறித்துப் பார்த்தாள்.
அவளால் தன் விழிகளையே நம்ப முடியவில்லை.

பிரதீபனா திருடினான்? அவனா இப்படிப் பட்ட ஒரு ஈனக் காரியத்தைச் செய்தான்? அவள் தம்பியா இப்படி ஒரு வேலையைச் செய்தான்?
அவளால் எதையுமே நம்ப முடியவில்லை. அவளுக்கு மூச்செடுப்பதே சிரமமாக இருந்தது.

அச்சத்துடன் அநேகாத்மனைப் பார்த்தாள்.

அவனுடைய விழிகளில் ஏளனமும் கோபமும், கூடவே
ஆத்திரத்துடனான சீற்றமும் கசிய அவளை வெறித்துப் பார்த்தான்.

“இதற்கு என்ன அர்த்தம்?” என்றான் கடுமையாக.

அதற்கு அவள் என்ன பதிலைச் சொல்வாள்? இயலாமை பொங்க அவனை ஏறிட்டாள் சர்வமகி. விழிகளில் கண்ணீர் தேங்கியது.

தன் சகோதரியின் நிலையைப் புரிந்துகொண்ட தேவகி,

“சார்... சத்தியமாக, இதற்கும்... எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை... தயவு செய்து நம்புங்கள்... இது எப்படி இங்கே வந்தது என்று எங்களுக்குத் தெரியாது...” என்றாள் தேவகி படபடப்பும் பயமுமாக.
அநேகாத்மனோ, தேவகியை அலட்சியமாகப் பார்த்துவிட்டு,
சர்வமகியை வெறித்துப் பார்த்தான்.

“சார்...” என்று மீண்டும், தேவகி ஏதோ சொல்ல வர, அநேகாத்மன் தன் பார்வையை சற்றும் மாற்றினானில்லை.

“தேவகி... மாதவியையும், அபிதனையும், பார்க்கிற்கு அழைத்துச் செல்கிறாயா?” என்றாள் சர்வமகி பெரும் வலியுடன்.

இப்போது அவளால் எதையும் தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை. இப்போ கொஞ்சக் காலமாகத்தான் அவள் ஓரளவு நிம்மதியாக இருந்தாள்... இனி அதுவும் இல்லையென்றாகிவிட்டதே...
"அக்கா... நான் சொல்வதை..."

"ப்ளீஸ்... இதை... இதையெல்லாம் அபிதன் பார்க்கவேண்டாம்..." என்றாள் சர்வமகி கசங்கிய குரலில்
"பட்... நீ எப்படித் தனியாக..." என்றாள் தங்கை சினத்துடன் கொதித்துக்கொண்டிருந்த, அநேகாத்மனைப் பார்த்தவாறு.

"ஐ கான் மனேஜ்... நீ அபிதனை அழைத்துச் செல்..." என்று இரஞ்சிக்கேட்க, மறுக்க முடியாதவளாக, அபிதனையும், மாதவியையும் அழைத்துக்கொண்டு, வெளியேறினாள் தேவகி.
அவள் வெளியே செல்லும்வரை அமைதி காத்தவள், நிமிர்ந்து அநேகாத்மனை ஏறிட்டாள்.

"நா... நான்... பிரதீபன்... அப்படி... செய்வான்... செய்திருக்க...." அவளுக்கு அதற்கு மேல் என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

"சே... இதெல்லாம் ஒரு குடும்பமா? உங்களுக்கு வெட்கமாக இல்லை. உன் தந்தை ஒருத்தனை அநியாயமாகக் கொன்றான். அவன் மகன் என்னவென்றால் திருடிப் பிழைக்கிறான். இப்படி ஒரு கேடுகெட்ட வாழ்க்கையை வாழ்வதற்குப் பதில், தூக்கில் தொங்கலாம்..." என்று கடுமையாகக் கூறியவன் தனக்கு அருகே நின்றுகொண்டிருந்த டேவிட்சனை ஏறிட்டான்.

"டேவிட்சன்... உடனடியாக இவள் தம்பியைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யுங்கள்... அவனைப் பொலிசில் ஒப்படைக்க வேண்டும்.

"போலிசா..." ஐம்புலனும் செயல் இழக்க மலங்க மலங்க விழித்தாள் சர்வமகி.

மங்கிய விழிகளுக்கு அவன் வெளியேறுவது தெரிந்தது.
எங்கிருந்துதான் அத்தனை தைரியம் வந்ததோ, வேகமாக ஓடிச்சென்று அவன் வழியை மறித்து நின்றாள்.

"ப்ளீஸ்... ப்ளீஸ் அநேகாத்மன்... எதுவாக இருந்தாலும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்... என் தம்பியை மட்டும் பொலிசில் மாட்டிவிடாதீர்கள்... அவன்... வாழ்க்கையே அழிந்துவிடும். இதற்கும் என் தம்பிக்கும் நிச்சயமாக, சம்பந்தம் இருக்காது. எங்கோ ஏதோ ஒரு

தவறு நடந்திருக்கிறது... அவன் இப்படி ஒரு காரியத்தைச் செய்திருக்கமாட்டான்... என்னை நம்புங்கள்...” என்று வேதனையுடன் சொல்ல அவளை வெறித்துப் பார்த்தான் அநேகாத்மன்.

“உனக்கு முன்னாலேயே இத்தனை தடயங்கள் இருக்கிறது... இந்த நிலையிலும் உன் தம்பி செய்யவில்ல என்கிறாயா? சரி உன் தம்பி செய்யவில்லை என்றால் வேறு யார் செய்தார்கள்? நீயா? உன் இரு தங்கைகளுமா? யார் யார் செய்தார்கள்? அதுவும் உங்கள் வீட்டிலேயே மறைத்து வைப்பதற்கு எங்கேயோ இருந்து ஒரு திருடன் வந்தானா? இல்லை இந்த நகை தானாக இங்கே நடந்து வந்ததா?” என்று கடுமையாகக் கேட்டவன், மீண்டும் அவளை உற்றுப் பார்த்தான்

“என் தந்தை வீட்டிலேயே புகுந்து இந்த நகையைக் களவாடி இருக்கிறான் என்றால் உன் தம்பிக்கு எத்தனை தைரியம் இருக்கவேண்டும்?” என்றவன், திரும்பி தீயாகத் தன் விழிகளால் அவளை எரித்தவாறு... “அவன் உன் தம்பிதான் என்பதை அறிந்ததும் நான் எப்படித் உணர்ந்துகொண்டேன் தெரியுமா? ஒரு வேளை அவர்கள் சொல்வது பொய்யாக இருக்கலாம் என்றுதான் நினைத்தேன்... ஆனால்...” என்றவன் தன் கரத்தை நீட்டி அவளிடம் காட்டினான்.

“இதைப் பார்த்தபின்...” என்றவன், “சே...” என்று பெரும் வெறுப்புடன் தலையக் குலுக்கினான்.
அவனுக்கு ஆத்திரம் கட்டுக்கடங்காமல் வந்தது. அவனை மணக்குமாறு கேட்டபோது, உலகில் இல்லாத நியாயவாதியாகக் கண்காணாத இடத்திற்கு ஓடிவந்தாளே...

எங்கேயெல்லாம் அவளைத் தேடினான். எப்படிப் பரிதவித்துப் போனான். அவளை இன்று கண்டுபிடிப்பேன், நாளை கண்டுபிடிப்பேன் என்று ஒவ்வொரு நாளும் யுகமாகக் கடத்தியவனுக்கல்லவா அந்த வேதனை தெரியும்...

அவனுடைய அலுவலகமாகட்டும், வீடாகட்டும், மற்றவர்கள் கடிதங்களை சேகரிக்கும் முன், இவன் ஓடிச்சென்று கடிதங்களைப் பார்த்து, எங்காவது சர்வமகியிடமிருந்து ஒரு சிறு துண்டு கடிதமாவது வந்திருக்கிறதா என்று ஆவலுடன் பார்ப்பதும், இல்லை என்றதும் சோர்ந்து போவதும், இந்த மூன்றுவருடங்களாக அவன் வாடிக்கையாக இருந்ததே... இதை இவள் அறிவாளா?
எங்காவது, சர்வமகி போன்ற உடல் ஒற்றுமை உள்ளவர்களைப் பார்க்கும்போதெலலாம், அது அவளா அவளா என்று பைத்தியக்காரன்

போன்று, அவர்கள் பின்னால் சென்றதும், பல முறை மூக்குடைபட்டதும் அவனுக்கல்லவா தெரியும்.

எத்தனை இரவுகள், எத்தனை இரவுகள் அவன் தூக்கமில்லாமல் தவித்தான். எத்தனை இரவுகள் அவள் நலமாக இருக்கிறாளா, இல்லையா என்று தெரியாமல் பரிதவித்தான். ஒவ்வொரு முறையும் அவளுக்கொன்றுமில்லை, என்று கலங்கியது அவனுக்கு மட்டும்தானே தெரியும்.

கிட்டத்தட்ட இந்த மூன்றுவருடங்களாக அவன் பெரும் சித்திரவதையல்லவா அடைந்துவிட்டான். அவன் தந்தை வீட்டில் திருடியது, சர்வமகியின் தம்பி என்பதை அறிந்ததும், என்னமாதிரி பதறிப்போனான். இத்தனை காலமாக அவளைத் தேடி அலைந்தவனுக்குப் பரிசாக, இத்தகைய பெரிய அதிர்ச்சிதானே கிடைத்தது.

சரி... தம்பி தவறு செய்துவிட்டான் என்பதை உணர்ந்து, அவள் வருந்துவாள் என்று பார்த்தால், இப்போதும், தன் தம்பி தவறு செய்யவில்லை என்றல்லவா அவள் வாதாடுகிறாள்... அப்படியானால், இவளும் இந்தத் திருட்டுக்கு உடந்தை போல அல்லவா இருக்கிறது. சே... பிழைப்பதற்கு இந்த வழியையா தேடினாள்... இதுதான அவள் தன் தம்பிக்குச் சொல்லிக்கொடுக்கும் பாடம்...' என்று மனதிற்குள் எரிந்தவன், தாங்க முடியாத கோபத்தில்,

"இதைப் பார்த்த பின்பும் உன்னை நம்புவேன் என்று நினைத்தாயா? நெவர்... உன் தந்தை ஒரு கொலை காரன் என்றால் உன் தம்பி ஒரு திருடன். நீ எப்படி? ஒரு விபச்சாரியா?" என்று அவன் கேட்க, எங்கிருந்துதான் அவளுக்கு ஆவேசம் வந்ததோ, தன் பலம் கொண்ட மட்டும் அவன் கன்னத்தில் அறைந்துவிட்டாள் சர்வமகி.

அறைந்த பின்புதான் தன் உள்ளங்கை எரிய, அவனை அறைந்ததே உறைத்தது. இருந்தாலும் அவள் வருந்தவில்லை. விழிகளில் கனல் பரவ அவனை ஏறிட்டாள்.

'வார்த்தையை அளந்து பேசுங்கள் மிஸ்டர் அநேகாத்மன்... பேசவேண்டும் என்பதற்காக எதையும் பேசமுயும் என்றில்லை...' என்றது அவளுடைய விழிகளின் வீச்சு.

அவள் அறைந்ததும், ஒரு கணம் வில்லிழுத்த நாணாக இறுகி நிமிர்ந்தவன்,

“என்னையா அறைந்தாய்? என்னையா அறைந்தாய்? என்ன தைரியம் உனக்கு... என் மீது கரம் வைக்க உனக்கு என்ன தகுதியிருக்கிறது... உன்னை...” என்றவன் மற்றவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் லட்சியம் செய்யாதவனாக, அவளுடைய கரங்களைப் பற்றிப் பின்புறமாக வளைத்துப் பிடித்தான்.
அவளைத் தன்னை நோக்கி நெருக்கியவன் அவளைத் தள்ளிச் சென்று சுவரோடு அழுத்தமாக மோதினான், அவனிடமிருந்து விடுபடுவதற்காக அவள் துடிக்க, ஒற்றைக் கையால், அவளுடைய இரு கரத்தையும் பின்புறமாகவே அழுத்தப் பற்றியவன், அவள் கழுத்தில் தன் கரத்தை வைத்து அழுத்தியவனாக,

“என்ன தைரியம் உனக்கு... என் நிழலின் பக்கமே நிற்க அருகதை அற்ற உனக்கு, என்னைத் தொட எத்தனை திண்ணகம் இருக்கவேண்டும்... இப்போதே உங்கள் எல்லோரையும் கம்பி எண்ண வைக்கிறேன்... பார்... ஜென்மத்திற்கும் வெளியே வராதவாறு நான் செய்யவில்லை... நான் அநேகாத்மனல்ல...” என்று அவன் கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளைத் துப்ப, அப்போதுதான் சர்வமகி சுயநினைவு பெற்றாள்.

என்ன காரியம் செய்துவிட்டாள். சுமுகமாகக் கையாண்டு, பிரச்சனையைத் தீர்க்காமல் ஆவேசப்பட்டு, இருந்ததையும் கெடுத்துக்கொண்டாளே. அவள் முகம் அச்சத்தால் வெளுத்தது. அவனுடய அழுத்தமான பிடியில் மூச்சுக்கூட எடுக்கமுடியாது தடைப்பட்டது. அவனிடம் எதையோ கூறத் தலைப்பட்டவள். வார்த்தைகள் வராமல், தொண்டையில் தடைப்பட, ஏதோ ஒரு வித ஓசைதான் வெளி வந்தது.
அப்போதுதான் அநேகாத்மனுக்குத் தான் செய்யும் காரியம் புரிந்தது. அவள் முகத்தையே உற்றுப் பார்த்தவன், ஏதோ அசிங்கத்தைத் தொட்டதுபோல, வேகமாக அவளைத் தன்னிடமிருந்து விலக்கித் தள்ளிவிட்டான்.

தள்ளிய வேகத்தில், அவள் சமநிலை தவறி, பின்புறமாகச் சரிய, சற்றும் தாமதிக்காமல், அவள் இடது மேல்புறக் கரத்தைப் பற்றி இழுத்து நிறுத்திவிட்டுத் தீச்சுட்டாற் போல் தன் கரத்தை விலக்கிக்கொண்டான்.

“சே... துரோகி” என்று தன் தலையையே குலுக்கியவன்,

“இன்னும் கொஞ்ச நேரத்தில் பொலிஸ் இங்கே வரும்... குட் பாய்...” என்று கூறிவிட்டு வேகதமாகத் திரும்பி வெளியேறத் தொடங்க,

மீணடும் அவனை மறித்தாள் சர்வமகி. அவளுக்கப் பேசுவதற்கே சிரமமாக இருந்தது.

“ப்ளீஸ் ஆத்மன்... ஏற்கெனவே செய்யாத தவறுக்குத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஒரு முறை தண்டனையை அனுபவிக்க நம்மால் இயலாது... உங்களைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறேன்... எங்களை விட்டவிடுங்கள்... நீங்கள் என்ன சொன்னாலும் நான் கெட்கிறேன்... காலம் பூராவும் உங்களுக்கு நான் அடிமையாக இருக்கவேண்டுமா இருக்கிறேன்... தயவு செய்து... ப்ளீஸ்...” என்றவள் அதற்கு மேல் முடிக்க முடியாதவளாகத் தன் முகத்தைக் கரங்களால் மூடி விம்மி விம்மி அழுதாள்.

அவள் அழுவதையே பார்த்துக்கொண்டிருந்தவனின் வலது புருவம் மேலேறியது. அவனுடைய உதட்டில் மறக்கமுடியாத வகையில் எள்ளலும், ஏளனமும் நிறைந்த புன்னகையொன்று மலர்ந்தது.

“என்ன சொன்னாலும் செய்வாயா?” என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

அடிபட்ட பாவனையுடன் அநேகாத்மனை ஏறிட, கலங்கித் தவித்த அவள் முகத்தை அவன் சிறிதும் கண்டுகொள்ளவில்லை.

அவனுடைய விழிகளோ, அவள் உடல் முழுவதும் அலட்சியத்துடன் ஊர்ந்து சென்றன. சுவாரசியத்துடன், அவள் உடலின் மேடு பள்ளங்களில் தங்கியும், நிலைத்தும் விழுந்தும் எழுந்தன. அந்த விழிகள் கூறிய மொழியைப் புரிந்துகொண்டவளுக்கு, முகம் மேலும் இரத்தப்பசையின்றி வெளுத்தது.

“என்ன பதிலைக் காணவில்லை...” என்றவாறு, சர்வமியை அவன் நெருங்க, இவள் பின்னால் சென்றாள். இவன் கால்கள் முன்னேற, இவள் கால்கள் பின்னேறின. இறுதியில் சர்வமகி ஒரு சுவரில் முட்டி நிற்க, இடது கரத்தின் உள்ளங்கை, அவளுக்கு அணை போட்டவாறு சுவரில் பதிய, அவனுடைய வலது கரம், அவள் உடலை நோக்கி முன்னேறியது...

அவளுடைய கன்னத்தைக் கரம் நெருங்க, வேகமாகத் தலையைத் திருப்பிக்கொண்டாள். இவனோ அதை லட்சியமே செய்யவில்லை. அப்படியே கன்னத்தை வருடாமல், கழுத்தடிக்கு அவன் கரம் வந்தது. சர்வமகிக்கு பயத்தில் வியர்த்துக் கொட்ட, அவனைத் தடுக்க முடியாது கையறு நிலையில் கலங்கிப்போயிருந்தாள்.

அவனோ, தன் விழிகளை, அவள் முகத்திலிருந்து அகற்றவேயில்லை.

“எதுவென்றாலும் என்றால் என்ன பொருள்... இன்னமும் நீ விளக்கவில்லையே...” என்றவாறு, அப்படியே கீழிறங்கிய கரம், அவள் மார்பை நோக்கி வந்தது. இத்தனைக்கும் அவனுடைய சுண்டுவிரல் கூட, அவளுடைய உடலைத் தீண்டவில்லை. இவள்தான் பெரிதும் தவித்துப்போனாள்.

கீழிறங்கிய கரம், அவள் அணிந்திருந்த சட்டையின் மேல்புற பட்டனை நுனிவிரலால் கழற்ற முயன்றது. சர்வமகி பதறிப்போனாள்.

நிலவு 28

“ஆத்மன்... ப்ளீஸ்....” என்று இவள் துடிக்க, அவளை அலட்சியமாகப் பார்த்து, எகதாளமாக நகைத்தவன், அவள் சட்டையின் பொத்தான்களைக் கழற்ற முயன்றுகொண்டிருந்த வலக்கரத்தை விலக்கி, அந்தக் கரம் கொண்டு உள்ளங்கையால், ஓங்கிச் சுவரில் அடித்தான்.

அந்த அடியில் ஒரு கணம் அதிர்ந்து போனாள் சர்வமகி. அந்த அடி தனக்கு விழவேண்டிய அடி என்பதையும் அவள் புரிந்துகொண்டாள்.

“என்ன பயந்துபோனாயா?” என்று ஏளனத்துடன் கூறியவன், அவளை விட்டு விலகி நின்றான்.

“பயப்படாதே... அதற்குக் கூட ஐ மீன்... என்னை நெருங்குவதற்குக் கூட, ஒரு தகுதிவேண்டும்... நீ அதை இழந்து மூன்று வருடங்களாகிவிட்டன...” என்றான் அவன் எகதாளமாக.

அநேகாத்மனுக்குத் தன் கோபத்தைக் கட்டுப்படுத்துவதே பெரும் சிரமமாக இருந்தது. அவள் தம்பி செய்த காரியத்தையும், எல்லோருக்கும் முன்பாக அவனை, அவள் அறைந்த அவமானத்தையும் சரி போகட்டும் என்று விட்டுவிட அவனால் முடியவில்லை.

இமயத்தின் உச்சியில், பிறர் அண்ணாந்து பார்க்க முடியாத உயரத்தில், அனைவருக்கும் சிம்மசொப்பனமாகத் திகழும் அவனை, சாதாரண வழிப்போக்கன் போல நடத்த எத்தனை தைரியம் இருக்கவேண்டும்.

அவன் பக்கமாக யாராவது தவறாக சிந்திக்கிறார்கள் என்றாலே,

அடியோடு அறுத்தெறியும், அவனிடம் போய், வாலாட்ட நினைத்தாhல், விட்டுவிடுவானா என்ன?

இந்தக் குடும்பத்தால் அவன் எதையெல்லாம் இழந்தான். தந்தையை இழந்தான், பரம்பரை நகையை இழக்கப் பார்த்தான். அவனைப் பார்த்தால் அவர்களுக்கு எப்படித் தெரிகிறது? எதைச்செய்தாலும் மன்னித்துவிட்டுப் போகும் கேனையன் என்றா? அதற்கு அவர்கள் வேறு யாரையும்தான் பர்க்கவேண்டும்.

ஆரம்பத்தில் சர்வமகியின் அடக்கம், அமைதி எல்லாமே அவனை அவள் பக்கமாகக் கவர்ந்திழுத்தது என்னவோ உன்மைதான். அவளை மணக்கக் கேட்டபோது, முகத்தில் அடித்தால் போல அவள் மறுத்ததும், உச்சத்திலிருக்கும் அவனை, அந்தக் கழிசடைகளுடன், ஒப்பிட்டுப் பேசியதும், அவனுடைய தன்மானத்திற்குப் பெரும் அடியாகவே இருந்தது.

இனி அவளாக அவனை மணக்க முன்வந்தாலும் அவளை ஏற்றுக்கொள்ள அவன் தயாராக இருக்கவில்லை. எப்படியாவது அவளைத் தன் காலில் விழவைக்கவேண்டும் என்று அவன் எண்ணினாலும், நாள் போகப் போக அவள் மீதிருந்த பரிதவிப்பு அதிகரித்ததே தவிர சிறிதும் குறையவில்லை.

அதுவும் அன்று அவன் கண்ட கனவிற்குப் பிறகு, சர்வமகியை விட்டுப் பிரய முடியாது என்பதை அவன் தெள;ளத் தெளிவாகப் புரிந்துகொண்டான். எப்படியாவது அவளை சமாதானப்படுத்தலாம் என்றுதான் எண்ணியிருந்தான். ஆனால், அதற்கும் ஆப்பு வைப்பதுபோல, அவள் அனுப்பிய காசோலை வந்து சேர்ந்தது.

அது அவனுக்குப் பெரும் ஏமாற்றம்தான். அதுவும் தன்னிடம் சொல்லாமல் வீட்டை விற்று விட்டுச் சென்றது, அவனுடைய கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் அடியோடு தகர்த்தியது. எப்படியாவது அவளைக் கண்டுபிடித்தவிடலாம் என்கிற நம்பிக்கையில்தான் இருந்தான்.

ஆனால், அவள் ஜஸ்டினிடம் செல்லவில்லை என்பதை அறிந்தபின்தான், அவன் விழித்துக்கொண்டான்.
அவள் அந்த ஜஸ்டினிடம் போகவில்லை என்பது அவனுடைய ஆத்திரத்தை ஓரளவு குறைந்தது உண்மையே.

அதே நேரம், அவள் எங்கே போனாள், என்ன துண்பத்தை சந்திக்கிறாள்

என்று ஒருபக்கம் அவன் பெரிதும் கலங்கிப்போனான். என்னதான் தன்னை சமாதானப் படுத்திக்கொண்டாலும், அவனால் அவளை மறக்கமுடியவில்லை. அது வேறு அவனுடைய ஆத்திரத்தைக் கிழப்பியது. அவனுக்குத் தன்மீதே பெரும் எரிச்சல் வந்தது. தன்னைக் கட்டுப்படுத்த முடியாத மனத்தின் மீது பெரும் சினம் எழுந்தது. அவளைக் காண முடியாது தவித்தபோதெல்லாம், அவள் ஒரு கெலைகாரனின் மகள் என்று தன்னை சமாதானப் படுத்த எத்தனையோ முறை முயன்றான். ஆனால், அது அவனால் முடியவில்லை. அவன் தன்னையும் மீறி அவளுக்காக ஏங்கினான் என்பதுதான் மறுக்கமுடியாத உண்மை.

கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகத் தன்னைச் சமாதானப் படுத்துவதும், அது முடியாமல், அவளைப் போல யாராவது ஒரு பெண்ணைக் கண்டால் கலங்குவதும், எங்காவது ஒரு இளம்பெண் கடினமான வேலை செய்வதைப் பார்த்த உடன் வருந்துவதும், எங்கே இருக்கிறாள் என்று தேடித் திரிந்து அலைவதும், என்று அவன் காலம் ஓடியதுதான் மிச்சம்.

இனி அவளைக் காணப்போவதில்லையோ என்று தன் நம்பிக்கையை மெல்ல மெல்ல அவன் தொலைக்கத் தொடங்கிய நேரத்தில்தான், பிரதீபனும் அவனுடைய கூட்டாளிகளுமாக அவன் தந்தையின் வீட்டில் புகுந்து பல லட்சம் டாலர் பெறுமதிவாய்ந்த நெக்லசையும், அதனுடன் இணைந்த பல நகைகளையும் களவாட முயன்றனர். முதலில் அது சர்வமகியின் தம்பி என்பது அவனுக்குத் தெரியாது.

அவன் தப்பி ஓடியதும் பிடிபட்டவர்களிடம் கடுமையாக விசாரித்தபிறகுதான் உண்மை தெரியவந்தது. முதலில் அவன் நம்ப மறுத்தான். ஆனால், அவன் நம்பிக்கைக்கு அர்த்தமில்லை என்பதைப் புரிந்தபோது, அவன் துடித்துப்போனான். அவனுக்கு சர்வமகியின் மீது ஏற்பட்ட ஆத்திரம் கரைகடந்து சென்றது.

இதற்காத்தானா அவள் ஊர் விட்டு ஊர் சென்றது? ஒரு வேளை தன்னைப் பழிவாங்க அவள் எடுத்துக்கொண்ட ஆயுதம்தானோ இந்தத் திருட்டு... என்று தப்புத் தப்பாகவே முடிவு செய்தவனுக்கு, இதற்கெல்லம் அவள் பதில் சொல்லியே ஆகவேண்டும்; என்று கடுமையாக எண்ணிக்கொண்டான்.
தம்பி தறுதலையாகப் போனதற்கு அவள் என்ன செய்வாள்? இதை அவன் யோசிக்கும் மனநிலையில் இல்லை. அதை ஆழ்ந்து ஆராய அவனுக்குப் பிடிக்கவும் இல்லை.

அவனுடைய எண்ணமெல்லாம், சர்வமகியும் சேர்ந்து இதை செய்திருக்கலாம் என்பதுதான். அவள் அப்படிப்பட்டவளா என்பதை ஆராய அவனுடைய கண்மூடித்தனமான ஆத்திரம் விடவில்லை. இருந்தாலும் ஏனோ உடனே பொலிசிடம் போய் முறையிடவும் அவன் விரும்பவில்லை. அவனுக்குப் பிடிக்காத குடும்பமேயாக இருந்தாலும், சர்வமகியின் தம்பி ஜெயிலில் இருக்கிறான் என்பதை ஏனோ அவனால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

உடனே தனக்குத் தனிப்பட்டதாக நியமிக்கப்பட்ட காவலாளிகளுடன் களவாட வந்தவர்களை கவனிக்கவேண்டிய விதத்தில் கவனித்தான். அவர்களின் மூலமே சர்வமகி இருக்கும் இருப்பிடத்தையும் அறிந்துகொண்டான்.

உடனேயே அவளைத் தேடிக் கிளம்பிவிட்டான். இதற்கு அவன் வரவேண்டிய அவசியம் இலலைதான். தன் தனிப்பட்ட பாதுகாவலர்களிடம் ஒரு வார்த்தை கூறினால் போதும், அவன் கூறியது அட்சரம் பிசகாமல் நடந்தேறிவிடும். ஆனால், அவனால் சர்வமகியை பார்க்கமுடியாது போய்விடுமே....
ஒரு பக்கம் நகையைத் தேடிய வேட்டையாக அது இருந்தாலும், நீண்ட காலத்திற்குப் பிறகு அவளைப் பார்க்கப்போகிறோம் என்று இதயம் வேகமாக அடித்துக்கொண்டதை என்ன முயன்றும் அவனால் தடுக்கமுடியவில்லை.

முதல் முதலில் உள்ளே நுழைந்தபோது, தன்னைக் கண்டதும், சர்வமகி மயங்கி விழுவதைக் காண, உள்ளுக்குள் பதறித்தான் போனான். ஆனாலும், அவனுடைய அகங்காரம் அதனை வெளிக்காட்ட விரும்பவில்லை.

முதலில் வீடு முழுவதும் நகையைத் தேடியபோது, அங்கே அந்த நகைகள் இல்லை என்றதும், அவனை அறியாமல் பெரும் நிம்மதி தோன்றத்தான் செய்தது.

ஆனால், அந்த நகையை முன் குளோசட்டிலிருந்து ஒரு டிடெக்டிவ் எடுத்தபோது, அவன் நம்பிக்கை சுக்கு நூறாக உடைந்துபோனது.

இதை அவனால் நம்ப முடியவில்லை. ஏற்கெனவே, அவள் மீது கோபத்தில் இருந்தவனுக்கு, இந்த சம்பவம், தீக்கு நெய் விட்டதுபோலாயிற்று. அவன் நினைத்ததுபோல சர்வமகி நல்லவள் அல்ல என்று, உள்ளங்கை நெல்லிக்காயாக அவன் ஐயமறத்

தெரிந்துகொண்டான்.

அவள் நல்லவளாக இருந்திருந்தால் இந்த நகையை மறைத்துவைக்க அவள் சம்மதித்திருப்பாளா? இல்லை தம்பியைக் காப்பாற்றத்தான் நினைத்திருப்பாளா? இப்போதும் தம்பி திருடன் அல்ல என்றுதானே உறுதியாக நிற்கிறாள்.

எந்தத் திருடன்தான் தான் திருடன் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறான். இப்படித்தான் தந்தை கொலை செய்தார் என்பதை இதுவரை அவள் நம்பவில்லை. நம்பத் தயாராக இல்லை. இப்போது தம்பி திருடன் என்பதையும் அவள் மறுக்கிறாள். சே... இது என்ன குடும்பம்...' என்று தனக்குள் வெறுப்புடன் எண்ணியவன், அழுதுகொண்டிருந்தவளை எரிச்சலுடன் பார்த்தான்.

"உன் தம்பி எங்கே?" என்றான் அதிகரித்த கோபத்துடன்.

"தெ... தெரியாது ஆத்மன்... சத்தியமாகத் தெரியாது..." என்றாள் வேதனையுடன்.

"ஐ டோல்ட் யு... நொட் டு கால் மி ஆத்மன்... நீ அந்தத் தகுதியை எப்போதோ இழந்துவிட்டாய்..." என்றான் அவன் ஏளனத்துடன்.

"சாரி... சாரி... ஆத்... அநேகாத்மன்... என்னை நம்புங்கள்... இது எப்படி இங்கே வந்தது என்று எனக்குத் தெரியாது..." என்றாள் அவள் தவிப்புடன்.

"உனக்குத் தெரியாதா? தெரியாமலா இந்த நகை இங்கே வந்தது?" என்றான் அவன் கிண்டலுடன்.

"உண்மையாக இந்த நகை எப்படி இங்கே வந்தது, ஏன் வந்தது, யார் கொண்டு வந்து வைத்தார்கள் என்பது எதுவுமே எங்களுக்குத் தெரியாது... தயவு செய்து நான் சொல்வதை நம்புங்கள்..." என்றாள் அவள் தவிப்புடன்.

"நீ சொல்வதை நம்புவதா? கத்தரிக்காயில் எண்ணைவடியும் போது நீ சொல்லு அப்போது நம்புகிறேன்... இதோ பார்... என்னுடைய எல்லா வேலைகளையும் அப்படியே விட்டுவிட்டு உன்னுடன் சமரசப் பேச்சு வைத்துக்கொள்வதற்கு எனக்கு நேரமுமில்லை, விருப்பமும் இல்லை. மரியாதையாக உன்னுடைய தம்பி எங்கே என்று சொன்னாயானால், நான் என் பாட்டில் போய் விடுவேன்." என்றான் கறாராக.

"ஐயோ... கடவுளே... எனக்கு தெரியாது அநேகாத்மன்... சத்தியமாகத்

தெரியாது...” என்றாள் சர்வமகி களைப்புடன்.

“இதைக் காதில் பூவைத்த எவனாவது ஒரு இளிச்சவாயன் இருப்பான் அவனிடம் போய்ச் சொல்லு...” என்றவன் திரும்பி அருகேயிருந்த தன் காவலாலியிடம் திரும்பினான்.

“ரெ஼ப்ரின்... கால்த பொலிஸ்... தே கான் ஃபைன்ட் ஹிம்...” என்றதும் சர்வமகி அனைத்தும் ஒடுங்கியவளாக அவனை வெறித்துப் பார்த்தாள்.

“உங்களுக்குத்தான் உங்கள் நகை கிடைத்துவிட்டதே... பிறகு எதற்குப் பிரதீபனைத் தேடுகிறீர்கள்?” என்றாள் சர்வமகி வலியுடன்.

“எதற்குத் தேடுகிறேனா? அவன் செய்த நல்ல காரியத்திற்கு, ஏதாவது விருதுகொடுக்கவேண்டுமே... அதற்காகத்தான்...” என்று ஏளனத்துடன் கூறியவன், பின் சினம் கொண்டவனாக,

“என்னிடம் இருந்து தப்பியிருக்கிறான். என் தந்தையின் வீட்டில் புகுந்து நகைகளைத் திருடியிருக்கிறான்... சொல்வது கேட்கிறதா? நகைகள்... இந்த நெக்லசுடன் சேர்ந்த இன்னும் சில நகைகள் எனக்கு வேண்டும். எல்லாமே டைமன்ஸ்...” என்று அவன் கூற அதுவரை நேரமாகப் பிடித்திருந்த பலம் முழுவதும் வடிந்து போனவளாக ஒரு இருக்கையில் தொப் என்று அமர்ந்தாள் சர்வமகி.

“கடவுளே... உங்களை எப்படி நம்ப வைப்பேன்...” என்று தவித்துக் கலங்கியவளை, எந்த உணர்ச்சியும் இல்லாது பார்த்தவன்,

“உன்னை நம்புவதா? சே... சே...” என்று அருவெறுப்புடன் கேட்டவன் ஓய்ந்துபோயிருந்தவளிடம் தன் வெறுப்பான பர்வையை வீசினான்.

‘இவள் மட்டும் நடிக்கப்போனால் என்றால்... ஆஸ்கார் விருதென்ன, அதற்கு மேல் என்ன விருது கிடைத்தாலும் இவள்தான் அதைத் தட்டிச் செல்வாள்... என்னமாதிரி நடிக்கிறாள்... இவள் தோற்றத்தைக் கண்டு நான் இளகிவிடுவேன் என்று நினைத்தாளா? அதற்கு அவள் வேறு யாரையும்தான் பார்க்கவேண்டும்...’ என்று எண்ணியவன், தன் காவலாலிகளைப் பார்த்தான்.

“இந்த வீட்டில் எப்போதும் இருவர் காவலுக்கு இருப்பதுபோலப் பார்த்துக்கொள்ளுங்கள்... யாரும் வெளியே போகக் கூடாது. இவள் தம்பி வந்ததும் உடனே எனக்கு அறிவியுங்கள்...” என்று கட்டலையிட்டவன் அங்கிருந்தவர்களை ஒரு முறை உற்றுப் பார்த்தான்.

“தவறுகளை நான் மன்னிப்பதில்லை ஜெ஼ப்ரி... அன்ட் டேவிட்சன்... உங்கள் இருவருக்கும் புரியும் என்று நினைக்கிறேன்...” என்றான் அவன் பெரும் அழுத்தமாக.

இருவரும் தலையாட்ட, “குட்...” என்றவன் திரும்பி சர்வமகியைப் பார்த்தான்.

“எனக்கு என்னுடைய மற்றைய நகைகள் வேண்டும். உன் தம்பி என் கைக்கு அகப்படும் வரைக்கும், இவர்கள் இங்கே காவலுக்கு நிற்பார்கள். அதையும் மீறி எங்காவது தப்பிப்போகவோ, இல்லை உங்கள் தம்பிக்குத் தகவல் அனுப்பவோ நினைத்தீர்கள் என்றால், பிறகு நடக்கும் சம்பவங்களுக்கு நான் பொருப்பில்லை... உங்கள் தம்பியை மட்டுமல்ல, உங்கள் எல்லோரையும் ஜெயிலில் கம்பியெண்ண வைத்துவிடுவேன்... ஜாக்கிரதை...” என்றவன் சர்வமகியை ஒரு முறை வெறுப்புடன் பார்த்துவிட்டுப் புயல் என அங்கிருந்து வெளியேறினான்.

தொடரும்.....

நிலவு 29

டிசம்பர் மாதம், மாலை ஆறு மணி... குளிர் உடலில் ஊசியாகக் குத்துவதைக் கூடப் பொருட்படுத்தாமல் சர்வமகி வானத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய மன வேதனைக்கு முன்பாக அந்தக் குளிர் ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை. பொதுவாக பனிப்பொழிவு இடம்பெறும் காலம். வெண்பஞ்சு படர்ந்தது போல, தரை முழுவதும் பனியின் ஆதிக்கம் இருக்கவேண்டிய நேரம் அது. ஆனாலும், புவியின் வெப்பம் அதிகரித்தாலோ, என்னவோ, அவள் மனதைப்போலவே, அந்த இடம் முழுவதும் வெறுமையின் ஆட்சி.

குளிரில் முகம் விறைத்து இறுகிப்போனது கூடத் தெரியாமல் தொலை தூர வெறுமையையே சர்வமகி பார்த்துக்கொண்டிருந்தாள்.

திடீர் என்று அவளைச் சுற்றி தடிமனான போர்வை போர்த்தப்பட, சுய நினைவு பெற்றவளாகத் திரும்பிப் பார்த்தாள் சர்வமகி. தேவகியும், மாதவியும்தான் அவளருகே நின்றுகொண்டிருந்தனர்.

“அக்கா... குளிருகிறதே... உள்ளே வா...” என்றாள் தேவகி கனிவுடன்.

“உள்ளே வந்தால் மட்டும் எல்லாம் சரியாகிவிடுமா தேவகி?” என்றாள் சர்வமகி ஏக்கத்துடன்.

“அக்கா... இப்படியே குளிரில் நின்று உன்னை வருத்திக்கொள்வதால் என்ன பிரயோசனம் இருக்கமுடியும்? தயவு செய்த உள்ளே வாக்கா...” என்றாள் மாதவி கவலையுடன்.

“நீங்கள்... நீங்கள் பிரதீபன் தவறு செய்திருப்பான் என்று நினைக்கிறீர்களா?” என்றாள் சர்வமகி பெரும் தவிப்புடன். இரு பெண்களுமே அமைதி காக்க அவள் முகத்தில் பெரும் வேதனையின் சாயல் வந்து அமர்ந்துகொண்டது.

இரண்டு நாட்களாகிவிட்டன... அநேகாத்மன் வந்துபோய். இன்னும் பிரதீபனைக் கண்டுபிடிக்கவில்லை. எங்கே இருக்கிறான் என்ன செய்கிறான் என்று எதுவுமே தெரியவில்லை. எங்கேயென்று போய்த் தேடுவது. இந்தப் பரந்த கனடாவில், எப்படியென்று கண்டுபிடிப்பது...?

மூவரும் வேதனையில் தவிக்க, திடீர் என்று அவர்களின் வீட்டு மணி அடித்தது. மூவரும் பயத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

மணி அடித்தவருக்கும், பொறுமைக்கும் இடையேயான தொடர்பு காத தூரமோ, பொறுமையற்று மீண்டும், வீட்டு மணியைப் பல முறை அடித்தார். மாதவி, சர்வமகியைப் பார்க்க, சர்வமகியின் முகமோ அச்சத்தில், வெளுரிப்போயிருந்தது.

பூனைப் பாதம் வைத்துக் கதவினை அடைந்த மாதவி, கதவின் மெல்லிய கண்ணடியினூடாக எட்டிப் பார்த்தாள். அங்கே நின்றிருந்தவனின் மார்புதான் தெரிந்தது.

இவள் இரண்டடி பின்வைத்து, யோசனையுடன் பல்கனியிலிருந்த சகோதரியைப் பார்க்க, தேவகி கதவைத் திறக்கவேண்டாம் என்பதுபோலத் தலையை ஆட்ட, மாதவி இரண்டடி பின்வைத்தாள். அதே நேரம், அறைக்குள் நின்றிருந்த அபிதன், வெளியே வந்து,

“ஏய்... மாது... யாரோ கதவு மணி அடிக்கிறார்களே... கேட்கவில்லை? என்ன மரம் மாதிரி நிற்கிறாய்?” என்றவாறு கதவின் அருகே வந்தவன், யார் வந்திருக்கிறார்கள் என்பதைக்கூட எட்டிப் பார்க்காமல், மாதவி தடுக்கும் முன்பே, கதவைத் திறந்துவிட்டிருந்தான்.

வாசலில் பொறுமையற்ற மூச்சுடன் நின்றிருந்தவன், கதவு

திறந்ததுதான் தாமதம், வேகமாக் கதவுடன் சேர்த்து அபிதனையும் தள்ளிக்கொண்டு, உள்ளே வந்தான் அநேகாத்மன். அவனை அந்த நேரத்தில் நால்வருமே எதிர்பார்க்கவில்லை என்பது, அதிர்ந்துபோயிருந்த அவர்களின் முகங்கள் தெளிவாகக் காட்டிக்கொடுத்தன.

அதிகாரமாக அவர்களுடைய முன்னறைக்குள் நுழைந்துகொண்டிருந்தவனின் முகம் பெரிதும் இறுகிப்போயிருந்தது.

மூன்று பெண்களும் ஒருவரை ஒருவர் கலக்கத்துடன் பார்த்துக்கொண்டனர்.

உள்ளே வந்தவன் ஒற்றை இருக்கையில் கால்மேல் கால்போட்டு அமர்ந்துகொண்டான். சர்வமகியும், தேவகியும் பால்கனியை விட்டு, முன்னறைக்கு வந்தனர்.

அநேகாத்மனின் விழிகள், சர்வமகியைத்தான் ஊடுருவிக்கொண்டிருந்தன.

குளிரால் சிவந்திருந்த நாசியும், கலங்கியிருந்த விழிகளும், சற்று நீலம் பாரி;த்திருந்த உதடுகளும், கண்டியிருந்த முகமும், அவன் விழிகளிலிருந்து தப்பவில்லை. அவள் அதிக நேரம், குளிரில் நின்றிருக்கிறாள் எனபதைப் புரிந்துகொண்டவன்;, கூடவே அவளைச் சுற்றியிருந்த போர்வையைக் கண்டதும், இவனுக்குக் கோபம் வந்தது.

‘முட்டாள்... குளிரில் நிற்கும்போது, அதற்குத் தகுந்தாற்போல ஆடை அணியவேண்டும் என்கிற அடிப்படை அறிவு வேண்டாம்...? வெறும் டிஷேர்ட்டும், கணுக்கால் வரை நீண்டிருந்த பாவாடையும், எந்த அளவிற்கு இந்தக் குளிரைத் தாங்கும்... அந்த போர்வையை போட்டிருப்பதை விடப் போடாமல் இருந்திருக்கலாம்’ என்று மனதிற்குள் சினந்தவன், காரமாகத் திட்டுவத்றாகத் தன் வாயைத் திறந்து,

“ஆர் யு... ஸ்டு...” முடிக்கவில்லை, அவனுடைய செல் சத்தமிட்டது. தான் சொல்ல வந்ததை முழுவதுமாகச் சொல்லாது விடுத்து, கைபேசியைக் காதில் பொருத்தினான்.

“குட்... யாரும் அங்கே நிற்கவேண்டாம். லீவ் ஹிம்...” என்று கூறிவிட்டுத் தெலைபேசியை மீண்டும் சட்டைப்பைக்குள் போட்டான்.

அவனுடைய வலது கரத்தின் விரல்கள் இடது காலுக்கு மேல் மடித்துப் போட்டிருந்த வலது தொடையில் தாளம் போட்டது.

அங்கே ஏற்பட்டிருந்த மயான அமைதி ஏதோ ஒரு கலவரத்தின் முதல் படி என்பதை சர்வமகி ஐயம் திரிபற, உணர்ந்துகொண்டதால், பயப்பந்து, அடிவயிற்றில் தோன்றியது. அவளுக்கு அந்த இடத்தில் என்ன பேசுவது என்றுகூடத் தெரியவில்லை. அவள் பேசினாலும், அதை அவன் கேட்டிருப்பானா என்பது வேறு கேள்வி. அதனால், மாதவியைப் பார்த்து,

“மாது... அபியை உள்ளே அழைத்துச் செல்...” என்றாள்.

மாதவி மறுத்தேதும் பேசாது, அபிதனின் தோளில் தன் வலக்கரத்தைப் போட்டு, தன் பேச்சை மதிக்காது, அவன் கதவைத் திறந்த ஆத்திரத்தில், அவன் தோளில் அழுந்தக் கிள்ள, அவன் வலியில் கத்துவதற்காகத் தன் வாயைத் திறக்க, சத்தம் வெளிவராதவாறு மறு மறுகரம் கொண்டு அடக்கி,

“டேய்... அபி... நாம் செஸ் விழையாடலம் வா...” என்றவாறு அவனை இழுத்துச் செல்ல, அபிதனோ, மாதவியின் வேகத்திற்கு ஈடுகொடுத்துக்கொண்டு அறைநோக்கிச் சென்றான்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தின்;, டிக் டிக் டிக் என்கிற ஓசையைத் தவிர வேறு எந்த ஓசையும் கேட்கவில்லை. சர்வமகிக்குத் தான் விடும் மூச்சின் சத்தமே பெரிதாகக் கேட்பதுபோலத் தோன்ற, தன்னைச் சுற்றியிருந்த போர்வையைத் தன்னுடன் சேர்த்து இழுத்து இறுக்கிக்கொண்டாள்;.

அமைதியாக அமர்ந்திருக்கும் அநேகாத்மனைப் பார்க்கப் பார்க்க, இவளின் அச்சத்தின் அளவு பெருகிக்கொண்டே போனது.

சற்றுநேரம், அமைதியாக இருந்தவன், பொறுமையற்ற மூச்சுடன், தொடையில் போட்டிருந்த தன் தாளத்தை நிறுத்தித் தலையைக் கோதிக்கொண்டான். தொடையின் மேல் போட்டிருந் காலை எடுத்தவாறே, தன் இடது கரத்தில் மாட்டியிருந்த ரொலக்ஸ் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தான். அவனுடைய பொறுமை மெல்ல மெல்லக் கரைவதை, தரையில் பதிரந்திருந்த வலக்காலின் குதிக்கால் மேலும், கீழும் துடித்துக்கொண்டிருந்ததில் புரிந்தது.

அதற்கு மேல் அமைதியாக இருக்கமுடியாது,

“எ... என்னாச்சு...” என்றாள் சர்வமகி பயத்துடன்.

கேட்டவளை அலட்சியமாகப் பார்த்த அநேகாத்மன், பதில் கூறாமலே, டீ டேபிளில் ஒழுங்காக மடித்துவைத்திருந்த செய்தித்தாளை இழுத்து எடுத்து, அதை உதறிவிட்டு, பொருளாதாரம் சார்ந்த செய்திகளைப் படிக்கத்தொடங்கினான்.

சர்வமகியும் அசையாமல். அதே இடத்தில்; சிலை போல நின்றாள். நீண்ட நேரம் சர்வமகி அமராமல் இருப்பதைக் கடைக்கண்ணால் பார்த்தவன், அவளிடம் உட்கார் என்று சொல்லத் தன்மாணம் விடவில்லை. அதே நேரம், அவள் நிற்கும்போது, அவனாலும் அதிகாரமாக அந்த இடத்தில் உற்கார முடியவில்லை.

பொறுமையற்று, வாசித்துக்கொண்டிருந்த செய்தித்தாளை, மடித்து மீண்டும் டீ டேபிலில் போட்டுவிட்டு எழுந்தவன், தன் பான்ட் பாக்கட்டில் கைவிட்டவாறு குறுக்கும் நெடுக்குமாக கொஞ்ச நேரம் நடந்தான். பின் கைபேசியை எடுத்து,

“வட்ஸ் கோய்ங் ஆன் தெயர்...” என்று சிடுசிடுத்தான்.

மறுபக்கம், என்ன சொன்னதோ, இவன் எரிச்சலுடன் கைபேசியை பான்ட் பாக்கட்டில் போட்டுவிட்டு, சாப்பாட்டு மேசைக்கு அருகேயிருந்த கதிரையை காலால் இழுத்து எடுத்து, அதைச் சர்வமகியின் பக்கமாகத் தள்ளிவிட, அது கட்சியதமாக அவள் அருகே போய் நின்றது.

சர்வமகி புரியாமல் அநேகாத்மனைப் பார்க்க,

“சிட்...” என்றான் ஒற்றைச் சொல்லாக.

சர்வமகியோ, மறுப்பாகத் தலையை ஆட்டிவிட்டு, நின்ற இடத்திலேயே நிற்க, இவன் தன் தோளைக் குலுக்கிவிட்டு, சற்றுத் தள்ளிப்போய், வாசலருகே எரிந்துகொண்டிருந்த மின்விளக்கையும், அதற்கு அருகேயிருந்த மின்விளக்குகளையும் அணைத்து விட்டு, மீண்டும் பழைய இடத்திற்கு வந்து அங்கிருந்த சொபாவின் கைப்பிடியில் மார்பிற்குக் குறுக்காகக் கரங்களைக் கட்டியவாறு, சாய்ந்து நின்றுகொண்டான்.

சர்வமகியின் விழிகள் குழப்பத்துடனேயே அநேகாத்மனைத் தொடர்ந்துகொண்டிருந்தது.

அப்படியே பத்து நிமிடங்கள் கடந்து போயின. திடீரென்று வீட்டின் கதவு

திறப்பால் திறக்கும் சத்தம் கேட்க, அநேகாத்மன் மீண்டும், தன் பான்ட் பாக்கட்டில், கைகளை நுழைத்தவாறு, நிமிர்ந்து நின்றுகொண்டான். தலை சற்றுக் குணிந்திருந்தாலும் அவனுடைய விழிகள் மேல் நோக்கிக் கூர்மையுடன், வாசல் கதவையே துளைத்துக்கொண்டிருந்தன.

சர்வமகிக்கு எங்கே மயங்கிவிழுந்துவிடுவோமோ என்று அச்சமாக இருந்தது. திறந்துகொண்டு வருவது யார் என்று உயிரைக் கையில் பிடிப்பதுபோல வாசலையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்;. அவளுடைய அச்சம் உண்மைதான் என்பதுபோல உள்ளே நுழைந்தான் பிரதீபன்.

உள்ளே வந்த பிரதீபன், மெதுவாகக் கதவைச் சாத்திவிட்டுத் திரும்பினான். முதலில் தெரிந்த இருட்டில், அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஓரளவு இருட்டுப் பழக்கப்பட், இரண்டெட்டு முன்னால் வைத்து, முன்னறையை எட்டிப்பார்த்தான். அங்கே நின்றிருந்தவனைக் கண்டதும் அதிர்ந்தான். வேகமாக வாசல் கதவைத் திறந்துகொண்டு, தப்பியோட முற்படும்போது, இரு வலிய கரங்கள் அவனுடைய சட்டைக் கொலறைப் பற்றிக்கொண்டது.

தன் சட்டையைப் பற்றியவனிடமிருந்து, திமிறி விலக முயன்று முடியாமல் போக, அவனைப் பற்றியிருந்த காவலாளி முன்னறைக்கு இழுத்து வந்து அநேகாத்மனின் முன்னாhல் நிறுத்தினான்.
அங்கே அநேகாத்மனைப் பிரதீபன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை என்பதை அவன் அதிர்ச்சியிலிருந்து தெரிந்தது.

சர்வமகி தன் தம்பியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிரந்தாள். அவனுடைய முகத்தில் தெரிந்த பதட்டம், அச்சம் எல்லாமே அவன் தப்பு செய்தவன் என்பதை எடுத்துக்காட்டப் போதுமானதாக இருக்க, அதுவரை நேரமும் தன் தம்பி தவறு செய்திருக்கமாட்டான் என்று முழுதாக நம்பியிருந்தவளுக்கு, இதயத்தில்; யாரோ சம்மட்டியால் பலமாக அடித்ததுபோலத் துடித்துப்போனாள்.

அவள் தம்பியா இப்படி ஒரு காரியத்தைச் செய்தான்? அவள் வளர்ப்பு அத்தனை கேவலமானதாகவா இருந்திருக்கிறது.

சிரமப்பட்டுத் தன் தம்பியை நெருங்கியவள், அவனை உற்றுப் பார்த்தாள்.

“அ... அவர் சொல்வது...” என்றவள் முடிக்கமுடியாமல் தொண்டை அடைக்கச் சிரமப்பட்டுத் தன்னைச் சமப்படுத்தியவாறு,

“அவர் சொல்வது... உண்மையா...” என்றாள் முடிந்தவரை அழுத்தமாக.

“அவர் என்ன சொன்னார்?” என்றான் பிரதீபன். அதுவரையும் அழுத்தியிருந்த பயம் எங்கோ மாயமாக மறைந்துவிட்டிருந்தது. அசட்டுத் தைரியம் அவனை ஆட்கொண்டது. அவன் செய்த தவறுக்கு எந்த ஆதாரமும் கிடையாதே... பிறகு என்ன?

“நீ அவர் வீட்டில் புகுந்து நகையைத் திருடினாய் என்றாரே...” இப்போது சர்வமகியின் கோபம் சற்று ஏறியிருந்தது.

“கண்டவர்கள் யார் யாரோ எப்படி எப்படியோ என்னவென்றாலும் கூறுவார்கள். அதற்கு நான் பதில் கூறவேண்டிய அவசியம் கிடையாது... யார் களவாடினார்களோ, அவர்களிடம் போய்க் கேட்கச் சொல்” என்றான் பிரதீபன் அலட்சியமாக.

“உண்மையில் நீ தவறு செய்யவில்லையா?” என்றாள் சர்வமகி. ஏனோ அவளுடைய அழுத்தமான பேச்சு பிரதீபனைச் சற்றுக் கலங்கடிக்கத்தான் செய்தது. அந்தக் கலக்கத்தைச் சாமர்த்தியமாக மறைத்தவன்,

“இதோ பார் அக்கா... எதுக்கும் ஒரு அளவுண்டு... நான் எந்தத் தவறும் செய்யவில்லை. அவர்கள் தேவையில்லாமல் என் மீது பழியைப் போடுகிறார்கள். அவர் வீட்டில் நான் திருடினேன் என்றதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது...” என்று அவன் படபடப்புடன் கேட்க, அவன் அருகேயிருந்த அந்தக் காவலாளி, பிரதீபனை நெருங்கினான்.

பிரதீபன் என்ன என்பதை உணர்வதற்குள்ளாக, தன் பெரிய கரத்தால், அவனை வளைத்துப் பிடித்தவன், அவன் பான்ட் பாக்கட்டிற்குள் கைவிட்டெடுக்க, அதிலிருந்து வந்து விழுந்தது ஒரு சிறிய நீல நிற வெல்வெட் பை.

பிரதீபனை விடுவித்த அந்தக் காவலாளி, தரையில் விழுந்த அந்தப் பையை எடுத்து, அனேகாத்மனினடம் நீட்ட, அதைப் பெற்றுக்கொண்டவன், தலையை மெல்லியதாக அசைத்து, அவனை வெளியேபோகுமாறு உத்தரவிட, தலையைக் குணிந்து வெளியேறினான் ஜெ்ப்ரி. அவன் வெளியே சென்றதும்,

தன் கரத்தில் இருந்த நீலப் பையைத் தன் மறு கரத்தில் கவிழ்த்துக் கொட்ட. விழுந்தது, ஒரு நவரத்தின நெக்லசும், அதே நவரத்தினம்

பதித்த கைச்செய்ன் கூடவே ஒரு சொடித் தோடும்.

அதுவரை அவன் மீதிருந்த கொஞ்ச நம்பிக்கையும் அடிபட்டுப் போனது சர்வமகிக்கு.

அவளுடைய தம்பி ஒரு திருடன். அவளுடைய தம்பி ஒரு பொய்யன். இதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

“அது.... நான் இல்லை...” என்று பிரதீபன் எதையோ சொல்ல வர,

“சே... வாயை மூடு...” என்று சீறினாள் சர்வமகி. இதவரை காலமும், பார்த்திராத காட்சியது.

தேவகிகூடத் திகைத்துப்போனாள். அக்காவிற்கு இப்படிக் கோபப்படத் தெரியுமா என்று அவள் அதிர்ந்து போனாள்.

“நீ... நீ எங்கள் அம்மாக்குத்தானா பிறந்தாய்? உனக்கு வெட்கமாக இல்லை. அப்படி உனக்கு நான் என்னடா குறைவைத்தேன்... சொல்லு... சொல்லுடா... எங்கெங்கோ திருடிப் பணம் புரட்டும் அளவுக்கு நான் அப்படி என்ன குறைவைத்தேன்... சொல்லுடா... நீயெல்லாம் ஒரு தம்பியா?” என்றவள் கோபமாகச் சுற்றும் முற்றும் பார்த்தாள். அங்கே எலி அடிப்பதற்காக வைத்திருந்த நீண்ட பொல்லைக் கண்டவள் ஓடிப்போய் அதை எடுத்தாள்.

“உன்னை நான் அடித்து வளர்த்திருக்கவேண்டும்... தவறு செய்துவிட்டேன்... நான் எவ்வளவு பெரிய மடச்சி தெரியுமா... இந்த நிமிடம்வரை நீ செய்திருக்கமாட்டாய் என்று நம்பினேன்... நீ... அந்த நம்பிக்கையை... சே... எல்லாவற்றுக்கும் சேர்த்து... நீ...” என்றவள் கோபம் கண்ணை மறைக்க அவனை அடிப்பதற்காகப் பொல்லை ஓங்கினாள்.

இது வரை காலமும், சர்வமகியிடம், அத்தகைய ஆக்ரோஷத்தை யாரும் பார்த்தது கிடையாது.
திடீர் என்று கோபத்தில்; கேட்ட தன் சகோதரியின் குரலில் அதிர்ந்து, வெளியே வந்த மாதவியும், சர்வமகியின் புது அவதாரத்தைப் பார்த்துத் திகைத்த தேவகியும், தம் கண்களையே நம்ப முடியாதவர்களாக, சகோதரியையே பார்த்துக்கொண்டிருந்;தனர். சாது மிரண்டால், காடு கொள்ளாது என்பது எத்தனை பெரிய உண்மை. அவர்கள் திகைத்து நின்றது ஒரு கணமே, அடுத்த கணம்,

“அக்கா... என் மீது ஒரு அடி... ஒரு அடி விழுந்தாலும்... நான் சும்மா

இருக்கமாட்டேன்.” என்றான் பரதீபன் தன் ஒற்றை விரலைத் தன் சகோதரிமுன்னால் நீட்டி.

“ஓ... எனக்கு முன்னாலேயே ஒற்றை விரலை நீட்டுகிறாயா?; அந்த அளவுக்குப் பெரிய மனிதராகிவிட்டீர்களோ?” என்றவள் மீண்டும் பொல்லை ஓங்கினாள்.

அது தன் மீது விழுவதற்கு முன்பாக, அதைப் பற்றிக்கொண்டவன், ஒரு இழுப்பில் அவளிடமிருந்து பொல்லைப் பறித்தான்.

“என்னை அடிக்க நீ யார்... உனக்கு யார் அந்த அதிகாரத்தைக் கொடுத்தது,... நீ எனக்கு அக்காதான்... அம்மா அல்ல...” என்றான் பிரதீபன் குரலை உயர்த்தி.

சர்வமகி ஆடிப்போனாள். தன் தம்பியா இப்படிப் பேசுவது? அவள் வளர்ப்புத் தப்பாகிவிட்டதா? எங்கே தப்பானது? புரியாமல் மலங்க மலங்க விழித்தாள் சர்வமகி.

அதேநேரம், அக்கா தம்பியின் பேச்சை
வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த அநேகாதமன், தன் மார்பின் குறுக்காகத் தன் கரங்களைக் கட்டியவாறு, பிரதீபனையே கொலைவெறியுடன்

பார்த்துக்கொண்டிருந்தான். இதுவே வேறு யாருமாக இருந்திருந்தால், இப்போது சர்வமகிக்கு எதிராகப் பேசிக்கொண்டிருப்பவன், மருத்துவமனையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பான்.

அன்று சர்வமகியைத் தொட்டதற்காக, அநேகாத்மன் அடித்த அடியில் அந்த ரட்ணபாலன் இறந்த செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இன்று வரை கொலைகாரனைக் காவலர்கள் தேடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களின் தேடல், பயனற்றது என்பது வேறு கதை. பிறகு, சர்வமகியின் வீட்டை வாங்கவென்று வந்தவர்கள், அவள் கையைப் பற்றிக் குலுக்குகிறேன் என்கிற பெயரில், தவறான நோக்கில் நெருங்கியவர்களை, அவனுடைய பாதுகாவலர்களைக் கொண்டு ஆளில்லாக் காட்டிற்குக் கதத்திச் சென்று, கை கால்களை முறித்து அப்படியே போட்டுவிட்டு வந்தது என்பது வேறு கதை.

ஆனால், இது அப்படியல்லவே. அவளுடன் தர்க்கம் புரிபவன், அவளுடைய இரத்தம். அவளுடன் கூடப் பிறந்த தம்பி. அவனைத்

தொட்டால், இவளுக்கு வலிக்குமே... அதனால் எதுவும் செய்ய இயலாத தன்மையுடன், பிரதீபனைக் கொன்றுவிடும் வெறியில் பார்த்துக்கொண்டிருந்தான் அநேகாத்மன்.
அது வரை பொறுமையாக இருந்த தேவகியும் கொதித்துப்போனாள். பிரதீபன், என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு முன்பாகவே, அவனை நெருங்கி அவன் கன்னத்தில் தன் பலம் கொண்டமட்டும் ஓங்கி அறைந்துவிட்டிருந்தாள்.

"சீ... வாயைக் கழுவு... என்ன பேச்சுப் பேசுகிறாய்... ராஸ்கல்... அக்கா மட்டும் இல்லாதிருந்திருந்தால் நாம் எல்லோருமே இப்போது பிச்சை எடுத்துத்தான் சாப்பிட்டிருப்போம்... அக்காவைப் பார்த்தா யார் என்று கேட்கிறாய்? நாயே... அவள் உடலில் ஓடும் இரத்தம்தானே உன் உடம்பிலும் ஓடுகிறது? அப்படியிருக்கும் போது உன்னால் எப்படி இப்படி ஒரு கேள்வியைக் கேட்க முடிகிறது..." என்றவளை முறைத்தான் பிரதீபன்.

அங்கே யார் யார் நிற்கிறார்கள் என்பதே மறந்தவனாக,

"அதில் உனக்கு சந்தேகமா தேவகி... என் அப்பாதானே உனக்கும் அப்பா... அவர் ஒரு கொலைகாரன் என்பதை மறந்துவிட்டாயா? இதோ... இந்தப் பெரிய மனிதரின் தந்தையைத்தானே எங்கள் அப்பா கொன்றார்... ஒரு கொலைகாரனுக்குப் பிறந்த பிள்ளை எப்படி இருக்கும் என்று நீ நினைக்கிறாய்? இப்படித்தானே இருக்கவேண்டும்..." என்று அலட்சியமாகச் சென்னவன், சர்வமகியைப் பார்த்தான்.

"நீ அக்கா என்றால்... அந்த வரைமுறையோடு மட்டும் நின்றுகொள்... அதற்கு மேல் உன் எல்லையைத் தாண்டாதே... தாண்டினாய் என்றால் நான் பொல்லாதவனாக இருப்பேன்... நான்... நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது...!" என்றவனை தேவகி பொங்கிய ஆத்திரத்துடன் பார்த்தாள்.

"என்ன? என்ன செய்வாய்? கொல்வாயா? கொல்லு... கொல்லுடா... இப்படி அவள் சித்திரவதை படுவதை விட, ஒரேயடியாக கொன்றுவிட்டாய் என்றால், அக்கா நம்மதியாகவாவது போயச் சேரட்டும்... சே... நமக்கு அக்காவாகப் பிறந்தது அவள் செய்த பாவம்... அந்தப் பாவத்திற்கு அவள் போகத்தான் வேண்டும்..." என்று கொதித்தவள், பின்பு தன் சகோதரியை நெருங்கினாள்.

அதிர்ச்சியுடன் தேவகியையே பார்த்துக்கொண்டிருந்த சர்வமகி,

“ஏன்மா அவனை அடித்தாய்...” என்றாள் வலியுடன். அதைக் கேட்டதும், அநேகாத்மன் ஒரு கணம் அதிர்ந்து போனான். இப்படியும் ஒருத்தி இந்த உலகத்தில் இருக்கமுடியுமா என்கிற கேள்வியும் அவன் மனதில் எழுந்தது.

தேவகிக்கோ, சிரி;ப்பதா அழுவதா என்றே தெரியவில்லை.

“அக்கா... நீ திருந்தவே மாட்டாயா... இவ்வளவு செய்தும், நன்றியில்லாமல் பேசுகிறான்... அவனைப் போய்... சே...” என்று கோபத்துடன் திட்டியவள், பின் பிரதீபனைப் பார்த்தாள்.

“இது... இதுதான்டா நம்மோட அக்கா... அவளைப் போய் நீ... எங்களையும் அவள்தானேடா வளர்த்தாள்... நாம் தப்பு செய்யாமல்தானே இருக்கிறோம்... நீ மட்டும் எப்படி இப்படி மாறிப்போனாய்? நம் அக்காவைப் போய்... என்ன வார்த்தை பேசிவிட்டாய்...?” என்றாள் தவிப்புடன். பிரதீபனோ, அவளை அலட்சியமாகப் பார்த்துவிட்டு,

“எங்களைப் பார்த்துக்கச் சொல்லி நாங்களா கேட்டோம்? இல்லை அல்லவா... நம்முடைய அப்பாவிடம் வாக்குக் கொடுக்கச் சொல்லி அவளுடைய கையைப் பற்றிக் கெஞ்சினோமா... எங்களை எங்கள் போக்கில் விடவேண்டியதுதானே... நம்மைக் கட்டுப் படுத்த, அக்கா யார்... அவள் தன் வாழ்க்கையைப் பார்த்துக்கொண்டு போகவேண்டியதுதானே... எனக்கெல்லாம், அவள் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை...” என்றான் அவன் குறையாத ஆத்திரத்துடன்.

“டேய்... பேசுவாயடா... நீ... இதுவும் பெசுவாய்... இன்னும் பேசுவாய்... ஏன் என்றால், உனக்கு சிறகு முளைத்துவிட்டது அல்லவா... அது மட்டுமல்ல... உனக்கு நாங்கள் பாரமாக வந்துவிடுவேமோ என்கிற பயம்... அதுதானே சே... எத்தனை சுயநலவாதி நீ... இதை விட நீ அவளைக் கொன்றிருக்கலாம்”

“ஆமாம்... எனக்கு உங்களின் கீழ் அடிமையாக இருக்கப் பிடிக்கவில்லை. எனக்கு சுதந்திரம் வேண்டும். இதோ இவர்கள் சொல்வதற்குக் கைகட்டிக் கேட்டுக்கொண்டிருக்க நான் தயாரில்லை. இவ்வளவும் ஏன்... இவர்கள் எதற்காக நமக்காகத் தன் வாழ்நாளைத் தொலைக்கவேண்டும்? தானும் வாழாமல், நம்மையும் வாழவைக்காமல்... பேசாமல் எங்காவது போய்த் தொலையவேண்டியதுதானே... நாங்களாவது நிம்தியாக இருப்போம்...” என்று கத்தியவனைக் கையாலாகாத் தனத்துடன் பார்த்தாள் சர்வமகி.

அவள் இதயமே வெடித்துவிடும் போல, வேகமாகத் துடித்தது. மெது மெதுவாகத் தலைக்குள் வண்டு குடையத் தொடங்கியது.

அதே நேரம், அநேகாத்மன் தனக்கு முன்னால் இருந்த கதிரையின் மேற்புரத்தை உடைத்துவிடும் வேகத்தில் அழுந்தப் பற்றியிருந்தான். எந்த நிமிடமும், அதைத் தூக்கி பிரதீபனின் மீது எறிந்துவிடும் நிலையில் அவன் இருந்தான். அவனுடைய கேபம் கணல் மூச்சாகச் சீறிப்பாய்ந்து வெளியே வந்தது...

“சீ... வாயை மூடடா முட்டாள் ... இதுதான்டா உனக்கும் நம்முடைய அக்காவுக்கும் உள்ள வித்தியாசம்... தன் நலம் முக்கியம் என்று சுயநலமா எண்ணாமல், இத்தனை காலமாகத் தனக்குள் ஒரு பெரும் பிரச்சனையை வைத்துக்கொண்டு நமக்காக இது வரைகாலமும் நடமாடுகிறாளே... அவள் தொலையத்தான் வேண்டும்... எப்போதும் நாம்தானேடா அவளுக்கப் பெரிசு. நாம் சிரித்தால், தானும் சிரித்து, அழுதால், தானும் அழுது, தான் அழியப்போகிறோம் என்பது தெரிந்தும், நமக்காக நடமாடிக்கொண்டிருக்கிறாள் பார், அவள் தொலையத்தான்; வேண்டும்... எங்கே தன் பிரச்சனை நமக்குத் தெரிந்துவிடுமோ என்று பயந்து, தனக்குள்ளேயே அதை மூடி மறைத்துக்கொண்டு... இது வரை காலமும் இயங்க முடியாமல் இயங்கிக்கொண்டிருக்கிறாள் பார்... அவள் தொலைத்தான் வேண்டும்... போ.. போய்த் துறத்துடா... போய் துறத்து.. அப்போதாவது நம்மை விட்டுத் தள்ளிப்போய், தனக்கே தனக்காக நிம்தியாக வாழட்டும்...” என்று ஆவேசம் வந்தவள்போலத் தேவகி கத்த, அதுவரை நேரமும் வெறிகொண்டவன் போல, பிரதீபனைப் பார்த்துக்கொண்டிருந்த அநேகாத்மன் தேவகி சொல்வதைக் கேட்டதும் உடல் விறைக்க நிமிர்ந்தான்.

நிலவு 30

அநேகாத்மனுக்கு முதலில் தான் கேட்டது கற்பனையோ என்றுகூடத் தோன்றியது. கொல்லும் வெறியுடன், பிரதீபனைப் பார்த்துக்கொண்டிருந்தவன், முதலில் தேவகி கூறியதைக் கவனிக்கவில்லை. பின்னர்தான், அவள் சொல்வதின் பொருள் முற்றுமுழுதாக அவனுக்குப் புரிந்தது.

‘தேவகி என்ன உளறுகிறாள்...?’ அநேகாத்மன் எதுவும் புரியாதவனாக தேவகியையும், பிரதீபனையும் மாறி மாறிப் பார்த்தான்.

தேவகி கூறுவதை, இரக்கமற்றுக் கேட்டுக்கொண்டிருந்த பிரதீபனுக்கு, ஒரு கட்டத்திற்கு மேல் எதையும் கேட்க முடிந்திருக்கவில்லை. தன் இரண்டு கரங்களையும் மேல்தூக்கிப் பிடித்தவன்,

“தெரியும்...” என்று முகத்தில் வலி தெரியக் கண்களில் கண்ணீர் குளம் கட்டக் கத்தினான் பிரதீபன். அதுவரை கொதித்துக்கொண்டிருந்த தேவகி அதிர்ச்சியுடன் பிரதீபனைப் பார்க்க,

“தெரியும் தேவகி.... எனக்கு எல்லாம் தெரியும்...” என்ற பிரதீபன் வேகமாகச் சுவர் பக்கமாகத் திரும்பி நின்றான். அவன் முதுகு குழுங்குவதிலிருந்து அவனும் அழுகிறான் என்பதைத் தேவகி புரிந்து கொள்ள தன்னையே நம்பமுடியாதவளாக,

“பிரதீபன்...” என்றாள் தேவகி.

சர்வமகியோ எதுவுமே புரியாதவளாகத் தன் சகோதரர்களைப் பார்த்தாள். அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இது வரை காலமும் யாருக்கும் எதுவும் தெரியக் கூடாது என்று எத்தனை கவனமாக நடந்துகொண்டாள். எல்லாமே வீணா?

“எனக்குத் தெரியும் தேவகி... அக்கா... அக்கா உயிருக்குப் போராடுகிறாள் என்று எனக்குத் தெரியும்... உடனடியாக அவளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்பதும் எனக்குத்தெரியும்... அதற்கு மருத்துவச் செலவு அதிகம் என்றும் தெரியும்.” என்றவன் வேகமாகத் தன் கன்னத்தில் வழிந்த கண்ணீரை அழுந்தத் துடைத்தான் திரும்பி தேவகியைக் கோபமாகப் பார்த்தான்.

“இப்போ கூட அக்காவை திட்டியது எதற்கு தெரியுமா? அக்காவை நான் திட்டினால அவள் தாங்குவாள். ஆனால், என்னை அவள் ஒரு அடி அடித்தாலும், என்னை அடித்துவிட்டோமே என்கிற வேதனையை அவள் தாங்கமாட்டாள். அதனால்தான் அவளை அப்படித் திட்டினேன். அதுமட்டுமல்ல, அப்படியாவது அவளுக்கு நம் மீது வெறுப்பு வராதா, இருக்கிற காலத்திலாவது அவள் தனக்கென்று ஒரு மகிழ்வான வாழ்க்கையைத் தேடமாட்டாளா என்கிற ஆதங்கத்தில்தான் தாறு மாறாகப் பேசினேன். ஆனால், அவளைத் திட்டும் போது நான்... எவ்வளவு துடித்தேன் தெரியுமா?” என்றவன் கேவினான்

தேவகிக்கு அவள் காதுகளையே நம்ப முடியவில்லை. “ப்ரதீபா...” என்றாள் அவள் தன் தம்பி அழுவதைப் பார்க்கச் சகிக்காதவளாக.

“அதுதான்... நான்... நான் மிஸ்டர்... அநேகாத்மன் தந்தையின் வீட்டில் என் நண்பர்களுடன் திருடப் போனேன்...” என்று கூறிய பிரதீபன் திரும்பினான்.

அவன் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகிக்கொண்டிருந்தது. கலங்கிய அவன் விழிகளில் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த சர்வமகி தென்பட, வேதனையுடன்; அவள் அருகே சென்றான்.

“அக்கா... சாரிக்கா... எனக்கு வேறு வழி தெரியவில்லை... எங்களுக்கு நீ வேண்டும்... உயிரோடு வேண்டும்... அதற்குப் பணம் வேண்டும்... அதனால்தான்... எங்கள் அப்பா கொலைகாரன் என்று குற்றம் சாட்டிய அந்தாள் வீட்டில் திருடப்போனேன்... எனக்குத் தெரியும்... திருட்டு மன்னிக்கக் கூடிய குற்றமல்ல... ஆனால் உன்னைக் காக்கவேண்டுமானால் நான் எந்த எல்லைக்கும் போகத் தயாராக இருந்தேன்... எனக்கு அந்த நேரம், நீதான் முக்கியமாகத் தெரிந்தாயே தவிர, நான் செய்ய விழைந்ததன் பாரதூரத்தைப் பற்றி நான் யோசிக்கவில்லை...” என்றவன், திரும்பி, அநேகாத்மனை முறைத்தான்.

“இவர்களால் தானே நம் குடும்பம் சிதைந்தது. இல்லை என்றால், நம் அப்பா இன்னும் உயிரோடு இருந்திருப்பார் அல்லவா....” என்று அவன் கூற தன் தம்பியையே இமைக்காமல் பார்த்தாள் சர்வமகி. தொடர்ந்து தேவகியையும் பார்த்தாள்.

அவர்களுக்குத் தெரியாது என்று எண்ணியிருந்தவளுக்கு அது அப்படி அல்ல என்று தெரிந்ததும் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. தலையில் குடைந்த வண்டின் வேகம் கூடியது. எங்கோ யாரோ பலம் கொண்ட மட்டும் சுத்தியலால் அடிப்பதுபோல உணர்ந்தாள்.

“ஓ... நோ... .இப்போதல்ல... அவள் யோசிக்கவேண்டும்... நிறைய யோசிக்கவேண்டும்... இந்தப் பிரச்சனையை அவள் யோசித்துத்தான் தீர்க்கவேண்டும்...” உடல் முழுவதும் எழுந்த வலியுடன், மனதின்; வலியும் சேர்ந்து வாட்ட, தவித்துக்கொண்டிருந்தவளை வெறித்துப் பார்த்தான் அநேகாத்மன்.

அதே நேரம் தேவகி கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த அனேகாத்மனின் உடம்பிலிருந்து அனைத்து குருதியும் வடிந்துசென்றதுபோல, முகம் வெளுறிப்போனது. அவனுக்கு இரு காதுகளும் அடைத்தன... இதயம், இதோ இப்போதே நின்றுவிடுவோம் என்று பயமுறுத்துவதுபோல, கட்டுப்பாட்டையும் மீறி தாறுமாறாகத்

துடித்தது.

எப்படியோ தன்னைச் சமாளித்தவன், சர்வமகியின் முன்னால் வந்து நின்றான்;. அவளுடைய இரு தோள்களையும் தன் கரங்களால் அழுத்தமாகப் பற்றியவன்,

“வட் த ஹெல் ஹப்பினிங் ஹியர்? உனக்கு என்ன பிரச்சனை? அவர்கள் என்ன உளறுகிறார்கள்? உனக்கு ஏன் சத்திரசிகிச்சை செய்யவேண்டும்? எதற்காக செய்யவேண்டும்? கேட்கிறேன் அல்லவா?” என்று கோபத்துடன் அவளை உலுப்ப, சர்வமகி தன் தலையை அழுந்தப் பற்றிக்கொண்டாள்.

வேதனையில் மண்டை பிளந்துவிடும் போலிருந்தது.

“மகி...” என்றவன், அவள் நிலையைக் கண்டதும் பயந்தவனாக, அவளை இழுத்துத் தன் மார்போடு அணைத்தவாறு தேவகியை கையாலாகாத் தனத்துடன் பார்த்தான்.

“மகிக்கு என்னவாகிவிட்டது... நீங்கள் எல்லோரும் என்ன உளறுகிறீர்கள்...” என்றான் அவன் அகோரக் கோபத்துடன். அவனுடைய உடல் பயத்திலும், வேதனையிலும், கோபத்திலும் நடுங்கியது.

தேவகியோ, அவனை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. தன் சகோதரியின் நிலையைக் கண்டவள், நிலமை புரிந்தவளாக, உடனே செயற்பட்டாள்.

ஓடிப்போய் ஒரு மாத்திரையை எடுத்துவர, பிரதீபனோ தண்ணீரோடு தேவகியின் முன்னால் நின்றிருந்தான்.

அனேகாத்மனின் மார்பில் சரிந்திருந்த சர்வமகியின் வாயில் மருந்தை வைக்க, பிரதீபன் தண்ணீரைக் கவனமாகப் புகட்டிவிட்டான்.

ஒருவாறு மருந்தை விழுங்கிய சர்வமகி, அப்படியே விழிகளை மூடித் தளர்ந்தாள்.

ஒரு நிமிடம் அநேகாத்மனின் சர்வநாடியும் ஒடுங்கிப்போனது. கிழே விழாவண்ணம் அவளை இறுகத் தன்னோடு அணைத்தவன், அவளைத் தன் கரங்களில், மாலையென ஏந்திக் கொண்டான்.

வேகமாகவும், பெரும் ஓசையுடனும் துடித்த இதயத்தின் ஓசையைக் கேட்ட சர்வமகி தன்னையும் மறந்து அவனுயை சட்டையை அழுந்தப்

பற்றி, எதற்கோ பயந்தவளாக, அவன் மார்போடு ஒண்டிக்கொண்டாள். மூக்கு விடைக்க, மூச்சுக் காற்று நடுங்க, தன் உடல் உதற, சர்வமகியை இறுக அணைத்தவாறு, சோஃபாவின் அருகே சென்றவன், அவளைத் தன் மடியில் இருத்தியவாறே அமர்ந்து கொண்டான்.

சர்வமகியின் சோர்ந்த முகம், அவன் மார்பில் நிலைபெற்று நிற்க, இவன் துடித்துப்போனான். வலக்கரம் அவள் தலையிலும், இடக்கரம் அவள் கன்னத்திலும் பதித்துத் தன்னோடு இறுக்கிக்கொண்டவனின் அழுத்தமும், அக் கரம் கொடுத்த பலமும் அவளை இனி ஒரு போதும் தன்னிடமிருந்து பிரித்துச் செல்ல விடாது என்பதைக் கூறாமல் கூறின.

கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல், குழந்தையென, அவளைத் தன்னோடு இறுக பொத்திவைத்திருந்தவனின் உதடுகள் சர்வமகியின் தலையில் அழுந்தப் பதிந்தன. கொஞ்ச நேரம் அநேகாத்மனையே விழிகள் மூடாமல் பார்த்துக்கொண்டிருந்த தேவகி, பெருமூச்சொன்றை விட்டவாறு,
“அக்காவை... படுக்கையில் கிடத்தவேண்டும்...” என்றாள் மென்மையாக.

அவனோ எங்கே தனக்குரித்தான பொம்மையைப் பறித்துவிடுவார்களோ என்று பதறும் சிறுவன் போன்று, அச்சத்துடன் மறுப்பாக அங்கும் இங்கும் தலையை ஆட்டியவன், மேலும் அவளைத் தன்னுள் புதைக்க முயன்றவனாகத் தன்னோடு இறுகக்கிக்கொண்டிருந்தான். அவனுடைய மூச்சுக் காற்றில் கூட நடுக்கம் அப்பட்டமாகத் தெரிந்தது.

பயத்தின் காரணமாக வியர்வை அவன் தலையிலிருந்து வழிந்துகொண்டிருந்தது.

தேவகிக்கு ஓரளவு அநேகாத்மனின் மநநிலை, முன்பே தெரிந்திருந்தாலும், சகோதரி, தமது நல்வாழ்விற்காக, அதனை உதறி எறிந்துவிட்டாள் என்பதை அவள் ஓரளவுக்கு ஊகித்திருந்தாள்.

ஆனால், அநேகாத்மன், தன் சகோதரியின் மீது இத்தனை பெரும் காதலை வைத்திருப்பான் என்று அவள் எண்ணவில்லை. அவன் பதட்டமும், அவளை விட்டுப் பிரியமாட்டேன் என்கிற அவன் மனநிலையும், தனக்குள்ளே அவளைப் புதைத்துக்கொள்ளவேண்டும் என்கிற அவன் வெறியும், அவனுடைய ஆழ் மனநிலையை வெட்டவெளிச்சமாக எடுத்துக் காட்டின.

அதே வேளை அந்த மருந்தையும் மீற, சர்வமகி மெலியதாக முனங்க,

“ஷ... ஷ்... இட்ஸ் ஓக்கே... பேபி... இட்ஸ் ஓக்கே... நான் உன் அருகேயிருக்கிறேன் அல்லவா... உனக்கு... ஒன்றுமில்லை... உனக்கு ஒன்றுமே ஆகாதும்மா... ஆகவும் விடமாட்டேன்... ஐ பிராமிஸ் யு... ஐ பிராமிஸ் யு...” என்றவனுக்கு முதன் முதலாக, அவன் குரலும், உடலும் மெல்லியதாக நடுங்கியது. அவளைக் குழந்தை போலத் முதுகை வருடிச் சமாதானப் படுத்தியவாறே, அவள் தலையில் தன் தலையைப் பதித்து, வலமும் இடமுமாக மெதுவாக ஆடினான்.

அவளுடைய உடலில் தெரிந்த மெல்லிய நடுக்கத்தை உணர்ந்தவன், பதறியவாறு, மெதுவாக விலகி, அவள் பூ முகத்தை ஏறிட்டான். தன் கரம் கொண்டு அவள் முகத்தை வருடிக்கொடுத்தவன்,

“என் மகிம்மாவுக்கு என்ன? இங்கே என்ன நடக்கிறது?’ என்றான் பெரும் தவிப்புடன்.

தேவகி அமைதி காக்க,

“சொல்லு தேவகி... சர்வமகிக்கு என்ன? அவளுக்கு என்ன பிரச்சனை?” என்றான் முகம் இறுக.

அவனுக்குத் தன்னைக் கட்டுப்படுத்துவதே சிரமமாக இருந்தது.

அநேகாத்மனையே கொஞ்சநேரம் உற்றுப் பார்த்தவள், விழிகளில் நீர் தேங்க, வெளியே வெறித்தாள்.

“அக்காவிற்கு...” என்று அவள் ஏதோ கூற முயல, கூற வேண்டாம் என்றோ, இல்லை, வலித்ததோ, சர்வமகி முனகியவாறு அசைய. உடனேயே அவளுடைய மார்பை வருடிக்கொடுத்தவன்,

“இட்ஸ் ஓக்கே... மகிம்மா... ஒன்றுமில்லை... நீ தூங்கு...” என்று மீண்டும் தன்னோடு இறுக்கி சமாதானப் படுத்தினான்.

சர்வமகி மீண்டும் மருந்தின் வேகத்தால் தூங்கினாலும், அவள் புலன்கள், தம் பேச்சிலேயே நிலைத்திருப்பதை உணர்ந்தவனாக சற்று நேரம் அப்படியே இருந்தான்.

அதே நேரம், தேவகி எதையோ கூறவர, தன் உதட்டில் கரம் வைத்து, அவளைப் பேசவேண்டாம் என்று தடுத்தான்.

சர்வமகியை அசைக்காதவாறே தூக்கிக்கொண்டு எழுந்தான்.

“உன் அக்காவின் அறை எது?” என்று மெல்லிய குரலில் கேட்க,

அவனை அழைத்துச் சென்று ஒரு அறையைக் காட்டினாள் தேவகி. அந்த அறையில் தனிக்கட்டிலும், ஒரு பங்க் பெட்டும் இருந்தது. அந்தத் தனிக் கட்டிலில், அவளை மெதுவாகக் கிடத்திவிட்டவன் அவள் அருகே நெருங்கிப் படுத்தாற்போல் அமர்ந்துகொண்டு அவள் தலையை வருடிக்கொடுத்தான். பின் தன் பிறங்கையால் அவள் கன்னத்தைத் தடவி விட்டான். விரல் கொண்டு, நெற்றியில் பூத்த வியர்வையைத் துடைத்துவிட்டான். அவன் கிடத்தியபோது, மேல் சட்டை மேலேறியிருந்ததால், அவளுடைய வெண்ணிற வயிரும், இடையும் வெளியே தெரிய, மேலாடையை இழுத்து விட்டான். இழுத்து விட்ட வலக்கரம், அவள் வயிற்றிலேயே சிறிது நேரம் நிலைபெற்று நிற்க, அவள் முகத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் அநேகாத்மன். அவனையும் அறியாது, அவனுடைய கரம் அவள் வயிற்றையும், இடையையும் மேலும் கீழுமாக மெதுவாக வருடிக்கொடுத்தது.

அவனுடைய கனிவில், அந்த மயக்க நிலையிலும், சர்வமகியின் தவிப்பு கூடியதோ, அவள் விழிகளின் ஓரமாக கண்ணீர் வழிய, வயிற்றில் பதிந்திருந்த வலக்கரத்தை எடுத்து, அக் கண்ணீரை வேகமாகத் துடைத்துவிட்டவன்,

“ஷ்... நான் உனக்குப் பக்கத்திலேயே இருக்கிறேன். எப்போதும் உன் பக்கத்தில்தான் இருப்பேன்... உனக்கு ஒன்றுமாகாதுடா... ஆகவும் விடமாட்டேன்...” என்று திரும்பத் திரும்பச் சொன்னவன் அப்படியே குனிந்து அவள் கன்னத்தில் மெதுவாக முத்தமிட, அதை உணர்ந்தவளாக, சர்வமகியின் அழகிய உதடுகள் மெல்லியதாக மலர்ந்து புன்னகையை சிந்த, கூடவே, அந்த மயக்கத்திலும், அவள் முகம், மெல்லிய நாணத்தைப் பூசிக்கொண்டது. அதைக் கண்டதும் அநேகாத்மன் ஆடிப் போனான்.

சர்வமகி அழகி என்பது தெரியும். வாடி வதங்கியிருந்த அந்த நேரத்திலும், தூசி படிந்த ஓவியமாகத்தான் அவள் தெரிந்தாளே அன்றி, அவளிடம் எந்தக் குறையும் இருக்கவில்லை. ஆனால், அந்த ஒற்றைப் புன்னகைக் கீற்றில், நாணிய அவள் முகத்தில், அவன் சர்வமும் உருகிக் கரைந்து, அவள் காலடியில் விழுந்து விடத் துடித்தது.

“இந்த ஒரு சிரிப்பிற்காக என் உயிரையும் கொடுக்கலாம் மகிம்மா...”

என்று கிசுகிசுத்தான் அந்தக் கலாபக் காதலன். அவன் குரலைக் கேட்டவாறே, அவள் ஆழ்ந்த தூக்கத்திற்குச் சென்று விட, அவள் மீது தடித்த போர்வையை போர்த்திவிட்டு, அவளை விட்டுப் பிரிய மனமில்லாதவனாகவே, அவளைத் திரும்பித் திரும்பிப் பர்த்தவாறு, அறையை விட்டு வெளியே வந்தான்.

சத்தம் போடாமல், வெளியே வந்து அறைக் கதவைச் சாத்தியவன், விழிகளை அழுந்த மூடித் தன்னைச் சமப்படுத்த முயன்றான்.

அவனையும் அறியாமல், அவன் மனம், "அப்பா... எதுவாக இருந்தாலும், அதை ஜீரணிக்கும் சக்தியை எனக்குக் கொடுங்கள்..." என்று தன் தந்தையை மனதார வேண்டியவன், விழிகளைத் திறந்து, தேவகியை அழுத்தமாகப் பார்த்தான்.

"முன்னறைக்கு போய் பேசலாம்..." என்று கை காட்ட, இருவரும் ஹாலுக்கு வந்தனர்.

"உட்காருங்கள் சார்..." என்றாள் தேவகி.

"இட்ஸ் ஓக்கே... இப்போது சொல்... என் மகிக்கு என்ன?" என்றான் என்மகி என்பதில் அழுத்தம் கொடுத்தவாறு.

"என் அக்காவுக்கு மூளையில் கட்டி..." என்று அவளும் 'என் அக்கா' என்பதில் அதிக அழுத்தம் கொடுத்து யார்மீதோ கோபப் பட்டவள் போன்று செய்தியைப் போட்டு உடைத்தாள்,

"எ... என்ன என்ன உளறுகிறாய்? சர்வமகிக்கு... நோ... நான் நம்பமாட்டேன்... நீங்கள் எல்லோருமாக ஏதோ பிளான் பண்ணி..." என்று அவன் முடிப்பதற்குள்ளாக இருக்கையை விட்டு எழுந்தாள் தேவகி.

விடு விடு என்று உள்ளே சென்றவள், வெளியே வந்தபோது ஒரு கோப்புடன் வந்தாள்.

"அதை அநேகாத்மனிடம் நீட்டியவள், படித்துப் பாருங்கள்... உங்களுக்கே புரியும்..." என்றதும், அதைப் பறிப்பதுபோலப் புடுங்கியவன் வேகமாக ஒவ்வொரு தாளாகப் பிரித்தான். அவனையும் அறியாமல் அவனுடைய கரங்கள் நடுங்கத் தொடங்கின.

கோப்பின் திகதியைப் பார்த்தான். ஓன்றரை வருடங்களுக்கு முன்பாக எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.
இதுதான் அந்தக் கோப்பில் இருந்தது.

சர்வமகியின் மூளையின் முக்கிய பகுதியில் ஒரு கட்டி உருவாகியிருக்கிறது. அது மெதுவாக வளர்ந்துகொண்டிருக்கிறது. அது கான்சராக இருப்பதற்கு வாய்ப்புள்ளதால், உடனடியாக பரிசோதனையைச் செய்து, அக் கட்டியை அகற்றவேண்டும். இல்லை என்றால், மூளைக்குப் போகும் இரத்தோட்டம் தடைப்பட்டு, எந்த நேரமும் கோமாவிற்குப் போக வாய்ப்பிருக்கிறது. கோமாவிற்குப் போனால் அவரைக் காப்பாற்றுவது இயலாதகாரியம்...” என்றிருந்தது.

“இது... ப்ரெயின் டியூமர்... இதில் கான்சர் என்று உறுதியாகக் கூறவில்லையே...” என்றான் அவன் வேகமாக.

“கான்சர் என்று கூறவும் இல்லை, கான்சர் இல்லை என்று கூறவும் இல்லை. அதற்கு பரிசேதனை செய்யவேண்டும்.”

“அதை ஏன் செய்யவில்லை?” என்று அவன் சுள் என்று எரிந்து விழுந்தான்.

“அதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம் சார்... ஒன்று ஏதாவது தவறாக வைத்தியர்கள் சொல்லிவிடுவார்களோ என்று அவள் பயந்திருக்கலாம். இல்லை எங்கே புதிய செலவை இழுத்துவரவேண்டி வந்துவிடுமோ என்று அஞ்சியிருக்கலாம்... தான் படுக்கையில் போனால், எங்களை யார் பார்த்துக்கொள்வார்கள் என்று பயந்திருக்கலாம், எங்கள் அக்கா ஒரு போதும் தனக்காக யோசிப்பதேயில்லையே...” என்றாள் தேவகி விரக்தியாக.

“டாமிட்... இதற்கேன் பயப்படவேண்டும்? உடனடியாக ஆப்பரேஷனைச் செய்யவேண்டியதுதானே... செய்தால் அவள் பிழைத்துக்கொள்ளலாம் என்று ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறதே.” என்றான் படபடப்புடன்.

“சார்... அக்காக்கு இப்படி ஒரு பிரச்சனை இருப்பதே எனக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்புதான் தெரியும். இதோ இந்த அறிக்கை எடுத்த போதுதான் நான் கண்டேபிடித்தேன்... ஆனால் அவளுக்கு இந்தப் பிரச்சனை பற்றி கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்கு முன்பே தெரியும். அதை அவள் அலட்சியம் செய்து எங்களுக்கும் மறைத்திருந்திருக்கிறாள். அதன் பிறகு அப்பாவின் பிரச்சனை, எங்களை ஒழுங்காக வளர்க்கவேண்டுமே என்கிற பிரச்சனை எல்லாமே இந்த விஷயத்தைத் தூக்கி ஒரு ஓரமாகப் போடவைத்துவிட்டது.

தவிர இங்கே சத்திரசிகிச்சை செய்வதற்குப் பணம்

தேவையில்லைத்தான். ஆனால் மருத்துவச் செலவுக்கு? ஆரோக்கியமான உணவுக்கு? எல்லாவற்றிட்கும் பணம் வேண்டுமே சார்... அதற்கெல்லாம் எங்கே போவது? இப்போது அருந்தினாளே மருந்து... அதன் விலை என்ன தெரியுமா... ஒரு மருந்தின் விலையே ஐம்பத்தைந்து டாலர்கள். ஒரு பெட்டி மருந்து வாங்கவேண்டுமானால் ஐநூறு டாலர்கள் வேண்டும். இருக்கிற செலவில் தானும் செலவு வைத்துவிடுவோமோ என்கிற பயத்தில் அக்கா மருந்தெடுப்பதே கிடையாது... தாங்க முடியாது தலை வலித்தால் மட்டும் எங்களுக்குத் தெரியாமல் ஒன்றை முழுங்கி வைப்பாள்." என்றவள் ஏக்கத்துடன் தலையைக் குனிந்துகொண்டாள்.

"எங்கே எங்களுக்குத் தெரிந்தால் நாம் பயந்துவிடுவோம் என்று அஞ்சி இது வரை தன் வேதனையை வெளியே காட்டவில்லை சார். இதை நானாகத்தான் கண்டுபிடித்தேன். எனக்குத் தெரிந்துவிட்டது என்கிற உண்மையை அறிந்தால் அவள் வருந்துவாளோ என்கிற எண்ணத்தில்தான் எனக்குத் தெரிந்தும் அதை வெளிக்காட்டாமல் எனக்குள்ளேயே மறைத்துவிட்டேன். அக்காவிற்கு எப்படியாவது ஆப்பரேஷன் செய்யவேண்டும் என்பதால் நான் வேலைக்குப் போகத் தொடங்கினேன். பணம் சேர்க்கத் தொடங்கினேன். அக்காவின் பாரத்தைக் குறைக்க முயன்றேன்..." என்றவளின் கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

அந்த நேரம் பிரதீபனும் தேவகியின் அருகே பெரும் தயக்கத்துடன் வந்து நின்றான்.

"அக்காக்கு இப்படி ஒரு பிரச்சனை இருப்பதை எதேற்சையாகத்தான் அவள் மருத்துவ ஃபைலைக் கண்டு அறிந்தேன் தேவகி. அறிந்ததும் எனக்குப் பெரும் அதிர்ச்சிதான். இன்டர் நெட்டில் இதற்கான சிகிச்சைகளைப் பற்றி வாசித்துத் தெரிந்துகொண்டேன்... இத்தகைய ஆப்பரேஷன் ஜேர்மனியில் என்பது வீதம் வெற்றிகரமாக நடந்திருக்கிறது. அதனால் சிகிச்சைக்கு அவளை அங்கே அழைத்துச் செல்வது நல்லது என்று எண்ணினேன். அதற்குரிய பணத்திற்கு எங்கே போவது என்றுதான் தெரியவில்லை. எப்படியாவது அக்காவைப் பிழைக்கவைக்க வேண்டும் என்கிற வெறி மட்டும்தான் என் நினைவில் இருந்தது. என் வயதிற்கு யார் வேலை தரப்போகிறார்கள்... சொல்லு... என் நண்பர்களிடம் எனக்கு வேலை ஏற்பாடு செய்து தருமாறு கேட்டேன். என் அவசரத்தைக் கருத்தில் கொண்டு அவர்கள்தான் இந்த ஐடியாவைச் சொன்னார்கள்." என்று தேவகியைப் பார்த்துக் கூறியவன், திரும்பி அநேகாத்மனைப் பார்த்து,

“உங்கள் மீது எனக்கு ஆத்திரம் இருந்தது உண்மை சார்... அதுதான் உங்கள் வீட்டைத் தேர்வுசெய்து திருடவந்தேன்... அதற்காக உங்களிடம் நான் நிச்சயம் மன்னிப்புக் கேட்கமாட்டேன்... என் தந்தையின் இறப்புக்குக் காரணம் நீங்கள்... நீங்கள் மட்டும்தான். எந்தத் தவறும் செய்யாத என் தந்தைக்குத் தண்டனையென்றால், என் தந்தையை கொலைக் குற்றவாழியாக்கிய உங்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது? அதுதான் உங்கள் வீடு என்று நினைத்து, உங்கள் தந்தையின் வீட்டில் திருடவந்தேன்” என்றவன் தான் ஒரு ஆண் என்பதையும் மறந்து அழத் தொடங்கினான்.

அநேகாத்மனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவர்களுடன் ஒப்பிடும் போது, தான் ஏதோ அந்நியப்பட்டது போன்ற உணர்வில் தவித்துப்போனான்.

தன் கரத்திலிருந்த கோப்பை அருகேயிருந்த மேசையில் வைத்தான். அவனால் எதையும் தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை. எல்லாமே அவன் மூளையிலிருந்து அழிந்ததுபோல, எல்லாமே மாறியது போல, ஒன்றுமே இல்லாததுபோலத் தோன்றியது.

சர்வமகிக்கு ஆபத்து. இது மட்டுமே அவன் மூளையை நிரப்பிவைத்துக்கொண்டிருந்தது. வேகமாக இருக்கையை விட்டு எழுந்தவன், எதனையோ கண்டு பயந்தவனா, எதற்கோ அஞ்சியவனாக எதையோ காணப் பிடிக்காதவனாக, எதிலிருந்தோ தப்புபவனாக, அந்த வீட்டைவிட்டு வேகமாக வெளியேறினான்.

தொடரும்....

நிலவு 31

தன் காருக்குள் ஏறி, அதை இயக்கி தான் இருக்கும் விடுதிக்கு வரும்வரை அவன் தன்னிலையில் இருக்கவில்லை. எப்படி விபத்தில்லாமல் வந்து சேர்ந்தான் என்பது, அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

தன் அறையினுள் நுழைந்தவன், அறைக் கதவை அறைந்து சாற்றினான். உள்ளே நுழைந்தவனை, ஆளுயரக் கண்ணாடியொன்று வரவேற்றது. அதில் தன் பிம்பத்தைக் கண்டவனுக்கு, பார்க்கக் கூடாத ஒன்றைப் பார்த்தவன் போல, அருவெறுப்புடன் அதை நெருங்கினான். தன்

பிம்பத்தையே கொஞ்ச நேரம், வெறித்துப் பார்த்தவன், ஓங்கி வலக்கை முஷ்டியால் அந்தக் கண்ணாடியைக் குத்தினான்.

அதுவோ உடையாமல் மீண்டும் அவன் உருவத்தைத் தயங்காமல் காட்ட, மீண்டும் ஓங்கிக் குத்தினான், யார் மீதோ கோபம் கொண்டவனாக, அடக்க முடியாத வெறியில் மீண்டும் மீண்டும் குத்தினான். அந்தக் கண்ணாடி குத்திய இடத்தில் வட்டமாக நொருங்கியும், அவன் முகத்தின் பிம்பம் மறைந்தும், அவன் அடங்கினானில்லை.

ஓங்கிக் குத்திய முஷ்டியிலிருந்து இரத்தம் வழிந்தும் அவன் அந்தக் கண்ணாடியைக் குத்துவதை நிறுத்தவில்லை. “ஏன்... ஏன்... ஏன்;...” என்கிற கேள்விமட்டும் அவன் வாயிலிருந்து வந்துகொண்டே இருந்தது.

அந்தக் கண்ணாடியைக் குத்தி ஓய்ந்தவனுக்கு, யாரோ கழுத்தைப் பிடிப்பதுபோன்ற உணர்வு தோன்ற, என்ன செய்கிறோம் என்கிற எண்ணமேயில்லாமல், தன் சட்டையைக் கோபத்துடன் பிய்த்து இழுக்க, அத்தனை பொத்தான்களும் தெறித்து விழக் கழற்றி எறிந்தான். தன் போக்கில், ஒரு புறமிருந்த ஜிம்மிற்குள் நுழைந்தான்.

அங்கிருந்த நடக்கும் இயந்திரத்தில்; என்ன செய்கிறோம் என்பது புரியாமலே ஏறி நின்றவனுக்கு, அடுத்து என்ன செய்யவேண்டும் என்று தெரியவில்லை. ஒரு கணம் குழம்பியவன், தான் நடக்கும் இயந்திரத்தில் ஏறியிருப்பது புரிய, அவசரமாக இலக்கம் பத்தை அழுத்தினான். அது ஓடத் தொடங்கியது. அந்த வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடியவனுக்கு சிந்தனை எங்கெங்கோ எல்லாம் போனது.

அவளை முதன் முதலாகக் கண்டது, அன்று அவள் தலைவலி என்று மாத்திரை உண்டது அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக நினைவுக்கு வந்தது. இப்போதுதான் சர்வமகி அடிக்கடி ஏன் மயங்கிவிழுந்தாள் என்பதும் ஏன் பலவீனமாக இருந்தாள் என்பதும் புரிந்தது. “ஓ காட்...” என்றவன் தன் வேகத்தை மேலும் கூட்டினான்

அவள் நோயுடன் போராடுகிறாள்... அதுவும் தனியாக... பெரிய தியாக சிகரம் என்று நினைப்பு... சுவர் இருந்தால்தானே சித்திரம் தீட்டலாம். இது கூடத் தெரியாமலா அலட்சியமாக இருந்தாள். ஒரு வேளை அந்தக் கட்டி பாரதூரமாக, மாற்றவே முடியாததாக இருந்தால்...” அதை நினைத்ததும், ஓடிக்கொண்டிருந்தவன், அதிர்ச்சியுடன் அதன் ஓட்டத்தை நிறுத்தினான். மீண்டும் மீண்டும் மனம் அதிலேயே நின்றது.

விரைந்து குளியலறைக்குள் நுழைந்தவன், குளிர்தண்ணீரைத் திறந்துவிட்டு அதன் கீழ் நின்றான். பூவாக சிந்திய நீர், கடும் குளிருடன் அவன் தலையில் வீழ்ந்தும், உடல் முழுதும் பரவியும், அவன் அச்சத்தை அது சற்றும் குறைக்கவில்லை.

அவளுடைய உயிருக்கு ஏதாவது ஆபத்து வருமா? இதை நினைத்த மாத்திரத்தில் அவனுக்கு உதறியது.

“நோ... நோ.. நோ...” என்று தன்னை மறந்து கத்தியவன், தன் உள்ளங்கையால் சுவரைப் பலமுறை ஓங்கி அறைந்தான். அவனுக்குக் கைவலி ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. மீண்டும் மீண்டும் பலம் கொண்ட மட்டும் அறைந்தான். கண்ணாடி குத்தியதால் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் கழுவுப்பட்டுப் போனதேயன்றி, அவனுடைய பயம் எள்அளவும் கழுவுப்பட்டுப் போகவில்லை.

“ஏன்டி... ஏன் என்னிடம் சொல்லாமல் மறைத்தாய்... ஏன் மறைத்தாய்...” என்று வாய் விட்டுப் புலம்பியவன், திரும்பி நின்று, பின் தன் தலையை சுவரில் முட்டுக் கொடுத்தவாறு நின்றான். பின்தலை சுவரில் கோபத்துடன் முட்டி முட்டி எழுந்தது.

“இருக்காது... அவளுக்கு ஒன்றுமில்லை... ஒன்றுமே இல்லை... அவளுக்கு எதுவுமாக விடமாட்டேன். என் சொத்துக் கரைந்தாலும் சரி... உலகில் எந்த மூலைக்கும் நான் அவளை அழைத்துச் சென்று குணப்படுத்துவேன்... ஐ வில் டூ தட்... அவளுக்கு ஒன்றுமாகாது...’ என்றவன் அதற்கு மேல் அவனால் முடிந்திருக்கவில்லை. அப்படியே சரிந்து தரையில் அமர்ந்தவன், தன் தலையை கரத்தில் தாங்கிக்கொண்டு கொஞ்ச நேரம் அப்படியே நின்றான்... கண் முன்னால், உயிரற்ற சர்வமகியின் உருவம், அவன் அனுமதியையும் மீறி வந்துபோக, அவனால் தாங்கமுடியவில்லை.

“நோ...” என்று உலகமே கேட்குமாறு பெரும் குரலெடுத்து கத்தினான்... தொண்டையும், அதனூடே ஓடிய நரம்புகளும் அவன் கத்திய அழுத்தத்தில் விடைத்து புடைத்து, இப்போதே வெடித்துவிடுவோம் என்பதுபோல, பயமுறுத்தின...

ஷவரிலிருந்து விழுந்த தண்ணீருடன் அவனுடைய கண்ணீரும் கரைந்து சென்றது. ஆம் அந்த ஆறடி நான்கங்குல ஆண்மகன், உடைந்துபோய் வாழ்வில் முதன் முதலாக அழுதான். அவன் வாழ்நாளில், அவனுடைய கண்கள் கண்ணீரைக் கண்டன.

அநேகாத்மனுக்குத் தன்மீதே தாங்கமுடியாத கோபம் வந்தது.

சுலபத்தில் அவள் தப்பானவள் என்கிற முத்திரையைக் குத்திவிட்டு, அவன் போய்விட்டானே. ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம், சர்வமகி ஏன் அப்படித் தன்னோடு நடந்துகொண்டாள் என்பதை யோசித்திருந்தால், ஏதாவது க்ளூ கிடைத்திருக்குமே. மூன்று வருடம் எத்தனை பெரும் சித்திரவதையை அனுபவித்துவந்திருக்கிறாள். இது புரியாமல், அவள் மீது கோபப்பட்டு, அவளையும் வருத்தி, தானும் வருந்தி. நினைக்க நினைக்க அவனால் தாங்க முடியவில்லை.

சர்வமகியை இப்படியே விட முடியாது. அவளைக் காப்பாற்ற வேண்டும். அவன் தன் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றவேண்டும். அவள் இல்லாத வாழ்க்கையில் அவனுக்கும் இடமில்லை... ஒரு முடிவு எடுத்தவனாகக் குளியலறையை விட்டு வெளியே வந்தான்.

முதன் முறையாகக் கண்ணீரைக் கண்ட கண்கள் சிவந்து வீங்கியிருந்தன. ஒருவாறு தன்னைச் சமாதானப் படுத்தியவன், நேரத்தைப் பார்த்தான். நேரம், இரவு பன்னிரணடு மணிக்கும் மேலாகியருந்தது. இனியும் தாமதிக்கமுடியாது. கைக்குக் கிடைத்த ஒரு சட்டையைப் போட்டுக்கொண்டு காரை எடுத்து, மீண்டும் சர்வமகியின் வீட்டிற்கு வந்தான்.

வீட்டின் மணியை அடிக்கக் கையை ஓங்கியவன், தாமதித்தான். உறங்கிக்கொண்டிருக்கும் சர்வமகியை எழுப்ப மனம்வரவில்லை. தேவகியின் கைபேசிக்கு அடித்தான். மறுகணம் கதவு திறக்கப்பட வியந்த அதிர்ந்த பார்வையுடன் தேவகி அநேகாத்மனை ஏறிட்டாள்.

அவள் அதிச்சியைச் சற்றும் கருத்தில் கொள்ளாது, உள்ளே நுழைந்தவாறே,

“உங்களிடம் ஃபக்ஸ் இருக்கிறதா?” என்றான். தேவகியின் பதிலைக் கேட்காமலே, சர்வமகியின் அறைக்குள் நுழைந்தான். அவள் இன்னும் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள். அவள் காலருகே அமர்ந்தவன், வெளியே சிறிதாகத் தெரிந்த பாத்தின் மீது தன் கரத்தை வைக்க, அது குளிர்ந்திருந்தது. தன் கரங்களாலேயே, அந்த சிறிய பாதங்களைப் பற்றியவன்,

“ஏன் இந்த அறை இவ்வளவு குளிர்கிறது?” என்றான் சற்றுக் கவலையாக.

“இது கொஞ்சம் பழைய கட்டடம். ஹீட்டர் சில வேளைகளில் நன்றாக வேலை செய்யாது...” என்றாள் தேவகி சற்றுத் தயக்கமாக.

“டாமிட்...” என்று பெருமூச்சுடன் சீறியவன், “ஒரு ஹீட்டர் கூடவா வாங்கிப் போடமுடியவில்லை?” என்று கோபமாகக் கேட்டான். கூடவே தன் கைபேசியை வெளியே எடுத்து, தன் காவலாளி ஒருவனை அழைத்து செய்தியைக் கூற, அந்த நடுச் சாமத்திலும், பெரிய ஹீட்டருடன் ஒருவன் வாசலருகே நின்றிருந்தான்.

அதை வாங்கி, பூட்டியபின்னே அநேகாத்மன் சற்று ஓய்ந்தான். மீண்டும் சர்வமகியின் அருகேயிருந்தவன், விழிமூடி உறங்கிக்கொண்டிருப்பவளை, விழிகள் நிறையப் பார்த்தான்.

அவள் ஒரு புரக் கன்னத்தைப் பெரும் விரலால் வருடிக்கொடுத்தவன், கையோடு அவள் கழுத்தையும் வருடிக்கொடுத்தான். அவள் தலையை வருடிக்கொடுத்தவனுக்கு, மீண்டும் கண்களைக் கரித்தது. அவள் இனிப்படப்போகும் துன்பத்தை எப்படித் தாங்கப்போகிறான் என்று அவனுக்கே தெரியவில்லை. அவள் வலக்கரத்தை எடுத்து, தன் உதட்டில் பொருத்தியவன்,

“உன் துன்பத்தை நான் எப்படித் தாங்கப்போகிறேன் என்றே தெரியவில்லை கண்ணம்மா...” என்றான் வலிநிறைந்த துரலில்.

கொஞ்ச நேரம் அப்படியே இருந்தவன்,

“நான் ஃபக்ஸ் இருக்கிறதா என்று கேட்டேனே...” என்றான் தன் விழிகளை சற்றும் அசைக்காமல்.

“ஆமாம் சார்...” என்று மெல்லிய குரல் பின்னால் இருந்து வரத் திரும்பிப்பார்த்தான்.

தேவகிதான் தயக்கத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். மீண்டும் சர்வமகியைப் பார்வையால் வருடிவிட்டு, வெளியே வந்தவன், “குட்...” என்றான்.

தொடர்ந்து தன் கைபேசியை எடுத்து, சில இலக்கங்களை அழுத்த, அவனுடைய அழைப்பு என்பதால், பன்னிரண்டைத் தாண்டியும், தயங்காமல் எடுக்கப்பட்டது. யார் யாருடனோ தொடர்பு கொண்டான். அவன் வைத்த இடத்திலேயே சர்வமகியின் ஃபைல் இருந்தது.

ஃபைலை ஒழுங்காகத் திறந்து பேப்பர்களை வெளியே எடுக்கப்

பொறுமை இல்லாதவனாக, இழுத்து எடுத்தான்.

ஃபக்சிலே எண்களைப் பதிந்து, எங்கெங்கோ அனுப்பினான்.

ஏனோ அவனுடைய கரங்கள் நடுங்கின. சட்டைப் பையிலிருந்த சிகரட்டை எடுத்து உதட்டில் பொருத்தியவன், பால்கனியில் வந்து நின்றான்.

வெளியே தெரிந்த கரியநிறம்போலவே, அவன் மனமும் இருண்டுபோயிருந்தது. சர்வமகிக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்கிற அச்சம், அவனை நிலைகுலையச் செய்தது. அவனிடம் எவ்வளவு பணம் கொட்டிக்கிடந்துதான் என்ன பயன்? சர்வமகியை இழந்துதான் அவன் பணம் வைத்திருக்கவேண்டும் என்றால் அந்தப் பணம்தான் அவனுக்கு எதற்கு.

தற்போதைய நிலையில் அவன் எல்லாவற்றையும் மறந்துவிட்டான். அவளுடைய தந்தை கொலைகாரன் என்பதையோ, அவளுடைய தம்பி தன் தந்தையின் வீட்டிலேயே திருடவந்தான் என்பதையோ, எல்லாவற்றையும் மறந்துபோனான். இப்போது மனம் முழுவதும் சர்வமகியே நிறைந்திருந்தாள். அவள் முழுதாக எந்தப் பிரச்சனையும் இல்லாமல நலமோடு, மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்கின்ற எண்ணம் மட்டும் அவனை முழுவதுமாக வியாபித்திருந்தது.
இருப்பாள்... நிச்சயமாக இருப்பாள்...'
சிகரட்டின் முனை விரலைச் சுட, சுய நினைவுக்கு வந்தான். அதே நேரம் தொலைபேசி சிணுங்க வேகமாக எடுத்துக் காதில் பொருத்தினான்.

அவனுடைய முகம் இறுகிப்போனது.

நிலவு 32

தன் கரத்திலிருந்த தொலைபேசியையே சற்று நேரம் வெறித்துப் பார்த்தான். மீண்டும் பாக்கட்டிலிந்த சிகரட்டைப் பற்ற வைத்தான்... நன்கு இழுத்து, நுரையீரலை நிறப்பிப் பார்த்தான். அவனுடைய பதட்டமும், பயமும் சற்றும் குறைவதாயில்லை.

மீண்டும் மணி அடித்தது. எடுத்து காதில் பொருத்தினான். இப்படி இரண்டு மூன்று தொலைபேசிகள் அவனை அழைத்தாலும், யாருமே அவனுக்குப் பிடித்த பதிலைக் கூறவில்லை.

கோபத்துடன், பல்கனியின் கம்பியை ஓங்கிக் காலால் உதைக்க, அது அவனுடைய பலத்துக்கு முன்னால், நிமிர்ந்து நிற்கமுடியாமல், அப்படியே இரண்டு கம்பிகள் வளைந்துபோய் நின்றன.

நோ... சர்வமகிக்கு எதுவும் ஆகாது... ஆகவும் கூடாது... அவளுக்கு எதுவும் ஆக விடமாட்டேன்...” என்று தன்னை மறந்து கூறியவன், கரத்திலிருந்த சிகரட்டை சுண்டி எறிந்துவிட்டு உள்ளே வந்தான். அவன் முகத்திலிருந்த இறுக்கத்தை தேவகி புரிந்துகொண்டாள்.

“எ... என்ன சொன்னார்கள்...” என்றாள் தவிப்புடன்.

தன் உதட்டைக் கடித்துத் தலையை அவன் மறுப்பாக ஆட்ட,

“ஓ...” என்றவாறு தொப் என்று இருக்கையில் அமர்ந்தாள் தேவகி.

“அப்போ... அக்காவைக் காப்பாற்ற முடியாதா?” என்று பெரும் ஏக்கத்துடன் அவள் கேட்க,

“வை நாட்... உன் அக்காவுக்கு ஒன்றும் ஆகாது... நான் இருக்கும்வரை ஆகவும் விடமாட்டேன்...” என்று சுள் என்று பாய்ந்தவன், தேவகியின் பயந்த முகத்தைக் கண்டு தன்னை அடக்கினான்.

“லிசின்... உன் அக்காவை... இல்லை என் மகிமாவை உலகின் எந்த மூலைக்குக் கொண்டு போயும் காப்பாற்றுவேன் தேவகி... அவள் உயிர் போவதாக இருந்தால், அது என் பிணத்தைத் தாண்டித்தான் போகும்...” என்று அவன் வலியுடன் கூற, தேவகி அதிர்ந்தாள்.

“சார்... நீங்கள் அக்காவை...” அவள் முடிக்கவில்லை,

“யெஸ்... ஐ லவ் ஹர்... என் உயிரிலும் மேலாக... என் மகி இல்லாத உலகில்... எனக்கு எதுவுமே... எதுவுமே கிடையாது... நான் ஒரு முட்டாள்... இதைப் புரிந்துகொள்ள, இத்தனை காலங்கள் தேவைப்பட்டிருக்கிறது...” என்றவன் தன் நிலையை நினைத்தே சிரித்தான்.

"அன்று என்னை மணக்கச் சொல்லிக் கேட்டபோது, அவள் மறுத்துவிட்டாள். நான் அப்போதே அவளைப் பிடிவாதமாக மணந்திருக்கவேண்டும்...” என்றான் பெரும் வலியுடன்.

“என்ன...? அக்காவை மணக்கக் கேட்டீர்களா? எப்பொழுது?

அப்படியானால் அக்காவுக்கும் உங்கள் மீது காதல் இருக்கிறதா சார்?" என்றாள் தேவகி ஆர்வமாக.

ஒரு கணம் தன் விழிகளை மூடி யோசித்தான் அநேகாதமன். அன்று அவள் தன்னிடம் தஞ்சம் புகுந்ததும், அவளிடம் அவன் அடைக்கலம்புக விளைந்தபோது மயங்கி நின்றதும், பின்பு, மறுத்ததும், ஒன்றன் பின் ஒன்றாக நினைவிற்கு வந்தது. முதலில் மயங்கியிருந்தவள், பின்பு மறுத்ததற்கான காரணம் இப்போதுதான் புரிந்தது.

"யெஸ்... அவளும் என்னை விரும்புகிறாள்..." என்றான் அழுத்தமாக.

"எதை வைத்து அப்படிக் கூறுகிறீர்கள்... உங்களை அக்கா விரும்பியிருந்தால், எதற்காக மணக்க மறுத்திருக்கவேண்டும்...?" என்றாள் தேவகி அழுத்தமாக.

"உன் அக்காவை நீயே புரிந்துகொள்ளவில்லையே தேவகி... உன் அப்பாவிற்கு நீதி கிடைக்கவேண்டும் என்பது ஒருபக்கமாக இருந்தாலும், தன் சகோதரர்களுக்காகத் தன்னையே அழித்துக்கொண்டிருப்பவள், தன் உயிருடன் கலந்த எனக்காகத் தன் உயிரையும் தருவாளேயன்றி, என் வாழ்வைக் கேள்விக்குரியாக்க அவள் சிறிதும் சம்மதித்திருக்கமாட்டாள். பைத்தியக்காரி... அவள் இல்லையென்றால்தான் என் வாழ்க்கை அழிந்துபோகும் என்று அவள் எண்ணவில்லை... அப்போது அவள் மறுத்ததற்கான காரணம் தெரியவில்லை. இப்போதுதான் தெரிகிறது." என்றபோது, மெலியதாகக் கமறினான். உடனே, இருமி தன்னைச் சமப்படுத்தியவன்,

"ஐம் சாரி..." என்று அவசரமாக, மன்னிப்பு வேண்டியவன், விரைந்து பல்க்கனிக்கு சென்றான். நீண்ட பெரிய மூச்சுக்களை எடுத்துத் தன்னைச் சமப்படுத்த முயன்றான். அவனுடைய கரங்கள், பல்கனியின் இரும்புக்கம்பிகளைப் பற்றி முறுக்கின.

அவனால், அவனையே கட்டுப்படுத்தமுடியாமல் திணறினான். உலகின் மிகப்பெரும் பணக்காரனின் ஒரே ஒரு மகன், கனடாவின் லீடிங் லாயர் என்று பெயர் பெற்றவன், அத்தனை பிரச்சனைகளையும், கை சொடுக்குவதற்குள்ளாக, சுழியோடி வெளியே வரக்கூடிய ஆற்றல் பெற்றவன், முதன் முறையாக, ஒரு பெண்ணுக்காக, கலங்கி அடுத்து என்ன செய்வது என்பது புரியாமல், தவித்துக்கொண்டிருந்தான்.

அடுத்து என்ன செய்யவேண்டும் என்று கூட அவனுக்குப் புரியவில்லை. அந்த மைனஸ் பத்திலும்;, உடல் எல்லாம் நெருப்பால் எரிவது போலத்

தவித்துப்போனான். தன் கோர்ட்டைக் கழற்றி, அங்கே இருந்த இருக்கையில் எறிந்தான். அணிந்திருந்த ஷேர்ட்டின் இரண்டு மூன்று பட்டன்களைக் கழற்றிவிட்டு மீண்டும் பல்கனிக் கம்பிகளைப் பற்றினான்.

ஏதோதோ சிந்தனைகள் வந்து. அவனை வதைத்தன. மனக்கண்ணில், உயிரற்ற, சர்வமகியின் பிம்பம் வந்து வந்து போக,

“நோ...”என்றவாறு தன் தலையைப் பற்றிக்கொண்டான் அநேகாத்மன். “நோ... நோ... நோ...” என்று வெறிபிடித்தவன் போல அவன் கத்த, தேவகி பயத்துடன் வெளியே வந்தாள்.

அந்தக் குளிரிலும், அவன் அணிந்திருந்த ஷேர்ட் தொப்பலாக அவன் வியர்வையில் நனைந்திருந்தது. அவனுடைய பதட்டமும், இறுகிய முகமும், இவளுக்கு அச்சத்தைக் கொடுக்க,

“சார்...” என்றாள் அவள்.

வேகமாக அவள் புறம் திரும்பியவன்,

“தேவகி... நான் உன் அக்காவை மணமுடிக்கப் போகிறேன்...” என்றான் நேராக.

“சார்... நீங்கள்... நீங்கள் என்ன...” அவளால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை.

“யெஸ்... ஐ ஆம் கோய்ங் டு... எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மகியை மணக்கப்போகிறேன்..” என்றான் உறுதியாக.

“சார் நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?” என்றாள் ஆவலும், சந்தேகமும் போட்டிபோட.

“நான் செய்யாத எதையும் சொன்னது கிடையாது தேவகி...” என்றான் அவன் அழுத்தமாக.
வேகமாக அவனை நெருங்கி அவன் கரங்களைப் பற்றியவள்,

“சார்... நான்... நான் இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியவில்லை... எனக்கு... எனக்கு என்ன சொல்வது என்றும் தெரியவில்லை...” என்றாள் அழுகையினூடே.

“நீ எனக்கு ஒன்றே ஒன்றுதான் செய்யவேண்டும். உன் அக்காவைச் சம்மதிக்க வைக்கவேண்டும்... உன்னால் முடியுமா?”

“என்னால் முடியும் சார்... நிச்சயமாக முடியும்...” என்றாள் உறுதியுடன். ஆனால், அந்த உறுதிக்கு அர்த்தமில்லை என்பதை அப்போது அவள் புரிந்துகொள்ளவில்லை.

நிலவு 33

தேவகி சர்வமகியிடம் பக்குவமாக அநேகாத்மனின் எண்ணங்களைக் கூற, செய்தியைக் கேட்டதும் சர்வமகி ஒரேயடியாக மறுத்தாள்.

“நோ... என்னால் முடியாது...” என்றாள் பிடிவாதமாக.

சகோதரர்களின் கெஞ்சல், வேண்டுதல் எதுவுமே அவளிடம் பலிக்கவில்லை.

செய்வதறியாது, கலக்கத்துடன் உதட்டைப் பிதுக்கிய தேவகி, அநேகாத்மனுடைய கைபேசிக்கு அழைத்தாள். அப்போது அவன், ஒரு முக்கிய கூட்டத்தில் இருந்தவன். கைபேசி வர, அதில் தேவகியின் நம்பரைக் கண்டதும், உடனே அதை உயிர்ப்பித்துக் காதில் பொருத்தி,

“வன் செக்... தேவகி...” என்றவன், கைபேசியை காதிலிருந்து எடுத்துத் தன் முன்னால் அமர்ந்திருந்த முக்கிய பிரமுகர்களைப் பார்த்து,

“சாரி காய்ஸ்... இந்த கூட்டத்தை தொடர்ந்து என்னால் நடத்த முடியாது... என்னுடைய அசிஸ்டன்ட் கேர்வின் தொடர்வான். எனக்கு ஒரு அவசர வேலை இருக்கிறது...” என்றவன், அவர்களின் சம்மதத்தையும் பெறாது, பதிலையும் கேட்காது, கூட்டம் நடக்கும் அறையை விட்டு வெளியே போனான். கேர்வினோ, விழி பிதுங்க, சென்றுகொண்டிருந்த அநேகாத்மனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

‘அவன் தொடர்ந்து நடத்துவதா? இது என்ன ஒரு மில்லியன் இரண்டு மில்லியன், டாலர் பெறுமதியான டீலா, நூறு மில்லியன் டாலர் பெறுமதியான வியாபாரம். அதை விட, அந்த தொலைபேசி அழைப்பு முக்கியமா?’ மனதிற்குள்தான் புலம்ப முடிந்தது. கூடவே தன்னை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த, பிரமுகர்களைக் கண்டதும், இவனுக்கு வயிற்றுக்குள் பிசைந்தது.

இவர்களை எப்படி சமாளிக்கப்போகிறேன். அந்த இடத்தில் அநேகாத்மன் என்றால், அவன் என்ன சொன்னாலும் மறு பேச்சுப் பேசாமல் பூம் பூம் மாடுபோலத் தலையாட்டுவார்கள். தன்னை என்ன பாடுபடுத்தப்போகிறார்களோ, என்று பயந்தவனாக, அநேகாத்மன் விட்டுச் சென்றதிலிருந்து தொடங்கினான் கேர்வின்.

அதே நேரம், கைபேசியுடன் தன் பிரத்தியேக அலுவலக அறைக்குள் நுழைந்த அநேகாத்மன், தன் கதிரையில் சாய்ந்து அமர்ந்தவாறு,

“இப்போ சொல்லு தேவகி... என்ன உன் அக்கா மறுத்துவிட்டாளா?” என்று கேட்டான் மெல்லிய நகைப்புடன்.

“சார்...” என்று திகைத்தாள் தேவகி.

“உன் அக்காவைப் பற்றி எனக்குத் தெரியாதா? உயிர் போனாலும், சம்மதிக்கமாட்டாள்...” என்றான் அவன் விரக்தியுடன்.

அப்படியானால் என்ன சார் செய்வது...” என்றாள் தெவகி வேதனையுடன். அவளைப் பொருத்தவரையும், அவள் சகோதரி மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அவ்வளவுதான்.

“டோன்ட் வொரி... தேவகி... உன் அக்காவை சம்மதிக்கவைக்கும் வழி எனக்குத் தெரியும்...”

என்றவனுடைய முகத்தில், அழுத்தமான புன்னகையொன்று வந்து அமர்ந்து கொண்டது.
“எப்படி சார்...” என்றாள் தேவகி ஆவலுடன்.

“வெய்ட் அன்ட் சீ...” என்றவன், தன் கைபேசியை அணைத்து மேசையில் போட்டான். தன் இரு கரங்களையும் உயர்த்தித் தலையின் பின்புறமாகக் கட்டியவாறு, கால்மீது கால் போட்டுத் தலையைப் பின்புறமாகச் சரித்தவாறு யோசித்தான்.

சர்வமகியைப் பணத்தைக்காட்டியெல்லாம் சம்மதிக்கவைக்க முடியாது. பார்ப்பதற்கு அவள் பூப்போல மென்மையானவள்தான். ஆனால், மனதளவில் அவள் இரும்புக்கும் நிகரானவள். அப்படிப்பட்டவளைப் பணத்தைக்காட்டி சம்மதிக்க வைப்பது இயலாத காரியம்தான். அவளை ஒரே ஒரு விஷயத்திற்காக மட்டும்தான் சம்மதிக்க் வைக்கமுடியும். அது பாசம்.

முடிவு செய்தவன், சர்வமகியைத் தேடிக்கொண்டு அவள் வீட்டிற்கே

சென்றான்.

அனைவரும் பாடசாலை சென்றிருந்ததால், சர்வமகிமட்டும்தான் தனித்திருந்தாள்.

இவன் வீட்டு மணியை அடிக்க, வந்து திறந்தவள். இவனைக் கண்டதும், ஒருகணம் அவள் முகத்தில் மலச்சி தோன்றி மறைந்தது. அதனைக் கண்டும் காணாதவன் போல,

“கான் ஐ கம் இன்சைட்...” என்றான் அவள் முகத்திலிருந்து தன் விழிகளை அகற்றாமல்.
உடனே அவள் வழிவிட, இவன் உள்ளெ வந்தான். அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவன், தன் கால்மீது கால்போட்டு, சர்வமகியையும் அமருமாறு பணிந்தான்.

மறுக்காமல் வந்தமர்ந்தாள் சர்வமகி.

அவளுடைய விழிகள் தவிப்புடனும், பதட்டத்துடனும் அநேகாத்மனை ஏறிட்டன. இப்போது என்ன குண்டைக் கொண்டுவந்திருக்கிறான் என்பதை அவள் ஓரளவு யூகித்திருந்தாள்.

அநேகாத்மனோ, தான் சொல்ல வந்ததை மறந்து ஒரு கணம் சர்வமகியை விழிமூடாமல் பார்த்தான். எங்கோ கிளம்பியிருந்தாள் போலும். நீண்ட இளஞ்சிவப்பு நிறத்தில் பாவாடையும். வெண்ணிற மேல் சட்டையும் அணிந்திருந்தவளின் அழகு பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை.

“வெல்... இப்போ எப்படியிருக்கிறது?” என்றான் அவன் கனிவுடன்.

“இப்போ பரவாயில்லை...” என்றாள் அவள் ஒற்றைச் சொல்லாக.
முன்தினம் நடந்த சம்பவத்தை அவளால் சிறிதும் நம்பமுடியவில்லை. ஏனோ அவன் முகத்தைப் பார்த்துப் பேசும் தைரியம் அவளுக்கு வரவில்லை.

“என்ன முடிவு செய்திருக்கிறாய் சர்வமகி...” என்றான் அநேகாத்மன் அதிகம் அலட்டாமல்.
அவன் எதைக் கேட்கிறான் என்பது சர்வமகிக்குப் புரிந்தது. தான் மறுத்ததும், அப்படியே அவன் விட்டுவிடமாட்டான் என்பது அவளுக்குத் தெரிந்ததே. எப்படியும் அவளை, சம்மதிக்க வைக்காமல் அவன் ஓயமாட்டான் என்பதும் அவள் அறிந்ததே. எதுவாக இருந்தாலும்,

அவனை மணப்பதில்லை என்கிற முடிவை அவள் மாற்றிக்கொள்வதாக இல்லை. அதனால் அவளுடைய விழிகள் தரையையே கூட்டிக்கொண்டிருக்க, பொறுமை இழந்தவனாக.

“லுக் அட் மை ஃபேஸ் சர்வமகி... உன்னிடம்தான் கேட்கிறேன்...” என்றான் அவன் அழுத்தத்துடன்.
ஒரு முடிவுக்கு வந்தவளாகப் பெருமூச்சொன்றை எடுத்து விட்டவள்.

“நீங்கள் உங்கள் மனதில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்... நான்... உங்களை... நோ... என்னால் முடியாது...” என்று அவள் மறுக்க,

“ஏன்?” என்றான் ஒற்றைச் சொல்லாக.

“ஏனா... ஏன் என்றால், என் காலம் குறுகியது... என் மரணத்தின் வாசல் ஏற்கெனவே திறந்து கிடக்கிறது... இந்த நிலையில் என்னால் திருமணம் என்கிற ஒன்றை எப்படி சிந்திக்கமுடியும்... அது என்னால் முடியாது...” என்று ஒரே அடியாக மறுத்தாள் அவள்.

அவள் கூறிய மரணவாசல் என்கிற வாசகத்தைக் கேட்டதும், இவன் கடுமையிழந்தவனாக,

“உனக்கு வேண்டிய சிகிச்சை செய்தால், நீ நூறுவயது வரைக்கும் வாழலாம் மகிம்மா...” என்றான் அவன் தவிப்பாக.

“நூறு வயதா?” என்று ஆவலாகக் கேட்டவளின் முகத்தில், பின்பு வலி வந்து குடிகொண்டது.
“என்னம்மா...” என்றான் இவன் தவிப்புடன்.

“நூறு வயது என்பது எவ்வளவு நீண்ட காலம்... எனக்கு அந்த ஆசையெல்லாம் இல்லை ஆத்மன்... இன்னும் ஒரு ஐந்து வருடங்கள்...” அவள் முடிக்கவில்லை,

“ஸ்டாப் த நான்ஸன்ஸ்... சர்வமகி... நீ வாழத்தான் போகிறாய்... இன்னும் நம் பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், ஏன் பூட்டப்பிள்ளைகளையும் கண்டுதான் போகப்போகிறாய்... என்னை மீறி உன் உயிர் போகாது... போகவும் விடமாட்டேன்...” என்று அவசரமாகக் கூறியவன், விரைந்து சென்று அவள் அருகே நெருங்கி அமர்ந்தான். அவள் வலக் கரத்தைத் தன் இரு கரங்களாலும் பற்றிப் பொத்தி, அக் கரத்தை உதட்டில் பொருத்தி விடுவித்தவன்,

“ப்ளீஸ்... சே யெஸ் மகிம்மா... நான் மனதார உன்னை மணக்க விரும்புகிறேன்...” என்றான் ஆவலாக.
“இல்லை அநேகாத்மன்... நீங்கள்...”

“ஆத்மன்... கால் மி ஆத்மன்...” என்றான் அவள் விழிகளை உற்றுப் பார்த்தவாறு.
தன் உதடுகளைக் கடித்து வேதனையை அடக்க முயன்றவள், முடியாமல், விழிகளில் கண்ணீர் பொங்கி வழியத் தொடங்கியது.

‘எனக்கு மட்டும் உங்களை மணக்க ஆசையில்லையா...’ என்று மனதிற்குள் நினைத்தவள், “இல்லை ஆத்மன்... என்னால் உங்கள் வாழ்க்கை பாழாகப்போவதை நிச்சயமாக நான் விரும்பமாட்டேன்... அதற்கு நான் சம்மதிக்கவும் மாட்டேன்...” என்றாள் அவள் பிடிவாதமாக.

“லுக் சர்வமகி... எல்லோரும் எப்போதோ போகத்தான் போகிறோம்... ஒரு வேளை உனக்கு முன்பாக நான்...” என்பதற்குள், பதட்டமாகத் தன் தலையை அங்கும் இங்கும் ஆட்டிப் பேசவிடாது செய்தவள், நடுங்கும் குரலில்,

“தயவு செய்து, இனிமேல் இப்படிப் பேசாதீர்கள்...” என்றாள் பெரும் வலியுடன். அவள் வலியைக் காணப் பிடிக்காதவனாக, அவளை இழுத்து தன்னோடு அணைத்தவன்,

“இல்லை... இனி இப்படி பேசமாட்டேன்... ஆனால் நீயும் புரிந்துகொள்ள வேண்டுமில்லையா... மகிம்மா... உனக்கு வலிப்பது போலத்தானே எனக்கும் வலிக்கும்... நீயே சொல் பிழைப்பதற்கு வழி இருக்கிறபோது, அதை மறுப்பது மடத்தனம் அல்லவா...” என்றான். வேகமாக அவன் அணைப்பிலிருந்து பிரிந்தவள்,

“ஒரு வேளை நான் பிழைக்காமல் போனால்...” என்று அவன் விழிகளை நேராகப் பார்த்தவாறு கேட்க, இவன் முகம் இரத்தப்பசையற்று வெளுத்தது.

சர்வமகியை உற்றுப் பார்த்தவன்.

“ஒரு வேளை... ஒரு வேளை உனக்கு ஏதாவது நடந்தால், நான்... நான்...” என்றவன், அதற்கு மேல் பேச முடியாது தவித்தான்.

எப்படியாவது அவளை சம்மதிக்க வைக்கவேண்டுமே என்கிற ஆவேசத்தில்,

“இதோ பார் மகிம்மா என்னை விடு... உன்னுடைய சகோதரர்களின் நிலையை எண்ணிப் பார்த்தாயா? உனக்கு ஒன்று என்றால், அவர்களின் நிலை என்ன? அவர்கள் நடுத்தெருவில்தானே நிற்பார்கள். உன்னைப் போலவே தேவகி குடும்பப் பொறுப்பை எடுத்துக்கொண்டாலும், அவளுக்கென்று ஒரு வாழ்க்கை வேண்டாமா? உனக்குப் பிறகு அதைச் செய்ய யார் இருக்கிறார்கள்...” என்றபோது, அவள் உடலும் அந்த நிலையை நினைத்து நடுங்கித் தள்ளாடியது.

உடனே அவளைத் தன் மீது சாய்த்துக்கொண்டவன் அவள் தோளைச் சுற்றித் தன் கரத்தைப் போட்டுத் தன்னோடு இறுக்கியவாறு,

“ஏதாவது குடிக்க கொண்டு வரட்டுமா?” என்றான் பதைப்புடன்.

“இல்லை. ஐ ஆம் ஓக்கே...” என்று அவள் கூற, தோளிலிருந்த கரம் கொண்டு அவளைத் திருப்பித் தன்னோடு அணைத்தவன், இதயம் முழுவதும் வலியுடன், அவள் தலை மீது தன் தலையைப் பதித்தான்.

“மகிம்மா... நீ இல்... நீ...” என்று அவள் இல்லாத நிலையைப் பேச முடியாது தவித்தவன், தன் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கப் பெரும் பாடுபட்டான். ஓரளவு வெற்றியும் பெற்றவன் “அதைக் கற்பனையில் கூட நினைக்க முடியவில்லை மகிம்மா... அச்சமாக இருக்கிறது... வாழ்வில் முதன் முறையாக அச்சம் என்றால் என்ன என்பதை உணர்கிறேன்... கண்ணம்மா...” என்றவன் மெல்லியதாகச் சிரித்தான். அந்த சிரிப்பு அவனுடைய விரக்தியை அப்பட்டமாக வெளிக்காட்டியது.

“பட்... ஐ வில் பிராமிஸ் யு... உன்னைப் போல, உன் சகோதரர்களைக் காக்க என்னால் முடியும். உன் சகோதரர்களை என் சகோதரர்களாக முன்னுக்குக் கொண்டு வருவேன். உன் தந்தைக்கும் வாக்குக் கொடுத்திருக்கிறேன். தயவு செய்து மறுக்காதே... பிரதீபன் உனக்காத்தான் திருடினான். ஆனாலும் திருட்டு திருட்டுத்தானே. அவனை நல்வழிப் படுத்திக் கொண்டு வர என்னால் முடியும் மகி. அவன் பிறப்பால் நல்லவன், சொல்லப்போனால் என்னை விட அவன் நல்லவன் மகிம்மா...” என்று வலியுடன் கூறியவன்,

“தயவு செய்து என் வேண்டுகோளை ஏற்றுக்கொள்...” என்றான் ஏக்கத்துடன். சர்வமகி அநேகாத்மனைப் பார்த்தாள்.

“ஆத்மன்... எனக்குப் பிறகு என் சகோதரர்களை, தேவகி

பார்த்துக்கொள்வாள்... அவளுக்குத் துனையாக மாதவி இருக்கிறாள். என் சகோதரர்களை வைத்து, உங்கள் வாழ்வை சீரழிக்க நான் தயாராக இல்லை...” என்றாள் அவள் அதே உறுதியுடன்.

“டாமிட்... என் வாழ்க்கை சீரழியும் என்று யார் சொன்னார்கள். நீ என் அருகில் இல்லையென்றால்தான் என் வாழ்க்கை சீரழியும்...” என்றான் அவன் கோபமாக.

“உங்களுக்குப் புரியவில்லை ஆத்மன்... என்னை மணமுடித்தால் உங்களுக்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறது? நோயாளி மனைவியைக் கட்டிக்கொண்டான் என்கிற பெயர்தான் உங்களுக்குக் கிடைக்கும்... அது மட்டுமல்ல, உங்கள் தந்தையைக் கொன்றவரின் மகளை மணம் முடித்தீர்கள் என்று தெரிந்தால், எத்தனை பெரிய அவமானம்... உங்களுக்கு அவமானம் வர நான் காரணமாக இருக்கமாட்டேன் ஆத்மன்” என்றாள் சர்வமகி தவிப்புடன்.

“எனக்கு அதைப்பற்றிய வருத்தம் கிடையாது சர்வமகி. நான் யாரைப் பற்றியும் கவலைப்படப் போவதில்லை. நீ என் அருகில் இருக்கவேண்டும்... அது மட்டும்தான் என் வேண்டுதல். இதோ பார்...” என்றவன் அவளுடைய முகத்தைத் தன் கரத்தால் பற்றித் தூக்கினான்.

“எனக்கு உன் மீது கோபம் இருந்தது நிஜம். உன் தந்தையால் என் வாழ்க்கைப் பாதை மாறிவிட்டது என்கிற ஆத்திரம் இருந்தது உண்மை. உன் தம்பியால் என் நகை பறிபோய்விட்டதே என்று உங்கள் மீது கொலைவெறி கொண்டதும் உண்மை. ஆனால், நீ... ஆபத்தில் இருக்கிறாய் என்பதை அறிந்ததும், இந்தக் கோபம், ஆத்திரம் எல்லாமே என்னை விட்டுப் போய்விட்டது... இப்போது என் சிந்தனை எண்ணம் முழுவதும், நீ... நீ மட்டும்தான். உன் ஆரோக்கியம் மட்டும்தான் என் குறிக்கோள். அதை மீறி எதையும் நான் எண்ணி வருந்தப் போவதில்லை...” என்று அவன் கூறியும் அவள் முகம் தெளியவில்லை.

“இதோ பார் மகி... உன் தம்பி உனக்காகத்தான் திருடினான் என்பதை அறிந்ததும் நான் கோபப்பட்டேன்தான். ஆனால், அவன் திருடியதற்கான காரணம் தெரிந்ததும், அவன் உன்மீது வைத்திருந்த பாசத்தின் பரிமானத்தின் அளவுதான் எனக்குத் தெரிகிறது... அவன் செய்ததற்கான காரணத்தை அறிந்த போது என் கோபமே போய்விட்டது.

இதோ பார்... நான் கோடிக்கணக்கான பணத்தில் புரண்டுகொண்டிருக்கிறேன்... அதைப் பயனுள்ளதாகச் செலவளிப்பதில்

எனக்கு எந்தத் தடையும் கிடையாது. உன் சகோதரர்களுக்காகவாவது அவர்களுடைய வளமான எதிர்காலத்திற்காகவாவது, நீ என்னை மணக்கச் சம்மதிக்க வேண்டும்... டெல்மி யெஸ்...” என்றான்

.

சர்வமகியோ, அவனை ஒரு கணம் வெறித்துப் பார்த்தாள். பின் அவனை விட்டு விலகியவள், சற்றுத் தள்ளி நின்று கொஞ்ச நேரம் அவனை விழி மூடாது பர்த்தாள்.

‘என்னைப் பற்றி என்ன நினைத்தான்... பணம் என்றதும், மாறுவேன் என்று எண்ணினானா... அவ்வளவுதானா இவன் என்னைப் புரிந்துகொண்டது?’ மனம் வலிக்க, வாசல் புறம் சென்று கதவைத் திறந்து அநேகாத்மனைப் பார்த்தாள்.

“நீங்கள் என்ன சொன்னாலும் நான் மாறப்போவதில்லை ஆத்மன். நான் முடிந்துபோன அத்தியாயம். கமா போட யோசிக்காதீர்கள்...” என்றாள் அவள் உறுதியுடன். ஒருகணம் அவளை வெறித்துப் பார்த்தவன், வேகமாக அவளை நெருங்கி, அவள் திறந்து வைத்த கதவை அடித்துச் சாற்றினான்.

“அத்தனை சுலபத்தில் என்னை வெளியேற்ற முடியாது சர்வமகி... நான் இன்னும் முடிக்கவில்லை.” என்றவன் அழுந்த சர்வமகியைப் பார்த்தான்.

“அதைக் கேட்க நான் தயாராக இல்லை ஆத்மன்... என் வாயால் வெளியே போ என்று உங்களிடம் கூற முடியாது... நீங்களாகவே...” என்றவள் மீண்டும் கதவைத் திறக்க,

எதைக் கூறினாலும், சர்வமகி தன்னை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதைப் புரிந்துகொண்ட அநேகாத்மன், திறந்த கதவை மீண்டும் அடித்துச் சாற்ற, அதற்கு மேல், அவனுடன் தர்க்கம்புரிய முடியாமல், சர்வமகி உள்ளே திரும்பிச் செல்லத் தொடங்க, அவள் திரும்பிச் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்த அநேகாத்மன், கடைசியாகத் தன் கையில் வைத்திருந்த ட்ரம்ப் கார்டை அவளுக்கு முன்னால் போட்டான்.

கடைசியா அவன் கூறியதைக் கேட்டதும் பிரேக் போட்டதுபோல அப்படியே நிற்வள் அதிர்ச்சியுடன் திரும்பி அநேகாத்மனைப் பார்த்தாள்.

தொடரும...

நிலவு 34

அவளை எப்படியாவது சம்மதிக்கவைக்கவேண்டும் என்கிற வெறி, அநேகாத்மனுக்கு எழ, உதட்டிலே மெல்லிய நகை தோன்ற, அதைக் கூறினான்.

“உன் அப்பா இறந்து 3 வருஷம் ஆகிவிட்டதல்லவா?| என்று அவன் வியந்த குரலில் கேட்க, உள்ளே செல்லத் தொடங்கியவள், தடைபோட்டதுபோல அப்படியே நின்றாள். அதிர்ச்சியும், கோபமும் போட்டிபோடத் திரும்பிப் பார்த்தாள் சர்வமகி.

அழுத்தமான நடையுடன் சர்வமகியை நெருங்கியவன்,

“இந்த மூன்று வருடத்தில், உன்னுடைய தந்தையை நிரபராதி என்று நிருபிக்க என்ன முயற்சி செய்தாய் மகி...” என்றவனின் குரலில் அதீத கிண்டல் வழிய, சர்வமகி அடிபட்ட பாவனையுடன் அநேகாத்மனை ஏறிட்டாள்.

இந்த மூன்று வருடத்தில் தந்தையை நிரபராதியென்று உலகுக்கு அறிவிக்க என்ன முயற்சி செய்தாள்? ஒன்றுமேயில்லையே... அவளால் ஒரு அடிகூட அதற்காக எடுத்து வைக்க முடியவில்லையே... எப்படி முயற்சிப்பாள்... அதற்குரிய பொருளாதார வசதிக்கு எங்கே போவாள். வீடு விற்று வந்த பணத்தில் கடனெல்லாம் கட்டி முடிய, அவள் கைக்கு வந்தது வெறும் இருபத்தைந்தாயிரம் மட்டும்தானே. அதைக் கொண்டு, தந்தைக்காகப் போராடினால், பின்னால், அவளை எதிர்பார்த்திருக்கும் சகோதரர்களின் நிலை? பிறகு பார்த்துக்கொள்ளலாம், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று வருடங்கள் ஓடினதுதானே மிச்சம். அவளால் தந்தைக்கு ஆதரவாகத் தன் சுண்டுவிரலைக் கூட அசைக்கமுடியவில்லையே. தவிப்புடன் அநேகாத்மனை ஏறிட, அந்த வலியைப் புரிந்துகொண்டாலும், தன் முகத்தில் எவ்வித இளக்கத்தையும் அவன் காட்டவில்லை.

“ஏன் மகிம்மா... உன் தந்தை குற்றமற்றவர் என்பதை நிருபிக்க இந்த மூன்றுவருடங்களும் போதவில்லையா என்ன?” என்று கேட்டதுதான் தாமதம், சர்வமகியின் கண்களில் கண்ணீர் முனுக் என்று எட்டிப்பார்த்தது.

அதைக் கண்டதும், விரைந்து சென்ற அவளை அணைத்து ஆறுதல் படுத்தத் துடித்த மனதைச் சிரமப்பட்டு அடக்கியவன்,

“என்னம்மா... பதில் தெரியவில்லையா? இல்லை நான் கூறுவது புரியவில்லையா...” என்றவன், அவளை இன்னும் நெருங்கினான்.

“உன் தந்தை நிரபராதியென்று நிருபிப்பதாக அன்று சவால்விட்டாயே, அதை எப்படி நிருபிக்கப்போகிறாய்?” என்றான் அவன் மீண்டும். இப்போதும் சர்வமகி எதுவும் பேசாமல் அவனையே வெறித்துப் பார்தாள். அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்தவன்,

“நேரடியாகவே விஷயத்திற்கு வரட்டுமா? உன் தந்தையை நான் நிரபராதி என்று நிருபிக்கிறேன்...” என்று அவன் தாமதிக்க, தன் காதுகாளை நம்பமுடியாதவளாகத் திகைப்புடன் அநேகாத்மனைப் பார்த்தாள்.

“எ... என்ன சொன்னீர்கள்...” என்றாள் இன்னும் நம்பமுடியாதவளாக.

சர்வமகியை நெருங்கியவன், அவளைக் கனிவுடன் பார்த்தான். அவள் இடையில் தன் கரம் கொடுத்துத் தன்னோடு நெருக்கியவன்,

“உன் தந்தை குற்றமற்றவர் என்று நிருபிக்க என்னால், என்னால் மட்டும்தான் முடியும்... ஐ வில் ஹெல்ப் யு...” என்றான் அவன் காதுகளில, அவளுடைய அந்த சுகந்தமான மணத்தை அவள் அறியாவண்ணம் ஆழ இழுத்துத் தன்னுள் நிறப்பித் தன்னைத் தொலைத்தவனாக, அவள் காது மடலைத் தன் மூக்கால் வருடினான். அந்த மென்மையில் புதைந்து புதைந்து கலந்திட வேண்டும் என்று உடலும், உள்ளமும் உருகின.

தொலைந்த மூன்று வருடங்களை எண்ணி வருந்தியவனாக, இனியும் அவளை விட்டுப் பிரிய முடியாது என்பதைப் புரிந்தவனாக,

“மகி... ஐ ப்ராமிஸ் யு... உன் அப்பா எந்தத் தவறும் செய்யவில்லை என்பதை நான் நிருபிக்கிறேன்...” என்றன், தன் நாசியால், அவள் கன்னத்தை வருடியவாறு, அவள் மூக்கோடு மூக்கு உரசி நின்றான்.

“எ.... எப்படி நிருபிப்பீர்கள்...” என்றாள் சர்வமகி வியப்புடன். மெல்லியதாக நகைத்தவன்.

“உன் தந்தைக்கு எதிராக இருக்கக்கூடிய அத்தனை தடையங்களையும் அழிப்பது அத்தனை சிரமமா என்ன?” என்றான் தன் ஒற்றைப் புருவத்தை மேலேற்றி.

“நோ...” என்றவாறு அவனைத் தள்ளி விட்டுப் பிரிந்தவள். “இல்லை ஆத்மன்... இதற்கு நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். என் தந்தையை எந்த ஆதாரங்களை வைத்துக் குற்றம் செய்தவர் என்று உறுதிசெய்தார்களோ,

அதே ஆதாரத்தை வைத்து, அவர் குற்றமற்றவர் என்று நிருபிக்கவேண்டும். அவரைக் குற்றவாளியாக்கிய ஆதாரங்களை அழித்து அவரை நிரபராதியாக்கினால், அது என் தந்தை குற்றம் செய்தவர் என்பதை ஒப்புக்கொண்டதற்கு சமானம்... நான் அதற்கு சம்மதிக்கமாட்டேன்...” என்றாள் சர்வமகி உறுதியாக.

“ஓக்கே... ஓக்கே மகிம்மா... அஸ் யு விஷ்... அதே ஆதாரத்தை வைத்து உனக்காக... நான் இந்தக் கேசை திரும்ப எடுத்து நடத்துகிறேன். நானே அனைத்து ஆதாரங்களையும், திரட்டி உன் தந்தைக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டை உடைத்தெறிகிறேன். உன் தந்தை நிரபராதி என்று உலகுக்கு அறிவிக்கிறேன்...”
என்று அவன் உறுதியுடன் கூற, சர்வமகி ஆவலும், மகிழ்ச்சியுமாக அநேகாத்மனைப் பார்த்தாள். பின் அவள் முகம் சோர,

“எப்படி... நீங்கள்தானே என் தந்தைக்கு எதிராக வாதாடினீர்கள்... இப்போது, அவருக்கு ஆதரவாக வாதாடினால், ஏற்றுக்கொள்வார்களா?” என்றாள் சோர்வுடன்.

அது என் பிரச்சனை மகி... உனக்காக, நான் எந்த எல்லைக்கும் போக தயார்... அதற்கு நீ...” என்று தாமதித்தவன்,

“என்னைத் திருமணம் முடிக்க வேண்டும்?” என்றான் அநேகாத்மன்.

அப்போதான் சர்வமகி விழித்துக்கொண்டாள். தந்தையைக் காட்டி அவளை மடக்க எண்ணி விட்டான். அவள் எப்படி சம்மதிப்பாள்... ஆனால் தந்தையின் பெயர்... எந்தத் தப்பும் செய்யாது கொலைக்குற்றம் சாட்டப்பட்ட அவரின் நிலை. அவருடைய களங்கம் துடைத்தால்தானே, அவளுடைய சகோதரர்களுக்கும் நல்வாழ்வு கிடைக்கும். என்ன செய்யப்போகிறாள். தந்தையை குற்றவாளியல்ல என்பதை நிருபிப்பதற்காக, அநேகாத்மனை பலிகடாவாக்கப்போகிறாளா. இல்லை, தந்தையின் குற்றம் அப்படியே இருக்கட்டும் என்று அநேகாத்மனின் நல்வாழ்விற்காக விலகப்போகிறாளா...? மீண்டும் மண்டையில் வண்டு குடையத் தொடங்க தவித்துப்போனாள் சர்வமகி.

கலக்கத்டன் அநேகாத்மனைப் பார்க்க, அந்தப் பார்வையை சந்திக்கமுடியாமல், இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டான் அநேகாத்மன். அவளை அப்படி ஒரு இக்கட்டில் நிறுத்திவிட்டோமே என்று மனம் அடித்துக்கொண்டது. ஆனால், அப்படியே அவன் விட்டுவிட்டால், சர்வமகியைத் தன்னவளாக்க முடியாதே. மருந்து

கசக்கும் என்பதற்காகக் குடிக்காமல் இருக்கமுடியுமா?

அவள் கலங்குகிறாள் என்பதற்காக அவனால் தள்ளித்தான் நிற்கமுடியுமா? அதுவும் இத்தகைய நிலையில், ஒரு கணம் கூட அவனால் பிரிந்திருக்க முடியவில்லையே... எப்படி அவளை விட்டு நிரந்தரமாகப் பிரிவான். தன் அணைப்பை இறுக்கியவன்,

"ஜெஸ்ட் சே யெஸ்... ஐ வில் டேக் கெயர் ஒஃப் எவ்ரிதிங்... உன் சகோதரர்களையும் என் சகோதரர்களாகக் காப்பேன்... உன் தந்தையை நான் நிரபராதி என்று அறியச் செய்வேன்... ஆம் என்கிற ஒரு வார்த்தையை மட்டும் கூறு..." என்றவனின் தலை அவளது தலையில் பதியத் தன், வழிகளை மூடினான்,

"ஐ ஆம் சாரிப்பா... என் மகி எனக்கு வேண்டும். எனக்கே எனக்காக வேண்டும்... அவள் தந்தையை நிரபராதியாக்கினால்தான் அவள் எனக்குக் கிடைப்பாள் என்றால், அவருக்கு எதிராக இருக்கக் கூடிய அனைத்து, ஆவனங்களையும் அழிப்பேன். இதற்கு மகி சம்மதிக்கமாட்டாள்தான்... ஆனால், எனக்கு வேறு வழியில்லை. அவளுக்குத் தெரியாமலே, அத்தனையையும் அழித்து, அவள் தந்தையை நிரபராதி என்று இந்த உலகை நம்பவைப்பேன்... ஆனால் அதை அழித்தால், உங்கள் மரணத்திற்குக் காரணமான குற்றவாளி நிரபராதியாகிவிடுவான்... உங்கள் மரணத்திற்கான பதில் இல்லாதுபோகும்... தராசில் உங்களையும். என் மகியையும் நிறுத்தும்பொது, அவளுடைய தட்டுத்தான்பா தாழ்ந்துபோகிறது... அவளுக்காக நான் எந்த எல்லைக்கும் போவேன்பா... அதற்காக என்னை மன்னித்துவிடுங்கள்..." என்று அவன் மானசீகமாகத் தன் தந்தையிடம் மன்னிப்பு வேண்ட, அவன் மார்பிலே முகம் புதைந்திருந்தவள், அப்படியே இருந்தவாறு,

"என்னை மணந்தால், நீங்கள் இழப்பதுதான் அதிகம் ஆத்மன்..." என்றாள் கம்மிய குரலில்.

"இல்லைடா... நீ இல்லையென்றால் நான் அனைத்தும் இழந்தவனாவேன்..." என்றாள் அவளை இன்னும் இறுக அணைத்தவாறு.

"பரிதாபத்தில் எடுக்கும் முடிவு ஒருபொதும் ஜெயிப்பதில்லை..."

"பரிதாபம் என்று யார் சொன்னா... நீ எனக்கு வேண்டும். எனக்கே எனக்காக வேண்டும். என் அருகே எப்போதும் இருக்கவேண்டும்... என் மனைவியாக வேண்டும்... நீ என் மனைவி என்கிற உரிமை வேண்டும்...

உன் சார்ந்த அனைத்தும் என்னதாக இருக்கவேண்டும்... அதனால் நம் வாழ்க்கை ஒரு போதும் தோற்காது மகிம்மா...” என்றான் தன் உதட்டை அவள் உச்சந்தலையில் பொருத்தி.

அவளோ, தன் விழிகளுக்கு சற்று மேலாகத் தெரிந்த, அவனுடைய சட்டைப் பொத்தானைத் திருகியவாறு,

“இல்லை ஆத்மன்... என்னுடைய ஆயுள் மிகக் குறைவு... இன்றோ நாளையோ....” சொல்லி முடிக்கும் முன் அவளைத் தன்னிடமிருந்த பிரித்தவன்,

“டோன்ட்.. டோன்ட் சே எ வேர்ட்.... லிசின்... நீ எனக்குத்தான் மகிமா... நீ இன்னும் நூறு வருஷம் என்னோடு இருக்கப்போகிறாய்... அதை அந்தக் கடவுளால் கூட மாற்றமுடியாது...” என்றான் அனேகாதமன் வெறிகொண்டவன் போல. அவன் முகமும் கலங்கியிருந்தது.

“ஆத்மன்... பேசுவதற்கு நன்றாக இருக்கும்... ஆனால் வாழ்க்கைக்கு.... என்னால் உங்களுக்கு எந்த சுகமும் இருக்கப்போவதில்லை...” என்றாள் சர்வமகி வேகமாக.

“யார் சொன்னது... ஏன் இப்போது நீ என் கைவளைவில் இருக்கிறாயே.. இதை விட இன்பம் வேறு என்ன இருக்கமுடியம் சொல்... அதை விடு... லுக்... ஒருநாள் என்றாலும்... உன் கணவனாக, உனக்குரியவனாக நான் வாழவேண்டும்... அந்த வரத்தை நீ எனக்குத் தரமாட்டாயா?” என்றான் அநேகாத்மன்.

சர்வமகி திகைத்துப்போனாள்.

‘வரமா... வரமென்றா அவன் கேட்கிறான்... அவள் அணையும் சுடர் என்று தெரிந்தும், அவளை வரமாகக் கேட்கிறானா... அதிர்ந்துபோனாள் சர்வமகி.

“என்னால்... யோசிக்கமுடியவில்லை ஆத்மன்...” என்றாள் சர்வமகி பெரும் சோர்வுடன். அவளுக்கு உடல் சோர்வை விட, சிந்தனையால் ஏற்பட்ட சோர்வே அதிகமாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட அநேகாத்மன், அவளைத் தன்னோடு அணைத்தவாறு அங்கிருந்த இருக்கைக்கு அழைத்துச் சென்று அவளை இருத்தித் தானும் அருகே அமர்ந்தான்.

மீண்டும் அவளைத் தன் கைவளைவில் வைத்திருந்து, அவள் கரத்தைப்

பற்றி, கரத்தின் மேல்புறத்தைப் பெரும் விரலால்,
வருடிக்கொடுத்தவாறு,

“சொய்ஸ் இஸ் யுவர்ஸ் மகி... உன் தந்தை நிரபராதியாகவேண்டுமானால், நீ என்னை மணக்கவேண்டும்... உன் தந்தை குற்றவாளியாகவே கனடா வரலாற்றில் எழுதப்படவேண்டுமா, இல்லை அவர் நிரபராதி என்கிற பெயரில் மக்களின் மனதில் இடம்பிடிக்கவேண்டுமா? என்பது, நீ சொல்லும் பதிலில்தான் இருக்கிறது. நீ என்னை மணக்க சம்மதித்தால், உடனேயே அதற்கான வேலைகளை மேற்கொள்ளத் தொடங்கிவிடுவேன்...” என்றவன், அவள் முகத்தைப் பற்றி, நெற்றியில் மெல்லிய முத்தத்தைப் பதித்து,

“இப்போ நான் கிளம்புகிறேன்... நன்றாக யோசித்து உன் முடிவைச் சொல்...” என்றவாறு, அவள் கன்னத்தை வருடிக் கொடுத்துவிட்டு எழுந்தான்.

நிலவு 35

சர்வமகி நீண்ட நேரமாக யோசித்தாள். அவளுக்கு ஆத்மன் கூறியதே திரும்பத் திரும்ப மனதில் ஓடியது. அவளுக்கு ஏதாவது நடந்தால், அவளுடைய சகோதரர்களை தேவகி பார்த்துக்கொள்வாள்தான். ஆனால் அவளால் இத்தனை பெரிய சுமையைத் தாங்க முடியுமா என்கிற ஐயம் இப்போது எழுந்தது. அதுவும் பிரதீபன் செய்த காரியத்தைக் கண்டபின், அந்த எண்ணம் ஆட்டம் கண்டது. நிச்சமயாக தேவகியால் அவர்களைத் தனியாக வழிநடத்த முடியாது என்பதை அவள் தெளிவாகப் புரிந்துகொண்டாள்.

தேவகிக்கும் ஒரு வாழ்க்கை அமைந்தால், அவளை மணப்பவன், சங்கிலித்தொடராக இருக்கும் சகோதரர்களை ஏற்றுக்கொள்வாரா என்பது அடுத்த கேள்வி. அதற்காகவே தேவகி மணம் முடிக்காமல் தனித்து இருப்பாள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இத்தனை பெரிய சுமையை அவள் தலையில் கட்டிவிட்டுப் போவது எத்தனைபெரிய சுயநலம். நினைத்தபோதே அவளுடைய அடிவயிறு கலங்கியது. அநேகாதமன் நிச்சயமாக நல்ல ஒரு பாதுகாவலனாக மட்டுமன்றி, நல்ல ஒரு வழிகாட்டியாகவும் இருப்பான்.

அதுமட்டுமா அப்பாவை நிரபராதி என்று உலகுக்கு அறிவிக்க ஆவன

செய்வேன் என்றானே... எதை மறுத்தாலும், இதை அவளால் மறுக்க முடியாதே. இந்த வாய்ப்பை விட்டால், நிச்சயமாகத் தந்தை நிரபராதி என்பதை வெளி உலகுக்குக் கொண்டுவர அவளால் முடியாது. ஆனால் அதற்காக அவன் கேட்கும் விலை, அது அவனுடைய வாழ்க்கைக்கு ஊதிய சங்கல்லவா. தந்தைக்காக அநேகாத்மனை மணந்தால், அவள் உயிரோடு கலந்த அவனின் நிலை... தந்தைக்காக அநேகாத்மனை மணப்பதா, இல்லை ஆத்மனுக்காக தந்தை நிரபராதி என்பதை நிருபிக்காமல் விடுவதா? கடவுளே நான் என்ன செய்வேன்... இதில் எந்த முடிவை எடுப்பது? இரண்டு கண்களில் எந்தக் கண் வேண்டும் என்றால் எதை அவள் தேர்வுசெய்வாள்.

அவளை மணப்பதை வரமாகவல்லவா அநேகாத்மன் நினைக்கிறான். வரம் என்று கேட்பவனுக்கு என்ன சொல்லப்போகிறாள்... பெரிதும் தடுமாறிப்போனாள் சர்வமகி.

சர்வமகியின் குழப்ப நிலை அறிந்து, தேவகியும், மாதவியும், சர்வமகியிடம் பலவாறு பெசினர். வேறு வழியில்லாமல் தந்தைக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்கிற காரணமே வலுப்பெற, சர்வமகி அநேகாத்மனை மணக்கச் சம்மதித்தாள்.

செய்தி கேட்டதும் செய்த வேலையை விட்டுவிட்டு ஓடிவந்தான் அநேகாத்மன்.

கதவைத் திறந்த தேவகியைப் புறக்கணித்துவிட்டு, “மகி எங்கே...” என்றவாறு உள்ளே சென்றவன், அப்போதுதான் குளித்துவிட்டு வெளியே வந்திருந்தவளை, அவசரமாக நெருங்கித் தன்னோடு இறுக அணைத்துத் தன் உயரத்திற்குத் தூக்கியவன், பெரும் மகிழ்ச்சியுடன் சழன்று, அவளைக் கீழே விடாமலே,

“தாங்ஸ் மகிம்மா... தங்க் யு சோ மச்... நான்.. நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன் தெரியுமா? அப்படியே வான த்தில் பறப்பதுபோல... ஐ ஆம் சோ ஹாப்பி” என்றான் முகம் முழுவதும் மலர்ச்சியில் மலர. உதடுகளோ, என்றுமில்லாதவாறு புன்னகையைச் சிந்தக் கொண்டிருந்தன. சர்வமகியோ இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பது அதிர்ந்துபோயிருந்த முகத்தில் தெரிந்தது.

எங்கே விழுந்துவிடுமோ என்கிற அச்சத்தில், அவனுடைய வலுவான தோள்களைப் பற்றியவள், தன் கால்களை உதறி, இறங்க முயன்றவாறு,

“ஆத்மன்... என்ன இது... என்னைக் கீழே விடுங்கள்...” என்று

திமிறியவளின் முகம் சிவந்துபோயிருக்க, அநேகாத்மன் சிவந்த அவள் முகத்தைவிட்டுத் தன் பார்வையை விலக்க முடியாதவனாக, அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவளுடைய கன்னங்கள் இரண்டும் செம்மையைப் பூசிக்கொள்ள, நடுங்கிய உதடுகளை, முத்துப்பல்கொண்டு கடித்து அடக்க முயன்றிருந்தவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குத் தெவிட்டவில்லை.

அன்று, சில நாட்களுக்கு முன்பு, அவள் மயங்கிக்கிடந்தபோது, அவளுடைய கன்னத்தில் முத்தமிட்டான். அப்போதும் அந்த மயக்கத்திலும் கூட, இப்படித்தானே அவள் முகம் சிவந்திருந்தது...' தன் நிலை மறந்து, இடம் பொருள் ஏவல் மறந்து உலகம் மறந்திருந்தவனை, அவளுடைய கூந்தலிலிருந்து வழிந்த இரு நீர்த்துளிகள் அவன் நெற்றிப்பொட்டில் பட்டுத் தெறிக்க, திடுக்கிட்டுச் சுய நினைவுக்கு வந்தான் அந்தக் காதலன்.

மீண்டும் அந்த சிவந்த முகத்தைப் பார்க்கவேண்டும் என்கிற வெறி தோன்ற,

"எகெய்ன்..." என்றான் அவசரமாக. சர்வமகி புரியாமல் குழப்பத்துடன் அவனைப் பார்க்க,

"கொஞ்சத்துக்கு முன்னம் உன்னுடைய முகம் சிவந்திருந்தது மகிம்மா... ஐ வோன்ட் டு சீ தட் எகெய்ன்...:" என்றான் அதைப் பார்க்கும் பரபரப்பில். சத்தியமாக அவன் என்ன கேட்கிறான் என்று அவளுக்குப் புரியவேயில்லை.

"என் முகம் சிவந்ததா? என்று வியப்புடன் கெட்டவள், அப்போதுதான் தள்ளிநின்றிருந்த தேவகி 'க்ளுக்' என்று சிரிப்பதைக் கண்டதும், இவள் முறைத்தாள்.

"சாரிக்கா... என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை..." என்றாள் தேவகி இன்னும் நகைப்பை விடாமல்.

"என்னை விடச்சொல் தேவகி..." என்று சர்வமகி முறையிட.

"ஆளை விடு சாமி... நீயாச்சு உன் ஆளாச்சு... நான் கிளம்புகிறேன்... எனக்கு வேலையிருக்கிறது..." என்றவாறு வெளியேறியவளை, தன் உடல் முழுவதும் அவன் மீது அழுத்தமாகப் பதிவது கூட உணராமல் கை நீட்டி அவளைத் தடுக்க முயன்றவளாக,

“தேவகி... நில்...” என்றாள்.

அந்தோ பரிதாபம், தேவகி காற்றை விட வேகமாகப் பறந்துவிட, அவளுடைய கெஞ்சல் பயனற்றதாகப் போக, என்றும் இல்லாதவாறு அன்று என்னவோ அவனுடன் தனித்திருக்க முடியாது, இதயம் வேகமாகப் படபடக்க, அதை அடக்கும் வழி தெரியாது, தன் உதடுகளைக் கடித்தாள்.

திடீர் என்று ஏதோ ஒரு விதமாக மாறிய அவன் விழிகள் மொழியைப் புரிந்துகொண்டவளுக்கு, இவனோடு தனித்திருப்பது, பெரும் ஆபத்து என்பதை அறிந்தவளாக... கடித்த உதடுகளை விடாமலே, தன் கால்களை உதைந்தாள்.

அவனோ தன்னுடைய இறுகிய பிடியை சற்றும் இளக்கினான் இல்லை. அவளுடைய கடிபட்ட உதடுகளையே இமைக்காது பாரத்தவன்,

“அந்த உதடுகள் என்ன தப்பு செய்தன... இப்படி தண்டிக்கிறாயே மகி...” என்று அவன் கிசுகிசுப்பாகக் கேட்க, அவனை முறைக்க முயன்று முடியாமல்,

“விடுங்கள் ஆத்மன்... என்ன இது...” என்றாள் அவள் சற்றுக் கோபத்துடன். அவனோ விடாமலே, அவளுடைய முகத்தில் தன் விழிகளை நிறுத்தியிருந்தான்.

“ஆத்மன்...” என்று உதறியவாறு அவன் சட்டையை இறுக்கிப் பிடிக்க, அவனுக்கோ ஒரு சிறுமி அவன் சட்டையைப் பிடித்த உணர்வைத்தான் கொடுத்தது.

“ஆத்மன் என்னை கீழே இறக்கப்போகிறீர்களா, இல்லையா?” என்று சர்வமமி தன் கோபத்தைத் தேக்கிக் கேட்க, அவனோ, இல்லை என்பது போல தலையை ஆட்டி மறுத்தான்.

“ப்ளீஸ்... ஆத்மன்... என்னை இறக்கிவிடுங்கள்...” என்று மெதுவாக அவள் கெஞ்ச, அவளுடைய கெஞ்சலைப் பொறுக்காமல், அதற்கு மேல் அவளைச் சோதிக்க விரும்பாமல், மெதுவாக அவளை இறக்கிவிட்டான் அநேகாத்மன்.

இறக்கும்போது, அவளுடைய உடல் அங்கங்கள், அவனை உரசிச் சென்றதை, ஒரு வித போதையுடன் உணர்ந்துகொண்டவன், எங்கே தன்னை விட்டுப் பிரிந்துவிடுவாளோ என்கிற பயத்தில், மீண்டும்

அவளைத் தன் கைவளைவில் நிறுத்தியவாறு,

“நான் இத்தனை மகிழ்ச்சியாக ஒருபோதும் இருந்ததில்லை தெரியுமா? முதன் முதலாக எனக்கே எனக்கென்று ஒரு உறவு வரப்போகிறது...” என்றவனின் குரலில் கலப்படமில்லா பாசமும் காதலும் கொட்டிக் கிடக்க, சிரமப்பட்டு தன் இடையைச் சுற்றியிருந்த அவனுடைய கரத்தை விடுவித்தவள்,

“நான் உங்களுடன் சற்றுப் பேசவேண்டும்...” என்றாள் அவனுடைய விழிகளைப் பார்த்தவாறு.
அதுவரை நேரமும், சொர்க்கத்தில் இருந்தவன், ஒருவாறு பூலோகத்திற்கு இறங்கிவந்து,

“தாராளமாகப் பேசலாமே...” என்றான் முகத்தின் மலர்ச்சி சற்றும் வாடாமல்.

“முன்னறையில் இருங்கள், இப்போது வந்துவிடுகிறேன்...” என்றவள், உள்ளே சென்று கையில் சிறு பையுடன் அவனுக்கு முன்புறமாக இருந்த இருக்கையில் வந்தமர்ந்தாள்.

அநேகாத்மனின் விழிகளோ சர்வமகியின் முகத்தை விட்டு சிறிதும் அசையவில்லை. சர்வமகியோ கொஞ்ச நேரம் அமைதிகாத்தாள்.

“என்னம்மா. எதையோ சொல்லவந்துவிட்டு அமைதியாக இருக்கிறாய்?” என்றான் அவன்.

சர்வமகி தன் கரத்திலிருந்த பையை அவனை நோக்கி நீட்ட, சாய்ந்து அமர்ந்திருந்தவன், புருவத்தில் எழுந்த முடிச்சுடன் ஒற்றைக்கரம் நீட்டி அதை வாங்கி, விழிகளாலேயே என்ன இது என்கிற கேள்வியைக் கெட்டான்.

“இது... இது என் தந்தையின் டயரி...” என்றதும், அநேகாத்மன் தன் முகம் மாறாதிருக்கப் பெரிதும் சிரமப்பட்டான். ஒரு வாறு தன்னை அடக்கியவன், அந்தப் பையைத் திறந்து அந்த குறிப்பேட்டை வெளியே எடுத்தான்.

“இதில் என் தந்தை உங்கள் தந்தையைப் பார்க்க வருவதற்கு முன்பு என்ன என்ன செய்தார் என்பது பற்றி எல்லாம் எழுதப்பட்டிருக்கிறது...”

“ம்கூம்...”

“இதில் என் தந்தை “டிஎன் இன்டஸ்ட்ரி என்கிற கம்பனியின் எம் டியை ஒரு கிழமைக்கு முன்பு சந்திக்கச் சென்றிருக்கிறார்... தவிர அவர்கள் தான் என் தந்தையைச் சந்திக்கவும் விரும்பியிருக்கிறார்கள். அன்று நீங்கள் கூறும்போது டிஎன் என்கிற கம்பனியே இல்லை என்று வாதாடினீர்கள்... ஆனால் அப்பா டயரியில் டிஎன் கம்பனியைப் பற்றி எழுதியிருக்கிறார். பேர்சனல் டயரியில் பொய்யாக எழுதவேண்டிய அவசியம் கிடையாதே...

“ஓக்கே...”

“எல்லாம் டீட்டெய்லா இதில் இருக்கிறது... இதை நான் ஏன் உங்களிடம் கொடுக்கிறேன் என்றால், உண்மையாக ‘டிஎன்’ என்கிற கம்பனி இருந்ததா இல்லையா? அல்லது அப்படி ஒரு பொய்யான கம்பனியைச் சொல்லி, யாரோ ஒருவர், என் தந்தையை பணயமாக வைத்து உங்கள் தந்தையைக் கொன்றிருக்கிறாரா? அவன் தப்புவதற்காக எங்கள் தந்தையை மாட்டிவிட்டிருக்கிறானா. இதை நீங்கள் ஆராயவேண்டும்....” என்று கூற அநேகாத்மன் நம்பிக்கையில்லாமல்தான் அதைத் திறந்து பார்த்தான்.
அவள் சொல்வதுபோல, ஒரு மாதத்திற்கு முன்பே அவர் அந்த டிஎன் கம்பனி உரிமையாளரோடு; பேசியிருக்கிறார். மறுநாள் அவன் தந்தையின் கம்பனியுடன் தொடர்புகொண்டு தந்தையுடன் பேசுவதற்கு அனுமதிபெற்றிருக்கிறார்.... அதைத் தொடர்ந்து, வெவ்வேறு கம்பனியுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்...

ஏன் தந்தையின் தொழிலுக்கு எதிரான கம்பனி ஒன்று பொய்யான பெயர் ஒன்றைக் கொடுத்து, நல்லவரான மகியின் தந்தையை மாட்டியிருக்கக் கூடாது? அவர் நல்லவர் என்பதை அறிந்து தெரிந்ததால் தானே தந்தையைச் சென்று சந்திக்க அனுமதி கொடுக்கபட்டது. அப்படியானால் வாசுதேவனை ஒரு பகடைக்காயாக வைத்து யாராவது விளையாடியிருக்கிறார்களா? யார்?

சிறிய சந்தேகம் பெரிய சந்தேகமாக வலுத்தது. அவன் முகம் இறுகியது. அவன் முகம் சிரிப்பைத் தொலைத்தது. தன்னையே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்த சர்வமகியை ஏறிட்டவன்,

“முயற்சி செய்கிறேன் சர்வமகி... நீ சொல்வது போல, மீண்டும் இந்தக் கோணத்தில் முயற்சிசெய்து பார்க்கிறேன். தவறு செய்தவன் யாராக இருந்தாலும், எந்தக் கொம்பனாக இருந்தாலும், அவர்கள் தண்டனையை அனுபவித்தே தீருவார்கள்...” என்று கூற,

“அப்போ என் தந்தை என்ன தவறு செய்தார் ஆத்மன்” என்றாள் அவள் வேதனையுடன்.

“மகி...” என்றவாறு அவளை நெருங்கி அமர்ந்தவன்,

“இது வரை நான் தவறு செய்தவன் என்றே எண்ணவில்லை மகிம்மா. உன் தந்தைக்கான ஆதாரங்கள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன. ஒரு வேளை, உன் தந்தை குற்றமற்றவராக இருந்தால், நிச்சயமாக அதை வெளிக்கொண்டு வருவேன்... இது உன் மீது ஆணை...” என்றவன், அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டான்.

“அத்மன்...”

“ம்...”

“எனக்கு... எனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை... நீ;ங்கள் எல்லோரும் என்னை கம்பல்

பண்ணுவதால்தான் இந்தத் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தேன்...”

“ம்ஹ{ம்?”

“உ... உங்களுக்கும் என்னைப் பிடிக்காது...”

“நான் அப்படிச் சொல்லவில்லையே சர்வமகி...” என்றான் அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தவாறு.

“நீங்கள் சொல்லாவிட்டாலும் எனக்குத் தெரியும் அநேகாத்மன்... அதை விளங்கிக்கொள்ளாத அளவு நான் முட்டாள் அல்லவே...” என்றாள் மெல்லிய குரலில்.

“சரி... அப்படியானால் உன்னை நான் ஏன் மணக்கவேண்டும்?” என்றான் அவன் கூர்மையாக. அவனுடைய மலர்ந்த முகம், அப்படியே வடிந்து, அதில் கோபம் அமர்ந்து கொண்டது. விழிகளில் கூர்மையுடன் கூடிய, எரிச்சல் பிறந்தது.

“என் மேல் ஏற்பட்ட பரிதாபமாக இருக்கலாம்... அல்லது இரக்கமாக இருக்கலாம்” என்றவள் அவனை உற்றுப் பார்த்தாள்.

“புள்ஷிட்... பரிதாபப் படுவதாக இருந்தால் நான் சிகிச்சைக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு விலகியிருப்பேனே... இத்தனை பெரிய

பொறுப்பை நான் எடுக்கவேண்டிய அவசியம் என்ன? அதுவும் உன் தந்தையை நிரபராதியாக்குவதாக உனக்குக் கூறவேண்டிய தேவையென்ன" என்றான் அவன் சுள் என்று.

"அது... அதுதான் எனக்கும் புரியிவில்லை... எதற்காக நீங்கள் இதையெல்லாம் எனக்குச் செய்வதாகக் கூறி மணக்க விரும்புகிறீர்கள்... என்னதான் முயன்றும் என்னால் அதற்கான விளக்கத்தைக் காணமுடியவில்லை ஆத்மன்... ஒரு வேளை நீங்கள் என்னை விரும்புகிறீர்களா?" என்றாள் அவள் கூர்மையுடன். ஒரு கணம் அவளைப் பார்த்தவன், அதற்கு மேல் மறைக்க முடியாதவனாக,

"யெஸ்... டாமிட்... யெஸ் ஐ லவ் யு... கேட்டதா... நான் உன்னைக் காதலிக்கிறேன்... என் உயிருக்கும் மேலாகா... போதுமா விளக்கம்?" என்றான் அவன் தன்னை மறந்தவனாக.

சர்வமகி அதிர்ந்துபோனாள். விறுக் என்று இருக்கையை விட்டு எழுந்தவள்,

"நோ... நோ... நீங்கள் என்னை விரும்பவில்லை... நிச்சயமாக என்னை விரும்பவில்லை... இது... இது... நான் நம்பமா..." என்றவளை அவனது உதடுகள் மேலே பேச விடவில்லை.

அவளுடன் கூடவே எழுந்தவன், அவள் என்ன என்பதை உணரும் முன்பாகவே, அவள் தோள்களைப் பற்றித் தன்னை நோக்கி இழுத்து, அவளுடைய தேன் சிந்தும் இதழ்களை, வண்டாகிப்போன தன் உதடுகளால், அழுத்தமாக மூடிவிட்டிருந்தான்.

முதலில் திமிறியவள், பின் அவனுடைய இறுகிய பிடியில் விலகமுடியாது, தவித்துப் பின் துடித்து, கரைந்து மங்கிக் கிறங்கி நின்றாள் அந்தப் பேதை.

நீண்ட நேர இதழ் ஒற்றலுக்குப் பின்பு, விடுவித்தவன், விழிகள் மூடித் தன்னை மறந்திருந்தவளின் அழகில் மீண்டும் நிலை கெட்டவனாக, மறுபடியும் அவள் இதழ்களை நாடினான்.

முதலில் மென்மையாகத் தொடர்ந்த முத்தம், தன்னைப் புரிய வைப்பதற்காகத் தொடர்ந்த யுத்தம், நேரம் செல்லச் செல்ல பல நாள் உணவில்லாது தவித்தவனுக்கு அறுசுவை உணவு கிடைத்ததுபோல வேகமாகத் தொடர்ந்து, உண்டு முடித்ததும் கிடைத்த பழரசம் போல ரசித்து சுவைத்து பின் உண்ட களைப்பில் தூங்குவதுபோல அவள்

உதடுகளுடன் இளைப்பாறி நின்று அந்த மெல்லிய இதழ்களை விட்டுப் பிரிய மனமில்லாதவை போல மீண்டும் மீண்டும் இதழ்களைக் கவர முயன்றன அவனுடைய உதடுகள். நீண்ட யுத்தத்தின் பின் மெல்லிய நகையுடன் விலகியவன், அதிர்ந்து நின்றிருந்தவளின் முகத்தைத் தன் கரத்தில் ஏந்தியவாறு,

“என்னைப் புரியவைக்க இதைவிட வேறு வழி தெரியவில்லை கண்ணம்மா...” என்றான், அவள் நெற்றியில் தன் இதழ் பதித்து.

விழிகளில் கண்ணீர் தேங்கியிருக்க, அவனுடைய அப்பழுக்கில்லா அன்பில் மயங்கி நின்றவளுக்கு, நாளைய அவன் நிலையை எண்ணிக் கலக்கம் ஏற்பட்டது.

“ஆத்மன்...” என்றாள் குரல் கம்ம.

“என்னடா...” என்றான் அவளுடைய விழிகளுடன் தன் வழிகளைக் கலக்கி.

“இந்த சத்திர சிகிச்சையில் நான் பிழைப்பேனா மாட்டேனா என்று எனக்குத் தெரியாது...” என்று அவள் சொல்ல அநேகாத்மன் விறுக் என்று அவளைத் தள்ளிவிட்டுக் கோபத்துடன் எரிப்பதுபோலப் பார்த்தான். ஆனாலும் எதுவும் பேசவில்லை. அவள் மேலே சொல்லட்டும் என்பதுபோல, பான்ட் பாக்கட்டிலிருந்த சிகரட் பெட்டியை வெளியே எடுத்தவனின் கரத்தில் மெல்லிய நடுக்கம். ஒரு சிகரட்டை எடுத்து, வாயில் பொருத்தியவன், லைட்டரைத் தேட, தன்னையும் அறியாமல் அவனை நெருங்கிய சர்வமகி, அவன் வாயிலிருந்த சிகரட்டைத் தன் கரத்தில் எடுத்து, அதை மடக்கிக் கசக்கியவாறு,

“நீங்கள்... எந்தத் தவறும் செய்யாமல் தண்டனை அனுபவிப்பதை நான் விரும்பவில்லை. எனக்குப் பிறகு என்னுடைய நினைவுகள் எல்லாவற்றையும் வழித்துத் துடைத்துவிட்டுப் புதிய வாழ்விற்குள் நுழையவேண்டும்... நீங்கள்... நீங்கள் அதைச் செய்வீர்கள் அல்லவா?” என்று கேட்டவளை அவன் வெறித்துப் பார்த்தான்.

“லிசின் மகிம்மா... நான் சொல்வதைக் கவனமாகக் கேள்...” என்றவன் இன்னொரு சிகரட்டை வாயில்
பொருத்த, அதையும சர்வமகி தன் கரத்தில் எடுத்து கசக்க, அவளை ஒரு கணம் முறைத்தவன்,

“டாமிட்...” என்றவாறு ஆழ மூச்சு எடுத்து விட்டான். ‘நான் ஏற்கெனவே

இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன்... என் வாழ்வில் திருமணம் என்பது ஒரு முறைதான்... அது ஒரு நாளோ, நூறு வருடமோ... எனக்குத் தெரியாது. என்று என் தாலி உன் கழுத்தில் ஏறுகிறதோ, அன்றிலிருந்து நீ மட்டும்தான் எனக்கானவள்... அதற்குப் பிறகு என் மனைவியாக என் அருகேயிருக்க யாருக்கும் உரிமைகிடையாது...'
சொல்லிவிடலாம்தான்.... அதற்குப் பிறகு...? அவனுடைய பிடிவாதம் தெரிந்தவளாயிற்றே... இப்போது தந்தைக்காக இந்தத் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிப்பவள், அதன் பின் ஒரேயடியாக மறுத்துவிடுவாள். அதை விட, என்றவன், மீண்டும் சிகரட்டை எடுத்து வாயில் வைக்க, இப்போதும் அதைப் பறித்துக் கசக்கிய சர்வமகியை எதுவும் செய்ய இயலாதவனாகப் பார்த்தவன்,

"லிசின் மகி... நடக்காததை எண்ணி வருந்துவதில் பயனில்லை... இதை விட வேறு பேசலாமே...." என்றான்.

"இல்லை... இதற்கு எனக்கு பதில் தெரிந்தாகவேண்டும்... நீங்கள் இன்னொரு திருமணம் முடிப்பீர்கள் அல்லவா?" என்றாள் அவள் ஆவலாக.

'இன் யுவர் ட்ரீம்...' என்று மனதிற்குள் சினந்தவன், உதட்டில் புன்னகையை மலரவிட்டவாறு,

"உன் ஆசைப்படியே... 'தேவகிக்கு... நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து...' திருமணம் முடித்துவிட்டால் போச்சு..." என்றான் இடையில் சொல்லாமல் முதல் கடை வரிகளை அழுத்தமாகச் சொல்லியவாறு.

"இடையில் என்ன முணுமுணுத்தீர்கள்?" என்றாள் சர்வமகி சந்தேகமாக.

"ஒன்றுமில்லை மகிம்மா... உன்னைப் போல ஒருத்தி கிடைக்கவேண்டுமே... அதைத்தான் சொன்னேன்..."

என்றதும், சர்வமகியின் முகம் பிரகாசமாவதைக் கண்டவாறே, மீண்டும் ஒரு சிகரட்டை எடுக்க முயன்றவன், அவள் மலர்ச்சி மாறி, அங்கே சற்று அழுத்தம் பிறக்க, எடுத்ததை உள்ளே அழுத்திவிட்டு, சிகரட் பெட்டியை பான்ட் பாக்கட்டில் நுழைத்தான்.

மீண்டும் அவள் முகம் மலர,

"நன்றி ஆத்மன்..." என்றாள் நிஜமான மகிழ்வுடன். அவள் முகத்தையே பார்த்திருந்தவனுக்கு, உள்ளுக்குள் பிசைந்தது.

‘எப்படி... உன்னால் மட்டும் இத்தனை நல்லவளாக இருக்கமுடிகிறது... இந்த உலகத்தில் உன்னைப் பேல ஒருத்தி யாருக்காவது கிடைப்பாளா... உன்னை நான் எப்படி இழப்பேன்... அது என்னால் முடியுமா? அதுவும் உன்னைப் போன்ற ஒருத்தியைக் காதலித்து மணந்த பின், இன்னொரு பெண்ணின் சிந்தனைதான் எனக்கு வருமா? இதையேன் புரிந்துகொள்ளமாட்டேன் என்கிறாய்?’ என்று தன்மனதோடு பேசியவனுக்கு இதயம் கனத்துப்போனது.

“ஆத்மன் எனக்குப் பிறகு....” என்று அவள் தொடங்க,

தானாக சிகரட்டைத் தேடிச் சென்ற தன் கரத்தை அடக்கியவாறு, “ஸ்டாப் இட் சர்வமகி... திரும்பத் திரும்ப உன் முடிவு நாளைக் குறிப்பிடாதே...” என்று சீறியவனை, அவள் லட்சியம் கொள்ளாது,

“தீ என்றால் நாக்கு வெந்துவிடாது ஆத்மன்...” என்றாள் அவள். சற்று நேரம் அவளை முறைத்துப் பார்த்தவன்,

“உண்மைதான்... ஆனால் மனம் வெந்துபோகிறதே...” என்றவன், அவளை இழுத்துத் தன்னோடு இறுக அணைத்துக்கொண்டான்.

“காலம் முழுவதும்... இப்படியே, உன்னை அணைத்தவாறு, யாரும் இல்லா தனியிடத்தே, நீயும் நானுமாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது மகிம்மா...” என்றவன், ‘நீ இருக்கும் காலம்வரை, நானும் உன்கூட இருந்து, இறுதிக் காலம் வரை ஒன்றாகவே நாம் பயனிக்கவேண்டும் என்று உள்ளம் துடிக்கிறதடி...’ என்று மனதோடு கூறிக்கொண்டவனுக்கு இதயத்தில் இரத்தம் கசிந்தது. அவன் அணைப்பில் பாந்தமாக அடங்கியிருந்தவள்,

“ஆத்மன்... என் சகோதரர்களை நீங்கள் சரியான முறையில் வழி நடத்தவேண்டும்...” என்றாள் அவள். அவனோ இப்போது வேறு உலகில் பயனித்துக்கொண்டிருந்தான்.

“ம்...”

“நான் ஏற்கெனவே லை஫ப் இன்சூரன்ஸ் செய்திருக்கிறேன். அந்தப் பணம் வரும்... அதை அவர்களுக்கு முறையாக நீங்கள் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும், அபிதனை நல்ல ஒரு குடும்பத்திடம் வளரப்பதற்கு கொடுத்துவிடுங்கள்... அவன்... அவன் உங்கள் கண்காணிப்பில் இருந்தால் இன்னும் நல்லது...” என்றவள் உதட்டைக் கடித்தாள்.

மீண்டும் அவளைத் தன்னோடு இறுக அணைத்து விடுவித்தவன்,

“சர்வமகி... எப்போது உன் சகோதரர்கள் என் பொறுப்பு என்று நான் சொன்னேனோ, அன்றிலிருந்து அவர்களின் நல்லது, தீயது எல்லாவற்றிலும் எனக்குப் பங்கிருக்கிறது... அவர்கள் உனக்கு எப்படியோ, அப்படித்தான் எனக்கும். அதனால்... நீ தேவையற்றதை எண்ணி வருந்தாமல், இனி நடக்க இருப்பது நல்லதாக இருக்கவேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக்கொள். அது போதும் எனக்கு...” என்றான் அவன் அழுத்தமாக.

கொஞ்ச நேரம் தலையைக் குனிந்திருந்தவள், மீண்டும் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.
அவனிடம் அதை எப்படி சொல்வது, எப்படி ஆரம்பிப்பது என்றே அவளுக்குத் தெரியவில்லை.
“இன்னும் என்ன சர்வமகி...”

“இல்லை... திருமணம் முடித்த பிறகு நம்முடைய வாழ்க்கை எப்படி...” என்றவள் சற்றுத் தடுமாறினாள்.
அவள் எங்கே வருகிறாள் என்பதைப் புரிந்துகொண்டவன்,

“இப்போது என்னுடைய எண்ணம் எல்லாம் உன்னுடைய சிகிச்சையில்தான் இருக்கிறது சர்வமகி. அதைத் தாண்டி எதையும் சிந்திக்கும் நிலையில் நான் இல்லை. அதனால் பயப்படாமல் நம் திருமணத்திற்குத் தயாராகு...” என்று அவன் கூற நிம்மதியுடன் தலையாட்டினாள் சர்வமகி.

தொடரும்...

நிலவு 36

உடனேயே அநேகாத்மன் செயற்பட்டான். தாமதித்தால், மீண்டும் வேதாளம் முருங்கையில் ஏறிவிடுமோ என்கிற பயத்தால், திருமணத்தை மிக எளிமையாக அதுவும் மிக விரைவாக முடித்து சர்வமகியைத் தன் மனைவியாக்கிக்கொண்டான்.

அழகிய இளஞ்சிவப்பு சேலையில், பொன் நிறத்தால், கொடிவேலை செய்த காஞ்சிபுரப் பட்டும், அதற்குப் பொருத்தமாக மிதமான ஒப்பனையுடனும், எளிமையான நகைகள் அணிந்து வந்தவளின் அழகைக் காணக் கண் கோடி வேண்டும். அநேகாத்மனால் அவன்

விழிகளையே மூடமுடியவில்லை. பன்மடங்காக அதிகரித்திருந்த அவள் அழகைக் காணக் காண அவனுக்குத் தெவிட்டவில்லை.

கோவிலில் வைத்துத் மாங்கல்யத்தை அணிவிக்குமாறு ஐயர் வாழ்த்திக் கொடுக்க, மனம் நிறைய மகிழ்வுடனும், நம்பிக்கையுடனும், இவள் என்னவள் என்கிற பெருமையுடனும் அவள் சங்குக் கழுத்தில் மங்கலநாணை அணிவித்தான் அநேகாத்மன். அவனையும் அறியாமல், அவன் விரல்கள், அவளுடைய கழுத்தை வருடிச் செல்ல, செங்கொழுந்தாகிப்போனாள் ஆத்மனின் மனையாள்.

அந்த நாணச் சிவப்பில் மீண்டும் குப்புற விழுந்தான் அந்த கம்பீர ஆண்மகன். மீண்டும் அந்த சிவந்த முகத்தைப் பார்க்கவேண்டும் என்கிற வெறி தோன்றியது. அவளின் அந்த முகச் சிவப்பே, இவனின் கம்பீரத்தை அதிகரிக்க, அவளை அணைக்கும் வேகத்துடன் நெருங்கியவன், சூழ்நிலை புரிந்து, சட் என்று நின்றான்.

‘என்ன காரியம் செய்ய நினைத்தான்... அதுவும் இடம் பொருள் ஏவல் புரயாமல்.. ஓ காட்... இதுவே என்னால் தாங்கமுடியவில்லையே... உன்னுடன் தனிமையில் எப்படி இருக்கப்போகிறேன்...’ என்று புலம்பியவன், சர்வமகியின் கரத்தைப் பிடித்தவாறு, அவளுக்குப் பின்னால் நின்றிருந்த அவளுடைய சகோதரர்களைப் பார்த்து,

" லெட்ஸ் கோ... " என்று தலையசைத்துக் கூறிக்கொண்டு வெளியேற, அவனைப் பின்தொடர்ந்தனர் மற்றைய நால்வரும்.

கையோடு, திருமணத்தைப் பதிவும் செய்தவன், ஆடை மாற்றக்கூட அனுமதி கொடுக்காது, அன்றே அவளையும் அவளுடைய சகோதரர்களையும் அழைத்துக்கொண்டு மீண்டும் டொரன்டோ வந்தான்.
விமானத்தில் இருந்து இறங்கியதுமே, அவர்களை அழைத்துச் செல்ல லெமோ வந்திருந்தது. எந்தக் குலுக்கமும் இல்லாது, விமானத்தில் பறக்கும் உணர்வுடன் அநேகாத்மனின் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

அநேகாத்மனின் வீட்டைக் கண்டதும், அவர்களால் அவர்களின் கண்களையே நம்ப முடியவில்லை. திரைப்படங்களில் மட்டுமே கண்டு வியந்த காட்சிகள். வீட்டின் முன் பக்கமாக பெரிய கதவு. சுற்றிவர அமைக்கப்பட்ட சிசிடி கமரா. தொடர்ந்து அரை கிலோமீட்டர் வரை ஓடி நின்றது வாகனம். ஒரு பக்கமாக பத்திற்கும் மேற்பட்ட கார்கள் ஒவ்வொன்றும் குறைந்தது ஒரு லட்சம் டாலர்களை விழுங்கியிருக்கும்

என்பது தெரிந்தது.

“அடேங்கப்பா... எவ்வளவு பெரிய வீடு... அதுவும் டொரன்டோவில்...” என்று பிரதீபன் வியக்க, சர்வ மகி அனேகாத்மனை வியப்புடன் பார்த்தாள். அவனும் அவளைத்தான் பார்த்துக்கொண்டிருந்தான். இந்த வீடு அவளுக்கு சற்றுப் பழக்கப்பட்டதே.

கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்கு முன்பு, அநேகாத்மனால் அழைத்துவரப்பட்டாள் சுயநினைவின்றி. அவள் இந்த வீட்டிற்குள் வந்தபோது, அவளுக்கு சுயநினைவு இருக்கவில்லை. வீட்டை விட்டு வெளியேறியபோதும், அந்த வீட்டை ரசிக்கவேண்டும் என்கிற மனநிலை அவளுக்கு இருக்கவில்லை.

“ஏன்டா பிரதீபா... இத்தனை செக்கியூரிட்டி, இத்தனை கமரா... இதையெல்லாம் மீறி எப்படிடா திருடவந்தாய்?” என்று பெரும் வியப்புடன், மாதவி பிரதீபனின் காதில் கிசுகிசுக்க, பிரதீபனின் முகம் கறுத்து விழுந்தது.

தம்பியின் மனநிலையைப் புரிந்தவள்,

“சாரிடா... உன்னுடைய மனதைப் காயப்படுத்தவேண்டும் என்று கேட்கவில்லை... ஒரு கியூரியோசிட்டி அவ்வளவுதான்...” என்றாள் உண்மையாக அறியும் ஆவலுடன்.

“நான் வந்தது இந்த வீடில்லை மாதவி... இது அத்தானின் சொந்த வீடு... அவர் உழைப்பில் கட்டியது. நான் போனது அவருடைய அப்பாவின் வீட்டிற்கு. அத்தானுடைய அப்பா இறந்த பின், அங்கே பெரியளவில் செக்யூரிட்டி இருக்கவில்லை. அதனால்தான் சுலபமாக உள்ளே நுழைய முடிந்தது. என் போதாத காலம், அன்று அத்தான் அங்கேதான் தங்கியிருந்தார். இல்லை என்றால், நான் பிடிபட்டிருக்கமாட்டேன்...” என்றான் பெரிய வீரமாக.

“கிழித்தாய்... எப்படியும் அத்தான் உன்னைக் கண்டுபிடித்திருப்பார்...” என்றாள் மாதவி, தன் அத்தானின் மீதிருந்த நம்பிக்கையால்.

பிரதீபனும் அதனை மௌனமாகவே ஏற்றுக்கொண்டான். அன்று அவன் நேராக அநேகாத்மனின் திறமையைப் பார்த்தானே. நேரம் தாமதிக்காமல், இரண்டே இரண்டு கராத்தே ஸ்டெப் தான். அவனுடன் வந்த நான்கு நண்பர்களும் ஃப்ளாட். இவன் ஏதோ தெய்வாதினமாகப் பின்னால் நின்றிருந்ததால், தப்பமுடிந்தது. இல்லையென்றால், அவன்

எல்லாம் அநேகாத்மனுக்கு ஒன்றுமேயில்லை.

“என்ன பிரதீபா... கடுமையாக யோசிக்கிறாய்?” என்றான் அநேகாத்மன். அவன் பிரதீபனுடன் பேசியிருந்தாலும், அவனுடைய பார்வையென்னவோ, சர்மகியிடம்தான்.

பிரதீபனின் ஒன்றுமில்லை என்கிற சமாளிப்பைக் கூட, அவன் கேட்கவில்லை. அவனுடைய நினைவுகள் பின்னோக்கிச் சென்றிருந்தன.

அன்று அவளை முதன் முதலாகத் தன் கரத்தில் ஏந்தியவாறு அந்த வீட்டிற்குள் நுழைந்த நினைவு வந்தது. அவன் சொந்த வீட்டில், முதன் முதலாக நுழைந்த பெண், சர்வமகியே. இதுவரை காலமும், அந்த வீட்டிற்குள் அவன் எந்தப் பெண்ணையும் அழைத்து வந்ததில்லை.

அன்று அந்த நிலையிலும் வழமையாகப் பெண்களை அழைத்துச் செல்லும், கெஸ்ட் ஹவுசிற்குஅவளைத் கூட்டிச்செல்லவேண்டும் என்று அவனுக்குத் தோன்றவேயில்லை. தன் சொந்த வீட்டில், தன் சொந்தப் படுக்கையில் அவளைக் கிடத்தி, அவளைக் கவனித்துக்கொண்டான். எக்காரணம் கொண்டும். தப்பான முறையில், பிறர் தப்பாக எண்ணும் நிலையில் அவள் இருக்கக் கூடாது என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் அவன் வைத்தியரைக் கூட அழைத்திருக்கவில்லை. தனக்குத் தெரிந்த முறையில் அவளைக் கவனித்தான். இப்போது நினைக்கும்போதுதான் புரிந்தது. அப்போதே, சர்வமகி அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டிருந்தாள் என்று. அவன்தான் அப்போது அவள் தந்தைமீதிருந்த கோபத்தில் அதனை உணரவில்லை.

அனைவரும் லிமோவை விட்டு இறங்கினர். பிரதீபனின் விழிகளோ, எதையும் நம்ப முடியாது அந்த கார்களையே பார்த்துக்கொண்டிருந்தான்.

“அக்கா... அங்கே பார்... ஃபெராரி...” என்று ஏதோ காணாததைக் கண்டதுபோலக் குதித்தான்.

"டேய் அண்ணா... அங்கே பார் புது மாடல் லைட்னிங் ஜிடி... முழுக்க முழுக்க மின்சக்தி கொண்டு இயங்கும் வகனம்... அம்மாடியோ... இது த்ரீ ஹன்டரட் தெளசன்ட் டாலராவது இருக்கும் அல்லவா?" என்று கிட்டத்தட்ட கூவினான் அபிதன்.

“அபி... ஷ்... மெதுவாக...” என்று சர்வமகி கண்டிக்க,

“இட்ஸ் ஓக்கேமா...” என்று அவளை அடக்கிய அநேகாத்மன்,

“பிரதீபன் அபிதன்... உன் அக்காவுக்கு ரெஸ்ட் வேண்டும்... நாம் ஃப்ரஷப் பண்ணியபிறகு உங்களை அழைத்துச் செல்கிறேன்...” என்றான் இள நகையுடன்.

“ஃபெராரியிலா?” என்று நம்ப முடியாமல் கேட்க, அபிதனோ,

"லைட்னிங்ல போகலாம்.... " என்றான் குறுக்கே விழுந்து.

"இல்லை அபி... ஃபெராரிதான் சுப்பரா இருக்கும்... " என்றான் பிரதீபன் கோபமாக.

" உனக்கென்ன தெரியும்... லைட்னிங்தான் சுப்பரா இருக்கும் அதன் வேகம் தெரியுமா உனக்கு...?" என்றான் அபி கோபமாக.

" நோ.. அபி... ஃபெராரிதான் உள்ளே சுப்பராக இருக்கும்..." என்றான் பிரதீபன் ஆவலாக.

"உனக்கொன்றும் தெரியாது... லைட்னிங்ல இருந்தாலே கெத்துத்தான்... " என்றான் அபிதன் வேகமாக.

" ஷ்... என்ன பிரதீபன்... அவன்தான் சின்னப்பிள்ளை... அவனோடு சண்டை பிடிக்கிறாயே... " என்றாள் சர்வமகி சற்றுக் குரலை உயர்த்தி.

"போக்கா.. எப்பவும் அவனுக்குத்தான் சப்போர்ட் பண்ணு... " என்று அபிதனைப் பார்த்துப் பிரதீபன் முறைக்க,

" போடா... நீ... " என்று சகோதரியை உரசியவாறு அபிதன் பெருமையுடன் கூற,

"அடிங்... " என்று தன் நிலை மறந்து, அபிதனை அடிப்பதற்காக இரண்டடி வைத்த பிரதீபன் அப்போதுதான் தமது நிலை புரிந்தவனாக,

"ஐ ஆம் சாரி அத்தான்... இவன்தான் என்னை... எப்போதும் சீண்டிக்கொண்டிருப்பான்... " என்று அபிதனைப் பார்த்து முறைத்தவாறு கூற,

" ஓக்கே காய்ஸ்... எதுக்கு இப்போ சண்டை... உங்களுக்கென்ன, இந்த காரில் போகவேண்டும் அவ்வளவு தானே... நோ ப்ராப்ளம்... நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரில் அழைத்துச் செல்கிறேன்...

ஓக்கேவா? " என்று சமாதானம் கூற, இவர்களின் முகம் மலர்ந்தது.

" உண்மையாகவா அத்தான்... " என்று ஆவலாக அபிதன் கேட்க,

" நான் செய்யாததை சொல்வதில்லை அபிதன்... " என்று இவன் கூற, சர்வமகி அது எத்தனை பெரிய உண்மை என்பதை உணர்ந்து கொண்டாள். அதே நேரம்,

" அத்தான்... இத்தனை கார்களும் வைத்திருக்கிறீர்களே... ஏன்? " என்று ஆவலாகக் கேட்க,

"இது என்னோட கலக்ஷன்... ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு ஹொபி இருப்பதுபோல என்னுடைய பொழுதுபோக்கு புதிய கார்களை வாங்கி சேர்ப்பது. அதில் நீண்ட பயணம் போய்விட்டு வருவது. எப்போதும், ஆளில்லா தெருவில் நீண்ட பயனம் செய்வது எனக்குப் பிடிக்கும்... " என்றான் அநேகாத்மன்.

ஏனோ அநேகாத்மனுக்கு, தானும் சின்னவனாகிப்போன ஒரு உணர்வில் இளகிப்போனான். இள வயதில் தொலைத்த சொர்க்கமல்லவா, இது. யாரோடும், இப்படி அபிதன் பிரதீபன் சண்டைபிடித்ததுபோல அவன் பிடித்ததில்லை. அவனுடைய நண்பர்கள் எல்லோரும், மேல்த்தட்டத்து மக்களே. அவர்களிடம் நாகரீ கம் இருந்த அளவிற்கு இத்தகைய இயல்பான வாழ்க்கை முறை இருந்ததில்லை. ஒரு இயந்திர கதி வாழ்க்கைதான். விரல் சுண்டியதும், தங்குதடையின்றிக் கிடைக்கும் பொருட்கள். நட்பு வட்டமும் அப்படியே. தோழில் வட்டமும் அப்படியே. அவன் சொன்னதை மற்றவர்கள் கேட்கவேண்டுமே அன்றி, பிறர் சொல்வதை இவன் கேட்டதில்லை. ஆனால் இப்போதுதான் அந்த இரு சிறுவர்களுக்காகவும், அவன் மனம் இளகத் தொடங்கியது.

" வாவ்... சுப்பர் அத்தான்... உங்களிடம் வேறு கார் இருக்கிறதா? " என்று ஆவலாகக் கேட்டான் பிரதீபன்.

“கராஜில் லம்போகினியும், கொனிசெக்கும் இருக்கு பிறகு காட்டுகிறேன்... " என்றவனின் குரலில் நிச்சயமாக எந்தப் பெருமையும் இருக்கவில்லை. ஏதோ டோய் கார் என்பது போலத்தான் கூறினான். ஆனால், பிரதீபனுடையதும், அபிதனுடையதுமான முகம் வியந்து மலர்ந்து போனது.

“கெனிசெக் வைத்திருக்கிறீர்களா? லம்போகீனி எந்த மாடல்...” தன்னை மறந்து ஆண்பிள்ளைக்கே உரித்தான ஆர்வத்துடன் அபிதன் கேட்க,

மெல்லியதாக நகைத்தவன்,

“பிறகு நீயே பார்த்து புரிந்துகொள்... பட்... இப்போ உள்ளே போகலாம்... உன் அக்காவைப் பார்... எப்படிக் களைத்துவிட்டாள் என்று... நமக்கு தேவையில்லை என்றாலும், உன் அக்காவிற்கு ஓய்வு தேவை...” என்று அவன் கூறி வீட்டின் வாசலை வலது கரத்தால் காட்டினான்.

அவன் என்னதான் ஆடம்பரம் இல்லாமல் அலட்சியமாக்க கூறியிருந்தாலும், அனைவரும், அவனையே திகைப்புடன் பார்த்தனர். அவன் உயரம் என்ன என்பது தெரிந்தது... ஏணி வைத்தாலும் எட்ட முடியாத உயரத்தில் இருப்பவன் அவன். குனிந்து பார்த்தாலும், தெரியாத பள்ளத்தில் இருப்பவர்கள் அவர்கள். அவன் போய் எப்படி அவளை மணந்தான்?

தன் மனையாளின் முகத்தில் தெரிந்த வாட்டத்தைக் கண்டவனுக்கு, அவள் என்ன எண்ணுகிறாள் என்பதை உடனேயே புரிந்துகொண்டான் அநேகாத்மன்.

“இல்லைம்மா... நீ எனக்குக் கிடைத்ததுதான் நான் செய்த மிகப் பெரும் பாக்கியம்... இதோ, இந்த வீடு, இந்த கார் உனக்கு முன்னால் வெறும் தூசு...” என்றான் விழிகள் மின்ன.

அவள் நம்ப மாட்டாமல் அவனை ஏறிட, தன் வலது கரத்தை இடது மார்பில் பதித்தவன்,

“ஐ பிராமிஸ்டா... நான் இங்கே யோசிக்காததை, இங்கே உணராததை ஒரு போதும் கூறியதில்லை... இப்போது நான் கூறியது, பால் வெண்மை என்பது போன்ற மாற்றமுடியாத உண்மை... இதை இந்த சொத்துக்களை, நான் விரல் சுண்டும் விரைவில் சம்பாதித்துவிடுவேன்... ஆனால் உன்னை... எத்தனை கோடி ஆண்டுகள் தவமிருந்தாலும், பெறமுடியாத அதிசயம் நீ... உன்னோடு, இந்த ஜடப்பொருட்களை ஒப்பிடுவதே தப்புடா...” என்றான் அவள் கரத்தைப் பற்றியவாறு.

அந்தக் கரம் கொடுத்த அழுத்தம், அவன் உண்மையை பிரதிபலிக்க, அது வரை மனதில் அழுத்தியிருந்த பாரம், சிறிதாக விடுபட, மகிழ்ச்சியாகவே அவன் வீட்டை நோட்டமிடத் தொடங்கினாள்.

“அடேங்கப்பா... இது வீடா இல்லை அரண்மனையா?” என்று அதிர்ந்தாள் மாதவி. அதையே தேவகியும் பிரதிபலிக்க, இவள் உதட்டில் மெல்லிய புன்னகை வந்து தவழ்ந்தது.

அந்தப் புன்னகையைக் கண்ட அநேகாத்மன், மீண்டும் ஒருமுறை தலைகுப்பிற விழுந்தான். அந்தப் புன்னகை அவன் உயிர் வரை தீண்டிச் சென்று ஒரு சிலிர்ப்பைக் கொடுத்தது. காலம் காலமாக அந்தப் புன்னகையைப் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் என்கிற வெறி வந்தது.

'இவள் எனக்கானவள், எனக்கு மட்டுமே உரித்தானவள், இவள் முகத்தில் எப்போதும் இந்தப் புன்னகை நிலைத்து இருக்க வேண்டும். நிலைத்திருக்கும்... நிலைத்திருக்கவைப்பேன்...' என்று தனக்குள்ளேயே சபதம் செய்தவன், சர்வமகியை பின்புறமாக நெருங்கினான்.

"இந்த வீடு பிடித்திருக்கிறதா?" என்று அவள் காதில் கிசுகிசுத்தான்.

அவன் உதடுகள், அவள் காதினை வருடிச் செல்ல, சிலிர்த்தாள் சர்வ மகி. அதிர்வுடன் திரும்பிப் பார்க்க, இவன் 'என்ன' என்பதுபோலப் புருவத்தை உயர்த்தி தலையை ஆட்டிக் கேட்டான்.

அவள் ஒன்றுமில்லை என்பதுபோலத் தலையை ஆட்டினாலும், முகம் செங்கொழுந்தாகிப்போனது.
அதைக் கண்டவன், தன் விழிகளையே நம்ப முடியாதவனாக, அவள் முகத்தையே வெறித்துப் பார்த்தான்.

அவன் இது வரை இப்படி நாணிய பெண்ணைக் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. வெட்கத்தால் முகம் சிவக்க, அதனால் கூசிய விழிகள் தரை பார்க்க, கூடவே உதட்டில் மலர்ந்த அந்த மெல்லிய சிரிப்பு, அப்பப்பா... அந்த அழகை எப்படி வர்னிப்பது? அந்த அழகிற்கு உவமையாக எதைக் கூறுவது?
இவள் என் தேவதை... எனக்கே எனக்கான தேவதை என்கிற கர்வம் மீண்டும் அந்த ஆண்மகனைச் சூழ, அவனையும் அறியாமல், அவனுடைய மார்பு நிமிர்ந்து, அந்த ஆறடி நான்கங்குல உயரம், இன்னும் சற்று உயர்ந்து நின்றது. அது நல்ல மனைவியைப் பெற்ற ஒரு கணவனுக்கு வரும் கர்வம். அதற்கு நிகராக எதுவுமே அண்டமுடியாது. இன்னும் தரையையே தன் மனைவி பார்த்துக்கொண்டிருக்க, இவன் இன்னும் மயங்கிப்போனான்.

அந்த அழகை, உடனேயே ஆராதிக்க முடியாத நிலையால், அவன் முகம் இறுகிப்போனது. கைக்கு எட்டிய தூரத்தில் சுவைமிக்க கனி இருக்கிறது. அதை உண்ண வேண்டும் என்கிற பசியும், ஆவலும் கொழுந்து விட்டு எரிகிறது. ஆனால் அதை உண்ணக்கூடாது என்றால்?? யாருக்குத்தான்

கோபம் வராது...?

“சூப்பரா இருக்கிறது அத்தான் உங்கள் வீடு...” என்று ஆர்ப்பரித்தவாறு மாதவி வர, அநேகாத்மன் தன் நிலை பெற்றவனாகச் சற்றுத் தள்ளி நின்றுகொண்டான். அவன் முகத்துடன் சேர்ந்து உடலும் இறுகிப்போனது.

நிலவு 37

எதையும் நினைத்த உடன் சாதித்துப் பழகிய அநேகாத்மன், முதன் முதலாகத், தன் மனதைக் கொள்ளைகொண்டவளுக்காகத், தன்னைக் கட்டுப்படுத்தித் தள்ளி நிற்கிறான்.

என்னதான் உடலால் தள்ளி நிற்க முயன்றாலும், அவனால் உணர்வாலும், மனதாலும் அவளை எள் அளவும் தள்ளி நிற்க முடியவில்லை. அதுவும், முன்பே அவளை விட்டு அவனால் தள்ளி நிற்கமுடியவில்லை. இப்போது மனைவி என்கிற உரிமையோடு, அவன் அருகே அனுடைய வீட்டில் நினைக்கும்போதே, அங்கமெல்லாம் சிலிர்த்துக்கொண்டது.

அங்கிருக்கும் ஒவ்வொரு கணமும், அவள் சுவாசத்தை உணர்ந்து ரசிக்கவேண்டும் என்று மனம் கிடந்து தவித்தது. ஆனால் நெருங்க முடியாமல் விதி அவனைத் தடுத்தது. சிரமப் பட்டு அவளருகே செல்ல விளைந்த தன் கால்களை, நிறுத்தி, இரண்டடி தள்ளிவைத்தவன்,

“கம் இன்...” என்று அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைய முயன்றான்.

“ஸ்டாப்...” என்று கத்தினாள் தேவகி. அவள் ஏன் திடீர் என்று கத்துகிறாள் என்பதைப் புரியாமல், திகைத்தவாறு அனைவரும் அவளை ஏறிட, இப்போது தேவகியின் முகத்தில் குறும்பு மலர்ந்தது.

“ஏனத்தான் எத்தனை திரைப் படம் பார்த்திருக்கிறீர்கள்?|” என்றாள் கேள்வியாக. அநேகாத்மனோ, தலையும் புரியாமல், வாலும் புரியாமல், தேவகியை ஏறிட,

“ப்ளீஸ் சொல்லுங்கள்...” என்று கெஞ்சினாள் தேவகி. சர்வமகியும், மற்றவர்களும், குழப்பத்துடன், தேவகியையும், அநேகாத்மனையும்

திரும்பித் திரும்பிப் பார்த்தனர்.

“நான் திரைப் படங்கள் பார்த்தது கிடையாது?” என்றான் அவன் குழப்பத்துடன்.

“வட்... ஒரு திரைப்படம் கூடப் பார்த்ததில்லையா?” என்று திகைத்தாள் தேவகி. கூடவே சர்வமகியும் திகைப்புடன் பார்க்க,

“இல்லைம்மா... எனக்கு இன்ட்ரஸ்ட் இருந்ததில்லை... என்னுடைய பொழுது படிப்பதிலும், விளையாட்டிலும் வாசிப்பதிலுமே கழிந்துவிட்டது. டீவி பார்ப்பதென்றால் டொக்யுமன்ட்ரி. அதற்கும் நேரம் கிடைத்ததில்லை...” என்றான் தயக்கமாக.

“அது சரி... அக்கா... அத்தானுக்கு காதல் பாடம் நீ தான்; சொல்லிக்கொடுக்க வேண்டும் போல...” என்று தேவகி சோகமாகக் கூற, மற்றவர்களுக்கு என்னவோ, சர்வமகி உடல் முழுவதும் சிவந்து போனாள். தன்னவனைக் காணக் கண்கள் கூசித் தரையில் பார்த்து இதழ் கடித்து நின்றவளைக் கண்டதும், மீண்டும் தலைகுப்புற விழுந்துபோய்ப் பார்த்தான் அநேகாத்மன்.

அவளை அப்படியே அணைத்துத் தன்னுள்ளே புதைத்துவிடவேண்டும் என்கிற வெறி அவனுள்ளே கொழுந்துவிட்டெரிந்தது.

அவள் நாணத்தை ஒவ்வொரு கணமும், ரசித்து ருசிக்கவேண்டும் என்று அவன் துடித்தான். வெறும் பேச்சுக்கே, இப்படி நாணுகிறாளே... என் விரல் பட்டால்... நினைக்கும்போதே, கற்பனைகள் எங்கெங்கோ சிதறிச் சென்றன. அதை உடனேயே செயற்படுத்தவேண்டும் என்கிற ஆவேசமும் எழ, அவளை நெருங்க ஓரடி வைக்க முயன்றான்.

“தேவகி... என்னம்மா இது...” என்று சங்கடத்துடன் சர்வமகி கேட்க,

“அது இல்லையக்கா... திருமணம் முடித்து முதன் முதலாக, அத்தானின் வீட்டிற்கு வருகிறாய்... முதன் முதல் வரும் மனைவியை வெள்ளைக்காரர்கள் பாணியில், கைகளில் ஏந்திச் சென்றால்தானே, நன்றாக இருக்கும். அது மட்டுமில்லையக்கா... இந்த நினைவுகள்தானே எப்போதும் பசுமையாக இருக்கக்கூடியது?” என்றாள் அவள். மனதிலே, தன் சகோதரியை அநேகாத்மன், ஏந்தியிருக்கும் காட்சியைக் கண்டு கழித்தவளின் முகம் மலர்ந்தது.

அநேகாத்மனோ, நகைப்புடன் ஒற்றைப் புருவத்தைத் தூக்கி,

சர்வமகியைப் பார்த்து என்ன? தூக்கவா? என்பதுபோலக் கேட்க, அவள் மறுப்பாக, யாரும் கவனிக்காத வகையில் தலையை ஆட்ட, அவள் விழி அசைவைப் புரிந்துகொண்டவனாக,

“ஹேய்... மச்சினிச்சி... நம்முடைய காதலின் ரேஞ்சே வேறும்மா... அதைப் போகப் போகப் புரிந்துகொள்வீர்கள்... இப்போது உள்ளே வாருங்கள்...” என்று தன் மறுப்பை வேறுவிதமாகக் கூறியவன், அனைவரையும் உள்ளே அழைத்துச் சென்றான்;.

ஆனால் கவனமாக சர்வமகியை விட்டுத் தள்ளியே நின்றுகொண்டான். அவனுக்கு அவனை எண்ணியே பயமாக இருந்தது. நிச்சயமாக அவள் அருகாமை அவனை சலனப்படுத்தும் என்பது அவனுக்கு நன்றாகப் புரிந்தது. ஏதாவது ஏடாகூடமாகச் செய்யப்போய், சர்வமகியின் மனதைக் காயப்படுத்த அவன் தயாரில்லை. அதை விட, இப்படித் தள்ளி இருப்பதே மேல் என்று இடைவெளி விட்டே வந்தான்.
அவர்கள் உள்ளே நுழைந்ததும், வரிசையாக பத்திற்கும் மேற்பட்ட சீருடை அணிந்த வேலையாட்கள் நின்றிருந்தனர். அதில் ஒருவர் அவ் வேலையாட்களை மேற்பார்வை பார்ப்பவர் போலும். அவர் கோட் சூட் அணிந்திருந்தார்.

அவரை “க்ரெய்ன்” என்று ஒரு தலையசைப்பால் அவரை அருகே அழைத்தான் அநேகாத்மன்.

க்ரெய்னின் விழிகள், சர்வமகியை வியப்புடனும், சற்று ஆர்வத்துடனும் பார்க்க, இவனுக்கு புகைந்தது.
அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல், சர்வமகியை நெருங்கியவன், அவளைத் தன் அருகே இழுத்து, அவள் இடையில் தன் கரத்தைப் போட்டு தன்னோடு நெருக்கினான்.

அவனுடைய போதாத காலம், அவன் இழுத்த வேகத்தில், அவனுடைய கரம், அவள் வெற்றிடையில் தாராளமாகப் பட்டது.

சர்வமகிகூட அதை உணரவில்லை. ஆனால், அநேகாத்மனுக்கு அந்த தீண்டலே ஏதோ பெரும் தவப்பயன் பெற்றதுபோலத் தோன்றியது. அவனையும் மறந்து, அவனுடைய விரல்கள் வீணையென,, அவளுடைய இடையை மெதுவாக மீட்டத் தொடங்கின. விரல்கள் என்னவோ, வேறு கதை பேசினாலும், க்ரெய்னை அழுத்தமாகப் பார்த்த அநேகாத்மன்

“க்ரெய்ன்... ஷீ இஸ் மை வைஃப்... அத்தோடு, எனக்கும், இந்த வீட்டிற்கும்

இவர்கள்தான் இனி பாஸ்... இவர்கள் சொல்வதைக் கேட்பதுதான் உங்கள் வேலை... இதோ இவர்கள் என் மனைவியின் சகோதரர்கள், என்னுடையதும்தான்" என்று அறிமுகப் படுத்த, சர்வமகி ஒருவிதமாக அதிர்ந்தாள் என்றால், க்ரெய்ன் இன்னொரு விதமாக அதிர்ந்தான்.

ஏன் என்றால், அநேகாத்மன் திருமணம் முடித்த செய்தி இன்னும் யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை. அவன் திடீர் என்று இப்படி மனைவியென்று ஒருத்தியை அழைத்துவருவான் என்று அவர்கள் என்ன கனவா கண்டார்கள். அது தெரியாமல், அவன் மனைவியை வேறு சுவாரசியமாகப் பார்த்துவிட்டோமே என்று அவன் சங்கடப் பட,

சர்வமகியோ. இடையில் படர்ந்திருந்த அவன் கரத்தை எண்ணி அதிர்ந்தாள். அனைவருக்கும் முன்னால், அதை விலக்கமுடியாத நிலை. அவள் தவிப்புடன் அநேகாத்மனைப் பார்க்க, அவன் உதட்டிலோ குறும்புப் புன்னகை.

"என்ன?" என்பதுபோல, வழமையாக செய்வது போல, இமையை உர்த்தி தலையை ஆட்டிக் கேட்க, இவள் ஒன்றுமில்லை என்று தலையாட்டி மீண்டும் ஒரு முறை செங்கொழுந்தானாள்.

அவள் இடையில் திடீர் என்று மலர்ந்த சூட்டை உணர்ந்து, சர்வமகியை ஏறிட்டவன், மிண்டும் அதாளபாதாளத்திற்குள் விழுந்தான். இனியும் பொறுக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்டவனாக, அவளைப் பார்த்தவாறே, க்ரெயினிடம்,

"இவர்கள் ஓய்வெடுக்கவேண்டும், அதனால் அவர்களுக்குரிய அறையைக் காட்டுங்கள்... நான்... என் மனைவிக்கு எங்கள் அறையைக் காட்டுகிறேன்..." என்று கூறிவிட்டு, இடையிலிருந்த கரத்தை விலக்காமலே, அவள் முகத்தில் பதிந்த பார்வையையும் இறக்காமல், அவளை இழுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றான் அநேகாத்மன்.

அறைக்குள் நுழைந்ததும், அறைக் கதவைச் சாத்தவும் பொறுமையற்றவனாகத் தன் கரத்திலிருந்த பிரீ்ப் கேசை கட்டிலில் எறிந்தவன், சர்வமகியைத் தன் முன்னால் இழுத்து நிறுத்தினான்.

இப்போது அவள் முகத்தில் சிறு அச்சமும், தயக்கமும் தெரிந்தது. அவனோ
"சாரி மகிம்மா... ஐ கான்ட் டொலரேட் திஸ் எனி மோர்..." என்றவன், அவள் என்ன என்பதை உணர்வதற்குள்ளாகவே, அவள் இதழ்களை அழுந்த சிறைப்பிடித்திருந்தான்.

முதலில் அதிர்ந்தவள், பின்பு சற்றுத் தயங்கி, தவித்து, இளகிக் கரையும் நேரம், மெதுவாக அவளை விடுவித்தான் அநேகாத்மன்.

மீண்டும் அவள் முகம் வெட்கத்தால், சிவக்க,

“ஓ காட்... நான் எப்படி உன்னிடமிருந்து விலகியிருக்கப்போகிறேன்...” என்றவன் மீண்டும் அவள் இதழ்களை நாடினான். மீண்டும், மீண்டும்... பின் மெதுவாக அவளை விடுவித்தவன்,

“ப்ளீஸ் மகிம்மா... இனி ஒரு தரம் என் கண் முன்னாக சிரிக்காதே... என்னால்... என்னால் என்னைக் கன்ட்ரோல் பண்ண முடியவில்லை... அதுவும் நீ வெட்கப்பட்டால்... ஓ காட்...” என்றவன், அவள் முகத்தைத் தன் கரங்களில் ஏந்தியவன், அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலக்கவிட்டான்.

“மகிம்மா... உன் சிகிச்சை முடிந்து, நீ முற்றும் முழுதான ஆரோக்கியத்துடன் என்னிடம் வரும் வரைக்கும் நான் உனக்காகக் காத்திருக்க முடிவு செய்திருக்கிறேன். ஆனால்... நீ இப்படி புன்னகைக்கும் போதும், நாணப்படும் போதும், அந்த சத்தியத்தை என்னால் காப்பாற்ற முடியாமல் போய்விடுமோ என்று அச்சமாக இருக்கிறதும்மா...” என்றவனுடைய பெருவிரல், அவனுடைய உதட்டை மெதுவாக வருடிக்கொடுக்க,

அவளையும் மீறி, அவள் முகம் மீண்டும் சிவந்தது. அவள் முகச் சூட்டை உணர்ந்தவன், வியப்புடன், அவள் கழுத்தில் தன் கரத்தை வைத்துப் பார்த்தான்.

“ஏய்... நீ வெட்கப்படும்போது, உன் உடல் சுடுகிறது...” என்றான் கிசுகிசுப்புடன்.

சர்வமகியால் அதற்கு மேல் அவன் பிடியில் இருக்க முடியவில்லை. வேகமாக விலக, விலகியவளின் கரத்தைப் பற்றித் தடுத்துத் தன்னை நோக்கி இழுத்தான் அவன். இழுத்த வேகத்தில் சுழன்று, அவள் பின்புறும், அவன் முன்புறத்தோடு, மோதி வாகாகப் பொருந்திக் கொள்ள, அவனுடைய இரண்டு கரங்களும், அவள் கரங்களைப் பற்றியவாறு, வயிற்றோடு அழுத்தி நிற்க,

“ஏய்... மகி... அப்போது நம்முடைய வீட்டைப் பற்றிக் கேட்டேன்... நீ ஒன்றுமே கூறவில்லையே... இந்த வீடு, என் உழைப்பில் கட்டிய வீடு...

இங்கே உன்னைத் தவிர வேறு யாரும் இது வரை வந்ததில்லை... உனக்கு இந்த வீடு பிடித்திருக்கிறதா?" என்றான் ஆர்வமாக.

அவள் அமைதியாகத் தலை குனிந்திருக்க, அவளை விடுவித்துத் தன் புறம் திருப்பியவன், அவள் முகத்தைப் பற்றியவாறு,

"ஏய்... சொல்லு,... இந்த வீடு உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்றான் ஆவலுடன். அவனுடைய கரங்கள், அவளுடைய கூந்தலை ஒதுக்கித் தள்ளிவிட்டுக்கொண்டிருந்தாலும், விழிகளின் பயனம் என்னவோ, அவள் முகத்திலும், இதழ்களிலுமேதான் சென்றுகொண்டிருந்தன்.

" ஹேய்... சொல்லு... உனக்குப் பிடித்திருக்கிறதா? " என்றான் தன் தன் விழிகளை அவள் விழிகளுடன் கலந்தவாறு. ஒரு கணம் அவன் விழிகளைப் பார்த்தவளின் முகம் அழகாக மலர்ந்தது. பின் அவன் மார்பைப் பார்த்தவாறு,

" ஆத்மன்... "
'
" ம்... "

"கட்டாயம் சொல்லவேண்டுமா? "

" இல்லை என்றால், நீ இந்த அறையை விட்டு போகமுடியாது... "
என்றான் அந்தக் கள்வன் பிடிவாதமாக.
மேல்லியதாக நகைத்தவள், பின் அவன் முகத்தைப் பார்த்தாள். அப்பழுக்கில்லா அன்பைத் தேக்கி நின்ற அவன் விழிகளை ஆவலுடன் பார்த்தவள்,

"நீங்கள்... எங்கு இருந்தாலும், அந்த வீடு எனக்குப் பிடிக்கும்..." என்று மனம் உணர்ந்து சொன்னவள், தன் நாயகனைப் பார்க்க வெட்கம் கொண்டவளாக,

"நா... நான் கீழே போகிறேன்..." என்று கூறிவிட்டு, வேகமாக அவன் பிடியிலிருந்து விலகி, மான் எனத் துள்ளி ஓடியவளை

"ஹேய்... என்ன சொன்னாய் நீ..." என்று நம்பமாட்டாதவனாகக் கேட்க,

"ம்... சொன்னேன் சுரக்காய்க்கு உப்பில்லை என்று..." என்று கூறியவள், அதற்கு மேல் நிற்க முடியாதவளாக, கிளுகிளுத்து சிரித்தபடி, ஓட, மனம் நிறைந்த மகிழ்வுடனும், சிரிப்புடனும், குதூகலத்துடனும், நம்ப மாட்டா தன்மையுடனும், அவள் கிளுகிளுத்துச் சிரித்ததைப் பார்க்கவேண்டும்

என்கிற வெறியுடன், அவளைப் பின் தொடர்ந்து ஓட முயன்றவன்,

“ஏய்... நில்லு... பார்த்தும்மா...” என்று கத்தி அவளை நிறுத்த முயன்றான். ஆனால் அவனுடைய சத்தம் காற்றோடு கலைந்ததுதான் மிச்சம்.

ஒரு கணம், தன் விழிகளை அழுந்த மூடியவனின் மனக்கண்ணில், நாணம் கொண்ட சர்வமகியே வலம் வந்தான்.

“ஓ மகிம்மா... நான் எப்படி உன்னை விட்டுத் தள்ளி இருக்கப்போகிறேனோ தெரியாது...” என்று முணுமுணுத்தவன், குளிர் நீரில் குளிக்க குளியலறைக்குள் நுழைந்தான்.

தொடரும்...

நிலவு 38

எல்லோரும் சற்று ஓய்வெடுத்த பின், பிரதீபனுக்கு கூறியதை நிறைவேற்றுபவனாக, அனைவரையும் அழைத்துக்கொண்டு, லம்போவில் வெளியே சென்றான்.

சர்வமகியோ, களைப்பாக இருப்பதாகக் கூறி மறுத்துவிட, சகோதரிக்கு உதவியாக இருப்பதாகக் கூறி, தேவகியும் மறுத்து விட்டாள். அதனால், மற்றைய மூவரையும் அழைத்துக்கொண்டு, ஊர் சுற்ற அழைத்துச் சென்றான் அநேகாத்மன்.

திரும்பி வரும்பொது, ஒவ்வொருவரும், பல பாசல்களுடன் உள்ளே நுழைந்தனர்.

சர்வமகி திகைப்புடன், அநேகாத்மனைப் பார்க்க, அவனோ அவளை நெருங்கினான்.

தன் சட்டைப்பையிலிருந்து, ஒரு சிறிய நகைப்பெட்டியை வெளியே எடுத்தவன, அதைத் திறந்தான். அதில் பிளாட்டினத்தில், வைரம் பதித்த ஒரு மொதிரம் விழிகளை சிமிட்டிச் சிமிட்டி அவளைப் பார்க்க, திகைத்தாள் சர்வமகி.

“மகிம்மா... திசிஸ ஃபோர் யு...” என்றவாறு அந்த மோதிரத்தைக் கரத்தில் எடுத்தவன், அதனை, அவள் இடது கர மோதிர விரலில் அணிவித்தான். அந்த விரல்களைப் பற்றித் தன் உதட்டில் பொருத்தியவன், “வெல் கம் டு மை லைஃப்...” என்றான். சர்வமகிக்கு மூச்சை அடைத்தது.

எதுவும் கூறத் தெரியாமல் திகைத்துப்போய் அவள் நிற்க, அவள் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தவன்,

“ஹேய் பிடித்திருக்கிறதா?” என்று பெரும் ஆவலாகக் கேட்டான் அநேகாத்மன். அவளோ, அந்த மோதிரத்தின் அழகில் ஒரு கணம் மயங்கினாலும்,

“இது... இது அதிக விலையாக இருக்குமே... எதற்கு இந்த தேவையற்ற செலவு” என்றாள் அவனைக் கண்டிப்பது போல.

அதைக் கேட்டதும், அநேகாத்மனுக்கு சிரிப்பதா அழுவதா என்றுதான் தெரியவில்லை. வெறும் ஐம்பதாயிரம் டாலர் வைரம் இதைத் தேவையற்ற செலவு என்கிறாளே, என்று சற்றுப் புரியாமல்தான் பார்த்தான்.

சர்வமகி எப்போதும் தேவையற்ற செலவுக்கு ஆதரவு கொடுத்ததில்லை. பிரதீபன் தேவையில்லாமல் பணத்தை விரயமாக்கினால், கண்டிப்பாள்.

“இப்போது எதற்கு இந்த செலவு” என்பாள். அதே நினைவில், தன் கணவனையும் கண்டித்தாள்.

ஆனால் அநேகாத்மனுக்கு இது புதிது. அவன் பிறந்து வளர்ந்ததில் இருந்து, தாயைத் தவிர யாரும் அவனைக் கண்டித்ததில்லை. அவனுக்கு எது பிடிக்குதோ, அதையே செய்து பழக்கப்பட்டவன். அதுவும் அவன் அன்னை பானுமதி அவனுடைய இள வயதில் இறந்த பின், அவன் வைத்ததே சட்டம்.

அப்படிப் பட்டவனுக்கு கண்டிப்புக் குரலில் சர்வமகி கூற, முதலில் திகைத்தவன், பின் மலர்ந்தான். அவனை அவள் கண்டிக்கிறாள் என்றால், அவனை அவள் ஏற்றுக்கொண்டாள் என்றுதானே அர்த்தம். ஆனால், அவனுடைய நிலையில், பணத்தைப் பற்றி இன்னும் பத்து ஜென்மத்திற்கு யாரும் கவலைப்படத்தேவையில்லையே...

“இல்லைம்மா... உனக்கு முதன் முதலாக வாங்கிய பொருள், பெறுமதி மிக்கதாக இருக்கவேண்டாமா?” என்று தன் நிலை மறந்து சமாதானப் படுத்தினான் கணவன்.

“அதற்காக... இப்படியா காசைக் கரியாக்குவார்கள்...” என்றாள் அவள் வேதனையுடன்.

“சர்வமகி... வட் இஸ் திஸ்... டோன்ட் வொரி எபவுட் த டாம் மணி... இன்றிலிருந்து நீயோ, இல்லை உன் சகோதரர்களோ, இந்தப் பணம் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை... என்ன நான் சொல்வது புரிந்ததா?” என்று அவன் கண்டிப்போடு கூற,

“அது... எப்படி...” என்று அவள் ஏதோ கூற வரை,

“தட்ஸ் இட்... நொ மோர் ஆர்கியூமன்ட்...” என்று அவன் கறாராகக் கூற, கப் என்று வாயை மூடிக்கொண்டாள் சர்வமகி. இருந்தாலும், அவள் முகம், விழுந்துவிட்டது.

“ஹேய்... மகிம்மா... வேண்டுமானால், நம் ரூமிற்குப் போய் பேசலாமா?” என்றான் அவன் கள்ளச் சிரிப்புடன்.

அவன் எதைக் குறிப்பிடுகிறான் என்பதைப் புரிந்ததும், அவள் தயக்கமும், கவலையும் காற்றோடு கரைய. அங்கே அவள் முகம் அந்திவானமாகச் சிவந்து போனது. தன் சிவந்த முகத்தை, அவன் பார்வையிலிருந்து மறைக்க முயன்று தரையைப் பார்க்க,

அதைக் கண்டதும், பெரு மகிழ்வுடன், ஒரடி அவளை நோக்கி வைத்தவன், சூழ்நிலை உரைக்க,

“ஐ ஹாவ் டு கோ...” என்றவாறு விரைந்து தன் அறையை நோக்கி சென்றான். இல்லை, இல்லை ஓடினான்.
அதன் பின் அநேகாத்மனுக்கும் அதிக நேரம் கிடைக்கவில்லை. அன்றே தன் நண்பர்கள் மூலம் சிறந்த வைத்தியர்களின் பட்டியலை எடுத்தான்

சர்வமகியை அதிக தூரம் அழைத்துச் செல்ல அவன் விரும்பாததால் வைத்தியர்களை கனடாவிற்கே வரவழைக்க ஏற்பாடு செய்தான். பணத்திற்கா பஞ்சம்? அவன் எதைப்பற்றியுமே கவலைப்படவில்லை. சர்வமகி பிழைப்பதற்காக என்ன என்ன செய்ய முடியுமோ அத்தனையையும் செய்ய அவன் தயாகராக இருந்தான்.

அன்று அவர்களுக்கு முதல் இரவு. அந்த உணர்வே இல்லாமல் இருவரும் ஏதோ ஒரு யோசனையில் மூழ்கிப்போயிருந்தனர்.

முன்னறை சோ:பாவில் சாய்ந்து அமர்ந்திருந்த சர்வமகியின் அருகே யாரோ வந்தமரத் திரும்பிப் பார்த்தாள். பிரதீபன்.

“என்னடா?” என்றாள் சர்வமகி கனிவாக.

“சாரிக்கா...” என்றான் குரல் கம்ம.

“சாரியா? ஏதற்கு?” என்றாள் சர்வமகி புரியாமல்.

“உன்னை அன்று நான் மன்னிக்க முடியாத வார்த்தைகளால் திட்டினேன்... எத்தனையோ முறை அதற்கு மன்னிப்புக் கேட்க முயன்றும், ஏனோ உன் முகத்தைப் பார்த்துப் பேச முடியவில்லை. எங்கே நான் அழுதுவிடுவேனோ என்று பயமாக இருந்தது...” என்றான் தலையைக் குனிந்தவாறு.

“இப்போது மட்டும் என்னவாம்? சிரித்துக்கொண்டிருப்பதாக எண்ணமோ?” என்றாள் அவன் தலை முடியைச் செல்லமாகக் கலைத்துவிட்டவாறு.

சர்வமகியின் கிண்டலைக் கேட்டபோது, பிரதீபனின் விழிகளில் மின்னல் தோன்றி மறைந்தாலும், அவ் இடத்தில் மீண்டும் சொகம் வந்து உட்கார்ந்து கொண்டது.

கன்னத்தில் வழிந்த கண்ணீரை அழுந்தத் துடைத்தவன், சகோதரியின் கரத்தைத் தன் கரத்தில் எடுத்துக்கொண்டான்.

“அக்கா... எங்களுக்கு நீ வேணுமக்கா... உனக்கு ஒன்றுமே ஆகக் கூடாது... உனக்கு ஏதாவது என்றால்... அதை எங்களால்...” என்றவனை இழுத்து அணைத்தாள் சகோதரி.

“அடடே... பாசமலர் திரைப்படம் ஓடுகிறதே... டிக்கட் இல்லாமலே, படம் பார்க்கலாம் போல இருக்கிறதே...” என்றவாறு வந்த மாதவி, சகோதரியின் காலடியில் அமர்ந்தாள்.

அதே நேரம் மாதவியின் பின்னால், வந்த தேவகியோ, வராத கண்ணீரைத் துடைத்தவாறு,
“அக்கா... நம்முடைய தம்பி சிவாஜியையே மிஞ்சிவிட்டான்...” என்று கிண்டலாகக் கூறியவள், தமக்கையின் அருகே தொப் என்று அமர்ந்தாள். வழமையாக செய்வது பேல, இரு கால்களையும் சோபாவில் நீட்டி வைத்தவாறு தன் தலையை சகோதரியின் தோளில் பதித்து, சர்வமகியின் நீண்ட கூந்தலைப் பற்றி விளையாடத் தொடங்கினாள்.

கடைக்கூட்டி அபிதனோ, தூக்கக் கலக்கத்திலேயே வந்தவன், பிரதீபன் தன் சகோதரியின் அருகே நெருங்கி உட்கார்ந்ததால், ஏற்பட்ட பொறாமையில் முகம் சிவக்க, சகோதரியின் அருகே வந்து, பிரதீபனைப்

பார்த்து முறைத்தான்.

பிரதீபனா கொக்கா? அவன் அபிதனைக் கண்டுகொள்ளவேயில்லை. தமையன் இன்னும் விலகி அமராததால், கோபம் கொண்டவன், ஒரு பாய்தலில், இருவருக்கும் இடையே விழுந்தான்.
அவன் வேகமாக விழுந்ததால், அபிதனின் முலங்கை, பிரதீபனின் தொடையில் பலமாக இடித்துவிட,

"அக்கா... " என்று வலியில் முனங்கியவாறு, தேய்த்து விட்டவன்,

"எருமை மாடு... குரங்கு... வானரம்... " என்று பலமாகத் திட்டத் தொடங்க, சர்வமகி ஒரு பார்வை பார்க்க, திட்டுவதை நிறுத்தியவன், அபிதனைப் பார்த்து முறைத்தான்.

அபிதனோ, பிரதீபனைக் கண்டுகொள்ளவேயில்லை. தமக்கையின் மடியில் தலைவைத்து தன் கால்களை வசதியாக பிரதீபனின் மடியில் போட்டவாறு படுத்துக்கொள்ள.

“தடி மாடு... இத்தனை இடம் இருக்கல்லவா... அங்கே போய் படுக்கவேண்டியதுதானே...” என்று அவனுடைய கால்களைத் தட்டிவிட்டவாறு சினந்தான் பிரதீபன்.

“அதை நீ செய்யவேண்டியதுதானே... நீ ஏன் என் அக்காவின் அருகே உட்கார்ந்திருக்கிறாய்... போடா... போய் அந்த சோ஺பாவில் உட்கார்...” என்றவாறு, தன் காலால், தன் தமையனை தள்ளி விட முயல, அவனோ, எழும்புவேனா பார் என்பது போலக் குத்துக்கல்லாட்டம் அதே இடத்தில் அமர்ந்திருந்தான்.

“அக்கா... இவனை எழுந்து போகச் சொல்லு, ஏன்டா அண்ணா என்னை டாச்சர் பண்ணுகிறாய்
எழுந்திருடா மடையா...” என்று பிரதீபனை எழுப்ப முயன்றவாறு கத்தினான் அபிதன்.

“என்ன... நான் உன்னை டாச்சர் பண்ணுகிறேனா... இத்தனை நேரமும் அக்காவோடு பேசிக்கொண்டிருந்தது நான்... இடையில் குரங்குமாதிரி புகுந்துவிட்டு பேசுவதைப் பார்...” என்று பிரதீபன் கொதிக்க,

“ஷ்... பிரதீபா... அவன்தான் சின்னப்பிள்ளை... நீயாவது விட்டுக்கொடுக்கக் கூடாதா?” என்று வழமையாக, அபிதனுக்கே பரிந்து வந்தாள் அன்னையான சகோதரி.

“நீ எப்போதுதான் எங்களுக்காக பேசியிருக்கிறாய்... டேய் எழும்படா... நான் அக்காவுடன் நிறைய பேசவேண்டி இருக்கிறது...” என்று சிறியவனை எழுப்ப முயல, அது தோல்வியிலேயே அவனுக்கு முடிந்தது.

" டேய்... அபிதன்... எழுந்திரு... இத்தனை நேரம், பிரதீபன்தானே இங்கே இருந்தான்... நீதானே இடையில் நுழைந்தாய்?” என்று தன் இளைய சகோதரனுக்கு ஆதரவாக மாதவி பேச,

“சீ போ... உன்னிடம் யாராவது பஞ்சாயத்திற்கு வந்தார்களா...” என்றவாறு, தூங்குவது போலத் தன் விழிகளை மூட,

“இட்ஸ் ஓக்கே... அவன் படுக்கட்டும்...” என்ற சர்வமகி, அவன் தலையை வருடிக் கொடுக்க, அந்த வருடல் கொடுத்த சுகத்தில், மெதுவாகத் தன் விழிகளை மூடினான் அபிதன். அதை எரிச்சலோடு, முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான், பிரதீபன்.

இந்த எல்லாக் கலவரத்தையும், தன் சகோதரியின் தோளில் சாய்ந்தவாறு கேட்டுக்கொண்டிருந்த, தேவகிக்கு விழிகளில் குளம் கட்டியது. மெதுவாக எழுந்து சகோதரியை ஏறிட்டவள்,.

“அக்கா... எங்கள் அம்மா உயிரோடு இருந்திருந்தால்கூட, உன்னைப் போல எங்களை இத்தனை அக்கறையுடன், பார்த்திருப்பாரா என்று எனக்குத் தெரியாது. எங்களைப் பொறுத்தவரைக்கும் நீதான் எங்கள் அம்மா... உனக்கு எதுவுமே ஆகக் கூடாது...” என்றாள் குரல் கம்ம.

கொஞ்ச நேரம் சர்வமகியால் பேசமுடியவில்லை. பாசம் என்பதுதான் எத்தனை புனிதமானது இத்தனை அருமையான சகோதரர்களைப் பெற அவள் எவ்வளவு கொடுத்து வைத்திருக்கவேண்டும்? தன் வேதனை ஒதுக்கி, சகோதரர்களைத் தேற்றுவது முக்கியமானதாகப் பட,

“இப்போது எதற்காக எல்லோரும் வருந்துகிறீர்கள். நான் அத்தனை சுலபத்தில் உங்கள் எல்லோரையும் விட்டுவிட்டுப் போய்விடுவேன் என்று நினைத்தீர்களா? அதுதான் இல்லை... நம்முடைய அபிக்குட்டியின் திருமணத்தைப் பார்த்த பின்புதான் போய்ச்சேர்வேனாக்கும்...” என்ற சர்வமகி இளையவனின் தலைமுடியைக் கலைத்துவிட்டாள்.

இதைச் சற்றுத் தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த

அநேகாத்மன்,
“என்ன... எல்லோரும் அக்காவைச் சூழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? நமக்கும் அருகேவர இடம் கிடைக்குமா?” என்றவாறு உள்ளே வந்தான்.

அவனுடைய விழிகள் கூர்மையுடன் அங்கிருந்தவர்களை அளவிட்டது. தன் புத்தம் புது மனைவியை ஆளுக்கு ஒருவராக உரிமைகொண்டாடியது, அவன் பொறாமையைத் தூண்டியதோ. குறிப்பாக, அபிதன் மீதும், தேவகியின் மீதும் ஒரு படி மேலாகப் பொறாமை தோன்றியது.

ஏன் எனில் அவர்கள்தானே, அவனுக்குரிய மடியிலும் தோளிலும் தலைவைத்துப் படுத்திருக்கின்றனர்.
அவனைக் கண்டதும் உதட்டில் தொத்தியிருந்த புன்னகை மாயமாக மறைய, நிமிர்ந்தமர்ந்தாள் சர்வமகி.

அநேகாத்மன் உள்ளே நுழைந்ததும், தேவகியும் எழுந்தமர்ந்து கொண்டாள். ஒரே ஒரு கணம், அநேகாத்மனின் முகத்தில் தெரிந்து மறைந்த அந்தப் பொறாமையைக் கண்டவளுக்கு நகைப்புத்தான் வந்தது.

“யார் வேண்டாம் என்றா? நீங்களும் வேண்டுமனால் இங்கே ஒரு ஓரமாக உட்காரலாமே...” என்ற தேவகி அநேகாத்மனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

நிலவு 39

அவளுக்கு அநேகாத்மனைக் கண்டதும் நன்றிப்பெருக்கால் உள்ளம் சிலிர்த்தது. இன்று இப்படி மகிழ்ச்சியாக கூடி இருக்கிறார்கள் என்றால், அதற்கு அவன்தானே காரணம்.

பணக்காரர்களில் நல்லவர்களைக் கண்டுபிடிப்பது என்பது மிக மிகச் சிரமம். அப்படி இருக்கிறபோது, சர்வமகிக்கு உள்ள பிரச்சனையை அறிந்து, அவளை மணமுடிக்க வந்தவனை வெறும் மனிதனாக எண்ணிப் பேசிவிடமுடியுமா? மெய்யோ பொய்யோ, அவனுடைய தந்தையின் மரணத்திற்குக் காரணம் அவர்கள் தந்தை என்றுதானே உலகம் சொல்கிறது. அப்படியிருந்தும், அந்தக் குடும்பத்தில் ஒருத்தியை மணமுடித்தானே. அதுவும் பிடிவாதமாக... அவனை எப்படிப் போற்றினால் தகும்?

அது மட்டுமா? அக்காவுக்குத்தான் உடன்பிறந்தவள் என்கிற பாசம். இவனுக்கென்ன வந்தது? எம்மையும் தன் சகோதரராக ஏற்றுக்கொண்டானே... இவ்வளவு ஏன் அவன் வீட்டில் திருடிய பிரதீபனையே மன்னித்து விட்டுவிட்டானே... இது யாரால் முடியும்? விழிமூட மறந்தவளாக அநேகாத்மனைப் பார்த்துக்கொண்டிருந்தாள் தேவகி.

“என்ன தேவகி அப்படிப் பார்க்கிறாய்?” என்றான் அநேகாத்மன் சிறு புன்னகையுடன்.

“இல்லை அத்தான்... உங்களை நினைக்கும் போது பிரமிப்பாக இருக்கிறது...” என்றவள், சர்வமகிக்கருகே அவனுக்கு இடம் விட்டுத் தள்ளி அமர்ந்தாள்.

ஒரு தலையசைபபின் மூலம் நன்றி தெரிவித்துவிட்டு,

“என்னைக் கண்டு பிரமிக்க அப்படி என்ன இருக்கிறது?” என்றவாறு, உரிமையுடன் சர்வமகியின் அருகே வந்தமர்ந்தான்.

ஏனோ சர்வமகிக்கு அவன் அருகாமை பெரும் சங்கடத்தைக் கொடுத்தது. அன்று காலை, அவர்கள் அறையில் அவன் பதித்த முத்திரை நினைவில் வந்து இம்சித்தது. போதாததற்கு, அவன் விழிகள் வேறு, அவள் உதடுகளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க, இவள் நெளிந்தாள். அதைப் புரிந்து நகைத்தவன், அவள் தோளின் மீது தன் கரத்தைப் போட்டான்.

பெரும் சங்கடத்துடன் அவனைப் பார்த்தவள்,

“இது என்ன... கையை எடுங்கள்...” என்றாள் மெல்லிய குரலில்.

“என்ன தேவகி... உன் அக்கா இப்படிக் கூச்சப்படுகிறாள்? கையைப் போட்டால் கையை எடுக்கச் சொல்லி முறைக்கிறாளே...” என்றான் அநேகாத்மன் அப்பாவியாக.

“அதுதானே... என்னக்கா நீ... அத்தான் தானே... இதற்குப் போய் முறைக்கிறாயே...” என்ற தேவகி குறிப்பு உணர்ந்தவளாகப் புன்னகையுடன் எழுந்தாள்.

“எல்லோரும் உள்ளே வாருங்கள்... உறங்கும் நேரமாகிவிட்டது” என்றவள், தூங்கிப்போயிருந்த அபிதனின் அருகே வர,

“நான் வேண்டுமானால் அவனைத் தூக்கிவரவா?” என்று கேட்டான் அநேகாதமன்.

“ஓ... நோ அத்தான்... இது எங்களுக்குப் பழக்கம்தான். நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்...” என்றவாறு தூங்கிவிட்ட தம்பியைத் தன் கரங்களில், தூக்க முயல,

“தள்ளு தேவகி... நான் கொண்டு வருகிறேன்...” என்று தேவகியைத் தள்ளிவிட்டுத் தம்பியைத் தான் கரங்களில் ஏந்தினான் பிரதீபன்.

“எருமை... மாடு... ஒன்பது வயது ஆகப்போகிறது... இன்னும் குழந்தை என்கிற நினைப்புவேறு... தூங்குவதைத் தன் அறையில் போய்த் தூங்குவதற்கு என்ன?” என்று சிடுசிடுத்தவன், தம்பியின் தலை தோளில் இருந்து விழா வண்ணம், கவனமாகத் தாங்கியவன், தன் அறைக்கு எடுத்துச் சென்றான்.

“என்ஜோய் அத்தான்...” என்றவள் சகோதரியின் தோளில் தட்டிக் கொடுத்துவிட்டு, மற்றவர்களுடன் அந்த இடத்தைவிட்டு விலகிச் சென்றாள்.

அனைவரும் விலகிச் சென்றதும், வேகமாக அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்த சர்வமகி,
“என்ன இது... அவர்களுக்கு முன்பாக...” என்றாள் சற்றுக் கோபமாக.

“நான் என்னம்மா செய்யட்டும்...” என்றவன், மீண்டும் அவள் தோளைச் சுற்றித் தன் கரத்தைப் போட்டவாறு, அவள் கரங்களைத் தன் கரங்களுக்குள் எடுத்தவன்,

“ஐ திங்க் ஐ ஆம் இன் ஜெலஸ் வித் தெம்... ஒவ்வொருவரும் உன் மேல் தொத்திக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்றதும் ஒரு வித பொறாமை வந்துவிட்டதுபோல் இருக்கிறது...” என்றவன் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

சர்வமகி முகம் சிவந்தாள். அவள் முகச் சிவப்பையே பார்த்தவன் ஒற்றைவிரலால் அவள் கன்னத்தை மென்மையாக வருடிக்கொடுத்தான்.

“எப்பவும், இப்படியே உன் சிவந்த முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்போல் வெறியே வருகிறது மகிம்மா...” என்றவனின் தீண்டல்,

அவள் உதட்டில் வந்துமையம் கொண்டது.

அவன் தீண்டலால் தன் கீழ் உதட்டைப் பல்லால் கடித்தாள் சர்வமகி. அவள் முகத்தையே தாபத்துடன் பார்த்தவன், அவளை இன்னும் நெருங்கி அமர்ந்தான்.

முத்துப் பற்களுக்கிடையில் சிறைப்பட்ட, கீழ் உதட்டைப் பெருவிரல் கொண்டு விடுவித்தவன்,
"அது என்ன தப்பு செய்தது, உன் பற்களுக்குள் சிறைப்பட... ம்..." என்றான் விழிகள் மின்ன,
சர்வமகியின் முகமோ, மேலும் இரத்த நிறம் கொள்ள, தன் முகத்தை அவன் முன் மறைப்பதற்காகத் திருப்பிக்கொண்டாள். அவனோ, தன் கரங்களுக்குள் சிறைப்பட்ட, அவளுடைய கரங்களில் தெரிந்த சூட்டை உணர்ந்து, அவளுடைய நாணத்தைத் தெரிந்துகொண்டான்.

"ஹே... மகிமா... என் முன்னால் வெட்கப்படாதே என்று சொன்னேனே..." என்றவன் திரும்பியிருந்த அவள் முகத்தைத் தன் நோக்கித் திருப்ப, அவள் அழகில் அவன் சொக்கித்தான் போனான்.

அவனுடைய பார்வையின் மாறுபாட்டை உணர்ந்துகொண்டவளாக, அவன் பிடியிலிருந்து விலகி எழ முயல, அவளுடைய முயற்சியை, இலகுவாகத் தடுத்தவன், அவள் கன்னம் நோக்கிக் குனிந்தான்.
ஒரு கணம் திகைத்தவள், அவன் மீசையின் குறுகுறுப்பில் தவித்தவளாக,

"ஆத்மன்... ப்ளீஸ்..." என்றாள் குரல் கிசுகிசுக்க.

அவளுடைய சங்கடத்தை உடனேயே புரிந்துகொண்டவனாக,

"இப்படி உன்னைத் தள்ளிவைத்திருக்க, மிகவும் சிரமமாக இருக்கிறதுடா..." என்று பெரும் ஏக்கத்துடன் கூறியவன், தன் விழிகளை மூடி ஓரளவு சமப்படுத்தியவனாக, தன் கரங்களுக்குள் சிக்கியிருந்த அவள் கரங்களை விரித்து, அதில் சிவந்திருந்த அந்த உள்ளங்கைகளில் தன் பெருவிரலால் கோலம்போட்டான்.

"மகிம்மா... உன் உள்ளங்கை... பிறந்த குழந்தையின் கரங்கள் போல, மென்மையாக இருக்கிறது..." என்றான் வியப்புடன்.

ஏனோ சர்வமகிக்கு அவன் அணைப்பிலிருந்து தன்னை விடுவிக்கப் பிடிக்காதவளாக அப்படியே இருந்தாள்.

காலம் காலமாகத் தேடிவந்த மன அமைதி அப்போது கிடைத்ததுபோலத் தன் விழிகளை மூடினாள் சர்வமகி.

அநேகாத்மன் அவள் கரங்களையே நீண்ட நேரம் பார்த்தவாறு, வருடிக்கொடுத்துக் கொண்டிருந்தான். எத்தனை மெல்லிய கரங்கள். தொட்டாலே உடைந்துபோய்விடும் போல... நீண்ட நேரத்திற்குப் பின் அவள் முகத்தைப் பார்த்தான்.

விழிகள் மூடியிருந்தன. தோளை வளைத்திருந்த கரத்தால் அவளுடைய வலது புறக் கன்னத்தை வருடிக்கொடுத்தான்.

அப்படியே சுருண்டு அவன் கழுத்து வளைவில் முகம் புதைக்க நினைத்தவளுக்கு, அவனுடைய அசாதாரண உயரம் இடைஞ்சலைக் கொடுத்தது. ஒன்று அவன் சரிந்து கொடுக்கவேண்டும், இல்லை, அவள் முளந்தாளிட்டு அமர்ந்து அவன் கழுத்து வளைவில் தன் முகத்தைப் புதைக்கவேண்டும். இரண்டும் சாத்தியமல்ல, என்பதால், அவனுடைய தோள் வளைவில் தன்னுடைய முகத்தைப் புதைக்க முனைய, அவனோ இருந்த வாக்கிலேயே, அவளுடைய முழங்கால்களுக்கு இடையில் தன் கரத்தைச் செலுத்தி, சுலபமாக அவளத் தூக்கித் தன் மடியில் ஏந்திக்கொண்டான்.

அவள் அதிர்ச்சியுடன் தன் விழிகளைத் திறக்க, அவளைப் பார்த்துக் கண்ணடித்தவன், தன் வலது உள்ளங்கையை, அவளுடைய வலது கன்னத்தில் வைத்துத் தன் மார்போடு, அவள் முகத்தை அழுத்திப் பதித்துப் பதாகையாகத் தன்மீது தாங்கிக்கொண்டான்.

அந்தக் கணம், இருவருக்குமே பேசவேண்டும்போல இருக்கவில்லை. அந்த மௌனமே ஆயிரம் கதைகளைப் பேசின. தன் வலது கரத்தை, அவனுடைய அகன்ற பரந்த மார்பில் பதிக்க, அவனுடைய இதயத்தின் துடிப்பு முரசென, அவள் கரங்களுக்குள்ளாக சென்று, அவள் இதயத்தைச் சென்றடைந்தது.
அவளுக்கு ஏனோ அவனை விட்டு விலக மனமிருக்கவில்லை. அவள் இன்னும் எத்தனை காலங்கள் இந்த உலகத்தில் இருக்கப்போகிறாள்? மிஞ்ச மிஞ்சி மூன்று மாதம்? ஆறு மாதம்? ஒரு வருடம்? அவள் இருக்கப் போகிற இந்தச் சொற்ப காலத்தில் ஏன் அவனுடைய அருகாமையின் சுகத்தை அனுபவிக்கக் கூடாது?

அநேகாத்மன் தன் காதலைக் கூறியிருந்தாலும், இது வரை அவள், அவன் மீது தான் வைத்திருந்த காதலைக் கூறவில்லை. காரணம், தன்

காதல், அவன் வாழ்வை அழித்துவிடுமோ என்கிற அச்சம். அதனால்தான் அவளை மணமுடிக்கக் கேட்டபோது, அவள் ஆரம்பத்திலேயே மறுத்தாள். அவனுக்குத் தன்னால் மகிழ்வான வாழ்வைக் கொடுக்க முடியாது என்று அவள் முழுதாக நம்பினாள். ஆனால் இப்போது அவள் அவனுடைய மனைவி. உரிமையுள்ளவள், இருக்கும் வரைக்கும் அவனுடைய அருகாமையில் சந்தோஷமாக இருந்துவிட்டுப் போவதில் என்ன தவறு? அவள் முடிவு செய்துவிட்டாள்.

ஆழமாக அவனுடைய உடல் வாசனையை மூச்சாக இழுத்துத் தன்னுள் நிரப்பிக்கொண்டாள். எத்தனை நேரம், அப்படியே இருந்தாளோ, அப்படியே அவன் கதகதப்பில் உறங்கியும் போனாள்.

“மகிம்மா...” என்று மென்மையாக அழைத்துப் பார்த்தான் அநேகாத்மன்.

அவளிடம் அசைவிருக்கவில்லை. நெற்றியில் விழுந்த கூந்தலை விலக்கிவிட்டவன், மீண்டும் “மகிம்மா...” என்றான். அவளிடமிருந்து மெல்லியதாக ‘ம்...’ என்ற ஓசை மட்டும் கேட்டது.

“மகிம்மா... ஐ லவ் யு...” என்றான். அவன் கூறுவது எங்கோ ஒரு தொலைவில் கேட்பதுபோல சர்வமகிக்கு இருந்தது. கனவு கான்கிறோம் என்று நிச்சயமாக நம்பியவள், அந்த இனிமை தந்த சுகத்தில் மெல்லிய புன்னகையைச் சிந்தினாள்.

மனதிற்குள்ளேயே “ஐ லவ் யு டூ” என்றாள். அதன் பின் ஆழ்ந்த உறக்கத்தின் வசமானாள். அவள் உறங்கிவிட்டாள் என்பது புரிந்ததும், அவளை இறுகத் தன்னோடு அணைத்துக்கொண்டான் அநேகாத்மன். அந்த அணைப்பு ஒரு போதும் இனி அவளை விட்டு விலகப்போவதில்லை என்பதைக் கூறாமல் கூறியது.

நீண்ட நேரம் தன் மனைவியின் முகத்தைத் தன் மார்பில் அழுத்தி வைத்துக்கொண்டு, அவள் முழுதாகத் தனக்கு வேண்டும் என்று தவித்துக்கொண்டிருந்தவன், மெதுவாகத் தன் கரத்தை இளக்க, அவளுடைய முகம், தூக்கத்தில் அவன் உள்ளங்கையோடு சேர்ந்து சரிய, வேகமாக அவள் வதனத்தைத் தன் கரங்களில் தாங்கிக்கொண்டான் அந்தக் காதலன்.

தூக்கத்தில் மூடியிருந்தது விழிகள். கூடவே அவள் கூந்தல் கலைந்து அவள் முகத்தோடு உரசி விளையாட, அக் கூந்தலை தன் மறுகரம் கொண்டு ஒதுக்கிவிட்டான் அநேகாத்மன். சிவந்த இதழ்கள் கொஞ்சமே கொஞ்சமாய் பிளந்திருக்க, அதனிடையே அவளுடைய வெண்ணிற

பற்கள் சிறிதாக எட்டிப் பார்த்து அவனை அழைப்பது போலத் தோன்ற, அநேகாத்மன் திணறிப்போனான்.

அவன் கையணைப்பில் பாதுகாப்பை உணர்ந்து தன்னை எந்தத் தீங்கும் அண்டாது என்கிற முழு நம்பிக்கையில் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருக்கும் தன் மனையாளின் நம்பிக்கையைத் தன்னால் காப்பாற்ற முடியுமா என்று உள்ளம் தவித்தது.

தன் கீழ் உதட்டை மெதுவாகக் கடித்தவாறு, அந்த அழகிய முகத்தைத் தன் சுண்டுவிரல் கொண்டு வரியாகக் கீறினான். அந்த மென்மையில் திணறியவன்,

"மகி... ஐ நீட் யு... என் காலம் பூராவும உன் மடி எனக்கு மட்டுமே உரியதாக இருக்கவேண்டும்... என் முதுமைக்கும் என்னை அணைத்துத் தாங்க உன் கரங்கள் வேண்டும்... கோபப் படும்போது சாந்தமாக என் கோபத்தைத் தீர்க்க, மகிழ்ந்து சிரிக்கும்போது, அருகேயிருந்து என்னை அரவணைக்க, வேதனைப்படும்போது தோள் கொடுக்க, எப்போதும் நீ... நீ மட்டும் எனக்கு வேண்டும் மகி... எனக்கு சர்வமுமாய் நீ வேண்டும்... அநேகனாய் நின்று, நம் வாழ்வில் நீ எடுத்து வைக்கும் அனைத்து அடிகளுக்கும் துணையாக, உன் ஆத்மாவாய் நான் எப்போதும் உன் கூடவே இருப்பேன்மா... ஐ ப்ராமிஸ் யு... உன்னைக் காத்துக்கொள்ள, உன்னைப் பாதுகாக்க, உன்னைத் தாங்கிக்கொள்ளவேனும் நீ எனக்கு முழுவதாக வேண்டும்... கண்ணம்மா..." என்று மனதார எண்ணியவன் குனிந்து அவள் நெற்றியில் தன் உதட்டைப் பொருத்தி எடுத்தான். அப்படியே அவள் மூக்கிலும் மெல்லிய முத்தத்தைப் பதித்தான். அது போதாது என்பது போல, அவள் உதட்டிலும் நாடியிலும், மென்மையாக முத்தமிட்டு விலகியவன் மீண்டும் அவள் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தான்.

சர்வமகி ஆழ்ந்து உறங்கிவிட்டது புரிந்தது. அப்படியே அவளைத் தன் கரத்தில் ஏந்தியவன் கனத்த மனதுடன் அவர்களுக்குரிய படுக்கையறைக்குத் தூக்கிச் சென்று அவளைக் கிடத்தினான். அவனும் உடைமாற்றிவிட்டு வந்து அவளருகே படுத்துக்கொண்டான்.

அவளைப் பார்த்தவாறே படுத்தவனுக்கு முதன் முறையாகப் பயம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்டான்.

சர்வமகி இல்லாத வாழ்வை நினைக்கும் போதே அவனுக்கு சர்வமும் அடங்கிவிடும் என்பதுபோல அச்சமாக இருந்தது. யாருக்கும்

கிடைக்காத அந்த அற்புத மலரை, இழந்துவிடுவோமோ என்று பெரும் தவிப்பாக இருந்தது.

அவன் விசாரித்த வைத்தியர்கள் யாருமே அவனுக்குப் பிடித்தமான செய்தி எதையும் கூறவில்லை. அது கான்சராக இல்லாவிட்டாலும், அந்த கட்டி இருக்கும் இடம் மிகவும் ஆபத்தானதாக இருப்பதால், அதை அறுவைச் சிகிச்சை மூலம் வெளியே எடுக்கமுடியாது என்றார்கள். அப்படியே எடுத்தாலும், கைகால் விளங்காமல் போக வாய்ப்பிருக்கிறது. அல்லது கோமாவிற்குப் போய்விடுவார்கள் என்றார்கள்.
இதை எதையுமே அவன் யாருக்கும் சொல்லவில்லை. அவனுடன் சேர்ந்து மற்றவர்களும் வருந்துவதை அவன் விரும்பவில்லை.

“மகிம்மா... உன்னை நான் எப்படிக் காப்பாற்றப்போகிறேன்...” என்று தவிப்போடு முனகிங்கியவனுக்கு தூக்கம் வருவதாக இல்லை.

வெளியே வந்தவன் ஒரு சிகரட்டை எடுத்து உதட்டில் பொருத்தினான். மனம் அமைதியில்லாமல் தவித்தது.

ஒரு பெண்ணிற்காக, அவள் உடல் நலத்திற்காக அவன் இப்படி வருந்துவான் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை. தவிப்பாக இருந்தது.

எத்தனை நேரமாக அவன் அங்கேயே நின்றானோ அவனுக்குத் தெரியாது, திரும்பி வந்து, படுக்கையில் விழப்போகும்போது, சர்வமகி கொடுத்த வாசுதேவனின் குறிப்பேடு அவன் கண்களில் பட்டது. அதை எட்டி எடுத்தவன், மீண்டும் முன்னறைக்கு வந்தான். ஒவ்வொரு தாழ்களாகப் புரட்டினான்.

ஒவ்வொரு தாள்களிலும் அவன் ஒவ்வொன்றை உணர்ந்து கொண்டான். அவனுடைய புருவங்கள் முடிச்சிட்டன. புரியாதவை பல புரிந்தன. நேரத்தைப் பார்த்தான். இரவு மூன்று மணி. தன் கைபேசியை எடுத்து, டேவிட்டிற்கு குறுந்தகவல் ஒன்றை அனுப்பினான். “ஹாய் டேவிட்... ஒருத்தரைப் பற்றிய பத்து வருடங்களுக்குண்டான முழுத் தகவல்களும் எனக்கு வேண்டும்... அவருடைய பெயர் நடராஜன்... கவிதா இன்டர்ஸ்ட்ரியல் செயர்மன்...” கொஞ்ச நேரம் ஏதேதோ எண்ணிக்கொண்டிருந்தவன், படுக்கையில் விழுந்தபோது நேரம் காலை நான்குமணியையும் தாண்டியிருந்தது.

தொடரும்...

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை... அநேகாத்மன் எழுந்தபோது மணி பகல் பதினொன்றரை நெருங்கிக்கொண்டிருந்தது. ஒரு வாறு தூக்கம் விடைபெறும் சமயம், எங்கோ, பலத்த சப்தம் கேட்க, விருக்கென்று எழுந்தமர்ந்தான்.

ஒரு கணம் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் வீட்டில் இத்தகைய பெரிய சத்தம் கேட்க வாய்ப்பே இல்லையே... மெது மெதுவாக சுயத்திற்கு வந்தவன், தன் படுக்கையின் மறுபக்கம் பார்த்தான். வெறுமையாக இருந்தது. நடை தள்ளாட எழுந்தான்.

“இது என்ன வீடா... இல்லை... சந்தைக்கடையா?” என்கிற கொதிப்புடன் குளியலறைக்குள் நுழைந்தவன், தேவையை முடித்து முகம் கழுவிவிட்டுக் கையில் கிடைத்த டீ சேர்ட்டை அணிந்துகொண்டு, அறையை விட்டு வெளியே வந்து சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றான்.

“அக்கா... பாரக்கா இந்தத் தடியனை... குளியலறையை விட்டு வெளியே வரமாட்டேன் என்று அடம் பிடிக்கிறான்... வெளியே வரச் சொல்லுக்கா...” என்று பெரும் சத்தமாக முறையிட்டாள் மாதவி.

“ஷ்... எதுக்கு மாதவி இப்படி சத்தம் போடுகிறாய்? அத்தான் எழுந்துவிடப் போகிறார்... குரலை அடக்கிப் பேசு...” என்று அவளைக் கண்டித்துக்கொண்டிருந்தாள் சர்வமகி.

“என்னை மட்டும் திட்டு... அந்த பிரதீபன் குரங்கை மட்டும் ஒன்றும் சொல்லாதே...” என்றாள் இவள் கொதிப்புடன்.

“ஏன் மாதவி, அங்கே ஒரு குளியலறைதான் இருக்கிறதா... பக்கத்து அறைக் குளியலறையை உபயோகிக்கலாமே...” என்றாள் மென்மையாக சர்வமகி.

“அதற்குள் தேவகி நிற்கிறாள்...” என்றாள் இவள் எரிச்சலுடன்.

“அது இரண்டும்தானா குளியலறை, இந்த வீட்டில் பத்துக்கும் மேல் அறைகள் இருக்கின்றன. ஓவ்வொரு அறைக்கும் குளியலறை இருக்கிறது. அதில் ஒன்றை பயன்படுத்துவதுதானேம்மா...”

“இல்லைக்கா... நமக்கு தந்த அறையை விட்டு, வேறு அறைக்குள்

நுழைய சங்கடமாக இருக்கிறதே...” என்றவாறு மாதவி, அருகேயிருந்த காரட் ஒன்றை எடுத்து வாயில் திணித்தாள்.

“பல்லுத் தீட்டாமல் இது என்ன பழக்கம் மாதவி...” என்று கண்டிக்க,

“அதை விடக்கா... இப்போ நன் எப்படி குளிக்கிறது...” என்று சிணுங்கியவளைக் கண்டுகொள்ளாது,

“உன்னை யார் நேரம் தாமதித்து எழச் சொன்னது?” தாளிதத்திற்கு வெங்காயத்தைப் போட்டவாறு.

“இன்று ஞாயிற்றுக்கிழமை... கொஞ்சம் அசந்து தூங்கிவிட்டேன்... அது மட்டுமில்லைக்கா... எங்கள் படுக்கை இருக்கிறதே... பஞ்சு போல சாஃப்ட்டா இருக்கக்கா... எழுந்துகொள்ளவே மனமில்லை. இந்த தேவகிதான் என்னை எழுப்பிவிட்டாள்...” என்றாள் அந்த படுக்கையின் சுகத்தை அனுபவித்தவாறு.

“நன்றாகத்தான் சமாளிக்கிறாய் மாதவி... சோம்பேறி போலத் தூங்கிவிட்டுப் பேச்சைப் பார்... சரி... கொஞ்சம் பொறுத்துக்கொள்... பிரதீபன் இப்போ வந்துவிடுவான்...” என்றவாறு தக்காளியை வெட்டத்தொடங்கினாள் சர்வமகி.

எரிச்சலுடன் வெளியே வந்த ஆநேகாத்மனுக்கு, சர்வமகியின் மென் குரல் காதில் விழ, அவனுடைய எரிச்சல் மெதுவாக அவனை விட்டு விலகத்தொடங்கியது.

உதட்டில் சிறு புன்னகையுடன் வந்துகொண்டிருந்தவனுக்கு முதன் முறையாக அவனுடைய வீட்டில் இத்தனை பெரிய சத்தம் கேட்பது வியப்பாக இருந்தது. இது அவனுக்குப் புதிது. ஒருவனாகவே வளர்ந்த அவனுக்கு இப்படி கலகல எல்லாம் ஆச்சரியமான விடயமே.

சமையலறை நோக்கி வந்தவனுக்கு, சமையறைக்கு வெளியே வேலையாட்கள் வரிசையாக நின்றவாறு, அடுத்து என்ன செய்வது என்று புரியாமல், திரு திரு என்று விழித்துக்கொண்டு இருப்பதைக் கண்டதும், திகைத்தான். அருகே நின்றிருந்த டேவிட்சனை அழைத்து,

“வட் ஹாப்பன்ட்?” என்றான்.

“இல்லை... மாம் சமையல் ஏதோ செய்கிறார்கள், அதனால் இவர்களை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டார்கள். இவர்களுக்கு வேலை நேரம் ஓய்வெடுக்க முடியாது என்பதால் என்ன செய்வது என்று புரியாமல்...”

என்று இழுக்க, இவனுக்கு கோபம் வந்தது.

“சர்வமகி... வட் த ஹெல் இஸ் கோயிங் ஆன் ஹியர்...” என்றவாறு சமையறையின் உள்ளே நுழைய, ஆத்மனின் குரலைக் கேட்டதும், முகம் எல்லாம் பூரிக்க மலர்ச்சியுடன் திரும்பியவளைக் கண்டதும் தன் நிலை மறந்து திகைத்தான் அநேகாத்மன்.

கணுக்கால் வரை நீண்ட பாவாடையுடனும், நீண்ட கைகொண்ட சட்டையுடனும், நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமமும் துலங்க, குங்குமத்திற்கு மேலே மெல்லிய கோடாகத் திருநீறும் பளிச்சிட, மார்பிலே முன்தினம் அவன் கட்டிய புத்தம் புதுத் தாலி தொங்க, இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள் அவன் தேவதை. அவளைக் கண்டதும், அவன் கோபம் அனைத்தும், மறு கணம் காணாமல் கரைந்து ஓட, இவள் என்னவள் என்கிற பெருமையில், அவளையே ஆர்வத்துடன் பார்த்தான்.

அவன் வீட்டில் சாமியறையே இல்லை. அவள் தான் இந்தத் திருநீற்றைக் கொண்டு வந்திருக்கவேண்டும். என்னவோ அவனுக்கு இது வரை சாமி நம்பிக்கை வந்ததில்லை.

திகைத்து விழித்த அநேகாத்மனைக் கண்டதும், நாகரீகம் கருதி, வாயிலே வைத்திருந்த கரட்டைக் கூடக் கையில் எடுக்காது, அப்படியே நெழிந்து வளைத்து வெளியேறிய மாதவிக்கு புன்னகையை அடக்க முடியவில்லை.

“அடேங்கப்பா... இவரையெல்லாம் டெரர் பீசென்று எவன் சொன்னான்... சரியான அக்கா வாலு...” என்று நினைத்தவள், வெளியே வராத சகோதரியைத் திட்டிக்கொண்டே தன் அறைக்குள் நுழைந்தாள்.
இங்கே தன்னை வியப்புடன் பாதம் முதல் தலை வரை விழிகளால் நனைத்துக்கொண்டிருந்த ஆத்மனைக் கண்டதும், உடல் சிவந்து போக,

“நீங்கள் என்ன குடிப்பீர்கள்... தேனீரா காப்பியா?” என்றாள் நிலமையை சமாளிக்க முயன்றவளாக.
என்னவோ நேற்றைய அவன் அருகாமைக்குப் பின்பு அவளால் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை. இன்னும் அந்த பரந்த மார்பும், அது கொடுத்த கதகதப்பும், அவன் இதயம் சொன்ன செய்தியும் நினைவில் வர, மேலும் சிவந்து போனாள் சர்வமகி.

சும்மாவே, அவள் சிரித்தால், இவனால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது, இப்போது முகம் சிவந்திருந்தவளை கைக்கெட்டும்

தொலைவில் வைத்துக்கொண்டு எப்படி சும்மா இருப்பான். வேகமாகத் தன்னவளை நெருங்க, நெருங்கிய கணவனிடம் தப்புவதற்காக இரண்டடி பின் வைத்தவள், சமையலறை மேசையில் மோதி நின்றாள்.

அவனும் அவள் வேகத்திற்கு ஈடு கொடுத்தவனாக, சமையல் மேசையில் அவளுக்கு இரு பக்கமும் சிறை வைப்பது போலத் தன் கரத்தைப் பதித்தவன், அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

அவளோ, தன் தலையைப் பின்னுக்கு இழுக்க, இவன் இன்னும் நெருங்கினான். தலையைப் பின்னுக்கு இழுத்தவாறு, தன் கணவனை அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருக்க, தன் உதட்டைக் குவித்து, தான் எடுத்த மூச்சுக் காற்றை, அவள் மகம் நோக்கி ஊத, அந்தக் காற்றில் மயங்கியவளாகத் தன் விழிகளை மூடினாள் சர்வமகி. அவன் ஊதிய காற்று நின்றதும் மெதுவாகத் தன் விழிகளைத் திறந்தாள் அந்தக் கோதை.

அவனுடைய விழிகள், திறந்த அவளுடைய விழிகளுடன் இணைந்து இரகசியம் பேசின. அவ் இரு விழிகளின் மொழியையும் புரிந்துகொண்டவளின் உதடுகள் மேலும் நாணத்தால் துடிக்க, அந்தத் துடிப்பை அடக்க முடியாதவளாகத் தவிப்புடன் தன் கீழ் உதட்டைப் பற்களால் கடித்து அடக்க முயல, இப்போது அவனுடைய விழிகள் சற்றுக் கீழிறங்கி அந்த உதடுகளில் சரணமடைந்தன.

இனியும் முடியாது என்பது போல, அவளுடைய உதடுகளை நோக்கி அவன் குனிய, அவனது நோக்கம் புரிந்தவளாகத் தன் கரத்தினை அவன் மார்பில் பதித்துத் தடுக்க முயன்றாள் அக்காவியம். அவனுடைய பலத்திற்கு அணைபோட அவளால் எப்படி முடியும்.

அவளுடைய கரங்கள் மடிய, அவன் உதடுகள் அவள் உதடுகளை சங்கமிக்கும் தருனம்,

“ஆத்மன்... ப்ளீஸ்... வெளியே வேலையாட்கள் இருக்கிறார்கள்...” என்றாள் அவள் கிசுகிசுப்புடன். சற்று நிதானித்தவன், அவள் மூக்கில் மெல்லிய முத்தத்தைப் பதித்துவிட்டு விலகி நின்றவன், தன் கரத்தை மார்புக்குக் குறுக்காகக் கட்டியவாறு, இன்னும் தன்னை ஏறிடத் தயங்கிக்கொண்டிருந்த தன் மனையாளைப் பார்த்து,

“ஏனம்மா அவர்களை வெளியே அனுப்பினாய்?” என்றான். ஒரு கணம் அவன் யாரைப் பற்றிக் கூறுகிறான் என்று புரியாமல் திகைக்க,

“நம் வேலையாட்களைத்தான் கேட்கிறேன், அவர்களை வெளியே அனுப்ப என்ன அவசியம் வந்தது. அவர்கள் செய்வது உனக்குப் பிடிக்கவில்லையா... வேண்டுமானால், வேறு வேலையாட்களை வருவிக்கவா?” என்றான் சற்று அழுத்தமாக.

ஒருவாறு சுய நினைவு பெற்றுவள்,

“ஐயையோ... அப்படியெதுவும் இல்லை ஆத்மன்... அவர்கள் பாவம். இத்தனை காலமாக உழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். காலையிலிருந்து வேலை சேய்கிறார்கள். அதுதான் ஓய்வெடுக்கச் சொன்னேன்... நம் ஆறு பேருக்கு எதற்கு வேலையாட்கள்? தவிர, நாமே நமக்காக சமைத்துச் சாப்பிடுவதில் உள்ள மகிழ்ச்சி எதில் இருக்கிறது சொல்லுங்கள்? அதுவும் நம் எல்லோருக்கும் நானே சமைக்கவேண்டும் என்று ஆசையாக இருக்கிறது... ப்ளீஸ்... நானே சமைக்கிறேனே...” என்றாள் கெஞ்சுதலாக.

அந்தக் குரலுக்கு மறுப்பாக அவன் எப்படிப் பேசுவான்.

“ஷ்.. மகிம்மா... நீ இந்த வீட்டுக்கு எஜமானி... நீ சொல்வதைக் கேட்கத்தானே நாங்கள் இருக்கிறோம். அதற்க எதற்காக கெஞ்சுகிறாய்... இப்போது உனக்கு என்ன செய்யவேண்டும்...? சமைக்கவேண்டும்... அவ்வளவுதானே...” என்றான் அவன்.

“இல்லையாத்மன்... நாமே நம்முடைய வேலைகளைச் செய்யவேண்டும்... அதற்கு எதற்கு வேலையாட்கள்...” என்றாள் சர்வமகி அவசரமாக.

“ஓக்கே... உனக்கு என்ன என்ன செய்யப் பிடிக்கிறதோ, அதை செய்துகொள். பட் ஒன் கண்டிஷன்...” என்றதும், முகம் மலர

“என்ன?” என்றாள் அவள் ஆர்வமாக.

“எந்தக் கடுமையான வேலையும் நீ செய்யக் கூடாது... ப்ராமிஸ் மி....” என்றான் அவன் அழுத்தமாக.

“ஓக்கே... நான் எந்தக் கடுமையான வேலைகளும் செய்யமாட்டேன்...” என்று அவள் சத்தியம் செய்ய,

“அது மட்டுமல்ல... குறைந்தது வீட்டு வேலைகளைச் செய்ய இருவர் இங்கே இருக்கவேண்டும்... இல்லையென்றால், இந்த வீட்டைத் துப்பரவாக்கும் வேலையையும் நீ செய்யத் தொடங்கிவிடுவாய்...

அதற்கு நான் சம்மதிக்கமாட்டேன்...” என்றதும். அதற்கும் அவள் சம்மதம் சொன்ன பிறகே டேவிட்சனிடம் சென்றான். சர்வமகியும் அவனைப் பின்தொடர்ந்தாள்.

“டேவிட்சன்... கொஞ்ச நாட்களுக்கு இவர்களுக்குப் பேய்ட் லீவ் கொடுத்து விடுங்கள்... எப்போ என் மனைவி, சமையலுக்கு வேலையாட்கள் வேண்டும் என்கிறாளோ, அப்போது இவர்கள் வரட்டும்... இருவர் மட்டும் இந்த வீட்டு வேலைகள் செய்வதற்காக இருக்கட்டும்...” என்று கூற, டேவிட்சன் சிறு தலையசைப்புடன் வெளியே விடைபெற்று சென்றான்.

“ஆர் யு ஹப்பி நவ்?” என்றான் அநேகாத்மன்.

அவள் முகம் முழுவதும் பூரிப்புடன், தலையை ஆட்டிவிட்டு, “நீங்கள் இன்னும் பதில் சொல்லவில்லையே...” என்றாள் சர்வமகி ஆர்வத்துடன்.

“எதுக்கும்மா...?” என்று புரியாமல் கேட்டான் அநேகாத்மன்.

“டீயா கா஼பியா?” என்றாள் அதே புன்னகை மாறாமல்.

“பிளக் கா஼பி...” என்று அவன் கூற, அதை எடுத்துவருவதற்காக உள்ளே சென்றாள். அவள் நடக்கும் அழகையே ரசித்தவன், இரும்பு இழுத்த காந்தமாக, அவள் பின்னாலேயே சென்றான்.
கதவில் கைகட்டி, சாய்ந்திருந்தவாறு அவள் காப்பி வார்க்கும் அழகையே இரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தவன்,

“ஏன் சர்வமகி... நீ சேலை உடுப்பதில்லையா?” என்றான் திடீர் என்று.

“உடுப்பேன்... கோவிலுக்கும், எங்காவது ஃபங்ஷன் என்றாலும் உடுப்பேன்... ஏன் கேட்கிறீர்கள்?” என்றாள் வியப்புடன்.

“நத்திங்... நீ சேலை உடுத்தால் நன்றாக இருக்குமே என்று யோசித்தேன். நேற்று நம் திருமணத்திற்கு நீ சேலை உடுத்திருந்தபோது, என்னால் என் வழிகளையே விலக்கமுடியவில்லை... அத்தனை அழகாக இருந்தாய் நீ...” என்றவன், சமையலறைக்குள் நுழைந்தான். அவள் அருகே நெருங்கி நின்றவாறு சமையலறை மேடையில், இரண்டு கரங்களையும், பின்புறமாக முட்டுக்கொடுத்து, சாய்ந்து நின்றவன்

“டு யு நோ வட்... என்னுடைய அம்மா... பானுமதி உயிரோடு இருக்கும் வரை சேலைதான் அணிவார்கள். இங்கே கனடா வந்த பிறகும் அவர்கள் தன் ஆடையில் மாற்றம் செய்யவில்லை. எந்தக் குளிர் காலத்திற்கும்

சேலைதான்...” என்றான் அவன்.

அவனுடைய தொணியிலிருந்து அவனுக்கு சேலை பிடிக்கும் என்பது தெரிந்தது.

“உங்கள்...அம்மா... வந்து... உங்கள் அம்மா... இப்போது...” என்று முடிக்காமல் அவனைப் பார்த்தாள்.

“ம்... எனக்கு பதினொரு வயதில் இறந்துவிட்டார்கள். கார் அக்சிடன்ட்... அதற்குப் பிறகு என்னை வளர்த்தது எல்லாமே நனிதான். வளர்ந்த பிறகு யுனிவர்சிட்டி ஹஸ்டலில் இருந்துதான் படித்தேன். பட் அப்பாவின் கண்காணிப்பிலிருந்து என்னால் விலகமுடியவில்லை. வளர்ந்ததும் அப்பா பிஸ்னசைப் பற்றிய நெழிவு சுழிவுகளைக் கற்றறி என்றார். எனக்கு லோதான் பிடிக்கும். அதனால் என்னைத் தடுக்காமல் உன் இஷ்டம் என்று விட்டுவிட்டார். கிரிமினல் லோ படித்தேன்... இப்போது அப்பாவின் பிஸ்னசையும் பார்க்கிறேன்...” என்று அவன் கூற சர்வமகியின் முகம் இருண்டது.

‘அவனுடைய தந்தையின் இறப்பிற்குக் காரணம் அவள் தந்தை என்றுதான் அவன் இன்னும் நினைக்கிறானோ?’ அவள் முக வாட்டத்தை உடனேயே கண்டுகொண்டவன்,

“ஹே வட் ஹாப்பன்? திடீர் என்று அமைதியாகிவிட்டாய்?” என்றான் சற்று யோசனையாக.

“நத்திங்...” என்று அவசரமாகத் தன் பார்வையை மாற்றியவள், காப்பி வார்ப்பதில் கவனம் செலுத்தினாள். இல்லையென்றால், அவள் கண்களை வைத்தே அவள் உள் மனதில் உதிப்பதைப் புரிந்து கொள்வான்.

ஆனால் அவனோ, அவளின் மன ஓட்டத்தைப் புரிந்துகொண்டவனாக அவளை நெருங்கினான். அவள் தோளில் தன் கரத்தைப் பதித்தவன்,

“பாஸ்ட் இஸ் பாஸ்ட்... நீ இதையெல்லாம் நினைத்து வருந்தக் கூடாது மகி... நீ மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அதுதான் நமக்கு முக்கியம்...” என்றவன் அவளுடைய தோளிலிருந்து தன் கரத்தை எடுக்கப் பிடிக்காதவனாக மெதுவாக அழுத்திக் கொடுத்தான்.

முகம் சிவக்க அவனிடமிருந்து தன்னை விலக்கிக் கொண்டவள், அவனிடம் காப்பியை நீட்டினாள்.

வாங்கியவன், உதட்டில் புன்னகை மலர முன்னறைக்கு வந்தான். அவனிடம் ஏதோ கேட்க சர்வமகி நினைத்தவள், திரும்பிச் சென்றுகொண்டிருக்கும் அவன் முதுகைப் பார்த்து, கேட்காமல் திரும்ப, இவனோ திரும்பி,

“என்னம்மா...” என்றான். மனதில் எழுந்த திகைப்பை முகத்தில் காட்டி,

“ஒன்றுமில்லை என்று தலையை மறுப்பாக ஆட்ட,”

“ப்ச்... ஏதோ கேட்கவந்துவிட்டு, மறுப்பாக தலையாட்டுகிறாயே... எதுவாக இருந்தாலும் கேள்...” என்றான்.

“இ... இல்லை... சாமியறை எங்கே இருக்கிறது?” என்றாள் அவள் தயக்கமாக.

ஒரு வாய் கொ◌ம்பியைக் குடித்தவன், முகம் இறுக சர்வமகியைப் பார்த்தான்.

“சர்வமகி... எனக்கு... இந்த கடவுள் நம்பிக்கையெல்லாம் கிடையாது... உனக்குப் பிடித்தால், ஏதாவது ஒரு அறையை சாமியறையாகப் பாவித்துக்கொள்...” என்றான்.

அவனுடைய முகத்தில் தெரிந்த இறுக்கமும், அவன் அழைத்த சர்வமகியிலும், அவன் கோபம் புரிய, இவள் முகம் சோர்ந்தது.

அவள் முகத்தில் தெரிந்த சோகத்தை உடனே கண்டுகொண்டவன்,

“மகிம்மா... இப்போ எதற்கு இந்த சோர்வு... சாரி... அம்மா இறந்த பின், எனக்கு இந்தக் கடவுள் நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது. அதற்காக நீ சாமி கும்பிடுவதை நான் தடுக்கமாட்டேன்... என்ன... என்னை இதில் திணிக்காமல் விட்டால் போதும்...” என்று கூற, இவள் சம்மதம் என்று தலையாட்டினாள்.

“என்ன... என் மீது கோபமா?” என்றான் இவன் கனிவுடன். இவள் இல்லை என்று வேகமாகத் தலையை ஆட்ட,

" அப்போ வாயில் கொழுக்கட்டை நன்றாக இருக்கிறதா? " என்றான் தீவிரமாக.

“வாயில் கொழுக்கட்டையா... இல்லையே... ஏன்?” என்று இவள் புரியாமல் திகைத்து விழிவிரியக் கேட்க, அந்த அழகை ரசித்தவனாக,

“இல்லை சற்றைக்கு முன் நான் கேட்ட கேள்விகள் எல்லாவற்றிட்கும், தலையை மட்டும் ஆட்டினாயே... வாய் திறந்து பதில் கூறவில்லையே ஒரு வேளை கொழுக்கட்டை ஏதாவது தின்கிறாயோ என்று நினைத்துக் கேட்டேன்...” என்றான் இவன் கிண்டலாக.

‘அட... இவன் கூட, கிணடலடிப்பானா?’ என்கிற திகைப்பு மாறாமலே, வாய் திறந்தவாறு அவனைப் பார்க்க, திறந்த வாயைக் கண்டவன், அதை அப்படியே விட்டுவிட முடியாது, தன் இதழ்களாலேயே அவள் வாயை மூடிவிட்டு நிமிர, இவள் விழிகள் தெறித்து விழுந்துவிடும் போல விரிந்து நின்றன.

திடீர் என்று பதித்த முத்தத்தால், அதிர்ந்துபோய் நின்றவளைக் கண்டு நகைத்தவாறே, முன்னறைக்கு வந்தவன், ஒரு சோ஻பாவில் சாய்ந்தமர்ந்தவாறு, அங்கிருந்த செய்தித்தாளைப் படிக்கத் தொடங்கினான்.
அங்கே அப்போதுதான் பிரதீபனும் குளித்துவிட்டு புதிதாக ஆடை அணிந்துகொண்டு வந்திருந்தான்.
அநேகாத்மனைக் கண்டதும், அவன் முன்பாக வந்தமர்ந்தான்.

“அத்தான்... நான் உங்களிடம் சற்றுப் பேச... முடியுமா?” என்றான் தயக்கமாக. உடனே தன் கரத்திலிருந்த செய்தித்தாளை மடித்து ஓரமாக வைத்தவன், சாய்ந்து அமர்ந்தவாறு,
“சொல்லு பிரதீபன்...” என்றான்.

“இல்லை... வந்து... நான்... ஏதாவது கோர்ஸில் சேரலாம் என்று நினைக்கிறேன்... அது எந்தக் கோர்சில் சேருவது என்றுதான்...” என்று அவன் தயங்க,

“உனக்கு இப்போது பதினாறு வயதுதானே... பார்க்கப் போனால் பதினோராம் வகுப்புப் படிக்கவேண்டுமே... ஏதாவது நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படி பிரதீபன்...”

“இல்லை அத்தான்... பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிப்பதாக இருந்தால் நீண்ட நாட்கள் வேலை செய்யக் காத்திருக்கவேண்டும். அதை விட ஏதாவது கோர்ஸில் சேர்ந்தால் விரைவாகவே சம்பாதிக்க முடியுமே...”

“அப்படி விரைவாக சம்பாதிக்க என்ன அவசரம் பிரதீபன்...” என்றவனின் குரலில் சற்று அழுத்தம் அதிகமாகத் தெரிய,

“அவசரம் என்றில்லை அத்தான்... உங்களுக்குப் பாரமாக எவ்வளவு நாட்கள்தான் நான் இருப்பது...” என்றான் அவன் தலையைக் குனிந்தவாறு.

அவனுடைய பேச்சால் கோபம் கொண்டவனாக கொஞ்ச நேரம் உதட்டை அழுந்த மூடி அமைதி காத்தான் அநேகாத்மன்.

“உன்னுடைய தன்மானத்தை நான் பாராட்டுகிறேன் பிரதீபன். உன் அக்காவை மணந்த போது நீங்கள் என் பொறுப்பு என்று உறுதி கூறித்தான் அவளை மணந்தேன். தவிர உன் தந்தையின் மரணத்தின் இறுதி நிமிடத்தில் உங்களைப் பார்த்துக்கொள்வதாக நான் வாக்கும் கொடுத்திருக்கிறேன்... எப்போது உன் அக்காவை நான் மணந்தேனோ அந்த நிமிடத்தில் இருந்து உங்கள் பொறுப்பு முழுவதும் என்னதாகிவிட்டது. உங்கள் நால்வருக்கும் எது நல்லது, எது கெட்டது என்பதை நானும் உன் அக்காவுமாக முடிவுசெய்கிறோம். நீயாக முடிவெடுத்து ஒன்றை செய்வதற்கு இன்னும் காலம் இருக்கிறது. அதற்குரிய வயதும் பக்குவமும் உனக்கில்லை... அதனால் தேவையில்லாத சின்ன சின்ன விஷயத்திற்கெல்லாம் மனத்தைப் போட்டுக் குழப்பாமல் சின்னப் பிள்ளைக்குரிய லட்சனத்துடன் நடக்க முயற்சிசெய்... என்ன புரிந்ததா?” என்று அவன் அழுத்தமாக சொல்லப்போனால் சற்றுக் கோபமாகவே, கூற பிரதீபன் விழிகளில் நீர் மல்க அவனைப் பார்த்தான்.

“அத்தான்... நான் உங்களுக்கு எப்படி...” என்று அவன் தவிக்க,

“ஷ்... அதுதான் கூறிவிட்டேனே... இப்போது எதற்கு அந்தத் தவிப்பு... தவிர உங்கள் நால்வருக்கும் வேண்டிய ஏற்பாடுகளை நான் ஏற்கெனவே செய்துவிட்டேன். அபிதன் நீ இருவரும் ஒரே பாடசாலையில்தான் படிக்கப்போகிறீர்கள். கனடாவிலேயே பெஸ்ட் பிரைவட் ஸ்கூல். அதற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் ஏற்கெனவே செய்தாகிவிட்டது. இந்தத் திங்கள் நீங்கள் பள்ளியில் சேருகிறீர்கள்... மாதவிக்கும் தேவகிக்கும் யுனிவர்சிட்டிக்கு அப்ளை பண்ண வேண்டும். அவர்களுக்கு என்ன என்ன சப்ஜக்ட் என்று பார்த்துத்தான் அதைத் தொடங்கலாம். அதை நானும் உன் அக்காவும் பார்த்துக்கொள்வோம்... அதனால் அதைப் பற்றி பிரச்சனை உனக்குத் தேவையில்லை. எனக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று நீ ஆசைப்பட்டால், நன்றாகப் படி. அது போதும் எனக்கு...” என்றதும் பிரதீபன் எழுந்தான்.

“அத்தான்... உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத்

தெரியவில்லை. நிச்சயமாக நான் நன்றாகப் படிப்பேன். உங்கள் பெயரை நான் காப்பாற்றுவேன். ஐ பிராமிஸ் யு...” என்றான் உறுதியுடன்.
இருக்கையை விட்டு எழுந்து, பிரதீபனின் தோளிலே தட்டிக் கொடுத்தவன்,

“தட்ஸ் மை பாய்...” என்றான் பெருமையுடன்.

அது வரை சமையலறையிலிருந்து அவன் பேசுவதையே கேட்டுக்கொண்டிருந்த சர்வமகி, சிலிர்த்துப் போனாள்.

இவனை மணக்க அவள் எத்தனை ஜென்மமாகப் புண்ணியம் செய்தாளோ தெரியவில்லை? அவனுடன் இணைந்து வாழக் கடவுள் அவளுக்கு ஏன் ஆயுளை மட்டும் கொடுக்கவில்லை?
முதன் முதலாக தான் உயிருடன் வாழவேண்டும் என்கிற ஆசை எழுந்தது.

சுவர் ஓரமாகச் சாய்ந்து அமர்ந்திருந்த சர்வமகியின் விழிகளில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.
குடித்த கோப்பையை உள்ளே வைக்க வந்த அநேகாத்மன் சர்வமகியைக் கண்டதும் பதறிப்போனான்.

“சர்வமகி... ஆர் யு ஓக்கே... தலை வலிக்கிறதா? டாக்டரிடம் போகலாமா?” என்று தவித்தான்.

இல்லை என்று தலையாட்டியவள், அவனை நெருங்கினாள். அவன் மார்பில் தன் தலையைப் வைத்தவள், அவன் கழுத்தைச் சுற்றி எக்கித் தன் கரங்களை மாலையாகப் போட்டவாறு அழுதாள். அவள் ஏன் அழுகிறாள் என்பது தெரியாமல் மலைத்தவன், அவளைத் தன்னுடன் இறுக்கி அணைத்துக் கொண்டான்.

“என்னடா? என்ன பிரச்சனை... எதற்காக அழுகிறாய்?” என்றான் தவிப்புடன்.

கொஞ்ச நேரம் அப்படியே இருந்தவள், “உங்... உங்களுக்கு எப்படித் தாங்ஸ் சொல்வது என்று... என்று...” என்றவள் மீண்டும் அழுகை வர உடல் குலுங்கினாள்.

“பைத்தியம்... தாங்ஸ் எதற்காக நீ சொல்ல வேண்டும்...” என்றான் எதுவும் புரியாமல்.
மெதுவாக அவனிடமிருந்து விலகியவள் சிரமப் பட்டுப் புன்னகைத்தாள்.

“எல்லாவற்றிட்கும்தான்...” என்றவள் தன் கண்ணீரைப் பிறங்கையால் துடைத்தாள்.

“ஐ ஆம் சோ ஹப்பி ஆத்மன்... ரியலி ஐ ஆம் சோ ஹாப்பி... இப்போது... இந்தத் தருணத்தில் நான் சாகப்போகிறேன் என்றாலும்... நான் பயப்படப்போவதில்லை...” என்று பெரும் மகிழ்ச்சியுடன் சொன்னவளை இழுத்து அணைத்தான் அநேகாத்மன்.

“ப்ளீஸ்... மீண்டும் ஒரு முறை சாவைப் பற்றிப் பேசாதே... என்னால்... என்னால் அதைக் கேட்க முடியாது... எங்களுக்கு நீ வேண்டும்... நீ இல்லாத உலகம் வெறும் வெறும்... பாலை வனம்... சுடுகாடு... நிழல் இல்லாத நிலம்... நீர் இல்லாத ஊர்...” என்றவன் அவளை மூச்சு முட்டும் அளவுக்கும் இழுத்து இறுக அணைத்து விடுவித்தவன், அவள் முகத்தைப் பார்க்க முடியாதவனாக, வேகமாக விலகிச் சென்றான். சர்வமகி அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தாள். .

நிலவு 41

தொடர்ந்து சர்வமகியைப் பரிசோதிக்கும் நாளும் நெருங்க நெருங்க, இவனுக்கும் வேறு யோசிக்கும் எண்ணமும் வரவில்லை.

மூளையில் வளரும் கட்டி கான்சரா, இல்லையா என்பதைப் பரிசோதிக்க முதல் கட்ட பரிசோதனைக்கு சர்வமகியை அன்று அழைத்து வந்திருந்தான் அநேகாத்மன்.

நேரம் போகப் போக அவன் முகத்தில் மருந்திற்கும் புன்னகையில்லை. உடல் இரும்பென இறுகியிருந்தது. அவர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்களோ என்கிற அச்சம், அவனை நிம்மதியில்லாமல் தவிக்கவைத்தது.

கொஞ்ச நேரத்தில் அவளை உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவனும் கூடவே சென்றான். இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. அவளுக்குக் குத்தியபோது, இவனால் அதைக் கண்கொண்டு பார்க்கமுடியவில்லை. வேகமாகத் திரும்பி நின்றுகொண்டான். ஆனால் அவன் முகத்தில் மட்டும் எழுந்த வலி, குறையவேயில்லை.

எம் ஆர் ஐ, சி டி ஸ்கானிங் செய்யப்பட்டது. எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அன்ஜியோக்ராம், ஸ்பைனடல் டப்... இப்படி ஆயிரம் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் ஏதாவது சந்தேகப்படும்படியிருந்தால், பின்பு கட்டியில் ஒரு சிறு துண்டை எடுத்து, அது கான்சர்தான் என்பதை உறுதிசெய்வார்கள்.

அதில் வேறு அவள் சித்திரவதை அனுபவிக்கவேண்டும். அவனுக்கு நினைக்கும்போதே வலித்தது.
அவளை ஒரு நாள் அனுமதித்து, பயப்சி செய்து அனுப்பினர். அன்றும், மறுநாளும் சர்வமகியை அநேகாத்மன் கீழே இறங்க விடவில்லை. அவளுக்கென்று தனியாக ஒரு தாதியை நியமித்தான். ஒவ்வொரு கணமும், அந்தத் தாதியின் கண்காணிப்பிலும், அவனுடைய கண்காணிப்பிலும் இருக்குமாறு பார்த்துக்கொண்டான்.

எனக்கொன்றுமில்லை என்று அவள் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்டானில்லை.
இரவின் தனிமையில், அவள் தூங்கிய பின், அவளை இழுத்துத் தன் அணைப்பில் வைத்துக்கொண்டு நீண்ட நேரம், அவளுடைய முடியை வருடிக்கொடுத்தவாறு உறங்காமல் இருப்பான். மனம் மட்டும், அவள் மீண்டு வந்துவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டேயிருக்கும்.

இரண்டு நாள் கழித்து அவர்களை வரச்சொல்லி வைத்தியசாலை அறிவித்திருந்தது. உடனே சர்வமகியை அழைத்துக்கொண்டு சென்றான் அநேகாத்மன். அவனுடைய இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. எங்கே இதயம் தொண்டைக்குள் இடமாறித் துடிக்கத் தொடங்கிவிடுமோ என்று இவன் அஞ்சினான்.

வைத்தியர் அவனை உள்ளே அழைக்கும் வரைக்கும், இவன் நிம்மதியில்லாமல் அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்தான். அவனுக்கு உடல் நடுங்கியது.

“ஆத்மன்... ப்ளீஸ்... எதற்கு இப்படி டென்ஷனாகிறீர்கள்... எது நடக்கவேண்டுமோ அதுதானே நடக்கும்...” என்று இவள் சமாதானப் படுத்தும் அளவுக்கு அவன் நிலை இருந்தது.

“கண்ணம்மா... உனக்கு ஒன்றுமில்லை... உனக்கு ஒன்றுமேயில்லை... நான் இருக்கும்வரை உனக்கு எதுவும் ஆகவிடமாட்டேன்... ஐ ப்ராமிஸ் யு...” என்று அவளைச் சமாதானப் படுத்துவது போலக் கூறினாலும், அந்த சமாதானம் அவனுக்காகவே கூறப்பட்டது என்பதை யாரும்

அறியவில்லை.
மீண்டும் சர்வமகி உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள். மீண்டும் அவளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டது.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரப் பரிசோதனையின் பிறகு, வைத்தியர் அவர்களைத் தன் அறைக்கு அழைத்தார்.

பெரும் படபடப்புடன் அநேகாத்மன் அவரின் அறைக்குள் நுழைந்தான்.

“உட்காருங்கள் மிஸ்டர் அநேகாத்மன்...” என்றவர் சர்வமகியின் ரிப்போர்ட்டை முன்னால் வைத்தார். அதைக் கண்டதும், அநேகாத்மனின் முகம் வெளுறிப்போனது. உடலில் உள்ள அனைத்து இரத்தமும் வடிந்துபோனது போல பதைத்துப் போனான். அந்த கோப்பு எத்தகைய செய்தியைத் தாங்கி வந்திருக்கிறதோ...

கரங்களுடன் மனமும் சேர்ந்து நடுங்க, சர்வமகியின் கரங்களைப் பற்றியவாறு அமர்ந்திருந்தான். ஏதோ அவள் கை பலமே அவனுக்கு தாங்கும் சக்தியைக் கொடுக்கும் என்பதுபோல.

“அநேகாத்மன்... ஐ ஹாவ் டூ நியூஸ் ஃபார் யு... வன் இஸ் குட்... அன்ட் அதர் வன் இஸ் நாட் குட். உங்களுக்கு முதலில் எந்த நியூசைச் சொல்வது...?” என்றார் யோசனையாக.

அநேகாத்மன் தன் உடலில் உள்ள இரத்தம் முழுவதும் வடிந்துபோவதுபோல உணர்ந்தான். எச்சிலைக் கூட்டி முழுங்கியவன்,

“முதலில் பாட் நியூசையே சொல்லுங்கள் டாக்டர்...” என்றான் நடுங்கும் குரலில்.

“மூலையில் உள்ள கட்டியின் அளவு அதிகரித்துக்கொண்டு செல்கிறது... உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும்... இல்லாவிட்டால்... உடலில் ஏற்படும் வேதனையை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது... தவிர அறுவைச் சிகிச்சையும் பெரும் சிக்கலானதாகவே இருக்கும். அறுவைச் சிகிச்சையில் அவர் தப்புவதற்கு முப்பது விகிதம்தான் வாய்ப்பிருக்கிறது... ஐம்பது விகிதம் கோமா, அல்லது ஸ்ட்ரோக்... இருபது விகிதம்...” என்றவர் முடிக்காமல் அநேகாத்மனைப் பார்த்தார். அநேகாத்மனின் முகம் இரத்தப்பசையின்றிப் போனது. காதுகள் அடைத்தன. விட்டால் இப்போதே வாழ்வில் முதன் முறையாக மயங்கிவிடுவான் போல விறைத்துப்போய் நின்றான். அவனையும் அறியாமல் கரங்களும் கால்களும் நடுங்கத் தொடங்கின.

“குட் நியூஸ்...” என்றான் அவன் வேதனையுடன்.

“திஸ் இஸ் நொட் எ கான்சர்... சிறு வயதில் தவறுதலாக எங்கோ பலமாக விழுந்ததால் ஏற்பட்ட இரத்தக் கசிவு... கவனிக்காமல் விட்டதால், அது கட்டியாக மாறியிருக்கிறது.... அல்லது ஜெனட்டிக் பிரச்சனையாகவும் இருக்கலாம்...” என்றார்.

இது கான்சர் இல்லை என்பதற்காக மகிழ்வதா, இல்லை, அவள் இனி அனுபவிக்க இருக்கும் சித்திரவதையை எண்ணிக் கலங்குவதா என்று புரியாமல் தவித்தான் அநேகாத்மன்.

“இதற்கு வேறு ஏதாவது, சிகிச்சை இருக்கிறதா டாக்டர்...” என்றான் அவன் கலக்கத்துடன்.

“இல்லை மிஸ்டர் அநேகாத்மன். அந்தக் கட்டி இருக்கும் இடம் ஆபத்தான இடம். அந்த கட்டியை நீக்க ஒரே வழி... ஓப்பன் ஸ்கல்ப் சேர்ஜரி... வெரி ஹார்ட் அன்ட் ட்ரிக்கியான சேர்ஜரி... என்னைக் கேட்டால், ஹோப் ஃபோர் த பெட்டர்...” என்றார் அவர். அவன் தடுமாற, சர்வமகி அவனைத் தட்டிக்கொடுத்தாள்.

“மிஸ்டர் அநேகாத்மன், என்னைக் கேட்டால், தாமதிக்காமல், இந்த சிகிச்சையை உடனடியாக செய்வது நல்லது... இந்தக் கட்டி, இனியும் வளர்ந்தால், அது உங்கள் மனைவிக்குத்தான் பெரும் பின் விளைவுகளைக் கொடுக்கும்...” என்றார் அவர்.

அநேகாத்மன் உதடு கடித்து நீண்ட நேரமாக அமர்ந்திருந்தான். பெரும் கலக்கத்துடன் சர்வமகியைப் பார்க்க, அவளோ தன் கலக்கத்தை மறந்து, அவன் கலங்குவது பிடிக்காமல், தன் விழிகளை மூடித் திறந்து, அவனுக்கு தைரியம் ஊட்டினாள்.

ஒரு வாறு தன்னைத் திடப்படுத்தியவன்,

“ஓக்கே... எதுவாக இருந்தாலும் அவளுக்கு வேண்டிய சிகிச்சையை ஆரம்பியுங்கள். பணத்தைப் பற்றிப் பிரச்சனையில்லை. என் மனைவி எனக்கு உயிரோடு வேண்டும். அது எப்படியாக இருந்தாலும் ஐ டோன்ட் கெயர். உலகில் உள்ள அத்தனை பெஸ்ட் டாக்டர்சும் என் மனைவிக்கு சிகிச்சை கொடுக்கவேண்டும். வில் யு டூ தட்?” என்றான்.

அவரோ, “டோன்ட் வொரி மிஸ்டர் அநேகாத்மன்... வீவில் டூ அவர் பெஸ்ட்...” என்று உறுதி கூற, அதற்கு மேல் பேச ஒன்றுமில்லை என்பது

போல சர்வமகியின் கரத்தை விடாது பற்றியவாறு, வெளியே சென்றான்.

சர்வமகியை வைத்தியரிடம் அழைத்துச் சென்று வந்த பிறகு அநேகாத்மனிடம் நிறைய மாற்றங்கள் காணப்பட்டன. அவன் பெரும்பாலும் சர்வமகியுடனேயே அதிக நேரத்தைச் செலவழித்தான். வெளியே எங்கே செல்வதாக இருந்தாலும் சர்வமகியையும் அழைத்துச் சென்றான். இரவில் தூங்கும்போது அவள் அருகேயே இருந்து அவளைப் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் நன்றாக தூங்கிவிட்டாள் என்பதை அறிந்ததும், அவளுடைய கரத்தைப் பற்றித் தன் இடது மார்பில் அழுத்தமாகப் பதித்துக்கொண்டு நீண்ட நேரம் அப்படியே இருப்பான்.

சர்வமகியும் தூங்குவதுபோல பசாங்கு செய்வாளே தவிர, அவளும் அவனுடைய அருகாமையைப் பெரிதும் விரும்பினாள். விழிகளை மூடி அவனுடைய கதகதப்பை நன்றாகவே அனுபவித்தாள். இப்படியே ஆயுள் வரை நிம்மதியாக இருந்துவிட வேண்டும் என்று உள்ளம் ஏங்கியது.

இதற்கிடையில் இருவருமாக பிரதீபன், அபிதன் ஆகிய இருவரையும் தனியார் பாடசாலையில் சேர்த்துவிட்டு வந்தார்கள்.

தேவகிக்கும் மாதவிக்கும் பிடித்த பாடம் யோர்க் யுனிவேர்சிட்டியிலேயே கிடைத்ததால், அங்கேயே அவர்களைச் சேர்க்க முடிவுசெய்தார்கள். தவிர அவர்களின் வீட்டில் இருந்து போய் வரும் தூரம் என்பதால், எல்லோருக்குமே அது பெரும் நிம்மதி.

காலையின் அநேகாத்மன் அவனுடைய வேலைத்தளத்திற்குப் போனான் என்றால், மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்துவிடுவான். அதன் பின், சர்வமகியைச் சுற்றிக்கொண்டு திரிவானே அன்றி, வேலைக்குப் போகும் எண்ணமே இருக்காது.

காலம் இப்படியே போய்க் கொண்டிருந்தால், அனைவருக்கும் நிம்மதிதான்... ஆனால்....

தொடரும்....

அன்று முக்கிய வேலையிருந்ததால், வேலைத் தளத்திற்கு நுழைந்த அநேகாத்மனின் மேசையில் ஒரு மஞ்சள் துண்டுக் காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. அதைக் கரத்தில் எடுத்துப் பார்த்தான்.

டேவிட்டிடமிருந்துதான் வந்திருந்தது. அவனை சந்திப்பதற்காக அவன் நேரம் கேட்டிருந்தான். அவன் உதவியாளன் கேர்வினை அழைத்து, உடனடியாக டேவிட் தன்னை வந்து சந்திப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு உத்தரவிட, அடுத்த அரை மணி நேரத்தில் டேவிட் அநேகாத்மனின் முன்னால் வந்து நின்றான்.

ஏதோ ஒரு ஃபைலை கபிநெட்டில் இருந்து எடுத்துக்கொண்டிருந்தவன், டேவிட்டைக் கண்டதும் தன் வேலையை விட்டுவிட்டு, அவன் முன்னால் மார்புக்குக் குறுக்காக, கைகட்டி, மேசையில் சாய்ந்தவாறு அமர்ந்து கொண்டு,

“சோ... வட்ஸ் அப்...” என்றான் கூர்மையாக.

“யு ஆர் ரைட் அநேகாத்மன்...” என்றவாறு அந்த ஃபைலைக் கொடுத்தான் டேவிட். அதை அலட்சியமாக வாங்கியவன், ஒவ்வொரு தாளாகத் திருப்பினான். திருப்பத் திருப்ப அவன் முகம் இறுகிக்கொண்டு சென்றது. அதைப் படித்து முடித்ததும், அநேகாத்மனின் முகம் கடுமையாக மாறியது. கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல், அமைதி காத்தான் அநேகாத்மன்.

ஃபைலை மேசையில் போட்டுவிட்டு இருந்த நிலை மாறாமலே தன் இரு உள்ளங்கைகளையும் இடுப்புக்குப் பின்னால் மேசையில் முட்டுக்கொடுத்தவாறு, தன் உதடுகள் இணையும் ஓரத்தை வேட்டைப் பற்களால் நன்னியவாறு கொஞ்ச நேரம் அமைதிகாத்தான்.

அவனுடைய முகம், எதையோ அவன் தீவிரமாக யோசிக்கிறான் என்பதைச் சொல்லாமல் சொல்ல, சற்று நேரம் பொறுமை காத்த டேவிட்,

“வட் நெக்ஸ்ட்...” என்றான்.

“பால் இஸ் இன் மை கோர்ட்...” என்றவன் சிரித்தான். அந்த சிரிப்பைக் கண்ட டேவிட்டிற்கே ஒரு முறை உள்ளம் நடுங்கியது.

“நேகன்... ப்ளீஸ்... டோன்ட் ப்ளே எனி நாஸ்டி கேம்...” என்றான் அறிவுரை போல.

ஒரு கணம் டேவிட்டை அழுத்தமாகப் பார்த்த அநேகாத்மன் தன் நிலை மாறி எழுந்து நின்றான். சற்றுக் கால்களை அகட்டி, மார்புக்குக் குறுக்காத் தன் கரங்களைக் கட்டியவாறு, தன் வலது தோளை ஒரு முறை அசைத்து,

“டூ யு நோ வட்... இது வரை எனக்கு அறிவுரை சொல்லும் தகுதியை நான் யாருக்கும் கொடுத்ததில்லை...” என்றான் பெரும் அழுத்தமாக. அந்தக் குரலில் வாயடைத்த டேவிட்,

“இல்லை நேகன்... ஐ நோ யு வெரி வெல்... அஸ் எ ஃப்ரன்ட்... உன்னைத் தடுப்பதும் என் கடமை... ப்ளீஸ்... எதுவாக இருந்தாலும், இரு முறை யோசித்து செய்...” என்றான் தன்மையாக.

“ஓக்கே டேவிட்... யுவர் டைம் இஸ் ஓவர்... யு கான் கோ நவ்...” என்று வாசலை விழிகளால் காட்ட, ஒரு கணம் அநேகாத்மனை வருத்தத்துடன் பார்த்தான் டேவிட்.

“யு நெவர் சேன்ஜ் நேகன். ஓக்கே... என்னுடைய கடமைக்கு சொல்லிவிட்டேன். இனி கேட்பதும், மறுப்பதும் உன் பொறுப்பு... உனக்கு நான் சொல்லவேண்டியதில்லை. இருந்தாலும் சொல்கிறேன்.. பி கெயர்ஃபுள்...” என்று கூறிவிட்டு, அநேகாத்மனின் முஷ்டியில் குத்திவிட்டு வாசலை நோக்கிச் சென்றான் டேவிட்.
சென்றவன் கதவைத் திறந்து, திரும்பி அநேகாத்மனைப் பார்த்தான்.

“ஹேய்... எது எப்படியாக இருந்தாலும், நான் உன் நண்பன்... எப்போதும், எந்த சந்தர்ப்பத்திலும் உனக்கு உதவத் தயாராக இருக்கிறேன்... நெவர் ஃபொர்கெட் தட்...” என்று உறுதியாகக் கூறிவிட்டு செல்ல, அவனுக்குத் தலையாட்டிவிட்டுத் திரும்பியவனின் முகத்தில் கொலைவெறி தாண்டவமாடியது.
விழிகளை மூடியவனின் மனதில் சர்வமகியின் விம்பம் அவனைப் பார்த்து இரஞ்சியது.

“ப்ளீஸ்... நம்புங்கள்... என் தந்தை எந்தக் குற்றமும் செய்யவில்லை...” சடாரென்று இமைகளைத் திறந்தவனின் விழிகள் செக்கச் சிவந்திருந்தன.

‘நீ இதற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும்...’ என்று

முணுமுணுத்தவன், அலட்சியமாகத் தனக்கருகேயிருந்த தொலைபேசியை எடுத்து கேர்வினை அழைத்தான்.

“கேர்வின்... ஐ ஹாவ் டு கோ... எந்த வேலையிருந்தாலும், அதை நீயே பார்த்துக்கொள்... எக் காரணம் கொண்டும் என்னை அழைக்காதே... புரிந்ததா?” என்று அவன் கடுமையாகக் கூற, அந்தக் குரலுக்கு பணியாமல் இருக்க அவன் என்ன மடையனா?

“ஓக்கே சார்...” என்று அவன் அவசரமாகக் கூற, அடுத்த இருபதாவது நிமிடம், அவன் போய் நின்ற இடம் கவிதா இன்டஸ்ட்ரி பிரைவட் லிமிடட்.

நேரத்தைப் பார்த்தான்... ஒரு மணி. இப்போது போனால் அவன் நிற்பானா? தெரியவில்லை. காரை விட்டு இறங்கியவன், நேராக அந்த அலுவலகத்திற்குள் நுழைந்தான்”

நெடு நெடுவென்ற உயரத்தில், திமிறிய புஜங்களும், விழிகளில் கூளிங்கிளாஸ் குடியிருக்க அவன் அகன்ற மார்பை மேலும் அகலமாக்குவது போல கறுப்பு நிற லதர் ஜாக்கட்டுன் அருகே வந்து நின்றவனை இமைகூட மூட மறந்து பார்த்துக்கொண்டிருந்தாள் அந்த வரவேற்புப் பெண்.
அநேகாத்மனின் விழிகளோ, நாளா புறமும் சுழன்றடித்தது. எல்லா இடமும் சிசிடி கமரா பதிக்கப்பட்டிருந்தது. உதட்டிலே மெல்லிய ஏளனப் புன்னகையை சிந்தியவன், அந்த வரவேற்பாளரின் அருகே வந்தான்.

" ஹாய்... ஹௌ ஆர் யு..."' என்றான் தன் கவரும் புன்னகையைச் செலுத்தி. அந்தப் புன்னகையில் மயங்கிய வரவேற்பாளர்,

“ஹாய்... ஐ ஆம் ஃபைன்.... வ வட் எபவுட் யு...” என்றாள் அவள்.

“ஐ ஆம் பேர்ஃபக்ட்லி ஓக்கே...” என்று அவன் நகைக்க,

“வட் கான் ஐ டூ ஃபோர் யு சார்?” என்றாள் அவன் கவர்ச்சியில் மயங்கியவளாக,

“உங்கள் எம் டி மிஸ்டர் நடராஜனைப் பார்க்கவேண்டுமே...” என்றான் அநேகாத்மன் தன் புன்னகையை சிறிதும் குறைக்காமல். மேலும் அந்தப் புன்னகையில் மயங்கிய வரவேற்பாளர்,

“உங்களுக்கு அவரைச் சந்திக்க அப்பொய்ன்மன்ட் இருக்கா...” என்றாள் அவன் முகத்திலிருந்து தன் விழிகளை அகற்றாமல்.

“நோ... பட் அவருக்கு என்னைத் தெரியும்...” என்றான்.

“ஓ.. யுவர் குட் நேம் ப்ளீஸ்...”

“அநேகாத்மன்... அநேகாத்மன் வெங்கடேஷ்...” என்று இவன் கூற, வரவேற்பாளினியின் முகம், காணக்கிடைக்கா ஒன்றைக் கண்டதுபோல மலர்ந்து, வாய் பிளந்து நின்றது.

“ஓ மை காட்... சார்... இட்ஸ் யு.. ஐ கான்ட் பிலீவ் திஸ்... உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்... இப்போதுதான் முதன் முதலாகப் பார்க்கிறேன்...” என்று மகிழ்வுடன் தன்னை மறந்து குதித்தவளை அடக்க முடியாமல் திணறிய அநேகாத்மன்,

“ஓ... தட்ஸ் நைஸ்... உங்கள் எம் டி... இருக்கிறாரா?” என்று ஒருவாறு இழுத்துக் கேட்க,

“ஐ ஆம் சாரி சார்... இதோ... இப்போதே கேட்டுச் சொல்கிறேன் சார்...” என்றவள் அவனைக் கண்ட மகிழ்ச்சியில், கரங்கள் நடுங்க, உடல் தடுமாற, நடராஜனுக்குத் தொலைபேசி எடுத்தாள்.

“சார்...” என்றாள் மறு முனை எடுக்கப்பட்டதும்.

“யெஸ்... என்ற நடராஜனின் குரலில் கடுமை தெரிய, இவளின் மகிழ்ச்சி துணிகொண்டு துடைத்ததுபோல மாயமாக மறைந்து போனது.

“சார்... அது... உங்களைப் பார்க்க... மிஸ்டர்...” அவள் முடிக்கவில்லை,

“ஐ டோன்ட் வான்ட் டு சீ எனி பாடி... ஜெஸ்ட் த்ரோ ஹிம் அவுட்...” என்று கத்திய நடராஜனின் முன்னால், சிசிடி கமராவில் பதிவாகிக்கொண்டிருந்த திரை விரிந்துகொண்டிருந்தது.

எதற்காக இப்படி கோபத்தில் அந்த நடராஜன் கத்துகிறார் என்பது புரியாமல், அநேகாத்மனின் முன்னால், சிரமப்பட்டு தன் முகபாவனை மாறாமல் காத்தவள்,

“ஐ ஆம் சாரி சார்... அவர் பிசியாக இருக்கிறாராம்... அதனால், இன்னொறு முறை வருவீர்களா?” என்றாள் தன்மையாக.

அநேகாத்மனுக்கு சிரிப்புத்தான் வந்தது.

“வை நாட்...” என்றவன், தன் பான்ட் பாக்கட்டிலிருந்த தன் விசிட்டிங்

கார்டை வெளியே எடுத்துத் தன் கண்ணாடியைக் கழற்றி, கூரிய விழிகள் கொண்டு, அந்தப் பெண்ணை கவர்ந்திழுத்தவன், மேலும் தன் புன்னகையை விரித்து, அந்த விசிட்டிங் கார்டை நீட்டி,

“இதை உங்கள் நடராஜரிடம் கொடுத்து விடுங்கள்...” என்றவன் தன் நகை மாறாமலே,

“டெ஼பினட்லி சார்...” என்று அவள் வழிய, அந்த வழிசலில் நன்றாக நனைந்தவன்,

“ஓக்கே... நைஸ் டு சீ யு?” என்று இனிமையாகக் கூறிவிட்டு வெளியே செல்வது போலப் போக்குக் காட்டியவன், யாரும் கவனிக்காவண்ணம், சிசிடியின் பார்வையிலிருந்து தப்பி, அங்கிருந்த வாஷ் ரூமிற்குள் நுழைந்தான்.

யாரோ கழிவறையின் உள்ளே விசிலடித்தவாறு நின்றிருந்தது தெரிய, இவன் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். அதனூடாகவே, அந்த மனிதன் நின்றிருந்த பகுதியை நோட்டம் விட்டான். அந்தாள் இருக்கும் நிலையைப் பார்த்தால், இப்போதைக்கு வெளியே வருவான் போலத் தெரியவில்லை.
தன்னுடைய ஜாக்கட்டைக் கழற்றி, அதைத் திருப்பிப் போட்டான். இப்போது கறுப்பு நிற ஜாக்கட் சிவப்பு நிற ஹூடியாக மாறியிருந்தது. அதன் சிப்பை இழுத்து விட்டவன், தண்ணீர் குழாயைத் திறந்து விட்டான்.

மீண்டும் கழிவறையில் இருந்தவனை ஒரு முறை நோட்டம் விட்டான். தன் பாக்கட்டிற்குள் இருந்து சிகரட் லைட்டரை வெளியே எடுத்து கொஞ்ச டிஷ்யு பேப்பரையுருட்டி, அதில் நெருப்பைக் கொழுத்தி, ஃபயர் அலார்ம் சென்சரில் பிடிக்க, மறு கணம், ஃபயர் அலார்ம் பெரும் சத்தத்துடன் கத்த, கூடவே அந்தக் கட்டடம் முழுவதும் மேலிருந்து தண்ணீர் பாயத் தொடங்கியது.

வேகமாகத் தன் ஹ_டியை இழுத்துத் தலையில் போட்டவன் வாஷ்ரூமை விட்டு வெளியே வந்தான். கச்சிதமாக அவனுடைய உருவத்தை அவனுடைய ஹூடி மறைக்க, அங்கு பதிக்கபட்டிருந்த சிசிடி கமராவில், அவன் முகம் தெரியாமலே மறைந்து போனது.

உடனே ஃபயர் எலார்ம் என்றதும், அனைவரும் ஆளுக்கொரு திசையில் ஓடி வெளியே செல்ல முயன்று கொண்டிருந்தனர். அந்தக் கலவரத்தில், யாருமே அநேகாத்மனைக் கவனிக்கவில்லை.

கூட்டத்தோடு கூட்டமாக நடந்துகொண்டிருந்த அநேகாத்மனின் விழிகளில் கையில் ஒரு பையுடன் விரைந்து சென்றுகொண்டிருக்கும் நடராஜர் கண்ணில் பட, விரைந்து அவர் பின்னால் சென்றான் அநேகாத்மன். ஒரு கட்டத்தில், நடராஜரை நெருங்கிய அநேகாத்மன், ஜன நெரிசலில் நடராஜனுடன் மோதுவது போல வந்தவன், தன் பலம் கொண்ட கையால், அவர் முகத்தை நோக்கி ஓங்கிக் குத்த, மறு கணம், பொறிதட்டக் கீழே மயங்கி விழுந்தவரை, யாருக்கும் சந்தேகம் வராதவாறு தாங்கிக்கொண்டான்.

பார்ப்பதற்கு, தவறுதலாக மோதியதுபோலவும், மோதியதால் நடக்க சிரமப்படும் ஒருவரை தாங்கி அழைத்துச் செல்வது போலவும் சிசிடி கமராவில் அழகாகப் பதிவாகிக்கொண்டிருந்தது. இத்தனைக்கும், அநேகாத்மன் தன் தலையின் மீது போட்டிருந்த தன் கோர்ட்டை எடுக்கவேயில்லை. அதனால், அந்த மனிதரை தாங்கிச் செல்லும் நபரும் யார் என்று தெரியாமல் போனது.

நிலவு 43

ஓரிரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு மெதுவாகத் தன்னுடைய விழிகளைத் திறந்தார் நடராஜர். முதலில் அவருக்கு எதுவும் தெளிவாகப் புலப்படவில்லை. எங்கும் கருமையாக இருந்தது. பகலா இரவா என்று எதுவும் தெரியவில்லை. முதலில் மங்கலாகத் தெரிந்த காட்சி பின்பு தெளிவாகத் தெரிய தன் முன்னால் அமர்ந்திருந்தவனை ஆக்ரோஷமாகப் பார்த்தார். வேகமாகக் கதிரையிலிருந்து எழ முயன்றவருக்கு, அப்போதுதான் புரிந்தது, தன்னுடைய கைகளும், கால்களும் கட்டப்பட்டிருப்பது.
அவனோ, ஒரு கதிரையில், அதன் கைப்பிடிமேல், தனது வலதுகாலைப் போட்டவாறு, வாகாக சாய்ந்தமர்ந்து, தன் ஃபோனில் எதையோ நோண்டிக்கொண்டிருந்தான்.

நடராஜரிடமிருந்து, அசைவு வருவதைத் தன் விழிகளை உயர்த்தாமலே உணர்ந்துகொண்டவன்,

“ஹாய்... குட் ஈவினிங்...” என்றான்.

“ஏய்... என்ன இது விளையாட்டு, எதற்காக என்னை

கட்டிப்போட்டிருக்கிறாய்... மரியாதையாக விடப்போகிறாயா, இல்லையா? " என்று நடராஜர் கத்த,

“ஷ்...” என்று தன் காதைக் குடைந்தவன்,

“என்ன மிஸ்டர் நடராஜன்... எதற்கு இத்தனை சத்தம்... ம்...” என்றவன், தன் கரத்திலிருந்த கைபேசியை அணைத்துவிட்டு, அதைத் தன் பாக்கட் பையில் போட்டான். தன் இரு கரங்களையும் மார்புக்குக் குறுக்காகக் கட்டியவாறு, அதே ஏளனப் புன்னகையுடன்

“சோ... வட்ஸ் அப்...” என்றான்.

“என்ன விளையாடுகிறாயா... மரியாதையாக என்னை வெளியே விடு... இல்லை...” என்று நடராஜர் சீற,

“இல்லை என்றால் என்ன செய்துவிடுவாய்... தலையைத் துண்டாக்கிவிடுவாயா? இல்லை என் தந்தையைக் கொன்றதுபோல, என்னையும் கொன்றுவிடுவாயா?” என்றான் கிண்டலுடன்.

“வட்... என்ன உளறுகிறாய்... உன் தந்தையை நான் ஏன் கொல்லவேண்டும். அதன் அவசியம் என்ன?” என்றார் நடராஜன் சினத்துடன்.

“ம்... அதை நீதான் சொல்லவேண்டும்...” என்று நகைத்தவன், கொஞ்ச நேரம் அமைதி காத்தான். பின்

“ஐ வோன்ட் டு ஷோ யு சம்திங்...” என்றபடி எழுந்தவன் தனக்கருகேயிருந்த லாப்டாப்பை உயிர்ப்பித்தான். அது விழித்துக்கொண்டதும், எதையோ தட்ட, அதில் அன்று வாசுதேவன், அவனுடைய தந்தையைச் சந்திப்பதற்காக அவருடைய அலுவலகம் வந்தது பதிவாகியிருந்தது.

குறிப்பிட்ட ஒரு இடம் வந்ததும், அதில் அந்த வெள்ளைச் சட்டை அணிந்த மனிதன் தொப்பியுடன் வாசுதேவனுக்குக் கை குலுக்கியவாறு நின்ற இடம் வந்ததும், அந்த இடத்தை அப்படியே ஃப்ரீ சாக்கியவன்,

“இதில் ஏதாவது தெரிகிறதா மிஸ்டர் நடராஜன்...” என்றதம் ஒரு கணம் விழிகளில் பீதி தோன்ற, அதை லாவகமாக மறைத்த நடராஜன்,

“தெரியாமல் என்ன? எனக்கு கண்கள் நன்றாகத் தெரியும்...” என்றார் அவர் அலட்சியமாக.

“சோ...”

“சோ வட்...” என்று நடராஜர் எரிந்து விழ, நகைத்தான் அநேகாத்மன்.

“இவனைத் தெரியுமா?” என்று அந்த தொப்பியணிந்த மனிதனைச் சுட்டிக்காட்டிக் கேட்க,

“எனக்கெப்படித் தெரியும். நான் என்ன சிசிடி கமராவா?” என்று சுள் என்று விழுந்தார் நடராஜன்.

“ம்...” என்று உதட்டைப் பிதுக்கித் தலையை ஆட்டிய அநேகாத்மன், நடராஜனை நெருங்கி,

“டு யூ நோ வட்... மிஸ்டர் நடராஜன்... உங்களுக்கு எத்தனை வயதிருக்கும்... ஒரு ஐம்பத்தைந்து... அறுபது... எனக்கெத்தனை வயது தெரியுமா? முப்பது... வயதளவில் உங்களை விட நான் இளமையானவன்... ம்... உடம்பு... கடைசியாக எப்பபோ ஜிம்மிற்குப் போனீர்கள்? உங்களுக்கு அதற்கு நேரமில்லையல்லவா? எனக்கு ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு மணி நேரமாவது அதில் செலவிடவேண்டும்... சோ... பலத்தைப் பொறுத்த வரையிலும், உங்களை விட நான் அதிக பலசாலி...” என்றவன், அவருடைய கழுத்தில் தன் கரத்தை வைத்தான். “நிச்சயமாக புத்தியிலும் நான் உங்களை விட ஒரு படி மேல்தான்.. இல்லை என்றால், இப்படி மாட்டுவதுபோல ஒரு க்ளூ விட்டுவைத்திருக்கமாட்டீர்கள்...” என்றான் தன் பெருவிரலை சற்று அழுத்தி,

அவனுடைய பெருவிரல் அழுத்தத்தால், நடராஜனுக்கு இருமல் வந்தது.

“இப்போ... இந்த இடத்தில் உங்களுக்கு மரணம் நேர்ந்து விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள், என்னைக் கண்டுபிடித்து, கைது செய்வார்கள் என்று நினைக்கிறீர்களா? பச் ப்ச்... அதற்கும் வாய்ப்பில்லை... ஏன் என்றால், நான்தான் உங்களை இங்கே அழைத்து வந்தேன் என்று என்னையும், உங்களையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது... தவிர அதற்கு எந்த சாட்சியமும் கிடையாது... எந்த நல்ல காரியம் செய்வதாக இருந்தாலும், நான் சாட்சியம் வைத்திருப்பதில்லை. நீங்கள் பார்த்தீர்கள் அல்லவா... எனக்கு எந்த உதவியாளரும் கிடையாது. என் கையே எனக்குதவி” என்றவனுடைய பெருவிரல், அவரின் தொண்டைக் குழியில் மேலும் அழுத்த, அவர் கமறினார்.

“ஆ... மிஸ்டர் நடராஜன்... நான் ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே...” என்றவன், அவருக்குப் பின்புறமாக வந்து நின்றான்.

அவர் கழுத்திலிருந்த தன் கரத்தை விலத்தி, இடது கரத்தை அவன் தோளின் மீது முட்டுக் கொடுத்தவாறு குனிந்து, அவரின் வலது கரத்தைத் தன் வலது கரத்தால் எடுத்தான்.

“என் கையால் நீங்கள் இறப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.” என்றவாறு அவருடைய விரல்களை நோக்கித் தன் விரல்களைக் கொண்டு சென்று அவருடைய சுண்டுவிரலைப் பற்றினான்.
நடராஜன் என்ன என்பதை உணர்வதற்கு முன்பாகவே, அவருடைய சுண்டுவிரலை வேகமாகப் பின்பக்கமாக மடக்க, அது ‘படக்’ என்ற சத்தத்துடன் முறிந்துபோனது. நடராஜன் ஒரு கணம் மூச்சு விட மறந்தார். பின் உயிர் வோகும் வலி அவரை சுய உணர்வுக்கு அழைத்துவர, வலியில் கதறினார் நடராஜன்...

அவருடைய காதினருகே தன் முகத்தைக் கொண்டு சொன்றவன்,

“ஷ்... எதுக்கு இத்தனை சத்தம்... ஒரு விரலைத்தானே முறித்தேன்... ம்...” என்றவன் அவரை விட்டு விலகி முன்புறமாக வந்தான். அவனுடைய உதட்டிலிருந்த அந்த எகத்தாளச் சிரிப்பு மட்டும் மாறவேயில்லை. இப்போது, உடைந்துபொயிருந்த சுண்டுவிரலுக்குப் பக்கத்திலிருந்த விரலைப் பிடித்தான். இப்போது நடராஜரின் முகம் பயத்தில் வியர்த்துக் கொட்டியது. கத்தக் கூட சக்தியற்று அவருக்கு விழிகளிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

“மிஸ்டர் நடராஜன்... உங்களுக்கு இந்த நான்கு விரல்களில் எந்த விரல் அதிகம் பிடிக்கும்?” என்றான் கேள்வியாக. நடராஜரின் முகம் பீதியில் விரிய அவன் அந்த நடு விரலைப் பிடித்தான்.

“எனக்கு இந்த விரலைத்தான் ரொம்பப் பிடித்திருக்கிறது... ஏன் தெரியுமா? இதுதான் உங்களை எனக்கு அடையாளம் காட்டியது...” என்றவன் “புரியவில்லை,” என்று கேட்க, அதிர்ச்சியிலும், பயத்திலும் வியர்த்துக் கொட்ட, உடல் நடுங்க, பற்கள் தந்தியடிக்க, வலியில் நடுங்க அநேகாத்மனைப் பார்த்தான்.
அவனோ மீண்டும் அந்த விரலை மடக்கி, அவருக்கு உயிர் வலியைக் கொடுத்தவன், நிமிர்ந்து நின்றான். வலியில் அழுதவரை, ரசித்துப் பார்த்தான்.

“சொல்லப்போனால், இப்போது நான் உடைத்தேனே இரு விரல்கள் அந்த

இரு விரல்களும்தான் எனக்கு உன்னை அடையாளம் காட்டின...” என்றவன் மீண்டும் அந்த வீடியோவை ஓட விட்டான்.

அதில், எங்கோ போவதற்கு இடம் கேட்பது போல கரங்களை நீட்டிக் கேட்டுக்கொண்டிருந்த அந்த வெள்ளைச் சட்டைக் காரனின் நீட்டிய கரத்தை மட்டும் பெரிதாக்கி, அதைச் சுட்டிக்காட்டினான். நீட்டிய அவர் கரத்தின், சுண்டுவிரலும், நடுவிரலும் நீண்டிருக்க, மற்றைய விரல்கள் மடிந்திருந்தன. பார்ப்பதற்கு எங்கே போவது என்று கேட்பதுபோலத்தான் இருந்தது.

“நான்கு வருடங்களுக்கு முன்பு, படியிலிருந்து விழுந்தபோது, உங்கள் சுண்டு விரலும், நடு விரலும் மடிந்து போயின. அதை நிமிர்த்துவதற்காக மெட்டல் ப்ளேட் வைத்திருந்தார்கள். அதனால் உன்னால், அந்த இரண்டு விரல்களையும் முழுதாக மடிக்க மடியாது...” என்பவனை அதிர்ச்சியுடன் பார்த்தார் நடராஜர்

“சோ... அன்று கடைசியாக மிஸ்டர் வாசுதேவனை சந்தித்த அந்த வெள்ளைச் சட்டைக் காரன் நீதான்... ஆம் ஐ ரைட்...” நடராஜன் ஒன்றும் கூறாமல் தலையைக் குனிய,

“இன்னொன்றையும் கூறட்டுமா மிஸ்டர் நடராஜன்...? வாசுதேவனின் மனைவி கவிதா... » என்றதும், விலுக்கென்று நிமிர்ந்தார் நடராஜன்.

“உ... உனக்கெப்படித் தெரியும்...” என்றார் அதிர்ச்சியுடன்.

“ ஐ ஹாவ் மை ஓன் வே... எனக்குத் தெரிந்ததை சொல்லட்டுமா? கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு, கவிதா என்னும் பெண், தன் அத்தை பையன் வாசுதேவனை விரும்புகிறாள் என்று தெரிந்தும் வாசுதேவனின் நண்பராக இருந்த நீங்கள், அவள் மீது காதல் கொண்டீர்கள். அப்போதே, அவர்கள் இருவரையும் பிரிக்க எத்தனையோ திருகுதாளம் செய்தும் அது நிறைவேறவில்லை. காரணம், இருவரும் ஒருவர் மீது ஒருவர் வைத்த அப்பழுக்கில்லா அன்பு. எப்படியோ அவர்களின் திருமணம் நடந்தது. இருந்தும் உங்கள் பழி உணர்ச்சி குறையவில்லை. உங்கள் கோபத்திற்கு எண்ணை வார்ப்பதுபோல, வாசுதேவனின் வியாபாரமும் கொஞ்சம் நன்றாக வளரத் தொடங்கியது. வாசுதேவனின் கெட்ட காலம், உங்களின் நல்ல காலம், கவிதா இறந்ததும் உங்கள் பழியைத் தீர்க்க அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினீர்கள்.

மனைவி இறந்த நேரத்தில், பெரும் துன்பத்தில் தன்நிலை கெட்டிருந்த

வாசுதேவனின் நிலையைப் பயன்படுத்தி, அவருடைய தொழிலை மெல்ல மெல்ல உங்கள் கைவசம் கொண்டுவர முயன்று அதில் வெற்றியும் கண்டீர்கள். பாவம் மிஸ்டர் வாசுதேவன், உங்களை முழுதாக நம்பியதால், உங்கள் நயவஞ்சகத்தை அவர் சாகும்வரை அறிந்துகொள்ளவில்லை.

என் தந்தையின் கொலை வழக்கிலும், மிஸ்டர் வாசுதேவன் அவர் அறியாமலே சிக்கவைக்கப்ட்டிருக்கிறார் என்பதை என்னால் இப்போது புரிந்துகொள்ள முடிகிறது. அவருடைய டைரியைப் படித்தபோதுதான் அது தெரிந்தது. டீ. என் கம்பனி பற்றி நீதான் அவருக்குத் தெரிவித்திருக்கிறாய்... நீதான் அதற்கான தொடர்பாடலையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறாய்... வாசுதேவன் மேல் இருந்த பொறாமையால், கோபத்தால், அவரைச் சிக்க வைத்திருக்கிறாய்... பட்... இதில் என் தந்தை எங்கே வந்தார்? அவரைக் கொல்வதற்கான காரணம் என்ன? என் தந்தையை நெருங்குவதற்கும் ஒரு தகுதியிருக்க வேண்டும்... அவர் நிழலைக் கூடத் தொட முடியாத தொலைவில் இருக்கும் நீ எதற்கு அவரைக் கொல்ல எண்ண வேண்டும்... சோ இதற்குப் பின்னால், பெரும் சதி இருக்கிறது என்பது எனக்குத் தெரிகிறது... யார்...” சொன்னாய் என்றால், நிம்மதியாகப் போக நான் வழிசெய்வேன். இல்லை என்றால், என் சித்திரவதையைத் தாங்க உன்னிடம் சக்தியிருக்காது...” என்றான் அவன் பெரும் அழுத்தமாக.

“சத்தியமாக உங்கள் தந்தையின் மரணத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்... ஹக்..” என்றவரின் முன் இரு பற்களும் விழுந்து வாயில் இரத்தம் கொட்டத்தொடங்கியது. அதிர்வுடன் அநேகாத்மனைப் பார்க்க,

“சாரி மிஸ்டர் நடராஜன்...” என்றவாறு தன் கரத்தை உதறினான் அநேகாத்மன்.

அவருக்கு முன்பாக ஒரு கதிரையைத் திருப்பி வைத்து, இரண்டு கால்களையும் இருபக்கமாகப் போட்டவாறு அமர்ந்தவன், முதுகு சாயும் பக்கமாகத் தன் மார்பை இலகுவாகச் சாய்த்து, இரண்டு கரங்களையும் மேல் சட்டத்தில் வைத்து, அக் கரங்களில் தன் நாடியைச் சாய்த்து,

“சாரி ஃபோர் த இன் கன்வீனியன்ட்... எனக்கு பொய் சொன்னால் பிடிக்காது... என்ன செய்யட்டும். என் அப்பா கூட என் கோபத்தை கட்டுப்படுத்துமாறு பல முறை சொல்லியிருக்கிறார்... என்னால் தான் முடிந்திருக்கவில்லை. நீங்கள் சொல்லுங்கள்... என் தந்தையின்

மரணத்திற்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம். அடுத்ததும் பொய் சென்னீர்களானால்...” என்றவன், தன் பான்ட் பாக்கட்டிலிருந்து கூரிய சுவிஸ் ஆர்மி கத்திக் கொத்தை வெளியே எடுத்து, அதிலிருந்த சிறிய கத்தியின் பட்டனை அமத்த, கத்தி வெளியே நீட்டி நின்றது.

“இது இரண்டு இஞ்ச் இருக்குமா...? உங்கள் கண்ணைத் தோண்டி எடுக்க இந்தக் கத்தி போதுமல்லவா? வேண்டுமானால், ஒரு கண்ணை வெளியே எடுத்துப் பார்க்கவா... ப்ளீஸ்... ஜெஸ்ட் ஃபொர் த எக்ஸ்பெரிமன்ட்... » என்றான் அவன் ஆவலாக.

குரூரத்துடன் சிரித்த அவன் உதடுகளும். புழபழத்த அவன் கண்களும், சொன்னதைச் செய்வான் என்பதை எடுத்துக் காட்ட, கிட்டத்தட்ட நடராஜர் மயங்கும் நிலைக்குச் சென்றுவிட்டிருந்தார்.

" லிசின் மிஸ்டர் நடராஜன்... எனக்குக் கிடைத்திருக்கும் நேரம் மிகக் குறைவு... இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் வீட்டிற்குப் போக வேண்டும்... என் மனைவி... உங்களுக்குத் தெரியாதில்லையா... உங்களுக்க ஒரு நல்ல செய்தி வைத்திருக்கிறேன்... நான் திருமணம் முடித்து விட்டேன்... யாரைத் தெரியுமா? மிஸ்டர் வாசுதேவனின் மகள் சர்வமகியைத்தான் மணந்திருக்கிறேன்... " என்று அவன் முகம் மலரக் கூற, நடராஜரின் முகம் வெளுறிப் போனது.

"அதிர்ச்சியாக இருக்கிறதா? இருக்காதா பின்னே... அவர்களையும் அழிக்க என்ன தில்லாலங்கடி வேலையெல்லாம் செய்தீர்கள். எனக்குத் தெரியாது என்று நினைத்தீர்களா? சர்வமகியைக் கூட, அவள் சிறுமியாக இருக்கும்போது, ஒரு முறை மாலில் இருந்த தானியங்கிப் படியில் தள்ளி விழுத்தியிருக்கிறீர்கள் அல்லவா? அன்று அவள் தப்பியது அருந்தப்பு அல்லவா" என்றவனின் முகம் விகாரமாக இறுகிப் போனது.

அன்று விழுந்ததால்தானே இன்று இத்தனை சித்திரவதைப் படுகிறாள். எதை மன்னித்தாலும், இதை அவனால் மன்னிக்க முடியாதே.

" அது மட்டுமல்ல... எனக்குத் தெரிந்தே இரு முறை அவளை ஆபத்தில் சிக்கவைத்திருக்கிறீர்கள்... அப்படியானால் எனக்குத் தெரியாமல் எத்தனை முறை அவளை ஆபத்தில் தள்ள முயன்றிருப்பீர்கள்..."என்றவனின் முஷ்டி மடிந்து அதே வேகத்தில் அவருடைய கன்னத்தில் ஓங்கிக் குத்த, அவன் குத்திய வேகத்தில், கடவாய் பல்லு உடைந்து மேலும் வாயிலிருந்து இரத்தம் கொட்டியது.

" சோ... நேரம் போய்க்கொண்டிருக்கிறது உண்மையைச் சொல்லுங்கள்... " என்றவன் கதிரையை விட்டு எழுத்து நடராஜரை நெருங்க, அவன் தன்னை மீண்டும் அடிக்கப்போகிறான் என்கிற பயத்தில்,

"சொல்கிறேன்... சொல்கிறேன்... ப்ளீஸ் என்னை ஒன்றும் செய்யாதே... " என்று பதற

"ஹே... டோன்ட் பனிக்... " என்று தன் இரு கரங்களையும் தூக்கிக் கூறியவன், அவர் பான்ட் பாக்கட்டில் கைவிட்டு, அவர் கைபேசியை வெளியே எடுத்தான்.

" இதை எடுக்கத்தான் நெருங்கினேன்... நான் ஒன்றும் அத்தனை வில்லனல்ல... " என்று கிண்டலாகக் கூறியவன், அந்த கைபேசியில் எதையோ அழுத்தியவாறு,

" ம்... சொல்லுங்கள்... " என்றான்.

சற்று நேரம் கலங்கிய நடராஜன்,.

" யெஸ்... ஐ ஹேட் வாசுதேவன்... கவிதா எனக்கு சொந்தமாகவேண்டியவள்... அவளை அவன் என் கண்ணெதிரே திருமணம் முடித்துக் குழந்தைகளையும் பெற்றான். எனக்கு உரித்தான கவியை எப்படி அவன் தன்னவளாக்க முடியும்.. அன்று முடிவு செய்தேன், வாசுதேவனுக்க எதுவும் நிரந்தரமாகக் கிடைக்கக் கூடாது என்று. நானும் கவிதாவின் நினைவில் வேறு திருமணம் முடிக்கவில்லை.
கவிதா அபிதனைப் பிரசவித்தபோது, அங்கிருந்த நேர்ஸிற்குக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, மோர்ஃபின் அதிகமாகச் செலுத்தி, கொலை செய்ய வைத்தேன்... " என்றதும் அநேகாத்மனின் கை முஷ்டி மேலும் இறுகியது.

இதை அவன் எதிர்பார்க்கவில்லை. அப்படியானால், சர்வமகியின் தாயின் மரணம் தற்செயலாக நடந்ததல்ல... யாருக்கும் தெரியாமல் கொலை செய்யப்பட்டிருக்கிறார். சினத்துடன், தொடர்ந்து பேசிய நடராஜனைக் கவனிக்கத் தொடங்கினான் அநேகாத்மன்.

" கவிதாவின் மரணத்தால், உடைந்துபோயிருந்த வாசுதேவனிடமிருந்து அனைத்து வியாபாரங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக என் வசப்படுத்தினேன். அவன் ஆசையாகத் தொடங்கிய கவிதா இன்டஸ்ட்ரியும் என் கைகளுக்கு வந்தது. வாசுதேவனைப்

பொறுத்தவரை நான் அவனுடைய நல்லதை மட்டுமே எண்ணும் நல்ல நண்பன். என் மீது அவன் அளவு கடந்த நம்பிக்கையை வைத்திருந்தான். அந்த நம்பிக்கையை நான் எனக்கு சாதகமாக்கினேன். அவனும் என்னை முழுதாக நம்பி நான் கேட்ட இடமெல்லாம் கையெழுத்திட்டான்.

"எனக்கும் கவிதாவுக்குமாகப் பிறக்கவேண்டியவள் சர்வமகி. ஆனால் அவள் சே... அதனால், அவளையும் கொல்ல நினைத்தேன்... அதனால்தான் மால் ஒன்றிற்கு அழைத்துச் சென்று தானியங்கிப் படியில் தள்ளி விட்டேன்... அவளுடைய நல்லகாலம் தப்பிவிட்டாள்... கடைசியாக அவர்கள் வீடெல்லாம் விற்று விட்டு, சிறிய வீடொன்றிற்குப் போன பிறகுதான் என் மனம் ஓரளவு சமாதானப் பட்டது... " அது வரை தன்னைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டிருந்த அநேகாத்மன், நடராஜரின் ஃபோனில் எதையோ செய்துகொண்டே,

" இன்னும் என் தந்தைக்கும் உனக்கும் என்ன சம்பந்தம் என்று சொல்லவேயில்லையே..." என்றான் அழுத்தமாக. அந்தக் குரலைக் கேட்டதும், எச்சில் கூட்டி விழுங்கிய நடராஜன்,

"மிஸ்டர் வெங்கடேஷின் போட்டிக் கம்பனிகளான, பிரைட்டர்ன் இன்டர்நஷனல் கோப்பரேஷன் சேர்மனையும், ஃபியூச்சர் இன்டர்நஷனல் கொம்பனி செயர்மனையும் ஒரு பார்ட்டியில் சந்நித்தேன்... அவர்களுடன் இன்னும் நான்கு கம்பனி முதலாளிகள் இருந்தார்கள். அவர்களுடன், நல்ல பழக்கம் ஏற்பட்டது. மிஸ்டர் வெங்கடேஷினால், அவர்களுடைய வியாபாரம் பெரும் சிக்கலில் இருப்பதைப் பற்றி அவர்கள் குறைபட்டார்கள். அவர்களுக்கு வெங்கடேஷின் அசுர வளர்ச்சி பெரும் சிக்கலைக் கொடுத்தது. விரைவில், வெங்கடேஷின் கம்பனி, முதல் மூன்று இடங்களில் வந்துவிட்டால், அவர்களின் நிலை கடைசி இருபதையும் தாண்டிவிடும் என்று பயந்தார்கள்... "

"அதனால் என் தந்தையைக் கொல்ல நீங்கள் முடிவு செய்தீர்கள்... அதற்கு எதற்கு வாசுதேவனை தேர்ந்தெடுத்தீர்கள்..."

" அவர்களின் திட்டப்படி, கொலைப்பழியை ஏற்றுக்கொள்ள ஒரு அப்பாவி தேவைப்பட்டது. அதற்கு வாசுதேவன் பொறுத்தமாக இருந்தார். அவருடைய தொழிலும், அதற்கு ஏதுவாக இருந்தது... அந்த திட்டத்தை உருவாக்க இன்ஸ்டன்டாக டி என் என்கிற கம்பனி ஒன்றை உருவாக்கினோம். வாசுதேவனிடம், டி என் கம்பனி தன்னுடைய உதிரிப்

பாகத்தை வெங்கடேஷிற்கு விற்பது பற்றிக் கூற, அவனும் சந்தோஷமாகவே அதற்கு சம்மதித்தான். நாங்கள் நினைத்தது போலவே, எந்தக் கறுப்புப் புள்ளியும் இல்லாத வாசுதேவனுக்கு வெங்கடேஷைச் சந்திக்க சுலபமாக அனுமதி கிடைத்தது. இதற்கிடையில் பிரைட்டன் கம்பினியின் சியர்மன் மிஸ்டர் தீரன், தன் பணப் பலத்தைக் கொண்டு, சிலரை விலைக்கு வாங்கினார். முதல் கட்டமாக, அந்தக் கட்டடத்தின் சிசிடி கமரா குரிப்பிட்ட நேரம் வரை, நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. அந்த நேரம், கணணிமயமாக்கப்பட்ட தொலை இயக்கி (உழஅரவநசணைநன சநஅழவந உழவெசழடடநச) துப்பாக்கியை யாரும் அறியா வண்ணம், பொருத்துவதற்காக, வெங்கடேஷின் அறைக்குள் நுழைந்தேன். வாசுதேவன் இடதுகைப் பழக்கம் உடையவர் என்பதால், அதற்கேற்றாட் போல, துப்பாக்கியை மறைத்து வைத்தேன். துப்பாக்கியை வைத்து விட்டு வந்தபோதுதான் வாசுதேவனை எதிர்பாராமல் சந்தித்தேன். முதலில் அதிர்ந்த நான் எப்படியோ சமாளித்து அவருக்க வாழ்த்துக் கூற வந்ததாகக் கூறி விலகிவிட்டேன். குறிப்பிட்ட நேரம் வந்ததும், நமது திட்டப்படியே துப்பாக்கி சுட்டது... ஆனால் வாசுதேவன் பயந்து ஓடுவார் என்று நாங்கள் நினைக்கவில்லை. அது கூட நமக்கு சாதமாகத்தான் இருந்தது. செய்தி பரவும் முதல், துப்பாக்கியை அகற்றிவிட்டோம். நமது வேலை முடிந்ததும், சிசிடி கமராவை திரும்ப இயக்க வைத்தோம். சிசிடி கமரா நமது கட்டுப்பாட்டில் இருந்ததால்தான், வெங்கடேஷின் அறையில் நடந்த சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை..." என்று பெருமூச்சுடன் வலியும் சேரக் கூறினார் நடராஜன் .

" வெல் ப்ளான் மேர்டர்... " என்றவன் நிமிர்ந்து நின்றான்.

" டூ யு நோ வட்... நீ செய்தது மாபெரும் நம்பிக்கை துரோகம்... உன் நண்பன் உன் மேல் வைத்திருந்த நம்பிக்கையை நீ... சே...நினைக்கும் பொதே அருவெறுப்பாக இருக்கிறது. நான் நினைக்கிறேன்... உனக்கு மனநலம் சரியில்லை... ஏனெனில் ஒரு ஆரோக்கியமான மனிதன், ஒரு போதும் உன்னைப் போல இப்படிக் கேவலமாகச் சிந்தித்திருக்க மாட்டான். " என்றவன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

"டாமிட்... நேரம் போய்க்கொண்டிருக்கிறது... " என்றவன், பெருமூச்சொன்றை எடுத்து விட்டான்.

“நேரம் கரைகிறது நடராஜன்... நீ இன்னொரு உதவியும் செய்யவேண்டுமே... "

" சொல்லுங்கள் அநேகாத்மன்... என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்... என்னை விட்டுவிடுங்கள்..." என்றார் அந்த நடராஜர்.

" அடேங்கப்பா... விடுதலைக்காக எவ்வளவு துடிக்கிறீர்கள்... ம்... சரி உங்களை நிரந்தரமாக விட்டுவிடுகிறேன்.... அதற்கு இதை நீங்கள் ஒரு முறை படிக்கவேண்டும்... " என்றவாறு அருகேயிருந்த பேப்பர் ஒன்றை எடுத்து அதில் எதையோ கிறுக்கி, அதை நடராஜனுக்கு முன்பாக நீட்டிக் காட்டினான். அவன் நீட்டிய பேப்பரில் தன் கவனத்தைச் செலுத்திய நடராஜருக்கு மயக்கம் வரும்போல இருந்தது.

" நோ... நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள்... " என்றார் பெரும் கோபத்துடன்.

" நான் ஏமாற்றினேனா... என்ன சொல்கிறீர்கள்... நான் எப்போது யாரை ஏமாற்றினேன்... " என்று புரியாதவன் போலக் கேட்டான் அநேகாத்மன்.

"நான் உண்மையைச் சொன்னால் போக விடுவதாகக் கூறினீர்களே... " என்றார் நடராஜன் பீதியுடன்.

"ஆமாம் இப்போதும் அதைத்தான் சொல்கிறேன்... உங்களை நிம்மதியாக போகவைக்கப் போகிறேன்... வலியின்றி, துன்பமின்றி... " என்றான் அநேகாத்மன் பெரும் அலட்சியத்துடன்.

"நோ... நோ... யு கான்ட் டு தட்... "

“வை நாட்... லுக்... நேரம் போய்க் கொண்டிருக்கிறது... நீ கூறிய அனைத்தையும் நான் உன்னுடைய ஃபோனில் பதிவு செய்துவிட்டேன்... இப்போது நீ செய்யவேண்டியது... நான் எழுதியிருப்பதை படிப்பதுதான்... உனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியுமல்லவா...?” என்றான் அதே கிண்டலுடன்.

“இதில் யோசிக்க என்ன இருக்கிறது... ம்... மிஸ்டர் வெங்கடேஷின் கொலை சம்பந்தமாகத் தெரிந்த நபர் நான் ஒருவன் என்பதால், என்னை இன்று தீரனின் ஆட்கள் கடத்திச் சென்று, கொலை செய்ய முயன்றார்கள்... அடித்தார்கள்... எப்படியோ அவர்களிடமிருந்து தப்பி வந்துவிட்டேன்.” என்று வாசித்துக் காட்டியவன், நிமிர்ந்து நடராஜனைப் பார்த்து ,

“இதைப் படிக்க என்ன கஷ்டம்... ஓ... கீழே இருக்கிற வரியைப் படிக்க கஷ்டமாக இருக்கிறதா? அதில் என்ன கஷ்டம்... ‘இனியும் அவர்கள்

என்னை உயிரோடு விட்டுவைப்பார்களா என்று எனக்குத் தெரியாது. எந்த நேரமும் எனக்கு எதுவென்றாலும் நடக்கலாம்.... ஒருவேளை எனது உயிருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்தால், அது தீரனும், அவனுடைய கூட்டாளிகளும் செய்த சதியாக மட்டுமே இருக்கமுடியும். மேலே கூறியவை அனைத்தும். என் சுயத்துடனும், யாருடைய கட்டாயமோ, வற்புருத்தலோ இல்லாது, விரும்பிக் கொடுக்கும் வாக்குமூலம்...' அவ்வளவுதானே... ம்... வாசியுங்கள்... ஏதோ சொத்தைக் கேட்டதுபோல இப்படித் தடுமாறுகிறீர்களே மிஸ்டர் நடராஜன்..." என்றான் அநேகாத்மன் எகத்தாளமாக.

"ஏய் என்னைக் கொன்றுவிட்டு நீ தப்ப முடியாது... எப்படியும் பொலிஸ் உன்னைப் பிடித்துவிடும்..." என்றார் அவர் கோபமாக.

"ஐ டோன்ட் திங்க் சோ... எதை வைத்து அப்படி சொல்கிறாய்?" என்றான் அநேகாத்மன், பெரும் ஆவல் போல.

"விளையாடுகிறாயா... நீ ரெக்கோர்ட் பண்ணியதில் உன் குரலும் பதிந்திருக்கும்..." என்றார் நடராஜன் சினத்துடன். அதைக் கேட்டதும், அநேகாத்மன் பெரிதாகச் சிரித்தான்.

""ஐ ஆம் சோ சாரி... என்னால்... என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை..." என்று மீண்டும் சிரித்து,

"ப்ச்.. ப்ச்... மூளை என்கிற ஒரு ஜந்து உன் தலையில் இருக்கா இல்லையா? எல்லாவற்றையும் பக்காவா ப்ளான் பண்ணி உன்னை உன் வீட்டிற்கே தூக்கி வந்த எனக்கு இதையெல்லாம் யோசிக்கத் தெரியாதா... நான் உன்னுடைய குரலை மட்டும், உன்னுடைய ஃபோனிலேயே பதிவு செய்திருக்கிறேன்.
வேண்டுமானால், போட்டுக் காட்டுகிறேன் கேட்கிறாயா? என்ன... ஃபினிஷிங் டச் தான் கொஞ்சம் சொதப்புகிறது... அதனால்தான்... இதை வாசிக்கச் சொன்னேன்... ப்ளீஸ் அடம் பண்ணாமல் வாசிக்கிறாயா?" என்றான் ஆத்மான் நகைப்பு மாறாமலே.

"இல்லை... நான் சாக மாட்டேன்..." என்றார் அவர் பிடிவாதமாக.

"அப்படியெல்லாம் பிடிவாதம் பிடிக்கக் கூடாது நடராஜன்... எனக்கெல்லாம் உன்னைக் கொல்லவேண்டும் என்று ஏதாவது வேண்டுதலா... இல்லையே... எனக்கும் வேறு வழியில்லை... இப்போ உன்னை நான் விட்டேன் என்று வைத்துக்கொள்... உன்னை பொலிஸ் அரஸ்ட பண்ணும்... அதில் மாற்றமில்லை. ஆனால், பொலிஸ்

உன்னைக் கைதுசெய்வதற்கு முதல் நீ என்ன திருகுதளம் செய்வாயோ என்று முன்னும் பின்னும் என்னால் அலைய முடியாது நடராஜ். ஒவ்வொரு கணமும், என் மனைவிக்கு உன்னால் என்ன ஆபத்து வருமோ என்று அஞ்சுவதும், அவளுடைய சகோதரர்களுக்கு நீ என்ன தீங்கு விளைவிப்பாய் என்று நான் பயந்து கலங்குவதும்... தேவையா... உன்னைக் கொன்று விட்டால், நான் நிம்தியாக இருப்பேன் அல்லவா... இப்போ நீ உயிரோடு இருந்துதான் என்ன செய்யப்போகிறாய்.. உனக்கென்ன மனைவியா பிள்ளைகளா... நீயோ தனிக்கட்டை. உனக்கு ஒன்றென்றால், கலங்கித் தவிக்க ஒரு நாதி கிடையாது... அதற்கும் என் மனைவிதான் வரவேண்டும்.... அதுவும் உன்னை எண்ணி என் மனைவி அழ வேண்டுமா.. சீ சீ... அதனால் பிடிவாதம் பிடிக்காமல் இதை மட்டும் வாசித்துவிடேன்...” என்றான் அவன் கிண்டலாக.

“முடியாது... நான் வாசிக்கமாட்டேன்...”

“அதிகமாகப் பிடிவாதம் பிடிக்கிறாயே நடராஜ்... இங்கே பார்... எல்லாத்தையும் போகட்டும் என்று விட்டுவிட்டாலும், இன்று என் மனைவி படும் சித்திரவதைக்கு முழு முதல் காரணம் நீ... நீ மட்டும்தான்... எதை மன்னித்தாலும் என்னால் அதை மன்னிக்க முடியாது... அதற்கு நீ பதில்சொல்லியே ஆகவேண்டும்... அதனால், இதை வாசித்தாயானால், காதும் காதும் வைத்தால் போல நான் உன்னை கொன்று விடுவேன்...” என்றான் அவன் கெஞ்சுவதுபோல.

“நோ... முடியாது... முடியாது... முடியாது...” என்று நடராஜர் கத்த,

“ஓக்கே... நோ ப்ராப்ளம்... நீ வாசிக்கா விட்டால் என்ன? உன் குரலில் நான் வாசித்து ரெக்கோர்ட் பண்ணிவிடுகிறேன்... என்ன அப்படி பார்க்கிறாய்? முடியாது என்று நினைத்தாயா? பேசிக் காட்டுகிறேன்... கேட்கிறாயா?” என்றவன் தன் தொண்டையை செருமி, ரெக்கோர்டரை உயிர்ப்பித்து,

“நா.. நா சொல்வது அனைத்தும் உண்மை...” என்று தொடங்க, எந்த மாற்றமும் இன்றி தன் குரலில் அவன் பேசிய திறமையைக் கண்டு அதிர்ந்துபோய் பீதியில் விழி தெறிக்க அநேகாத்மனைப் பார்த்தார் நடராஜன். அவனோ, சற்றும் நடராஜரைக் கருத்தில் கொள்ளாது, தன் போக்கில் பேசிக்கொண்டு போனான்.

“இத்தனை அனியாயங்களையும் செய்த தீரனுக்கு நான் உடந்தையாக இருந்தேன்... இனி என்னை விட்டுவைத்தால், ஏதாவது ஒரு சந்தர்பத்தில் உண்மையைப் போட்டு உடைத்துவிடுவேனோ என்று அவர்கள்...” என்று

கூறிக்கொண்டே கைபேசியை தன் சடடைப் பையில் போட்டவாறு, சற்றுத் தள்ளியிருந்த, நைலோன் கயிரொன்றை, எடுத்து அதில் சுருக்கிட்டான். சுருக்கிட்டவாறே,

“பயந்தார்கள். அவர்களுக்கு எதிராக நான் வாய் திறந்து விடுவேனோ என்று அஞ்சி, என்னையும் அவர்கள் கொலைசெய்ய முயன்றார்கள்... அதனால் இன்று என்னை அவர்கள் கடத்திச் சென்று...” என்றவாறு அந்தச் சுருக்கை, நடராஜர் எதிர்பாரா வண்ணம், அவர் கழுத்தில் போட்டு இழுக்க, அவர் துடித்தார், அவனோ,

“என்னைக் கொல்ல முயன்றார்கள். எப்படியோ அவர்களிடமிருந்து நான் தப்பி வந்துவிட்டேன்... இனியும் என்னை அவர்கள் உயிரோடு விடுவார்களா என்று எனக்குத் தெரியாது... அதனால், இதை என் வாக்குமூலமாக நான் பதிவிடுகிறேன்... இந்த வாக்குமூலம், யாருடைய வற்ப்புறுத்தலுமின்றி சுயமாகக் கூறும் வாக்குமூலம்... என் உயிருக்கு ஏதாவது நடந்தால், அதற்கு முழுப் பொறுப்பும் தீரனையும், அவனுடைய கூட்டாளிகளையுமே சாரும்...” என்றவன், இறுதியாக ஒரு இழுவை இழுக்க, நடராஜனுடைய தலை முறிந்து மறுபக்கம் தொங்கியது.

கைபேசியை அணைத்தவன், அதை அங்கிருந்த மேசையில் விட்டெறிந்துவிட்டு, கரத்திலும், காலிலும் கட்டியிருந்த அத்தனை கயிற்றையும் கழற்றி, ஓரமாகப் போட்டான். கழுத்தில் தொங்கியிருந்த, கயிற்றை, பேஸ்மன்டின் உத்தரத்தில் போட்டு இழுக்க, நடராஜரின் உடல் மேலே எழுந்தது. கீழே விழா வண்ணம் இறுகக் கட்டியவன், நிமிர்ந்து உயிரற்றிருந்த நடராஜரின் உடலைப் பார்த்தான். அவனுக்கு கோபம் இன்னும் மட்டுப்படவில்லை. எத்தனை பெரிய சதி. அதில் தேவையற்று வாசுதேவனல்லவா பழியாகிவிட்டார். அவரை நம்பி இருந்த ஐந்து பிள்ளைகளின் நிலை என்ன? அது மட்டுமா, வாசுதேவனின் மனைவி கவிதா... அவர் என்ன தவறு செய்தார்? எல்லா வற்றிட்கும் மேலாக, மகி... அவனுடைய மகி... இன்று உயிர் பயத்தை சுமந்து, எத்தனை வலியை சுந்துகொண்டிருக்கிறாள்... அவளுக்கு பதில் என்ன?

இவனைச் சட்டத்தின் கையில் ஒப்படைக்கலாம்தான்... ஆனால் கனடிய சட்டத்தின் படி, மரணதண்டனை கிடையாதே... குற்றவாளியென்று பார்க்காமல், அத்தனை வசதியையுமல்லவா செய்து கொடுப்பார்கள். அவனுடைய சட்டத்தின் படி நடராஜருக்கு கொடுக்கவேண்டிய ஒரே தண்டனை, அது மரண தண்டனை. அதை அவன் கொடுத்துவிட்டான். மனம் ஓரளவு சமப்பட்டது. ஆனாலும், நடராஜர் வெறும் அம்புதான்...

எய்தவர்கள் நன்றாக இருக்கிறார்கள். அதுவும் எத்தனை நாளைக்கு, நாளைக்கு நடராஜரின் உடல் கண்டு பிடித்தபின், அவர் பதிவு செய்த அவரின் ஃபோனில் யார் யார் ஈடுபட்டார்கள் என்கிற அத்தனை தகவல்களும் தெரியவரும்... அப்போது அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள். அதற்குப் பிறகு, அவர்களின் முடிவு அவன் கையில்... நிம்மதியுடன் அவனுடைய லைட்னிங்கில் ஏறி அமர்ந்தான், சில நாட்களில் நடக்கப்போகும் அசம்பாவிதம் அறியாமலே.

தொடரும்...

நிலவு 44

மறுநாள், அநேகாத்மன் முதல் வேலையாக டிவி நியூசைப் போட்டுப் பார்த்தான். எங்கும் நடராஜனின் மரணம் தெரிவிக்கப்படவில்லை. அதிலிருந்து அவரின் இறப்பு இன்னும் வெளி வரவில்லை என்பதை அறிந்துகொண்டான்;. எப்படியும் ஓரிரண்டு நாட்களில் தெரிந்துவிடும் என்று எண்ணியவனுக்கு, எப்போது தீரனும் அவனுடைய கூட்டாளிகளும் பிடிபடுவார்கள் என்று ஆவலாக இருந்தது.

அந்த ஆவலைக் கட்டுப்படுத்த முடியாதவனாக, உதட்டிலே மெல்லிய புன்னகையுடன், தன் கைபேசியிலிருந்து ஒரு இலக்கத்தை அழுத்த, மறு பக்கம், தீரனின் தனிப்பட்ட தெலைபேசிக்கு அந்த அழைப்பு சென்றது.

இன்னும் தீரன் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளவில்லை போலும், குரல் கரகரப்பாக வந்தது.

“ஹாய் மிஸ்டர் தீரன்... இட்ஸ் மி...” என்றான் அநேகாத்மன் கிண்டலுடன்.

“சாரி... யார்?” என்று மறுபக்கம் குழப்பமான குரல் வர,

“இடஸ் மி... வெங்கடேஷ் அநேகாத்மன்...” என்றான் அவன் கிண்டலாக.

எடுத்தது அநேகாத்மன் என்பதை அறிந்ததும். விலுக் என்று படுக்கையில் எழுந்து அமர்ந்தார் போலும், அவர் எழுந்து அமர்ந்த சத்தம் இவன் காதில் விழ, இவனுடைய முகம் புன்னகையில் மலர்ந்தது.

“எதற்காக என்னை அழைத்தாய்?” என்றவரின் குரலில் பயத்தை மறைக்க முகமூடியாகப் போட்ட கோபம்தான் தெரிந்தது.

“ஹே... கூல் மிஸ்டர் தீரன்... உங்களுக்கு ஒரு செய்தி கூறவே தொலைபேசி எடுத்தேன்...”
“வட் இஸ் இட்...”

“ம்... விரைவில் நீங்கள் ஜெயிலுக்குப் போகப் போவது போல கனவு கண்டேன்... அதை சொல்லலாம் என்று... »

“வட்... என்ன உளறுகிறாய் நீ...” என்று தீரன் சீற, அதே நேரம், அநேகாத்மன் எழுந்துவிட்டான் என்பதை அறிந்து சர்வமகி அவனுக்கு பிளாக் கொ ்பி வார்த்து எடுத்து வந்தாள்.

மேல்சட்டையின்றி, வெறும் ஷார்ட்சுடன், ஜன்னலடியில் நின்றவாறு பேசிக்கொண்டிருந்த தன் கணவனின் கட்டுடலின் அழகில் ஒரு கணம் மூச்சடக்கி நிற்றாள் சர்வமகி.

அசாத்திய அவனுடைய அகன்ற மார்பில், முறுகியிருந்த தசைகளும், சற்று பெரிய கழுத்தும் அவனைக் குத்துச் சண்டை வீரன் போலக் காட்டியது. ஒரு கரம் ஷார்ட்ஸ் பாக்கட்டில் நுழைந்திருந்தாலும், கிண்ணென்றிருந்த அவனுடைய கரங்களைப் பார்க்கும்போது. அவளை அறியாமலே, அந்தக் கரங்களுக்குள் சிறைப்படவேண்டும் என்கிற பேராவல் எழுந்தது.

அவளையும் அறியாது கரங்கள் நடுங்க, ஓசையெழுப்பாது மெதுவாக அவனை நெருங்கியவள், அவனுக்கருகாக இருந்த கண்ணாடி மேசையில் கொ ்பியை வைக்க, தன் இணையாளின் வரவை, உள் உணர்வை வைத்தே உணர்ந்தவன், முகம் மலர, கைபேசியில் பேசியவாறே திரும்பினான்.

அவளோ அவன் உடல் பார்க்க நாணித் தலை குனிந்தவாறு திரும்ப, ஷார்ட்ஷ் பாக்கட்டிலிருந்த தன் இடக்கரத்தை வெளியே எடுத்து, அவள் வலக் கரத்தைப் பற்றினான் அவன்.

சற்றுத் தடுமாற்றத்துடன் திரும்பியவள், சிரமப்பட்டு அவனுடைய வெற்று மார்பில் தன் பார்வையைச் செலுத்தாது, அவனுடைய முகத்தை மட்டும் பார்க்க, அந்தக் கள்வனோ, அவள் நிலை அறிந்து, கண்ணடிக்க, இவள் முகம் நாணி இரத்த நிறம் கொண்டது.

அதைக் கண்டதும், இவன் தன்நிலை கெட்டுத் தன் மனைவியை சுண்டி இழுக்க, அவள் அவனுடைய முடியடர்ந்த மார்பில் கச்சிதமாக மோதி

நின்றாள். நாணத்தால், உடல் சுட, அதை உணர்ந்த கள்வனின் உணர்வுகள் ஒரு கட்டுக்குள் வராமல் தறிகெட்டு ஓடத்தொடங்கின.

அவளோ அவன் நிலை புரியாமல், அவனிடமிருந்து விலக முயல, அவள் முயற்சியை மிக இலகுவாகத் தன் வலக்கரம் கொண்டு இறுக அணைத்துத் தடுத்தான்.

சர்வமகிக்கும் தன் நிலையைக் கட்டுப்படுத்துவது சிரமாகத்தான் இருந்தது. அவனுடைய அணைப்பொன்றும் அவளுக்குப் புதிதல்லத்தான். ஆனால், இப்படி வெற்றுடம்புடன் அவளை அணைப்பது இதுவே முதன் முறை. அதனால் அவளுக்குப் பெரும் கூச்சமும், தயக்கமும், பதற்றமும் போட்டிபோட்டுக்கொண்டு அவளை ஒருவழிப் படுத்திக்கொண்டிருந்தன. கூடவே அந்த வெம்மையிலிருந்து விலகவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

தன் தலையை நன்கு நிமிர்த்தி, "நான் போகவேண்டும்..." என்று அவன் விழிகளைப் பார்காது, மெதுவாகக் கூற, இவனோ

"நோ..." என்று உதட்டை மட்டும் அசைத்து அவளை மேலும் தன்னோடு இறுக்கிக்கொண்டான். அதே நேரம், மறுபக்கமிருந்து,

"ஹலோ... ஹலோ..." என்று பதட்டமான குரல் வர,

"சாரி மிஸ்டர் தீரன்... சாரி... என்ன கேட்டீர்கள்... ஆ... நான் சொல்வது நிஜம்... உண்மை.... சத்தியம்...." என்று கூற, அநேகாத்மன் யாரோடு பேசுகிறான் என்று திகைத்த சர்வமகி தன் தலையை உயர்த்தி, விழிகளாலேயே, யார் என்பது போலக் கேட்க,

"எ க்ளையன்ட்..." என்றவன், அவள் தலையை மீண்டும் தன் மார்போடு அழுத்திக் கச்சிதமாக அவள் மறு காதையும் அழுத்துவது போலப் பொத்தியவன்,

"ஆனால் மிஸ்டர் தீரன்... நீங்கள் கவலையே படாதீர்கள்... உங்களுக்கு எதிராக நான்தான் வாதாடப்போகிறேன்... அதனால், ப்ளீஸ் பிரிப்பேர் யுவர் செல்ஃப்..." என்று நக்கலாகக் கூறினான்.

"யாரோடு விளையாடுகிறாய் நீ... ஐ வில் கில் யு...." என்று மறுபக்கம் கத்த, சிறு நகைப்புடனே

"ட்ரை... இஃப் யு டேர்..." என்று கூறியவன், கைபேசியை அணைத்து மேசையில் எறிந்துவிட்டுத், தன் கைவளைவிலிருந்த தன் மனைவியின்

முகத்தைப் பற்றித் தூக்கினான்.

மேலும் சிவந்தவளின் அழகில் தன்னை இழந்தவனாக,

“நான் ஏற்கெனவே சொன்னேன் அல்லவா? இப்படி என் முன்னால் சிவந்து நிற்காதேயென்று... ம்...” என்று அவன் கேட்க, மேலும் சிவந்தவளை மேலும் தன்னோடு புதைத்துக்கொண்டான்.

“ஹே... உன் உடல் சுடுகிறதடி...” என்றான் கிறக்கத்துடன். கூடவே அவனையும் அறியாமல் அவனுடைய கரங்கள். அவள் உடலில் பயனம் செய்யத் தொடங்க, கூடவே இவன் இதழ்கள் அவள் உச்சந்தலையில் சங்கமமாகி நின்றன.

“ஆத்மன்... ப்ளீஸ்...” என்றவளை அவன் கவனத்தில் கொண்டான் இல்லை.

“ஐம் சாரிம்மா... என்னால் இப்படி நீ கைவளைவில் இருக்கும்போது, தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதுவும் இப்படி வெட்கப்படும்போது..” என்றவனின் இரு கரங்களும், அவளுடைய இடையை அடைந்து, கள்ளமாக அவளுடைய மேல்சட்டைக்கூடாகப் புகுந்து, வெற்றிடையில் அழுத்தமாகப் பதிந்து நின்றன.

அவனுக்கு எப்படியோ, அவளுக்குத்தான் மின்சாரத்தைத் தொட்டதுபோலாயிற்று.

அவனோ, தன் உதடுகளை அவள் கழுத்து வளைவிற்குள் புதைத்து... “ஐ லவ்யு மா... டு யு லவ் மி...” என்றான் தாபத்துடன்.

அவளோ அவனுக்குப் பதில் சொல்லும் நிலையிலா இருந்தாள். அவன் வருடல் சொன்ன கதையில் தன்னிலை கெட்டல்லவா இருந்தாள்.

நல்ல வேளையாக, திடீர் என்று அவனுடைய கைபேசி அழைக்க, முதலில் விறைத்த அநேகாத்மன், முகத்தில் அப்பட்டமாக எரிச்சல் தெரிய, சர்வமகியை விட்டு விலகப் பிடிக்காதவனாக, அப்படியே கிடந்தான்.

கைபேசியின் அழைப்பில் சுயநினைவு பெற்ற சர்வமகி, வேகமாக அவன் அணைப்பிலிருந்து விலகி, கைபேசியை எடுத்து அவன் கரத்தில் திணிக்க, இவன் கோபமாக முறைத்தான்.

அவன் முறைப்பைக் கண்டதும், இவளுக்கு நகைப்புத்தான் வந்தது. கலகலத்து நகைத்தவள், சிறுபிள்ளை போலத் தன்னை முறைத்துப் பார்த்துக்கொண்டிருக்கும் தன்னவனின் முனபுறத் தலைமுடியை, எக்கிக் கால் பெருவிரலில் நின்றவாறு, வேகமாகக் கலைத்து விட்டவள்,

“கொ ்பி ஆறப்போகிறது... குடித்துவிட்டு, விரைவாகக் கீழே வாருங்கள்....” என்று உத்தரவிட்டாள் கனிவுடன்.

பின் திரும்பி, அவனுடைய வெற்று மார்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கண்டதும், மேலும் நாணம் கொண்டவளாக, “ஷேர்ட்டைப் போட்டுக்கொண்டு வாருங்கள்...” என்று விட்டு ஓடினாள் அவன் மனையாள்.

அவளுடைய ஒவ்வொரு அசைவையும் ரசித்துக்கொண்டிருந்தவனுக்கு, திடீர் என்று தன் மார்பைக் கண்டதும், அவளுடைய விழிகள், நாணத்தோடு, வேறு செய்தியையும் கூறியதை உணர்ந்தவன், ‘என்ன இது...” என்று எண்ணியவனாகக் கொ ்பியில் கைவைக்கப் போனான்.

அப்போதுதான் அங்கிருந்த கண்ணாடியில், அவன் மார்புக் குழிக்குள், தன் உயிரானவளின் குங்குமம் அழுந்தப் பதிந்திருப்பதைக் கண்டான். கண்டதும், ஏனோ அவனுக்கு சிலிர்த்தது. என்னவென்று சொல்ல முடியாத ஒரு உணர்வில், அந்தக் குங்குமத்தைத் தன் விரல்களால் வருடிக் கொடுத்தான். உடல் சிலிர்த்தது. கொஞ்சம் விரல்களில் படிந்திருக்க, நாசியில் பிடித்து குங்குமத்தின் மஞ்சள் மணத்தை நுகர்ந்தான. அதன் சுகந்தம் நுரையீரல் வரை இனித்தது.

அந்த இனிய உணர்வுடனே, குளியலறைக்குள் நுழைந்தான் அநேகாத்மன்.

நிலவு 45

இப்படியே நாட்கள் சென்றன. இதற்கிடையில் நடராஜரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அவருடைய கைபேசி கைப்பற்றப்பட்டது. அவருடைய கைபேசியில் பதிந்தது அவர் குரல்தானா, யாராவது திட்டமிட்டு செய்ததா என்கிற கோணத்தில் எல்லாம் விசாரிக்கப்பட்டது. தீரனையும் விசரித்தார்கள். அவருடய மறுப்பால் மேலும் விசாரனை இடம் பெற்றது. இப்படியே அந்த விசாரனை மூன்று கிழமைகளையும் கடந்தன.

இந்த நிலையில் அநேகாத்மன் இது சார்ந்த செய்திகள் சர்வமகியை வந்தடையாமல் இருப்பதற்காக மிகக் கவனமாக இருந்தான். அவனுக்கும் அது ஒன்றும் கடினமாக இருக்கவில்லை. யாருக்கும் செய்தியைப் பார்ப்பதற்கோ, அதனோடு மினக்கடுவதற்கோ நேரம் கிடைப்பதில்லை.

அடுத்த சில நாட்களில் அநேகாத்மன் இரு முறை சர்வமகியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வந்தான். அடிக்கடி இரத்தப் பரிசோதனை, அந்தப் பரிசோதனை இந்தப் பரிசோதனை என்று அவளுடைய உடலில் ஊசியைக் குத்தும்போது இவனுக்கு வலிக்கும்.

அதைத் தவிர்த்துவிட்டால் வாழ்க்கை இனிமையாகப் போய்க்கொண்டிருக்கும்.
மனிதர்கள் நினைப்பது அனைத்தும் நடந்துவிட்டால் இந்த உலகத்தில் கடவுள் என்பது இல்லாததாகிவிடுமே.

அன்று அநேகாத்மன் கட்டாயமாக ஒரு விழாவிற்குச் செல்லவேண்டியிருந்தது. அதனால் அவன் சர்வமகியையும் அழைத்துக்கொண்டு போக நினைத்தான்.

சர்வமகிக்கு அவனுடன் போகச் சற்றுத் தயக்கமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அவனுடைய விருப்பத்திற்காகக் கிளம்பிவிட்டாள்.

தெளிந்த ஆகாய நிற நீல சேலைக்குத் தங்க வேலைப்பாடு செய்த காஞ்சிபுரப் பட்டிற்குத் தகுந்த வேலைப்பாடு செய்த பிளவுசில் கிளம்பியவளுக்கு, அந்த நிறத்திற்குத் தகுந்தாற் போல, முத்துக்கள் பதித்த ஆரம் போட்டால் இன்னும் எடுப்பாக இருக்குமே என்று எண்ணியவள், தன் பெட்டியைக் குடைந்து, செயற்கையான முத்தில் நெய்த ஆரம் ஒன்றை எடுத்துக் கழுத்தில் மாட்டினாள். அதற்குத் தோதாக, முத்தால் நெய்த தோடு. அனைத்தையும் அணிந்துவிட்டுக் கண்ணாடியில் பார்த்தவளுக்கு ஏனோ திருப்தியே வரவில்லை.

ஏதோ குறைவது போலத் தோன்றியது.

“ப்ச்... நம்மை யார் கவனிக்கப்போகிறார்கள்? என்று அலட்சியமாக எண்ணியவள் திரும்பினாள்.
அதே நேரம், சர்வமகியை இன்னும் காணவில்லையே என்று தேடிவந்த அநேகாத்மன், கண்ணாடியில், தன்னைப் பார்த்து ரசித்துக்கொண்டவளிடமிருந்து தன் வழிகளை அகற்ற முடியாமல், அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இருவருடைய விழிகளும், ஒன்றோடு ஒன்று மோதின. இருவருக்குமே அடுத்த மூச்சை எடுக்கும் எண்ணம் இருக்கவில்லை. பெண்களுக்கு இலக்கணமாய், அவளும், ஆண்களுக்கு இலக்கணமாய் அவனும், ஒருவரின் அழகில் மற்றொரவர் மயங்கிப்போய் கிறங்கியிருந்தனர்.

அவனுக்கென்றே அளவெடுத்துத் தைத்த, கிரே நிறக் கோட்டும், சூட்டும் அணிந்து, நீல நிற டையும், நீண்ட அவன் உடலிற்கு கச்சிதமாகப் பொருத்தியிருந்தது. பளபளத்த டிசைனர் ஷர்ட். வகிடுச்சி எடுத்துப் படிந்து வாரிய முடி, நெழிந்து நெழிந்து சென்றது கூட, அவன் ஆண்மையை சற்று அதிகப்படுத்திக் காட்டியது. கரத்தில் ரோலக்ஸ் கடிகாரம் எடுப்பாய் அமர்ந்திருந்தது.

அடேங்கப்பா... இவன் என் கணவன்... எனக்கே எனக்கானவன். அத்தனை ஆண்மையின் இலக்கணமாகத் திகழும் இவன் எனக்கு மட்டுமே உரிமையானவன். அவள் முகத்தில் பெருமையின் பூரிப்பும் தோன்ற, அவள் அழகு இன்னும் பன்மடங்கானது. அந்த அழகில் தன்னைத் தொலைத்தவனாக, இன்னும் தன் கனியவளை ருசிப்பதற்காக நெருங்கினான் அந்த ஆண்மகன்.

அந்தக் கள்வனின் விழிகளோ, அவள் உச்சிமுதல் பாதம்வரை ரசித்துப் பார்க்கத் தொடங்கின. சேலை மறைக்காத வெற்றிடையைக் கொஞ்ச நேரம் அதிகம் ரசித்தவன், தன் விழிகளை மெல்ல மெல்ல மேலே கொண்டு சென்றான்.

அவளுடைய செழுமையை ரசனையுடன் பருகியவன், மையிட்ட அந்தத் தாமரையாளின் நீண்ட விழிகளில் இப்போதும் குதித்து நீச்சலடிக்க அவன் தயாராக இருந்தான். வில்போன்ற புருவத்தின் மத்தியில், குங்குமம். ஆப்படியே சற்று மேலே வகிட்டிலும் வைக்கப்பட்டிருந்தது. அந்த மெல்லிய கூர் நாசியின் இடது பக்கத்து மத்தியில், மின்னிக்கொண்டிருந்த மூக்குத்தி. அளவான கழுத்தில், சுற்றியிருந்த ஆரம்... அதைக் கண்டவன் தன் முகத்தைச் சுழித்தவாறு அவளை நோக்கி வந்தான்.

“இது என்ன?” என்றான் கோபமாக.

“எது?” என்று புரியாமல் கேட்டாள் இவள்.

“இது என்றவாறு, அவன் கட்டிய தாலிக்கொடியின் மேலே தொங்கிக்கொண்டிருந்த ஆரத்தைப் பிடித்தவாறு கேட்டான்.

“இது... ஆரம்...” என்றாள் அவள் ஒன்றும் புரியாமல்.

“அது எனக்குத் தெரிகிறது... ஆனால்... இந்த ஆரம் ஒரிஜினல் அல்லவே...” என்றான் அவன் கோபமாக.

“ஓ... அதுவா? இந்த சேலைக்கு முத்தால் செய்த ஆரம் போட்டால் நன்றாக இருக்கும் என்று எண்ணினேன். இது எப்போதோ ஒரு மாலில் வாங்கியது. சரி, இதையே அணியலாம் என்று எண்ணி அணிந்தேன்...” என்றாள் சர்வமகி.

“உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. நீ யார் தெரியுமா? அநேகாத்மனுடைய மனைவி. த லேட் வெங்கடேஷின் மருமகள். நீ இப்படி நகலைப் போடலாமா? என்று கடிந்தவன், எங்கோ சென்றான். திரும்பி வந்தபோது, அவன் கரத்தில் நான்கைந்து நகைப்பெட்டிகள் வீற்றிருந்தன.

“இது... என்ன?” என்றாள் சர்வமகி வியப்புடன்.

“சொல்கிறேன்...” என்றவன் அவளின் கரத்தைப் பற்றி இழுத்துச் சென்று கண்ணாடியின் முன்பாக இருந்த இருக்கையில் அமர்த்தினான்.

அவள் திகைப்புடன் அநேகாத்மனை அண்ணாந்து ஏறிட்டுப் பார்க்க, தன் ஒற்றைப் புருவத்தை மேல் ஏற்றி, என்ன என்பதுபோலக் கேட்டவன், தன் கரத்திலிருந்த நகைப்பெட்டியை அருகேயிருந்த மேசையின் மீது வைத்துவிட்டு, மீண்டும் அவளுக்குப் பின்னால் வந்து நின்றான்.

அவன் என்ன செய்யப்போகிறான் என்பதை யோசிப்பதற்குள்ளாக, அவனுடைய வலிமையான கரங்கள், அவளுடைய கழுத்தை மென்மையாக வருடிக்கொடுத்தவாறே, கழுத்தில் இருந்த ஆரத்தை மெதுவாகக் கழற்ற,

“என்ன...? என்ன செய்கிறீர்கள் ஆத்மன்...” என்று அவனைத் தடுக்க முயன்றாள். அவனோ அவளை சிறிதும் லட்சியம் செய்யாது, அந்த ஆரத்தை மேசையில் எறிந்தான். காதிலிருந்த தோட்டில் கரத்தை வைக்கும்போது, இவள் சிலிர்த்து விலக,

“ஹேய்... டோன்ட் மூவ்...” என்று, அழுத்தமாகக் கூறியவன்,, தானே அவற்றையும் கழற்றித் தூரமாக எறிந்தான்.

அவள் கரத்தைப் பற்றியவன், அதன் வழவழப்பில் தடுமாறியவனாக,

அதை வருடிக்கொடுக்க முயல, இவளோ பெரும் சங்கடத்துடன் தன் கரத்தை இழுத்தாள். அவள் இழுத்த இழுப்பில், அவள் அணிந்திருந்த காப்பு, அவன் கரத்தோடு வந்திருந்தது.

அவன் மறுகரத்தையும் பற்றப்போக, இவள் அவசர அவசரமாக அந்தக் கரத்திலிருந்த காப்பையும் கழற்றி கண்ணாடிமேசையில் மெதுவாக வைத்தாள்.

மெல்லிய புன்னைகை ஒன்றை சிந்தியவன், தான் எடுத்து வந்த நகைப்பெட்டியைத் திறந்து, அவள் முன்னால் வைத்தான்...

அதனைக் கண்டவளுக்குத் தன் வழிகளையே நம்பமுடியவில்லை. அத்தனையும், நீல சபாயரும், நிஜக் கலப்படமில்லா முத்துக்களும், இடையில் வைரங்களும் கலந்து நெய்த நகைசெட். ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு. ஒவ்வொன்றும் குறைந்தது பல லட்ச டாலர்களுக்குச் சொந்தமானவை என்பதைப் பார்க்கும்போதே நன்கு தெரிந்தது.

“ஆ... ஆத்மன்.... இது...” என்று இவள் தவிப்புடன் நெழிய,

“இதில் உனக்கு எது பிடித்திருக்கிறது மகிம்மா?” என்று கனிவாகக் கேட்டான் அநேகாத்மன்.

“இல்லை... நான்... இதைப் போட மாட்டேன்...” என்றாள் இவள் பயத்துடன்.

“வட்? வை? ஏன்றான் இவன் சற்றுக் கோபமாக.

“இதெல்லாம் அதிக விலை... ஒரு வேளை நான் தொலைத்தால்... நான் மாட்டேன்...” என்று பலமாக அவள் தலையை அங்கும் இங்கும் ஆட்ட, அநேகாத்மன் தானாகவே ஒரு நகைப்பெட்டியைக் கையில் எடுத்தான்.

அதிலிருந்த ஆரத்தை வெளியே எடுத்தவன், சர்வமகியின் மறுப்பையும் கருத்தில் வாங்கிக் கொள்ளாது, அதனை அவள் கழுத்தில் அணிவித்தான்.

“ஓ மை.. காட்... இதன் விலை மிக மிக அதிகம் ஆத்மன்... எதற்கு ரிஸ்க்... ப்ளீஸ்... வேண்டாமே...” என்றவாறு அதைக் கழற்ற முயல, அநேகாத்மனின் கரங்கள் அவள் கரங்களை வேகமாகத் தடுத்தது.

“இனஃப்...” என்கிற அவன் ஒற்றை வார்த்தையில் சர்வமகி சர்வமும் அடங்கி, அவனை அச்சத்துடன் பார்க்க,

“சர்வமகி... நான் ஏற்கெனவே கூறியிருந்தேன்... இனிமேல் நீ பணம் பற்றி எதற்கும் கவலைப்படக்கூடாது என்று... அதை நீ உன் புத்திக்குள் தெளிவாக ஏற்றிவை... உன் கணவன், ஒவ்வொரு டாலருக்கும் கணக்குப்பார்க்கும் நிலையில் இல்லை. இது தொலைந்தால், இதைப்போல பாத்து செட் வாங்கும் அளவு வசதி எனக்கு இருக்கிறது... அதனால்... மனதைப் போட்டுக் குழப்பாதே... என்ன நான் சொல்வது புரிந்ததா?” என்றான் சற்றுக் கடுமையாக.

அவன் கடுமை, அவளுக்கு பெரும் வலியைக் கொடுத்தாலும், அவன் கோபத்தை மேலும் கிளரப் பிடிக்காதவளாக, அமைதிகாத்தாள் சர்வமகி.

அதனை அனுமதியாக ஏற்றுக்கொண்டவன், அவள் புறமாக நன்கு குனிந்து, இரு தோடுகளையும் போட முனைந்தான்.

“இல்லை நானே...” என்று இவள் கூறி அவனிடமிருந்து தோடைப் பெற முயல, அவனோ அவளைப் பார்த்து மெல்லியதாகப் புன்னகைத்தான். அந்தப் புன்னகையில், ‘நான் தான் போடுவேன்...’ என்கிற பிடிவாதமும், அழுத்தமும், கூர்மையும் தெரிய சர்வமகிதான் தன் கரத்தை இறக்கவேண்டியதாகப் போய்விட்டது.
அவனோ, அந்தத் தோட்டை அவளுக்கு அணிவித்தவாறு, அவளை மிகவும் நெருங்கி நின்று,

“மகிம்மா... இது என் அம்மாவோடது...” என்றான் வலது புறத்துக் காதில் மிகக் கவனமாகத் தோடை அணிவித்தவாறு. அதை அணிந்து முடிந்ததம், இடதுபக்கமாக வந்து, மண்டியிட்டு அமர்ந்தவன், அந்தப் பக்கத்துத் தோட்டைப் போட்டான்.

“இனி இது எல்லாம் உனக்குத்தான் சொந்தம்...” என்றான் தன் வேலையில் கவனமாக.
சர்வமகி திகைப்புடன் அவனைத் திரும்பிப் பார்க் முயல,

“ஹேய் டோன்ட் மூவ்... தோடு உன்னைக் குத்திவிடப்போகிறது...” என்று பதறியவன், அவள் திரும்பிய வேகத்தில், அவன் கரமும், தோடும் அழுத்திய இடத்தை மெதுவாக வருடிக்கொடுத்து, பின் அணிந்துவிட்டவாறே,

“என் அம்மாவுக்கு ரசனை அதிகம் மகிம்மா... இதெல்லாம் அவர்களின் கலெக்ஷன்ஸ். அவர்களிடம் உள்ள நகைகளைப் போல யாரிடமும் இதுவரை இருந்ததில்லை. சொல்லப்போனால், அம்மா சாரிட்டிக்காக

தன் கலக்ஷன்சை பலமுறை கண்காட்சிகளில் வைத்திருக்கிறார்கள்... அவர்களின் நகைகளைப் பார்ப்பதற்கென்றே பலர் வருவார்கள். அதில் சிலது என் அம்மாவின் பரம்பரை நகைகள்... பிறகு உனக்கு அவற்றைக் காட்டுகிறேன்...” என்று கூறியவனைக் கண்ணாடியினூடாக, இமை மூடாது பார்த்துக்கொண்டிருந்தாள்.

அடுத்து அவள் கரத்தைப் பற்றிக் காப்பை அணிவித்தான். அவனுடைய கரங்கள், தாராளமாக அவள் மேனியில் பட்டபோது, இவள் பெரிதும் தவித்துப்போனாள். அவனோ, அவளுக்கு நகை அணிவிக்கும் எண்ணம் மட்டுமே கொண்டவனாக, தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.
அனைத்தும் முடிந்து, அந்தக் கண்ணாடி பிம்பத்தில், தன் மனையாளைப் பார்த்தவன் திகைத்துப்போனான்.

இத்தனை அழகையும் மொத்தமாய் ஒருத்தி கொண்டிருக்கமுடியுமா? சும்மாவே அவள் அழகுக்கு, உலக அழகிகள் அனைவரும் அவளைக் கண்டு பொறாமைப்படும் அளவிற்கு அவள் அழகு. அதிலும், அவள் அலங்காரம் செய்து நின்றால், அதைக் கூறுவதற்கு வார்த்தைகள்தான் கிடையாது.
அப்படித்தான் அநேகாத்மனும், தன் நிலை மறந்து, தன் இணையாளை பெரும் தாபத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனால் அவன் விழிகளையே நம்பமுடியவில்லை.

“இவள் எனக்கானவள்... எனக்கு மட்டுமே உரிமையானவள்...” என்கிற பெருமை அவனை நிமிர்ந்து நிற்கச் செய்ய. முகத்தில் அப்பட்டமாகப் பெருமையும், மகிழ்ச்சியும் தாண்டவமாட, அவள் தோள்களைப் பற்றி எழுப்பியவன், பின் அவளைத் தன் புறம் திருப்பினான்.

அவனுடன் பார்க்கும்போது, அவள் குள்ளம்தான். அவளுடைய தலையே, அவனுடைய மார்பின் கீழ்ப்பகுதி வரைதான் வந்திருந்தது. அவனைப் பார்க்கவேண்டுமானால், அவள் தலைநிமிர்ந்துதான் பார்க்கவேண்டும். சூரியனைக் காணும் ஏக்கத்தில், தாமரை தலை நிமிர்ந்து சூரியனைப் பார்க்குமே, அப்படித்தான், அவளும் அவனை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் கரம் பற்றித் தாங்கியவன்,

“மகிம்மா... நீ எத்தனை அழகு தெரியுமா? நீ என்னவள் என்பதை இன்னும் என்னால் நம்பமுடியிவல்லை...” என்றவனுடைய கரங்கள்,

மெல்ல மெல்ல இறங்கி, அவளுடைய வெற்று இடையில் தஞ்சம் அடைந்து நிலைத்து நின்றன.

அவனுடைய அழுத்தமான கரங்கள். அந்த மென் இடையில் படர்ந்து அழுத்திக் கொடுக்க, சிலிர்த்துப்போனாள் சர்வமகி

அவனுக்கோ, அவள் இடையை விட்டுத் தன் கரத்தை விலக்கும் எண்ணம் சற்றும் இல்லாதவனாக, அந்த மென்மையை அனுபவித்தவனாக, அவள் முகம் நோக்கிக் குனிந்தான். அதே நேரம், பூஜைவேளை கரடியாக, யாரோ அவர்களின் அறைக் கதவைத் தட்டினர்.

நிலவு 46

அவன் அதைக் காதில் வாங்காமல், மேலும் தன் மனைவியை நொக்கிக் குனிந்து தன் காரியத்தை நிறைவேற்றத் துடித்துக்கொண்டிருந்தான்.

அந்தோ பாவம், அவன் உணர்வை வெளியே இருந்தவர்கள் சற்றும் அறிந்துகொள்ளவில்லை போலும், மேலும் தட்ட,

“டாமிட்...” என்று முனகியவன், “யெஸ்...” என்றான் எரிச்சலுடன்.

“சாரி அத்தான்... இது நான்தான்...” என்றாள் தேவகி வெளியே நின்றவாறு தயக்கமாக.

“வட் இஸ் இட் தேவகி...” என்றவனின் குரலில் நிச்சயம் எரிச்சல் தாண்டவமாடியது. ஒரு கணம் அவன் குரலில் தயங்கிநின்ற தேவகி,

“சாரி அத்தான்... நேரம் போய்க்கொண்டிருக்கிறதே... சரியாக ஆறு மணிக்கு அங்கே நிற்கவேண்டும் என்று சொன்னீர்களே...” என்று நினைவு படுத்தினாள் தேவகி. அவள் கூறியபின்தான் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் கொஞ்சமாக அல்ல.. அதிகமாகவே போய்விட்டிருந்தது.

“ஷிட்...” என்று முனங்கியவன்.

“லெட்ஸ் கோ... ஸ்வீட் ஹார்ட்... நேரம் போய்க்கொண்டிருக்கிறது...” என்று கிறக்கமாகக் கூறியவன், மீண்டும் அவளைத் தலை முதல் கால்வரை அளவிட்டான்.

அவன் பார்வையை சேலைக்கு இடையில் தெரிந்த வெண்ணிற இடை

அவனைப் பித்தம் கொள்ளச் செய்ய, தன் கரம் கொண்டு, அவ் இடையை வருட எண்ணியவனாகத் தன் கரத்தை உயர்த்த, மீண்டும் தேவகி கதவைத் தட்ட,

“ஓ காட்...” என்று சினந்தவன்,

“நான் வெளியே நிற்கிறேன் மகிம்மா... நீ, மிச்ச டச்சப்பை செய்துகொண்டு வா...” என்றவாறு வெளியே வந்தான். அங்கே தேவகி இவனைப் பார்த்துக் கிண்டலாகச் சிரிக்க, இவனும் அந்தக் கிண்டலை தைரியமாக எதிர்கொண்டவனாக,

“வட்...” என்றான் அழுத்தமாக.

“ஐயோ... நான் ஒன்றும் கூறவில்லையப்பா...” என்று அவள் தோளைக் குலுக்க, இவன் உதட்டில் மெல்லிய புன்னகை மலர்ந்தது.

“நீ பூஜை வேளைக் கரடி கேள்விப்பட்டிருக்கிறாயா?” என்றான் கிண்டலாக.

“ஓ... அடிக்கடி நாங்கள் பார்த்தும் இருக்கிறோமே...” என்றாள் இவள் பதிலுக்கு. எப்போதும் சகோதரியுடன் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, பொறாமையில் இடையில் வந்து மூக்கை நுழைக்கும் அவனைப் பற்றிக் கூறுகிறாளாம். அவனுக்குரியவளான அவன் மனைவியை ஆளுக்காள் உரிமைகொண்டாடினால், அவன் தான் என்ன செய்வது?

அதற்காக அவனைக் கரடி என்பதா? என்ன தைரியம்...’ என்று எண்ணியவனுக்கு, ஏனோ முதன் முறையாகக் கோபம் வர மறுத்தது.

இதையே வேறு யாருமாக இருந்திருந்தால், அவர்களின் அத்தியாயமே கேள்விக்குறியாக மாறியிருக்கும். ஆனால் தேவகி கூறியதைக் கேட்டதும், அவனை அறியாமல் அவன் இதழ்கள் புன்னகையில் மலர்ந்தன.

“இன்று இல்லாவிட்டாலும், என்றாவது ஒரு நாள் உன் வால் அறுபடத்தான் போகிறது...” என்றான் அவன் நகைக்காமல்.

அவன் தன்னைக் குரங்கு என்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட தேவகி, க்ளுக் என்று சிரிக்க, அதில் கொஞ்சமே, கொஞ்சமாக அவன் சர்வமகியைக் கண்டானோ, அவனுள் இருந்த, மெல்லிய கோபமும், அப்படியே காணாமல் மாயமாய் மறைந்து போக,

“சரி சரி அக்காவுக்கு போய் ஹெல்ப் பண்ணு...” என்று விட்டு வேகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினான் அநேகாத்மன்.

அலங்காரமெல்லாம் முடித்து வெளியே வந்த சர்வமகி உள்ளத்தைக் கொள்ளைகொண்டாள். தேவகியும் சிறு டச்சப் செய்தாள் போலும், சர்வமகியின் அழகு மேலும் மெருகேறியிருந்தது.

தேவகிக்கே சர்வமகியைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை.

“வா...வ். லுக் அட் யு அக்கா... என் கண்ணே பட்டுவிடும்போல எத்தனை அழகாக இருக்கிறாய் தெரியுமா?” என்றாள் தேவகி பெருமையுடன்.

‘எத்தனை அழகு இருந்துதான் என்ன? இன்னும் கொஞ்சக் காலங்களில் போகப்போபவள்தானே...’ என்கிற எண்ணம் அழையாமலே வர, அவள் புன்னகை அப்படியே வாடிப்போனது.

“அக்கா...” என்று வலியுடன் தேவகி அழைக்க, உடனேயே தன் முகத்தில் தோன்றிய மாற்றத்தினை மறைத்தவள், உதட்டை இழுத்து சிரிப்பதுபோல நடித்தாள்.

அதே நேரம் அவளை அழைத்துச் செல்ல வந்த அநேகாத்மன் சர்வமகியைக் கண்டதும் விழி மூட மறந்தவனாக அவளையே வெறித்துப் பார்த்தான். தேவகியும், ஏதோ செய்திருக்கிறாள் போலும், சர்வமகியின் முகம் இன்னும் பொழிவாக மலர்ந்திருந்தது.

“வாவ்... இத்தனை அழகையும் இத்தனை நாட்களாக எங்கே ஒளித்துவைத்திருந்தாய் மகிம்மா...?” என்று கேட்டவன், தன் வலது கரத்தை நீட்டி தலைகுனிந்தவாறு,

“இளவரசியாரே... தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால், என் கரத்தைப் பற்றியவாறு வரலாம்...” என்றான்.

“அது சரி... இளவரசியர் எல்லோரும் இப்படி சேலைதான் கட்டிக்கொண்டு நின்றார்களாக்கும்...” என்றாள் தேவகி கிண்டலுடன்.

“அந்தக் காலத்து இளவரசியர் போலவா? வேண்டாம் தாயே... இந்த சேலையிலேயே உன் அக்காவை விட்டுக் கண்ணை எடுக்கமுடியவில்லை. அந்தக் காலத்து இளவரசியரின் ஆடையில் என்றால்... ம்ஹ_ம்... அதற்குப் பிறகு வேலையும் வேண்டாம் வெட்டியும் வேண்டாம் என்று உன் அக்காவின் அருகிலேயே இருந்துவிடுவேன்...”

என்று நகைப்புடன் கூறியவன், அவளுடைய கரத்தைப் பற்றிக்கொண்டான்.

ஏனோ அந்தக் கரத்தின் அழுத்தம் இனி அவளை எங்கும் விடப்போவதில்லை என்பதைக் கூறுவதுபோலிருந்தது.

“வேலை... அது புரிகிறது... அது என்னத்தான் வெட்டி...?” என்றவாறு வந்தாள் மாதவி கிண்டலுடன்.

“நீதான் இல்லையே என்று நினைத்தேன். நீயும் வந்துவிட்டாயா?” என்றவன் சர்வமகியைப் பார்த்தான். நாணத்தால் சிவந்திருந்த அவள் விழிகள் அவன் இரத்தோட்டத்தை அதிகரிக்கச் செய்தது.

“அத்தான்... கேள்வியை நான்தான் கேட்டேன்... என் கேள்விக்கு பதில் கூறாமல் அக்காவைப் பார்த்தால் என்ன நியாயம்?” என்றாள் மாதவி கோபத்துடன்.

“ம்... என்ன கேள்விகேட்டாய்?” என்று நிமிர்ந்தான் அநேகாத்மன்.

“இல்லை... வேலை வெட்டி என்றீர்களே... வேலைக்கு அர்த்தம் தெரியும்... வெட்டிக்குத்தான் தெரியாது...” என்றாள் விடாமல்.

“ம்... உன் அக்காவுடன் பேசிக்கொண்டிருந்தால் அது வேலை... உங்களோடு மட்டும் பேசிக்கொண்டிருந்தால்... அது வெட்டி... இப்போது போதுமா விளக்கம்...” என்று அவன் நகைப்புடன் கேட்க,

“பார்ரா... இது தேவையா நமக்கு... தேவகி... நாம் ஏன் வெட்டியா மற்றவர்களுடன் பேசவேண்டும். நமக்கு ஆ...யிரம் வேலை இருக்கிறது... அத்தானே... நீங்கள் அக்காவுடன் வெட்டியாக... நோ நோ... வேலையாகப் போய் வாருங்கள் நாங்கள் வெட்டியாக எங்கள் வேலையைச் செய்கிறோம்...” என்றவள் கலகலவென்று நகைத்தாள்.

“ஓக்கே கேர்ள்ஸ்... டைம் போகிறது... விவாதத்தைப் பிறகு வந்து வைத்துக்கொள்ளலாம்... நீங்கள் உங்கள் வெட்டி... சாரி... வேலையைப் பாருங்கள்...” என்றவன் சர்வமகியின் இடையில் தன் கரத்தைப் போட்டு அவளைக் காருக்கு இழுத்துச் சென்றான். .

கிடைத்த அந்த சந்தர்ப்பத்தில், தான் நினைத்ததை சாதித்துக்கொண்டிருந்தான் அநேகாத்மன்.
ஆமாம், அவள் வெற்றிடையில் தன் கரத்தைப் பதித்தவன், அவ் இடையின் மென்மையை, கன கட்சிதமாக, பட்டுக்கும், பஞ்சுக்குமாக

ஒப்பிட்டுக்கொண்டிருந்தான்.

அவனுடைய இடை வருடலில், கூசிச் சிலிர்த்தவள்,

“ஆத்மன்...” என்றாள் நெழிந்தவாறு.

ஒரு வாறு சுய நினைவு பெற்றவன், தான் செய்துகொண்டிருந்த காரியம் நினைவுக்கு வர, அவளைப் பார்த்து தன் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி,

“உன்னுடைய தோல் எப்படி இத்தனை சாஃப்டா இருக்கிறது மகிமா...” என்று அதி முக்கிய கேள்வியைக் கேட்க, அவள் முறைப்பையும் கருத்தில் கொள்ளாது, அவளை முன்னுக்கு அமர்த்திவிட்டு, ஓட்டுனர் இருக்கையில் வந்தமர்ந்தவனின் இதழ்கள் புன்னகையைத் தத்தெடுத்திருந்தன.

கொஞ்சத் தூரம் சென்றதும், காற்றிட்கு அவளுடைய கூந்தல் கற்றை ஒன்று அவளுடைய கழுத்தடியில் பட்டுப் பட்டு விளையாட, வலது கரத்தை ஸ்டியரிங் வீலில் வைத்துக்கொண்டு, இடது கரத்தைத் தூக்கி அந்தக் கூந்தலை ஒதுக்கி விட்டவன், அக் கரத்தை விலக்க முடியாதவனாக, அவள் கழுத்து வளைவைப் பிறங்கையால் வருடிக் கொடுக்க, அவனுடைய திடீர் வருடலில் உடல் கூசி, முகம் நாணி இதழ் கடித்தவளைக் கண்டவன், அதற்கு மேல் முடியாது என்பது போல, சடன் பிரேக் போட்டு ஓரமாகத் தன் காரை நிறுத்தினான்.

சர்வமகி வியப்புடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

“எ... என்ன ஆகிவிட்டது? எனிதிங் ராங்?” என்று அவள் கேட்க, வேகமாக அவள் புறம் திரும்பியவன்,

“யெஸ்... எவ்ரிதிங் இஸ் ராங்...” என்றவன் அவள் முகத்தைத் தன் கரங்களால் பற்றித் தன்னை நோக்கி இழுத்தான்.

அவள் என்ன என்று உணர்வதற்குள்ளாகவே அவளுடைய உதட்டில் தன் உதட்டைப் பொருத்தினான்.
எத்தனை நேரமாக அப்படியே நின்றார்களோ... எங்கோ ஒரு வாகனத்தின் ஹோர்ன் சத்தம் கேட்க, சுயநினைவு பெற்று மெதுவாக அவளை விடுவித்தான் அநேகாத்மன்.

“சாரிடா... உன்னை இப்படிப் பார்த்ததும், என்னால்... அமைதியாக இருக்கமுடியவில்லை... உனக்கு... உனக்கு இதில் ஒன்றும் வெறுப்பில்லையல்லவா?” என்றான் சிறு பயத்துடன்.

சர்வமகி தன் தலையைக் குனிந்து, தன் வெட்கத்தை மறைக்கப் பெரும் பாடு படுவதைக் கண்டதும் இவனுக்கு உற்சாகம் பீறிக்கொண்டு வந்தது.

அவளுடைய முகத்தைத் தன் ஒற்றைவிரலால் பற்றித் தூக்கியவன் சிவந்த அவள் கன்னங்களை ரசனையுடன் பார்த்தான்.

“சர்வமகி... இந்த உலகத்திலேயே பெரிதும் அதிர்ஷ்டம் செய்தவன் நான்தான் தெரியுமா? நான் விரும்பியது எல்லாமே எனக்குக் கிடைத்துவிட்டது... உனக்குத்தான் நன்றி சொல்லவேண்டும்...” என்றவன் மீண்டும் குனிந்து அவள் உதட்டில் முத்தமிட்டுவிட்டுக் காரை எடுத்தான். அவனுடைய வலது கரம், அவளுடைய இடது தொடையை ஆசையுடன் பற்றிக்கொண்டது.

“வந்து... உங்களுடைய பார்ட்டிக்கு இந்த சேலை ஒருமாதிரி இருக்குமோ என்று கொஞ்சம் பயமாக இருக்கிறது...” என்று சற்றுத் தயங்கியவாறு கூறினாள் சர்வமகி.

“நோ... திஸ் இஸ் பேர்ஃபக்ட்... வேண்டுமானால் பார்... எல்லோருடைய பார்வையும் உன் மீதுதான் இருக்கப்போகிறது...” என்றான் அநேகாத்மன் உல்லாசமாக.

“யாருடைய பார்வையும் என் மீது விழவேண்டாம் ஆத்மன்... உங்களுடைய பார்வை மட்டுமே என் மீது விழுந்தால் போதும்... வேறு எதுவுமே வேண்டாம்...” என்று மனதிற்குள் கூறியவள் உரிமையுடன் அவனுடைய தோளிலே தன் தலையைச் சரித்தாள்.

அவனுடைய கரம் அவளை வளைத்துப் பிடித்து தன்னுடன் இறுக்கியது.

“ஆத்மன்... நான் இந்த உலகத்தில் வாழப்போவது கொஞ்சக்காலமாக இருந்தாலும், சந்தோஷமாகவே இருந்துவிட்டேன்... அது போதும் எனக்கு... இனி இப்போது வேண்டுமானாலும் நான் இறக்கத் தயார்...” அவள் முடிப்பதற்குள்ளாக, கார் கிறீச் என்ற சத்தத்துடன் ஒரு இடத்தில் நின்றது.
சிறு அச்சத்துடன் அவனை விட்டு விலகியவள், என்ன நடந்தது என்று தெருவைப் பார்த்தாள். தெரு வெறுமையாக இருந்தது.

“எ... என்ன அனேகாதமன்... ஏன் காரை நிறுத்தினீர்கள்...” என்றாள் புரியாமல்.

திரும்பி சர்வமகியை வெறித்துப் பார்த்தவன், நீண்ட மூச்சுக்களாக

எடுத்துத் தன்னைச் சமப்படுத்த முயன்றான். முடியாமல், குரலில் கோபம் கொந்தளிக்க, அதை அவளிடம் மறைக்க முயன்று தோற்றவனாக,

“சர்வமகி... இனி ஒரு முறை ஒரு முறை தன்னும் உன் ஆயுளைப் பற்றிப் பேசாதே... உன்னுடைய விதி என் முடிவுக் காலத்தில்தான். அது எப்பவோ எனக்குத் தெரியாது. நீ இல்லாத உலகத்தில் என்னால் எதையும்... எதையுமே சிந்திக்க முடியவில்லை... ஒ காட்...” என்றவன் தன் தலைமுடிக் கற்றைகளை ஒற்றைக் கரத்தால் இழுத்துவிட்டான்.

“இனிமேல் ஒரு முறைதன்னும் அப்படிப் பேசாதே... ப்ளீஸ்... என்னால்... அதைத் தாங்கிக்கொள்ள முடியாது...” என்றவன் வேகமாகக் காரை எடுத்தான். அவன் முகம் சிரிப்பைத் தொலைத்து இறுகியிருந்தது.

சர்வமகிக்குத் தன் மீதே கோபம் வந்தது. கொஞ்சம் இளகி வந்தவனை மீண்டும் இறுகவைத்துவிட்டோம் என்கிற எரிச்சலும் வந்தது.

அவளும் அமைதியாக தெருவை வெறித்துப் பார்த்தாள்.

தொடரும்...
நிலவு 47

அவர்களைக் கண்டதும், விழா நடத்துபவர்களின் வரவேற்புப் பெரும் ஆரவாரமாக இருந்தது. உடனேயே அனைவரும் அநேகாத்மனையும் சர்வமகியையும் சூழ்ந்து கொண்டனர்.

“வாவ்... இத்தனை நாட்களாகத் திருமணம் வேண்டாம் என்றிருந்தவன், ஏன் உங்களை மணந்தான் என்று இப்போதல்லவா தெரிகிறது... அநேகாத்மன்... யு ஆர் லக்கி மான்...” என்று பல ஆண்கள் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தனர்.

அதில் சில ஆண்களின் பார்வை அவர்களையும் மீறி, சர்வமகியின் உடல் அழகை எடைபோட்டது மட்டுமல்லாது, அவளை நோக்கித் தம் கரத்தையும் நீட்டினர்.

சர்வமகியும் விகல்ப்பம் இல்லாமல் தன் கரத்தை நீட்ட, அந்த ஆண்களின் பார்வையின் பொருளை உணர்ந்துகொண்ட அநேகாத்மன், சர்வமகியின் கரம் பிற ஆண்களைத் தொடுவதற்கு முன்பாக, அவளைத் தன் கரத்தின் வளைவிற்குள் நிறுத்தி, அவர்களைப் பார்வையால் எரித்தான்.

“ஹே... காய்ஸ்... ஷீ இஸ் மைன்... டோன்ட் மெஸ் வித் ஹர்...” என்றான் அழுத்தமாக.

அந்தக் குரலில் சர்வமகி அதிர்ந்தாளோ, இல்லையோ, மற்றையவர்கள் அதிர்ந்து இரண்டடி பின் வைத்தனர். அதே நேரம்,

“வாவ்... நீங்கள் மிக மிக அழகாக இருக்கிறீர்கள்... மிஸ்டர் அநேகாத்மன் உங்கள் மீது மயங்கியதில் ஆச்சரியமில்லை...” என்றனர் சில பெண்கள்.

அதிலிருந்த ஒரு சிலர் இவளை எரிச்சலுடன் பார்த்துவிட்டு விலகிக்கொண்டனர். அதில் ஒரு வெள்ளையினத்துப் பெண்மணி மட்டும் சர்வமகியை விழி எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்தில் பொறாமை அப்பட்டமாகத் தெரிந்தது. சும்மா என்றால் விட்டிருப்பாளோ என்னவோ, ஆனால் அவள் அணிந்திருந்த ஆரம்... அதைப் பார்க்கப் பார்க்க அந்தப் பெண்ணிற்கு கடும் கோபம் ஏறிக்கொண்டிருந்தது. அந்த ஆரத்தின் பெறுமதி அவளுக்குத் தெரியாதா என்ன? எத்தனை முறை, அந்த நகைகளைத் தீண்ட வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள் ஒரு போதும் அது நிறைவேறவில்லை.

ஒரே ஒரு முறை, அதைப் பார்த்துவிட்டுக் கொடுப்பதாகக் கேட்டபோது, கடுமையாக மறுத்துவிட்டானே. இப்போது அதே ஆரம், அந்தப் பெண்ணின் கழுத்தை அல்லவா அலங்கரிக்கிறது. நினைக்க நினைக்க அந்த வெள்ளையினப் பெண்ணிற்குத் தாங்க முடியவில்லை.

அதே நேரம், பெண்கள் கூட்டம் அநேகாத்மனை சுற்றி வழைத்தது. அவள் இன்னும் அநேகாத்மனின் கைவளைவில் இருப்பதைக் கண்டதும், அவளைத் தம்முடன் அழைத்துச் செல்ல முயன்றனர். அநேகாத்மனோ தன் கைவளைவில் நிற்வளை விடுவதா இல்லையா என்று தயங்க, அவனைப் பார்த்து மெல்லிய புன்னகை ஒன்றைச் சிந்தினாள் சர்வமகி.

அவனுக்கும் அவளைத் தன்னோடு வைத்திருக்க முடியாது. பலர் அவளை நாகரீகமாகக் கையாண்டாலும், விழிகளால் கூட அநாகரிகமாகக் கையாளும் ஆண்களை என்ன செய்வது. அவர்களுக்கு அத்தகைய வாய்ப்பைக் கொடுப்பதே தவறு. அதனால் சர்வமகி தன்னோடு இல்லாமல் இருப்பதே மேல் என்று எண்ணியவன், சம்மதம் தெரிவித்து அவளை விடுவிக்க,

“லேடீஸ்... டேக் கெயர் ஒஃப் ஹர்....” என்றான் கட்டளையாக.

“அடேங்கப்பா... உங்கள் மனைவியை நாங்கள் பத்திரமாகவே பார்த்துக்கொள்வோம்... கவலைப்படாதீர்கள்...” என்று கிணட்லாகக் கூறிய பெண்கள் அவளையும் அழைத்துக்கொண்டு தங்கள் இடத்திற்குச் சென்றனர்.

அவளிடம் பல கேள்விகளைக் கேட்டுத் துளைத்துவிட்டனர் பெண்கள் கூட்டம். சர்வமகி பதில்கூறியே களைத்துவிட்டாள்.

அதுவும் அவர்கள் அநேகாத்மனைப் பார்துக்கொண்டே கேள்விகள் விதம், இவளுக்குக் காந்தியது. கேள்வியென்னவோ அவள் மீது தொடுத்தாலும், அவர்களின் விழிக் கணைகள் அநேகாத்மனை நோக்கியே பாய்ந்துகொண்டிருந்தன.

“அநேகாத்மனை எங்கே பார்த்தீர்கள்...”

‘அது சரி... அந்தக் கதையைக் கேட்டால், பிடிரியில் கல்முட்ட ஓடிவிடுவீர்கள்’

“உங்களோடு நேகன் எப்படி நடந்துகொள்கிறார்...”

‘அதைத் தெரிந்து என்ன செய்யப்போகிறாய்? பல்லிமுட்டாய் வாங்கித் தரப்போகிறாயா?

“உடனேயே பிள்ளை பெறப் போகிறீர்களா இல்லை... வாழக்கையை அனுபவித்துவிட்டு பெறப்போகிறீர்களா?’

‘வாழ்க்கையை அனுபவிக்கிறதா? வாழ்க்கையே இல்லை என்று கடவுள் முடிவுசெய்துவிட்டான். இதில் எங்கிருந்து வாழ்க்கையை அனுபவிப்பது?’

“யார் முதலில் தங்கள் காதலை சொன்னது? நீங்களா, மிஸ்டர் அநேகாத்மனா?”

‘மக்கும்... லவ் ஒன்றுதான் இல்லாத குறைச்சல்...” என்று எல்லா கேள்விக்கும் மனதிற்குள்ளேயே கடுப்புடன் பதில்கூறியவளுக்கு அவர்களின் பார்வை அநேகாத்மனை விட்டு விலகவில்லை என்றதும், உடல் முழுவதும் எரிந்தது. ஆனாலும் மாறா புன்னகையை மட்டும் சிந்திக்கொண்டிருந்தாள் சர்வமகி.
அதே நேரம், ஆடலுக்கான நேரம் என்று டிஜே அறிவிக்க, பாடல் ஒலிபரப்பானது. அது வரை அமைதி காத்திருந்த சில கணவான்கள்,

சர்வமகியை நெருங்கித் தமது கரத்தை நீட்ட, திகைத்துப்போனாள் சர்வமகி.

அவள் சங்கடத்துடன் விழித்து அனோகத்மனைத் தேட, தூரத்திலிருந்து சர்வமகியை நெருங்கும் ஆடவர்களைக் கண்டதும், பேசிக்கொண்டிருந்தவர்களிடம் மன்னிப்பு வேண்டி, தன் மனையாளிடம் விரைந்து வந்தான் அநேகாத்மன்.

தன் கரத்தை நீட்டியவன், "கம் டான்ஸ் வித் மி..." என்றான்.

"இ... இல்லை ஆத்மன்... எனக்கு ஆட வராது..." என்று இவள் தடுமாற,

"இட்ஸ் ஓக்கே... நான் உனக்கு சொல்லித் தருகிறேன்..." என்றவன், அவளின் அனுமதியையும் பெறாது, அவள் வலது கரத்தைப் பற்றி, நடுக் கூடத்திற்கு அழைத்து வந்தான்.

தனக்கு ஆடத் தெரியாது என்றால், அநேகாத்மன் விட்டுவிடுவான் என்று எண்ணியிருந்தவளுக்கு, அவன் பிடிவாதமாக அழைத்து வந்தது, சற்றுப் கோபத்தை ஏற்படுத்தியது.

"ஆத்மன்... ப்ளீஸ்... இத்தனை பேரிட்கு முன்னால்... வேண்டாமே..." என்று இவள் தடுமாற, அவனுக்கோ, இவள் என்னவள் என்பதை அனைவருக்கும் பறைசாற்றவேண்டும் என்கிற வெறி.

"ஸ்டாப் இட் மகி... என் கூடத்தானே ஆடப்போகிறாய்... இதில் என்ன தயக்கம்.." என்றவன் தானாகவே, அவள் இடக் கரத்தைப் பற்றித் தன் தோளில் வைத்து, தன் வலக் கரத்தை அவள் வெற்றிடையில் பதித்து, மறு கரத்தால், அவள் மறு கரத்தைப் பற்ற, அவனோடு இணைந்து அவளும் இரண்டு ஸ்டெப் வைக்க, இவனுடைய ஒற்றைப் புருவம் வியப்பில் மேலேறி இளங்கியது.

"ஆடத் தெரியாது என்று சொன்னாய்... இப்போது நான் சொல்லித்தராமலே, ஸ்டெப் வைக்கிறாய்..." என்றவன், அவளைத் தள்ளிப் பின் கரம்கொண்டு சுண்டி இழுக்க, அவள் சுழன்றவாறு, அவன் கையணைப்பில் வந்து விழுந்தாள். அவள் சுழன்று வந்து விழுந்த வேகத்தில், நிச்சமயாக அவளுக்கு ஆடத் தெரியும் என்பதைப் புரிந்துகொண்டவன், மேலும் கேள்வியாக அவளை நோக்கிக் குனிய,

"எனக்கும் ஆடத் தெரியும்..." என்றாள் இவள் தன் கோபத்தை மறைக்க முயன்றவளாக.

அவள் கோபத்தை உணர்ந்தவன், அதை வெளியே காட்டாமல், அவள் இரு கரங்களையும் பற்றி, அவள் வயிற்றோடு அழுத்தி இடமும் வலமுமாக இரண்டு இரண்டு ஸ்டெப் எடுத்து வைக்க, அவளும் அவன் போக்கிற்கேற்றவாறு கால்களை அசைக்க,

“அப்போ எதற்கு ஆடத்தயங்கினாய்... என்னோடு ஆடப் பிடிக்கவில்லையா?” என்றான் கடும் கோபத்துடன். அந்தக் குரலில் தெரிந்த கடுமையைப் புரிந்துகொண்டவள், பதற்றத்துடன் அநேகாத்மனை ஏறிட்டாள்.

“இ... இல்லை ஆத்மன்... இப்படி எல்லோர் முன்னிலையிலும் ஆடப் பிடிக்கவில்லை...” என்றாள் இவள் கலக்கமாக.

உடனே மலர்ந்த அவன் முகம்,

“இட்ஸ் ஓக்கே மகிம்மா... என் கூடத்தானே நீ ஆடுகிறாய்?” என்றவன் மீண்டும் அவளைச் சுழற்றி மறுபக்கம் நிறுத்தியவாறு ஆட, அவன் காலசைவுக்கு ஏற்றவாறு இவளும் ஆடினாள்.

கேளாயோ கேளாயோ
செம்பூவே கேளாயோ
மன்றாடும் என் உள்ளம்
பாராயோ...

என்றவனின் ஐந்து விரல்களும், கால்களின் அசைவுகளுக்கு ஏற்றவாறு, அவளுடைய கன்னத்தை வருடி, அப்படியே கீழிறங்கிக் கழுத்தில் நிலைகொள்ள, முகமோ, அவள் உயரத்திற்கேற்றவாறு குனிந்து அவள் கன்னத்தோடு உரசியவாறு நின்றது. அது போதாது என்பது போல, அப்படியே நழுவி அவள் உதடுகளின் கரையோரமாக அவன் உதடுகள் மிதக்க முயல, அவனோடு இணைந்து ஆடியவாறே, அவன் இதழ்கள் மீது தன் கரத்தைப் பதித்து, அவனைத் திரும்பிப் பார்த்து, நாணத்துடன் மறுப்பாகத் தலையை ஆட்டி இசைக்கேற்ப, அவன் பிடியை விட்டு விலகி தள்ளிப்போக முயல,

உன்னை பிரிந்தால்
உன்னை பிரிந்தால்
உயிர் வாழா
அன்றில் பறவை நான்
அன்றில் பறவை

அவள் நோக்கப் புரிந்தவனாக, அவளை ஒரே இழுவையில் இழுக்க, மீண்டும் சுழன்று சுருண்டு அவன் மார்போடு அவள் பின்புறம் மோதி நிற்க, அந்த அருகாமை தந்த போதையில் தன் தலையைக் குனிந்து, உதடுகளை அவள் கழுத்து வளைவில் பதித்தவாறு,

நீ என்னை மறந்தால்
காற்று கதறும்
கடலின் மேலே
ஒட்டகம் நடக்கும்

தன் கரகங்களை அப்படியே கீழிறக்கி, இடையில் பற்ற, அக் கரங்கள் கொடுத்த வெம்மையில், உடல் சிலிர்த்தவள், அவனுடைய நடனத்திற்கு ஏற்ப தன் கால்களையும் கொண்டு சென்றவாறு, அக் கரத்தின் மீது தன் கரங்களைப் பதித்து, விலக்க முயல, விலக்க முயன்ற அவள் கரங்களைப் பற்றித் தூக்கித் தன் இரு கன்னங்களிலும் பதித்து விழிகளை மூடி அந்த மென்மையில் மெய்மறந்து நின்றான் அந்தக் காதலன்.

ஓ... நீ என்னை மறந்தால்
காற்று கதறும்
கடலின் மேலே
ஒட்டகம் நடக்கும்

அது போதாது என்பது போல, அவளுடைய இடது கரத்தைப் பற்றித் தன் உதட்டில் பொருத்தி, மெல்லிய முத்தமொன்றை வைக்க, அவளோ பெரும் வெட்கத்துடன் தன் கரத்தை அவன் பிடியிலிருந்து விலக்கித் திரும்ப முயல, அதை இலகுவாகத் தடுத்து,

ஓ.. நீ என்னை பிரியாய்
ஓ.. நீ என்னை மறவாய்
விட்டு போனால்இ எட்டி போகும்
விண்மீன் எல்லாம் கொட்டி போகும்..

தன் இரு கரங்களையும், அப்படியே அவள் வயிற்றோடு வருடிச் சென்று மேலும் தன்னோடு அழுத்தினான். இப்போது அவளுடை பின்புறம், மேலும் அழுத்தமாக அவள் மன்னவனின் முன்புறத்தோடு, மோதி நின்றது. மீண்டும் அவனுடைய உதடுகள் அவள் கன்னம் நோக்கிப் பயனப்பட,

கேளாயோ கேளாயோ

செம்பூவே கேளாயோ
மன்றாடும் என் உள்ளம்
பாராயோ...

வெட்டிய மீசை, அவள் கன்னத்துடன் ரகசியம் பேசி குறுகுறுப்பூட்ட, அதைத் தாங்க முடியாது, சுழன்று தன் முன்னுடல் அவன் முன்னுடலுடன் பொருந்தி நிற்க, தன் இரு கரங்களையும் தன்னவனின் கழுத்தில் மாலையாகப் போட்டவாறு அண்ணாந்து அவன் முகத்தைப் பார்த்தாள் தாமரைவிழியாள்.

உன்னை பிரிந்தால்
உன்னை பிரிந்தால்
உயிர் வாழா
அன்றில் பறவை நான்
அன்றில் பறவை

அந்த மாயக் கள்வனோ, தன் சுண்டு விரலை, இசைக்கேற்ப, அவள் நெற்றியில் பதித்து, மூக்கினூடாகக் கோடு கிழித்து, முன் கழுத்தில் வருடியவன் அப்படியே தன் கரங்களை இறக்கி, அவளுடைய கொடியிடையில் கரம் பதித்து, அப்படியே மேலே தூக்கித் தன் உயரத்திற்கேற்றாட்போலத் தாங்கியவன், பின் வேகமாகப் மூன்று முறை சுழன்றான்.

என் குறைகள் ஏது கண்டாய்
பேசுவது காதலோ
பேணுவது காமமோ.
பிரியம் என்ன போலியோ
ஏன் பெண்ணே இடைவெளி

அப்படியே அவளை இறக்காது, கொஞ்ச நேரம் தாங்கியிருந்தவன் தன்னையே திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்த பூங்கொடியாளின் விழி வீச்சில் மயங்கிக் கிறங்கி, மெதுவாக அவளைக் கீழிறக்க,

எதனால் பிரிந்தாய்
பிரிந்தாய் எதனால்
மறந்தாய் மறந்தாய்
கேளாயோ ...

அவளுடைய அங்கங்கள் அவன் முகத்தின் மீது படிந்து இறங்க, அந்த மயக்கத்திலிருந்து சிறிதும் விலக மனமில்லாதவனாக, மெது

மெதுவாகக் கீழிறக்கி, இறுதியில், அவள் பின் இடையில் கை பதித்து அவளைச் சரிக்க, அவன் கைப்பிடியின் பலத்தில் பின் புறமாகச் சரிந்து நின்றாள்... இதுவே நடனத்தின் இறுதி என்பது போல.

ஆனால் அநேகாத்மனோ நடனம் முடிந்தது என்பதே உணராதவன் போலத் தன் மனையாளை இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தான்.

உனையே உனையே பிறிந்தால்
உயிர் வாழா
அன்றில் பறவை பறவை
பறவை நான்

பலத்த கரகோஷம் கேட்க, அப்போதுதான் இருவரும் தம் சுயத்திற்கு வந்தனர். அது வரை தாம் இருவர் மட்டுமே உலகில் தனித்திருப்பது போன்ற நினைவில், நடனமாடிக்கொண்டிருந்தவர்களுக்கு சுயநினைவு வந்தது.

சர்வமகிக்கோ வெட்கம் பிடுங்கித் தின்றது. அங்கிருந்தவர்களை மறந்து தன் மன்னவனின் இழுவிசைக்கேற்ப ஆடியிருக்கிறோம் என்பது புரிய, மற்றவர்களைப் பார்க்க வெட்டகப்பட்டவளாகத் தன் கணவனின் மார்பில் முகம் புதைத்தாள் அந்தக் கோதை.

நாணத்துடன் தன் மார்பில் தஞ்சம் புக, என்றுமில்லா பெருமையில் நெஞ்சம் விம்மத் தன் மனைவியை இறுக அணைத்துக்கொண்டவன், “ஹே.. இட்ஸ் ஓக்கேம்மா...” என்று பெரும் மகிழ்வுடன் சமாதானப் படுத்தினாலும், அவன் மார்பைவிட்டுத் தன் முகத்தைப் பிரித்தாள் இல்லை. அவனுக்கும் அவளை விலத்தும் எண்ணம் எள் அளவும் இருக்கவில்லை.

அவள் நிலையை எண்ணி நகைத்தவன், நடனம் முடிய, அனைவரின் கரகோஷத்தைச் சிறு தலையசைப்புடன் ஏற்றுக்கொண்டு, ஒரு ஓரமாகத் தன் மனைவியை அழைத்து வந்தான்.
அது வரை அவர்களின் நடனத்தை ஒரு வித வக்ரத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள் அந்த வெள்ளையினத்துப் பெண்மணி. இத்தனை நேரமாக, அநேகாத்மன், அந்த சர்வமகியுடன் காதல் பாஷை பேசியதைப் பார்த்துக்கொண்டுதானே இருந்தாள். நடனம் முடிந்ததும், இருவரும் ஒரு ஓரமாகப் போவதைக் கண்டவள், ‘அன்று என்னை செக்யூரிட்டி வைத்தல்லவா வெளியேற்றினாய்?’ என்று ஒரு வித ஏளன நகைப்புடன் எண்ணியவள் அவர்களை நோக்கிச் சென்றாள்.

“ஹலோ... நேகன்... ஹௌ ஆர் யு... லோங் டைம்... நோ... சீ...” என்றவாறு அவனை நெருங்கி நின்றுகொண்டாள்.

ஒரு கணம் அவளைக் கண்டதும், அநேகாத்மனின் விழிகள் மெல்லியதாய் சுருங்கி, பின் அவளை எச்சரிப்பது போலப் பார்க்க, அந்த பார்வையை அலட்சியம் செய்த அந்தப் பெண், சர்வமகியை ஏறிட்டாள்.

ஏனோ சர்வமகிக்கு அது சிறிதும் பிடிக்கவில்லை. சிறு எரிச்சலுடன் அநேகாத்மனையும், அந்த வெள்ளைக்காரியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

“சர்வமகி... திஸ் இஸ் ரோஸ்லின்... என்னுடைய நண்பி...” என்று அவன் வேறு வழியில்லாமல் அறிமுகப் படுத்த, இவள் முகம் தெளிந்தது.

“ஹாய்.” ஏன்றவாறு தன் கரத்தை நீட்ட அதை அலட்சியமாகப் பற்றிக் குலுக்கியவளை ஏறிட்டான் அநேகாத்மன்.

“ரோஸலின் திஸ் இஸ் மை வைஃப்...” என்றான் முகத்திலும் குரலிலும் பெருமை பொங்க.
அவளைப் புன்னகையுடன் பார்த்தவள் திரும்பி அநேகாத்மனை ஏறிட்டாள்.

“எனக்குத் தெரியும்... ஹனி... நீ மணம் முடித்துவிட்டாய் என்று கேள்விப்பட்டேன்... உன்னுடைய மனைவி மிகவும் அழகானவள் என்று சொல்லிக் கேட்டிருக்கிறேன். இப்போதுதான் பார்க்கிறேன்...” என்று ஆங்கிலத்தில் கூறியவள், திரும்பி கொஞ்ச நேரம் சர்வமகியுடன் உரையாடிக்கொண்டிருந்தாள்.
அந்த நேரம் அநேகாத்மனின் நண்பன் அவனை ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்ல, அநேகாத்மன் தயங்கியவாறு சர்வமகியைப் பார்த்தான்.

அவள் என்ன என்பதுபோலத் தலையை ஆட்டிக் கேட்க,

அவளருகே நெருங்கி நின்றவன் அவளுக்கு மட்டும் புரியும் தமிழில்,

“நண்பன் கூப்பிடுகிறான்... போகாமலும் இருக்க முடியாது... எதற்கு என்று உனக்கு விளங்குகிறது அல்லவா? அதிகமாக அல்லாமல் ஓனலி வன் பெக்... எடுக்கலாமா?” என்று அவளிடம் அனுமதி கேட்டு நின்றான் அநேகாதமன்.

அவள் முகத்தில் கலவரத்தைக் காணவும்,

“பயப்படவேண்டாம் சர்வமகி... எவ்வளவு குடித்தாலும் நான் தடுமாறுவது கிடையாது... உனக்கு ஓக்கே என்றால்தான்... இல்லாவிட்டால்... ஐ கான் மனேஜ்...”

“இ... இல்லை பரவாயில்லை... உங்கள் நண்பர் அழைத்துத் தரும்போது மறுக்கமுடியாது... ஆனால் அதிகம் எடுக்காதீர்கள்...” என்றாள் வருந்துபவளாக.

“மை ஏன்சல்... தாங்க்ஸ்டா...” என்றவன்அங்கிருப்பவர்களையும் கவனிக்காமல் அவள் கன்னத்தில் மெல்லியதாக உதட்டைப் பொருத்திவிட்டு ரோசலினை ஏறிட்டவனின் விழிகள் சொன்ன செய்தியை அவள் ஒருவித நக்கலுடன் பார்த்துவிட்டுத் தன் தோளைக் குலுக்கினாள்.

சர்வமகி யோசனையுடன் பார்க்க, “பார்த்து...” என்று எச்சரித்துவிட்டுத் தன் நண்பனுடன் சென்றான்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ரோசலினுக்கு மேலும் தீக்கு எண்ணை வார்த்தது போலாயிற்று.

அடேங்கப்பா... அநேகாத்மன் ஒரு பெண்ணிடம் அனுமதி கேட்டு நிற்கிறானா? அதுவும் காதலுடன்... உலகம் தலைகீழாக மாறிவிட்டதா என்ன? திரும்பி சர்வமகியை ஏறிட்டாள்.

கணவன் போவதையே முகம் சிவக்கக் காதலுடன் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். இவளுக்குக் காந்தியது.

அநேகாத்மன் கண்ணுக்கு மறைந்ததும், சர்வமகி திரும்பத் தன் முகத்தைச் சீர்படுத்தினாற் போல வைத்தாள் அந்த ரோசலின்..

அவன் போவதையே முகம் சிவக்கப் பார்த்துக்கொண்டிருந்தவள், அவன் கண்ணுக்கு மறைந்ததும், திரும்பி அருகே நின்ற ரோசலினை ஏறிட்டாள்.

“சாரி மன்னித்துவிடுங்கள்...” என்று மன்னிப்புக் கேட்டவள், “இப்போது சொல்லுங்கள்... உங்களுக்கும், என் கணவருக்கும் எப்படிப் பழக்கம்? சிறுவயதிலிருந்தா, இல்லை...” என்று பேச்சைத் தொடர்ந்தாள்.

“ம்... உன் கணவருக்கும் எனக்கும் நீண்ட காலமாகப் பழக்கம் இருக்கிறது...” என்று சொன்னவள் அருகே ஒரு வெய்ட்டர் பொன் நிறத்

திரவத்தை எடுத்துவர அவனுக்குக் கைகாட்டி அழைத்து ஒன்றைத் தன் கரத்திலும் மற்றதை சர்வமகியிடமும் நீட்டினாள்.

“இல்லை வேண்டாம்... எனக்குப் பழக்கமில்லை...” என்றாள் சர்வமகி சிறு புன்னகையுடன்.

“வட்... பழக்கமில்லையா? அநேகாத்மன் பார்ட்டி என்று வந்தால் வெளுத்துக்கட்டுவான்... பட் ஆள் ஸ்டெடியாக நிற்பான்...” என்றவள் தன்னுடையதை ஒரே இழுவையில் குடித்து முடித்துவிட்டு சர்வமகிக்காக வாங்கியதையும் ஒரு இழுவை இழுத்து வெறும் கோப்பையை மேசையில் வைத்தாள்.
மீண்டும் வெய்ட்டரை அழைத்து இரண்டு பெக் வாங்கி வாயில் ஊற்றிக்கொண்டாள். அவளையே வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள் சர்வமகி.

“டூ யு நோ வட்...” என்றவள் இன்னொன்றை வாயில் ஊற்றிவிட்டுச் சர்வமகியைப் பார்த்தாள்.

“அநேகாத்மன்... ரம் அடித்தால் அவனுடைய தேவைகள் அதிகமாகிவிடும்... அதற்கு எத்தனையோ முறை நான் கம்பனி கொடுத்திருக்கிறேன்...” என்று நகைத்தவள் இன்னொன்றை எடுத்து மீண்டும் வாயில் ஊற்றினாள்.

“வட் டூ யு மீன்...?” என்றாள் சர்வமகி கலவரமாக.

“புரியவில்லை... அவன் காதலில் கைதேர்ந்தவன்... நீ தான் அனுபவித்திருப்பாயே... அதுவும் பெக்கை வாயில் ஊற்றினால்... வேகம்... வேகம்... வேகம்... அவனுடன் ஒரு நாள் தங்குவதற்கே நான் நீ என்று பலர் போட்டி போடுவார்கள்... பட்... நான் ஒருத்திதான் தேர்வு செய்யப்பட்டவள்... ஹா...ஹா... ஹா...” என்றதும் சர்வமகி கோபத்துடன் ரோசலினைப் பார்த்தாள்.

“நோ... நான் நம்பமாட்டேன்... என் ஆத்மன் அப்படிப்பட்டவர் அல்ல... அவர் ஒரு போதும் தவறான பாதையில் போகமாட்டார்...” என்றாள் சர்வமகி அழுத்தமாக.

“வட்... உன் ஆத்மனா... நைஸ் ஜோக்....” என்று நகைத்தவள் தன் கரத்திலிருந்த கிளாசை உருட்டியவாறு தலையை ஒரு பக்கம் சரித்து,

“என்ன சென்னாய்.. தவறான பாதையிலா? செக்ஸ் என்பது தவறா?

என்ன சொல்கிறாய் நீ? ஒவ்வொரு உயிரினத்திற்கும் அது தேவையானது. ஆரோக்கியமானது. அத்தியாவசியமானது. அது தவறு என்றால் எல்லாமே தவறு...” என்றவள் மீண்டும் வாயில் ஊற்றிக்கொண்டாள்.

“உங்கள் இனத்தைப் பொறுத்தவரையில் அது தவறில்லாமல் இருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், திருமணத்திற்கு முன்னால்... இப்படி அசிங்கமாக நடப்பது பெரும் குற்றம். எப்படி ஒரு பெண் கன்னியாக இருக்கிறாளோ, அதே போல அவளுக்கு வரப்போகிற ஆணும் ஒழுக்கமுடையவனாக இருக்கவேண்டும்...” என்றாள் சர்வமகி படபடப்புடன்.

“கமோன்... உங்கள் கல்ச்சரைப் பற்றி எனக்குத் தெரியாது... பட் அநேகாத்மன் இங்கேயே பிறந்து இங்கேயே வளர்ந்தவன், அவன் நம் இனத்தினர் போலத்தான்...”

“சோ... வட் அவர் எந்த நாட்டிலும் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்... தமிழ் என்கிற இனத்தை அவரால் அழிக்கமுடியுமா? இல்லை தமிழனின் பண்பாட்டுக் கலாசாரத்தைத்தான் விட்டுவிட முடியுமா? சரி... அதிகம் தேவையில்லை... ஒரு வேளை நான்... வேறு யாருடனும்... தவறாக நடந்திருந்தால்... என் கணவர் என்னை மணமுடித்திருப்பாரா... நிச்சயமாக இல்லை...” என்றாள் சர்வமகி படபடப்புடன்.

“நிச்சயமாக மணந்திருப்பான்... அது உன் ஆயுளைப் பொறுத்தது...” என்றாள் ரோசலின் சம்பந்தமில்லாமல்.

“என்ன சொல்கிறாய்...” என்றாள் சர்வமகி புரியாமல்.

“யெஸ் பேபி... நேகன் யாரையும் மணந்திருப்பான்... மணக்கப் போகும் பெண்ணுக்கு ஆயுள் குறைவானதாக இருந்திருந்தால் யாரையுமே மணந்திருப்பான்...” என்றாள் நகைப்புடன். அவள் விழிகளில் அப்பட்டமாகக் குரோதம் வழிந்தாலும், இருந்த அதிர்ச்சியில் சர்வமகி அதைக் கவனிக்கவில்லை.

சர்வமகிக்கு வயிற்றில் புளியைக் கரைக்க, “எ... என்ன சொல்கிறாய் ரோசலின்...” என்றாள் அச்சத்துடன்.
“யெஸ் பேபி... ஐ ஆம் டெலிங் த ட்ருத்... நேகனுடைய தந்தையின் உயிலின் படி நேகன் முப்பது வயதிற்குள் திருமணம் முடிக்கவேண்டும். அப்படி முப்பது வயது வரையும் அவன் திருமணம் முடிக்கவில்லை

என்றால், அத்தனை சொத்துக்களும் சரிட்டிக்குப் போய்விடும்... ஆனால் அநேகாத்மனுக்கு இந்த திருமணம், அதனால் வருகிற கட்டுப்பாடு எதிலும் விருப்பமும் இல்லை, இன்டரஸ்டும் இல்லை... என்னை மணமுடிக்குமாறு அவனிடம் கேட்டேன். மறுத்துவிட்டான். சொத்துக்கள் போய்விடுமே என்றேன்... அதற்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா? யாராவது ஆயுள் குறைந்தவளாக, இதோ இன்றோ, நாளையோ மண்டையைப் போடுபவளாகப் பார்த்துக் கட்டினால் பிரச்சனை முடிந்தது என்றான்...” என்றாள் ரோசலினின் ஏளன நகைப்புடன்.

“நோ... நான் நம்ப மாட்டேன்... அநேகாத்மன்... சொத்துக்காக என்னை... என்னை மணந்திருக்க மாட்டார்...” என்றாள் சர்வமகி அதிர்ச்சியுடன்.

“அப்போ நீ விரைவாக சாகப்போகிறாயா?” என்றவளின் குரலில் குரூரம் அப்பட்டமாக வெளிப்பட்டது. அவள் அடிபட்ட பாவனையில் அந்த ரோசலினைப் பார்க்க,

“வேண்டுமானால் நீயே அவனிடம் கேள்... உனக்கு சந்தேகமிருந்தால்... அதோ பார்... உன் கணவர் உள்ளே போகிறார்... என் பின்னாலேயே வா... நிருபிக்கிறேன்...” என்றவள் தள்ளாட்டத்துடன் எழுந்தாள். அநேகாத்மன் செல்லும் திசைக்கு அவள் செல்ல, வேகமாக அவள் பின்னே சென்றாள் சர்வமகி. அநேகாத்மனின் பார்வையில் விழாதவாறு ஒரு ஓரமாக அவள் நின்றவள், அங்கே நடப்பதை ஒரு வலியுடன் பார்க்கத் தொடங்கினாள்.

“ஹாய்... நேகன்...” என்ற ரோசலின், அவனைக் கட்டிப்பிடித்தாள். அதை எதிர்பாராத அநேகாத்மன்,

“வட் ஆர் யு டூயிங்...” என்றவாறு அவளுடைய கரங்களை வேகமாகப் பிரித்தெடுத்தான்.

“இதென்ன அசட்டுத்தனம்... ஆட்கள் வருமிடத்தில்...” என்றான் அவன் சினத்துடன்.

“அப்படியானால் தனிமையில் போகலாமா... எத்தனை நாடகளாகிவிட்டன நானும் நீயும் தனித்திருந்து மகிழ்ச்சியாக இருந்து...” என்றாள் அவள் தாபத்துடன்.

“அதற்காக இப்படியா? பப்ளிக் ப்ளேசில்...” என்று சினக்க, இங்கே சர்வமகி சுக்குநூறாக உடையத் தொடங்கினாள்.

அநேகாத்மனின் கோபத்தை லட்சியம் செய்யாத ரோசலின்,

“நாட் பேட் நேகன்... நீ சொன்னது போல செய்துவிட்டாயே...” என்று விஷயத்திற்குத் தாவினாள்.
“என்ன அது...?”

“அதுதான்... நாளைக்கே மண்டையைப் போடுபவளை மணமுடித்து, உன் தந்தையின் சொத்துக்கள் அத்தனையையும் உன்னுடையதாக்குவது என்பதை...” என்றதும் அவளை உற்றுப் பார்த்தான் அநேகாத்மன்.

“சர்வமகி உயிருக்குப் போராடுகிறாள் என்று உனக்கு யார் சொன்னது...” என்றான் அநேகாத்மன் பெரும் கோபத்துடன்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த சர்வமகிக்கு எங்கோ இதயத்தில் ஒரு நரம்பு அறுந்ததுபோல வேதனையில் துடித்துப் போனாள்.

அவன் மறுக்கவில்லை. தவிர ரோசலின் சொல்வது உண்மை என்பதைக் காட்டுவது போல, டப் என்று விஷயத்திற்குத் தாவியும் விட்டான். அப்படியானால் அவன் அவளை மணந்தது அவள் மீது கொண்ட காதலால் அல்ல. அவள் மீது பரிதாபப் பட்டோ, இல்லை சகோதரர்களுக்காகப் பார்த்தோ அவன் மணக்கவில்லை. எல்லாம் அவனுடைய தந்தையின் உயிலுக்காகத்தான் அவளை மணந்திருக்கிறான்.
அதைப் புரிந்துகொள்ளாமல், அவன் அவளை விரும்புகிறான் என்று தவறாக நினைத்து... சே... அப்போது புரியாததெல்லாம் இப்போது புரிந்தது. அவளை அவளுடைய உயிருக்கு ஆபத்து என்பதை அறிந்ததும் உடனேயே அவன் மணக்கக் கேட்டதின் அர்த்தம் புரிந்தது.

ஏன் சற்றைக்கு முன்பு காரில் வரும்போது கூட அவன் விரும்பியவை எல்லாம் கிடைத்ததற்குக் காரணம் அவள் தான் என்பது போலக் கூறி நன்றிவேறு கூறினான் அல்லவா... எத்தனை பெரிய மக்காக அவள் இருந்திருக்கிறாள்.’ என்றெண்ணியவளுக்கு அழுகை வந்தது.

‘ஆனால்... அவனுடைய பரிதவிப்பு, கரிசனை அனைத்தும் பொய்யா... இல்லையே... அவனுடைய விழிகளில் உன்மையான தவிப்பைக் கண்டாளே, கரிசனை இருந்ததே... அதெல்லாம் எப்படிப் பொய்யாக இருக்கமுடியும்... அத்தனையும் நடிப்பா...’

என்று எண்ணியவளுக்கு இப்போதே இந்த நிமிடமே

இறந்துவிடவேண்டும் போல உள்ளம் கனத்தது.
அதே நேரம் உள்ளே பேச்சுக்குரல் தொடர்ந்து ஒலித்தது.

“யாரும் சொல்லவில்லை நேகன்... எனக்குத் தெரியாதா என்ன? அவள் இன்னும் கொஞ்ச நாட்களில் சாகப் போகிறாள் என்பது தெரியாமல் இருந்திருந்தால் நீ அவளைத் திருமணம் முடித்திருப்பாயா என்ன?” என்று ரோசலின் கூற, அவன் மௌனம் சாதித்தான்.

சர்வமகிக்குப் புரிந்தது. உண்மைதானே. அவள் ஆரோக்கியமாக இருந்திருந்தால், இப்போது அவன் பிரதீபனை ஜெயிலில் அல்லவா போட்டிருப்பான். அவளுடைய பிரச்சனை தெரிந்த பிறகுதானே, எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவளை மணக்கப்போவதாகக் கூறினான்.

அவளால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கவே முடியவில்லை. மெதுவாக மறைவிடத்தை விட்டு வெளியே வந்தாள்.

சர்வமகியைக் கண்டதும் ஆநேகாத்மனின் முகத்தில் சிறு அதிர்ச்சி தோன்றி விலகியது.
“மகிம்மா...” என்றான் அவன்.

“நீங்கள்... நீங்கள் முதலிலேயே இதைக் கூறியிருந்தாலும் நான் உங்களை மணந்திருப்பேன்... என்னால் உங்களுக்கு ஏதாவது பயன் கிடைத்திருக்கும் என்று நிம்மதியடைந்திருப்பேன்... இப்படி பொய் சொல்லி என்னை நீங்கள் மணந்திருக்கவேண்டிய அவசியமே இல்லை அநேகாத்மன்... தவிர... உங்கள் காதலி...” என்று அவள் முடிக்கவில்லை,

“அவள் என்னுடைய காதலி அல்ல...” என்றான் அநேகாத்மன் இறுகிய குரலில்.

அவன் அப்படிக் குறியதும், அவளுடைய உதட்டில் ஒரு விரக்திப் புன்னகை நெழிந்தது. அவளுடைய விழிகள், அவனுடைய இடையை சுற்றியிருந்த அந்த வெண் கரங்களின் மீது சென்று மீண்டது.
தீ சுட்டாற் போல வேகமாக ரோசலினின் கரத்திலிருந்து விலகியவன்,

“கண்ணம்மா நான்... உண்மையைத்தான் சொல்கிறேன்...” என்று அவன் முடிப்பதற்கு முன்னால்,

“வேண்டாம் அநேகாத்மன்... எனக்கு எதுவுமே தெரியவேண்டாம். தெரிய வேண்டிய அளவு தெரிந்துகொண்டேன். இனிப் புதிதாகத் தெரிந்து

கொள்ள என்ன இருக்கிறது... நான் போகிறேன்... நீங்கள்... நீங்கள்... சந்தோஷமாக இருந்துவிட்டு வாருங்கள்...” என்றவள் பெரும் வலியுடன் அந்த ரோசலினையும், அநேகாத்மனையும் பார்த்துவிட்டு அவள் திரும்ப,

“நில் சர்வமகி... நானும் வருகிறேன்...” என்று கிளம்பினான்.

“வேண்டாம்... என்னால் உங்கள் மகிழ்ச்சி தடைப்பட வேண்டாம்...” என்ற சர்வமகி விறு விறு என்று நடக்கத் தொடங்கினாள்.

அதே நேரம் அவனும் அவளுக்குப் பின்னால் போகத் தொடங்க ரோசலின் பற்றி இழுத்தாள்.

“அவளே போகிறேன் என்கிறாள், ஏன் அவளை தடை செய்கிறீர்கள்... போகட்டும் விடுங்கள்... நாம் என்னுடைய வீட்டிற்குப் போகலாமா...” என்றவள் அவனை இன்னும் நெருங்கி நின்று கொண்டாள்.

“ஏய்...” என்றவாறு பெரும் ஆக்ரோஷத்துடன், அவளை நோக்கித் தன் கரத்தை ஓங்கினான் அநேகாத்மன். அவனுடைய அந்த ஒரு பார்வையில் அனைத்துப் போதையும் இறங்கியவளாக, அச்சத்துடன் இரண்டடி பின் நோக்கி வைக்க அவைள வெறித்துப் பார்த்தான் அநேகாத்மன்.

“இனி ஒரு முறை... ஒரு தரம் தன்னும் என் மீது நீ கை வைத்தாய் என்றாலோ... இல்லை, என் மனைவியின் நிழலை நீ நெருங்குகிறாய் என்பதை நான் அறிந்தாலோ, அதன் பின் உன் வாழ்வில் நடக்கும் அசம்பாவிதங்களுக்கு நான் பொறுப்பல்ல... இனி நீ என் கண் முன்னே படக் கூடாது. மீறிப் பட்டாய்... உனக்கு என்னைப் பற்றி நன்கு தெரியும் என்று நினைக்கிறேன்...” என்றவன் இனியும் என்ன பேச்சு என்பதுபோல, சர்வமகியை நோக்கி ஓட,

ரோசலினோ, ஏளனச் சிரிப்புடன், அடுத்த கிளாசை நோக்கித் தள்ளாட்டத்துடன் நடக்கத் தொடங்கினாள்.

நிலவு - 48

ஏற்கெனவே சர்வமகி கொஞ்சத் தூரம் நடக்கத்தொடங்கியிருந்தாள். அந்த குளிரிலும், ஜாக்கட்டைப் போடாது, கோபம் கண்களை மறைக்க நடந்துகொண்டிருந்தவளைக் கண்டதும், இவனுக்கு வலித்தது.

காரை சீறிப்பாய விட்டவன், அவள் முன்னால் காரை சடன் பிரேக் போட்டு நிறுத்தினான். அது பெரும் சத்தத்துடன் நிற்க, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் சர்வமகி. வேகமாகக் கார்க்கதவைத் திறந்து வெளியேறியவன், வெளியேறிய வேகத்திலேயே தன் கோர்ட்டைக் கழற்றியவாறு சர்வமகியின் அருகே வந்தான். தன் கரத்திலிருந்த கோர்ட்டை அவசரமாக அவளுக்குப் போர்த்திவிட்டவன், கார்க் கதவைத் திறந்து

“ஏறு மகி...” என்றான் வேகமாக.

“இல்லை... வேண்டாம்... நானே போய்க்கொள்வேன்...” என்றவள் அந்தக் குளிரையும் பொருட்படுத்தாமல் விடு விடு என்று நடக்கத் தொடங்க,

“ஐ செட் கெட் இன் த கார்...” என்றான் அழுத்தமாக.

“முடியாது அநேகாத்மன்... நான் உங்கள் காரில் ஏற மாட்டேன்... ப்ளீஸ்... லீவ் மீ எலோன்...” என்றவளின் குரல் கம்மியிருக்க, அதைப் பார்க்கப் பிடிக்காதவன்,

“சர்வமகி... இட்ஸ் இன:ப்... கெட் இன் த கார்... ரைட் நவ்” என்றான் தன் பற்களுக்கிடையில் வார்த்தைகளைத் துப்பி.

அந்தக் குரலில் ஒரு கணம் ஆடிப்போனாள் சர்வமகி. தவறு செய்தவன் அவன். ஆனால், குற்றம் செய்த உணர்வு அவளுக்கு. அவள் வெறுப்புடன் அவைனப் பார்க்க,

“கெட் இன் சர்வமகி. எதுவாக இருந்தாலும், வீட்டிற்கு போய் பேசலாம்...” என்றான் அவன் கடுமையாக.
அவன் விடப்போவதில்லை என்பது புரிந்தவளாக, காரின் முன்னிருக்கையில் ஏறி அமர. அவளுடைய உள்ளங்கையைப் பற்றிப் பார்த்தவன், அது சில்லிட்டிருந்தது. என்ன மகிமா... இப்படிக் குளிரில்...'' என்றவன் அந்தக் கரத்தைத் தேய்த்து விடப் போக, அவள் வேகமாகத் தன் கரத்தை இழுத்துக்கொண்டாள்.

என் மீது இருக்கும் கோபத்திற்கு இப்படித்தான் ஜாக்ட்கடை மறந்துவிட்டு வருவார்களா?” என்ற சாடியவன், வேகமாக ஹீட்டரை உயிர்ப்பித்து, அதை உச்சத்தில் விட்டான்.

அடுத்து கார் வேகமாக வீட்டை நோக்கிப் பாய்ந்தது. சர்வமகி வீட்டிற்குச் செல்லும்வரை அநேகாத்மனை ஏறிட்டும் பார்க்கவில்லை.

அது வரை இருவரும் எந்தப் பேச்சுவார்த்தையும் வைக்கவில்லை.

வீடு வந்ததும் சர்வமகி விறு விறு என்று அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தாள். நல்ல வேளை அனைவரும் உறங்கச் சென்றிருந்தனர். அதனால் இருவரையும் யாரும் பார்க்கும் தர்மசங்கட நிலை வரவில்லை.

அவசர அவசரமாகத் தன் கழுத்தை இறுக்கிக்கொண்டிருந்த ஆரத்தையும், மற்றைய நகைகளையும் கழற்றிக் கண்ணாடி மேசையில் வைத்தாள். மனம் முழுவதும் வலித்தது. இவற்றை அணியும் தகுதி அவளுக்கில்லையே. அவள் வெறும் கறிவேப்பிலை மட்டுமே. பாவித்து முடிந்ததும், தூக்கியெறியப்பட்டு விடுவாள். அவளுக்கு எதற்கு இவையெல்லாம்.

“மகிம்மா... நான் சொல்வதை...” என்றவாறு வந்த கணவனை அவள் கருத்திலே எடுக்கவில்லை. வேகமாகத் துவாய் ஒன்றை எடுத்தவள், குளியலறைக்கள் நுழைந்து இறுகச் சாத்திக்கொண்டாள்.
அவள் கதவை சாற்றிய வேகத்தில், அது தன் முகத்தில் அறைந்ததுபோல உணர்ந்தான் அநேகாத்மன். அவனுக்குக் கோபத்தில் முஷ்டிகள் இறுகின.

எரிச்சலுடன் தன் கோர்ட்டைக் கழற்றி இருக்கையில் வீசினான். அருகேயிருந்த சோபாவில் அமர்ந்து காலின் மீது காலைப் போட்டவன் , சினத்துடன் டையைக் கழற்றி அதையும் விசிறி அடித்தான்.
கரங்களால் தலைமுடியை அழுந்த வாரியவன், இரு கரங்களையும் சோஃபாவின் பின் இருக்கையில் விரித்துப் போட்டவாறு, தலையைச் சாய்த்து விழியை அழுந்த மூடினான்.

எங்கே பிழை நடந்தது. எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டு இருப்பதாகத்தானே அவன் நினைத்தான். இந்த ரோசலின் எங்கேயிருந்து முளைத்தாள். சே...’ என்று எண்ணியவன் கொஞ்ச நேரம் அப்படியே இருந்தான்.

அதே நேரம் சர்வமகியும் சேலையைக் களைந்து இரவாடையுடன் வெளியே வந்தாள். தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அவளுடைய முகம் சிவந்துபோய் இருந்தது. அவள் அழுதிருக்கிறாள் என்று புரிந்தது.
“ஓ... மகிம்மா...” என்றவன் வேகமாக எழுந்து அவளை நெருங்கினான்.

அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டவன்,

“ஏன்டா உன்னை வருத்திக் கொள்கிறாய்...” எனறவாறு அவள் உச்சியில் தன் உதட்டைப் பொருத்தினான்.

அவளும் கொஞ்ச நேரம் அவன் மார்பில் தன் முகத்தைப் பதித்து அழுதாள்.
“ஏன்... என்னிடம் பொய் சொன்னீர்கள்...”

அவன் உதடுகளை விலக்காமலே, மறுப்பாகத் தலையை வேகமாக ஆட்டியவன், “நான் பொய் சொல்லவில்லை மகிம்மா...” என்று கூறியவனை நம்ப மாட்டாமல் அண்ணாந்து பார்த்தாள் சர்வமகி.

“என்னை நம்பச் சொல்கிறீர்களா?” என்று கலங்கியவளின் உதட்டில் தன் விரலை வைத்து அழுத்தித் தடுத்தவன்.

“நீ நம்பவேண்டும்... எனக்கும் அவளுக்கும் இப்போது எந்த சம்பந்தமும் கிடையாது... என்று உன்னைக் கண்டேனோ, அதன் பிறகு அவளை நான் பார்க்கவேயில்லை...” என்றான் அவன் தவிப்புடன்.

“அப்போ... அவளை பார்த்திருக்கிறீர்கள்...” என்றாள் அவள் அவன் விழிகளை உற்றுப் பார்த்தவாறு.
அவன் பதில் கூறாது அமைதி காக்க, அந்த அமைதியிலேயே அவன் பதிலை உணர்ந்தவள், உள்ளுக்குள் உடைந்து போனாள்.

அவன் இறுகிய பிடியிலிருந்து தன்னை விலக்க முயன்றவள், முடியாமல்,

“வி... விடுங்கள்... நான்... போகவேண்டும்...” என்றாள் கலங்கிய குரலில்.

“நோ... நான் விடமாட்டேன்... நான் விடமாட்டேன்... நீ என்னை விட்டு எங்கும் போக முடியாது...” என்றான் அவன் தவிப்புடன்.

“அது நம் கையில் இல்லை அநேகாத்மன்...” என்று விரக்தியில் கூற, வேகமாக அவளை விடுவித்தவன்,
“அப்படியென்றால்...” என்றான் தவிப்புடன்.

“இன்னும் கொஞ்சக்காலத்தில் ஒரேயடியாகப் போகப்....” அதற்கு மேல், அவள் பேச முடியாதவாறு அவனுடைய அழுத்தமான உதடுகள், அவள் உதடுகளை அழுந்தப் பூட்டிக்கொண்டன.

வேகமாக அவனிடமிருந்து விடுபட அவள் போராடினாள். ஆனால், சுலபமாக அவளுடைய போராட்டத்தை அடக்கினான் அவன்.

கொஞ்ச நேரத்தில் தன் உதடுகளைப் பிரித்து எடுத்தவன், அவள் முகத்தைத் தன் கரங்களில் பற்றித் தூக்கினான். கண்கள் முழுவதும் கண்ணீரால் குளம் கட்டியிருக்க, அதை ஒற்றைக் கரத்தால், துடைத்து எடுத்தவன்,

“என் அனுமதியின்றி நீ எங்கும் போகமுடியாது சர்வமகி. உன் மூச்சுக்காற்றை சுவாசிக்கப் பிறந்தவன் நான்... என்னை விட்டு உன்னால் எங்கும் போக முடியாது... போகவும் விடமாட்டேன்” என்றான் பெரும் வலியுடன்.

“ப்ளீஸ் ஆத்மன்... நாடகம் முடிந்து விட்டது... கொட்டகையெல்லாம் பிரித்தாகிவிட்டது... இன்னும் எதற்காக நீங்கள்...” என்றவள் தன் உதட்டைக் கடிக்க, இவன் அடிபட்ட பாவனையுடன் அவளைப் பார்த்தான்.

“நான் நடிப்பதுபோலவா உனக்கு இருக்கிறது... நீ மருத்துவமனையில் துடித்தபோது, நான் தவித்த தவிப்பெல்லாம் உனக்கு நடிப்புப் போலவா இருக்கிறது?” என்றபோது, அவன் குரலில் மிதமிஞ்சிய ஏமாற்றம்தான் வெளிப்பட்டது.

அவனுடைய அந்த ஏமாற்றத்தையும் தாங்கும் சக்தி சர்வமகிக்கு இருக்கவில்லை. அவன் பிடியிலிருந்து விலக எத்தனிக்க, அவனுடைய பிடி மேலும் இறுகியது.

அந்த இறுகிய பிடியில், அவளுடைய கரங்கள் கூட வலித்தன.

“விடுங்கள் ஆத்மன்...” என்று இவள் அவனிடமிருந்து திமிற,

விலக முயன்றவளை இலகுவில் செயல் இழக்க வைத்தான் அநேகாத்மன்.

“சாரி மகிம்மா... என் அன்பை உனக்கு எப்படிப் புரியவைப்பது என்று எனக்குத் தெரியிவில்லை...” என்றவன் மீண்டும் அவள் இதழ்கள் நோக்கிக் குனிந்தான்.

அவனுக்கு அவள் தேவையாக இருந்தாள். இத்தனை நாட்களாக, மனதிலே வேரூன்றியிருந்த அவள் மீதான காதலும், அதனூடே கலந்திருந்த காமமும் அவனுடைய தன்னிலையை இழக்கச் செய்ய,

எங்கே அவள் தன்னை விட்டு விலகிவிடுவாளோ என்கிற பேரச்சமும் அவன் புத்தியை பேதலிக்கச் செய்ய, அது வரை காலமும், அவள் நலத்துடன் தன்னிடம் வந்துவிடவேண்டும் என்கிற வேண்டுதலுடன் தள்ளியிருந்தவன், அந்த வேண்டுதலை மறந்து, புறந்தள்ளி, அவளைத் தன்னோடு புதைத்து, முழுதாக அவளைத் தன்னவளாக்க முயலத்தொடங்கினான்.

முதலில் அவன் வேகத்திற்கு அஞ்சி, அவனிடமிருந்த விடுபடப் போராடியவள், என்ன நினைத்தாளோ, ஒரு கட்டத்தில், அந்தப் போராட்டத்தை விடுத்து, அவனுடன் இழையத் தொடங்கினாள்.

இருவருக்குமே உள்ளம் முழுவதும் வியாபித்திருந்த வேதனைக்கு ஒரு வடிகால் தேவைப் பட்டது. அது அவளுக்கு அவனாகிப் போனான். அவனுக்கு அவளாகிப் போனாள்.

தொய்ந்து சரிந்தவளை, இதழ் பிரியாமலே, கரத்தில் தாங்கியவன், அவளைப் படுக்கையில் கிடத்தினான். அவளுடலோடு நெருங்கும் வரை, அவளை அவன் பேசவே விடவில்லை.

வேதனை ஒரு பக்கமிருந்தாலும், அவள் கணவனால் மட்டுமே தட்டியெழுப்பப்படும் பெண்மை விழித்துக்கொள்ள, மெது மெதுவாக அவன் அணைப்பிற்குள் அடங்கிப்போனாள்.

அவனோ, அவன் விரல்களின் தொடுகையால், நாணம்கொண்டு சிவந்துபோனவளின் அழகை அணு அணுவாகப் பருகித் தன் நீண்டநாள் ஏக்கத்தைத் தீர்க்கத்தொடங்கினான். அந்த நிலையிலும், தன் மன்னவனின் தொடுகையில் கூசிச் சிலிர்த்தவளை அவன் மெல்ல மெல்ல ஆட்கொள்ள, அன்று அவன் கண்ட கனவை நிறைவேற்றுபவனாக, தன் விரல்கொண்டு தலை முதல் பாதம் வரை, அவளை வீணை மீட்டத் தொடங்கினான். அந்த மீட்டலில் விளைந்த இசையில் தன்னைத் தொலைத்தான் அவன். அந்த இசையில் உலகம் மறந்தவன், மீண்டும் மீண்டும் இசை மீட்ட, அங்கே காமத்தை மீறிய காதலும், காதலை மீறிய காமமும் புதிய அத்தியாயங்களை எழுதத் தொடங்கின. அந்தக் காவியம் எழுதி முடிய, பலமணி நேரங்கள் கடந்துவிட்டிருந்தன.

காவியம் படைத்த களைப்பில் அநேகாத்மன் உறங்கிவிட, சர்வமகி நீண்ட நேரத்திற்குப் பின்பு சுயநினைவுக்கு வந்தாள்.

பழக்கமில்லாத, பாரம் இடையைச் சுற்றியிருக்கத் தன் கரத்தை அவ்

இடத்தில் பதித்தாள். அவள் உயிரானவனின் கரம். அதன் பின்புதான் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக நினைவுக்கு வந்தது. முதன் முதலாக அவளுடைய கணவனின் கையணைப்பில் இருந்திருக்கிறாள். அதுவும் எந்த ஒரு நிலையில். நினைத்ததுமே மீண்டும் அழுகை பொத்துக்கொண்டு வந்தது. மெதுவாக அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்து படுக்கையை விட்டு எழுந்தாள்.

இனியும் அந்த வீட்டில் இருக்கமுடியும் போலத் தோன்றவில்லை. குளியலறைக்குள் நுழைந்தவள், கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்தாள்.

அந்த நிலையிலும், தனக்கு வலித்துவிடாமல் பார்த்துப் பார்த்து நடந்துகொண்ட அநேகாத்மனின் மீதிருந்த காதல் கூடியதேயன்றி சிறிதும் அவளுக்குக் குறையவில்லை. பெருமூச்சுடன் ஷவரில் கொஞ்ச நேரம் நிண்றாள். மீண்டும் மீண்டும் தன்னவனின் கூடலே நினைவிற்க வந்தது. விழிகளை மூடி அதை அனுபவித்தவள், நேரம் விரைந்து செல்வதை உணர்ந்து ஷவரை நிறுத்தி, ஏனோ தானோ என்று தன்னைத் துடைத்து, துவைத்த ஆடையணிந்து வெளியே வந்தாள்.

இன்னும் அநேகாதமன் நிறவான புன்னகையச் சிந்தியவாறு உறங்கிக்கொண்டிருந்தான். அவன் அழகில் தன்னிலை மறந்தாள் சர்வமகி.

அவனை நெருங்கியவள், அவன் தலை முடியை வருடுவதற்காகத் தன் கரத்தைக் கொண்டு சென்றவள், அப்படியே நின்றாள்.

வேண்டாம், அவனைத் தொட்ட கணம் அவன் விழித்துக்கொள்வான். தன் கரத்தை விலக்கியவளுக்கு ஏனோ மெல்லிய புன்னகை வந்து அமர்ந்து கொண்டது.

இந்த ஒரு நாள் போதும். அவள் இருக்கப் போகின்ற கொஞ்ச நாட்களுக்கும், அதை எண்ணியே கழித்துவிடுவாள். தன் விரல்களை உதட்டில் பொருத்தி முத்தமிட்டவள், அதனை அவன் கன்னத்தில் பட்டும் படாமலும் வைத்துவிட்டு எழுந்தாள்.

ஒரு பேப்பரையும், பேனாவையும் எடுத்து, விறு விறு என்று எதையோ எழுதத் தொடங்கினாள். எழுதும் போது, ஏனோ மனமும் விழிகளும் கசங்கிப்போனது. சிரமப்பட்டுத் தன் அழுகையை அடக்கியவள், அதை அவன் பார்வையில் படுவதுபோல வைத்தாள். மீண்டும் ஒரு முறை இதுதான் கடைசி என்பது போல ஏக்கத்துடன் அநேகாத்மனைப்

பார்த்தவள்,

“போய் வருகிறேன் ஆத்மன்... டேக் கெயர் ஒ:ப் யுவர் செல்:ப்...” என்று முணுமுணுத்து விட்டு அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

தொடரும்.....

நிலவு 49

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அநேகாத்மன், நெஞ்சில் ஏதோ ஒரு இனம்புரியாத படபடப்புத் தோன்ற, மெதுவாகத் தன் விழிகளைத் திறந்தான். அவனுக்கு முன்தினம் நடந்தது நினைவிற்கு வந்தது. அவன் உதட்டில் இளம் மந்தகாசப் புன்னகையும் மலர்ந்தது. இனி எல்லாமே சரியாகிவிடும் என்கிற நம்பிக்கை உதிக்க, விழிகளை மீண்டும் மூடியவாறே தனக்கு மறுபக்கம் படுக்கையைத் தடவிப் பார்த்தான். மறுபக்கம் வெறுமையாக இருந்தது. அவள் எழுந்து சென்று அதிகநேரமாகிவிட்டது என்பதை எடுத்துக் காட்டுவது போல படுக்கை குளிர்ந்தது. அருகேயிருந்த நைட் ஸ்டான்டில் ஒளிர்ந்துகொண்டிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். ஐந்து முப்பது என்றது கடிகாரம். ‘ சீக்கிரமாக எழுந்துவிட்டாளே... எங்கே போயிருப்பாள் குளிக்கச் சென்றுவிட்டாளோ. இருவரும் உறங்கும் போது, மூன்று மணியாகியிருந்தது. அதன் பின் அவள் தூங்கினாளா இல்லையா...’ என்று எண்ணியவன் மெதுவாகப் புரண்டு அவள் பக்கமாக வந்து படுத்தான். அவளுடைய வாசைன இன்னும் தலையணியில் இருக்க, ஆழ மூச்செடுத்து அதை அனுபவித்தான்.

“ம்... கொல்லுகிறாயே மகிம்மா... இன்னும் கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திருக்கலாமே...” என்று காற்றோடு பேசியவனுக்கு, மீண்டும் அவள் அருகாமை தேவைப்பட, மெதுவாகத் தன் விழிகளை விரித்தான். அவனுடைய விழிகளில் மேசையில் இரவு வெளிச்சத்திலும், வெண்மையான தாள் ஒன்று படபடக்க, ஏனோ நெஞ்சைப் பிசையை ஒரு சுற்றலில் மறு பக்கம் வந்தவன், அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்தான். “லைட்...” என்ற அவன் கட்டளைக்கு உடனே அந்த அறை வெளிச்சமாக, அந்தக் கடிதத்தை மேலோட்டமாகப் பார்த்தான்.

“அன்புள்ள ஆத்மனுக்கு...” என்று தொடங்கியிருந்தது கடிதம். அது சர்வமகியின் எழுத்து.
ஏதோ நெஞ்சை அடைக்க விறுக் என்று படுக்கையை விட்டு

எழுந்தமர்ந்தான். கடிதத்தில் விழிகளை ஓடவிட்டான்.

அன்புள்ள ஆத்மனுக்கு. இந்தக் கடிதத்தை எப்படித் தொடங்குவது என்றும் புரியவில்லை. எப்படி முடிப்பது என்றும் புரியவில்லை. என்னால் உங்களுக்கு நிம்மதியான வாழ்வு இல்லை என்பதை நேற்றே புரிந்துகொண்டேன். அந்த ரோசலின் மீது நீங்கள் வைத்திருந்த காதலையும் அறிந்துகொண்டேன். நீங்கள் என்னை உங்கள் தந்தையின் சொத்துக்காகத்தான் மணந்துகொண்டீர்கள் என்பதைத் தெரிந்தபோது கொஞ்சம் தடுமாறிவிட்டேன். ஆனால் நினைத்துப் பார்க்கும்போது, நீங்கள் செய்ததில் எந்தத் தவறும் இல்லை என்பது இப்போது புரிகிறது. பார்க்கப்போனால், என்னால் உங்களுக்க இதையாவது செய்யமுடிந்ததே என்பதில் மகிழ்ச்சிதான். எப்படியோ சாகப் போபவள்தானே. என்ன இழுத்தடிக்காமல் எவ்வளவு சீக்கிரம் போகமுடியுமோ, அத்தனை சீக்கிரம் போகவேண்டும்.
நான் ஒரு மடச்சி... தப்பிப் பிழைக்கமாட்டேன் என்பது நிச்சயமாகத் தெரிந்தும் இப்போது கொஞ்ச நாட்களாகத்தான் நீங்கள் என்னைக் காதலிப்பதாகத் தவறாக நினைத்துக் கடவுளிடம் உயிரோடு இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன்... ஆனால் எத்தனை பெரிய தவறான வேண்டுதல். உங்களுக்கு நான் விரைவாகப் போய்ச் சேரவேண்டுமல்லவா? அப்போதுதானே நீங்கள் சுதந்திரமாக நடமாட முடியும்.

அதற்காக நான் தற்கொலையா செய்ய முடியும்...? அதனால் நான் வெளியேறுகிறேன். இனி உங்கள் விருப்பம் போல நிம்மதியாக இருக்கலாம். சுதந்திரமாக இருக்கலாம். பழைய அநேகாத்மன் போல, விரும்பிய பெண்களுடன்.

எப்போதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அதுதான் என் வேண்டுதல், ஆசை, எல்லாமே... உங்கள் அகராதியிலிருந்து சர்வமகி என்பவளை அழித்துவிடுங்கள். நான் உடனேயே இறந்தால், உங்களுக்கு விடுதலை... இல்லை என்றாலும் நான் திரும்பி வரமாட்டேன்....

தயவு செய்து என்னைத் தேடவேண்டாம். ஆனால், விரைவாக மரணிக்கவேண்டும் என்று கடவுளை பிரார்த்திப்பேன். உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். வாழ்த்துக்கள் எப்போதும் உங்களுக்கு உரித்தாகட்டும்.

சர்வமகி.

சர்வமகியின் கடிதத்தைப் படித்தவன் வெறி கொண்டவன் போலத் தன் தலையைப் பற்றினான்.
“நோ... நோ... இது நிஜமல்ல... என் மகி எங்கும் போயிருக்கமாட்டாள்... தட் இஸ் நாட் பாசிபிள்...” என்று தன்னை மறந்து முணுமுணுத்தவன் கையில் கிடைத்த ஆடைகளை அணிந்துகொண்டு மேசையிலிருந்த தன் கைபேசியை எடுத்து அதில் வேகமாக ஏதோ ஒரு இலக்கத்தைத் தட்டியவாறு, ஜெட் வேகத்தில் வெளியே வந்தான்.

அநேகாத்மனின் இத்தகைய தோற்றத்தை இது வரை யாருமே பார்த்திருக்கமாட்டார்கள். தலை கலைந்து, விழிகள் சிவந்து, சவரம் செய்யாத முகத்துடன், பைத்தியக்காரனைப் போல ஆவேசமாக வெளியே வந்தவனை யாரும் கண்டால், இவன்தான் அநேகாத்மன் என்று சத்தியம் பண்ணினாலும் நம்பமாட்டார்கள்.

இதயம் முழுவதும் வலியுடன், தன் மனைவியைத் தேடி ஆவேசமாகக் கிளம்பியவன், வீட்டு வாசலை வந்தடைந்த போது, அதிர்ந்து போய் நின்றான்.

அங்கே கண்ட காட்சியால் விழிகள் பழபழக்க அப்படியே சோர்வுடன் தன் இரு முழங்கால்களிலும், இரு கரங்களையும் பதித்துக் குனிந்தவாறு சற்று நேரம் நின்றான் அநேகாத்மன்.

அவன் முகத்தில் முதலில் பெரும் வேதனை அப்பிக்கிடக்க, பின் மெதுவாக வடிந்து , அந்த இடத்தில் மெல்லிய நிம்மதியுடனான புன்னகை தவழ்ந்தது. அது வரை குனிந்து தன் முழங்கால்களில் கரங்கள் பதித்திருந்த அநேகாத்மன், நிம்மதி மூச்சுடன் தன் தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

சர்வமகிதான். கன்னத்தில் கையைப் பதித்து எங்கோ வெறித்துக்கொண்டு படியில் அமர்ந்திருந்தாள்.
அவள் நின்ற கோலம், இவன் இதயத்தைப் பிசைய, எழுந்தவன், விரைந்து சென்று அவளை நெருங்கி அப்படியே அவளைத் தூக்கித் தன் கரங்களில் ஏந்திக்கொண்டான்.

முதலில் திகைத்தவள், பின் அவன் தூக்கியதும், எந்த மறுப்பும் கூறாமல், அவன் மார்பில் தன் முகத்தைப் பதித்து, அவன் அணைப்பில் அடங்கிப்போய் நின்றாள் சர்வமகி.

அவளை ஏந்தியவாறு தன் அறைக்குள் நுழைந்தவன் பிறங்காலால் கதவைச் சாத்திவிட்டு, சர்வமகியை இறுக அணைத்தவாறே படுக்கையில் அவளைத் தன் மடியில் தாங்கியவாறு அமர்ந்தான். அவனுடைய கரங்கள் அவள் உடல் முழுவதும், பயனம் செய்து அவள் இன்னும் அவன் கையணைப்பில் இருக்கிறாள் என்பதை உறுதி செய்ய முயன்றுகொண்டிருந்தன.

“மகிம்மா... மகிம்மா... என் மிகிம்மா...” என்று மீண்டும், மீண்டும் அழைத்தவன்,

“என்ன காரியம் செய்யநினைத்தாய்? ஓ காட்...” என்றவன் பதட்டத்துடன் மீண்டும் அவளை தன்னோடு இறுக அணைத்தான். அவனுடைய முகம் அவளுடைய உச்சந் தலையில் அழுத்தமாகப் பதிந்தது.

“எனக்கு சத்தியம் செய்து கொடு சர்வமகி... எப்போதும் நீ என்னை விட்டுப் போகமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு...” என்றவாறு தன் கரத்தை அவள் முன்னால் நீட்டினான். அவனுடைய கரம் நடுங்கியது.

அவன் மார்பில் சாய்ந்திருந்தவள் மெதுவாக விழிகளைத் திறந்தாள்.

“போகவேண்டும் என்றுதான் நினைத்தேன்... ஆனால்... என் சகோதரர்களின் நிலையை நினைத்ததும் போகமுடியவில்லை. அவர்களுக்கு ஒரு வழி செய்யாமல் என்னால் எப்படி...” என்றவளின் விழிகளில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

உடனேயே அவனுடைய உடல் விறைத்தது. அவள் எனக்காக நிற்கவில்லையா? அவளுடைய சகோதரர்களுக்காகவா நின்றாள். அந்த அளவுக்கா என் மீது அவளுக்கு வெறுப்பு வந்துவிட்டது?” என்று எண்ணியவன், அவளுடைய முகத்தைப் பற்றி தூக்க முயன்றான். அவளோ நிமிரும் எண்ணம் இல்லாமல் பிடிவாதமாகத் தன் தலையைக் குனிந்துகொண்டே இருக்க.

“கண்ணம்மா...” என்றான் தவிப்புடன்.

“அவர்களை... ஏதாவது ஹஸ்டலில் சேர்த்துவிடுவீர்களா? அவர்களால் உங்களுக்கு எந்த உபத்திரவமும் இருக்கக் கூடாது அல்லவா...” என்றாள் களைப்புடன்.

“மகி... டோன்ட் சே எனிதிங்... நீ மட்டுமல்ல, உன் சகோதரர்களும் எங்கும்

போக முடியாது... போகவும் கூடாது. உன்னைப் போக நான் விடவும் மாட்டேன்... ஓ காட்... கொஞ்ச நேரம் நான் எப்படியெல்லாம் பதறிப்போனேன்... ஒரு வேளை உனக்கு ஏதாவது...” என்றவன் முடிக்காமல் விழிகளை அழுந்த மூடித் திறந்தான்.

அவளுடைய முகத்தை வருடியவன், ஏதோ பிசு பிசுக்கக் கையைத் தூக்கிப் பார்த்தான்.

“வட் த... ஹெல்... இஸ் திஸ்...” என்று கிட்டத்தட்ட கதறியவன், அவசரமாகப் பிடிவாதமாக அவள் முகத்தைப் பற்றித் தூக்கினான். தூக்கியவன் அதிர்ந்தான்.

“மகிம்மா...” என்றான் பெரும் அதிர்ச்சியுடன். அவள் மூக்கிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவன் சட்டை முழுவதும் இரத்தக்கறை. வழிந்துகொண்டிருந்த இரத்தத்தைத் தன் கரத்தால் துடைத்தான். அவனுடைய கரங்களும் உடலும் அச்சத்தில் நடுங்கின.

“மகி... ஓ காட்... ஓ காட்..” என்று பதறியவன்,

“நான்... என்ன செய்வேன்... நான் என்ன செய்யட்டும்...” என்று பதறித் துடித்தவனை அரை மயக்கத்திலேயே கண்டு கொண்டவள்,

“ஆத்மன்... ஐ ஆம் ஓக்கே... ஜெஸ்ட் எ பிளட்... ப்ளீஸ்... கொன்...கொன்ட்ரோல் யுவர் செல்ஃப்...” என்று அவனைச் சமாதானப் படுத்த முயல,

மறு பேச்சுப் பேசாமல் அவளைத் தூக்கியவாறு வேகமாகப் படிகளில் இருந்து இறங்கத் தொடங்கினான்.

“நத்திங்... எனக்கு ஒன்றுமில்லை... ஜஸ்ட் பிளட்...” என்றவள் இயலாமையால் அவன் தோளில் தன் முகத்தைப் பதித்தாள்.

“எப்போதிருந்து ப்ளீட் பண்ணுகிறது...” என்றான் அவன் கலக்கத்துடன்.

“கொஞ்ச நேரமாக...” என்றவள் சோர்வுடன் விழிகளை மூடினாள். அவளுடைய முகம் இரத்தப் பசையை இழந்து வெளுத்துப்போனது.

“தேவகி...” என்று பலம் கொண்ட மட்டும் கத்தினான் அநேகாத்மன். இப்போது அவன் எதையும் நினைக்கும் நிலையில் இல்லை. அவனுடைய சர்வமகிக்கு ஆபத்து. அதுமட்டும்தான் நினைவில் நின்றது.

அவனுடைய ஒரு குரலில் விழுந்தடித்துக்கொண்டு வெளியே வந்தாள் தேவகி.

“எ... என்ன அத்தான்... அக்கா... வட் ஹப்பன்ட்...” என்று பதறியவாறு வெளியே வந்தாள் தேவகி.

“தேவகி... நான் அக்காவை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்குப் போகிறேன்... நீ வீட்டைப் பார்த்துக்கொள்... இல்லை... நீ என்னுடன் வா... அக்காவின் ஆடைகளை எடுத்துக்கொண்டு வா... மாதவியை வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லு...” என்றவன் வேகமாக சர்வமகியைக் கிடைத்த காருக்குள் கிடத்தினான்.

தன் கைத் தொலைபேசியை எடுத்தவன், “வசந்தா... இட் இஸ் மி...

என்னுடைய மனைவியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறேன். நீ என் வீட்டில் வந்து நிற்கவேண்டும்... யெஸ்... தாங்ஸ் பாய்...” என்றவன் தேவகியை சர்வமகியின் அருகே இருக்கச் சொல்லிவிட்டுக் காரை வேகமாகக் கிளப்பினான்.

இதற்கிடையில் சர்வமகியின் உடல் துடிக்கத் தொடங்கியது. தலையை அழுந்தப் பற்றியவள்,

“தேவிம்மா... தலை வலிக்கிறது...” என்று முணுமுணுத்தாள்.
தேவகியின் விழியில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

“அக்கா... யு ஆர் ஓக்கே... உனக்கு ஒன்றுமில்லை...” என்றவள் கையில் வைத்திருந்த பையிலிருந்து ஏதோ ஒரு மாத்திரையை வெளியே எடுத்து சர்வமகியின் வாயின் அருகே கொண்டு சென்றாள்.

“அக்கா... இந்தா... மருந்தைக் குடி...” எனறாள். சர்வமகி சிரமப்பட்டு வாயைத் திறக்க முயன்றாள்.
அதே நேரம், அவனுடைய காரின் வேகம் நூற்றி அறுபதையும் தாண்ட, அவன் வேகத்தை அறிந்து, பொலிஸ் வேறு அவனைத் துரத்தத் தொடங்கியது. அநேகாத்மனுக்கு, அது எதுவும் புலனுக்கு எட்டவில்லை. அவன் இன்னும் தன் வேகத்தைக் கூட்டினான்.

மறு கணம், பொலிசால் சுற்றி வளைக்கப்பட, கார் பெரும் சத்தத்துடன், கிறீச்சிட்டு நின்றது.
அவனுடைய காரைச் சுற்றி பல பொலிஸ் வீரர்கள் துப்பாக்கியுடன் நின்றிருந்தனர்.

“டாமிட்...” என்று சீறியவன், வேகமாகக் கதவைத் திறந்து இறங்கத் தொடங்கினான். உடனே அத்தனை பொலிஸ் அதிகாரிகளின் துப்பாக்கியும் அவனை நோக்கி நீண்டிருக்க, வெளியே வந்தவனின் தோற்றத்தைக் கண்டு அனைவரும் திகைத்தனர்.

சட்டை முழுவதும் இரத்தம் அப்பியிருக்க, கலைந்த தலையும் கலங்கிய கண்களுடனும் நின்றிருந்தவன், அநேகாத்மன் என்று யாருக்கும் தெரியாது. அவனுக்கு விலங்கு மாட்ட ஒரு அதிகாரி நெருங்க,

“லிசின்... ஐ ஹாவ் டு கோ... மை வைஃப் இஸ் நாட் இன் த குட் கென்டிஷன்... லெட் மி கோ...” என்று அவன் கத்த, சந்தேகம் கொண்ட அதிகாரி, அவன் காருக்குள் எட்டிப் பார்த்தான்.

“எதற்காக நீ கொண்டு செல்கிறாய்... அம்புலன்ஸை அழைத்திருக்கலாமே...” என்றார் அதிகாரி சந்தேகமாக.

“லிசின்... எதைப் பற்றியும் யோசிக்கும் நிலையில் நானில்லை. நான் இப்போது மருத்துவமனைக்குப் போகவேண்டும்... என் மனைவி ஆபத்தான நிலையில் இருக்கிறாள்... இஃப் எனிதிங் ஹப்பன் டு ஹெர்.. ஐ வில் நெவர் ஃபொரிகிவ் யு...” என்று கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளைத் துப்ப,

“யு சாலஞ்சிங் மீ...” என்று அதிகாரி எகிறத் தெடங்க,

“நோ... ஐ ஆம் வோர்னிங் யு... லிசின்... ஐ டோன்ட் ஹாவ் டைம்... லெட் மி கோ...” என்றவனின் குரலில் ஒரு கணம் அசந்துதான் போனார் அந்த அதிகாரி. பின் அங்கே துடித்துக்கொண்டிருந்தவளைக் கண்டதும், ஓரளவு நிலைமை புரிய, உடனே தன் சகாக்களுக்கு ஏதோ கூறிவிட்டு,

“லிசின் மிஸ்டர்... ஐ வில் டேக் யு டு த ஹாஸ்பிடல்... ஜெஸ்ட் ஃபொலோமி...” என்று கூறிவிட்டு சய்ரனைப் போட்டுவிட்டுத் தன் காரை வேகமாக எடுக்க, அநேகாத்மனும் தன் காரை எடுத்து அந்த பொலிசின் காரை மிக வேகமாகப் பின்பற்றத் தொடங்கினான்.

அநேகாத்மன் எதையும் யோசிக்கும் நிலையில் இல்லை. அவனுக்கு இப்போது தேவை சர்வமகியை மருத்துவமனையில் சேர்ப்பது.

ஏற்கெனவே அந்த பொலிஸ் அதிகாரி, மருத்துவமனைக்கு அறிவித்து இருந்ததால், வாசலிலேயெ அவளை அழைத்துச் செல்ல, மருத்துவர்களும், தாதிகளும் நின்றிருந்தனர்.

சர்வமகி தாமதமின்றி உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள். அவள் தலைவலியால் துடிப்பதைப் பார்க்க முடியாமல் ஒரு இருக்கையில் அமர்ந்தான் அநேகாத்மன். இரண்டு கரங்களிலும் தன் தலையைத் தாங்கிக்கொண்டவனின் விழிகளில் இரண்டு கண்ணீர் துளிகள் வழிந்து நிலத்தில் விழுந்தன.
அவனருகே அமர்ந்த தேவகி, அவன் தோளில் தன் கரத்தைப் போட்டாள்.

“அத்தான்... அக்காவிற்கு ஒன்றுமாகாது...” என்றாள் தவிப்புடன்.

“தேவகி...” என்றவன் அவள் கரத்தைத் தன் கரத்தில் பற்றிக்கொண்டான்.

“தேவகி... எனக்கு உன் அக்கா வேண்டும். முழுதாக.. அவள் இல்லாத வாழ்வில் எனக்கு எதுவுமே இல்லை... ஓ காட்... அவள் இல்லாத எதிர்காலத்தை என்னால் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அவள் இல்லாத வீடு வெறும் சுடுகாடு தேவகி... ஐ லவ் ஹர்... என் இதயம் முழுவதும் அவள்தான் நிறைந்திருக்கிறாள்...” என்றவன் தேவகியின் கரத்தை அழுந்தப் பற்றினான். அவன் கரங்கள் நடுங்குவதை தேவகி வேதனையுடன் பார்த்தாள். எத்தனை கம்பீரமான மனிதன். அக்காவிற்கு ஒன்றென்றதும் எப்படிப் பதறிப்போகிறான். இதுதானே உண்மையான காதல்.

அதே நேரம், அவன் அருகே அந்த போலிஸ் ஆ஼பீசர் வந்தார்.
அநேகாத்மனின் நிலை அவருக்கு நன்கு புரிந்தாலும்,
அவருக்கென்றொரு கடமையிருக்கிறதே.

“ஐ ஆம் சாரி... ஐ ஹாவ் டு டூ மை டியூட்டி என்று கூற,” அவர் எதைக் கேட்கிறார் என்பதைப் புரிந்த அநேகாத்மன் தன் பேர்சை வெளியே எடுத்துத் தன் விசிடிங் கார்ட், ட்ரைவர்ஸ் லைசன்ஸ், கார் உரிமைப் பத்திரம், அனைத்தையும் கொடுத்தான்.

அவன் பெயரையும், அடையாளத்தையும் புரிந்துகொண்ட காவலதிகாரி, பெரும் வியப்புக் கொண்டவராக,

“மிஸ்டர், அநேகாத்மன்... இட்ஸ் யு...” என்றார் இன்னும் சந்தேகம் தெளியாதவராக.
அவனோ அமைதியாகப் பார்த்துத் தலையை ஆட்ட,

“ஐ கான்ட் பிலீவ் திஸ்... உங்களை இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் பார்க்கவேண்டி இருக்கிறதே என்று எண்ணி வருந்துகிறேன்... உங்கள்

மனைவிக்கு ஒன்றுமாகாது... அவர்கள் நலமுடன் உங்களிடம் வருவார்...” என்று உறுதி கூறிவிட்டு, அனைத்து டாக்யுமன்டையும் கூடவே அவன் செய்த குற்றத்திற்கான டிக்கெட், அது சார்ந்த டாக்யுமன்ட் அனைத்தையும் அவனிடம் ஒப்படைத்து விட்டு விடை பெற, இது எதையும் உணரும் நிலையில் அநேகாத்மன் இருக்கவில்லை.

அவன் சிந்தனை முழுவதும் சர்வமகியிடமே நிலைத்திருந்தது. சிறிது நேரத்தின் பின் வைத்தியர் ஒருவர் வெளியே வந்தார்.

“மிஸ்டர் அநேகாத்மன்...” என்று அழைக்க இவன் விறுக் என்று எழுந்து நின்றான்.

“வ... வட் ஹப்பன்... ஹௌ இஸ் ஷி?” என்றான் தன் உயிரைக் கரத்தில் பிடித்தவாறு.

“உடனடியாக அவர்களுக்கு ஆப்பரேஷன் செய்யவேண்டும். கட்டி மூளைக்குப் போகும் இரத்தத்தைத் தடைப்படுத்தத் தொடங்கிவிட்டது. இப்போது, சத்திரசிகிச்சை செய்யவில்லை என்றால் அதற்குப் பிறகு நீங்கள் விரும்பினாலும் எங்களால் எதுவும் செய்யமுடியாது. சொல்லப் போனால், சத்திரசிகிச்சையின் மூலம் கிடைக்கும் இருபது சதவிகதம் பிழைக்கும் சந்தர்ப்பம் கூட இதில் கிடைக்காமல் போகலாம். யோசித்து முடிவு எடுங்கள்...” என்றார் அவர்.

அநேகாத்மனின் முகம் இரத்தப்பசையை இழந்தது உடல் ஆடியது. காதுகள் மங்கின.

“மிஸ்டர் அநேகாத்மன்... அநேகாத்மன்...” என்று இரு முறை அழைத்த வைத்தியர், அவன் நிலை உணர்ந்து, அவனை அருகேயிருந்த இருக்கையில் இருத்தினார். உடனே அவருக்கு அருகேயிருந்த தாதியொருவர், நீர் கொண்டு வந்து கொடுக்க, அதனை அநேகாத்மனிடம் நீட்ட, ஓரளவு சுயநினைவு பெற்ற அநேகாத்மன், வைத்தியரை வெறித்துப் பார்த்தான்.

“ஐ வோன்ட் டு சீ ஹர்...” என்றான் நடுங்கும் குரலில்

“சூவர்...” என்ற வைத்தியர், அநேகாத்மனை தன்னோடு அழைத்துச் சென்றார்.
சர்வமகிக்கு ஆடை மாற்றப்பட்டிருந்தது. ஏதேதோ டியூப் உள்ளேயும் வெளியேயும் போய்க்கொண்டிருந்தது. ட்டிரிப் ஏற்றப்பட்டிருந்தது.

அவனுக்கு கண்களைக் கரித்தது. இது பார்க்கவா அவன் இன்னும் உயிரோட இருக்கிறான் என்று எண்ணத் தோன்றியது.

அவளை நெருங்கியவன் அவளுடைய கரத்தைப் பற்றினான். சர்வமகியின் விழிகள் மெதுவாக அசைந்தது.

“மகிம்மா...” என்றான் மென்மையாக.

மெதுவாக விழிகளைத் திறந்தாள் சர்வமகி. புன்னகைக்க முயன்று தோற்றவளாக சோர்வுடன் விழிகளை மூடினாள். பின்பு மெதுவாகத் திறந்தவள், அவனையே பார்த்தாள்.

“வந்துவிட்டீர்களா? இ.. இத்தனை நே... நேரம் எங்கே தான் இ... இருந்தீர்கள்?” என்றாள் அவனைக் காணாத தவிப்புடன்.

“கண்ணம்மா... நான் எங்கும் போகலைடா... இங்கே... பக்கத்திலேதான் நின்றேன்... இப்போ... இப்போ... எப்படிம்மா இருக்கு?” என்று குரல் நடுங்கக் கேட்டான் அநேகாத்மன்.

“அதிகமா... இங்கே... வலிக்கிறது...” என்று தலையைத் தொட்டுக் கூறியவள், பின்பு எதையோ நினைத்தவளாக,

“நீ... நீங்கள்... யார்...” என்றாள் திடீர் என்று.

“மகிமா...” என்றான் இவன் அதிர்வுடன்...

“நீங்கள்... வந்து அதிக நேரமாகிவிட்டதா?” என்றாள் பின்பு குழப்பத்துடன். தொடர்ந்து

“நா...ன் எங்கே... இருக்கிறேன்... எதற்கு இங்கே இருக்கிறேன்...”

“அபிதன் சாப்பிட்டானா?”

“அப்பா... என்னைத் தேடுவாரே... நான் போகவேண்டும்...” என்று ஏதோ குழப்பத்துடன் அவள் கூற, அநேகாத்மனின் தன்னம்பிக்கை, தைரியம், திடம் அனைத்தும் வடிந்தவனாக வைத்தியரைப் பார்த்தான்.

“அது அந்தக் கட்டியால் வந்தது மிஸ்டர் அநேகாத்மன்... இப்போது முக்கிய நரம்புகளை அந்தக் கட்டி அழுத்துவதால், நினைவுகளும் தடுமாறுகின்றன...” என்றார் வருத்தத்துடன்.

“மகிமா...” என்று குரல் உடையக் கூறியவன், அவள் முன்னால் தான்

உடைந்து ,அவள் நம்பிக்கையை சிதைக்கக் கூடாது என்று எண்ணியவனாகத் தன்னைத் திடப்படுத்தியவன்,

“மகிம்மா... இங்கே என்னைப் பார்...” என்றான் அவசரமாக. அவளோ வேறு எங்கோ பார்க்க, சிரமப்பட்டு, அவளுடைய முகத்தைத் தன்பக்கமாகத் திருப்ப, அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலக்க முயன்றான் அநேகாத்மன்.

“கண்ணம்மா... லுக் அட் மை ஐஸ்... மகிம்மா... லுக்... லுக்... என் கண்களைப் பார்... ஐ வோன்ட் டு டெல் யு சம்திங்...” என்றவாறு தவிப்புடன் கூறியவன், இறுதியாக அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலக்கவிட்டான்.

“ஆத்மன்...” என்றாள் இறுதியாகக் கரைந்து விட்ட குரலில் .

“யேஸ் பேபி... இட்ஸ் மி... யுவர் ஆத்மன்... ஓன்லி யுவர்ஸ்...” என்றான் விழிகளும், குரலும் விம்ம. அவளோ, அவனை வெறித்துப் பார்த்தவளாக,

“இனி... இனி என்னால் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் கிடையாது... கொஞ்ச... கொஞ்சக் காலமாக இருந்தாலும்... என்... என் மீது பாசம் வைத்திருந்ததற்கு... அது நடிப்பே என்றாலும்... தாங்க்ஸ்... நான்... நான் சொன்னதுபோல... என்... என் சகோதரர்களை... எங்காவது... பாதுகாப்பான இடத்தில்... விட்டுவிடுங்கள்... உங்களுக்கு அவர்களால் எந்தத் தொ... தொந்தரவும் வரக் கூடாது...” என்று சிரமப்பட்டுப் போசியவளின் கரத்தைத் தன் கரதட்தில் எடுத்து அழுத்தியவன், மறு கரத்தை அவள் உதட்டில் வைத்து அவள் பேச்சைத் தடுத்தான்..

“ப்ளீஸ்... டோன்ட் கில்மி மகிமா... நான் சொல்வதை நீ நம்பவேண்டும்... நான் உன்னை விரும்புவதுபோல நடிக்கவில்லை... ப்ளீஸ் பிலீவ் மி... நான் நான் உன்மையாகவே உன்னை என் உயிருக்கும் மேலாக விரும்புகிறேன்... ஐ லவ் யு... ஐ நீட் யு...

உன்னைப் பார்த்த அந்தக் கணமே நான் உன்னை விரும்பத் தொடங்கிவிட்டேன்... அதனால்தான் மூனறு வருடங்களுக்கு முன்பே உன்னை மணக்கக் கேட்டேன்... ஆனால் நீ மறுத்துவிட்டாய்... என்று உன்னை விரும்ப ஆரம்பித்தேனோ... அதற்குப் பிறகு நீ என்னை மறுத்தாலும்... இங்கே இருப்பது நீ ... நீ மட்டும்தான்...” என்று தன் இடது மார்பைத் தொட்டுக் காட்டியவன்,

“கண்ணம்மா... உண்ணைப் பார்த்த அந்தக் கணமே, எனக்கு எல்லாமே நீதான் என்பதை நான் உறுதியாகத் தெரிந்துகொண்டேன். அதற்குப் பிறகு நான் வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை... கனவில் கூட அவர்கள் வந்ததில்லைம்மா... நீ... நீ மட்டும்தான் எப்போதும் என் நனவிலும், கனவிலும் வந்தவள். எப்போதுமே நீ மட்டும்தான் எனக்கு...

இதோ பார்... நான் எத்தனையோ பெண்களுடன் பழகியிருக்கிறேன்... பட் யாருமே என் இதயத்தைத் தொட்டத்தில்லை. ஏன் என் இதயத்தை நெருங்கக் கூட அவர்களால் முடிந்ததில்லை. முதன் முதல் என் உள்ளத்தைத் தொட்டது, என் உணர்வைத் தொட்டது ஏன் என் ஆத்மாவைத் தொட்டது ஏன் என் புத்தியைத் தொட்டது கூட நீதான்... நீ... நீ மட்டும்தான்... என்னை நம்பும்மா... தயவு செய்து உன் நம்பிக்கையை விட்டுவிடாதே... எனக்கு நீ வேண்டும்... இம்மைக்கும் மறுமைக்கும் நீ வேண்டும்... இனி இந்த ஜென்மத்தில் என் விரல் நுணி உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் தவறான நோக்கத்தில் தீண்டாது கண்ணம்மா... ஐ பிராமிஸ் யு... ப்ளீஸ் பேபி... ஐ பெக் யு... பிலீவ் மி... என்னிடம் எனக்காய் திரும்பி வந்துவிடு...” என்றவனின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்க, சர்வமகியின் விழிகள் வியப்பால் விரிந்தன.

ஆத்மன் அழுகிறானா? அவனுக்கும் அழத் தெரியுமா? முதலில் வியந்தவள், அவன் கரைவது அவள் வேதனையை மேலும் கூட்டியதோ, மீண்டும் அவள் மூக்கில் இருந்து இரத்தம் கசிய அநேகாத்மன் பதட்டமானான். வழிந்த இரத்தத்தைத் துடைத்துவிட்டவாறு.

“இட்ஸ் ஓக்கே... இட்ஸ் ஓக்கே... யு வில் பி ஆல் ரைட்...” என்று அவளுக்கு சொன்னானா, இல்லை அவனுக்கே சமாதானம் சொன்னானா தெரியவில்லை,

“கண்ணம்மா... நீ என்னை நம்புகிறாய் அல்லவா...? உன் தந்தை குற்றமற்றவர் என்று நம்பினாய், பிரதீபன் குற்றமற்றவன் என்று நம்பினாய்... அதே போல என்னையும் நம்பும்மா... நான் தவறு செய்தவன்தான்... ஆனா... உன் மீது நான் கொண்ட காதல் பொய்யில்லை... அது நடிப்பில்லை... ப்ளீஸ்... பிலீவ் மீ....” என்றான் பெரும் தவிப்பும் தடுமாற்றமுமாக.

“நம்பத்தான் முயற்சி செய்கிறேன்... ஆனால்...” என்றவளின் உடல் உதறியது. அதே நேரம் இரண்டு வைத்தியர்களும், நான்கு தாதிகளுமாக பரபரப்புடன் அவர்களுடைய அறைக்குள் நுழைந்தனர்.

“மிஸ்டர் அநேகாத்மன்... இனியும் தாமதிக்க முடியாது...” என்றனர் அவசரமாக.

“ஓக்கே என்ன வேண்டுமானாலும் செய்து என் மனைவியைப் பிழைக்க வைத்துவிடுங்கள் டாக்டர்... ஐ நீட் ஹர்...” என்றான் குரல் முழுவதும் வலியைத் தேக்கி.

“மிஸ்டர் அநேகாத்மன்... அதுதான் எங்கள் வேலையே... நீங்கள் எதற்கும் வருத்தப்படாதீர்கள்... கடவுள் இருக்கிறார்...” என்றவறாறு சர்வமகியை அழைத்துச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார்.

“கடவுள் இருக்கிறார்...” என்கிற சொல் அவனுக்கு திரும்பத் திரும்ப காதில் விழ

‘உன்மையாக கடவுள் இருக்கிறாரா?’ என்று குழம்பியவன், வாழ்வில் முதன் முறையாக, இது வரை செய்யாத ஒன்றைச் செய்தான். ஆம் கால் மடித்து மண்டியிட்டுத் தரையில் அமர்ந்தவன், கெஞ்சினான்... அதுவும் கடவுளிடம்.

முதலில் எந்தக் கடவுளிடம் கெஞ்சுவது என்று அவனுக்குப் புரியவில்லை. சிவனிடமா, இயேசுவிடமா, அல்லாவிடமா... இல்லை புத்தரிடமா? இல்லை இவை அனைத்தையும் இணைக்கும் ஏதோ ஒரு சக்தியிடமா தெரயவில்லை... ஆனாலும் வேண்டினான்...

“கடவுளே... ப்ளீஸ் சேவ் ஹர்... ஐ பெக் யு... சேவ் ஹர்... அவளை என்னிடமிருந்து பிரித்துவிடாதே... ஐ நீட் ஹர்... ஐ ஆம் நத்திங் வித்தவுட் ஹர்... அவள் இல்லாத வாழ்வில் எனக்கு எதுவும் இல்லை... ப்ளீஸ் என்னவளைக் காப்பாற்று. என்னிடமிருந்து எது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்... என் பணம், பதவி, அந்தஸ்து... எல்லாத்தையும் நான் இழக்கத் தயார்... ஆனால் என் தேவதையை... என் ஆத்மாவுடன் கலந்தவளை என்னிமிருந்து பிரித்துவிடாதே..” என்று தன்னை மறந்து கெஞ்ச, அவன் அருகே வந்த தாதி,

“மிஸ்டர் அநேகாத்மன், உங்கள் நிலை எங்களுக்குப் புரிகிறது. உங்கள் மனைவியை உள்ளே அழைத்துச் செல்லப்போகிறோம். சோ... நீங்கள் விருந்தினர் அறையில் உட்காருங்கள்...” என்றார் அவன் வலி புரிந்தவராக.

தள்ளாட்டத்துடன் எழுந்தவன், “ஒன் செக் டாக்டர்...” என்றவாறு,

சர்வமகியின் அருகே வந்தான்.
“மகிம்மா...” என்றான் தளர்வாய்.

அவள் மெதுவாய் தன் விழிகளை விரித்துப் பார்க்க,

“நான் உனக்காக் காத்திருப்பேன்... நீ கட்டாயம் திரும்பி வரவேண்டும்... எனக்கு சத்தியம் செய்து கொடு... ப்ளீஸ்... எனக்காக இல்லாவிட்டாலும், உன் சகோதரர்களுக்காக... கமோன்... பிராமிஸ் மி...” என்று தன் கரத்தை நீட்ட சர்வமகி அவனை வெறித்துப் பார்த்தாள்.

“கமோன் டாமிட்... பிராமிஸ் மி... சத்தியம் செய் சர்வமகி... கமோன்...” என்று பரபரப்புடன் வேண்டினான். சர்வமகி சிரமப்பட்டுத் தன் கரத்தை நீட்ட அநேகாத்மன் அதை அழுந்தப் பற்றிக்கொண்டான்.

“நீ சத்தியம் செய்திருக்கிறாய் மகிம்மா... எக்காரணம் கொண்டும் உன் நம்பிக்கையை விட்டுவிடாதே... உனக்காக நா... உனக்காக உன் சகோதரர்கள் காத்திருப்பார்கள்... அவர்களை தவிக்கவைத்துவிடாதே...” என்று பலமுறை அவள் மனதில் பதிய வைத்தான்.

பின்பு அவளை ஸ்ரெச்சரில் இழுத்துக்கொண்டு செல்ல தன் உயிரே தன்னைவிட்டுப் பிரிவதுபோலப் பார்த்துக்கொண்டிருந்தான் அநேகாத்மன்.

நிலவு 50

விருந்தினர் அறைக்குள் வந்த அநேகாத்மன் இருக்கையில் தொப் என்று அமர்ந்தான். அவனால் எதையும் தெளிவாகச் சிந்திக்கமுடியவில்லை. சிந்தனை மட்டும், சர்வமகியிலேயே நிலைத்திருக்க, விழிகளோ, எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன.

அநேகாத்மனின் நிலையைப் புரிந்துகொண்டவளாகத், தேவகி அவனருகே வந்தமர்ந்தாள்.
அவனுடைய கரத்தில் தன் கரத்தை வைத்தவள்,

“ அத்தான்...” என்றாள் மென்மையாக.

கனவில் பார்ப்பதுபோல அவளை ஏறிட்டான் அநேகாத்மன்.

“அக்கா... அக்காவுக்கு எப்படி...” என்று தவிப்புடன் கேட்டாள்.

“தெரியவில்லை தேவகி... எனக்கு... எனக்கு என்ன யோசிப்பதென்றே தெரியவில்லை. என்னால் எதையும் தெளிவாக சிந்திக்கமுடியவில்லை... கொஞ்ச நேரம் நான் அமைதியாக தனிமையில் இருக்கவேண்டும்... ப்ளீஸ்... என்னைத் தொந்தரவு செய்யாதே...” என்றவன் தன் முகத்தைக் கரங்களால்; தாங்கிக்கொண்டான்.

அதே நேரம் அவனுடைய செல் அடித்தது. வெறுப்புடன் செல்லைப் பார்த்தவன், எடுத்துக் காதில் பொருத்தினான்.

“வட்...” என்றான் சுள் என்று. மறுபக்கம் என்ன சொன்னதோ,

“உடனடியாக அந்த நியூசை எல்லாப் பேப்பரிலும் போடு... எல்லா தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பச் சொல்லி உத்தரவிடு... எத்தனை பணம் தெலைந்தாலும் ஐ டோன்ட் கெயர்... எல்லா பத்திரிக்கை, டிவி... ரேடியோ இன்டர் நெட்... எல்லாவற்றிலும் இந்த நியூஸ் பப்ளிஷாகவேண்டும்...” என்றான்.

அடுத்து மறுபக்கம் சொன்னதை பொறுமை இழந்து கேட்டவன்,

“எனக்கு என் உயிரைப்பற்றிய கவலை இல்லை... என் உயிர் உள்ளே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறபோது... என் உடலைப் பற்றி எனக்கென்ன கவலை... டு வட் ஐ சே... இந்த நியூஸ் நாளைக்கிடையில் இந்த உலகம் எங்கும் ஒலிபரப்பாகவேண்டும்...” என்றவன் தொலைபேசியை மீண்டும் சட்டைப் பையில் வைத்தான்.

இருக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டவன் மீண்டும் மனம் இறைவனிடமே நிலைத்திருந்தது. அவன் உடல் பொருள் ஆவி அனைத்தும், எங்கோ தொலைவில் கண்ணுக்கெட்டா தூரத்தில், கடவுள் என்று மக்களால் நம்பப்படும், ஏதோ ஒரு சக்தியிடம், மன்றாடிக் கேட்டுக்கொண்டிருந்தன.

‘கடவுளே... என் மகியை மீட்டு என்னிடம் கொடுத்துவிடு’ என்று

கிட்டத்தட்ட ஏழு மணி நேர சத்திரசிகிச்சை. அநேகாத்மன் அது எதுவும் புரியாமல் விழிகளை மூடி ஏதோ ஒரு ஒளியிடம் சர்வமகி மீண்டும் வந்துவிடவேண்டும் என்று மட்டும் வேண்டிக்கொண்டே இருந்தான். தேவகிக்கு அவனைப் பார்க்கப் பார்க்கப் பயமாக இருந்தது. காதலைப்

பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள் தான். ஆனால் அநேகாத்மனின் காதலைப் போன்று அவள் எதையும் கேள்விப்பட்டதும் இல்லை. பார்த்ததும் இல்லை.

உண்ணவில்லை, பச்சைத் தண்ணீர் கூட அவன் குடிக்கவில்லை. ஆனால், மூடிய விழிகளிலும் அசைவில்லை, நிமிர்ந்திருந்த உடலிலும் அசைவில்லை. வெறும் கல்லாக அமர்ந்திருந்தான் அவன்.
கடைசியாக விருந்தினர் அறைக்கு சத்திரசிகிச்சையை முடித்து வைத்தியர் வந்தார். அது எதுவும் தெரியாமல் அநேகாத்மன் விழிகளை மூடியவாறே இருந்தான்.

அருகே வந்த வைத்தியர் அவனுடைய தோளில் தன் கரத்தை வைத்தார்.

அப்போதும் அநேகாத்மன் விழிகளைத் திறக்கவில்லை.

“மிஸ்டர் அநேகாத்மன்...” என்றார் வைத்தியர்.

மெதுவாக விழிகளைத் திறந்தான். முன்னே நின்ற வைத்தியரைக் கண்டதும் பதட்டமானான்.
“டாக்டர்... என் மனைவிக்கு...” என்றவன் முடிக்காமல் அவரைப் பார்த்தான்.

அவருடைய முகத்தில் மெல்லிய புன்னகை தவழ்ந்தது.

“மிஸ்டர் அநேகாத்மன்... உங்கள் மனைவியின் மூளையிலிருந்த கட்டியை வெற்றிகரமாக நாங்கள் நீக்கிவிட்டோம்...” என்றதும் பெரும் நிம்மதியுடன் வைத்தியரைப் பார்த்து முதன் முறையாக புன்னகை சிந்தினான் அநேகாத்மன்.

“தாங்க் காட்... டாக்டர்... எனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை... என் உயிரையே என்னிடம் கொடுத்துவிட்டீர்கள்... நான் இந்த உதவியை ஒருபோதும் மறக்கமாட்டேன்...” என்று அவருடைய கரத்தைப் பற்றிக் கூறியவனிடம் வருத்தமான ஒரு புன்னகையைச் சிந்தினார் டாக்டர்.

“மிஸ்டர் அநேகாத்மன்... சத்திரசிகிச்சைதான் வெற்றிகரமாக நடைபெற்றது என்று சொன்னேன்...” என்று கூறியதும்தான் அநேகாத்மன் அடிபட்ட பாவனையுடன் வைத்தியரைப் பார்த்தான்.

“அப்படியானால்... டாக்டர்... என் மனைவியின் உயிருக்கு...” அதற்கு மேல் அவனால் சிந்திக்கவும் முடியவில்லை... வாய் விட்டுக் கூறவும்

முடியவில்லை.

“அது எங்கள் கையில் இல்லை...” என்று அவர் கூற அநேகாத்மன் வைத்தியரின் சட்டையை அழுந்தப் பற்றினான்.

“வட் த ஹெல் ஆர் யு டாக்கிங்...” என்று சீறினான் அவன்.

“மிஸ்டர் அநேகாத்மன்... கூல் டவுன்...” என்ற வைத்தியரை கோபத்துடன் பார்த்தான் அநேகாத்மன்.

“கூல் டவுனா... எப்படி... எப்படி? என் மனைவியைக் காப்பாற்றுவீர்கள் என்று நினைத்தால்... நீங்கள் இப்படி வந்து சொல்கிறீர்களே...” கோபம் எகிறியவனாக.

“மிஸ்டர் அநேகாத்மன்... கன்ரோல் யுவர் செலஃப்... உங்கள் மனைவியின் உயிருக்குத் தற்போதைக்கு எந்த ஆபத்தும் இல்லை... அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்...” என்றதும் விறுக் என்று எழுந்தான் அநேகாத்மன்.

“அப்படியானால் அவள் பிழைத்துக் கொள்வாளா?” என்றான் பரபரப்பாக.

“மிஸ்டர் அநேகாத்மன்... தவறான நம்பிக்கையைத் தர நாங்கள் விரும்பவில்லை. உங்கள் மனைவிக்கு இப்போதைக்கு எந்த ஆபத்தும் இல்லை. இன்னும் இரண்டு நாட்கள் கழிந்த பிறகுதான் அவருடைய உன்மையான நிலை தெரியவரும். தற்போதைக்கு அவரை லைஃப் சப்போர்ட்டில் போட்டிருக்கிறோம்... இனிக் கடவுளின் அருளும் பேஷன்டின் ஒத்துழைப்பும் இருந்தால்தான் பிழைத்து எழ முடியும்...” என்றதும் அநேகாத்மனுக்குத் தன்னை நிதானப் படுத்துவதே பெரும்பாடானது.

“லைஃப் சப்போர்ட்டா...” என்று அதிர்வுடன் கேட்டவன் டாக்டரைப் பயத்துடன் பார்த்தான்.

“யெஸ்... மிஸ்டர் அநேகாத்மன்... லைஃப் சப்போர்ட்தான்... செயற்கையாக சுவாசிக்க வைத்திருக்கிறோம்...” என்றதும் அநேகாத்மன் இருக்கையில் தொப் என்று அமர்ந்தான்.

“அ... அப்படியானால்... என்... மனைவி...”

“சாரி டு சே திஸ்... ஷி இஸ் இன் கோமா...”

“நோ... நோ... ஓ காட்... ஓகாட்...” என்று துடித்துப் பதறியவனிடம்

“நாங்கள் முடிந்த வரை முயற்சி செய்தோம் மிஸ்டர் அநேகாத்மன். இப்போ கோமாவில் இருப்பவர்கள் விழித்துக் கொள்வதற்கு காத்திருக்கவேண்டியதுதான்...” என்றார் வைத்தியரும் வருத்தமாக.

“எப்போ... எவ்வளவு காலத்திற்கு...” என்றான் அனேகாத்மன் அடக்கிய ஆத்திரத்துடன்.

“அதற்கு பதில் கூறும் சக்தி என்னிடம் இல்லை... நாளையும் எழும்பலாம், ஒரு கிழமை கழித்தும் எழும்பலாம்... வருடங்கள் கழித்தும் எழும்பலாம்... இல்லை.... அவர்கள் எழும்பாமலே...” அவர் முடிக்க முதல் பாய்ந்து, அவருடைய கோர்ட்டை இழுத்துப் பிடித்தான்.

“ஹௌ டெயர் யு... ஹௌ டெயர் யு சே லைக் திஸ்...”

“சாரி மிஸ்டர் அநேகாத்மன்... எதுவும் எங்கள் கையில் இல்லை...” என்றார் அவர் வருத்தத்துடன்.

“வட்;... உன் கையில் இல்லை என்றால் யார் கையில் இருக்கிறது? என் மனைவியைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் எதற்காக டாக்டருக்குப் படித்தீர்கள்...? உங்களை நம்பி என் மனைவியை ஒப்படைத்தால் இதுதானா... பதில்...” என்று ஆவேசம் கொண்டு கத்தியவனை அடக்குவதற்குப் பெரும் பாடாகிற்று.

“ப்ளீஸ் மிஸ்டர் அநேகாதமன்... உங்கள் வலி எங்களுக்குப் புரிகிறது. விட்ரை அவர் பெஸ்ட்... பட்... அந்தக் கட்டிகள் இருந்த இடம்... எங்களுக்கும் வேறு வழியில்லை...” என்று அவர் தம் பக்க நியாயத்தைக் கூற முயல, அநேகாதமன் அவரைப் பிடித்திருந்த கோர்ட்டை விடுவித்தான்.

“ஏன்... ஏன் உங்களால் முடிந்திருக்கவில்லை...” என்றவன், தான் ஒரு ஆண்... அதுவும் பெரிய லீடிங் லாயர்... பெரும் பணக்காரன் என்பது எதுவும் நினைவில்லாமல் அப்படியே மடங்கிச் சரிந்து குலுங்கிக் குலுங்கி அழ, பதறிக்கொண்டு ஓடிவந்த தேவகி, அவனருகே அமர்ந்து அவன் தோளைச் சுற்றித் தன் கரத்தைப் போட்டாள். தன் சகோதரிக்காக அழுவதா, இல்லை, தன் அத்தானுக்காக அழுவதா என்று புரியாமல் அவளும் சேர்ந்து அழுத்தாள்.

“ப்ளீஸ் அத்தான்... ப்ளீஸ்... அக்காவுக்கு ஒன்றுமாகாது... உங்களை விட்டு அவர்கள் எங்கும் போக மாட்டார்கள்... ப்ளீஸ் அத்தான்...

அழாதீர்கள்...” என்று அவனுடைய முதுகைத் தட்டிக்கொடுக்க மட்டும்தான் அவளால் முடிந்தது. ஆனால் அவனோ,

“மகிம்மா... ஏம்மா இப்படி செய்தாய்... நீ வருவாய் என்று முழுதாக நம்பினேனே... நீ சத்தியம் வேறு செய்தாயே... நீ கூட பொய்த்துப்போவாயா... நீ இல்லாமல்... நான்... நான் என்னடி செய்வேன்... ஏன்டி இப்படி செய்தாய்...” என்று வாய் விட்டுக் கதறியவனை கொஞ்ச நேரம் அப்படியே விட்டனர்.
அழுது கரைந்தாலாவது மனதிலிருக்கும் பாரம் கரைந்து போகுமே. கொஞ்ச நேரம் அப்படியே இருந்தவன், அடுத்து என்ன சொல்வது, என்ன செய்வது என்று தெரியாமல் எழுந்தான். குறுக்கும் நெடுக்குமாக அந்த அறைக்குள் நடைபயின்றான். அவனுக்கு எப்படித் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது என்று புரியவில்லை.

மீண்டும் திரும்பி வைத்தியரைப் பார்த்தவன்,

“ஐ கான்ட் லிவ் வித்தவுட் ஹர்... லிசின் டு மி டாக்டர்... ஐ நீட் மை வைஃப். நீங்கள் என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது... என் மனைவி எனக்கு வேண்டும்... அவளுக்கு ஏதாவது ஒன்று நடந்தால்... ஐ கில் மை செல்ஃப்... யெஸ் ஐ வில் டு தட்...” என்று அவன் உறுதியாகக் கூற அங்கிருந்தவர்கள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தனர்.

“அத்தான்... என்ன பேசுகிறீர்கள்...” என்றாள் தேவகி பதட்டத்துடன்.

“யெஸ்... ஐ வில் டு தட்... அவள் இல்லாத வாழ்க்கையும், ஆக்சிஜன் இல்லத உலகமும் எனக்கு ஒன்றுதான். அவள் இல்லாது சித்திரவதையை அனுபவிப்பதை விட... இது எவ்வளவோ மேல்...” என்று கூறியவனை அங்கிருந்தவர்கள் பயத்துடன் பார்த்தனர்.

அவனுடைய உணர்வு புரிந்தது. அவன் இப்போது ஹைப்பர் டென்ஷனில் நிற்பதும் தெரிந்தது. இப்போது அவனுடைய உணர்வுகள் தழும்பி நிற்கிற வேளையில் எதையும் கூறி ஆறுதல் படுத்த முடியாது என்பதும் தெரிந்தது.

“லிசின் டு மி மிஸ்டர் அநேகாத்மன். இப்போதைக்கு உங்கள் மனைவிக்கு ஒன்றுமே இல்லை. அவர்கள் விழித்தெழுவதற்கு சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கிறது. உங்கள் நம்பிக்கை அவர்களைக் கட்டாயம் மீட்டு வரும். அதனால் அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதீர்கள்...” என்றார் டாக்டர் பதட்டமாக.

அநேகாத்மனின் முகத்தில் இப்போது தெளிவு வந்திருந்தது. அமைதியாக வைத்தியரைப் பார்த்தவன், "பயப்படவேண்டியதில்லை டாக்டர்... என்னுடைய மனைவி உயிரோடு இருக்கும் வரைக்கும் என்னால் இருக்க முடியும்..." என்றவன் வலித்த இதயத்தை வருடிக் கொடுப்பவன் போன்று இடது மார்பைத் தடவிவிட்டான்.

"நான் என் மனைவியைப் பார்க்க முடியுமா டாக்டர்..."

"யெஸ்... பட் இப்போது நீங்கள் அதிக எமோஷனலாக இருக்கிறீர்கள்... அவர் நிலையைப் பார்த்தால், மீண்டும் நீங்கள் உங்கள் நிலையை இழக்க நேரிடும்... அது அவ்வளவு நல்லதில்லையே..." என்று வைத்தியர் தயங்க, இவன் மெல்லியதாக நகைத்தான்.

"ஐ ஆம் ஓக்கே நவ் டாக்டர்... ஐ வோன்ட் டு சீ ஹர்..." என்றான் அதுதான் முடிவு என்பதுபோல.

"ஓக்கே... பட் பிகேவ் யுவர் செல்ஃப்... ஒரு வேளை நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டை இழந்தால், உங்கள் அனுமதியின்றியே வெளியேற்றப்படுவீர்கள்..." என்கிற எச்சரிக்கையுடன் அவர் அனுமதி வழங்க தேவகியையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

சர்வமகிக்கு தலை மொட்டையடிக்கப்பட்டிருந்தது. தலையிலிருந்து எங்கே எங்கேயோவெல்லாம் அடி எது நுணி எது என்று தெரியாமல் சிறியதும், பெரியதுமாகப் பிளாஸ்டிக் குழாய்கள் போய்க்கொண்டிருந்தன. பார்க்கவே பயமாக இருந்தது.

இரண்டெட்டில், அவளை நெருங்கியவன் பெரிதும் துடித்துப்போனான். அடிபட்ட வலியுடன், தன்னவளின் தலை முதல் பாதம் வரை ஏக்கத்துடன் பார்த்தான்.

"ஓ மை ஏஞ்சல்... உன்னை இப்படி என்னால் பார்க்க முடியவில்லையே..." என்று தவித்தவன், அவளுடைய நெற்றியையும், முகத்தையும் மென்மையாக வருடிக்கொடுத்தான்.

அதே நேரம் ஒரு நார்ஸ் உள்ளே வந்து ஒருவர்தான் இருக்கமுடியும் என்று அறிவுறுத்த, தேவகி தானாகவே விடைபெற்றாள்.

கொஞ்சம் பொறுத்து அவனும் அங்கே நிற்கமுடியாது என்று தாதி அறிவுறுத்த அவன் மறுப்பாகத் தலையாட்டினான்.

“நோ... நான் எங்கும் போக மாட்டேன்... நான் இங்கே என் மனைவியின் அருகேதான் இருக்கப்போகிறேன்...” என்றான் பிடிவாதமாக.

“நோ மிஸ்டர் அநேகாத்மன்... நீங்கள் இங்கே தங்க முடியாது...” என்றார் தாதி அவனுக்குப் புரிய வைக்கும் முகமாக.

“அதற்கு உங்கள் அனுமதி தேவையில்லை... யாரை வேண்டுமானாலும் நீங்கள் அழைக்கலாம். யு கான் கால் ஆர்மி ஃபோஸ் இஃப் யு வோன்ட்... ஐ டோன்ட் கெயர்... என் மனைவி விழிகளைத் திறக்கும் வரை நான் எங்கும் போவதாக இல்லை...” என்றவன் அவளுடன் என்ன பேச்சு என்பது போலத் தன் மனைவியின் முகத்தை வெறித்துப் பார்த்தான்.

ஊசி ஏற்றப்பட்டிருந்த கரத்தைப் பற்றி எங்கே அவளுக்கு வலித்துவிடுமோ என்று அஞ்சியவன் போன்று மென்மையாகப் பற்றித் தன் கரத்தில் வைத்துக்கொண்டான்.

அவன் சொல்வதைக் கேட்கும் ரகம் போலில்லை என்பதை உணர்ந்த நார்ஸ் உடனே டாக்டருக்கு இதைப் பற்றித் தெரிவிக்க, அவரும் அவனை அவன் போக்கிலேயே விடுமாறு கூறிவிட்டார்.

டாக்டரே சொன்ன பிறகு மறுப்பதற்கு அவள் யார். அவனுடன் விவாதித்துப் பயன் இல்லை என்பதை அவர் ஏற்கெனவே அறிந்துகொண்டாரோ! அல்லது அவள் இருக்கப்போவது இன்னும் சொற்ப நாட்களுக்குத்தான் என்று நினைத்தாரோ...?

அநேகாத்மன் சர்வமகியின் அருகேயே இரண்டு நாட்களும் தவம் கிடந்தான். அவன் சாப்பிட்டானா தண்ணீர் குடித்தானா என்று யாருக்குமே தெரியாது. இயற்கைத் தேவைகளுக்காக மட்டும் அவளை விட்டுப் பிரிந்தான் அன்றி, அவன் அந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை. அவனுடைய பார்வைகள் இரண்டும் சர்வமகியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. அவனுடைய கரங்கள் அவளுடைய கரங்களைப் பற்றிக்கொண்டே இருந்தன.

இரண்டு நாட்கள் கடந்தும் அவளிடம் மாற்றமில்லை என்பதும், வைத்தயர்கள் யோசிக்கத் தொடங்கினர். ஆவனிடம் சென்ற செய்தியைக் கூறவும் பயமாக இருந்தது. இரண்ட நாட்களாக எதுவும் உண்ணாமல், உறங்காமல் இருந்த அநேகாத்மனைக் கண்டு கலங்கிப்போயினர் அனைவரும்.
தன் அத்தானின் நிலை கண்டு தேவகி பெரிதும் கலங்கிப்போனாள்.

அவனை எப்படியாவது சாப்பிட வைக்கவேண்டுமே, இலகுவாக சாப்பிடக் கூடியது போல, சூப் செய்துகொண்டு வந்தவள், அநேகாத்மனை உண்ணுமாறு வேண்ட அவன் மறுத்தான்.

“ப்ளீஸ் அத்தான்... அக்கா எழுந்ததும், நீங்கள் சாப்பிடவில்லை என்பதை அறிந்தால், இன்னும் துடித்துப்போவாள்... அவளுக்காகவாவது சாப்பிடுங்கள். என்று கூற,

“என் கண்ணம்மா எழுந்துவிடுவாள் அல்லவா?” என்றான் அவன் பெரும் ஏக்கத்துடன்.
தன் விம்மலை அடக்கியவளாக, சூப் கொண்டு வந்த சாப்பாட்டுப் பாத்திரத்தைத் திறந்து அதைக் கரைத்து கரண்டியில் எடுத்தவாறு,

“நிச்சயமாக அத்தான்... இன்னும் இரண்டு நாட்களில் அக்கா எழுந்துவிடுவாள்... வேண்டுமானால் பாருங்கள்... உங்கள் அன்பு அவளை மீட்டு வரும்...” என்று உறுதி கூற, விழிகள் நிறைந்த கண்ணீருடன் தேவகியை அவன் பார்க்க, அதில் துடித்துப் போனவளாக,

“ப்ளீஸ் அத்தான்... இதைக் குடியுங்கள் என்று அவள் ஊட்ட மறுக்காது வாங்கினான் அனேகாத்மன். இல்லை என்றால் சர்வமகி வருந்துவாளே.

இப்படி சகோதரியைச் சாட்டி, ஏதோ கொஞ்சத்தையாவது தேவகியால் அநேகாத்மனுக்கு உணவு கொடுக்க முடிந்தது. அது தவிர்த்து இரவு பகல் எந்த நேரமும் அவன் அவளை விட்டு விலகாமலே காவல் காத்தான். உள் மனது கடவுளிடம் மன்றாடிக்கொண்டே இருந்தது.

நான்காம் நாள்... இரவு அநேகாத்மன் சர்வமகியையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பிடியிலிருந்த அவள் இடது கரத்தின் விரல்களில் மெல்லிய அசைவு. ஆரம்பத்தில் அதை அநேகாத்மன் உணரவில்லை. இரண்டாம் முறை அசைந்தபோது, பதட்டத்துடன் சர்வமகியைப் பார்த்தான். அவள் முகத்தில் எந்த அசைவும் இருக்கவில்லை.

தன் பிரமையாக இருக்கும் என்று எண்ணியவன் அவள் புறம் குனிந்து தன் வலது கரத்தால் அவள் நெற்றியை மென்மையாக வருடினான்.

வழமைபோல, அவளிடம் மெல்லிய குரலில் மன்றாடினான். “மகிம்மா... உன்னுடைய அபிதன் உன்னைக் காணவில்லை என்று ஒரே அழுகை தெரியுமா? பிரதீபன்... அவன் இரண்டு நாட்களாக சாப்பிடவேயில்லை... நீ எழுந்து வந்தால்தான் சாப்பிடுவார்களாம்... மாதவி, தேவகி இரண்டு

பேரும் உன்னையே எண்ணி உறங்காமல், உண்ணாமல் இருக்கிறார்கள்... அவர்களைக் கண்டிக்க நீ வந்தால்தான் முடியும்... எழுந்திரிடா...” என்று அவன் கூற, அவளிடம் அசைவில்லை.

“மகி... விழிகளைத் திறந்து பாரம்மா... நீ என்னிடம் திரும்பி வருவேன் என்று சத்தியம் செய்திருக்கிறாய்... என்னை ஏமாற்றிவிடாதே... நீ இல்லை என்றால் நானும் இல்லையடா... நான் வெறும் பிணம்... உன் சகோதரர்களுக்காக இந்த உலகத்தில் இருக்கலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால்... நீயில்லாமல்... என்னால் முடியாது கண்ணம்மா... ஐ கான்ட்...” என்றவன் பெரும் மூச்சொன்றை எடுத்துவிட்டவாறு, தன் தலையை வேதனையுடன் சுவரில் சாய்த்தான். பின் ஏங்கிய குரலில்,

“நான் பார்க்கிற காட்சிகள் யாவும் நீதான்டா நிறைந்திருக்கிறாய்... நீ அருகே இருக்கும்பொது அழகாக இருந்தவையெல்லாம், இப்போ... வெறும் கல்லும் தூணுமாகத்தான் எனக்குத் தெரிகிறது... ப்ளீஸ் டா... என்னிடம் திரும்பி வந்துவிடு... இதற்கு மேல் என்னால் தாங்க முடியாதும்மா...” என்றவனின் குரல் கம்மிப்போயிருந்தது.

“இதோ பார்... நீ திரும்ப வரவில்லையென்றால் நானும் உன்னுடன் வந்துவிடுவேன்... சத்தியமாக வந்துவிடுவேன் கண்ணம்மா... அப்படியே துர் அதிர்ஷ்ட வசமாக நான் பிழைத்து உயிரோடு திரும்ப வந்தாலும்... என்னிடம் எந்த உணர்வும் இருக்காது... மகி... நீ இருந்தால் மட்டுமே என்னால் இந்த உலகத்தைப் பார்க்கமுடியும். இந்த உலகத்தை ரசிக்கமுடியும்... கண்ணம்மா... ப்ளீஸ்டா... என்னிடம் வந்துவிடம்மா... எனக்காக...” என்றவன் தொடர்ந்து, அவள் கரத்தைத் தூக்கித் தன் உதட்டில் அழுத்தி முத்தமிட்டான்.

தொடரும்...

நிலவு 51

அவள் புறங்கரத்தில் அழுத்த முத்தம் பதித்தவன், பின் உள்ளம் கையில் தன் இதழ்களை வைத்து அழுத்த, அந்தக் கணம், அவள் விரல்களில் திடீர் என்று சூடு படற, அநேகாத்மன் விலுக் என்று நிமிர்ந்தான். அவள் முகத்தில் தன் கரத்தைப் பதித்துப் பரிசோதித்தான்.

அவளிடம் திடீர் என்று தோன்றிய சூடு கானாமல் போக, வேகமாக

இருக்கையை விட்டு எழுந்தவன், சர்வமகியின் முகத்தைத் தன் கரத்தில் தாங்கியவனாக,

“ஹேய்... மகிம்மா... நீ வெட்கப்படுகிறாய்... நீ வெட்கப்படுகிறாய்...” என்று கிட்டத்தட்ட கத்தியவனின் விழிகளிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் வடிந்து அவள் கன்னங்களில் விழ, அந்தக் கணம், அவள் விழிகளில் மெல்லிய அசைவு.

அவள் விழிகளின் மெல்லிய அசைவை உணர்ந்துகொண்ட அநேகாத்மன், நம்ப முடியாதவனாக மீண்டும் சர்வமகியின் முகத்தைப் பார்த்தான்.

இப்போது அங்கே எந்த மாற்றமும் இருக்கவில்லை. ஆனாலும், அவள் விரல்களில் அவன் முத்தமிட்டபோது, அவள் உடலில் திடீர் என்று தோன்றி மறைந்த வெம்மை, அவள் உள்ளுணர்வின் விழிப்பை அவனுக்குப் பறைசாற்ற, மீண்டும் அவசரமாக அவள் உள்ளங்கையைத் தன் உதட்டில் அழுந்தப் பொருத்தி, நீண்ட ஒரு முத்தத்தைப் பதித்தான்.

மறு கணம், அவள் உடலில் சூடு படிந்து விலகியது. இப்போது, அவள் முகத்திலும், மெல்லிய சிவப்பு படர்ந்து மறைய, கூடவே, விரல்களிலும் மெல்லிய அசைவு. அதை உணர்ந்து கொண்டவனாக, உடல் நடுங்க, உள்ளம் உருக, அருகேயிருந்த பெல்லை அழுத்தினான்.

அடுத்த நிமிடம் ஒரு தாதி உள்ளே வந்து நின்றாள். அவன் விஷயத்தைச் சொல்ல,

“உங்கள் பிரமையாக இருக்கும் மிஸ்டர் அநேகாத்மன்...” என்றாள் புன்னகையுடன்.

“பிரமையும் இல்லை, மண்ணாங்கட்டியும் இல்லை... ப்ளீஸ் செக் ஹெர்... தரோளி... ஷி இஸ் வேக்கிங்... ஐ கான் ஃபீல் ஹெர்...” என்று அவன் கத்தினான். அவன் சத்தத்தில் நார்ஸ் சற்றுப் பயந்துதான் போனார்.

“ஓக்கே... ஓக்கே... கூல் டவுன்... ஐ செக் ஹர்...” என்றவள் மொனிட்டரை ஏறிட்டாள். மொனிட்டரில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

“நான் சொன்னேன் அல்லவா... அவர்களிடம் எந்த மாற்றமும் இல்லை... மானிடரைப் பாருங்கள்...” என்று சிறு கோபத்துடன் அந்தத் தாதி கூறிவிட்டுச் செல்ல முற்பட,

“மகிம்மா... ஐ லவ்யு...” என்றவாறு மீண்டும், அவள் உள்ளகையில் தன் உதட்டைப் பதிக்க, திடீர் என்று மொனிட்டரில் சிறிய மாற்றம் தோன்றி மறைந்தது. அலட்சியமாகப் பார்த்த நர்சின் விழிகளிலும் ஆச்சரியம். மீண்டும் கூர்மையாகப் பார்த்தார்.

மீண்டும் மெல்லிய அசைவு. உடனேயே நேர்ஸ் வைத்தியரை அழைக்க அவரும் உடனே வந்துவிட்டார்.
நடந்த விஷயத்தைக் கூற, அவரும் சர்வமகியை நன்றாகப் பரிசோதித்தார். இப்போது சர்வமகியிடம் சற்றுப் பெரிய அசைவு வந்து மறைந்தது. அதைத் தொடர்ந்து வலிப்புப் போல அவள் உடல் உதறத் தொடங்கியது.

அநேகாத்மன் உண்மையில் பயந்துபோனான்.

“டாக்டர் வட் இஸ் ஹப்பினிங் ஹியர்... அவளை என்ன செய்கிறீர்கள்... எதற்காக இப்படி அவள் உதறுகிறாள்...” என்று சத்தம் போட்டான்.

“நத்திங் மிஸ்டர் அநேகாத்மன். இப்போது நீங்கள் பதட்டப் பட்டீர்கள் என்றால் எங்களால் உங்கள் மனைவிக்கு ஒழுங்காக ட்ரீட்மன்ட் கொடுக்க முடியாது... உங்களுக்கு அமைதியாக இருக்க முடியவில்லை என்றால் வெளியே செல்லுங்கள்...” என்று கடுமையாகக் கூற அநேகாத்மன் சிரமப்பட்டுத் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

கிட்டத்தட்ட அரை மணி நேரப் போராட்டத்தின் பின் சர்வமகி அமைதியானாள். முகம் முழுவதும் வியர்வையுடன் எழுந்த டாக்டர் அநேகாத்மனின் அருகே வந்தார்.

அநேகாத்மனோ, உயிரைத் தொலைத்தவனாக, அந்தக் காட்சியை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் வைத்தியர் அருகே வந்ததைக் கூட உணரவில்லை.

“மிஸ்டர் அநேகாத்மன்... மிஸ்டர் அநேகாத்மன்...” என்று இருமுறை அழைத்த பின்புதான் அவன் சுயநினைவிற்கே வந்தான். திடுக்கிட்டு நிமிர்ந்து பார்க்க,

“உங்கள் வேண்டுதல் வீண் போகவில்லை... உங்கள் மனைவி பேர்ஃபக்ட்லி ஆல் ரைட்... இனி சீக்கிரம் விழித்துக் கொள்வார்கள்... நாளைவரைக்கும் தீவிர கவனிப்பில் இருக்கட்டும். அதற்குப் பிறகும் அவர்களின் இதயத்துடிப்பு எல்லாம் நன்றாக இருந்தால் லைஃப்

சப்போர்ட்டைக் எடுத்து விடலாம். அது வரை அவர்கள் இப்படியே இருக்கட்டும்" என்று புனனகையுடன் கூற இவன் நம்பமாட்டாதவனாக, வைத்தியரைப் பார்த்தான்.

« அப்போ... எதற்கு அவள் இப்படி... உ... உதறினாள்... » என்றாள் வெளுறிய முகத்துடன்.

« அதுதான் இயற்கை மிஸ்டர் அநேகாத்மன். உடம்பு தன்னைத்தானே ரீசெட் பண்ணுகிறது. அதன் பாதிப்புத்தான் இது... இனி எல்லாம் சரியாகிவிடும்... » என்று தட்டிக் கொடுக்க,

"ஓ காட்... எனக்கு... எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை... தாங்க் யு தாங்க் யு சோ மச்..." என்றவனின் விழிகள் கலங்கி வழிந்தன.

" டோன்ட் சே தாட் மிஸ்டர் அநேகாத்மன். சிகிச்சை செய்தது நாங்களாக இருந்தாலும், அவர்களை உயிரோடு மீட்டு வந்தது, நீங்கள்... நீங்கள் மட்டும்தான். உங்களை கணவனாக அடைய உங்கள் மனைவி மிகவும் புண்ணியம் செய்திருக்கவேண்டும் மிஸ்டர் அநேகாத்மன்..." என்றார் வைத்தியர் பெருமையுடன்.

"நோ டாக்டர்... அவளை மனைவியாக அடைய நான்தான் மிகவும் புண்ணியம் செய்திருக்கவேண்டும்..." என்றவன் வைத்தியரின் கரத்தைப் பற்றினான்.

"டாக்டர்... நான் உங்களிடம் கடுமையாக நடந்துகொண்டேன்... ஐ ஆம் சாரி எனக்கு என் உலகத்தையே திருப்பிக் கொடுத்திருக்கிறீர்கள்... அதற்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்..." என்றான் கலங்கிய குரலில்.

"நோ மிஸ்டர் அநேகாத்மன். நான் என்னுடைய கடமையைத்தானே செய்தேன்... தவிர உங்கள் உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது..." என்றவர் அநேகாத்மனை ஏறிட்டார்.

"நான் ஒரு டாக்டராக ஒன்று சொல்லலாமா?" என்றார் கனிவுடன்.

"சொல்லுங்கள் டாக்டர்..."

"ஒரு உயிரின் இழப்பால் எதுவுமே அழிந்துவிடுவதில்லை மிஸ்டர் அநேகாத்மன். வாழ்க்கையில் எதையும் ஏற்றுக்கொள்ளப் பழகவேண்டும். உங்கள் மனைவியின் மீது நீங்கள் வைத்திருக்கும் காதலை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால்... ஒரு வேளை...

அவர்களுக்கு ஒன்று என்றால் எல்லாமே அழிந்துவிட்டது என்று நம்மை அழிக்க முயல்வது... நல்லதல்ல...” என்றவரை வேதனையுடன் பார்த்தான் அநேகாத்மன்.

“என் மனைவிக்கு ஏதாவது ஒன்று நடந்திருந்தால்... யாருடைய உலகம் அழியாவிட்டாலும், என்னுடைய உலகம் நிச்சயமாக அழிந்திருக்கும் டாக்டர்... அவள் இல்லாத வாழ்வில் எனக்கு மட்டும் என்ன இருக்கமுடியும்... அதன் பிறகு நான் உணர்ச்சியற்ற பிண்டம் மட்டும்தான்...” என்றவனை வேதனையுடன் பார்த்தார் டாக்டர்.

“உண்மையாக உங்களை நினைக்கும் போது ஆச்சரியமாகவும், அதே நேரம் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது... இத்தனை அருமையான கணவனைப் பெற்ற உங்கள் மனைவி நிச்சயம் கொடுத்து வைத்தவர்தான்...”

“இல்லை டாக்டர்... என்னை இப்படி மாற்றியதே என் மனைவிதான்...” என்றான் மெல்லிய புன்னகையுடன்.

“நீங்கள் லாயராச்சே... பேசி ஜெயிக்கமுடியுமா? வாழ்த்துக்கள்... மிஸ்டர் அநேகாத்மன்...” என்று கூறிய வைத்தியர் அவன் கரத்தை மீண்டும் ஒரு முறை பற்றிக் குலுக்கிவிட்டு விடைபெற்றார்.

அநேகாத்மன் எல்லையில்லா காதலுடன் தன் மனைவியை நெருங்கினான். அவள் இன்னும் மயக்கத்தில்தான் இருந்தாள்.

“மகிம்மா... என் மகிம்மா... மை ஏஞ்சல்... மை லவ்... தாங்கஸ்டி... நீ மீண்டும் என்னிடம் வந்ததற்கு நன்றிம்மா...” என்றவன் அவள் தலை முதல், பாதம் வரை அளவில்லா காதலுடன் வருடிக் கொடுக்க, அவன் மனையாளின் உடலில் வெம்மை படர்ந்து மறைய, இவன் முகத்தில் அளவில்லா நிம்மதியும், மகிழ்ச்சியும் படர்ந்தது.

மறு நாள் அநேகாத்மன் இருக்கையில் சாய்ந்தமர்ந்திருந்தான். அவனுடைய கை சர்வமகியின் கரத்தைப் பற்றிக்கொண்டே இருந்தது.

ஏதோ ஒரு சக்தி அவனை உந்த விழிகளை மூடியிருந்தவன் திறந்து, சர்வமகியின் முகத்தைப் பார்த்தான். பார்த்தவன் திடுக்கிட்டான்.

அவள் விழி மலர்த்தி அவனைத்தான் பார்த்துக்கொண்டிருந்தாள். வேகமாக அவள் புறம் குனிந்தவன் அவள் முடியற்று இருந்த தலையை வருடிக் கொடுத்தவாறு,

“கண்ணம்மா... யு ஆர் சே◌ஃப்... நவ்... டூ யு ஹியர் மி...? யு ஆர் சே◌ஃப்... உனக்கு ஒன்றுமில்லை...” என்று தவிப்புடன் கூறியவன் அது வரை நேரமும் அடக்கிவைத்திருந்த தவிப்புக் கரைந்து போக அவள் கழுத்து வளைவில் தன் முகத்தைப் புதைத்துக் கதறினான்.

“நான் எப்படியெல்லாம் பயந்துபோனேன் தெரியுமா... என் உயிரே போய்விட்டது கண்ணம்மா... எங்கே நான் உன்னை முழுதாக இழந்துவிடுவேனோ என்று எப்படித் தவித்துப் போனேன் தெரியுமா... தாங்க் காட்... நீ என்னிடம் வந்துவிட்டாய்... நான் என்ன தவறு செய்தாலும், அதற்குத் தண்டனையாக எதை வேண்டுமானாலும் கொடு... என்னைக் கொல்லவேண்டுமானாலும் கொல்லு... ஆனால்... இப்படி வேண்டாம்டி... என்னால் உன்னை இப்படிப் பார்க்க முடியாது... இந்த வேதனை ஏழு ஜென்மத்திற்கும் போதும்... உயிரோடே என்னை எரித்துவிட்டாய் கண்ணம்மா...” என்றவன் எழுந்து, தன் கண்களில் வழிந்த கண்ணீரைக் கூடத் துடைக்காமல், டியூபால் மூடியிருந்த இடங்கள் தவிர முகத்தின் மற்றைய எல்லா இடங்களிலும் தன்னையும் மறந்து முத்தத்தால் அபிஷேகம் செய்தான். இறுதியில் அவள் உதட்டின் பக்கத்தில் தன் உதட்டைப் பொருத்தி விடுவித்தவனின் முகத்தில் இப்போது தெழிவு பிறந்திருந்தது.

அவள் விழிகளிலும், கண்ணீர் வழிந்து கொண்டிருக்க, தான் அழுவதால்தான் அவளும் அழுகிறாள் என்பதைப் புரிந்துகொண்டவன், வேகமாகத் தன் விழிகளில் வழிந்த கண்ணீரைக் கரங்களால் அழுந்தத் துடைத்து எடுத்தவன், சிரமப்பட்டு உதட்டில் புன்னகையைத் தேக்கி,

“ஷ்... நான்... அழவில்லைம்மா... சும்மா... இப்போ பார்... ஐ ஆம் ஓக்கே... » என்றவன், பின் அவள் கண்களையும் துடைத்து, « இனி இந்த விழிகளிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரக்கூடாது... அப்படி வந்தால், நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது...” என்று அவன் மிரட்டுவது போலக் கூறினாலும், இறுதியில் அவனுடைய உதடுகளும் அழுகையில் நடுங்கத்தான் செய்தன.

நிலவு 52

அடுத்து காரியங்கள் கட கட என்று நடந்தது. வைத்தியர் வந்தார் பரிசோதித்தார். லை◌ஃப் சப்போர்ட் நீக்கப்பட்டது.

ஆரம்பத்தில் சர்வமகி எல்லோரையும் அடையாளம் காணச் சிரமப்பட்டாள்.

வைத்தியர் அது சாதாரணம் விரைவாக பழைய நிலைக்கு வந்துவிடுவார் என்று கூறிவிட்டார்.

ஐசியுவில் இருந்தவளை சாதாரண வோர்டிற்கு மாற்றினார்கள். அநேகாத்மன் பிடிவாதமாக சர்வமகிக்கு வேண்டிய சேவைகளைத் தானே செய்தான். அவளைத் தன் மீது சாய்த்து மெதுவாக நடத்திக் கூட்டிச் செல்வதில் இருந்து, அவளை கழிவறை அழைத்துச் செல்வது வரை அவனே செய்தான்.

சர்வமகி மெது மெதுவாக தன்னிலை பெற்று எல்லோரையும் புரிந்துகொள்ளத் தொடங்கினாள். யாரைப் புரிந்துகொள்ளாவிட்டாலும், அநேகாத்மனை உடனேயே புரிந்துகொண்டாள். தன் கணவன் என்பது வரை நன்றாகத் தெரிந்தது. தன் சகோதரர்களையும் இனம் கண்டுகொண்டாள். ஆனால் சம்பவங்கள்தான் அவளுக்குத் தெளிவாக நினைவு வரவில்லை.

அதுவும் விரைவாகச் சரிவந்துவிடும் என்று வைத்தியர் சொன்னதால் இவர்கள் அமைதி காத்தனர். சர்வமகி ஓரளவு திடம் பெற கிட்டத்தட்ட இரண்டு கிழமைகள் எடுத்தன. அந்த இரு கிழமைகளும், அநேகாத்மன் சர்வமகியே கதியென்று இருந்தான்.

அதன் பின், சர்வமகி ஓரளவு திடம் பெற்றதும் தேவகியிடம் சற்று நேரத்திற்கு சர்வமகியை ஒப்படைத்து விட்டுக் கொஞ்ச நேரம் வீட்டிற்குச் சென்று வந்தான் அநேகாத்மன். அதுவும் இரண்டு மணி நேரங்கள் மட்டும்தான். அந்த இரண்டு மணி நேரங்களில் மீண்டும் சர்வமகியைக் காணும்வரை இவன் நிலை பரிதாபமாக இருக்கும்.

அன்றும் அப்படித்தான், சர்வமகியை தேவகியிடம் ஒப்படைத்துவிட்டுப் பல முறை கவனம் என்று எச்சரித்து விட்டுத் தன்னைத் தொடர்ந்து வந்த பாதுகாவலர்களைச் சர்வமகிக்குப் பாதுகாப்பாக இருக்குமாறு கட்டளையிட்டு விட்டு வெளியே வந்தவனின் கைபேசியில் யாரோ அழைத்தனர்.

சர்வமகியின் நினைவிலேயே சென்றுகொண்டிருந்தவன், அழைத்தது யார் என்று கவனிக்காமல் கைபேசியை எடுத்துக் காதில் பொருத்த, மறுபக்கம் எந்த சத்தமும் இல்லாமல் அமைதியாக இருந்தது. இவன் இரு முறை ஹலோ என்று அழைத்துப் பார்த்தும் மறு முறை எதுவும் கூறாமல் இருக்க எரிச்சலுடன் அதை அணைத்து விட்டுத் தன் எலக்ட்ரிக் காரில் ஏறினான். ஏறிக் காரை உயிர்ப்பித்து பிரதான பாதையை அடைந்தவன், அடுத்து, ஃப்ரீ வே 401 எக்சிட் எடுத்துக் காரை 120 KM/h இல் தன் வீடு நோக்கி செலுத்தினான். மீண்டும் அவனுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

அவனுடைய கைபேசி தானாகக் காரில் உள்ள ப்ளூ டூத்துடன் இணைய, இவன் ஹலோ என்றான்.
மீண்டும் அமைதி. பின் « ஹாய்… அநேகாத்மன்… இட்ஸ் மி… » என்றான் மறுபக்கமிருந்தவன். அந்தக் குரலை உடனே இனம் கண்டுகொண்டான் அநேகாத்மன்.

« ஹேய்… தீரன்… ஹவ் ஆர் யு… »

« ஐ ஆம் குட்… வட் எபவுட் யூ யங் மான்… » என்றார் அந்தத் தீரன் சற்றுக் கிண்டலாக.

« எனக்கென்ன… ஐ ஆம் சோ ஹப்பி… அதுதான் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நீ ஜெயிலுக்குப் போகப்போகிறாயே…? » என்று நக்கலாகக் கூறினான் அநேகாத்மன். மறு புறம் சற்று அமைதி காக்க.

« ஆர் யு தெயர்.. மிஸ்டர் தீரன்… »

« யெஸ்… யங் மான்… உன்னை நினைத்தால் வியக்காமல் இருக்க முடியவில்லை. 24 மணி நேரத்தில் வாசுதேவன் குற்றவாளி அல்ல என்பதை உலகமறியச் செய்து விட்டாயே… »

« ஓ… தாங்க் யு மிஸ்டர் தீரன்… என்னை அதிகமாகப் புகழாதீர்கள்… புகழ்ச்சி எனக்கு பிடிக்காதே… » என்றான் அநேகாத்மன் அதே கிண்டல் சற்றும் குறையாமல்.

« ஆனால் ஒரு தப்பு செய்துவிட்டாய்… »

« அப்படியா… என்ன மிஸ்டர் தீரன்… »

« என்னைப் பற்றி முழுவதும் தெரியாமல் களத்தில் இறங்கிவிட்டாய்… »

« இஸ் இட்… » என்றவன் மெல்லியதாக நகைக்க,

« நகைக்கிறாயா…? நன்றாக நகைத்துக்கொள். என்னைப் பற்றிய மூழு செய்தியையும் பரப்பிவிட்டாய் அல்லவா? என் பின் புலம், நான் செய்யாத கொலை, செய்யாத தப்பு இவற்றைக் கூட நான் செய்ததாக உலகம் முழுதும் நம்பும்படி அறிவித்துவிட்டாயே… » என்றவரின் குரலில் அடக்கிய கோபம் இருக்க,

« யெஸ் மிஸ்டர் தீரன். நீங்கள் செய்த கொலைகள், செய்வித்த கொலைகள், இந்த நிலைக்கு வருவதற்கு எதையெல்லாம் மிதித்து ஏறி வந்தீர்கள்… என் மாமனார் வாசுதேவனை எப்படி சிக்க வைத்தீர்கள்… உங்கள் தாய் நாட்டில் நீங்கள் செய்த மன்னிக்க முடியா குற்றங்கள், கூடவே, நீங்கள் செய்து வந்த பாலியல் குற்றங்கள்… அனைத்தையும் உலகத்தில் உள்ள அனைத்து செய்தித் தாள்களிலும் பிரசுரிக்குமாறு செய்துவிட்டேன்… என்ன உண்மையில் நீங்கள் பாலியல் குற்றங்கள்

செய்யவில்லைதான்... ஆனால் உங்கள் மீது கொலைக் குற்றத்துடன் சேர்த்து இதையும் சேர்த்து போட்டால் கொஞ்சம் தூக்கலாக சுவாரசியமாக இருக்குமே என்று, கொஞ்சமாகப் பணத்தைச் செலவழித்தேன்... சும்மா சொல்லக் கூடாது, உங்கள் செயலாளர் ஷெரோன்... கோடு தான் போட்டேன்... அவள் ரோடே போட்டு விட்டாள்... கொடுத்த பணத்திற்கு மேலாகவே நடித்தார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்... ஆனாலும் நீங்கள் எனக்கு நன்றி சொல்லவேண்டும். ஏன் என்றால் இப்போது நீங்கள் உலகப் புகழ் பெற்றிருப்பதற்குக் காரணம் நான்தான்... » என்று கிண்டலாகக் கூற சற்று நேரம் அமைதி காத்த தீரன் பின்,

"தவறு செய்துவிட்டாய் அநேகாத்மன்..." என்று தீரன் மறுபக்கம் சீற,

"யார் நானா... ஹா ஹா... என்ன தைரியம் இருந்தால் என் தந்தையைக் கொன்றிருப்பாய்... எங்கள் மீது கைவைத்தால் என்னவாகும் என்று உனக்குத் தெரியவேண்டாம்... உன் கூட்டாளி நடராஜனுக்கு வைத்து செய்தது போல உனக்கும் செய்திருக்கவேண்டும்... பட்... நீ அத்தனை சுலபத்தில் சாகக் கூடாது... அணு அணுவாக சித்திரவதைப் பட்டுச் சாகவேண்டும் தீரன்... அதனால்தான் நீ செய்த பழி, செய்யாத பழி அனைத்தையும் உன் தலையில் போட்டேன்... இனி காலம் முழுவதும் நீ ஜெயிலில் இருக்க வேண்டியதுதான்... எனக்கு பொலிசில் அதிக நண்பர்கள் இருக்கிறார்கள்... நீ அங்கே கழிக்கும் ஒவ்வொரு கணமும் நீ நரகத்தை அனுபவிக்கவேண்டும்..." என்றான் அநேகாத்மன் அடங்கிய சீற்றத்துடன்.

"எனக்குத் தெரியும்... நான் எச்சரித்தும்... நீ அந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்துவிட்டாய் அல்லவா... அதற்கு நீ அனுபவிக்க வேண்டாம்... ஆ... நான் ஒன்று கேட்க மறந்துவிட்டேனே... உன்னுடைய மனைவி எப்படி இருக்கிறாள் அநேகாத்மன்? அவள் அபாய கட்டத்தைக் கடந்துவிட்டாள் என்று கேள்விப்பட்டேனே... » என்றதும் எந்த வேகத்தில் காரை ஓட்டினானோ, அதே வேகத்தில் தன் காரை ஒரு ஓரமாக பிரேக்கை அழுத்தி நிறுத்தினான் அநேகாத்மன். அவன் நிறுத்திய வேகத்தில் கார் பெரும் ஓசையை எழுப்பி நின்றது.

« ஹேய் பார்த்து மான்... உன் உயிர் எனக்கு மிக முக்கியம்... » என்ற அவனின் கிண்டலில் இவன் பல்லைக் கடித்து,

« என்ன உளறுகிறாய்? » என்று அநேகாத்மன் சீற. மறு பக்கம் பெரும் சிரிப்புக் குரல் கேட்டது. அடுத்து,

« ஹாவ் எ குட் ஜேர்னி... மை போய்... வாய்ப்புக் கிடைத்தால் மீண்டும் சந்திப்போம்» என்று கூறிய தீரன் தன் போனை வைக்க, இவன் எதுவும் செய்ய முடியாது அதிர்ந்து போய் அப்படியே சிலையென நின்றான்.

திடீர் என்று இவனருகே பலத்த சத்தத்துடன் ஒரு கார் செல்ல சுய நினைவுக்கு வந்தவன், தீரனின் எச்சரிக்கை புரிய உள்ளமும் உடலும்

பதறத் தன் காரை மீண்டும் வேகமாக எடுத்து மருத்துவமனை நோக்கிச் செலுத்தினான். செல்லும் போதே, « கால் விக்டர் » என்று தன் காருக்கு கட்டளை இட, அடுத்த நிமிடம், அவனுடைய நண்பர் பொலிஸ் அதிகாரி விக்டருக்கு அழைப்பு சென்றது.

மறு கணம் அவர் எடுக்க,

« விக்டர் ஐ நீட் யுவர் ஹெல்ப்… » என்றவன் நடந்ததைக் கூறி, ஏற்கெனவே சர்வமகிக்கு என்னுடைய பாதுகாவலர்களை அவளுக்குத் துணையாக அங்கே விட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறேன்… இருந்தாலும், அவளுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது… » என்று இவன் பதறியவாறு கூற,

« டோன்ட் வொரி நேகன்… நான் இப்போதே மருத்துவமனைக்கு செல்கிறேன்… » என்று அவர் வாக்குக் கொடுக்க, இவன் நிம்மதியில்லாதவனாகவே, தன் காரின் வேகத்தைக் கூட்டினான்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது. அவனுடைய வேகத்திற்கு இணையாக வந்த இன்னொரு காரின் கண்ணாடி கீழே இறங்கி, அதிலிருந்து துப்பாக்கி ஒன்று அவனை நோக்கி நீண்டது.

சர்வமகியை எண்ணிப் பதறிக்கொண்டு சென்றவனுக்கு, தன்னருகே கார் வந்ததையோ, இல்லை தன்னை நோக்கி துப்பாக்கி நீண்டதையோ இவன் சிறிதும் கவனிக்கவில்லை. திடீர் என்று ஒரு குண்டு இவன் கார் கண்ணடியில் படத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

புல்லட் ப்ரூஃப் கண்ணாடியில் குண்டு பட்டுக் கீழே விழுந்தது. அடுத்து இன்னொரு குண்டு மிண்டும் இவன் கண்ணடியைப் பதம் பார்க்க இப்போதும் எந்த சேதாரமும் இன்றி இவன் தப்பினான்.

அதே வேளை அவர்களின் அடுத்த நோக்கத்தை ஒரு விநாடியில் ஊகித்தவன், திடீர் என்று பிரேக் அடிக்க, அவர்களின் கார் முன்னால் செல்ல இவன் பின்னால் தங்கினான். இப்போது அவர்களின் வேகமும் குறைய, இவன் வேகம் எடுத்து அவர்களை நோக்கிப் பாய்ந்தான். மீண்டும் அவர்களின் துப்பாக்கி அநேகாத்மனின் கார் டயரைக் குறிபார்த்தது.

அடுத்து அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைக் கணப் பொழுதில் பரிந்துகொண்டவன் ,வேகமாகத் தன் காரை நிறுத்த முயல, அதற்கிடையில் அவர்களின் துப்பாக்கிக் குண்டு இவனுடைய கார் டயரில் குறி தப்பாமல் ஏற, பெரும் ஓசையுடன் கார் டயர் வெடிக்கக் கார் அவன் கட்டுப்பாட்டையும் மீறி அங்கும் இங்குமாக ஓடத் தொடங்கியது.

அநேகாத்மனுக்குக் கண் மண் தெரியாத கோபம் வர, « யாரிடம் வாலாட்ட நினைக்கிறீர்கள்… » என்று சீறியவன், தன் ஸ்டியரிங் வீலில் கவனத்தைச் செலுத்தியவாறு இறுக்கி அக்சிலேட்டரை அழுத்தினான்.

அவன் அழுத்திய வேகத்தில், அவனுடைய குண்டடிபட்ட முன்புறக் கார் சில்லுகள் புகையைக் கக்கியவாறு, அங்கும் இங்கும் திரும்பினாலும், அவற்றைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயன்றவாறு, எதிரியின் காரை நோக்கிக் கடும் வேகமாகச் செலுத்தினான்.

அவனுடைய குறி தப்பாது, அநேகாத்மனின் கார், எதிரிகளின் காரின் பின்புறத்தைப் பலமாக அதுவும் வேகமாக இடிக்க, அநேகாத்மனின் இந்தத் திடீர் தாக்குதலைச் சற்றும் எதிர்பார்க்காத எதிரிகள் தமது காரை நிலை நிறுத்துவதற்குள்ளாக, இடித்த வேகத்தில், இரண்டு முறை சுழன்று குட்டிக்கரணம் அடித்து, அங்கிருந்த ஐலன்ட் ஒன்றில் மோதுப்படது. அந்தக் கணம், அவர்களின் பெட்ரோல் டாங்க் பெரும் ஓசையுடன் வெடித்துச் சிதற, அவர்களுடைய காரில் நெருப்பு பக் எனப் பற்றிக்கொண்டது.

அநேகாத்மன் எவ்வளவோ முயன்று பிரேக்கை அழுத்தியும், அவனுடைய கார் அவன் பேச்சைக் கேட்காது, எரிந்துகொண்டிருந்த அந்தக் காரின் மீது மோதி, இரண்டு சுழன்று சுழன்றவாறு அரைக் கிலோமீட்டர் இழுத்துச் சென்று பிரண்டு தலைகீழாக நின்றது. இவை அனைத்தும் கண் இமைக்கும் நொடியில் நடந்து முடிந்துவிட்டிருந்தன.

அநேகாத்மனின் கார் அடிபட்ட வேகத்திலேயே காரின் நான்கு பக்கமும் இருந்த 'காற்றுப் பொதி;' (airbag) வெடித்து அவன் அடிபடா வண்ணம் இறுகிப் பற்றிக்கொண்டதையும் அறியாது, « மகிம்மா… » என்ற முனங்கலுடன், அநேகாத்மன் தன் சுய நினைவை இழக்கத் தொடங்கினான்.

தொடரும்...

நிலவு 53

'ஆத்மன்… என்ன செய்கிறீர்கள்… எழுந்திருங்கள்… உங்களுக்காத்தான் நான் காத்திருக்கிறேன்… எங்கே இருக்கிறீர்கள்… வேக்கப் ஆத்மன்… » என்று சர்வமகி அவனை எழுப்ப, சடார் என்று தன் விழிகளைத் திறந்தான் அநேகாத்மன்.

முதலில் மங்கலாகத் தெரிந்தது, பின் தெளிவாகத் தெரியத் தொடங்க, தான் ஒரு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தது தெரிந்தது.

அதே நேரம் அவனருகே வந்த தாதி ஒருவர்,

« ஹாய் மிஸ்டர் அநேகாத்மன்… கான் யு ஹியர் மி… » என்று கேட்க, தன் தலையை ஆம் என்று ஆட்டியவனுக்கு அப்போதுதான் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தது.

« மகி… மகிக்கென்னாகிவிட்டது… » என்று எண்ணிய வேகத்திலேயே வேகமாகப் படுக்கையை விட்டு எழுந்தமர்ந்தான் அநேகாத்மன்.

அவனுடைய கழுத்தைச் சுற்றி அசைக்க முடியாதவாறு பட்டை போடப்பட்டிருந்தது. கையில் ட்ரிப் ஏற்றபட்டிருந்தது. மார்பில் என்னென்னவோ ஒட்டியிருந்தார்கள்.

« வட் த ஹெல் இஸ் திஸ்? » என்று எரிச்லுடன் கேட்டவன், அனைத்தையும் பிய்த்து எறிந்தான். கரத்திலிருந்த ட்ரிப்பை இழுத்து எடுத்து ஒரு பக்கமாகப் போட்டான்.

« வட் ஆர் யு டூயிங்… நீங்கள் எழுந்திருக்கக் கூடாது… படுங்கள்…” என்று தாதி பதட்டமாகக் கூறி அவனருகே வந்து தடுக்க முயல,

« கோ டு ஹெல்… » என்று கர்ஜித்தவன், அவளைச் சற்றும் கருத்தில் கொள்ளாமல் படுக்கையை விட்டு எழுந்தான். ஒரு கணம் உடல் தள்ளாடியது. வேகமாகத் தன்னை நிலைப்படுத்தியவன், கழுத்தைச் சுற்றியிருந்த பட்டையை பிய்த்து எடுத்து ஒரு பக்கமாகப் போட, அந்தத் தாதி வைத்தியரை அழைத்து வர உள்ளே ஓடினாள். அதே நேரம் நொண்டியவாறு வெளியே வந்தான் அநேகாத்மன்.
அங்கே நின்றிருந்த ஒரு மனிதர் யாருடனோ கைபேசியில் உரையாடிக்கொண்டிருக்க,

« சாரி… » என்றவாறு அந்தக் கைபேசியைப் பறித்து சில இலக்கத்தை அடித்துத் தன் காதில் பொருத்தினான்.

அந்த, கைபேசியின் உரிமையாளனோ, அநேகாத்மனின் இந்த திடீர் செய்கையால் அதிர்ந்து போய் பார்த்தவர் பின்,

« வட் த ….. ஆர் யு திங்கிங் டு டூயிங்… » என்ற காட்டுக் கத்தலையும் பொருட்படுத்தாமல், தன் உதவியாளன் கேர்வினுக்கு அழைத்தான்.

மறு விநாடி எடுக்க,

« கேர்வின் இட்ஸ் மி… சென்ட் மி எ கார் அன்ட் எ செல் ஃபோன் வித் பெயர் ஒஃப் மை ட்ரஸ் ரைட் நவ்… » என்று உத்தரவிட,

« யெஸ் சேர்… பட்… வட் இஸ் யுவர் லொக்கேஷன்… » என்றான் கேர்வின் தயக்கமாக.

« யாருக்குத் தெரியும்…. என்றவன் சுற்றிப் பார்க்கச் சற்றுத் தெலைவில் பொரிக்கப்பட்டிருந்த அந்த மருத்துவமனையின் பெயரைப் படித்தவன், அதைக் கூறிவிட்டு, கைபேசியை அணைத்து, மீண்டும் அந்த உரிமையாளரிடம் கொடுத்துவிட்டு, அவரை அழுத்தமாகப் பார்த்தான். பின்,

« நெக்ஸ் டைம் வோச் யுவர் டங்க்… » என்று எச்சரித்தவன், அவர் திகைத்து நிற்பதையும் பொருட்படுத்தாது. வெளியே வந்தான்.

அடுத்த இருபதாவது நிமிடங்களில் அவனுடைய கார் ஒன்று அவனுக்கு

முன்னால் வந்து நின்றது.
அதை ஓட்டி வந்தவர், காரை விட்டு இறங்கி, அநேகாத்மனிடம் ஒரு பையைக் கொடுக்க, அதைப் பிரித்துப் பார்த்தான்.

அவனுடைய ஆடையும், கைபேசியும் இருந்தது. அது மருத்துவ மனை வாசல் என்பதைக் கூட லட்சியம் செய்யாது, அதிலேயே ஆடையை மாற்றினான்.

மாற்றும் போது, வெளியே தெரிந்த அவனுடைய கட்டுடல் மயங்கிப்போய் அங்கிருந்த பெண்கள் அவனை வெறித்துப் பார்க்க, அதைக் கூட உணரும் நிலையில் அநேகாத்மன் இருக்கவில்லை.
கழற்றிய மருத்துவ மனை உடையை அருகேயிருந்த குப்பைத் தொட்டியில் போட்டவன், கைபேசியை எடுத்துத் தேவகிக்கு அழைத்தான்.

மறு கணம் தேவகி எடுக்க,

« தேவகி… அக்கா எப்படி… இருக்கிறாள்… என்ன செய்கிறாள்? » என்றான் தன் உயிரைக் கையில் பிடித்தவாறு.

« அத்தான்… எங்கே போய்விட்டீர்கள்… நீங்கள் சென்று எட்டு மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது. ஆர் யு ஓக்கே… » என்று பெரும் படபடப்புடன் கேட்க,

“ஸ்டாப் அன்ட் ஆன்சர் மை குவஸ்ஷன்… அக்கா என்ன செய்கிறாள்…” என்று சீறினான் அவன்.

“அக்கா இப்போதுதான் தூங்கிக்கொண்டிருக்கிறாள் அத்தான். இவ்வளவு நேரமும் வாசலையே பார்த்துக்கொண்டிருந்தாள்… இன்னும் சாப்பிடவில்லை. எத்தனையோ முறை ஊட்ட முயன்றேன். மறுத்து விட்டாள்…” என்று கூற, ஒரு பக்கம் தன் மனைவி தனக்காகக் காத்திருக்கிறாள் என்கிற மகிழ்ச்சி தோன்றினாலும், இன்னும் அவள் சாப்பிடவில்லை என்கிற வருத்தம் அவனை வேதனைகொள்ளச் செய்தது.

‘இதோ இன்னும் அரை மணி நேரத்தில் வந்துவிடுவேன் தேவகி. அது வரை அக்காவோடு இருந்துகொள்… எங்கும் போகாதே…” என்று எச்சரித்து விட்டுத் தன் காரில் ஏறி அமர்ந்து அதை உயிர்ப்பித்து, வேகத்தைக் கூட்டினான். காரை ஓட்டிக்கொண்டே மீண்டும் விக்டருக்குத் தெலைபேசி எடுத்தான்.
“வேர் த ஹெல் ஆர் யு நேகன்… எத்தனை மணி நேரமாக உன்னுடன் தொடர்பு கொள்ள முயன்றேன் தெரியுமா?” என்று விக்டர் கோபத்துடன் கூற, இவன் நடந்தவற்றைக் கூறி முடிக்க விக்டர் கொஞ்ச நேரம் அமைதி காத்தான்.

“டாமிட்… யு ஆர் லக்கி மான்… நினைக்கும் போதே பயமாக

இருக்கிறது… யு ஓக்கே… ஆர் யு ஷ_வர்?” என்று சந்தேகமாகக் கேட்க,

« ஐ ஆம் பேர்ஃபக்லி ஓக்கே… அங்கே அந்த ஹாஸ்பிடலில் ஏதாவது சந்தேகிக்கும் படி… »

« நோ நேகன்… சந்தேகிக்கும்படி யாரும் இங்கில்லை… ஐ திங்க் தீரனின் டார்கட் நீதான்… உன்னைத் திசைதிருப்ப, இல்லை உன் சிந்தனையை குழப்பியடிக்க அவன் உன் மனைவியின் பெயரைப் பயன்படுத்தியிருக்கிறான் போலும். அது தோற்று விட்டது என்பதை அறிந்தால் மீண்டும் முயல்வான்… நீ கவனமாக இருக்கவேண்டும். இதற்கிடையில், அவனை அரஸ்ட் பண்ணுவதற்கான முழு ஆவணங்களும் கிடைத்து விட்டன. இன்னும் கொஞ்ச நேர்தில் அவன் கைதாகிவிடுவான்… அது வரை யு ஹாவ் டு பி கெயர் ஃபுல்… » என்று எச்சரிக்க,

அவருக்கு நன்றி உரைத்து விட்டுக் கைபேசியை அணைத்தவன், வலித்த கழுத்தை வருடிக்கொடுத்தவாறே, மருத்துவமனையை அவன் கூறியது போலவே அரை மணி நேரத்தில் வந்தடைந்தான்.

பதற்றத்துடன் உள்ளே நுழைந்தவனின் பார்வை முதலில், தூங்கிக்கொண்டிருந்த தன் மனையாளிடம் சென்று மீண்டது. அது வரை புத்தகம் படித்துக்கொண்டிருந்த தேவகி அத்மனைக் கண்டதும் அதிர்ந்து போனாள்.

« என்னாச்சு அத்தான்… முகம் எல்லாம் காயமாக… ஆர் யு ஓக்கே… » என்று பதைபதைத்தவாறு வர, அப்போதுதான் அநேகாத்மனுக்குத் தன் நிலை புரிந்தது. அவசரத்தில் முகத்திலிருந்த காயத்தை மறந்து விட்டான்.

« ஒன்றுமில்லை தேவகி… சின்ன ஒரு ஆக்சிடன்ட்… »

« ஆக்சிடன்டா… » என்று இவள் பதற, தன் வாயின் மீது விரலை வைத்து அவளை எச்சரித்தவன்,

« ஐ ஆம் ஓக்கே… சின்ன காயம் தான்… நவ் ஐ ஆம் ஓக்கே… இனி நீ கிளம்பு… உனக்காக கார் வெளியே காத்திருக்கிறது… நான் அக்காவைப் பார்த்துக்கொள்கிறேன்…» என்று கூற,

“இல்லை அத்தான்… உங்கள் நிலையில் அக்காவை உங்களால் பார்த்துக்கொள்ள முடியுமா தெரியவில்ல… நீங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்களேன்… நான் அக்காவைப் பார்த்துக்கொள்கிறேனே…” என்று கெஞ்ச,

“இல்லை தேவகி… உன் அக்கா, நான் ஊட்டினால்தான் சாப்பிடுவாள். அவளுக்கு நான் அருகேயிருக்கவேண்டும். இல்லையென்றால் பதறிப்போவாள்… அதோடு நான் ஒன்றும் இயலாதவன் அல்ல… நீ போய்வா…” என்று அவன் அழுத்தமாகக் கூற, அந்தக் குரலின்

கட்டளையைப் புரிந்துகொண்டவள் மறுக்க முடியாமல் தயங்கியவாறே விடைபெற்றாள்.

தேவகியைப் பத்திரமாக அனுப்பிவிட்டுத் தன் மனையாளின் பக்கமாக வந்தமர்ந்தான்.

உடல் முழுவதும் உயிர் போகும் வலி இருந்தாலும், அதைச் சிரமப்பட்டுத் தனக்குள் அடக்கிக் கொண்டவன், சர்வமகி சாப்பிடவில்லை என்கிற நினைவு வர, அவளுக்காக பால் கரைத்து வந்தான். அவளுக்குப் புகட்ட முதல் அனைத்து மின்விளக்கையும் அணைத்து விட்டு மெல்லிய விளக்கை மட்டும் போட்டுவிட்டான். இல்லையென்றால், அவன் முகத்திலிருக்கும் காயங்களைக் கண்டால் அவள் துடித்துப்போவாள்.

மெதுவாக அவள் தலையை வருட, அவன் வருடலில் தன் விழிகளைத் திறந்தாள் சர்வமகி.
தன் முன்னால் கலக்கத்துடனும், கலைந்த தலையுடனும் நின்றிருந்த தன் உயிரானவனை அந்த மெல்லிய வெளிச்சத்தில் கண்டதும், விழிகளில் நீர் நிறைய, அவனைப் பாய்ந்து தன்னோடு அணைத்துக்கொண்டாள் அந்த மனதிற்கினியாள்.

அவளுடைய அந்த ஒற்றை அணைப்பில் அவனுடைய வலி அனைத்தும் மாயமாக மறைய,

« ஹெய் பேபி… என்னாச்சும்மா… » என்றான் கனிவுடன்.

« எ…ங்கே… போ…ய்… இரு…ந்தீ…ர்…கள்… காணோ…ம்…” என்று அவள் கூறி முடிப்பதற்கு முன்பாக, அவளுடைய முடியற்ற தலை உச்சியில் தன் உதட்டைப் பொருத்தியவன்,

« ஒரு சின்ன வேலை கண்ணம்மா… அதுதான் இத்தனை தாமதமாகிவிட்டது… அதுதான் இப்போது வந்துவிட்டேன் அல்லவா… நீ இன்னும் சாப்பிடவில்லை என்று தேவகி சொன்னாள்… இதோ பால் எடுத்து வந்திருக்கிறேன்… குடிக்கிறாயா? » என்று கேட்க, அவனுடைய மார்பில் சாய்ந்தவாறே, ஆம் என்பது போலத் தலையை ஆட்டியவளுக்குக் குழந்தைக்குப் பருக்குவது போல கொஞ்சம் கொஞ்சமாகப் பருக்கினான் அநோகத்மன்.

அவள் குடித்து முடித்ததும், வாயைத் துடைத்து விட்டவன், « படுத்துக் கொள்கிறாயாடா? » என்றான் கனிவுடன். அவளோ மறுப்பாகத் தலையை ஆட்டியவள், மேலும் வாகாக அவன் மர்பில் தன் முகத்தைப் புதைக்க, இவன் உதடுகளில் என்றுமில்லா நிம்மதியும், மகிழ்ச்சியும் புன்னகையாக மலர,

« ஓ மை ஏஞ்சல்… ஐ லவ் யு சோ மச்மா… » என்று முணுமுணுத்தவன் அவளை அணைத்தவாறே அந்த படுக்கையில் தன் கால்களை நீட்டி

சாய்ந்தமர்ந்து கொண்டான். அவன் விழிகளும் களைப்பின் மிகுதியாலும், வலியின் மிகுதியாலும் தாமாக மூடிக்கொண்டன.

அநேகாத்மன் உறங்கிவிட்டான் என்பதை, அவனுடைய சீரான மூச்சுக்காற்றிலிருந்து உணர்ந்து கொண்ட சர்வமகி, மெதுவாகத் தலையை நிமிர்த்தித் தன் உயிரானவனைப் பார்த்தாள். தூக்கத்திலும், அவளை விட்டுப் பிரியமாட்டேன் என்பது போல அவளை இறுக அணைத்திருந்தான்.

அவளுக்கு நினைவு தெரிந்த நிமிடத்திலிருந்து அவனைப் பார்த்துக்கொண்டுதானே வருகிறாள்... ஒவ்வெரு விநாடியும், அவள் மனதனைப் புரிந்து உருகும் அவனுக்கு, அவள் என்ன கைமாறு செய்யப்போகிறாள்...

தன் வலது கரத்தால், அவனுடைய மார்பை பட்டும் படாமலும் வருடிக்கொடுத்தவள், அப்படியே அவன் அணைப்பில் உறங்கியும் போனாள்.

நிலவு 54

மறுநாள் தன் கைவளைவில் பூனைக்குட்டிபோல வாகாகத் தூங்கிக்கொண்டிருந்த மனைவியைக் கண்டதும், முகம் முழுவதும் மகிழ்ச்சியில் மலர, அவள் தலையில் ஆழமாக முத்தமொன்றைப் பதிக்க, மெதுவாக நெழிந்தாள் சர்வமகி.

« கண்ணம்மா... »

« ம்... »

« எழுந்துகொள்ளவேண்டுமில்லையா... » என்றான் மீண்டும் முத்தம் கொடுத்தவாறே.

« ம்ஹ_ம்... » என்றவாறு மேலும் அசைந்து சற்றுக் கீழுறங்கித் தன் முகத்தை அவன் இறுகிய வயிற்றில் புதைத்துக் கரத்தை அவன் இடையைச் சுற்றிப் போட்டவாறு மேலும் உறங்கத்தொடங்கினாள் சர்வமகி.
அந்த அணைப்பில் ஒரு கணம் இறுகிப்போனான் அநேகாத்மன். கூடவே தன் மீது கோபமும் வந்தது. 'இப்படி அணைத்தால் நான் என்ன செய்யட்டும்?' என்று தனக்குள் முனங்கியவன்,

« ஹேய்... வோஷ்ரூம் போகனும்மா... » என்றான் இவன் அவஸ்தையாக. அவனுக்கு உடம்பு வேறு வலித்தது. இவளோ,

« ம்ஹ_ம்... பிற...கு போ..ய்க்கொல்ல...லாம்... » என்றவள் அவனை மேலும் இறுகத் தன்னோடு அணைத்துக்கொண்டாள்.

தன்னை நேற்றுக் காணாததால் இன்று அவனை விட்டு விலக அச்சப்படுகிறாள் என்பதைப் புரிந்துகெண்ட அநேகாத்மன்,

« ஹே கிட்டின்... நான் எங்கும் போகமாட்டேன்மா... அதுவும் உன்னை விட்டு... வாய்ப்பே இல்லைடா... ஒரு ஐந்து நிமிடம் விட்டாய் என்றால், நான் போய்விட்டு வந்துவிடுவேன்... ப்ளீஸ்டி... என் கண்மணி... » என்று இவன் கெஞ்ச, அவன் கெஞ்சுவது பிடிக்காமல், தன் வலது கரத்தைத் தூக்கி அவன் வாயில் வைத்து அவன் பேச்சைத் தடுத்தவள், தன் விரல்களை ஐந்து என்பது போலப் பிரித்துக் காட்டிவிட்டு, விலகி, மெதுவாக அவன் முகத்தைத் தாகத்துடன் பார்க்க முயன்றாள்.

எப்படியோ, அருகேயிருந்த துவாய் ஒன்றை எடுத்துத் தன் முகத்தைத் துடைப்பதுபோல, மறைத்துக் கொண்டவன், எழுந்ததும், விளையாடுவது போல, தன் கரத்திலிருந்த துவாயை அவள் வதனத்தில் போட்டுவிட்டு, அவள் அந்தத் துவாயை விலக்குவதற்கு முன்பாக, அவளைத் தூக்கி, வாகாகத் தலையனையில் படுக்க வைத்தான்.

ட்ரிப் ஏறாத கரம் கொண்டு, முகத்தை மூடியிருந்த துவாயை விலத்தி, அவனைப் பார்ப்பதற்குள்ளாக அவன் குளியறைக்குள் நுழைந்துவிட்டிருந்தான்.

தன் அத்தியாவசிய தேவைகளை முடித்துக்கொண்டு, முகத்தைக் கழுவியவன், கண்ணாடியின் தன் பிம்பத்தைப் பார்த்தான்.

நல்லவேளை அவன் பயந்ததுபோல், பெரிதாக ஒன்றும் முகத்தில் தெரியவில்லை. முகம் சற்று அதைத்திருந்தது. வலக்கண்ணிற்குக் கீழே கருமை நிறம் அடிபட்டதற்கு அடையாளமாகத் தங்கியிருந்தது. மற்றும் படி, அதிக காயங்கள், மழிக்காத தாடிக்குள் மறைந்துவிட்டிருந்தன.

ஒரே ஒரு கீறல் மட்டும் காதுக்குக் கீழாக அவனைப் பார்த்துச் சிரிக்க, தண்ணீர் கொண்டு கழுவிப் பார்த்தான். அது போகமாட்டேன் என்று அடம் பிடிக்க, எரிச்சலுடன் தன் முகத்தை அங்கும் இங்குமாகத் திருப்பிப் பார்த்தான். சமாளிக்கக் கூடிய காயங்கள்தான். நிம்மதியுடன் வெளியே வந்தவனை ஆவலுடன் ஏறிட்ட சர்வமகியின் முகம் அதிர்ச்சியைக் காட்டியது.

பதற்றமாக எழுந்தமர முயன்றவளிடம் விரைந்தவன்,

« என்னடா... ஏதாவது வேண்டுமா? » என்று கனிவுடன் கேட்டான். அவளோ அவனை விழிகள் இமைக்காது வெறித்துப் பார்க்க,

« என்னடா? » என்றான்.

« எ... என்..ன.. ஆ...ச்சு... » என்றாள் தவிப்புடன் ட்ரிப் ஏறிக்கொண்டிருந்த கரத்தைத் தூக்கி, காதடியில் பட்டிருந்த காயத்தை வருட முயல, அதைப் பற்றி,

« வலிக்கப்போகிறது மகிம்மா… » என்று கூறியவன், அவள் கரத்தைப் பற்றி, மீண்டும் படுக்கையில் வைத்துவிட்டு,

« ஒன்றுமில்லைடா.. சின்னக் காயம்… »

« முகம்… அ..தை..த்து…க்… கி..ட…க்…கிறதே… » என்று அவள் தவிப்புடன் கேட்க,

« அதுவா… நேற்று சாப்பிட்ட ஏதோ ஒன்று ஒத்துக்கொள்ளவில்லை போல, அதுதான்…இந்தக் காயம் சின்ன ஆக்சிடன்ட்… குளிக்கும் போது, கால் வழுக்கிவிட்டது… » என்று சாமாதானம் கூற, மீண்டும் தன் கரத்தைத் தூக்கி அவன் கன்னத்தில் பதித்து,

« வலிக்கிறதா? » என்றாள் கம்மிய குரலில் அந்த ஒற்றைக் குரலில் உருகிப்போனான் அவள் கள்வன். உடனே அவள் அருகே அமர்ந்தவன், அவளை இறுகத் தன்னோடு அணைத்து,

« இல்லைம்மா… நீ என் அருகே இருந்தால், எந்த வலியையும் நான் சுகமாக சுமப்பேன்மா… » என்றவனின் கரங்கள் அவள் உடல் முழுவதும் வருட, அவள் உடல் சூடானது. அதை உணர்ந்து கொண்டவனின் உடலும் நகைப்பில் குலுங்கின.

« ஓ மை ஏஞ்சல்… மை லை்ப்… என் உயிர்… » என்றவன் இன்னனும் அவளைத் தன்னோடு இறுக அணைத்துக்கொண்டான்.

நிலவு 55

அன்று காலையே. தீரனுக்கு எதிரான ஆதாரங்கள் அனைத்தும் முன் வைக்கப்பட, அவர் குற்றவாளி என்கிற காரணத்தால் அவர் அதிரடியாக கைதுசெய்யப்பட்டார். அவருடன் கூட இருந்த அனைவரும் கைதுசெய்யப்பட்டனர். இனி அவர்களின் முடிவு அநேகாத்மனின் கரங்களில் என்பது கடவுளின் தீர்ப்பு.
அநேகாத்மன் தன் உடல் வலிக்கு வேண்டிய மருந்து சர்வமகியிடமிருந்ததால், யாருடைய கருத்தையும் கவராது தானாகத் தேறிக்கொண்டான்.

நாட்கள் சென்றன…

மருத்துவ மனையிலிருந்த சர்வமகியின் மழிக்கப்பட்ட தலை முடி ஓரளவு வளரத் தொடங்கியது. அதுபோலவே அவளுடைய நினைவுகளும் மெல்ல மெல்லத் திரும்பத் தொடங்கின. தந்தையின் இறப்பு… அநேகாத்மனின் கடுமை, அதைத் தொடர்ந்து அவனின் கனிவு,

அந்த ரோசலின் கூறியது... அநேகாத்மன் எதற்கு அவளை மணம் முடித்தான் என்பதற்கான காரணம் எல்லாமே நினைவிற்கு வந்து போனது.
மெதுவாக தலையை வலிக்க, இடதுகரத்தால் தலையை மெதுவாக வருடிக்கொடுத்தாள்.

“ஹாய் பேபி... எழுந்துவிட்டாயா?” என்றவாறு அவளருகே வந்தான் அநேகாத்மன். அவனுடைய வலது கரம் அவள் நெற்றியை மென்மையாக வருடிக் கொடுத்தது.

“வலிக்கிறதா... இன்னும் கொஞ்ச நாட்களில் எல்லாம் சரியாகிவிடுமாம்... சொல்ல மறந்துவிட்டேனே... நேற்று உன்னை ஃபுள் செக்கப்பிற்கு அழைத்துச் சென்றார்கள் அல்லவா? நவ் யு ஆர் பேர்ஃபக்ட்லி ஆல் ரைட்... இனிப் பயப்பட ஒன்றுமே இல்லை என்று டாக்டர்ஸ் சொல்லிவிட்டார்கள்... இனி விரைவாக நாம் நம்முடைய வீட்டிற்குச் செல்லலாம்...” என்று அருகேயிருந்த கதிரையில் அமர்ந்தவாறு, முகம் விகசிக்கச் சொன்னவனைப் புரியாமல் பார்த்தாள் சர்வமகி.

“என்னடா... அப்படிப் பார்க்கிறாய்? ப்ராமிஸ்மா... அப்படியே உனக்கு ஏதாவது என்றாலும், முதலில் என்னைக் கடந்துதான் யமன் உன்னிடம் வரவேண்டும்... நவீன சத்தியவான் நானாக்கும்...” என்று நகைப்புடன் கூறியவன் மெதுவாக அவளுடைய உதட்டைத் தன் சுண்டுவிரலால் வருடிக்கொடுத்தான்.

அப்போதும் அவள் முகம் தெளியாததையும் அவன் கரம் பட்டாலே உடல் சிவந்து சூடேறும் மனைவி, அன்று எதுவுமில்லாமல் அவனை வெறிப்பதையும் கண்டவன், எழுந்து அவளருகே படுக்கையில் அமர்ந்தான். அவளை நோக்கிக் குனிந்தவன்,

“என்னம்மா... அப்படி என்ன கவலை உன் தலையை அரிக்கிறது... ம்...?” என்றான் கனிவுடன்.
சிரமப்பட்டுத் தன் தொண்டையைச் செருமியவள் மிக மிக மெல்லிய குரலில்,

“நா... நான்... பி...ழை...த்...து,... உங்... உங்களு...க்கு கஷ்டம் கொடுத்து...வி...ட்டேனா...” என்றவள் மெல்லியதாக சிரிக்க முடியன்று தோற்றுப்போனாள்.

அநேகாத்மன் விறுக் என்று படுக்கையைவிட்டு எழுந்தான்.

அவனுடைய முகத்தில் கோபம் ஆதங்கம், இயலாமை என்று பல உணர்வுகள் வர்ண ஜாலமிட்டன.

“மகிம்மா... உனக்கு...” என்று அவன் வலியுடன் கேட்க,

“நி..னை..வு.. வந்..து....விட்..ட்..டது” என்று திக்கித் திணறி ஒவ்வொரு சொல்லாகக் கூறினாள்.

“ஓ... கண்ணம்மா... நீ... நீ இன்னும் என்னைப் புரிந்துகொள்ளவில்லையா சர்வமகி? உனக்காக நான் தவிப்பது, உனக்காக நான் ஏங்குவது... உனக்காக நான் வாழ்வது... இது
எதையுமே நீபுரிந்துகொள்ளவில்லையா? நீ அழிந்துதான் எனக்கு வாழ்க்கை வேண்டுமானால் அந்த வாழ்க்கையே வேண்டாம் என்று நான் நினைப்பதை நீ உணரவில்லையா? இப்போது கூட நான் உன் இழப்பை விரும்புவேன் என்றா நினைக்கிறாய்? இதை விட நீ என்னைக் கொன்றிருக்கலாமே...” என்று வேதனையுடன் கூறியவன்,

“ ஏன்... ஏன்டி இப்படி என்னைச் சித்திரவதைப் படுத்துகிறாய்? டாமிட்... சர்வமகி... ஐ லவ் யு... இந்த உலகத்தில் நான் மதிக்கும், விரும்பும், வாழ நினைக்கும் ஒரே ஒரு பெண் நீ... நீ மட்டும்தான். ” என்றவன் மீண்டும் அவளை நெருங்கினான்.

அவள் நெற்றியை, விழிகளை, மெல்லிய நாசியை, சிவந்த உதடுகளை அங்கம் அங்கமாக விழிகளால் பருகியவன், கரத்தைத் தூக்கி அவள் முகத்தில் பதித்தான். “இந்த முகம், இந்த உடல், இந்த உடலைத் தாங்கி நிற்கும் உன் மனசு... அனைத்தும் எனக்கு சொந்தமானது மகிம்மா... உன்னை நினையாமல், உன்னைச் சுற்றியிருக்கம் அனைவருக்காகவும் மட்டும் யோசிக்கும் இந்த உள்ளம்... எனக்கொன்று என்றால் துடிக்கும் உன் ஆவி... இவற்றை எப்படி என்னால் இழக்க முடியும்? இதை எப்படி என்னால் வெறுக்கமுடியும்?” என்றவனை வெறித்துப் பார்த்தாள் சர்வமகி.

அவள் பார்வையின் அன்னித்தன்மையைப் புரிந்துகொண்ட அநேகாத்மன் உள்ளுக்குள் உடைந்து போனான்.

“ஓக்கே... நான் சொல்வதை நீ நம்பப் போவதில்லை அப்படித்தானே...” என்று அவன் கோபத்துடன் கேட்க,

“அ...ந்த... ரோ...சலி...ன்... உங்களை.... காதலிக்கிறா....” கூற முடியாது தொண்டை வறண்டு போக, அவள் நிலை புரிந்தவனாக, விரைந்து

சென்று, ஒரு கிளாசில் நீர் எடுத்துக்கொண்டு வந்தான்.

“முதலில் இதைக் குடி...” என்று அவள் உதட்டில் பக்குவமாக கிளாசைப் பிடிக்க, அவள் இரண்டு மிடறு குடித்துவிட்டு, போதும் என்று தலையாட்ட, மீண்டும் அந்த கிளாசை மேசையில் வைத்துவிட்டு,

“என்ன சொன்னாய், ரோசலிக்கு என் மீது காதலா...” என்றவன் நகைத்தான். கூடவே, அவள் இதழோரம் வழிந்த நீரைத் தன் பிறங் கையால் துடைத்துவிட்டவாறு,

“குட் ஜோக் மகிம்மா...” என்றவன், அவள் நெற்றியில் விழுந்த கூந்தலை ஒதுக்கிவிட்டவாறே, அவள் அருகே படுக்கையில் அமர்ந்தவன், ட்ரிப் ஏறாத கரத்தைத் தூக்கி அதை வருடிவிட்டவாறே,

“கண்ணம்மா... ரோசலினுக்கு வேண்டியது, தங்கு தடையற்ற பணம். கூடவே, செக்ஸ்...” என்றதும் இவள் உதட்டைக் கடித்தாள். அவள் சங்கடப் படுவது புரிய, இவனுக்கு வேதனையாக இருந்தது.

“மகிம்மா... அவளுக்கு நான் மட்டும் காதலனல்ல, என்னைப் போல இன்னும் பலர் இருக்கிறார்கள்...” என்றான் அவன் அவசரமாக.

“அது... அ..வளு..க்கு... ச..ரி... உ..ங்...களு...க்கு... நீங்...” என்று அவள் சிரமப்பட்டு எதையோ கூற வர, உடனே அவள் பேச்சைத் தடுத்தவனாக,

“நீ என்ன கூற வருகிறாய் என்பது தெரிகிறது... அவள்தான் வேற்று இனத்தவள்... அவளுக்கு இது சாதாரணம், உனக்கு என்ன வந்தது? நீ தமிழன் தானே...” இதைத்தானே கேட்க வருகிறாய்? மகிம்மா... நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் இங்கே. தவிர அம்மாவும் சின்னவயதில் இறந்துவிட்டார்கள். தனிமை... என்னுடைய உள்ளத்தில் ஏற்படும் அழுத்தத்தைத் தீர்க்க ஒரு வழி வேண்டுமே... இந்த வழிதான் எனக்குப் பிடித்தமானதாக இருந்தது கண்ணம்மா... அப்போது இது தப்பென்று சத்தியமாக நான் நினைக்கவில்லை. இப்போது கூட எனக்கு அது தப்பாக தெரியவில்லை... பட் உன்னைப் பார்த்தபிறகு... அதுவும் முதல் பார்வையிலேயே உன்னைத் தவிர, வேறு யாரையும் என்னால், அந்த மாதிரி யோசிக்கமுடியவில்லை... முதலில் உன் மீது கோபம் ஆத்திரம் இருந்தாலும் கூட, ஏதோ தப்பு செய்வது போலவே மனசிற்குள் உறுத்திக்கொண்டிருந்தது... அதைத் தவிர, நான் ஒரு பொதும் ரோசலினை மனதால் தொட்டதேயில்லை... நம்புமா...” என்றான் அவன் அவளுக்குப் புரியவைத்துவிடவேண்டும் என்கிற வேகத்தில்.

“ஆனாலும்... தப்...பு த...ப்பு... தான்... “

« உன்னைப் பார்க்கும் வரைக்கும் அது தப்பாக எனக்குத் தெரியவில்லை மகிம்மா... அப்போதே நீ என் கூட இருந்திருந்தால் இப்போது நீ தப்பு என்று நினைப்பதை நான் அப்போதே செய்திருக்கமாட்டேன்... விதி உன்னை கொஞ்சம் லேட்டாகத்தானே எனக்கு அறிமுகப் படுத்தியது... » என்றான் இவன் அவசரமாக.

« ஒ..ரு... கொலை...யை ... செய்து...விட்டு.... மன்னி...ப்பு...க்... கேட்... » அவள் முடிக்கவில்லை. அவள் வாயில் தன் கரத்தை வைத்து அவள் பேச்சைத் தடுத்தவன்,

“டோன்ட் ஸ்ட்ரெய்ன் யுவர் செல்ஃப்... ஒரு கொலையை செய்துவிட்டு மன்னிப்புக் கேட்டுவிட்டால் சரியாகாதுதான்... ஆனால் அது எந்த விதமான கொலை என்பதைப் பொருத்தது சர்வமகி...” என்று அழுத்தமாகக் கூறியவன், அவள் இன்னும் தெளியாமல் இருக்க,

“இப்போ என்ன சொல்ல வருகிறாய்? நான் கெட்டவன், உன்னோடு வாழத் தகுதியில்லாதவன்.... அதுதானே... சரி... ஓக்கே... ஃபைன்... லீவ் இட்... இனியும் உன்னை நான் தொந்தரவு பண்ணமாட்டேன். எனக்கு நீ பிழைத்தெழவேண்டும். நீண்ட காலம் நலமாக இருக்கவேண்டும்... நீ என்னோடு வாழ்வதால், அது உன் மகிழ்ச்சியைக் பாழாக்கும் என்றால்... அதை நான் மதிக்கிறேன். நான் விலகிப்போவதுதான் உனக்கு வேண்டும் என்றால்... நான் விலகிப் போகிறேன்... இனி உன் அருகே கூட வரமாட்டேன்... எனக்கு நீ சந்தோஷமாக இருந்தாலே போதும்... நீ சந்தோஷமாக இரு... குட் பாய்...” என்று நெற்றியில் கைவைத்து சல்யூட் அடித்தவன் வேகமாக வெளியே சென்றான்.

தொடரும்...

நிலவு 56

அதே நேரம் தேவகி உள்ளே வந்தாள். தன்னைக் கூடக் கவனிக்காமல் கோபமாகச் செல்லும் அநேகாத்மனை வியப்புடன் பார்த்தவள், சகோதரியின் அருகே வந்தமர்ந்தாள். குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டவள்,

“என்னக்கா... உன் பிராணநாதர் கோபமாகச் செல்கிறார்...? நீ ஏதாவது சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடித்தாயா?...” என்றாள் நகைப்புடன்.

“இ...ல்...லை... தே...வகி...” என்று சிரமப் பட்டு பேச வாய் எடுத்தவள் முடிக்கமுடியாமல் தொண்டையில் எதையோ விழுங்கினாள். அதன் பின் மெதுவாகத் திக்கித் திணறி இதயம் முழுவதும் வலி பெருக, விஷயத்தைக் கூற,

“அக்கா... ஏனக்கா அப்படிக் கேட்டாய்...? இந்த இரு மாதங்களாக அத்தான் படும் சித்திரவதை உனக்குத் தெரியாது... அவர் வீட்டுப் பக்கமே வருவதில்லை... உனக்கு அது தெரியுமா?

நீ ஹாஸ்பிடலில் இருக்கும் நாள் வரை தானும் இங்கேயே இருப்பேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டார்... வேலைக்குக் கூடப் போவதில்லை... இதில், இவர் எடுத்து நடத்தவேண்டிய முக்கிய கேஸிற்கு இவர் போகவில்லை. அதனால், இவருக்கு எதிராக நஷ்ட ஈடு வழக்குப் பதியப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், உன் விழிப்பிற்காகவே காத்திருந்தார்...

அவருடைய முக்கிய வெலைகளைப் பார்ப்பதற்காக, யார் யாரையோ பொறுப்பு விட்டுவிட்டு வைத்தியசாலையே கதி என்றிருக்கிறார். இதில் அத்தானின் கவனம் தொழிலில் இல்லை என்பதை உணர்ந்து, அவருடைய ஷியார்சை விழுத்த வேறு சதி நடக்கிறது. எத்தனையோ முறை, அவரைச் சென்று, அவர் தொழிலைக் கவனிக்கும்படி நான் கூறியும், அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், உன் கூடவே இருந்தார்... அவரிடம் போய் இப்படிச் சொல்லிவிட்டாயே...

அதுமட்டுமல்லக்கா... யாரையும் உன் அருகேகூட வரவிடவில்லை. உனக்குத் தான்தான் சேவகம் செய்யவேண்டும் என்று பிடிவாதமாக நேர்சைக் கூட உன் அருகில் விடாமல் பாத்ரூம் வரைக்கும் அழைத்துச் சென்றவரிடம் போய்... ஏனக்கா... அவரைப் புரிந்துகொள்ளாமல்...” என்று சிறு கோபத்துடன் கூறியவளைத் தவிப்புடன் பார்த்தாள் சர்வமகி.

“இ... இல்லை... என்னால்... அவருக்கு... மிகவும் தொந்த...ரவாக...” அவள் முடிப்பதற்குள் தலையை ஆட்டினாள் தேவகி.

“உன்னால் மட்டுமல்ல... நம்மாலும் அவருக்குத் தொந்தரவுதான்... நீ இங்கே மருத்துவமனையில் கிடக்கும் நாள் வரை அத்தானுக்குத் தொந்தரவுதான். எப்போது நீ பழையமாதிரி வீட்டுப் பொறுப்பை எடுத்து நடத்துகிறாயோ, அப்போதுதான் அத்தானுக்க தொந்தரவில்லாமல் இருக்கும்... ஓ காட்... இந்த இரண்டு மாதங்களாக அத்தான் அத்தான் போலவா இருந்தார்? ஏதோ பைத்தியக்காரன்; போல... பார்க்கவே

பயமாக... என்ன ஆடையை மட்டும் கிழித்துக்கொள்ளவில்லை... மற்றும் படி... அவர் பைத்தியக்காரன் போலத்தான் நடந்துகொண்டார்" என்றவள் தலையைக் குலுக்கினாள்.

"அக்கா... உனக்கு ஒன்று தெரியுமா?" என்றவள் தன் கைப்பையைத் திறந்து அதிலிருந்து ஒரு பேப்பரை வெளியே எடுத்தாள். அதைப் பிரித்து சர்வமகியின் முன்னால் காட்டினாள்.

"இதோ பார்த்தியா... நம்முடைய அப்பாவின் செய்தி... அவர் கொலைக் குற்றவாளியல்ல... என்பதை ஆதாரத்துடன் அத்தான் நிருப்பித்திருக்கிறார்... அத்தானின் தந்தையின் இறப்பிற்கும், நம் அப்பா ஜெயிலில் போவதற்கும் யார் காணரம் தெரியுமா? தெரிந்தால் நீ அதிர்ந்துபோவாய்..." என்றவள் பேப்பரை மடித்து வசதியாக சர்வமகி பார்ப்பதற்கு முன்னால் நீட்டினாள்.

அந்தக் கட்டுரையைப் படித்த சர்வமகியின் விழிகள் வியப்பால் மலர்ந்தது.
"தே...வ...கி?" என்றாள் புரியாமல்.

"ஆமாமக்கா... நாம் இதுவரை காலமும் நல்லவர் என்று நினைத்திருந்த நடராஜன் அங்கிள்தான் இதற்கெல்லாம் காரணம். அப்பாவும் அவரும் பார்ட்னஸ்... அவருக்கு ஏற்கெனவே அப்பாவின் மீது பகை இருந்திருக்கிறது. எங்கள் அப்பாவைப்பற்றித்தான் நமக்குத் தெரியுமே. வெளுத்தது எல்லாம் பால் என்று நம்புவார். நடராஜன் அங்கிளையும் நம்பிவிட்டார். நடராஜன் அங்கிள் பிஸ்னஸ் எல்லாவற்றையும் சுரண்டி தன்னதாக ஆக்கிக் கொண்டார். அதன் பின் அத்தானின் தந்தையால் பலருடைய பிஸ்னசும் விழுந்துவிட்டது. எல்லோருமாக சேர்ந்துதான், வெங்கடேஷ் மாமாவைப் பழிவாங்க எங்கள் அப்பாவைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.... அந்த டிஎன் கம்பனி என்பது எல்லாம் அவர்களின் செட்டப்... அப்பாவை மாட்டவைத்துவிட்டு அவர்கள் தப்பிக்கொண்டார்கள்.

இது எல்லாவற்றிட்கும் காரணம் நடராஜன் தான் என்பதைக் கண்டுபிடித்தது அத்தான்தான் அக்கா..." என்று தேவகி கூற,

"எ... எப்படி..."

"நீ கொடுத்த டயரியை வைத்துத்தான்... அதில் அப்பா டிஎன் கம்பனியைச் சந்திக்கப் போவதற்கு முன்தினம் நடராஜன் அங்கிளை சந்தித்திருக்கிறார். டிஎன் கம்பனி பற்றிய செய்தியை அப்பாக்குக் கூறி,

ஆர்வத்தை ஏற்படுத்தியதே அவர்தான். அந்தக் கோணத்தில் அத்தான் யோசித்தார். அப்படியானால் நடராஜன் அங்கிளுக்கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கவேண்டும் என்பதை அத்தான் அறிந்து தன் ஆட்களைக் கொண்டு அக்கு வேறு ஆணிவேறாக விசாரிக்கச் சொன்னார்... எல்லாம் விசாரிக்கத்தான் உண்மை வெளியே வந்தது...

ஆனால் விதியைப் பாரக்கா... அந்த நடராஜன் அங்கிளுடன் கூட்டுச் சேர்ந்தவர்கள் எல்லோரும், எங்கே நடராஜன் அங்கிள் உண்மையை உளறிவிடுவாரோ என்று எண்ணி, அவருடைய பேஸ்மன்டிலேயே அவரைக் கொலை செய்து, அங்கேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். தன்னை கூட்டாளிகள் கொன்றுவிடுவார்கள் என்று முன்னமே நடராஜன் அங்கிளுக்கத் தெரிந்திருக்கிறது. அதனால் அவர் இறுதியாகத் தன் கைபேசியில் வாக்குமூலம் வேறு கொடுத்துவிட்டார். அதைக் கைப்பற்றி, மற்றைய அனைவரையும் காவல்துறையினர் பிடித்துவிட்டனர்.

அவர்களுக்கு எதிராக அத்தான்தான் வாதாடப்போகிறார்..." என்று; கூறிய தங்கையை வியப்புடன் பார்த்தாள் சர்வமகி.

"அக்கா... இன்று அப்பா நிரபராதி என்பதை வெளியுலகம் தெரிந்துகொண்டிருக்கிறது என்றால், இதற்குக் காரணம் அத்தான் தான். அதோடு இந்தச் செய்தியை உலகம் முழுவதும் வெளிவரும்படி செய்திருக்கிறார்... அன்று உன்னை மருத்துவமனைக்கு அழைத்து வந்தோமல்லவா...? அன்றுதான் எங்கள் அப்பா குற்றவாளி அல்ல என்கிற ஆதாரம் நிருபிக்கப் பட்டது. அதுவும் அப்பாவால் கொலைசெய்யப்பட்டவரின் மகனே முன்னின்று இந்த செய்தியை வெளிக்கொண்டு வந்திருக்கிறார் என்றதும், வேறு கதை இல்லாமல் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது.

அதுமட்டுமல்லக்கா... நம்முடைய அத்தான், அந்த கொலையாளிகளுக்கு எதிராக வாதாடப்போகிறார் என்பதை அறிந்ததும், அத்தானுக்குக் கொலை மிரட்டல் கூட விட்டார்கள். அத்தான் எதைப் பற்றியுமே கவலைப்படவில்லை.

"கொ.. கொ...லை மிரட்டலா... என்ன சொல்கி..றாய் தே..வகி..."

"யெஸ் அக்கா... இந்த செய்தி வெளியேறினால், அவரைக் கொன்றுவிடுவதாகவும், அந்தக் கேசிலிருந்து உடனடியாக விலகுமாறும் அந்த முக்கிய குற்றவாளி தீரன் எச்சரித்திருந்தார். அதற்கு

அத்தான் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. முதல் முதல் வேலையாக எங்களுக்கும் உனக்கும் செக்யூரிட்டி அரேஞ் பண்ணினார். அவர் தன்னைப் பற்றிக் கவலைப் படவேயில்லை. அவருடைய அஸிஸ்டன் அவரை எச்சரித்தபோது, நான் இப்போது இருக்கிற நிலைக்கு, சாவே பறவாயில்லை என்று கூறிவிட்டார்...” என்று அவள் கூற சர்வமகியின் முகம் வெளுறியது.

“ஐயோ... அப்படி...யானால் அவ...ரைக் கவன..மாக இருக்...கச் சொல்லவே...ண்டுமே...” என்று பதறினாள் சர்வமகி.

“அதைப் பற்றிக் கவலைப் படாதேயக்கா... அவர்கள் எல்லோரையும் கூண்டோடு பிடித்தாகவிட்டது.” என்ற போதும், தெளிவில்லாத முகத்துடன்,

“உண்...மை...யாகவா?” என்றாள் தவிப்புடன்.

“நான் ஏனக்கா பொய் சொல்லப் போகிறேன்... அத்தானின் தந்தைக்கு எதிராக சதிசெய்தவர்கள் அனைவரையும் பிடித்தாகிவிட்டது.” என்றவள் சிறிது நிறுத்தித் தன் சகோதரியைப் பார்த்தாள் தேவகி.

“அது மட்டும் அல்லக்கா... இன்னொரு விஷயத்தையும் நீ கேள்விப்பட்டால மயங்கியே விழுந்துவிடுவாய். நம் அத்தான் என்ன செய்திருக்கிறார் தெரியுமா?” என்று கூறியவள் தமக்கையின் ஆர்வமான விழிகளைக் கண்டதும்,

“அத்தானின் தந்தை தன் உயிலின் படி தன் மகன் மணம் முடித்தால்தான் சொத்துக்கள் அவர் பேருக்கு வரும் என்று எழுதிவிட்டார்...” என்று தேவகி கூற சர்வமகியின் முகம் வாடியது. அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தாள் தேவகி.

“உங்கள் இருவரின் திருமணம் நடந்து முடிந்ததும், மாமாவின் சொத்து முழுவதும் அத்தானுக்கு வந்துவிட்டது. அதை அத்தான் என்ன செய்தார் தெரியுமா? அத்தனை சொத்துக்களையும்; பிரித்து நம் ஐவரின் பெயரிலும் எழுதிவைத்துவிட்டார். அந்தச் சொத்து நம் இருபத்து நான்காவது வயதில் கிடைக்குமாறும் ஏற்பாடு செய்திருக்கிறார்.. மிகுதியை வறிய குடும்பங்களின் முன்னேற்றத்திக்காக ஒரு ட்ரஸ்டியை உருவாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் அமைத்திருக்கிறார். அந்த ட்ரஸ்டியின் பெயர் என்ன தெரியுமா? “சர்வமயம்...”.” என்றதும் சர்வமகி அதிர்ச்சியுடன் தங்கையைப் பார்த்தாள்.

“இ... இது எ... எப்போது...” என்றாள் புரியாமல்.

“இது எல்லாம் உங்கள் திருமணம் நடந்த சொற்ப நாட்களுக்குள்ளேயே நடந்துவிட்டது. உன் பிறந்த நாள் பரிசாக உன்னுடைய பங்கை உனக்குக் கொடுக்க அத்தான் எண்ணியிருந்தாராம். அதற்கிடையில் நீ... இங்கே வந்து படுத்துவிட்டாயே...” என்றாள் தேவகி குறையுடன்.

“ஓ...” என்ற சர்வமகியின் முகம் பெரிதும் வாடியது. யாருடைய சொத்தை யார் அனுபவிப்பது. அவன் ஏன் அப்படிச் செய்தான்... அதுவும் திருமணமான புதிதில் செய்ததாக அல்லவா கூறுகிறாள். அப்படியானால் அநேகாத்மன் அந்த சொத்தை அடைவதற்காக அவளை மணக்கவில்லை... அவளுக்காகவே அவளை மணந்திருக்கிறான். இதயத்தில் அழுத்திய பாரம் மாயமாக மறைந்துபோக இப்போது முகத்தில் தெளிவு வந்தது. அவனுக்க வேதனையைக் கொடுக்கிறோமோ என்கிற தாழ்வு மனப்பான்மை ஓடிப்போனது.

“அது மட்டுமல்லக்கா... உன்னை லை◌ஃப் சப்போர்ட்டில் வைத்திருப்பதாகக் கூறியதும் அத்தான் பட்ட பாடு... இப்போது நினைத்தாலும் இதயம் நின்றுவிடும்போல் இருக்கிறது. கடைசியாக டாக்டர்களையே மிரட்டிவிட்டார் என்றால் பார்த்துக்கொள்ளேன்... நீங்கள் என் மனைவியைக் காப்பாற்றவில்லை என்றால் நான் தற்கொலை செய்வேன்... என்று கூறிவிட்டார்...” என்ற தேவகி கூற சர்வமகி அச்சத்துடன் தேவகியைப் பார்த்தாள்.

“தே... தேவகி எ...எ ன்ன சொல்கிறா..ய்.” என்றாள் நடுக்கத்துடன்.

“ஆமாமக்கா... நீ இல்லாத சித்திரவதையை அனுபவிப்பதை விட தற்கொலை எவ்வளவோ பறவாயில்லை என்றார். உன் மீது எத்தகைய அன்பிருந்தால் இப்படியெல்லாம் அவரால் யோசிக்க முடியும்... நீ லை◌ஃப் சப்போர்ட்டில் இருந்த நான்கு நாட்களும் அத்தான் சாப்பிடவே இல்லை... தவிர நாங்கள் உன்னைப் பார்க்க வந்த போதெல்லாம் அத்தான் எங்களை நிமிர்ந்தே பார்க்கவில்லை. உன்னை மட்டும்தான் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்... நீ அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டாய்... என்ற பின்தான் உன்னை எங்களோடு, விட்டுவிட்டு வீட்டிற்குச் சென்று வந்தார். அவரைப் போய் நீ ...”
என்று குறைபட்ட, துடித்துப்போனாள் சர்வமகி.

அவனுடைய வெறித்தனமான, ஆத்மார்த்தமான காதலுக்கு அவள் தகுதியானவள்தானா என்கிற சந்தேகம் வேறு தோன்றியது.

அவனுடைய காதலுக்கு முன்பு, அவன் இழைத்த தவறுகள் காணாமல் போக, உடலும், உளமும் அவனை எண்ணி உருகத் தொடங்கின.

‘ஓ... ஆத்மன்.. உங்களுடைய இந்த அன்புக்கு விலையாக நான் எதைக் கொடுப்பேன்... என் உயிரைத் தவிர வேறு எதுவும் இல்லையே... அதைக் கூட நீங்கள் என்னிடமிருந்து எடுத்துக்கொள்ள மாட்டீர்களளே...’ என்று ஆத்மார்த்தமாகத் தன் கணவனின் நினைவில் துடித்து உருகத்தொடங்கினாள் அந்தப் பேதை.

தன் சகோதரியின் கலங்கிய முகத்தைக் கண்டவள், அவளை மேலும் நெருங்கி, கலைந்த தலைமுடியை வருடிக் கொடுத்தவாறு,

"அக்கா... அத்தான் உன்னை மிகவும் விரும்புகிறார்... உயிருக்கும் மேலாக...” என்ற தேவகியை கண்கலங்கப் பார்த்தாள் சர்வமகி.

“எ..எ... எனக்கு அது தெரி...யும்... ஆத்மன் என்னைக் கா... தலிக்கி...றார் என்று ... தெரியும்... ஆனாhல்... தன்னுயி..ரைத் துச்.சமாக எண்...ணி எனக்காக... அவர்... தேவகி... நான்... என்ன... செ...ய்யட்டும்... என்... ஆத்மன்... இல்லாம்... என்னால்... என்னால்... உயிர்... வழமு...டியாது... ஆனால... அவர்... கோ...பி...த்துக்...கொண்டு... போ...ய்விட்டாரே...” என்று திக்கித் திணறித் தவித்தவளை வியப்புடன் பார்த்தாள் தேவகி..

“கோபித்துக்கொண்டா... அத்தானா... அதுவும் உன் மீதா... சும்மா போக்கா... அவராவது உன்மீது கோபப்படுவதாவது...” என்றவளை வருத்தத்துடன் பார்த்தாள் சர்வமகி.

“இல்லை... அவருக்கு கோபம்... வந்தால்... அதை... அடக்க... யாராலும்... முடியாது...” என்றவளை தேற்றும் முகமாகப் பார்த்தாள் தேவகி.

“அத்தான் வருவார் அக்கா... அவருக்கு உன்னை விட்டுப் பிரிந்து ஐந்து நிமிடங்கள் தன்னும் தனியாக இருக்கமுடியாது...” என்று அவள் முடிக்கவில்லை,

“யாருக்கு இருக்கமுடியாது?” என்கிற அழுத்தமான கடுமையான குரல் வாசல் புறம் இருந்து வர இரு பெண்களும் அதிர்ந்து போய்த் திரும்பிப் பர்த்தனர்.

நிலவு 57

அநேகாத்மன் பற்றிய செய்தியைத் தன்னை மறந்து
கேட்டுக்கொண்டிரந்த சர்வமகியும், அவனைப் பற்றிய சுவையான
செய்திகளைத் தெரிவித்துக்கொண்டிருந்த, தேவகியும், வாசல்கதவில்,
ஒருவன் வந்ததையோ, அவர்கள் பெசுவதைக்
கேட்டுக்கொண்டிருந்ததையோ உணரவில்லை.

திடீர் என்று "யாருக்கு இருக்கமுடியாது..." என்கிற அழுத்தமான குரல்
கேட்க, இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

அநேகாத்மன் கதவின் நிலையில் சாய்ந்தவாறு இரண்டு கைகளையும்
பான்ட் பாக்கட்டில் செலுத்தி அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும், முகம் முழுவதும் பாசத்தில் மலர,

"என்ன அத்தான்... கோபித்துக்கொண்டு போனீர்கள் என்று அக்கா
வருத்தப்பட்டார்கள்... நீங்கள் என்ன என்றால் திரும்பி வந்து
நிற்கிறீர்களே..." என்றாள் தேவகி கிண்டலுடன்.

"போனேனா...! எங்கே...? அதுவும் உன் அக்கா இங்கே இருக்கும் போது
நான் எங்கே போவேன்...! அவளை விட்டுவிட்டு என்னால் எங்கேயும்
போக முடியாதே தேவகி..." என்றவன் அழுத்தமான நடையுடன்
சர்வமகியின் அருகே வந்தமர்ந்தான்.

வழமைபோல அவனுடைய வலது கரம் அவளுடைய இடது கரத்தைப்
பற்றிக்கொண்டது.

"என்னத்தான்... இவ்வளவுதானா உங்கள் ரோஷம்... சே... சே... பெரிய
கோபக்காரர், பிடிவாதக் காரர்... அழுத்தமான பேர்வழி... எக்ஸ்ட்ரா
எக்ஸ்ட்ரா... என்று அனைவராலும் அறியப்பட்ட நீங்களா,
கோபித்துக்கொண்டு சென்றுவிட்டு, அடுத்த நிமிடம் இங்கே வந்து
நிற்கிறீர்கள்? சே...சே... இதை நான் உங்களிடம்pருந்து
எதிர்பார்க்கவில்லை..." என்று தேவகி உதட்டைப் பிதுக்க,

"ஏன் மச்சினிச்சி என் மானத்தை வாங்குகிறாய்? நீ சொன்னாயே...
கோபக்காரன், பிடிவாதக்காரன், அழுத்தமான பேர்வளி, அந்த எக்ஸ்ட்ரா
எக்ஸ்ட்ரா... இது எல்லாம் உன் அக்காவிற்கு முன்னால் வெறும்
புஸ்வாணம்... நானாவது உன் அக்காவிடம் கோபித்துக்கொண்டு
போவதாவது... நோ சான்ஸ்..."
என்றவன் சர்வமகியின் கரத்தைத் தூக்கித் தன் உதட்டில் அழுத்தி

விடுவித்தான்;.

அவனிடமிருந்து வந்த சிகரட் வாசைன, எதற்காக அவன் வெளியே போனான் என்பதை எடுத்துக் காட்ட, அவனை முறைத்தாள் சர்வமகி.

அவள் முறைப்பைப் பார்த்தவன்,

“வட்...” என்றான் புரியாதவன் போன்று. அவள் எதற்காக முறைக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத முட்டாளா அவன். அவள் மீண்டும் முறைக்க,

“ஓக்கே... ஓக்கே... சாரி... டென்ஷன்டா... அதுதான்... அதுவும் ஒன்றுதான் எடுத்தேன்...” என்று அவன் கூற, அவளின் முறைப்பில்,

“சரி...சரி.. ஓன்லி ஃபைவ் சிகரட்ஸ்தான்...” என்ற, இவள் மேலும் முறைக்க,

“நான் என்னம்மா செய்வது... நீ வேறு என்னை வெறுத்துவிட்டாயோ என்று... கலங்கிப்போனேன்டா... அதுதான்... என் பயத்தைப் போக்க... சிகரட் பிடித்தேன்... பட் ஐ பிராமிஸ் யு... நீ என் அருகே இருந்தால், அதைத் தொடவே மட்டேன்... என்னை நம்பும்மா...” என்று அவளிடம் கெஞ்ச,

அதற்கு மேல் தன் கோபத்தைப் பிடித்து வைத்திருக்க முடியாதவளாக, அவனுக்கு முன்பாகத் தன் கரத்தை நீட்டி,

“இ...னி... கு...டிக்..க.. மாட்...டே...” அவள் முடிக்கும் முன்பாக, அவள் என்ன கூற வருகிறாள் என்பதைப் புரிந்தவனாக, அவள் கரத்தின் மீது தன் கரத்தைப் பதித்து,

“ஐ ப்ராமிஸ் யூ கண்ணம்மா... நீ என் அருகில் இருக்கும் வரை, ஒரு போதும் இந்தக் கறுமத்தைத் தொடமாட்டேன்... இது உன் மீது ஆணை...” என்றான் மனம் உணர்ந்து.

“இத பார்டா... இது போங்கு ஆட்டம்... அப்போ அக்கா இல்லாத நேரம் குடிப்பீர்களாக்கும்... நீங்கள் கோர்ட்டுக்கு போகும்பொது அக்கா இருக்கமாட்டார்கள்... அப்போ அங்கே குடிப்பீர்களா?” என்று அவள் போட்டுக் கொடுக்க,

“எங்களுக்கு வில்லி வெளியே தேவையில்லை... உள்ளேயே இருக்கு...” என்று அவன் சலிக்க,

அதுதானே... தேவகி கூறியதில் என்ன தப்பு? என்றவாறு தன் கணவனை மீண்டும் விழிகளால் துளைக்க,

“அப்படியில்லம்மா... நீ என்னோடு இருக்கும் வரை என்றால், என்னைப் பிரியாமல் என் கூடவே காலம், காலமாக இருக்கும் வரைக்கும் நான் தொடமாட்டேன்...” என்றான் அவன். அவள் நம்ப மாட்டாமல் பார்க்க,

“லாயரின் மனைவி என்று காட்டுகிறாய் பார்த்தாயா... சந்தேகப் படுகிறாயே... சரி உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம்... நான் இனி இந்த ஜென்மத்தில் சிகரட் பிடிக்கமாட்டேன்... போதுமா...” என்றான் உறுதியாக. அதைக் கேட்டதும், சர்வமகியின் முகம் மலர்ந்தது. அதைக் கண்டதும், அவனுடைய வலது கரம், அவள் தோள்களைச் சுற்றி விழுந்து, தன்னோடு அவளை நெரித்துக்கொண்டது.

மீண்டும் அவள் கவலையுடன், அநேகாத்மனை ஏறிட,

“இப்போ என்னடா...” என்றான் அவள் கூந்தலை ஒதுக்கியவாறு.

“தே..வகி... உ..ங்க...ளு...க்கு... எதி...ராக... வழ...” என்று அவள் முடிக்கும் முன்பாகத் தன் கரத்தை அவள் வாயில் வைத்து,

“டோன்ட் ஸ்ட்ரெய்ன் யுவர் செல◌ஃப் மகிம்மா...” என்றவன் தேவகியைப் பார்த்து முறைத்தான்.
இதையெல்லாம் உன் அக்காவிடம் கூறவேண்டுமா?” என்பதுபோலப் பார்க்க, அவளே அவனைப் பார்க்காமல், வேறு எங்கோ வேடிக்கை பார்த்துவிட்டு, இனி நின்றால், தன் தலையிலேயே மண்ணையள்ளிப் போடவேண்டிவரும் என்பதைப் புரிந்தவளாக,

“ஓக்கே அத்தான்... நான் போகவேண்டும்... பிறகு மாதவியையும், பிரதீபனையும, அபீதனையும் அழைத்து வருகிறேன்...” என்ற தேவகி மீண்டும் குனிந்து சர்வமகியின் கன்னத்தில் முத்தம்கொடுத்து நிமிர்ந்தாள். அவனோ சற்றுப் பொறாமையுடன், தேவகியைப் பார்த்தான்,

“ஹேய்... தட்ஸ் மை ப்ளேஸ்...” என்றான் உண்மையான எரிச்சலுடன். அதைக் கேட்டு நகைத்தவள், தாளமுடியா பாசத்துடனும், அன்புடனும், அருகே நின்ற அநேகாத்மனை இறுக அணைத்து விடுவித்தாள்.
“அத்தான் நீங்கள் இல்லை என்றால் எங்கள் அக்கா இப்போது உயிரோடு இல்லை. இந்த ஜென்மம் மட்டுமல்ல, இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இந்த நன்றியை நான் மறக்கமாட்டேன் அத்தான்... ஐ பிராமிஸ் யு...” என்று கூறி விடைபெற்றாள்.

“சில்லி கேர்ள்...” என்று நகைத்தவாறு, அவள் போகும்வரை பார்த்துக்கொண்டிருந்த அநேகாத்மன் திரும்பினான். சர்வமகி அவனையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் விழிகளில், தெரிந்த கேள்வியைப் புரிந்துகொண்டவன், எழுந்து அவளோடு ஒட்டிப் படுக்கையில் கால் நீட்டி அமர்ந்தவன், அவளைத் தன் மார்பில் விழுத்தி,

“இதை விடமாட்டாயா?” என்று சலிப்படன் கேட்டான். அவள் மீண்டும் கேள்வியாக நோக்க, அவள் முதுகை வருடியவாறே,

“இப்போ அந்தப் பிரச்சனையெல்லாம் தீர்த்தாச்சும்மா... எனக்கு எதிராக வழக்குப் பதிந்தவர்களையே கோர்ட்டுக்கு இழுக்குமாறு செய்துவிட்டேன். என்னைப் பற்றியும் நன்கு தெரிந்ததால், எனக்கு எதிராகப் போட்ட வழக்கை மீளப் பெற்று விட்டார்கள்... உண்ண கணவனை வீழ்த்த இனி ஒருவன்; பிறந்துதான் வரவேண்டும் கண்ணம்மா... அந்த ஒருவன் நாம் பெற்ற பிள்ளையாக மட்டும்தான் இருக்கமுடியும்...” என்றான் அவன் அலட்சியமும், கர்வமுமாக.

இதுதான் அநேகாத்மன். இதுதான் அவன் இயல்பு. ஆனால், அவன் இயல்பு, அவன் மகியிடம்மட்டும், விருப்பத்துடனேயே தொலைந்து போகும்.

“உங்...கள்... தந்...தை...யின்...சொ...” அவள் முடிக்கும் முன், அவளைச் சுற்றித் தன் அழுத்தமான இரு கரங்களையும் மாலையாகப் போட்டு அவள் கன்னத்துடன தன் மூக்கை உரசியவன் பின் அவளைக் குனிந்து பார்த்தவாறு,

“மகி... என் அப்பாவின் சொத்து எனக்குத் தேவையே இல்லை... அப்போ எனக்கு மணமுடிக்கும் எண்ணமே இருக்கவில்லை மகிம்மா... அதனால் அவருடைய சொத்து எனக்குத் தேவைப்படவும் இல்லை. நான் உழைக்கும் பணமே, மூன்று சந்ததிகளுக்குப் போதும். இதில் எனக்கெதற்கு அப்பாவின் சொத்து... உண்ணை மணந்த பிறகுதான், அப்படிவின் சொத்து எனக்கு வந்தது. உன்னாhல்தானே அது எனக்கு செந்தமானது. அப்போ, அது உனக்குரியதுதானே. அதுதான், வந்த சொத்தில், கொஞ்சத்தை உங்கள் எல்லோருக்கும் எழுதி வைத்தேன். ட்ரஸ்டியும் ஆரம்பித்தேன்.» என்றவன் சற்று நிதானித்துப் பெருமூச்சொன்றையும் எடுத்து விட்டான்.

« இப்போது யோசிக்கும்போது, அதுதான் சரியென்று தெரிகிறது

கண்ணம்மா... உன் தந்தை செய்யாத குற்றத்திற்காக ஜெயிலில் போய் இறந்தார். அவர் இறப்புக்கு ஏதோ ஒரு விதத்தில் நானும் காரணமல்லவா... நான் அறியாமல் செய்த தவறு என்றாலும், அது தவறுதானே... அதனால் அப்பாவின் சொத்து முறைப்படி உங்கள் எல்லோருக்கும் உரியதுதான் மகிம்மா...

ஆனால், அப்பாவின் பி.வி.எஸ்சின் மெய்ன் பிசினசை மட்டும் நான் வைத்திருக்கப்போகிறேன்... அது அவரின் கனவு. அவர் கஷ்டப்பட்டு சம்பாதித்து, பெருக்கிய கம்பனி. தவிர, அந்த கம்பனி கட்டும்பொது, என் அம்மாதான் அடிக்கல் நட்டார்களாம்... அதை அம்போ என்று விட்டுவிடமுடியாது. அது வேறு யாரின் கைகளுக்குப் போவதையும் நான் விரும்பவில்லை. அது மட்டுமல்ல, எல்லா கம்பனிகளுக்கும் தாய்க்கம்பனி அதுதான். அந்தக் கம்பனியிலிருந்துதான், அப்பா மற்றைய தொழில்களைத் தொடங்கினார்..." என்றான் அவன் வேதனையுடன். பின் தன் கரத்தை விலக்கி, அவள் கரத்தினூடாகக் கொண்டு சென்று இரு உள்ளங்கைகளையும் தாங்கிக்கொண்டவன், அதை வருடிக்கொடுத்தவாறே, அவள் தோளில் தன் நாடியைப் பதித்து,

« இன்னும் கொஞ்சக் காலம் போனதும், உன் சகோதரர்களுக்குரிய பணம் அவர்களுக்கே வந்து சேரும். அப்போதுதான் அவர்களால் சரியாக அந்தப் பணத்தைக் கையாள முடியும் என்று கூற, சர்வமகியோ, தன் தலையைத் திருப்பி, தன் தோளில் நாடியைப் பதித்திருந்தவனை இமைகள் மூடாது பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன... அப்படி என்னை விழுங்குவதுபோல பார்த்துக்கொண்டிருக்கிறாய்..." என்று கேட்டவன் திரும்பி தன் தலையைச் சற்றுத் தூக்கி சர்வமகியின் நெற்றியில் முத்தமிட்டு;, « இப்போது என் மீதிருந்த சந்தேகம் தீர்ந்ததா? » என்றான் கனிவுடன்.

அவள் மறுப்பாக தலையை ஆட்ட, "இன்னும் என் மீதிருந்த சந்தேகம் போகவில்லையா..." என்றவனின் குரலில் அதீத வலி தெரிய,

« இ... இல்லை... சந்தே..கம்.. இ..ல்லை... உங்கள்... மீது எனக்..கு சந்தே..கம் இல்லை... வரு..த்தம்... நீ...ங்கள்... எனக்..கு மட்டு...ம்... உரி...யவராக... இரு...க்க வேண்டும்... என்கி...ற கோ...பம்... தவிர... » என்று அவள் பேசச் சிரமப்பட்ட, அவள் வாயில் தன் கரத்தைப் பதித்து,

« எனக்குப் புரிகிறதுடா... ப்ளீஸ்... கஷ்டப் படாதே... » என்று சமாதானப் படுத்தினான். அவளோ,

« இல்லை... நா...ன் பேச...வேண்...டும்... » என்று மறுத்தவள், « என்னால்... உங்..கள்.. மகி..ழ்ச்..சி.. தொலை...ந்து... போ...ய் விடு...மோ... என்... » அவள் முடிக்கவில்லை,

« ஷட் அப்... ஷட் அப்... சர்வமகி... » என்று சீறிய அனேகாத்மன், வேகமாக அவளை விட்டு விலகி எழுந்து நின்றான். உடல் முழுவதும் கோபத்தில் விறைத்தது. தன் கோபத்தைத் தணிக்கப் பெரும் பாடு பட்டவன், தன் முடியை இரண்டு கரங்களாலும் அழுந்தக் கோதிக்கொண்டான்.

« உன்னால் என் மகிழ்ச்சி தொலைந்து போகுமா? ஆர் யு மாட்... நீ இல்லை என்றால்தான் என் மகிழ்ச்சி தொலைந்து போகும் சர்வமகி... அதையேன் புரிந்துகொள்ள மறுக்கிறாய்... வித்தவுட் யு... ஐ ஆம் நத்திங்...» என்றான் அவன் கடுமையாக. அதற்கு மேல் அவனால் பேசவும் முடியவில்லை. சில நேரங்களில் மௌனம்தான் சிறந்த பதிலாக இருக்கிறது.

« ஆத்மன்... ப்ளீஸ்... »

« டோன்ட் சே எனிதிங் டாமிட்... வலிக்கிறதடி... » என்று தவிப்புடன் கூறியவனை ஏறிட்டவள்,

“ஐ... லவ்... யு...” என்றாள் சர்வமகி மென்மையாக. அவனுக்கு அவள் கூறியது புத்திக்கு எட்ட கொஞ்ச நேரம் எடுத்ததது. முதலில் நம்பா தன்மையுடன் தன் மனைவியை ஏறிட்டவன், வேகமாக அவளை நெருங்கி,

“வட்... எ... என்ன... என்ன சொன்னாய்... திரும்பச் சொல்...” என்றான்; பரபரப்புடன்.

« சொ...ல்கி...றேன்... » என்றவாறு தன் கரங்களை விரித்துப் பிடிக்க, அந்த சிறிய கரங்களுக்குள் பெரும் காதலுடன், அடைக்கலமானான் அநேகாத்மன். ஆனாலும், அந்தப் பெரிய உருவத்தை முழுவதுமாக அவளால் அணைக்க முடியவில்லை. அவனோ அவளுடைய முயற்சியை இலகுவாக முறியடித்தவாறு, அவள் பணியைத் தானே செய்ய, இப்போது சர்வமகி அவன் அணைப்பில் ஐக்கியமாகியிருந்தாள். அவளைத் தன்னோடு இறுகி அணைத்து, அவள் நாடியைத் தன் சுண்டுவிரலால் பற்றித் தூக்கி, அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்தவன், « இ... இப்போ... சொல்... » என்றான் தவிப்புடன்

“ஐ... செட்.. ஐ... லவ்... யு...” என்றாள் அவள் மென்மையாக. அதைக்

கேட்டதும் அநேகாத்மனால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

“மகி... நீ... ஓ மை காட்....” என்றவன் அதற்கு மேல் பேச முடியாமல் அவள் முகம் முழுவதும் ஆவேசத்துடன் முத்தமிட்டான். அவள் கன்னம், நெற்றி, மூக்கு, கண்கள், கன்னம், கழுத்து, மூக்கு என்று ஒழுங்கில்லாது முத்தமிட்டவன், இறுதியில் அவள் உதடுகளில் ஐக்கியமாகி நின்றான். நீண்ட நேரத்திற்குப் பின்பு அவளை விடுவித்தவன், முகம் முழுவதும் தித்திப்பு பொங்கி வழிய,

“ஓ காட்... நான் இந்த உலகத்தில் பிறந்ததற்கான பலனை இன்றுதான் அனுபவிக்கிறேன் கண்ணம்மா... ஐ ஆம் சோ ஹாப்பி... முதன் முதலாக உன் வாய் திறந்து என்னைக் காதலிப்பதாகக் கூறியிருக்கிறாய் லேட்டாக வந்த காதல் என்றாலும் லேட்டஸ்டாக வந்திருக்கிறது... தாங்ஸ்டா...” என்றான் பெரும் காதலுடன்

“இ... இல்லை...”

“இல்லையா... எது இல்லை?” என்றான் புரியாமல்.

“லேட்டாக வந்த காதல்... இல்லை... இது... பழைய கா...தல்...”

“வட்... பழைய காதலா? என்ன சொல்கிறாய்?” என்று அவன் வியப்புடன் கூற,

சர்வமகி மெல்லிய குரலில் தான் அவனை முன்னமே விரும்பியதைக் கூறினாள். “ஆனால்... என்னுடைய உடல் நிலை...யால்... உங்களை விட்டு விலகவேண்டியதாயிற்று...” என்றவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக்கொண்டான் அநேகாத்மன்.

“ஓ பேபி... யு ஆர் மை ஹார்ட்... என் தேவதை... என் சகலமும்... நீ என் சர்வமும் நீ, என் உடல் முழுவதும் பரவியிருக்கும் ஆத்மா நீ மகிம்மா... ஐ லவ் யு... ஐ லவ் யு... ஐ லவ் யு...” என்று தன் அன்பை மீண்டும் முத்தங்களால் தெரிவித்தான்.

“நீங்களும்தான் அநேகாத்மன்... என் உலகம் முழுவதும் அனேகமாய் பரவியிருக்கும் ஆத்மா நீங்கள்தான்... என் சகலமும் நீங்கள்தான்...” என்றவள் உரிமையுடன் அவன் மார்பில் சாய்ந்துகொண்டாள். சாய்ந்தவளின் கன்னத்தில் எதுவோ உறுத்த திரும்பிப் பார்த்தாள்.

“என்னம்மா...?’ என்றான் அநேகாத்மன் கனிவுடன்.

“எது...வோ உறுத்...துகி...றது...” என்றாள் மென்மையாக. தொடர்ந்து தன் கரத்தால் அவனுடைய மார்பைத் தடவிப் பார்த்தாள்.

“ஓ... அது ஒன்றுமில்லை... செய்ன்...” என்றவன் அதை எடுத்து வெளியே விட்டான். அந்தச் செய்னைக் கண்ட சர்வமகி திகைத்தாள்.

“இது... இது...” என்று தடுமாறினாள்.

“உன்னுடையதுதான்... அன்று என் வீட்டில் நான் செய்த உதவிக்கு கூலியாக வைத்துவிட்டுப் போனது... உன்னிடம் தரவேண்டும் என்று நினைத்தேன்... பட்... ஏனோ என்னிடமே தங்கிவிட்டது. பிறகு உனக்கு ஆபத்து என்றதும் என் கழுத்தில் போட்டுக்கொண்டேன். ஏதோ நீயே என் மார்பில் சாய்ந்திருப்பதுபோல ஒரு உணர்வு... இதில் இருக்கும் பிள்ளையார்தான் உன்னைக் காப்பாற்றி என்னிடம் மீட்டு வந்தது...” என்றவனை வியப்புடன் பார்த்தாள்.

“என்ன? வீட்...டில் ஒரு கட...வுள் பட...மே வைத்..திருக்..கத் தெரி..யா..தவரா பிள்..ளையா..ரைப் பற்..றிப் பேசுகி..றீர்க..ள்?” என்றாள் வியப்பை மறைக்காத குரலில்.

“இப்போது வீட்டிற்கு வந்து பார்... வீடே கோவில் மாதிரி; ஆக்கிவிட்டேன்... அடிபட்டு உள்ளம் வலிக்கிறபோதுதானே ஞாணம் வருகிறது... எப்போது உனக்கு ஆபத்து என்று உணர்ந்தேனோ அப்போதே கடவுள் நம்பிக்கையும் வந்துவிட்டது.” என்றவன் அவளை இறுக அணைத்தான்.
“அதற்..கா..க இப்ப..டி..யா?” என்றவள் கிண்டலுடன் சிரித்தாள்.

“எதற்காக இப்போது சிரிக்கிறாய்?” என்றான் புரியாமல்.

“இ..து பெண்..க..ள் அணி..யும் செய்..ன்... நீங்க..ள் அணி..கிறீர்..களே...” என்றாள் நகைப்புடன்.

“சோ வட்... இது உன்னுடையது... அது போதும் எனக்கு... தவிர பெண்கள் தான் தாலி அணியவேண்டும் என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்ன? இது நீ எனக்குக் கட்டிய தாலி... எனக்கு இடப்பட்ட வேலி...” என்றவன் மீண்டும் அவளை நோக்கிக் குனிந்தான்.

“உங்..களு..டன் பே..சி வெல்..ல முடி..யு..மா ஆத்ம..ன்?” என்று நகைத்தவள் அவன் அணைப்பில் கட்டுண்டு கிடந்தாள்.

அதே நேரம் உள்ளே வந்த நார்ஸ் இருவரின் அணைப்பையும் கண்டு

திகைத்தார். தன் தொண்டையைச் செருமி அவர்களை இந்த உலகத்திற்கு மீண்டார்.

வெட்கத்துடன் விலகிய சர்வமகியைப் பிடிவாதமாகத் தன் அணைப்பில் நிறுத்திய அநேகாத்மன் புன்னகையுடன் நர்சைப் பார்த்தான்.

“எங்கள் தமிழில் ஒரு பழ மொழி இருக்கிறது... பூஜை வேளைக் கரடி என்று... அந்தப் பழ மொழியை இப்போது நீங்கள் நினைவு படுத்துகிறீர்கள்...” என்ற சுத்தமான தமிழில், அநேகாத்மன் கூற,
“வட் பூஜை... வட் கரடி...” என்றார் அந்த வெள்ளைக் காரப் பெண்மணி.

அவரின் திணரல் சர்வமகியை நகைக்க வைக்க அவள் வலியையும் மீறி கலகலவென சிரித்தாள்.

அவள் சிரிப்பையே கண்ணிமைக்காது அநேகாத்மன் பார்க்க, அந்த நிலையிலும், அவன் உடலில் இரத்தம் அதிகமாகப் பாயத் தொடங்கியது.

“உங்கள் மனைவி நகைப்பது இனிமையாக இருக்கிறது மிஸ்டர் அநேகாத்மன். இந்த நகைப்பு வாடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்...” என்றார் அந்த தாதி கனிவுடன்.

“அதை விட வேறு என்ன வேலை எனக்கு?” என்ற அநேகாத்மன் நர்ஸ் நிற்பதையும் பொருட்படுத்தாமல், அவள் இதழ்கள் நோக்கிக் குணிய,

“ஹேய்... மிஸ்டர் அநேகாத்மன்... ஐ ஆம் ஸ்டில் ஹியர்...” என்று பதட்டத்துடன் அவர் கூற, இவனோ,
“சோ வட்...” என்றவாறு மேலும் குணிந்தான்.

“ஓக்கே மிஸ்டர் ஆத்மன்... டாக்டர் எல்லாம் செக் பண்ணிவிட்டார்.” என்றதும், இவன் விலுக் என்று நிமிர்ந்தான்.

“எ... எவ்ரிதிங்க் இஸ் ஓக்கே...” என்றபோதே இவன் குரல் நடுங்கியது.

“அது உங்கள் கையில்தான் இருக்கிறது...” என்றார் அந்த நேர்ஸ் பெரும் சோகத்துடன்.

“அப்படியென்றால்...” என்றவனுக்கு உடல் வெடவெடத்து வியர்த்தது.

அவனைப் பார்வையால் அளந்துகொண்டிருந்த சர்வமகிக்கு பெரும் வியப்பாக இருந்தது. யாருக்கும், தலைவணங்காதவன், அழுத்தமானவன், எதற்கும் பதறாதவன், தன் சட்டம், தன் நீதி என்று

வாழ்ந்து வந்தவன், முதன் முறையாக இப்படிப் பதறுவதை அவள் பார்க்கிறாள். அதுவும் தன் நிமிர்த்தம் என்று எண்ணும் போது, இவளுக்குப் பெருமையில் உள்ளம் விம்மியது.

‘இவன் என்னவன், எனக்கே எனக்கானவன்... என்னைத் தன் உள்ளங்கையில் தாங்கிக் காத்துக்கொள்ளப் பிறந்தவன்... என் இம்மைக்கும் மறுமைக்கும் துணையானவன்... என் உலகம் இவன், என் உயிர் இவன்... என் உணர்வும் இவன்...” என்றவள் பெரும் நிம்மதியுடன் அவன் தோள் சாய, மீண்டும் அவன் உயரம், சிரமம் கொடுக்க, உடனேயே அதைப் புரிந்துகொண்டவன் போல,

அச்சமும், பதட்டமும் மாறாமலே, அவள் வாகாக சாய்ந்திருப்பதற்காகத் தன் கரத்தை அகட்டி, அவளைத் தன் மார்பில் சாய வைத்தவன், ஒரு பொதும், அவளை விட்டுவிடுவதில்லை என்பதைப்போல, அவளைத் தன்னோடு இறுக அணைத்தவாறு அந்த தாதியை ஏறிட்டான்.

“சொல்லுங்கள்... எது என் கையில் இருக்கிறது... இவளுக்காக நான் எதைச் செய்யவும் தயாராக இருக்கிறேன்...” என்று அவன் உறுதியுடன் கூற,

அவனின் நிலையைப் புரிந்துகொண்ட அந்த தாதியும், மெல்லியதாக நகைத்தவாறு,

“நீங்கள்... நாளையே உங்கள் மனைவியை வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம்...” என்று கூற, முதலில் திகைத்தவன், பின் அவர் கூறியதன் பொருள் புரிய, அவன் கத்திய ‘ஹ{ரே’யில் அவர் சொல்லவந்த மிகுதி அமுங்கிப் போனது...

நிலவு 58

ஐந்து வருடங்களுக்குப் பிறகு

ஆதிகாலை ஐந்து மணிக்கு விழிப்பு வந்து எழுந்தான் அநேகாத்மன். வழமைபோல, அவனுடைய விழிகள் தன் உயிரின் பாதியை விழிகளால் தேட, அவள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். அவன் புறமாகச் சரிந்து தன் கன்னத்தில், கை பதித்து விழிகள் மூடித் தூங்கிக்கொண்டிருக்கும் தன் மனையாளின் அழகில் மெய் மறந்துபோய்ப் பார்த்துக்கொண்டிருந்தான் அந்தக் காதலன்.

அதே அமைதியும் அன்பும் ததும்பும் முகம், சற்று உடம்பு வைத்திருந்தாலும், அது கூட அவளுக்குப் பேரழகையே கொடுத்திருந்தது. அவனுடைய விழிகள் காதலும், காமமும் சேரத் தன் மனையாளின் அங்கங்களை ஆறுதலாக மிக மிக ரசித்துப் பார்க்கத் தொடங்கினான். இறுதியில் அவன் விழிகள் ஐந்து மாதக் கருவைத் தாங்கியிருந்த வயிற்றில் நிலைத்தன. இவனுடைய உதட்டில் மெல்லிய புன்னகை. கூடவே சற்றுப் பயமும் அவனை ஆட்கொள்ள, அவனையும் அறியால் அவளுடைய தலையை வருடிக் கொடுத்தான் அநேகாத்மன்.

அதே நேரம், சர்வமகியிடம் அசைவு வர, தன் கரத்தை விலக்கி, சட் என்று படுத்து தூங்குவதுபோல பாசாங்கு செய்ய, மெதுவாக விழித்தவளின் கண்களில் தெரிந்தது, அவன் அன்பன் அநேகாத்மனே. முகம் முழுவதும் மலர, உதடுகள் நகையைச் சிந்த, தன் கரத்தை நீட்டி அவன் தலை முடியைக் கோதிக் கொடுக்க, தன் நடிப்பைக் கைவிட்டு, அவளை இழுத்துத் தன் கைவலைவில் வைத்துக்கொண்டான். அவனுடைய் உதடுகளோ அவள் கழுத்தடியில் கச்சிதமாகப் பொருந்திக் கொள்ள,

“ஏய்... பொண்டாட்டி...” என்றான் கிசுகிசுத்த குரலில்.

“என்ன... புருஷா...” என்றாள் இவள்.

“அதிகம் சிரமப்படுத்துகிறேனா?” என்றான், முன்தின இரவின் இனிமையில்.

க்ளுக் என்று நகைத்தவள், இதை ஒவ்வொரு நாளும் கேட்கிறீர்கள் ஆத்மன்... என்றவாறு அவள் விலக முயல, அவளை இன்னும் இழுத்துத் தன் அணைப்பில் வைத்திருக்க.

“விடுங்கள் ஆத்மன், தேவ் எழுந்து அழப்போகிறான்...” என்று இவள் திமிற,

“எனக்கு வில்லனே அவன்தான்டி...” என்று கொதித்தவாறு தன் மனைவியை விட, அதில் நகைத்தவள். குணிந்து தன் மணாளனின் நெற்றியில் முத்தம் பதித்து விட்டு எழுந்தாள். அதே நேரம், அவர்கள் மகன் தேவின் அழு குரல், அருகேயிருந்த தொட்டிலிலிருந்து வர,

“ஐயையோ... அழத் தொடங்கிவிட்டான்... போச்சு... இனி அவனைச் சமாதானப் படுத்துவது பெரும் சிரமம்...” என்று பதறியவள்,

“இதோ வாரேன்டா கண்ணா...” என்றவாறு கலைந்திருந் தலைமுடியைக் கோதிக் கொண்டையிட்டவாறு, மகனை நோக்கி அவசரமாகச் செல்லத் தொடங்க, அவளுக்கு முன்பாக மறு பக்கம் துள்ளி எழுந்த அநேகாத்மன், விரைந்து சென்ற அழும் தன் இரண்டு வயது மகனை வாரி அணைத்துத் தூக்கினான்.
மகனோ, தந்தையை விடப் பிடிவாதம் கொண்டவனாகத் தன் பசியை உடனே ஆற்றுப்படுத்தவில்லை என்கிற கோபத்தில் இன்னும் சற்றுப் பெரிதாகத் தன் குரலை உயர்த்தினான்.

தன் மகனால், தன்னைக்கொண்டவனால், தூங்கமுடியாது போய்விடுமே என்கிற கவலையில்,
“ஆத்மன்... நான் பாத்துக்கொள்கிறேன்... நீங்கள் தூங்குங்கள்...” என்று சர்வமகி கூற,

இல்லைம்மா... நான் அவனைக் கீழே கொண்டு வருகிறேன்... நீ பாலை ரெடியாக்கு...” என்றவன், வீறிட்டுக்கொண்டிருந்த தன் மகனைக் குனிந்து பார்த்து,

“சன்... இட்ஸ் இன஼ப்...” என்று மட்டும்தான் கூறினான். மறு கணம் மகனின் அழுகுரல் உடனே கப்பென்று நிற்க, அதைக் கண்டவன் மெல்லியதாக நகைத்தான்.

தேவ், தந்தையின் குரலைக் கேட்ட மறுகணம், அவனுடைய முடிநிறைந்த மார்பில் தொப் என்று தன் தலையை வைத்து சொகுசாக படுக்க, தன் கணவனின் ஒரு சொல்லில், அடங்கிப்போன தேவைக் கண்டு சிரித்த சர்வமகி, மகனின் தலையை வருடிக் கொடுத்துவிட்டு, போகிற போக்கில், கணவனின் கபேர்டிலிருந்த ஒரு டீ சேர்ட்டை இழுத்து எடுத்து, அதை அவன் தோளில் போட்டுவிட்டு, சமையறையை நோக்கி இறங்கத் தொடங்கினாள்;.

அநேகாத்மனும், தன் மகனைப் பக்குவமாக இறுக அணைத்தவாறு சர்வமகியுடன் படிகளில் இறங்கத் தொடங்கினான்.

மகனுக்குப் பாலெடுக்கப் போகும் போது, மகன் மீது இத்தனை உயிராக இருக்கும் ஆத்மன், அவன் வயிற்றில் ஜனித்தபோது, செய்த அடாவடியை நினைக்கும் போது ஒரு பக்கம் கோபமாகவும், இன்னொர பக்கம் நகைப்பாகவும் இருந்தது.

வேலைத்தளத்தில் இருந்தவனுக்கு, சர்வமகி மயங்கிவிட்டாள் என்கிற

செய்தியைக் கேட்டதும், எதையும் யோசிக்காது வீட்டிற்கு வந்தவன் பதறித் துடித்து, தெரிந்த வைத்தியர்களை அழைத்து அந்த வீட்டையே இரண்டு படுத்திவிட்டான். அதன் பின் அவன் தந்தையாகப் போகிறான் என்பதை அறிந்ததும், அவனுடைய முதல் ரியாக்ஷன், மயங்கும் நிலைக்கு வந்ததுதான்.

நல்லவேளை பிரதீபன் அருகில் நின்று தள்ளாடிய அவனைத் தாங்கிக்கொண்டான். சர்வமகி கூட அவன் நிலையைக் கண்டு தன் நிலை மறந்து பதறிப்போனாள்.

அச்சமும், பயமும் போட்டிபோட தன் மனையாளைப் பார்த்தவனின் விழிகளில் கண்ணீர் நிறைந்திருந்தது.

“என்னாச்சு ஆத்மன்?” என்று பதறியவாறு சர்வமகி கேட்க,

“எ... எப்படி... நாம்தான்... குழந்தை வேண்டாம் என்று... கவனமாக இருந்தோமே...” என்று அநேகாத்மன் திக்கித் திணற, முகம் முழுக்க நாணத்துடன், தன் வயிற்றில் கரம் பதித்து,

“கடவுள் என் வேண்டுதலுக்கு செவிசாய்த்திருக்கிறார் ஆத்மன்...” என்று அவள் பெரும் பூரிப்புடன் கூற, அதை அடுத்த கணமே தவிடு பொடியாக்கினான் அவள் கணவன்

“நமக்கு குழந்தை வேண்டாம்மா... அழித்துவிடு...” என்று பெரிய ஒரு குண்டைத் தூக்கிப் போட, அனைவரும் முதலில் அதிர்ந்து பின் பதறிப்போனார்கள்.

“ஆத்மன்...” என்கிற சர்வமகியின் கோபம் நிறைந்த குரலைக் கேட்டவன், வேகமாக எழுந்து அவள் அருகே படுக்கையில் அமர்ந்து, அவள் கரத்தைத் தன் கரத்தில் ஏந்தி,

“வேண்டாம்மா... நமக்கு குழந்தையே வேண்டாம்... இன்னொரு முறை... உன்னை அந்த மருத்துவமனையில் அப்படி...” நினைத்ததும், அவன் உடல் ஒரு கணம் நடுங்கி அடங்க,

“ஆத்மன்... எனக்கு ஒன்றுமில்லை... ஐ ஆம் பேர்ஃபெக்ட்லி ஆல் ரைட்... வைத்தியர்களே சொல்லிவிட்டார்கள் அல்லவா... நான் எத்தனை குழந்தைகள் வேண்டுமானாலும் பெறலாம் என்று...” என சமாதானப் படுத்த முயல,

“மை ஃபுட்... மகி... ஆர் யு கிரேசி... பிரசவ வலி பற்றி உனக்கு என்ன

தெரியும்... நீ அதை எப்படி தாங்குவாய்... நோ.. அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்மா...” என்று அவன் பிடிவாதமாகக் கூற.

“ஆத்மன் இது உங்களுடைய குழந்தை... என்னுடைய உயிர்... நீங்கள் என்மீது வைத்த காதலுக்கும், நான் உங்கள் மீது வைத்த காதலுக்கும் கடவுளாகக் கொடுத்த பரிசு இந்தக் குழந்தை... இதை எப்படி....” என்று இவள் குரல் கம்மக் கேட்க,

“டாமிட்... மகிம்மா... உன்னை விட... எனக்கு குழந்தையொன்றும் பெரிசில்லை... கூடவே அவசியமுமில்லை... ப்ளீஸ் நான் சொல்வதைக் கேள்... இன்னொரு வலியை நீ அனுபவிக்க நான் ஒரு போதும் விடமாட்டேன்...” என்று அவன் உறுதியுடன் கூற

“ஆத்மன் என்ன பேசுகிறீர்கள்... உங்களுக்கென்று ஒரு வாரிசு வேண்டாமா... உங்கள் சொத்தை ஆள்வதற்கு, உங்களைப் பின்பற்றி வருவதற்கு ஒரு குழந்தை வேண்டாமா?” என்றாள் சர்வமகி கோபமாக.

“அதற்குத்தான் பிரதீபனும், அபிதனும் இருக்கிறார்களே... அவர்கள் நமக்கு போதாதா? ப்ளீஸ் மகி... எனக்கு என் வாரிசுகளை விட, நீதான் முக்கியம். உன்னை வருத்தி எனக்கொரு குழந்தை வேண்டவே வேண்டாம்... பேசாமல் இதை...”

“ஸ்டாப் இட் ஆத்மன்... ஸ்டாப் இட்... இதற்கு மேல் ஒரு வார்த்தை, ஒரு வார்த்தை பேசினீர்கள் என்றாலும்... நான் இந்த வீட்டில் இருக்கமாட்டேன்...” என்று அவள் கடுமையாகக் கூற, இறுதியில் அவன்தான் தன் வாயை மூட வேண்டியிருந்தது.

எல்லோரும் அவனுக்கு ஆறுதல் படுத்தியும் அவன் தெளிந்தானில்லை. ஏன் வைத்தியர்கள் கூட அவனைத் தெளிய வைத்தும் அவன் சிறிதும் தன் கருத்தை மாற்றினானில்லை.
காலை எழுந்ததும், மயக்கம், வாந்தி என்று அவள் துண்பப்பட்ட போதெல்லாம், இவன் குற்ற உணர்ச்சியில் துடித்துப் போனான். ‘நான் கவனமாய் இருந்தேனே... எப்படி இப்படியாச்சு?’ என்று பெரிதும் வருந்தினான் அந்தக் காதலன்.

“ஏன்மா என்னைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய்... நீ இப்படி கஷ்டப் படுவதை என்னால் பார்க்கமுடியவில்லையே கண்ணம்மா... நான் என்ன செய்யட்டும்?” என்று தவித்தவனை அவளால் தேற்றுவது பெரும் பாடாகத்தான் போனது. எப்படியோ, ஐந்தாம் மாதம் கடக்க, ஓரளவு தன் புராணத்தை குறைத்துக் கொண்டாலும், அவன் தவிப்பு

ஓயவேயில்லை... இரவு தூங்கும் போது, அவள் கால்களைப் பற்றி அமுக்கி விடுவதிலிருந்து, சரிந்திருக்கும் வயிற்றுக்கு தலையனி வைப்பதிலிருந்து அவள் அசையும் போதெல்லாம் பதறி எழுந்தமர்வதிலிலிருந்து, ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்தான் அநேகாத்மன்.

அவனுடைய அளவு கடந்த அன்பில் சர்வமகி பெரிதும் கரைந்துபோனாள். பிரசவ வலி வந்ததும், சர்வமகி எப்படியோ, அநேகாத்மன்தான் துடித்துப் போனான். அவன் பதற்றத்தைக் கண்டவள், அவனுக்காகவே தன் வேதனையை அடக்க முயன்றாள். தன் மனைவியின் நிலையைப் புரிந்தவன்,
ஐ ஆம் ஓக்கே கண்ணம்மா... ஐ ஆம் ஓக்கே...” என்று கூறி அவளைச் சமாதானப் படுத்த முயன்றாலும், வெளுறிய அவன் முகமும், நடுங்கிய அவன் உடலும், அவன் அச்சத்தைப் பறை சாற்ற,

“ஆத்மன்... இது இயற்கை... இந்தக் குழந்தை எனக்கு வேண்டும்... நமக்காக நான் தரும் காதல் பரிசு இது... தயவு செய்து இந்தக் குழந்தையை வெறுக்காதீர்கள்...” என்றாள் அந்த வலியிலும்.

“நான் எப்படி கண்ணம்மா நம்முடைய குழந்தையை வெறுப்பேன். அதுவும் உன்னில் ஜனித்ததாயிற்றே... அதை எப்படி நான் மறுப்பேன்... என் கோபம் எல்லாம் என் மீதுதான்... நான் இன்னும் கொஞ்சம் கவனமாக இருந்திருக்கவேண்டும்... உன்னை இத்தனை வேதனைக்கு நான்தான் தள்ளிவிட்டேன்...” என்று கரைந்தவனை எப்படித் தேற்றுவது என்று புரியாமல் தவித்தவளை, மேலே யோசிக்க முடியாது வலி அவளைப் பற்றிக் கொள்ள, அவள் துடித்ததை விட இவன் துடித்து மருகித் தவித்து, இது முடியாதோ என்கிற நிலையில், அவனுடைய மகன், இந்த பூமியில் தந்தையின் குரலுடன், கதறியவாறு அவன் மறு பிரதியாக ஜனித்தான்.

இறுதிக் கணத்தில், குழந்தையைப் பிரசவித்து தன் கணவனின் முகத்தைப் பார்க்க, அவனோ, அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“வாழ்த்துக்கள்... உங்களுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்திருக்கிறது...” என்று கூறி, குழந்தையை சர்வமகியின் மார்பில் கிடத்த, அவள் சிலிர்த்துப் போனாள். தன் கணவனின் உயிர்... அவளுள் உருவான தெய்வம். தன் கணவனுக்கு அடுத்து அவளைத் தாங்கப்போகும் தூன்... அவள் வருந்தும்போது, தந்தைக்குத்

துணையாகத் தன் தோள்கொடுக்கப்போகும் செல்வன் அவன்... தன் மகன் என்கிற பூரிப்பில் உடல் சிலிர்த்தாள் அந்த அன்னை.

மகிழ்ச்சியும் பூரிப்பும் சேரத் தன் கணவனைப் பார்க்க, அது வரை விழிகள் கலங்க, உளம் உருகப் பெரும் பூரிப்பில் தன் மகனையே பார்த்துக்கொண்டிருந்த தன் மனையாளின் அழகில் மெய்மறந்திருந்தவன், தன் உயிரானவளின் விழிகள் தொடுத்த கேள்வியைப் புரிந்துகொண்டவனாகத் தன் மனைவியின் மார்பில் கிடந்த மகனைப் பார்த்தான்;.

அவனுடைய இரத்தம். அவன் உயிரானவளின் வயிற்றில் ஜெனித்தவன்... இம்மைக்கும் மறுமைக்கும் அவர்களுடன் கூடவே வரப்போகும் புதிய உறவு... உடல் சிலிர்க்க ஒற்றை விரல் கொண்டு மகனின் கன்னத்தி;னை வருடினான் அநேகாத்மன்.

அவன் மகனோ முதன் முறையாக, அப்பா நான் உன்கூடவே காலம் முழுவதும் உனக்குத் துனையாக இருந்து அம்மாவைக் காத்துக்கொள்வேன் என்று கூறுவது போலத், தன் தந்தையின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டான்.

அந்த ஸ்பரிசத்தில் மெய்மறந்து போனான் அநேகாத்மன். அது ஒரு உன்னதமான உணர்வு. வெளிவந்த மகனின் முதல் ஸ்பரிசம். எத்தனை கோடி கொடுத்தாலும் கிடைக்காத, தெகிட்டாத இன்பம். மகனின் தொடுகையில் உளம் உருகிப்போன தந்தையின் கண்களில் கண்ணீர் குளம் கட்டியது.

எட்டி தன் மனைவியின் நெற்றியில் முத்திட்டவன், “நன்றிம்மா...” என்றவாறு எப்போதும் போல, அவளை அணைத்து அவள் கழுத்து வளைவில் தன் முகத்தைப் பொருத்தி, பிறர் கவனத்தைக் கவயரா வண்ணம், அவன் அழ, அதைப் புரிந்தகொண்ட சர்வமகியின் விழிகளும் கண்ணீரால் நனைந்தன.

குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்...” என்று வைத்தியர் கேட்க.

'வெங்கட்’ என்று சர்வமகியும்,

“வாசுதேவ்...” என்று அநேகாத்மனும் ஒரே குரலில் கூற, இருவரும் வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்தனர். சர்வமகியின் முகத்தில் அழகிய புன்னகை மலர,

“வெங்கட்வாசுதேவ்... அநேகாத்மன் வெங்கட்வாசுதேவ்” என்றாள் கணீர் என்ற குரலில்.

அதன் பின், ஆத்மன் சர்வமகியைக் கீழே விடவேயில்லை. தானே அனைத்து வேலைகளையும் செய்தான். தேவகி, மாதவி யாரையும் தன் மனைவிக்காக எந்த வேலையும் செய்ய விடவில்லை.
ஓரளவு சர்வமகி தேறி வர, இனிக் குழந்தை வேண்டாம் என்று முடிவு செய்தவன், சர்வமகியிடம் கூறினால், அவள் சம்மதிக்கமாட்டாள் என்கிற காரணத்தினால், அவளுக்குத் தெரியாமலே ஒரு நாள் மருத்துவமனைக்குச் சென்று தன்னை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்திக்கொண்டான்.

இதற்கிடையில் தேவகிக்கு நல்ல வரனாக விரும்பி வந்து கெட்க, பெரும் மகிழ்வுடன் அவளுக்குத் திருமணம் செய்து வைத்தனர். இதோ கையெட்டும் தூரத்தில் ஒரு வீட்டையே பரிசாகக் கொடுத்து இருவரையும் சர்வமகிக்கு உதவியாக அருகிலேயே அமர்த்தினான். அவளுக்கும் ஒரு ஆண் குழந்தை. பெயர் சர்வாத்மன். ஆம் தன் சகோதரிக்கும் தன் அத்தானுக்கும் நன்றி செலுத்தும் முகமாகத் தன் சகோதரியின் முதல் பெயர் வருமாறும் அத்தானின் இறுதிப்பெயர் வருமாறும் வைத்தாள்.

மாதவிக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இன்னும் மூன்று மாதத்தில் அவளுக்கும் திருமணம் நடந்து விடும்.

பிரதீபன் இப்போது, பல்கலைக் கழகத்தில மூன்றாமாண்டு சட்டக்கல்வி பயில்கிறான். அவன் தன் அத்தானைப் போல வரவேண்டும் என்கிற வெறியில் படிக்கிறான். அபிதனுக்கு இப்போது பதிநான்கு வயதாக இருந்தாலும், சகோதரியின் சேலைத்தலைப்பை இன்னும் விடவில்லை.

சர்வமகியின் குழந்தை, வெங்கட்வாசுதேவ் தேவகிக்கும். மாதவிக்கும் பிரதீபனுக்கும், அபிதனுக்கும் செல்லக் குழந்தையாகிப்போனான். அவனை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு செல்லம் கொடுத்து பழுதாக்கியாயிற்று.

இந்த நிலையில் சர்வமகி மீண்டும் கர்ப்பமானாள். சர்வமகிக்கு உலகை ஜெயித்து விட்ட மகிழ்ச்சி. ஆனால் அநேகாத்மன்தான் அதிர்ந்து போனான். இது எப்படி சாத்தியம். அவன்தான் குழந்தை வேண்டாம் என்று சத்திரசிகிச்சைக்குத் தன்னை உட்படுத்திக்கொண்டானே.

தான் மீண்டும் கருவுற்றிருக்கும் மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்கும், உயிரானவளிடம் சென்று உண்மையைச் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல், திரு திருவென்று விழிக்கத்தான் அவனால் முடிந்தது.

தன் சத்திர சிகிச்சையில் ஏதோ குழறுபடி நடந்திருக்கிறது என்பதை உடனே புரிந்துகொண்டவனுக்கு, அதைச் செய்த வைத்தியர் மிது கொலை வெறியே வந்தது. அதுவும் கூட முகம் முழுக்கப் பூரிப்புடனும், மகிழ்ச்சியுடனும் குதித்துக்கொண்டிருந்த மனைவியைக் கண்டதும், அந்தக் கோபம் கொஞ்சம் கொஞ்சமாக மட்டுப்பட்டுக் காணாமல் போனது.

தான் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கிறது என்பதைப் புரிந்துகொண்டவன், இயற்கை சக்திக்கு முன்னால் மகிழ்ச்சியாகவே தோற்றுப்போனான்.

சர்வமகியை யாரும் எந்த வேலையும் செய்ய விடுவதில்லை. அதுவும் பிறக்க இருப்பது பெண் குழந்தை என்பதை ஸ்கானிங்கில் தெரிந்ததால், அனைவருக்கும் இரட்டிப்பு மகிழ்;ச்சி. பெயர் கூடத் தயார். அவள் தாயின் பெயரையும், அவன் தாயின் பெயரையும் இணைத்துக் கவிபானு என்று தீர்மாணித்து விட்டார்கள்.

அநேகாத்மனுக்கு முன்னமிருந்த அச்சம் இல்லா விட்டாலும், தன் மனைவி சிரமப்படப்போகிறாளே என்கிற வேதனை எள் அளவும் அவனுக்குக் குறையவில்லை.

“மகிம்மா... என்ன யோசனை... தேவ் அழுகிறானே...” என்றவாறு அநேகாத்மன் முன்னறையில் அமர்ந்தவாறு குரல் கொடுக்க, தன் பழைய நினைவிலிருந்து மீண்டவள், சமையலறைக்குள் நுழைந்தாள். அதே நேரம் மாதவியும், பால் போத்தலுடன் வெளியே வந்தாள்.

“என்னடா... நீ தூங்கவில்லை?” என்று சர்வமகி கேட்க,

“இல்லையக்கா... தேவ் அழும் குரல் கேட்டது... அதுதான்... பால் கரைக்க எழுந்துவிட்டேன்...” என்று கூறிய தங்கையின் அன்பில் மனம் நிறைய, பால் போத்தலை வாங்கிக்கொண்டு கணவனை நோக்கிச் சென்றவளின் கவனத்தை அழைப்பு மணியின் சத்தம் திசைதிருப்பியது.

விரைந்து சென்று கதவைத் திறந்தால், தன் ஒரு வயது மகனை

இடையில தாங்கிக்கொண்டு, கணவன் பின் தொடர, பதற்றத்துடன் நின்றிருந்தாள் தேவகி.

“என்னம்மா... என்னாச்சு...” என்று கவலையுடன் சர்வமகி கேட்க,

“இல்லைக்கா... நம்ம தேவ் அழுத சத்தம் கேட்டதே... அதுதான் ஓடிவந்தேன்...” என்றவளின் பார்வை, தன் மருகனிடம் செல்ல, அவன் தந்தையின் மார்பில் சொகுசாக சாய்ந்து அழுவதைக் கண்டதும், கவலையுடன்,

“ஏன்கா அழுகிறான்?” என்றாள் பயத்துடன்.

“பாலுக்காக அழுகிறான் தேவகி... அதுக்காகவா இப்படி ஓடிவந்தாய்?” என்று அவள் கண்டிக்க,

“ஓ... இல்லைக்கா.. ஒரு போதும் காலையில் அவன் அழமாட்டானே... அதுதான் கொஞ்சம் பயந்துவிட்டேன்...” என்ற தங்கையின் அன்பில் மனம் கரைந்தவளாக,

“உட்காரம்மா...” என்று கூறிவிட்டுத் தன் கணவனிடம், பால்போத்தலை நீட்டினாள்.

தன் மனைவியின் கரத்திலிருந்த பால் போத்தலை வாங்கி அழும் மகனுக்குக் கவனமாகப் புகட்டினான் அநேகாத்மன்.

அந்த அழகில் கனிந்தவளாக, அவனுக்கு அருகே நீண்ட இருக்கையில் சாய்வாக அமர, மகனின் பால்போத்தலைக் கரம்மாற்றிக் கொடுத்தவாறு, தன் மனைவியின் வலக்கரத்தைத் தன் இடக்கரத்தால் அழுந்தப் பற்றி விடாமலே வைத்துக்கொண்டான் அவள் காதல்கணவன்.

கதவின் அழைப்பு மணியால் ஏற்பட்ட சத்தத்தில், தூக்கம் கலைந்து எழுந்து வந்த அபிதன்,

“மாது... டீ ப்ளீஸ்...” என்றவாறு, தன் சகோதரி சர்வமகிக்கு அருகே வந்தமர்ந்தான். தேவகியைக் கண்டதும்,

“தேவகிக்கா... என்ன இந்தப்பக்கம்...” என்றவாறு தன் தலையை பொத் என்று சர்வமகியின் மடியில் போட்டு மீண்டும் உறங்கத் தொடங்கினான்.

அதே நேரம் அவசரமாக சர்வமகி அநேகாத்மனைப் பார்க்க, அவனும் அவளைத்தான் பொறாமையுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

என்னதான் அவன் நல்லவனாக இருந்தாலும், இந்த விஷயத்தில் அவனால் நல்லவனாக இருக்கமுடியவில்லை. இன்னும் தன் மனைவியை யாரும் சொந்தம் கொண்டாடுவதை ஒருவித பொறாமையுடனே பார்த்துக்கொண்டிருந்தான். அதைக் கண்டதும், இவள் உதடுகளில் மெல்லிய கிண்டல் புன்னகை மலர, அதைக் கோபத்துடன் பார்த்தவன், அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்,

“வட்...” என்றான் இன்னும் அபிதனை முறைத்தவாறு.

“யார் மீது பொறாமைப் படுவதென்றில்லையா?” என்றாள் அவனுக்க மட்டும் கேட்கும் குரலில்.
“அது எனக்குரிய இடம் ...” என்றான் அவன் அதே கோபத்துடன்.

“ஏன் உங்கள் பிள்ளை இந்த மடியில்தானே வளர்ந்தான்...” என்றாள் இவள் நகைப்புடன்.

“அவன் கூட என் எதிரிதான்டி.....” என்று இவன் மெல்லிய கோபத்துடன் கூற, அதைக் கண்ட பிரதீபன், நிலைமையை ஓரளவு ஊகித்தவனாக,

“தடியன்... இன்னும் குழந்தை என்று எண்ணம்... எழுந்திருடா...” என்று பிரதீபன் சத்தம் போட்டான்.
தன் தாயின் மடியில் தலை வைத்திருக்கும் தன் சின்ன மாமன் மீது கோபம் கொண்ட தேவ், தன் தந்தையின் மார்பிலிருந்து தன் தலையை விலக்காமலே, தந்தை கொடுத்த பாலை அருந்தியவாறு, மாமனின் தலை முடியைப் எம்பிப் பற்றி இழுத்துக் காலால் உதைய,

தேவகியின் மடியிலிருந்த சர்வாத்மனோ, தன் பெரியம்மாவின் மடியில் விழுந்த சின்னமாமன் மீது எரிச்சல் கொண்டவனாகத், தாயின் பிடியிலிருந்து விலகித் தத்தித் தத்தி நடந்து வந்து, தன் ஒரு வயது மூத்த அண்ணனுக்குத் துணையாக, பிரதீபனின் தலை முiடியைப் பற்றி இழுக்க, அதே நேரம், அது வரை வயிற்றில் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்த அந்தக் குட்டித் தேவதை, தானும் போட்டிக்கு வருபவளாக அன்னையின் வயிற்றிலிருந்தவாறே, மாமனை எட்டி உதைக்க, அந்த மாமனோ, கோசுறு தட்டியது போலத் தட்டிவிட்டு இன்னும் சுமகாகத் தன் விழிகளை மூடினான்.

அதைக் கண்ட பிரதீபன்,

“நண்பேன்டா... என்னை என்ன பாடு படுத்தினான்... உனக்கு ஆப்பு வைக்க இந்த இரண்டு வாண்டுகளும் போதும்... அப்படித்தாண்டா என் தங்கக் கட்டிகளே... இன்னம் இறுக்கி இழுங்கலே...” என்று சேர்ந்து உற்சாகப்படுத்த, பெரியமாமன் கொடுத்த உற்சாகத்தில், இன்னும் இருவரும் சேர்ந்து இழுக்க,

“டேய் என் தம்பி பாவம்டா.. விடுங்கடா...” என்று தேவகி பதற,

“ஆமாம் பெரிய தும்பி... டேய் இழுத்து விழுத்துங்கடா...” என்று பிரதீபன் மேலும் உற்சாகப் படுத்த,

“அக்கா... உன் தும்பியின் வாயை மூடச் சொல்லு இல்லையென்றால் எனக்கு கணக்கில் கொஞ்சம் டவுட் இருக்கு கிளியர் பண்ணச் சொல்லு...” என்று அபிதன் கூற,

“என்ன கணக்கா... அதுவும் உனக்கா... ஆளை விடுடா சாமி... அதை விட நான் சன்னியாசம் வாங்கிடுறேன்” என்றவாறு அவன் கையெடுத்து கும்பிட, அனைவருக்கும் தேனீர் கொண்டுவந்த மாதவியோ,

“சுத்தம்... ஏன்டா அபிதன் உனக்கு வேறு ஆளே கிடைக்கவில்லையா?” என்று வார,

“இதப்பார்ரா பஞ்சாயத்திற்கு வந்திருக்கிற மங்கம்மாவை...” என்று கொதித்த பிரதீபனைக் கண்ட அணைவரும் மகிழ்ந்து நகைத்தனர்.

பெருமையுடனும், மகிழ்வுடனும் சிரித்த தன் மனையாளின் அழகில் செக்கிப்போன அந்த உயிர்க் காதல் கணவன், அந்தக் கலவரத்திலும், அவள் தோள்மீது தன் கரத்தைப் போட்டுத் தன்னை நோக்கி இழுத்து மகனுக்கு அருகே தன் மார்பில் விழுத்தி,

“ஏய்... இப்படி சிரிக்காதே என்று முன்பே சொன்னேன் அல்லவா... இப்படி சிரித்தால் நான் என்ன செய்யட்டும்...” என்று கணவனுக்கே உரிய பார்வையுடன் அவள் முகம் நோக்க, அந்தப் பார்வையில் அந்திவானமாகச் சிவந்த அவள் உடல் சூட்டை உணர்ந்தவன், அடக்க முடியாமல், உதடுகள் நோக்கிப் பயனப்பட,

“ஹே... என்ன நடக்குது இங்கே... நாங்கள் எல்லோரும் இருக்கிறோம் மச்சான்...” என்று தன் விழிகளை மூடியவாறு தேவகியின் கணவர் ஆரூரன் கத்த, அதைக் கேட்ட சர்வமகி வேகமாகத் தன் கணவனைத் தள்ளிவிட்டு, தாங்க முடியா வெட்கத்தில் தன் முகத்தை மூடினாள்.

“ஹே... மை ஏஞ்சல்...” என்றவன் அவளை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொள்ள, மேலும் தன் முகத்தை அவன் மார்பிலேயே மறைத்துக்கொண்டாள் அந்த மாசற்ற மங்கை. அதைக் கண்ட அநேகாத்மனும் மற்றவர்களும் பெரும் குரலெடுத்து நகைக்க, அந்த வீடே பெரும் மகழ்ச்சியில் திளைத்தது.

கூடவே, படமாகத் தொங்கிக்கொண்டிருந்த வெங்கடேஷ் மற்றும் வாசுதேவன் இருவரும் தம் தம் துணைகளுடன், ஆத்மார்தமாக அவர்களை வாழ்த்தி ஆசீர்வதித்துக்கொண்டிருந்தனர்.

(சுபம்)

வணக்கம் மக்கா... என்ன சொல்ல... இதோ இன்றோடு நிலவே என்னிடம் நெருங்காதே கதை நிறைவு பெறுகிறது. இந்த கதையின் தொடக்கம் முதல் முடிவு வரை என்னுடன் பயணித்த அத்தனை நண்பர்களுக்கும் என்னோட நன்றியை நான் தெரிவிச்சுக்கொள்கிறேன். ஸ்ரீமா... உங்களை நெனைச்சாவே உள்ளம் நெறஞ்சு போகுது. எப்பவும் உங்க கிட்ட பிடிச்சது அந்த பொசிட்டிவ் மட்டும் அல்ல, உண்மையான தெறமைய வெளிக்கொண்டுவாரத்துக்கு நீங்க செயுர முயற்சி. அதோட இன்னொருத்தர் செயுர கிரெடிட்டை உன்கழுத்துன்னு சொல்லாம, அதை உரியவருக்கே அந்த கிரெடிட்டை கொடுக்கிறது எல்லாராலயும் முடியாது. அது உங்க கிட்ட இருக்கு. அதுக்கு நான் தலை வணங்குகிறேன். உங்களாலதான் எனக்கு நெறய நண்பர்கள், வாசகர்கள் கெடைச்சாங்க. முக்கியமா நீங்க எனக்கு கெடசீன்க. சிறந்த எழுத்தாளர்களோட நட்பு கெடச்சுது. உங்களுக்கு நன்றி எப்படி சொல்றதுன்னு தெரியல. என்னுடைய இதயப்பூர்வமான, இதயம் கனிந்த நன்றியை உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். இத விட எனக்கு தொடர்ந்து ஆதரவு தந்த வாசகர்கள், அனைவருக்கும் என்னோட நன்றியை தெரிவிச்சிக்கிறேன். எந்நாளும் எப்பவும் நினைவில் இருப்பீங்க. இன்று வரை தொடர்ந்து பயணிச்சுட்டு வார உங்க எல்லாருக்கும் ஒரு சலூட். தொடர்ந்து பயணிப்பீங்க என்று நண்புறேன்.